ஸ்ரீமத் [illegible]

IFKA, Reg
NO 31
76769

# ஸ்ரீமத் கம்பராமாயண வசனம்

In Three volumes.

Vol I

Pages 1 to 322

(1)

Contd

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் 19 வருடம்
செப்பனிட்டு முடித்த
மாதம் 1984 வருடம்
ஆராய்ச்சி நூலகர் கையொப்பம்

894.8111
1256

46769

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
18 AUG 1904
MADRAS

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இப்புத்தகத்து ளடங்கிய

# படலங்களின் அட்டவணை.


| எண். | | பக்கம். |
|---|---|---|
| | ஆறாவது யுத்தகாண்டம். | |
| 43. | கடல்காண்படலம் ... | 1 |
| 44. | இரணியன்வதைப் படலம் | 24 |
| 45. | இலங்கைகேள்விப் படலம் | 82 |
| 46. | சேதுபந்தனப் படலம் ... | 105 |
| 47. | இராமனிலங்கைகாண்படலம் ... | 130 |
| 48. | மகுடபங்கப் படலம் ... | 140 |
| 49. | அங்கதன்றூதுப்படலம்... | 155 |
| 50. | முதற்போர்ப் படலம் ... | 165 |
| 51. | முதற்போர்ப் படலம் ... | 196 |
| 52. | கும்பகருணன்வதைப் படலம் ... | 197 |
| 53. | மாயாஜனகப் படலம் ... | 268 |
| 54. | நாகபாசப் படலம் ... | 330 |
| 55. | படைத்தலைவர்வதைப் படலம் ... | 386 |
| 56. | தூமாட்சனதியர் படைமெத்துவந்தது ... | 393 |
| 57. | மகரக்கண்ணன் வதைப் படலம் ... | 399 |
| 58. | பிரமாஸ்திரப் படலம் ... | 406 |
| 59. | பிராட்டிகளங்காண் படலம் | 445 |
| 60. | களியாட்டுப் படலம் ... | 471 |
| 61. | கும்பலைப் படலம் ... | 493 |
| 62. | இந்திரஜித்துவதைப்படலம் | 521 |
| 63. | இராவணன்சோகப் படலம் | 535 |
| 64. | மூலபலவதைப் படலம் ... | 555 |
| 65. | வேலேற்றுப் படலம் ... | 584 |
| 66. | தேரேறு படலம் ... | 603 |
| 67. | இராவணன்வதைப் படலம் | 613 |
| 68. | விபீஷணர்சரமக்கிரியை நடத்தல் ... | 652 |
| 69. | மீட்சிப் படலம் ... | 653 |
| 70. | சீதாபிராட்டியார் அக்கினி பிரவேசமாதல் ... | 666 |
| 72. | பரத்துவாச ராசிரமம் ... | 698 |
| 73. | ஆஞ்சனேயர் ஸ்ரீராம தரிசனத்தைப் பரதருக்குக்காட்டுதல் ... | 700 |
| 74. | திருமுடிசூட்டுப் படலம் | 706 |
| | ஏழாவது உத்தரகாண்டம். | |
| 75. | திருவோலக்கப் படலம் | 721 |
| 76. | குபேரன் பிரமனைநோக்கித் தவஞ்செய்தல் ... | 729 |
| 77. | இராவணாதியர் மூவரும் வனஞ்சென்று பிரமனைநோக்கித் தவம்புரிந்து வரம் பெறுதல் ... | 754 |
| 78. | வரையெடுத்த படலம் ... | 761 |
| 79. | திக்குவிஜயப் படலம் ... | 778 |
| 80. | இராவணன் எமதருமராஜனை வெல்லுதல் ... | 787 |
| 81. | இராவணன் ஆதிசேடனை வெல்லுதல் ... | 793 |
| 82. | இராவணன் காலகேயரையும் வருணனையும் வெல்லுதல் ... | 799 |
| 83. | சூர்ப்பநகை இராவணனோடு முறையிடல் ... | 807 |
| 84. | கும்பீநசியின் வேண்டுகோளால் இராவணன் மதுவென்பவனுடன் கலந்து தேவலோகவிஜயஞ் செய்யப்போகும்போது அரம்பையின் சாபமேற்றல் ... | 817 |

| எண். | | பக்கம். |
|---|---|---|
| 85. | மேகநாத னிந்திரனைப் பாசத்தாற்கட்டி இராவணனிடங்கொண்டுசெல்ல வலவன் மகிழ்ந் தவனுடனிலங்கைக்குப்போ யவ்விந்திரனைச் சிறையி லடைக்க, பின்பிரமதேவர் வேண்டுகோளால் சிறைவிடுத்தல் ... | 826 |
| 86. | கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைக் கட்டித் தன்னகரத்துக் கேகிச் சிறையிலடைக்க, பின் புலஸ்தியரால் விடுபடல் ... | 832 |
| 87. | அநுமப் படலம் ... | 838 |
| 88. | ஸ்ரீராமபிரான் தன்னைக்காணவந்த ஜனகமகாராஜனுடனளவளாவிமகிழ்ந்து தனது சவிஸ்தாரங்களை வசிஷ்டராற் சொல்லக்கேட்ட வச்சனகமகாராஜன் சீதையைக்கண்டு பிரிய வசனங்கூறி மிதிலாபுரியடைதல் ... | 844 |
| 89. | சீதைவனம்புகு படலம் | 846 |
| 90. | ஸ்ரீராமபிரானுத்தரவுபடி சீதாபிராட்டியை இரதமேற்றிக் கானஞ்செல்லுதல் | 850 |
| 91. | இலவணாசுரன்வதைப் படலம் ... | 865 |
| 92. | சத்துருக்னர் இலவணாசுரனைச் சம்ஹரிக்க ஸ்ரீராமரிடத்தில் விடைபெற்றுச் செல்ல வழியிலுள்ள வான்மீக ராச்சிரம மடைந்து கல்மாஷபாத மகாராஜன் சரித்திரங்கேட் டிருக்கையில் சீதாபிராட்டி குசலவரைப்பெறக்கேட்டுவருந்தல் | 869 |
| 93. | சம்புவன்வதைப் படலம் | 876 |
| 94. | அஸ்வமேதயாகப் படலம் | 882 |
| 95. | ஸ்ரீராமர், குசலவரைத் தமது பிள்ளைகளென்றறிந்து வான்மீகரையும் சீதையையும் அழைப்பித்தல்... | 893 |
| 96. | வான்மீகரொடு யாகசாலை வந்த சீதை தனதுகற்பைப்பற்றிப் பிரமாணஞ் செய்து பூப்பிரவேசமாய் மறைய அப்பூதேவிமேல் இராமமூர்த்தி கோபித்தல் | 895 |
| 97. | கால்காத்த படலம் ... | 898 |
| 98. | ஸ்ரீராமர்பால் காலன்வந்து பிரமன்கருத்தை யறிவித்தல் ... | 905 |
| 99. | கோசலதேசத்தில் ஸ்ரீராமர் பிள்ளைகட்கும், மதுரையில் சத்துருக்னர் பிள்ளைகட்கும் மகுடாபிஷேகமும், அச்சத்துருக்னரும், சுக்ரீவாதியரும் அயோத்திக்குவருகையும், அவ்வவர்கட்கு ஸ்ரீராமனு அருளிப்பாடும் ... | 910 |
| 100. | ஸ்ரீராமர்தமது சகோதரர் முதலிய பரிஜனங்களோடு சரயுகட்டஞ் சேர்ந்து சோதியிற்கலந்தருளி இலக்குமிசமேதராய் ஸ்ரீவைகுண்டமடைதல். ... | 912 |

நெ. 43. ஸ்ரீராமர் எழுபதுவெள்ளம்வானரசேனையோடும் பவளமலையினின் றும் தென்றிசைக்கடலடைதல்.



இராவணன் மந்திராலோசனைசபைகூட்டி அமைச்சர்கும்பகர்ணாதியர்கருத்தறிதல்.



உயுத்தகாண்டம். கடல்காண்படலம்.

ஸ்ரீ



ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ சீதா லக்ஷ்மண பரத சத்துருக்ன அநுமத்சமேத

ஸ்ரீராமச்சந்திர பரப்பிரமணேநம:.

# ஸ்ரீமத் கம்பராமாயணவசனம்.

ஆறவது,

## உயுத்த காண்டம்.

தோத்திரக்கவி.

ஒன்றேயென்னி னொன்றேயாம் பலவென்றுரைக்கிற் பலவேயாம்
அன்றேயென்னி னன்றேயா மாமேயென்னி னாமேயாம்
இன்றேயென்னி னின்றேயா மிலதென்றுரைக்கி னிலதேயாம்
நன்றேநம்பி குடிவாழ்க்கை நமக்கிங்கென்னோ பிழைப்பம்மா.

முதலாவது,

## கடல்காண் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமச்சந்திரர் எழுபது வெள்ளம் வானரசேனைகளோடு தென்றிசைச் சமுத்திரத்தை யடுத்ததும், அச்சமுத்திரத்தினுடைய வர்ணனையுஞ் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமபத்திரர் தென்றிசைச் சமுத்திர மடைதல்.

கவி.

ஊழி திரியுங் காலத்து முலையா நிலைய வுயர்கிரியும்
வாழி வற்றா மறிகடலு மண்ணும் வடபால் வானோரும்
பாழித் தெற்கு னணைகிரியு நிலனுந் தாழப் பரந்தெழுந்த
எழு பத்தின் பெருவெள்ள மகர வெள்ளத் திறுத்ததால்.

பொங்கிப் பரந்த பெருஞ்சேனை புறத்து மகத்துங் குடைசுற்றச்
சங்கிற் பொலிந்த தடங்கையோன் பிரிந்த பின்பு தமக்கினமாம்

கொக்கிற் பொலிந்த தாமரையின் குழுவுந் துயில்வுற் றிதழ்குவிக்கும்
அக்குற் பொழுதுந் துயிலாத கண்ணன் கடலைக்கண் ணுற்றான்.

எவ்வேறுகிய ஊழிக்காலத்திலும் சலனமில்லாமல் நிலைபெற்றிருக்கின்ற உன்னதமான மகமேரு முதலாகிய பர்வதங்களும் - எக்காலத்திலும் வற்றாதிருக்கின்ற சமுத்திரமும் - பூமியும் - வட்பாரிசத்திலே வானமளவும் உயரவும், தென்பாரிசத்தி லிருக்கின்ற பொதிய முதலாகிய மலைகளும் - நிலமும் - பாதாளமளவுந் தாழவும், எங்கும் பரவியெழுந்த வானரசேனை எழுபது வெள்ளமுந் தெற்கிலுள்ள மகரவெள்ளமாகிய கடலி னருகேவந்து தங்கியன. சமுத்திரமானது சமீபித்திருக்கிற படியினாலும் - சுவாமி வெகுநாளாகப் பிராட்டியாரைப்பிரிந்திருக்கிற படியினாலும் - இனி வழிமத்தியில் எங்கு நில்லாமல், பசி - தாகம் - களைப்பு - முதலானவைகளையும் பாராமல், எப்படியாவது பிரயாசத்துடனே பிரயாசமாய்ப்போய்ச் சீக்கிரத்திற் சேரவேணுமென்றும் - இராவணாதி ராக்ஷதருடனே எதிர்த்துச் சண்டைசெய்து ஜெயித்து சீதாபிராட்டியின் சிறையை மீட்கவேணுமென்றும் - எண்ணங்கொண்டவர்களாய் மனதுபொங்கி, நிலமுழுதும் பரந்து விரைந்து நடந்துவந்த அவ்வானரசேனை வீரர்களெல்லாம் மாயையுடைய ராக்ஷதர்களாலே சுவாமிக்கு என்ன அபாயம் வருகிறதோ வென்று சர்வஜாக்கிரதையுடனே அணியணியாய் அவருக்குப் புறத்திற் புடைசூழ்வ தானார்கள்.

இதுபோலவே அந்தவானரர்கள் தங்களைப்பெற்ற தாயர் - தந்தையர் - தமையன்மார் - தம்பிமார் - பெண்சாதி-பிள்ளைகள் - இவர்கள் முதலானவர்களையும் கைவிட்டு தமக்குத் துணையாகவந்ததனால் அவர்களில் ஒருவராவது தப்பாமல் வந்து சேர்ந்தார்களா வென்றும், அவர்களுக்குப் பொல்லாங்கு எங்கே சம்பவிக்கிறதோ வென்றும், ஒருவேளை கர்மவசத்தால் ஆருக்காவது பிராணநஷ்டம் வந்தால் அந்தச் செய்திகேட்டு அவர்களுடைய பந்துவர்க்கத்தார் இந்தராமன் தன்பெண்சாதியை ராவணனெடுத்துக்கொண்டு போனதைக்குறித்து அவளைமீட்பதற்காக எங்கள் புத்திரர் புருஷர் அண்ணன்மார் தம்பிமார்களையெல்லாம் ஆட்டுமந்தைபோல மடக்கிக்கொண்டுபோய்ப் பத்திரமாய்க் காப்பாற்றி அழைத்துக்கொண்டு வராமல் அநியாயமாய் ராக்ஷதப் புலிகளின்வாய்க் கிரையாகக் கொடுத்துவிட்டானே: ஐயோ நாசகாலமே: என்று தம்மை நிந்திப்பார்களென் றெப்போதும் அவரவர்களை மறவாமல் மனதிற் சிந்தித்துக்கொண் டிருக்கின்றதனால் அந்தவானர வீரர்கள் அவருக்கு அகத்திலும் புடைசூழ்வதானார்கள். இப்படி வானரவீரர்கள் தமதகத்திலும் புறத்திலும் புடைசூழ ஜானகியாரைப் பிரிந்தபின்பு ஒருவிதத்தில் தம்முடைய கண்களையொத்திருக்கின்ற தாமரைப்புஷ்பங்களு மிதழ்குவித் துறங்குகின்ற இராத்திரிகாலத்திலும் நித்திரையில்லாத கண்களையுடையவராய் துக்கித்துக்கொண் டிருக்கின்ற ஸ்ரீராமபத்திரர் இலங்கைக்குச் சமீபமாயுள்ள தென் சமுத்திரத்தைக் கண்டார்.



## சமுத்திர வர்ணனை.

கவி.

சேயகாலம் பிரிந்தகலத் திரிந்தான் மீண்டுஞ் சேக்கையின்பால்
மாயன்வந்தா னினிவளர்வா னென்றுகருதி வருந்தென்றல்
தூயமலர்போ னுரைத்தொகையு முத்துஞ்சிந்திப் புடைசுருட்டிப்
பாயலுதறிப் படுப்பதே யொத்ததிரையின் பரப்பம்மா.

மாயனென்னுந் திருநாமத்தையுடைய லோகாராட்டியன் அநேககாலமாய்த் திருக்கண் வளர்ந்தருளாமல் தன்சயனஸ்தானத்தை விட்டுப்போய் வெகுதூரந்திரிந்து இப்பொழுது மீண்டுவந்தானாகையால், இனிப்பழையபடி சே பள்ளிகொள்வானென்று நினைத்து தென்றிசையிருந்துவரும் மந்தமாருதமானது வெண்மையாகிய புஷ்பத்தைச் சிந்துவதுபோல நுரையையு முத்துக்களையுஞ்சிந்தி, நெடிதாகிய பாயலைச் சுருட்டியுதறி மறுபடியும் விரிப்பதுபோல அந்தக்கடலலைகளின் பரப்புகள் சுருண்டு பரவிப்பாய்ந்தன. பெருகிவழிகின்ற கண்ணீராகிய கடலினடுவில்நின்று சீதாபிராட்டியார் வியஸனப்பட்டுக்கொண் டிருக்கின்றதனால், தமக்குவந்த பழிக்கு மன்மதனுடைய பஞ்சபாணத்திற்கும் இலக்காயிருக்கின்ற ரகுநாயகருடைய அழகிய திருத்தோள்களை, சமுத்திரங் கொழிக்கின்ற அலைகளிலிருந்து தென்றற்காற்றானது கிரகித்துக்கொண்டுவந்து தூவுகின்ற சிறிய நீர்த்துளிகள் கருமானுடைய உலைக்களத்தில் துள்ளியெழுகின்ற நெருப்புப் பொறிகளைப்போல, என்ன காரணத்தினாலோ சுறுக்கிடும்படிச்சுடத் தலைப்பட்டன.

ஜானகியாகிய பிராணநாயகியைப்பிரிந்த வியாகூலத்தால் நேற்றுகண்ட திருமேனி இன்றுகண்டவர்களுடைய கண்களுக்கு நிறம்வேறுபட்டு அடையாளந்தெரியக்கூடாமல் நாளுக்குநாள் இளைத்துக் காணத்தக்கதாக உயிர்நிலைதளர்கின்ற ஸ்ரீராமனென்கிற மருமகனைக்கண்டும் வாவென்றழையாமல், ஐயா! உன்னெஞ்சக்குரிய நாயகியைப் பறிகொடுத்தனையா? உனக்கும் ஆபத்துவந்ததா? என்று மேல்விழுந்துபடாமல், என்றுமில்லாத இந்தச் செல்வமருமகன் மாமியார்வீடுதேடி அபூர்வமாக வந்ததையு நினையாமல், தன்மகளாகிய சீதையை இராவணன் கொண்டுபோனதைக் குறித்துத் தனக்குச்சம்பவித்த சோகத்தினால் மெய்மறந்து, தன்னுடனேகூடத் துணையாயிருக்கின்றவர்களுமில்லாமல், ஒற்றைக்குரலாய்த் தனியே கதறிக்கொண் டிருக்கின்ற அக்கடலினுடைய அலைகளின்மேல் தவழ்ந்து விளையாடுகின்ற இளந்தென்றலாகிய தன்பிள்ளை அந்தக்கடற்கரையிலுள்ள தேனொழுகுகின்ற புன்னைப்புஷ்பத்தின் மகரந்தப்பொடியைக் கந்தப்பொடியாக வாரிக்கொண்டுவந்து, அடிக்கடி ஸ்ரீராகவப்பிரான்மேற் பூசி, தனது தமக்கையின்மணாளனாகிய மைத்துனன் முறைமையைக்கொண்டாடும். அக்கடலினிடத்திற் பவளக்கொடிகள் படர்ந்திருப்பன எப்படியிருக்கின்ற தென்றால் - தம்முடைய திருத்தோள்களுக்கு முன்பு ஒப்பாகாத மேருமுதலாகிய பலமலைகளும் சிறிது ஒப்பாகும்படிமிகவுமெலிவுகூர்ந் திருக்கின்ற சக்கிரவர்த்தித் திருமகனுக்கு எதிரே எழுலோகத்தாரும் சிவ

சின்மேற் கொள்ளத்தக்க கற்புக்கிருப்பிடமாகிய சீதாதேவியின் திருவாயைப்போல் ஒப்பற்றனவாய்த் தோன்றி அவருடைய பிராணனை வாட்டுகின்றவைகளாகையால், இவைகள் ஜீவகோடிகளை இம்சிக்கின்ற எமன்தானோவென்று அவர் பயப்படும்படியிருக்கின்றன. அந்தக்கடலானது என்மகளாகிய சீதையானவள் ஒழியாத துன்பத்தை அநுபவித்துக்கொண்டு இலங்கையில் தனியே தவஞ்செய்கின்றது அவளது பர்த்தாவாகிய உம்முடைய கௌரவத்திற்குத் தகுதியாயிருக்கின்றதோவென்று கண்ணீர் ததும்புவதுபோல் முத்துக்களைச்சிந்தி, கையைவிரித்து மார்பிலடித்துக்கொண்டு, சுவாமிதிருவடியில் விழுந்து முறையிடுவதுபோல அலைகளெழுந்து மடங்கிவிழும்படி இரையத் தொடங்கியது.

மற்றும் ஆதிசேஷனுடைய முடியின்மேற் கிடக்கின்ற பூமியே அம்மிக்கல்லாக, மேலேயெழும்பிச் சிதறுகின்ற சிறுதுளிகளே தெளிநீராக, புனிதமாகிய நீர்க்குழவியைச் சுழற்றிச்சுழற்றி, வெளுத்தநுரையாகிய சந்தனத்தை ஸ்ரீராமச்சந்திரனுடைய விரகாக்கினியால் வெதும்புகின்ற திருமேனியில் அத்திவெப்பந் தணியத்தக்கதாக அள்ளிப்பூசும்படி அக்கடலானது அலையாகிய தன் கைகளினால் அரைப்பதுபோலவு மிருந்தது. மேலுமக்கடல் குயிலையொத்த பிராட்டியாருடைய துயரத்தைநீக்கித் தேவர்களுக்குச் சம்பவித்த குறையை முடிக்கும்படி கையிலே கோதண்டத்தையேந்தி முதுகின்புறத்தில் அம்புப்புட்டிலைத்தாங்கி அதிககோபத்துடனே சத்துருக்கள்மேல் யுத்தத்திற்காக வந்திருக்கின்ற கங்கை நாட்டையுடைய தசரதகுமாரனைப் பார்த்து மனது களிக்கும்படி, அலைகளாகிய கைகளைத் தூக்கிநீட்டிக்கொண்டு எதிரே ஓடிவந்து ஆர்ப்பரிக்கிறதுபோலவு மிருந்தது. இவ்விதமாகிய சிறப்பினையுடைய தென்சமுத்திரத்தின் கரையில் இரகுகுலோத்தமர் வந்துசேர்ந்து, அந்தக்கடலுக்கும் எழுபங்கு அதிகமாக அபிமானமும் - துக்கமும் - ஆசையும் - உதிக்கும்படி இனிமேல் என்னவினையுமோவென்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். இவ்விதமிருக்க - பின்பு லங்காபட்டணத்தில் நடந்த காரியங்களைக் குறித்தும் நிகழ்ந்தபொருள்களைக்குறித்தும் சாங்கோபாங்கமாகச் சொல்லுவோமாக..

கடல்காண் படலம் - முற்றிற்று.



ஸ்ரீராமஜெயம்.

இரண்டாவது,

# மந்திரப் படலம்.

இப்படலத்தில் இராவணன் பிரமதேவனேவலால் மயன்புதுக்கிய இலங்கையைக்கண்டு சந்தோஷித்து மந்திராலோசனைச்சபை கூட்டுவித்ததும், அச்சபைநடுவில் கொலுவீற்றிருந்த இராவணன் மந்திரத்தலைவர்களிடத்தில் தனக்குநேர்ந்த விபத்தைக்கூற அவர்கள் தனித்தனி தங்கள்கருத்தை யுணர்த்தியதும், பின்பு கும்பகர்ணனானவன் அவன்செய்த துர்க்கிருத்தியங்களை யெடுத்துக்கூறி இனி நடத்தவேண்டுவ திதுவென்று ஒருவாறுணர்த்தியதும், அப்போதவன் கருத்திற் கிணங்கிய இராவணனுக்கு இந்திரஜித்தானவன் தன்பராக்கிரமங்கூறித் தேற்றியதும், அவன்தேற்றியவாற்றாலே விபீஷணனானவர் கடிந்து தமது தமையனுக்குத் தம்மாற்கூடியவரையில் தகவுரைத்ததும், அவ்வா றுரைத்தும் இராவணனவரைக்கடிந்து தன்பராக்கிரமங்கூறி ஆக்கிரமித்ததுஞ் சொல்லப்படுகின்றது.

## ஆஞ்சனேயனாற் கொளுத்திய விலங்கையை மயன்புதுக்க இராவணன் மந்திராலோசனைச்சபை கூட்டுவித்தல்.

கவி.

பூவருமயனேவும் புகுந்துபொன்னகர், மூவகையுலகினு மழகுமுற்றுற
வெனவியற்றினன் கணத்தினென்பரால், தேவருமருள்கொளத் தெய்வத்தச்சனே.

ஆஞ்சனேயரால் தகிக்கப்பட்டு எரிந்து நீறாய்ப்போகிய இலங்காபுரியைப் பிரமதேவர்வந்திருந்து தெய்வத்தச்சனாகிய மயனென்பவனை அழைப்பித்து முன்னிலுமநேகமடங்கு அழகுமிக்கதாய்ச் செய்யக்கடவாயென்று ஆக்கியாபிக்க, அவன் அப்படியே சுவர்க்கமுதலாகிய மூன்று உலகத்திலும் விசேஷமாகிய [illegible] தக்கதாக, இந்திரன் - குபேரன் - இவர்கள் முதலாகிய தேவர்களெல்லாம் இது அமராபதியோ? அளகாபுரியோ? தேஜோபதியோ? என்று சந்தேகமுற்றுப் பிரமிக்கும்படி ஒருக்ஷணப்பொழுதிலே நிர்மிதம்பண்ணினான். சகலலோக சிருஷ்டிகர்த்தாவாகிய அந்தப் பிரமதேவரே இப்படிச் செய்யவேணுமென்று அதனதன்அங்கங்களையெல்லாங் குறித்துக்காட்ட அவருடைய நோக்கத்தின்படியே அந்த மயனானவன் சிருஷ்டித்தானாகையால், பழிப்பில்லாத உலகங்களையெல்லாம் பலகால் அழித்தழித்துச்செய்கின்றவனுக்குச் செய்தற்கரிதாகியதும் ஒன்றுண்டோ?

இப்படி ஆபிரத்தெட்டு மாற்றையுடைய சாம்பூநதமென்னும் பொன்னினாலும், கோமேதகம் - பவளம் - புஷ்பராகம் - மரகதம் - மாணிக்கம் - முத்து - வச்சிரம் - வைடூரியம் - என்கின்ற நவரத்னங்களாலும், நூதனமாய் மகாவினோதவிசித்திரமாகச் செய்யப்பட்ட திவ்விய சுந்தரத்தையுடைய இலங்

காபட்டணத்தைத் ராவணேஸ்வரன்வந்து பார்த்து, உடனே தேவலோகத்தையும் இதனேடு ஒப்பிட்டுப்பார்த்து; இந்நகரம் முன்னிலும் அதிக அழகையும் அற்புதத்தையும் உடையதாயிருக்கின்றதென்று நினைத்து, அதற்குமுன் இலங்கை அழிந்துபோய்விட்டதென்று தான்கொண்ட கோபமாறி மிகவுஞ் சந்தோஷப்பட்டான். பட்டணமுழுதும் செவ்வையாகப் பார்த்துச் சந்தோஷித்த தசக்கிரீவன் பிதாமகனுகிய அந்தப்பிரமதேவருக்குக் கிரமமாகப் பூஜார்ச்சனைசெய்து, மயனுக்கு மகிழ்ச்சியுடனே அருமையாகிய நானுவிதவஸ்துக்களையும் அன்புடன் வெகுமானங் கொடுத்தனுப்பினுன்.

பின்பு செழுமையாய்ப் பிரகாசிக்கின்ற மாணிக்கத்தினுற்செய்த பத்துலக்ஷந்தூண்களிலுந்தி அதிக சிங்காரமாகக் கட்டப்பட்ட மகாமண்டபத்தில் சிங்கங்கள்சுமக்கின்ற உன்னதமாகிய ஆசனத்தில் பிரதாப லங்கேஸ்வரனுனவன்போய், சிரேஷ்டர்களாகிய சுற்றத்தாரும் மனுநூலையுணர்ந்த பூரணமாகிய மந்திரித்துவத்தையுடைய வயோதிகப் பிரதானிமார்களும் சேனுபதிகளும் தன்னைப்புடைசூழ, தன்மார்பிலணிந்த மணிமாலை மலர்மாலை முதலானவை மகரகாந்தியையும் பரிமளத்தையும் வீசி அசைய, தேவஸ்திரீகள் சாமரம்வீசும்படி வீற்றிருந்தான். அப்போ தவ்விராவணன் மந்திராலோசனை செய்யவேணுமென்று கருதி, அங்குள்ள முனிவர்களையும் தேவர்களையும் மலர்களினுலலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடைய ஸ்திரீகளையும் பாலியர்களையும் மற்றுமுள்ள அந்நியர்களையும் அப்பாற்போகச்சொல்லி, சகலசாஸ்திர பண்டிதர்களையும் நெடுங்காலமாகத் தன்னுடன் பழகியிருக்கின்ற பேர்களையும் விருத்தர்களையும் குணசாலிகளையும் மந்திரி சிரேஷ்டர்களையும் வரவழைக்கச்சொல்லி ஆக்கியாபித்துத் தன்னருகில் வைத்துக்கொண்டான். தன்மலர்மாலையிலுள்ள தேனைவிரும்பிவருகின்ற வண்டுகளையும் தனக்குக் குளிர்ச்சியைத்தரும்படியாய் வருகின்ற மந்தமாருதமாகிய தென்றற்காற்றையும் உள்வராதபடி ஆக்கியாபித்தான்.

இன்னும் நிறைந்தமைந்த நல்லகேள்வியை உடையவர்களாயிருந்தாலும், ஆண்மைக்குறைவிறந்த நேசராயிருந்தாலும், பந்துக்களாயிருந்தாலும் புத்திரர்களுக்கும் தம்பிமார்களுக்கும் சமானமானவர்களாயிருந்தாலும், அவர்களையும் மற்றுமுள்ளவர்களையும் வரவொட்டாமல் தடுத்து உள்ளே நுழையாமல் விலக்கிவிடும்படி உத்தரவுசெய்து; திக்குகள்தோறும் காவற்காரரை வைத்தான். அந்தக்காவல்காக்கும் வீரர்களின் பிரதாபத்தைக்குறித்து என்னவென்று சொல்லுகிறது? உலகமெல்லாம் ஒருமிக்கக்கூடியெதிர்த்தாலும் உள்ளங்கைக்குளிட்டு மூட்டுப்பூச்சிகளைப் போல நசுக்கிப் பிசைக்கத்தகுந்த பலசாலிகளாயிருக்கின்றவர்களாகையால், அவர்கள்காவலிற் பறக்கின்ற பக்ஷிகளும் எங்குமோடித் திரிகின்ற மிருகங்களும் மற்றஜெந்துக்களும் சப்திக்கிறதற்கும் பலதிசைகளிலும் சஞ்சரிக்கிறதற்கும் அஞ்சி வாயைத்திறவாமல், அவ்வவைகள் இருந்தவிடத்திலேதானே அசைவற்ற சித்திரம்போல் ஸ்தம்பித்திருந்து விட்டன.



## இராவணன் மந்திரிமார்களைப் பார்த்துக்கூறல்.

கவி.

நாட்டியழிந்ததனின்மேற் றருவதென்னினி
மாட்சியோர்குரங்கினு லழிந்தமாநகர்
ஆட்சியுமமைவுமென் னரசுமன்றெனச்
சூட்சியின்கிழவரை நோக்கிச்சொல்லினுன்.

இப்பால் செவிகளிலணிந்த மாணிக்கக் குண்டலங்களும் தோள்களிலணிந்த நவரத்தின வாகுவலயங்களும் மார்பிற்பூண்ட முத்துமணித் தாழ்வடங்களும் முன்கையில்தரித்த மரகதக்கடகங்களும் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கவும், சிரசிற்தரித்த வச்சிரகிரீடங்கள் இருளைக்கோபித்துத் துரத்தவும், சபாநாயகனுய் உன்னதமாகிய சிங்காசனத்தில் வீற்றிருந்த ராவணேஸ்வரன் தான்நினைத்த நினைவை வெளியிடும்பொருட்டுத் தனக்குச் சமீபத்திலிருந்த மந்திரத்தலைவர்கள் முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறான். கேட்டீர்களோ சபையார்களே! ஒருகுரங்கினுலே என்னுடைய அழியாத பெரியலங்காபட்டணம் அழிந்துபோயிற்று. இதைப்பார்க்கிலும் இனிமேலும் வரத்தக்க மானத்தாழ்வு என்ன இருக்கின்றது? என்னுடையபராக்கிரமமும் குறையாத சம்பத்தும் இராஜரீகமும் அழகாயிருக்கின்றன. என்றுசொல்லி, மற்றும் அந்தச் சிறுகுரங்கு சுட்டிச்சூறையாடும்படி நம்முடைய நகரமானது சமூலமும்வெந்து பொடியாய்விட்டது. பந்துஜெனங்களும் சிநேகிதர்களும் மடிந்தார்கள். எங்கு மிகுதியாகிய உபத்திரவமுண்டாயிற்று, இப்படிப்பட்ட அனர்த்தம்விளைந்தும் இந்தச்சிங்காசனத்தில் என்சரீரம் சாவாமல் ஜீவித்திருக்கின்றது.

இலங்கையில் கிணறுகள் துரவுகளெல்லாம் இன்னமும் உதிரவூற்றுச் சுரந்தபடியிருக்கின்றது. ஊருக்குள் ஓர்குரங்குவந்திட்டதி ஆறவேயில்லை. ஸ்திரீகளின் தலைமயிரெல்லாம் அகிற்புகை மணப்பனமாறிச் சுடுநாற்றம் வீசிக்கொண்டிருப்பன. நாமெல்லாம் அந்தச் சுடுநாற்றத்தைத்தானே அநுபவித்துக்கொண்டிருக்கிறோம். நல்லது: பின்னையொன்று மில்லாமற்போனாலும் இப்படிச் சண்டைசெய்து விண்பிரமாதத்தை விளைத்துப்போன குரங்கு மாண்டுபோய்விட்டதென்கின்ற சொல்லாவது நமக்குக் கிடைக்கலாகாதா? அதுவுமில்லை. ஆகையால் நாமெல்லாம்பிறந்தும் பிறவாதவர்களானோமென்பதைப்பெற்றோமேயல்லாமல், நமதெண்ணத்தின்படி முடித்திலோம். இனிநமக்கென்ன பெருமையிருக்கிறது? அபகீர்த்திக் காளாயினோம். என்று இவ்விதமாக ராவணன்சொல்லினுன்.

## பிரகஸ்தனென்னுஞ்சேனுபதி இராவணனுக்குச் சொல்லல்.

கவி.

என்றவனியம்பலு மெழுந்திறைஞ்சினுன்
கன்றியகருங்கழற் சேனைகாவலன்

ஒன்றுள துணர்த்துவ னொருங்குகேளென
நின்றன னிகழ்த்தினன் புணர்ப்பினெஞ்சினன்.

கரோமாகிய கோபத்தையுடைய சேனாபதியான பிரகஸ்தனென்பவன் நமஸ்கரித்து, சுவாமி! அடியேனொரு விண்ணப்பஞ்செய்கிறேன். அதைத் தாங்கள் கேட்டருளவேண்டும். என்று நின்றபடியே சொல்லுகின்றான். இராமலட்சுமணர்களாகிய மனிதர்களை வஞ்சித்து அவர்களுடைய ஸ்திரீயை எடுத்துக்கொண்டு வருகிறது பயந்தவர்கள்செய்கிற காரியமென்று நான்முன்னமே தானே அறிவித்தேன். சகலத்தையும் அறியத்தக்க புத்திசாதுரியத்தையுடைய நீர், அது அற்பமாகிய செய்கையென்று எனக்குத்தோன்றிச் சொன்னதாக எண்ணி, அதினுட்பொருளாகிய விஷயங்களைக் கவனியாமற்போனீர். அவர்கள் கரதூஷணாதியரைக்கொன்ற கள்ளர்கள். மேலும் உம்முடைய தங்கையாருடைய மூக்கையறுத்த வீரர்கள். ஒருகுரங்கைத் தூதனுப்பி அக்ஷயன் முதலானவர்களையு மாயச்செய்து வெகுதுன்பத்தை விளைவித்தவர்கள். அப்படிப்பட்ட சத்துருக்களை அப்பொழுதேகொல்லாமல்விட்டுவிட்டு, இப்பொழுது அரசாட்சி யழிந்ததென்று விசனப்படுகிறீர். சாம பேத தான தண்டமென்கின்ற நால்வகை உபாயங்களுளொன்றாகிய தண்டமென்று சொல்லப்பட்ட போர்செய்து வெல்லுதற்கு உரியவர்களைக் கண்ணிலேகண்டும், அது சத்தியமான காரியமாயிருந்தும், இராஜரீகம் செய்கிறவர்கள் அப்படிச்செய்யாமற் பொறுத்துக்கொண் டிருப்பார்களோ? பகைவர்களுடைய மதத்தையடக்கி அரசாளத்தக்க ஆண்மையையுடைய நாம் இனியவர்களை வணங்கியோ பிழைக்கப்போகின்றோம்?

ஐயா! நீர் இதுவரையிலும் உம்மோடெதிர்த்த தேவர்கள் - அசுரர்கள் என்றுசொல்லு மனைவரையும், விஜயம் - புஜபலம் - வீரம் - தீரம் - இவையாவுமற்று ஓடியொளிக்கும்படி ஒடுக்கித் திரிலோகாதிபதியாய் ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு வந்தது உம்முடைய வீரத்தினாலேயோ? அல்லது பொறுமையினாலேயோ சொல்லும். சத்துருக்கள் பிராணநாசமாம்படி அவர்களை அதம்பண்ணாமல் இந்த லங்கையிலே சௌக்கிய மநுபவித்துக்கொண்டிருப்போமானால், அந்தக்குரங் கின்மட்டிலேதானே போமா? இனியொரு கொசுகுவந்து உபத்திரவஞ்செய்தாலும் விலக்கக்கூடுமோ? இந்தவூரைச் சுட்டெரித்துப்போன குரங்கைப் பின்தொடர்ந்துபோய் அதையும், அக்குரங்கை இவ்விடத்திற்கு அனுப்பிய மனிதர்களையுங்கொன்று பழியைத் தீர்த்துக்கொள்ளாமலிருக்கிறோம். விருதாவாய் வாயினாலே பலகாலுஞ் சொல்லிக்கொண்டும், மனதினாலே நினைத்துக்கொண்டுமிருந்தோமேயாகில்; நம்முடைய ஆண்மைக்கு எந்தவிதத்திலும் குறைவுவரும். என்று பிரகஸ்தன் சொன்னான்.

மகோதரன் சொல்லுதல்.

கவி.

மற்றவன்பின்னுற மகோதரப்பெயர்க்
கற்றடந்தோளின னெரியுங்கண்ணினன்



முற்றுறநோக்கினன் முடிவுமன்னதால்
கொற்றவகேளென விளையகூறினன்.

இப்படியாகப் பிரகஸ்தனென்பவன் சொல்லியபிறகு மலையைப்போலும் பருத்ததோள்களையுடைய மகோதரனென்பவன் அக்கினிஜொலிக்கின்ற கண்களையுடையவனாகி திசைகளனைத்தையும் திரும்பித்திரும்பிப் பார்த்து, ஐயா இராவணேஸ்வரனே! இப்போது பிரகஸ்தன் சொல்லிய வார்த்தையின்படி நடப்பதுதான் முடிவு. நானும் சில விஷயங்கூறுகிறேன் அதையும் சற்றுச் செவிசாய்த்துக் கேட்பீரென்று சொல்லுகிறான். தேவரீருடைய வீர சௌரியங்களுக்கும் ஆக்கினைக்கும் பயந்து ககனவாசிகளாகிய தேவர்களு மடங்கிப்போனார்கள். சித்தர்களும் திசைதிசையாய்ச் சிதறினார்கள், அசுரர்களுஞ் செருக்கழிந்தார்கள், யாவருந் தங்களுக்கு இறைவர்களென்று வணங்குகின்ற பிரமருத்திராதியர்களாகிய திரிமூர்த்திகளும் ஒதுங்கிக்கிடக்கிறார்கள். இன்னம் வேறென்ன விசேஷித்துச் சொல்லத்தக்கது? சகலருடைய பிராணனையும் வாங்குகின்ற மகாபலத்தையுடைய யமனும் உம்மைத் தன்னுடைய பிராணனை வாங்குகின்ற யமனென்று நினைத்து, உம்முடைய ஆக்கினையைச் சிரசாகவகித்து, நீரிட்ட ஏவலைச் செய்துகொண் டிருக்கின்றான். இரிஷபவாகனருடனாகிய உருத்திரமூர்த்தியுடனேகூட அவருடைய வெள்ளியங்கிரியையும் அடியோடே பேர்த்து அண்டத்தைமுட்ட அங்கையாலெடுத்து அட்டகாசஞ்செய்த அதிபராக்கிரமத்தையுடைய நீர், சுள்ளியாகிய சிறுகொம்புகளில் தங்கித்திரிகின்ற ஒரு குரங்கினுடைய தோள்வலியை விசேஷித்துச்சொல்லி, அதற்கு உம்முடைய புஜபலத்தை இளைத்ததாக எங்களுடனே இகழ்ந்து பேசுகின்றீர்.

பூலோகத்திலும், சுவர்க்கலோகத்திலும், பாதாளலோகத்திலும், சகலமான இடங்களிலும், உம்முடைய திருஷ்டிக்குத்தட்டுப்படாதவர்கள் ஆரிருக்கின்றார்கள்? ஆயினும் — நீர் யுத்தஞ்செய்து உம்மாலே ஜெயிக்கப்படாத சூரர்கள் தாம் எவர்களுண்டு? ஒருவருமில்லையே: இப்படியிருக்க அந்தச் சொற்பமானவர்களைக் குறித்து இவ்வளவாக ஆலோசிக்கவேண்டுமோ? இனி நீர் இப்படிக்கெல்லாந் துக்காக்கிராந்தராய்ப் பேசவேண்டாம். நானும் தடை சொல்லுகிறதில்லை. இப்பொழுது எனக்குச் செலவுகொடுத்து என்னை அனுப்பினீரேயாகில், இந்தக்ஷணமே அந்தக்குரங்கின் குலத்தை நிர்மூலஞ்செய்து, ஒடுங்காத வலிமையையுடைய அம்மனிதர்களின் உயிரையுமுண்டு, உம்முடைய பகையை நானே முடித்துவிடுவேனென்று சொல்லினான்.

வச்சிரதந்தன் சொல்லுதல்.

கவி.

இச்சிரத்தவனுரைத் திறுக்குமெல்லையில்
வச்சிரத்தெயிற்றவன் வல்லைகூறினன்

அச்சிரத்தைக்கொரு பொருளின்றாயினும்
பச்சிரத்தம்பொழி பருதிக்கண்ணினான்.

இவ்வண்ணம் மகோதரன் சொல்லித் தன்னாசனத்திலிருந்த சமயத்தில் வச்சிரம்போலும் வலிவுடைய தந்தங்களையுடையவனானதால் வச்சிரதந்தனென்னும் பெயரினையுடையவனெழுந்து மிகவும் உருக்கமுடையவனைப்போல் பசிய இரத்தம்பொழிகின்ற கண்களையுடையவனாகி, தான்சிரத்தையோடு சொல்லும் சொற்களில் சாதிக்கத்தக்க யாதொருபொருளின்றாயினும், பெரிய விஷயங்களை ஆராய்ந்து சொல்பவனைப்போலச் சொல்கின்றான்.

ஓ திரிலோகபயங்கரனே! நீபோய் மனிதரையுங் குரங்குகளையும் - தரையிலிட்டுக் கைகளால் தேய்த்துத் தின்றுவிட்டுவாவென்று என்னையேவி நீர் இவ்விடத்திலிராமல், வெகுதூரம் ஆலோசித்து ஆராய்கின்றதென்ன? என்னிடத்தில் ஏதாவது உமக்குச் சந்தேகமுண்டா? முன்பு எந்த உலகத்திலும் உம்முடைய ஏவலைக்கேளாத சத்துருக்களைக் கருவறுத்து சகலரையும் உமக்கு அடிமையாகும்படிசெய்த நான், எவ்விடத்திலேயோ எதுவோ ஒரு காரியத்திலே தவறிப்போனதாக நினைத்தீரோ? இந்தக் காரியத்தை யென்னை முடிக்கச்சொல்லி எனக்கு உத்தரவுசெய்யாமலிருக்கிறீரென்றான்.

துன்முகன் சொல்லுதல்.

கவி.

நின்மினென்றவன்றனை விலக்கியிவை
யென்முனுமெளியர்போ லிருத்தியோவென
மன்முகநோக்கினன் வணங்கிவன்மையால்
துன்முகனென்பவனினையசொல்லினான்.

இவ்வாறு சொன்ன வஜ்ரதந்தனைத் துன்முகனென்பவன் பார்த்து, நீயதற்குத் தக்கவனல்ல நில்லென்று விலக்கி, மகா நீதத்தோடெழுந்து இராவணேஸ்வரனைப் பார்த்து; நீ இவைகளை என்முன்னும் பலஹீனரைப்போலச் சொல்லுகின்றீரோ? என்று கைகூப்பித்தொழுது நான்சொல்லத் தலைப்பட்டான்.

கேளும் பிரதாபலங்கேஸ்வரனே! அஷ்டதிக்கஜங்களும் உம்மை ஜெயிக்கத்தக்க பலமுடையவைகளல்ல. தேவர்களும் பலத்தில் எளியவர்கள், முக்கண்படைத்த சிவபெருமானுடைய கைலாசகிரியும் உமக்குப் பலமற்றதாயிருக்கின்றது. இவைகளெல்லாம் இப்படியிருக்க - இனி மனிதர்களும் குரங்குமே பலத்தில் மிகுந்தவர்களானால், திரிலோக கண்டனாகிய ஓ ராவணேஸ்வரனே! உமக்குண்டாகிய பலமெல்லாம் எங்கேபோயிற்று? ஐயோ! நம்மிடத்தில் எப்போதும் சிறப்பான செய்கைகள் அநேகமாயிருக்கின்றன. அற்பச்செய்கையே சிறியவர்களுக்கு உரியதாயிருக்கின்றது. ஆகையால் நம்முடைய சத்துருக்கள் பலத்தையுடையவர்களென்றாலும், நாம் அவர்களுக்குப்பயந்து நம்முடைய உயிரினிடத்தி லிச்சைவைத்துக்கொண்டு பின்னிடைகிறதா? நீரிப்போ



ழுது ஆலோசித்த ஆலோசனை, பூமியிலே சஞ்சரிக்கின்ற மனிதர்களையும் குரங்குகளையும் நாம் உண்ணுகிறதற்கு ஏற்றதாகவே யிருக்கின்றது. அப்படியே உண்ணுகிறதற்காக நாமருந்தவோமானால், அப்பால் ராக்ஷதர்களைப் பார்க்கிலும் கீழ்ப்பட்டவர்கள் யாரிருக்கின்றார்கள்?

ஓ தசக்கிரீவனே! இப்படி நாமருந்தனத்தினால் நம்முடைய நகரத்தின் வாசலைக்கடந்து உள்ளேவருவதும், நாம் குடியிருக்கிற ஊரிலே நெருப்பை வைப்பதும், எதிர்த்தவர்கள் இறக்கும்படி சண்டைசெய்து போவதும், குரங்குக்கு எளிதாயிருக்கின்றது. இராக்ஷதர்களுக்குக் கடலைத்தாண்டுகிறதே அரிதாயிருக்கிறது. இந்தபட்டணம்வந்து உம்முடைய அரண்மனையையும், கோட்டையையும், சம்பத்தையும், மிதமில்லாத சேனைகளையும், உமது வீரத்தையும், அச்சமில்லாமற் கண்ணினாற்பார்த்து; மனதினால் மதித்துப்போய் ஆர்தான் உலகத்தில் உயிர்தப்பிப் பிழைத்திருக்கின்றார்கள்? பொருந்திய காரியத்தையே நினைத்தாலும், உறுதியையே ஆலோசித்தாலும், ஜெயித்தலையே விரும்பினாலும், போர்த்தொழில்செய்யத் துணிந்தாலும், அவர்களிருக்குமிடத்திற்போயல்லவோ ஆகவேண்டியது? ஆகையால் அவ்விடத்திற்போய் அவர்கள் நிர்மூலமாகும்படி கொல்வதேகாரியம். என்று அவனுக்குத் தெரியச்சொன்னான்.

மகாபாரிசன் சொல்லுதல்.

கவி.

காவலன்கண்ணெதி ரவனைக்கைசவித்
தியாவதுண்டினிநமக் கென்னச்சொல்லினன்
கோவமும்வன்மையுங் குரங்குக்கேயென
மாபெரும்பக்கனென் றொருவன்வன்மையான்.

இப்படி கூறிய அந்தத் துன்முகனை இலங்காதிபதியின் கண்ணெதிரே மகாபாரிசனென்னும் பராக்கிரமத்தையுடைய மந்திரியானவன் கையமர்த்திச் சொல்லுகின்றான். ஓ தேவகுலகாலனே! கோபமும் சாமர்த்தியமும் குரங்குக்கேயல்லாமல், இனிநமக்கென்ன விருக்கின்றது? முன்னம் அந்தக் குரங்குடனே பலமில்லாதவர்களிற் சிலபேர்தான் யுத்தஞ்செய்து மடிந்துபோனார்கள். அவர்களுடனே நம்முடைய புஜபலமெல்லாம் போய்விட்டதா? அல்லது குரங்குவந்து இட்ட நெருப்பினால்வெந்துபோன லங்கையுடனேகூட ராக்ஷதர்களுடைய ஆண்மையும் வெந்துதான்போயிற்றோ? அம்மனிதர்கள் சுயேச்சையாய் எவ்வளவும் குரங்குவந்து இந்நகரைக் கொளுத்துவதும், இராக்ஷத சேனையை மடிப்பதும், அதினிமித்தம் மற்றவர்களெல்லாம் விசனப்பட்டுக் கூட்டங்கூடி ஆலோசிப்பதுமானால்; அப்பால் நடக்கவேண்டியதைக் குறித்துச் சொல்லவேணுமா? இப்படிக்கெல்லாம் இருந்திருக்க, இவைகளை ஒருவரோடொருவர் ஆலோசனை பண்ணவும் வாயினால் சொல்லவும் எனக்குச் சம்மதியா யிருக்கவில்லை. அந்த மனிதர்களையும் குரங்கையுங் கொன்றுதின்

ருமொழிய ஒரு எண்ணமுங் கைகூடிவரமாட்டாது. என்று சண்டைசெய்யவே எத்தனப்பட்டு அதிக கோபமாய்ச் சொன்னான்.

பற்பல மந்திரிகள் பற்பலவாறு கூறுதல்.

கவி.

மற்றவன்பின்னுற மற்றையோர்களும்
இற்றிதுவேலை மெண்ணமற்றிலென்
ஏற்றனவுற்றன சொல்லியோங்கினர்
புற்றுறையரவெனப் புழுங்குநெஞ்சினர்.

அவனுக்குப்பின்பு பிசாசனென்று பெயர்பெற்றவனெழுந்து, மேற்கூறிய மகாபாரிசன் முதலாயினோரைப் பார்த்து, நம்முடையராஜா செய்கின்றதைப் பார்த்தால் வீணாயோசிக்கிறதும் சரீரம் குன்றுகிறதுமாயிருக்கிற காரியமேயல்லாமல் ஒன்றும் சாரமில்லாதபடியினாலே, நாமெல்லாம் பட்டணத்தைவிட்டுப் பலதிசையிலும்போய் நம்முடைய வாழ்வை பொழித்துவிடவேண்டியதாய் நேர்ந்ததென்று நெருப்பைப்போலப் பொங்கிச்சொன்னான். அவன்சொன்னவுடனே சூரியசத்துருவென்பவன் அப்பிசாசனோடுங்கலந்து, நம்முடைய ராஜாவின்குணமோ இப்படியிருக்கின்றது. இவருடைய ஆலோசனையும் ஒருவிதமாயிருக்கின்றது. ஆகையால் காணுமிடத்தில் மனிதர்களே பெரியவர்களும் நாம்சிறியவர்களு மாய்விட்டோம். இனிவேறென்ன இருக்கின்றதென்று சொன்னான். அப்பால் யாகசத்துருவென்கிறவனெழுந்து, ஓ நண்பர்களே! இராக்ஷதர்கள் யுத்தஞ்செய்வதிலும் பலத்திலுந் தாழ்ந்தவர்களா? இது ஒருவராலே சொல்லத்தக்கதா? மனிதர்களைக் குறித்துச் சகலருங் கூடியிருந்து மந்திராலோசனை செய்கிறமட்டும் வந்துவிட்டதே. ஆ! ஆ! நன்றாயிருக்கின்றதென்று சொன்னான். பின்பு தூமாக்ஷன் மகாவுக்கிரத்தோடு ராவணனைப்பார்த்து, குரங்கின் கூட்டத்தையுடைய மனிதர்களை நாங்களொருபொருளாகச் சொல்லமாட்டோம். மேலும் - சூலப்படையையுடைய ருத்திரனைக்குறித்துச் சொன்னாலும் லக்ஷியஞ் செய்யமாட்டோம். எப்படியாயினும் அவர்களைக் கொல்லுகிறதே யுக்தமென்று சொன்னான். அவனுக்குப்பின் மற்றமந்திரிமார்களும் இதுவேயுக்தமென்று புற்றிலிருக்கின்ற சர்ப்பங்களைப்போல் மனம்புழுங்கி, அவரவர்க ளிருந்தவிடத்திலிருந்து சொன்னார்கள்.

கும்பகருணன் அமைச்சராதியரைத் தடுத்துத் தனதுகருத்தை யுணர்த்தல்.

கவி.

வெம்பிகலராக்கரை விலக்கிவினைதோரா
நம்பியிருக்கவென நாயகனைமுன்னா
எம்பியெனசிற்சிலுரை செய்வலிதமென்னாக்
கும்பகருணப்பெயரி னனிவைகுறித்தான்.

இந்தப்பிரகாரம் அதிககோபாவேச முடையவர்களாய்ச் சொன்ன மந்திரிமார்களையெல்லாம் கும்பகர்ணனென்பவன் கையமர்த்தி, நீங்கள் காரியாகாரியந் தெரியாமற் பேசுகின்றீர்கள், சும்மா இருங்கள். என்று தடுத்துத்



தமையனாகிய தசக்கிரீவனைப்பார்த்து, வாரீர் அண்ணா! நான் இதமான சிலவார்த்தைகளைச் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லத்தொடங்கினான். நீர் சிரேஷ்டமிக்க முதற்குலமாகிய பிரமகுலத்திலே உற்பவித்தீர். சகலவேதங்களையும் ஓதி, அவைகளின் அர்த்தங்களையுந் தெளிந்து, ஞானதிருஷ்டரா யிருக்கின்றீர். இப்படிப்பட்ட நீர்பாபகிருத்தியத்தை விரும்பிச்செய்ய ஏற்பட்டீர். சித்திரவிசித்திரமா யிருக்கின்ற மகாபட்டணத்தை அக்கினிதத்தமாப்படிசெய்தீர். என்னுடைய ராஜரீகம் அழிந்துபோய்விட்டதென்று வருத்தப்படுகின்றீர். இராஜதர்மந்தப்பி அந்நியகுலத்தானொருவனுடைய பெண்சாதியை இச்சித்து எடுத்துவந்து சிறைவைத்தீர். இதனால் நீர் இந்தப்பாபகர்மமொன்றுமாத்திரமா சூழப்பெற்றீர்? கொடியபாபாத்மாக்கள் அடையத்தக்க மகத்தாகிய பழியையும் அடையப்பெற்றீர். இதைப் பார்க்கிலும் அதிகமாகிய பழி வேறொன்றுண்டோ? இப்பொழுது நகரமானது அழிந்துபோய் விட்டதென்று வெட்கப்படுகிறீர்.

ஐயா! உம்முடைய பிராணனுக்குச் சமானமாகிய தேவிமார்களெல்லாம் உம்மைக் குறித்து அடிக்கடி சிரிக்கும்படி ஒருவன் பெண்சாதியாயிருக்கின்றவளுடைய காலிலே நீர் போய் விழுந்துவிழுந்து வணங்க, அவள் வைது மறுக்கும்படியா யிருக்கின்றதே: இதைப்பற்றி நாணமில்லையா? இது வென்ன கீர்த்தியா? என்றைக்கு ஒருவனுடைய மனைவியினிடத்திலிருந்த பதிவிரதையைக் கொண்டுவந்து இரங்காத கடினசித்தமும் அதற்குத்தக்க கடினச்செய்கையு முடையவனாய், முறையழிந்து சிறைவைத்தீரோ? அன்றைக்கே ராக்ஷதர்களுடைய பெருமை குலைந்துபோயிற்று. அபகீர்த்தியை யுடையவர்களும் புகழைப் பெறுவதுண்டோ? குற்றமற்ற பரதாரத்தையெடுத்துவந்து சிறைவைத்த நீர் தோஷமில்லாத கீர்த்தியை இச்சிக்கின்றீர். வாய்மாத்திரம் படாடோபமாய் வீரம்பேசுகின்றது. மனிதரென்பதைக் குறித்து அபிமானமும் வாதிக்கின்றது. ஆகையால் நம்முடைய பிரதாபம் நன்றாயிருக்கின்றது. உயர்ந்தவர்கள் செய்வதற்குரிய நல்ல செய்கையைச் செய்யவில்லை. நம்முடைய ராக்ஷத குலத்துக்கேற்ற துஷ்கிருத்தியமே செய்தீர். இனியந்தச் சீதாபிராட்டியை விட்டுவிட்டோமானாலும், நாம்பராக்கிரமத்தில் மிகவும் இளைத்தவர்களாகின்றோம். அதைவிட அவர்கள்கையினால் மாண்டுபோனாலும் நல்லதாகும். அது பழிப்பாக மாட்டாது.

மேலும் மரங்கள் அடர்ச்சியாயுள்ள இருண்டவனத்தில் தனக்கு உபபலமில்லாமல் ராமன் ஒருவனேயிருந்து வில்லைத்தாக் கரதூஷணதிரிசிரர்களுடைய சேனைகளை நாசமாக்கி, அவர்களையுங் கொன்று வென்று களைபறித்தான். அதுவும் அவனுடைய சாமார்த்தியத்திற்குப் போதுமானதல்ல. இனி நமக்கும் அந்தக்கதிதானாகப்போகின்றது. அதற்குமேல் நமக்கென்ன வல்லமையுண்டு? அந்தமானிடர்கள் நம்மை ஜெயிக்கத்தக்கவர்க ளானாலும் சார

மில்லையென்பதாக் கினைத்து நாம் விலகிநில்லாமல், அவர்கள்மேற் படையெடுத்துப்போய் நெருங்கி யுத்தஞ்செய்து அவர்களைக்கொல்லாமற் போவோமானல் தேவர்கள் முதலாகிய ஏழுலோகத்தாரும் ஒருமிக்க அந்தப்பகைவர்களுடனே கூடிக்கொள்வார்கள். இவ்விதமாக அவர்களுக்குப் படைத்துணை சேர்கிறதற்குமுன்னே ஒருநொடிப்பொழுதில் நாம் கடலைத்தாண்டிப்போய், அம்மனிதர்களும் குரங்குகளும் வேறோரிடத்திலோடிப் போகாதபடிவளைத்து, வேருடனே மடிந்துபோகப் பஸ்மபடலஞ்செய்வதே காரியமென்றுசொன்னான். அந்தவார்த்தையைக்கேட்ட ராவணேஸ்வரன் அவனைப்பார்த்துச் சொல்லுகிறான். அப்பா தம்பீ கும்பகர்ணா! நீநல்ல தந்திரஞ்சொன்னாய். நானும் இப்படியே யோசித்தேன். இதைவிட்டு இனி வேறொருயோசனை செய்கிறதனுகாரியப்படுநாகும். இந்தநொடியிற்போய்ச் சத்துருக்களை யெல்லாங் கொன்று குவித்துவிட்டுவருவோம். ஆகையால் நமது சேனாசமுத்திரத்தையெல்லாம் இப்பொழுதே பிரயாணப்படுத்தும்படிச் செய்யக் கடவாயென்று ஆக்கியாபித்தான்.

## இந்திரஜித்து தன்பராக்கிரமங்கூறி இராவணனைத் தேற்றுதல்.

கலி.

என்றவனியம்பியுற மெல்லையினில்வல்லே
சென்றபடையோடெறி மானுடர்சினப்போர்
வென்றுயெயர்வாபரச் சீகொலெனவீரம்
ஒன்றுபெரிதென்றுமக னக்கிலை நவின்றான்.

இப்படியாகத் தசக்கிரீவனாகிய பிரதாப லங்கேஸ்வரன் சொன்னபொழுது, இவன் ஜேஷ்டபுத்திரனாகிய இந்திரஜித்தென்பவன் தனது தந்தையைப்பார்த்து, ஐயா! சேனைகளுடனே நீர்போயல்லவா மனிதர்களோடு எதிர்த்துச் சண்டையிட்டு அவர்களை ஜெயித்து வருகிறது? அப்படியானால் எங்களுடையவீரம் நல்லதாகும். என்று சிரித்து இவ்வாறு சொல்லுகிறான்; உமாபதியாகிய சிவபெருமானவர் கொடுத்தவரங்களையும் ஆயுதங்களையும், பிரமதேவன் கொடுத்த வரங்களையும் ஆயுதங்களையும், மற்றும் நாகபாச முதலானவைகளையும் வீணே சுமந்துகொண்டு; இங்கேயிருக்கின்ற பலபேர்களும் ஏசுகின்ற இழிசொல்லிற்கு இணையாமல் உழல்கின்றவனாய் நானுமொருவனிருக்கின்றேனல்லவா? ஆ! ஆ! வெகுநேர்த்தி: இந்தத் திரிலோகங்களையும் அவைகளிலுள்ள சராசரங்களாகிய சகலாண்ட கோடிகளையும் சிருஷ்டித்து ரக்ஷித்துச் சங்கரிக்கின்றவர்களாகிய திரிமூர்த்திகளும், ஒன்றாய்க்கூடிவந்து உம்மோடெதிர்த்துச் சண்டைசெய்தாலும் என்னையனுப்பும். உமக்கு நான் ஜெயத்தைச் சம்பாதித்துக் கொடாமற் போவேனேயாகில், நீரென்னைப் பெற்றதுமில்லை, நானுமக்குக் குமாரனாய்ப் பிறந்ததுமில்லை. குரங்குகளிறக்கவும், பூமிமுழுதும் என்னாலே குறைத்துத் தள்ளப்பட்ட தலைகளால் மறைபடவும், போர்க்களமதனது அதமாகவும், இராமலட்சுமணர்களாகிய மானிடர்கள் மிகவும் வருத்தப்பட அதைச்சீதையானவள் கண்டு மெய்பதைத்துத்



துக்கப்படவும், அவ்விருவருடைய சிரசுகளையுங் கொய்துகொண்டு வருகிறேன்பாரும். இனிச் சொல்லினாலே காலத்தைக் கழிக்கவில்லை. மிகவும் சுருக்கத்திலேயே முடித்துவிடுகிறேன்.

ஐயா! குரங்குகளெல்லாம் யான் மலையைப்பிளக்கும்படி விசையாயடித்து விழுகின்ற வல்லிடியைப்போலக் கடுமைதோன்றும்படி என்வில்லிலே பூட்டிப் பிரயோகிக்கப்படுகின்ற உக்கிராகாரமான பாணத்திற்குப்பயந்து, தங்கள்பல்லை இளித்துக்கொண்டு இந்த அண்டத்தைத்தாண்டி யோடுவதைக் கண்டு நீரேமெய்ச்சப்போகின்றீர். யானைப்படை-தேர்ப்படை-புரவிப்படை-ஆட்படையாகிய நால்வகைப் படையுமில்லாதவர்கள். நம்மைப்போல வாழும்பெறாதவர்கள். கையிலே ஒரு பொருளுமில்லாதவர்கள். கூனியமுதுகையுடைய அற்பமாகிய சிறு குரங்குகளைப் படைத்துணையாகக் கூட்டிக்கொண்டு நம்மைவெல்ல நினைக்கின்றவர்கள். இப்படி குறைந்தபலமும் குறைந்ததாளும் குறைந்தசெய்கையுமுடைய மானிடராகிய இவர்கள் நமது சத்துருக்களாயிருக்கின்றார்களாகையால்; நமதாண்மையானது அழகாகவேயிருக்கின்றது. பிருதிவு-அப்பு-தேயு-வாயு-ஆகாயம்-ஆகிய பஞ்சபூதங்களும், அப்பஞ்சபூதகாரியமாகிய உலகங்கள்யாவும் ஒரு நிமிஷத்தில் நிலைகுலையும்படி, மானிடர்களுக்குள்ளே இருவருந் தலறுமுலிறக்கவும்; குரங்குகள் முதலற்றுப்போகவும், நான் நாசஞ்செய்யாமல் மீண்டுவருவதில்லை, என்றுசொல்லிப் பிதாவின் பாதத்தை வணங்கியெழுந்து, எனக்கு விடைகொடுக்க வேண்டுமென்று கேட்டான்.

## விபீஷணர் இந்திரஜித்தைக்கடிந்து இராவணனுக்குத் தகவுரைத்தல்.

கலி.

என்றடியிறைஞ்சின் னெழுந்துவிடையீமோ
வன்றெருழிலிருபெயலவும் வாளெயிறுவாயில்
தின்றனன்முனிந்துனி தீவினையெல்லாம்
வென்றவரினன்றுணரும் வீடணனுரைப்பான்.

அம்மாத்திரத்தி லவனருகிலிருந்த விபீஷணரானவர் அதிககோபங்கொண்டு, வாயிலுள்ள பற்களை நறநறவென்று கடித்து, உயிரை வருத்துகின்ற சகல தீவினைகளையும் வென்ற பெரியோர்களில் ஒருவராய் சற்காரியங்களை ஒழுங்குறக்கற்ற நீதிபராகிய விபீஷணர் அந்த இந்திரஜித்தைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

அப்பா இந்திரஜித்தே! அறிவுமயங்கும்படியான் ஆபாசமிக்க பொய்ப்பொருளை மெய்ப்பொருளென்றெண்ணுதற் குரித்தாகியவனையும், அவ்வக்காலத்தில் நடக்கும் பிரமேயங்களையும், மேல் நடக்கும் விஷயங்களையும், ஆராய்ந்தறிவதற்கு அருகனல்லாதவனுமிருக்கின்ற பாலனுமாகிய நீ சகலசாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்த அதிநுட்பமாகிய அறிவினையுடையவர்களைப்போல் இப்பெருங் காரியத்திற்கு இவ்வண்ணமாகிய வார்த்தையைப் பேசுவதற்கு

அருகனுவாயோ? நீ பேசுகின்றது எப்படி யிருக்கிறதென்றால், விவேகமில்லாதவனும் கண்ணில்லாதவனுமாகிய ஒருவன் தன் கையினாலெழுதப்பட்ட சித்திரம்போலிருக்கின்றது. முதிர்ந்த வயதினையும் பேரறிவையு முடையவர்கள் கூடி மந்திராலோசனை செய்யும் இந்தக் கூட்டத்தின் முன்னே நீ சேர்ந்திருக்கலாமா? பால்யத்தினாலே அந்தக் கிரமத்தை யெண்ணாமலிருக்கின்றாய். நிர்மலசித்தத்தையுடைய பெரியோர்கள் எப்போதும் கிரமமாகவே நடந்துகொள்ளுகின்றார்கள். அவர்களிருக்கட்டும்: பாபாத்மாக்களாகிய அசுரர் முதலானவர்கள் புண்ணியாத்மாக்களாகிய தேவர்களாய்ச் சிரேஷ்டப்படுகின்றது, தர்மத்தினாலேயோ? மாயையினாலேயோ? வஞ்சனையினாலேயோ? அல்லது தங்களுடைய பராக்கிரமத்தினாலேயோ? தர்மத்தைக்கைவிட்டுத் தேவர்களை ஜெயித்த உன்னுடைய பராக்கிரமச் செய்கையை ஆலோசித்தவிடத்தில், அதுவும் பூர்வநெறி தவறாமற்செய்த தவத்தினாலும் வைராக்யத்தைவிட்டு அந்தப் பிரமாதி தேவர்கள் கொடுத்த வரத்தினாலுமே.

இன்னமும் பொல்லாதவர்களநேகர்கள் மும்மூர்த்திகளையும் வென்று மூன்று லோகங்களையும் பூரணமாக அரசாண்டுகொண்டிருந்தும், கெர்வமதிகரிக்கும்படி நடந்து மரணமே முடிவாக இறந்துபோனார்களே யல்லாமல் நியாயமாய்த் தேவர்களை வென்றவர்கள் ஆரிருக்கின்றார்கள்? முனிவர்களுக்குள்ளும் தேவர்களுக்குள்ளும் முன்னும் பின்னும் இருவினைகளையுங் கடந்து மேலாகிய மோக்ஷசாம்பிராஜ்யத்தை அடைந்தவர்களெத்தனைபேர்களென்று அளவிட்டுச்சொல்லுவோம்? மற்றவர்களுக்குள்ளே ஆர்தான் அப்படிச் செய்தார்கள்? சிறுபிள்ளையானபடியினாலே இப்படிச்சொன்னாய். நீ புத்தியில்லாதவன். என்று மகனை அதட்டித் தமையனாகிய ராவணனைப்பார்த்து, சுவாமி! என்வார்த்தையை இகழ்ச்சிசெய்யாமற் கேட்பீரேயானால், தெளிவான நல்ல சொற்களைச் சொல்லுகிறேனென்று சொல்லத்தலைப்பட்டார்.

கவி.

எந்தைநீயாயுநீ யெம்முன்நீதவம்
வந்தனைத்தெய்வநீ மற்றுமுற்றுநீ
இந்திரப்பெரும்பத மிழக்கின்றாயென
நொந்தனனாதலி னுவல்வதாயினன்.

எனக்குத் தந்தையும் நீரே: தாயும் நீரே: தமையனும் நீரே: நான்பூஜிக்கின்ற சாக்ஷாது தெய்வமும்நீரே: தவமும் நீரே: மற்றுஞ்சகலமும் நீரே: ஆகையால் உம்முடைய இந்திரபோக போகபாக்கிய வைபவத்தை இழந்துவிடுகிறீரென்று மிகவும் மனமெலிந்தேன். அதனால் உமக்கு நான்சொல்ல ஏற்பட்டேன்.

அன்றியும் பலநூல்களையுங் கற்றமைந்த தன்மை யென்னிடத்திலில்லாமற்போனாலும், சாத்தியமாகத் தக்கவிஷயத்தை ஆலோசியாவிட்டாலும், உபாயதந்திரங்களை நிச்சயித்துச் சொல்லாதிருந்தாலும், நீரென்சொல்லாமுழுவ



தங் கேட்டபிறகு வேண்டுமானால் என்மேற் கோபித்துக்கொள்ளும். சிலாக்கியமாகிய நம்முடையநகரமும், உம்முடைய பிரதாபமும்; ஜானகியென்கிற லோகமாதாவினுடைய கற்பினால் வெந்ததல்லாமல்; ஒருகுரங்கு சுட்டதென்று நினைக்கிறதென்ன பெருமையா? யோசிக்குமிடத்தில் எவர்களுக்கானாலும் ஆபத்தும்-சம்பத்தும்-பெண்ணினாலும்,பொன்னினாலும், மண்ணினாலு மல்லது; வேறொன்றினால் வரத்தக்கவையல்லவே? கடல்சூழ்ந்த லங்கைக்குத் தலைவன் பூர்வம் அருமையாய்ச்செய்த தபோபலமெல்லாம் ஒரு மானிடன்றீயினால் அழிந்துபோமென்று உலகத்தார்சொல்லும் அபக்கியாதியாகிய வார்த்தை இப்பொழுதென்ன முடியத்தக்கதா? நீர் பிரமாவைநோக்கி நெடுநாளாகத் தவஞ்செய்து அவரிடத்தில் தேவதானவர் முதலானவர்களை ஜெயிக்கும்படி வரம்பெற்றபோது, மனிதரை ஜெயிக்கும்படி வரம் பெறவில்லையே: ஆகையால் அவர்களை எந்தவிதத்தால் இனி ஜெயங்கொள்ளுவீர்?

ஐயா! தேவரீர் வேறொரு உபாயமும் வேண்டாமல் தனியேயெதிர்த்து ஏழுலகங்களையும் வெல்லத் தக்கவராயிருந்தும், மனிதர்களைமாத்திரம் வெல்லமாட்டீரென்பதற்கு ஆயிரம் தோள்களையுடைய கார்த்தவீரியார்ச்சுனனாகிய மனுஷனுக்கு உம்முடையவலி தோற்றுப்போனதுவே திருஷ்டாந்தம். இதைவிட வேறுசாக்ஷியும் வேண்டுமோ? தேவரீர் முற்காலத்திலே வானத்தளவும் உயர்ந்த கைலாசகிரியை யெடுத்தகண்ட சதுர்ப்புஜங்களுடைய நந்திகேஸ்வரர் நீ குரங்குகளாலே உன்பலமழியப்படுவாயென்று சொன்னசாபத்தை, வாலியினிடத்திலே பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கின்றீர்.

கவி.

தீயிடைக்குளித்தவத் தெய்வக்கற்பினாள்
வாயிடைமொழிந்தசொல் மறுக்கவல்லமோ
நோயுனக்கியானென நுவன்றவாளவள்
ஆயவள்சீதையென் றுதித்துத் தோன்றினள்.

பூர்வம் தெய்வீகமாகிய கற்பினையுடைய வேதவல்லியென்கிற ரிஷிபுத்திரியானவள் ஸ்ரீமகாவிஷ்ணு தனக்குக் கணவனாகவேணுமென்று தவம்பண்ணிக்கொண்டிருக்கையில், அவளை நீர் கற்பழிக்க ஏற்பட்டபோது அவள் வாயினாற்கொடுத்த சாபத்தை நாம் தடுக்கத்தக்க வல்லமையுடையவர்களாவோமா? உனக்கு நானே மிருத்யுவாகிய நிரப்பினியென்று சொல்லிவிட்டு அக்கினிப்பிரவேச மானாளே: அவள்தான் அமிர்தத்துடன் பிறந்த மகாலக்ஷ்மி அவளே இந்தச் சீதையாய் வந்து அவதரித்திருக்கின்றாள்.

இந்திராதி தேவர்களுக்குச் சத்துருவாயிருந்த சம்பராசுரனை ஆகாசத்திலிடத்தில் ரதத்தை நடத்திக்கொண்டுபோய் வில்வில்வளையாமற் பிரபலமாகிய யுத்தஞ்செய்து தலையறுத்து, அந்தத்தேவர்கள் பிழைக்கும்படி தேவராஜனுக்கு அரசுகொடுத்து உதவிசெய்து, தர்மாக்காரனாது அரிசினையாயே உலகத்தில் தனக்கு ஒழியஞ்சாய்ய மகத்தாகிய கீர்த்தியை வைத்த

தசரதமகாராஜனென்பவ னொருவனிருந்தான். அந்தத்தசரதனே? தேவேந்திரன் ரிஷபமாய்ச்சுமக்க முதுகின்மேலேறியிருந்து வாளையுருவி அசுரர்களையெல்லாஞ் சங்கரித்த ஒப்பற்ற ஆண்மையையுடைய காகுஸ்தமகாராஜனும், தன்னிடத்திலிட்ட வித்துக்களையெல்லா முளைக்கவொட்டாமல் தனக்குள்ளே யிழுத்துக்கொண்டு மதப்பட்டிருந்த பூமியின்மேற் பாணப்பிரயோகஞ் செய்து அதன்மதத்தை யடக்கி அது பசுவுருக்கொண்டுவந்து தானியமுதலாகிய சகலபதார்த்தங்களையும் கொடுக்க யாவருமுலையின் வழியே கறந்தெடுத்துக்கொள்ளச் செய்த பிருதுமகாராஜனும், சமுத்திரத்தைத் தோண்டிய சகரர்களும், தபசினால் ஆகாசகங்கையைப் பூமியிற் கொண்டுவந்த பகிரதமகாராஜனும் அவதரித்த மநுவம்சத்தில் உற்பவித்தவன்.

இன்னுமவ னெப்பேர்ப்பட்டவனென்றால், பொய்பேசி உலகத்தைப் பகைத்தவர்களுடைய குலத்தைக் கருவறுத்து தர்மத்தை விர்த்திசெய்து, அந்தத் தர்மநெறியில் நின்று, தன்மனைவிக்குக் கொடுத்த வார்த்தை மறுக்கமாட்டாமற் சத்தியத்தை நிலைநிறுத்துவதற்காகப் பிராணனைக்கொடுத்து, தேவர்களும் பெறுவதற்கு அருமையாகிய சாக்ஷாத் மோக்ஷத்தைப்பெற்றவன். அந்தத் தசரதச்சக்கரவர்த்தியின் புத்திரர்களே இப்போது உமக்குப்பகைவர்களாய் வந்திருக்கிறார்கள். அம்மம்மா!! அவர்கள் எப்படிப்பட்டவர்களென்று நீர் கேட்கிறீரோயாகில்; இராமனென்றும், இலக்ஷ்மணனென்றும், பெயர்பெற்ற அந்த இருவரும் தங்களுக்கு ஒருவரும் எதிரில்லாதவர்களாயிருக்கின்றவர்கள். முனீஸ்வரர்களும், தேவர்களும், எல்லாமறிந்த ஞானியர்களும், மற்றுமுள்ள சகல உத்தமர்களும் நினைப்பதற்கு அருமையாகிய தகைமையையுடைய மகாபுருஷர்கள். நாம்செய்த தீவினையால் மனிதர்களாக வடிவெடுத்து, யாவர்க்கும் எளிதாக வந்திருக்கின்றார்கள். தாமரையாசனத்தையுடைய பிரமதேவனுடனேசகல புவனங்களையுஞ் சிருஷ்டிசெய்கிறேனென்று பிரயத்தினப்பட்ட விஸ்வாமித்திர மகாரிஷி கொடுக்கப்பெற்றவைகளாய், இமைப்பொழுதிலே யாவருநாசமாம்படி எல்லைப்பட்ட உலகங்களிலும் விசையாய்ச் செல்லுவனவுமாய் அஸ்திரசஸ்திர முதலாகிய ஆயுதங்களைக் கையிற் பிடித்திருக்கின்றார்கள்.

பூர்வம்புஜபராக்கிரமத்தை யுடைய அசுரர்களுடனே பகைத்துத் தேவர்களிளைத்த சமயத்தில் அவர்களுக்காக எடுத்துவளைத்து யுத்தஞ்செய்து ஜயத்தைச் சம்பாதித்துக் கொடுத்த கருடவாகனருடனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய கைவில்லையும், முப்புரங்களெரிந்து நீறாகும்படி கைலாசநாதன் பிரயோகித்த திவ்வியாஸ்திரத்தையும், முனித்தலைவராகிய அகஸ்தியர் கொடுக்கப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலிருக்கின்ற நாகாஸ்திரங்கள் எப்படிப்பட்டவைகளென்றால்; நாவைநீட்டி உலகங்களையெல்லாம் ஒருமிக்கவளைத்து எடுத்து விழுங்குகின்றவைகளும், திக்குகளையெல்லாம் ஒருக்ஷணத்திலே போய் அளவிடுகின்றவைகளும், எப்போதும் விஷாக்கினியே கக்



கிக்கொண்டிருக்கின்றவைகளும், அதியுஷ்ணமாகப் பெருமூச் செறிகின்றவைகளும், பிரகாசத்தை வீசுகின்ற கூரிய பற்களையுடையவைகளும், அவ்வீராதிவீரர்களுடைய அம்புறைதூணியாகிய புற்றினிடத்திலிருந்து சீறுகின்றவைகளும், பூரணஞானத்தையுடைய பெரியோர்கள் விஷயத்தில் அபசாரப்படுகின்ற பாபாத்மாக்களுடைய உயிரையல்லது வேறொரு இரையை இச்சியாதவைகளுமா யிருக்கின்றவைகள்.

அவர்களுடைய விற்கள் அந்தப் பிரதாபசாலிகளால் மாத்திரம் எடுப்பதற்கும், வளைப்பதற்கும், பாணப்பிரயோகஞ் செய்வதற்குஞ் சுலபமாயிருக்கிறதேயல்லாமல்; மற்றொருவரால் அசைக்கப்படுமோ? அப்படி யவ்விற்கள் அபாரமானவைகளும் நெடியவைகளுமா யிருக்கின்றன. அவைகளிற் பூட்டியநாரியும் அறுபடாதவைகள். ஆதலால் நம்முடைய சொற்படியாகிய விற்களைப்போல் எளிதில் ஒடிக்கப்படுமோ? ஒருக்காலும்படாது. அன்றியும், "அவைகள் மரமோ? மூங்கிலோ? அண்டத்தை ஊடுருவிநிற்கின்ற மகாமேருவோ? சப்தகுலாசலங்களிற் சம்பந்தப்பட்டனவோ? அல்லது இவைகளெல்லாமல்லவோ? என்னமோதெரியாது. அவர்களுடைய பாணங்களால் கடலைக் கடைந்த வாலியினுடைய மார்புருவி அவன் பராக்கிரமமடங்கியது, உலகத்தையெல்லாங் கவிந்துசூழ்ந்த மராமரங்களும் ஒடுங்கின. கரன் முதலானவர்களுடைய தலைகளும் விராதனுடைய தலையுங் கண்டிக்கப்பட்டன. இனியுத்தமுண்டாகுமானால் தேவர்களுடைய விபத்து நீங்குமல்லாமல், அவர்களுக்கு அடங்காத பகையென்பதுவேறொன்றுண்டோ? மகிமையையுடைய முனீஸ்வரர்கள் அவர்களுக்குவேண்டியவரங்களைக்கொடுத்து, இணையில்லாதவர்களாகிய இந்த இருவரும்தேவர்களுடனே புவனங்களையெல்லாம் வெல்லுவார்களென்றும்-இராக்ஷதர்களுடையகுலமானது வேரற்றுப்போம்படிக் கொல்லுவார்களென்றும் நினைத்தநீந்து, அவர்களைவந்து சிநேகித்திருக்கின்றார்கள்.

மேலும், உம்முடைய கிருபையேயல்லாமல் வேறுகதியில்லாதிருக்கின்ற தேவர்களுடையமனது முன்பு ராக்ஷதர்களுடைய பெயரைச்சொன்னாலுநடுங்கும். இரவும்பகலு நித்திரைசெய்யவு மாட்டார்கள். இப்போது ஜானகியாகிய விஷத்தை யுண்ண எத்தினப்பட்டவர்கள் மாண்டுபோய் நரகப்பிராப்தர்களாவார்களென்று எண்ணிக்கொண்டு நமக்குப் பயப்படாதிருக்கிறார்கள். அடைக்கல ஸ்தானத்தை யறியாதிருந்ததனால் நமக்குப்பயந்தொடுங்கிய ரிஷிகளுடைய முகங்கள் பகற்காலச் சந்திரனைப் போல ஒளிமழுங்கி யிருந்தனவாய், இப்போது சரற்காலத்தின் இராத்திரியிலுதயமாகிய சந்திரனைப்போல அதிகபிரகாசத்தைக் கொண்டிருக்கின்றன. கடல்சூழ்ந்த உலகத்தைவிட்டு அப்பாற்போய்த் தங்களுருவத்தை மறைத்துக்கொண்டு எங்குஞ் சஞ்சரியாமல் ஒடுங்கிப்பதுங்கிய யமன்முதலான தேவர்களும் - முனிவர்களும் - மற்றவர்களும் – சிறையானவள் நம்முடைய நகரத்தில் வந்திருக்கிறாளென்று கேட்டபின்பு, சிறிதும் பயமில்லாமல் திரும்பிவந்து தங்களுலகமாகிய சுவர்க்கமு

தலசாலைகளை அடிக்கடிப் பார்த்துச் சந்தோஷித்துப் போகின்றார்கள். சொல்லத்தகாத துர்ச்சகுனங்கள் எங்குங்காணத் தலைப்பட்டன.

அன்றியும் - நம்மை ஜெயிக்கத்தக்க வல்லமையில்லாத நம்முடைய பகைவர்களாகிய தேவர்களும், அசுரர்களும், சண்டையிலே தோற்று விட்டுவிட்டுப்போன குதிரைகளும், யானைகளும், வலதுகாலை முன்னே யெடுத்து வைத்து நம்முடைய கிரகங்களுக்குள் வந்து நுழைகின்றன. இராக்ஷதர்கள் வாயிலும், பல்லிலும், நீரில்லாமல் வாடுகின்றார்கள். பேய்களும், பூதங்களும், நாய்களும், நரிகளும், காடு நகர முழுமையுந் திரிகின்றன. ஸ்திரீகளுடைய கூந்தல்களும், நம்முடைய சிகைகளும், நெருப்பில் வெந்ததைப்போல் சுடுநாற்ற நாறுகின்றன. இனியிவைகளைப் பார்க்கிலும் வேறு துர்நிமித்தங்களு முண்டோ? தேவலோகமானது அதமாகும்படி தேவர்களைப் போரிலே நிர்மூலஞ்செய்த கரன் - தூஷணன் - திரிசிரன் - மான்வடிவெடுத்த மாரீசன் - வாலி - இவர்கள் முதலானவர்களுமே இவர்களால் மாண்டமையால், மானை யிடதுகையிலேந்திய சிவபெருமானும் - சக்கரபாணியாகிய விஷ்ணுவும் - நான்முகக்கடவுளாகிய பிரமாவும் - மற்றுந் தேவேந்திராதி தேவர்களுந்தாம் இந்த இரண்டு மனிதர்களுக்குச் சமானமாவார்களென்று ஆர்தான் எண்ணுவார்கள்?

ஐயா! இன்னமொன்று சொல்லுகிறேன் அதைச் சந்தோஷமாய்க்கேளும். அந்த இரண்டு மனிதர்களையும் வானரக்கூட்டங்களையும் வந்திருக்கிறவர்கள் நம்முடைய பகையாளிகளாகிய தேவர்களென்றும் அறிந்துகொள்ளும். ஆகையால் அவர்களுடனே பகைகொள்ளலாமென்பது செவிகொடுத்துக் கேட்கத் தக்கதல்ல. இது நமக்கு உறுதியென்று நினைப்பதுங் காரியமல்ல. கீர்த்தியும் - பாக்கியமும் - குலசிரேஷ்டமும் - குறைந்துபோகவும், அபகீர்த்தியும் - சிறுமையும் - அசிரேஷ்டமும் பிரபலிக்கவும், நமதுசுற்றத்துடனே நாம் வினைமடிந்திடாமல்; சலியாத கற்பினையுடைய சீதாபிராட்டியை விட்டுவிடும்; இதைப் பார்க்கிலும் வேறேஜெயமென்பது நமக்கில்லை. என்று பிரமக்ஞானிகளுக்குள் சிறந்த விபீஷணரானவர் சொன்னார்.

## இராவணன் விபீஷணரைக் கடிந்து தன்னாற்றல்கூறி யாக்கிரமித்தல்.

கவி.

கேட்டவாண்டகை காதுரோமாதலங் கிடைப்பப்
பூட்டுவாய்தொறும் பிறைக்குலம்வெண்ணிலாப் பொழிய
வாட்டடந்தவ ழாரமும் வயங்கொளி மார்பும்
தோட்டடங்களுங் குலுங்கக் கிலைவிலை சொன்னான்;

இந்த வசனத்தைக்கேட்ட இராவணேஸ்வரன் கையோடு கையறைந்து, வாய்கள்தோறுமுள்ள கோரதந்தங்கள் பிறைக்கூட்டம்போலப் பிரகாசிக்கவும் - கண்களில் நெருப்பெழவும் - இரத்தினங்களும் அவைகள் ஜொலிக்கின்ற மார்புந் தோளுங் குலுங்கவும் நகைத்துச் சொல்லத் தொடங்கினான். ஆ விபீஷணா! இவ்விடத்திற் பேசினவர்களெல்லாரைப் பார்க்கிலும் நல்ல உறுதிக



னைச் சொல்லுகிறேனென்று சொல்லி, கேவலம் பித்தர்கள் பேசுகிற பேச்சுக்களையே நீ பேசினாய். என்னுடைய மகாபலத்தைக் கொச்சையுர்கிய மானிடர்கள் ஜெயங்கொள்ளுவார்களென்று எனக்கு நேரிலே தானே சொன்னது, நீயவர்களுக்குப் பயப்பட்டுச் சொன்னதா? அல்லது அவர்களிடத்தில் அன்பினாலே சொன்னதா? என்ன கருத்துக்கொண்டு சொன்னாய்? மனுஷப் பசுக்களை வெல்லும்படிக்கு நான்வரம்பெற வில்லையென்று, இந்த அற்பவிஷயத்தை எனக்கொரு லக்ஷியமானதாகக் குறித்துக்கொண்டு என்மேற் குற்றஞ் சொல்லவந்தனையே: அஷ்டதிக்குகளையும் - திரிலோகங்களையும் - அஷ்டகஜங்களையும் ஜெயித்து, அந்தத் தழல்வண்ணனாகிய சிவனைக் கைலாசபர்வதத்துடனே எடுத்தேனே: அப்படியெல்லாம் செய்கிறதற்கு முன்பு நான் ஏதாவது வரம்பெற்றதுண்டா? கொஞ்சமாவது மனதிலெண்ணிப் பாராமல் பயனில்லாத சொற்களைச் சொன்னாய். இரணகளத்திலே தேவர்கள் என்மேற்பிரயோகஞ்செய்த தெய்விகமாகிய கொடியவாயுதங்களெல்லாம் எனக்கென்ன உபத்திரவஞ்செய்தன? அவர்கள்தான் என்னசெய்தார்கள்? அந்தமனிதர்கள் என்னை வெல்லுகிறதென்பது அப்படியிருக்கட்டும்.

அப்பா விபீஷணா! குகேசியென்கிற ஒரு தாய் வயிற்றிலே என்னுடனே கூடப் பிறந்த உன்னைத்தான் அவர்கள் ஜெயிக்கமாட்டார்களென்று சொல்லுகிறதற்கு இடமுண்டா? நல்லது: ஒருவன் ஏதாவது சொல்லும்பொழுது, இதுசொல்லத் தக்கது இது சொல்லத்தகாதது: என்று ஆய்ந்தறிந்தல்லவோ சொல்லவேண்டும். நீயோ? அவ்வாறு சொல்லுஞ் சொல்லை அறிந்துசொல்லவேயில்லை. பலதரம் தோற்றும் ஒருதரம் வெற்றிகொள்ளத்தக்க பராக்கிரமமுமுண்டு. ஆனாலும் அண்டத்தைக் கல்லியெறிகின்ற மகாபலத்தையுடைய என்பந்துஜனத்தையும், என்னையும், போர்க்களத்தில் ஜெயிக்கின்ற சத்துருக்களுமுண்டென்று நினைவுகொண்டாய் தம்பி! நான்தேவர்களிடத்திற்பெற்ற வரத்தினால் மிகவுஞ் செருக்குண்டாய்ப் பேசுகிறேன்; அந்தமனிதர்கள் திரிமூர்த்திகளுக்குள்ளே ரிஷபவாகனருடனாகியும் சம்மாரகிருத்தியனுமுள்ள சிவபிரானிடத்திலேயா? புவனங்களையெல்லாம் ரக்ஷிக்கின்ற மகாவிஷ்ணுவினிடத்திலேயா? சகலாண்டங்களையும் சிருஷ்டிக்கின்ற பிர்மாவினிடத்திலேயா? இவர்களல்லாமல் மற்றயாரிடத்திலே தான் வரம்பெற்றார்களென்று சொல்லுகின்றாய். நந்தி கொடுத்த சாபத்தினால் குரங்குகள் நம்மைக் கெலிக்குமென்று சொல்லுவாயானால், இந்திராதி தேவர்களாலும் - சித்தர்கள் யக்ஷர்கள் முதலானவர்களாலும் - நமக்குவந்திருக்கிற சாபங்கள் எண்ணத்தொலையுமா? அவைகளெல்லாஞ் செய்ததென்ன? சுரோத்திரம் - சக்ஷு - ஜிஹ்வை - ஆக்கிராணம் - த்வக்கு என்னும் பஞ்சேந்திரியங்களையும், அவைகளின் விஷயங்களாகிய, சப்தம் - ரூபம் - ரசம் - கந்தம் - ஸ்பரிச மென்னும் ஐம்புலன்களையும், மனம் - புத்தி - அகங்காரம் - சித்தம் என்னும் அந்தக்கரணங்களையும் அடக்கினவர்களாகிய ரிஷீஸ்வரர்களிலும், இ

ரிஷீஸ்வரர்களிலும், நமக்கு மரணம்சித்திக்கும்படிப் பிரார்த்திக்காதவர்கள் யார்? அவர்களுடைய எண்ணங்களெல்லாம் நம்மை அழித்துவிடாதா? கனக சபையிலே பஞ்சகிர்த்திய நடனஞ் செய்கின்ற நடேசப்பெருமானாகிய சிவபிரானிடத்தில் அன்புசெய்து அந்தப்பூஜாபலத்தால் எதிரியின் பலத்திற் பாதி தனக்குவரும்படி வாலி வரம்பெற்றதை அறியாமல் நானிளைத்துநிற்க, என்பலம் அவனிடத்திற்போய்ச் சேர்ந்ததனாலல்லவோ அவனுக்குத் தோற்றேன்? அப்படியிருக்க மற்றக்குரங்குகளெல்லாம் என்னை ஜெயங்கொள்ளுமென்பது நீ யெப்படி குறித்துக்கொண்டாய்? நீலகண்டத்தையுடைய சங்கரனும் சக்கரதரனாகிய மகாவிஷ்ணுவும் அந்தவாலிக்கு எதிரேநின்று போர்செய்தாலும் அவர்களுடைய மகாபலமும் அவனிடத்திற் சேர்கின்றவரத்தை அறிந்து, அவனுக்கு எதிரே போவதற்கஞ்சி இராமனாகிய அந்தமனிதன் மறைந்திருந்து அவனையெய்தான்.

அஃதப்படியிருக்க-மிதிலையில் சொத்தையாகிய வில்லையொடித்து, கூனியினுடையஉபாயத்தினால் அயோத்தியாபுரியையாளும் அரசாட்சியையிழந்து, ஆரணியத்திற்குவந்து, கிட்கிந்தையில் ஓட்டையான மராமரங்களின்மேல் அம்பைச் செலுத்தி, நான்செய்த மாயையினால் தன்பெண்சாதியைப் பறிகொடுத்து மானமில்லாமல் இன்னமும் உயிரைச்சுமந்துகொண்டிருக்கின்ற அந்த மனிதனுடையபலத்தை; நீயல்லாமல் மதித்துச்சொல்லுகிறவர்களாரிருக்கின்றார்கள்? உனக்குப் புத்தியில்லை. நல்லது நீயெழுந்திரு. இனிநீயிங்கிராமல் அப்பாற்செல்லுகவென்று கடிந்துகூறினன். இப்படிகூறிய இராவணனை விபீஷணர் இவன் பார்த்தான்போவென்று ஒழியாமல், அவனுக்குச் சமீபத்திற் போய்ச் சகோதரவாஞ்சல்லியத்தினால் மறுபடியும் இன்னமொரு உறுதிவார்த்தை சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகின்றார்.

வீரீர் அண்ணா! தனக்குமேற்பட்டபொருள் வேறொன்றில்லாமல் ஒப்பற்றிருக்கின்ற பராபரவஸ்துவாகிய ஸ்ரீமந்நாராயணனே நம்முடையநிமித்தம் தேவர்கள்செய்த உபாயத்தினால் அந்தமனிதனாகவந்து அவதரித்திருக்கின்றான். நீரேதோ அறியாமல் இகழ்கின்றீர்; அப்படிச்செய்யவேண்டாம். என்றுத்தமையன் பாதத்தைத் தொழுது இரந்துசொல்லினர். அதுகேட்ட தசக்கிரீவனவரைநோக்கி, ஆ! ஆ! அம்மனிதனை விஷ்ணுவென்று சொல்வாயானால் உன்புத்தியை என்ன வென்கிறது? அற்ப புத்தியென்றல்லவோ சொல்லவேணும். ஆயினும் அந்த விஷ்ணு என்னுடையயுத்தத்திலே எத்தனை போதரம் தோற்றோடினான். மேலும் எவ்விடப்படி இத்தனை காலமாய் நான் நடந்தபோதெல்லாம் முழுமுதலாகிய அவனென்ன செய்துக்கிடந்தானோ? பின்னும் இந்திரனைப் பிடித்துச் சிறைவைத்தகாலத்திலும், அஷ்டதிக்கஜங்களின் தந்தங்களை முறித்தகாலத்திலும், பூர்வம் தான்வந்து போர் செய்யுந்தோறும் தன்னை நான் துரத்தியடித்தகாலத்திலும், தேவர்களுடைய உலகத்தைப் பஞ்சாய்ப்பறக்க அடித்தகாலத்திலும், நீ சொன்ன அந்தத்தேவன் அறியாத சிறுபிள்ளையாயிருந்தானோ?



அன்றியும் - உருத்திரமூர்த்தியும், பிரமாவும், அந்தவிஷ்ணுவும், மற்றுமுள்ள இந்திரன் - அக்கினி - யமன் . வருணன் - வாயு - இவர்கள் முதலாகிய தேவர்களும் அடங்கியொடுங்கிக் குடிகொள்ளும்படி திரிலோகங்களையு நான் ஏகாதிபத்தியமாக அரசாண்டு கொண்டிருப்பது அவனில்லாமையினாலேயோ? அல்லது அவன் பலஹீனப்பட்டு தூங்கிக்கிடந்ததினாலேயோ? ஆ! ஆ! நீ சொல்லுகின்ற ஆச்சரியமான சொல்லுக்கு என்னசொல்லுகிறது? ஏகமூர்த்தியாகிய விஷ்ணு தன்னுடைய ஆயிரந்தோள்களும் ஆயிரம்சிரசுகளும் பொருந்திப் பிரமாண்டத்தையெல்லாம் ஒருஉள்ளங்காலுக்குள் அடக்கிய ஸ்தூலவடிவத்தையே மிகவுஞ் சிறியவடிவென்று நாமினைக்கின்றவர்கள். நமக்கோர் சிறியவுணவாய்ச் சதாகாலமுந் தின்கின்ற சொற்பமாகிய மானிடவுருவ மெடுத்துக்கொண்டோ அவனம்மை ஜெயம்பண்ண வந்திருக்கிறான்? பித்தனாகிய உருத்திரமூர்த்தியும் - மாயனாகிய விஷ்ணுவும் - என் பெயரைக்கேட்டுப் பயந்து நடுங்கித் தளர்ந்து ஓடுகிறபோதெல்லாம், அவர்களேறிய ரிஷபத்தின்முதுகிலும் கருடன்முதுகிலும் என்னுடைய பாணங்கள் போய் மலைகளின்மேல் விழுகின்ற இடிகளைப்போல் விழுந்து தைத்துக்கொண்டு இன்னமுமிருக்கின்றன.

இப்படிக்கெல்லாமிருக்க நீயென்ன பொய்ப்பேச்சுப்பேசுகின்றாய்? அவனுக்கும் எனக்கும் உள்ளபடியே யுத்தநேரிட்டதானால் நீயுபபலமா யெங்களுடனேகூடப் புறப்பட்டுவந்து சண்டைசெய்ய வேண்டியதில்லை. உனதுயிருக்கு லயமில்லாதிருக்கிறதற்கு இந்த அழிவில்லாத லங்கைக்கோட்டையிருக்கிறது. இதற்குள்ளேதானே சுகமாயிரு. பயப்படாதே; என்று சொல்லிப் பக்கத்திலிருந்தவர்களுடைய முகத்தைப்பார்த்து, ஆலகாலமாகிய விஷத்தைப் பார்க்கிலும் அதிககடூரமான கோபத்தையுடையவனாய்க் கைகொட்டி, பிரளயகால இடியிடித்ததுபோல் ஆர்ப்பரித்துக் கலகலவென்று சிரித்தான். பின்னும் அந்த விபீஷணாழ்வானவர் தசக்கிரீவனைநோக்கி, ஐயா! பூர்வகாலத்தில் உம்மைப்போலல்ல; உம்மிலும் அதிகபலமும் பிரதாபமும் படைத்தவர்கள் அநேகர் இந்தமகாபுருஷனை சங்கரிக்கும்படித் தங்கள் பந்துவர்க்கத்துடனே சமூலமாய் மாண்டுபோனார்கள். நானுமக்குச் சொல்லவேண்டுவது இன்னமொன்றுண்டு. அஃதென்னவென்றால் - இரணியனென்கின்ற அசுரராஜனுடைய சரித்திரமொன்றுளது அதையுள்ளபடி சொல்லுகிறேன் சற்றேதயை செய்து கேளுமென்று சொல்லத்தலைப்பட்டார்.

மந்திரப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

மூன்றாவது,

# இரணியன் வதைப் படலம்.

இப்படலத்தில் விபீஷணரானவர் ஸ்ரீமந்நாராயணருடைய பிரபாவத்தை இராவணனுக்கு உணர்த்தவேண்டி இரணியகசிபுவினுடைய சரித்திரங் கூறப்புகுந்தவர் முதலி லவனுடைய தபோபலச்சிறப்பும் பராக்கிரமசில்லைமையு முணர்த்தி, பின்னரவ் விரணியாசுரனென்பவன் தனதுபின்னையாகிய பிரகலாதனைச் சுக்கிராசாரியின் குமாரனாகிய சண்டமார்க்கனிடத்தில் தன்னையே பரத்துவமாகக் கற்பித்திருக்கும் வேதசாஸ்திராப்பியாசம்பயிலவிடுக்க அவனதையோதாது ஸ்ரீமந்நாராயணனே பரத்துவமென்றோதியதும், அதைச் சண்டமார்க்கனாற் கேள்வியுற்ற இரணியனுக்கும் பிரகலாதனுக்கு நடந்த வார்த்தைகளும், அதில்மாறுபட்ட இரணியன் பிரகலாதனைக் கொல்விக்கப் பலவாறுமுயல அம்முயற்சிகளினின்றும் பிரகலாதன் விடுபட்டுப் பகவானைத் துதிசெய்ததும், இதைக் கொலையாளர்களாலறிந்த இரணியன் பிரகலாதனைத் தானேகொல்ல முயலும்போது தூண்தம்பத்திருந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் நரசிங்கவுருவமா யவதரித்து உலகமூன்றினுமுள்ள அவுணவெள்ளங்களையெல்லாமழித்ததும், அதுகண்டு மடங்காது ஆக்கிரமித்துவந்த இரணியாசுரனை அந்நரசிங்கமூர்த்தியானவர் சங்கரித்தபின் பிரமாதிதேவர்கள் தாம்கொண்ட பயமிகவினை மாறும்படி அவரைத்துதிசெய்து அவரது கோபமாறும்படி ஸ்ரீமகாலட்சுமியைப் பிரார்த்தித்து அவருகில் வரச்செய்ததும், பின்னர் நரசிம்மமூர்த்தியானவர் கோபமாறிப் பிரகலாதனைக் கடாக்ஷித்துப் பிரமாதிதேவர்கள் முன்னிலையிற் பட்டாபிஷேகஞ்செய்து அளவற்றவரங்களைத்தந்து ஆட்கொண்டதுஞ் சொல்லியதைச் சொல்லப்படுகின்றது.

## இரணியகசிபுவினுடைய தபோபலச்சிறப்பும் பராக்கிரமசில்லைமையும்.

கவி.

வேதங்கண்ணிய பொருளெலாம் விரிஞ்சனையீந்தான்
போதங்கண்ணிய வாமனன்றரக்கொண்டு போந்தான்
காதுங்கண்ணுத லோனயன் கடைமுறைகாணும்
பூதங்கண்ணிய வலியெலாமொருதனிபொறுத்தான்.

அன்று பிரதாபலங்கேஸ்வரா! பூருவத்தில் இரணியகசிபுவென்பவன் வேதத்திற் சொல்லியிருக்கின்ற தவங்களையெல்லாஞ்செய்து, தன்மனதில் நினைத்து வாயினாற்கேட்ட வரங்கள் ஏதேதோ அவைகளையெல்லாம் பிரமதேவன் கொடுக்கும்படிப் பெற்றுக்கொண்டுவந்து, அப்பிரமன் - விஷ்ணு - உருத்திரன் - ஆகியவிம்மும்மூர்த்திகளு முடிவுகாணப்படாத சகலபூதங்களுக்குள்ள பலத்தையும் ஒருமிக்கப்பெற்று, எக்காலத்திலும் அழியாமல் நித்தியமா யிருக்கின்றவர்களென்று வேதவேதாந்தங்களாற் சொல்லப்பட்ட ஜெகதீஸ்வரா

நெ 44. இராவணனுக்கு விபீஷணர் இரணியகசிபுவின் கதை கூறி அறிவுறு
த்தியும் அவன் கேளாது சினத்தல்



ஸ்ரீராமர் தம்மைச் சரணடைந்த விபீஷணர்க்கு மகுடஞ் சூட்டி இலங்காதிபதயமளித்தல்.



கிய அம்பகாவிஷ்ணுவும் - பிரமாவும் - ஜடாமகுடத்தையுடைய சிவபிரானும் படைத்துக் காத்தழிக்கின்ற இவ்வண்டமொன்றின்மட்டுந்தானோ? இதற்கு அப்புறத்திலுள்ள அளவில்லாத பலவண்டங்களிலுள்ளவர்களும் - தன்பெயரையே சொல்லும்படி வாழ்ந்திருந்தான்.

அண்ணா! அவனுடைய நிலைமைகளிற் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேட்பீராக. எட்டுத்திக்குகளையுந் தாங்குகின்ற ஐராவதமுதலாகிய அஷ்டகஜங்களில் வலதுகையில் ஒருயானையும் இடதுகையில் ஒருயானையுமாக, இரண்டு கையினாலும் இரண்டியானைகளைச் சண்டைக்காய்ப்போல அலக்ஷியமாகவெடுத்து ஒன்றோடொன்று முட்டவிடுவான். அளவுகாண்பதற்கரிதாகிய ஆழத்தையும் அகலத்தையுமுடைய ஏழுசமுத்திரங்களையும் தோணிமுதலானவைகளில்லாமல், கணைக்காலளவு ஆழமாகவெண்ணித் தன்காலாலேயே நடந்து கரையேறுவான்.

கவி.

வண்டற்றெண்டிரை யாற்றுநீர்சிலவென்று பருகான்
தொண்டல்கொண்டசீர் குளிர்ப்பிலவென்றவை குடையான்
பண்டைத்தெண்டிரைப் பரவைநீருவரென்று படியான்
அண்டத்தைப்பொதுத் தப்புறத்தப்பினு லாடும்.

ஆகாசகங்கைமுதலான மகாநதிகளில் ஜலத்தைக் கொஞ்சமென்று நினைத்து, அவைகளின் கிட்டவும்போகான். ஸப்தமேகங்களின் ஜலத்தைக் குளிர்ச்சிபோதாதென்று எட்டியும்பாரான். சமுத்திரஜலத்தை உப்பென்றுகருதி அதில் மூழ்கவேமாட்டான். பின்னையெப்படி ஸ்நானஞ்செய்கிறதென்றால் - அண்டமுகட்டை உடைத்து அதற்கு அப்புறத்திலிருக்கின்ற பெரும்புறக் கடலின்ஜலத்தில் ஸ்நானஞ்செய்வான்.

இவ்விதமாகப் பெரும்புறக்கடலில் ஸ்நானஞ்செய்து, நாகலோகத்திற்குப்போய் நாககன்னிகைகள் உபசரிக்க ஷட்ரச பதார்த்தங்களுடனும் பால்பழம் பஞ்சகச்சாயங்களுடனும் இஷ்டான்னம்புசித்து, கர்ப்பூர தாம்பூலங் கொண்டு, கந்தபுஷ்பாதிகளைத் தரித்து இளைப்பாறி இந்திரலோகத்திற்குப் போய் அமிர்தபானம்பண்ணி, இந்திராணிமுதலாகிய தேவஸ்திரீகள் சத்திரம் பிடிக்கச் சாமரம்வீசக் காளாஞ்சியேந்த - அரம்பை மேனகை முதலாகிய தேவதாசிகள் பாதநாட்டியஞ்செய்ய - தேவேந்திரன் முதலான பலதேவர்களும் ஏவல்கேட்க - அந்த இந்திரனுடைய சுதர்மமென்னு மண்டபத்திற் சுந்தர மணி சிங்காசனத்திலிருந்து வேடிக்கையாகப் பகற்பொழுதுபோக்கி, சத்திய லோகத்திற்குப்போய்ப் பிரமாவுடனே சனக - சனந்தன - சனாதன - சனற்குமாரர்களும் மற்றுமுள்ள சகல ரிஷிகளும் பூசைசெய்து அந்தப் பிரமாவின் திருவோலக்கத்திலிருந்து சகல சம்பிரமத்தோடே இராப்பொழுது போக்குவான்.

ஒருசமயத்தில் விமானத்தின்மேலேறிச் சந்திரமண்டலத்திற்குப்போய் அந்தச் சந்திரனைப்போலவே சஞ்சரிப்பான். ஒருவேளையில் தேரின்மேலேறி அதைச் சூரிய மண்டலத்திற்கு நடத்திக்கொண்டுபோய் அந்தச் சூரியனைப்போலவே உலாவுவான். எட்டுத் திசைகளிலும் போய்த் திக்குப்பாலர்கள்செய்யுங்காரியத்தையுந் தான்செய்வான். மகமேருவின் சிகரத்திற் பிரசண்ட மாருதம்மோதியடித்தாலும், யுகாந்தகால இடியிடித்து விழுந்தாலும், மகாப்பிரளயம்வந்தாலும் எவ்வளவாயினும் சலனமில்லாமல், சொர்ணச்சாயையாயும் சித்திர விசித்திரமாயு மிருக்கின்ற பெரிய கோட்டைக்குள் நவரத்தின கசிதமாயும் திவ்விய தேஜோமயமாயும் பிரகாசிக்கின்ற அழகிய மண்டபத்தில் மாணிக்கசிங்காசனத்தில் சக்ரேஸ்வரனாய் வீற்றிருந்து, அகண்டாதிபத்தியமாக ராஜரீகஞ்செய்வான். பிருதிவு - அப்பு - தேயு - வாயு - ஆகாயம் - ஆகிய இவைகளுக்கு அதிதேவதைகளா யிருக்கின்றவர்களைத் தள்ளித் தான் அவர்களுக்குப் பிரதியாயிருந்து அவர்கள்செய்கிற கிர்த்தியங்களெல்லாஞ் செய்வான்.

கமலக்கண்ணனாகிய ஸ்ரீமகா விஷ்ணுவும் அக்கினிக்கண்ணனாகிய சிவபிரானுமென்கின்ற இவ்விரண்டு பெயருந்தவிரத் தன்பெயரையே சகல லோகத்தாரும் சொல்லி ஸ்தோத்திரஞ் செய்யவும், பிராமணர் முதலானவர்கள் செய்யும் காருகபத்தியம்-யாகவனீயம் - தக்ஷிணாக்னியம். என்னும் திரியாக்கினிகளிலும் வேதோக்தமாகச் செய்கின்ற யாகங்களிலும், தேவர்களைநோக்கி யவர்களுக்குக் கொடுக்கின்ற அவிர்ப்பாகங்களை யெல்லாம் தனக்குக் கொடுக்கும்படி செய்து, அந்தத்தேவர்களனைவருந் தானாயிருந்து வாங்கியுண்பான். ஆக்குதல்-காக்குதல்-அழிக்குதல்-என்கின்ற இம்முத்தொழில்களையும் மும்மூர்த்திகளுங் கைவிட்டொதுங்கி நிற்கும்படி, தானேயவைகளைச்செய்யத் தலைப்படுவான். யோகீஸ்வரர்களெல்லாம் அவனாலே தங்கள் தபங்களை இழந்தார்கள். தேவர்களும் தங்களுக்கு அவனேமுக்கியமானதெய்வமென் றெண்ணி அவன் பாதத்தைஅர்ச்சிக்கிறதேயல்லாமல், மற்றைத்தெய்வங்களைப் பூஜிக்கிறதில்லை.

முற்காலத்திலே அமரர்கள் அசுரர்களெல்லாருங்கூடி வெகுபிரயாசமாகத் தூக்கி நட்டுத் திருப்பாற்கடலைக் கடைந்த மத்தாகிய நெடிய மந்தரகிரியை, அவன் தன் கையில் ஊன்று தடியாகச் சிலநாள் பிடித்துக்கொண்டிருந்து பின்பு அது தன்கைக்குப் பளுவுபோதாதென்று எறிந்துவிட்டான். சூரியன் உதித்து ஒடுங்குகின்ற ஸ்தானங்களாகிய உதயகிரி - அஸ்தமனகிரி - என்கின்ற இரண்டுமலைகளும் அந்த இரணியனுடைய இருகாதுகளுக்கும் குண்டலங்களா யிருக்கின்றவைகளென்றால், மற்றும் அவன் பராக்கிரமத்தைச் சொல்லவேண்டியதென்ன?

கவி.

மருக்கொடாமரை நான்முகன்மருத்துவன் முதலோர்
குருக்களோடுதற் றேவதவன்பெருங் கொற்றம்



செருக்கரால்மறை தொன்றுதொட்டுரைதொறுந் தோன்று
திருக்குந்தெய்வமு மிரணியனேநம வென்னும்.

வாசனைபொருந்திய தாமரை மலரினிடத்தில் வாசஞ்செய்கின்ற சதுர்முகங்களையுடைய பிரமனும், பஞ்சதாருக்களினது நிழலின்கீழ் சுதர்மனியென்னும் பெயருடைய இரத்தின சிங்காதனத்தில் அரசாட்சி புரிகின்ற தேவேந்திரன்முதலிய தேவகுருவாகிய பிரகஸ்பதியும், சதாகாலமுங் கற்பதுங் கேட்பதும் அவனுடைய கீர்த்திப்பிரதாபமே; நான்குவேதங்களும் தொன்றுதொட்டு ஓமிட்டுங் காணக்கூடாத பரதேவதையும், இரணிய நமாவென்றே சொல்லுகின்றன. ஜெபம் - தபம்-இவை முதலானவைகளையும் சகலரு மவனை நோக்கியே செய்வார்கள்.

அவன் அடிவைத்தால் பூமிதாழ்ந்துபோம். சகஸ்திரபணு மகுடங்களையுடைய அனந்தனும் முடிசோர்ந்துபோவான். அவன் எழுந்திருந்தால் அண்டமுகடு சிரசிலேமுட்டி அப்பால் உயர்ந்துபோம். அவன் நடந்தால் பஞ்சமகா பூதங்களும் நடுங்கிச் சலிக்கும். அவன்பெற்ற வரத்தினாலும் - அஷ்டசித்திகளாலும் - ஆணிலும், பெண்ணிலும், அலியிலும், உயிருள்ளவைகளாகிய சித்தப்பொருள்களிலும், உயிரில்லவைகளாகிய ஜடப்பொருள்களிலும், கண்ணினாற்காணப்படுகின்ற காட்சிப்பொருள்களிலும், மனதினால் நினைக்கப்படுகின்ற கருத்துப்பொருள்களிலும், சகல சராசரங்களிலும், சர்வாந்தரியாமியாய்ப் புகுந்து சஞ்சரிப்பான். மண்ணிலும் மடியான். வானிலும் அழியான்.

### இரணியாசுரன் தவஞ்செய்துபெற்ற அழியாவரத்தின் சிறப்பு.

கவி.

நீரிற்சாகில னெருப்பினுஞ்சாகில னிமிர்ந்த
மாருதத்தினு மண்ணின்மற்றவைற்றினு மாளான்
ஒருத்தேவரு முனிவரு மிறர்களு முரைப்பச்
சாருஞ்சாபமு மன்னவன்றனைச்சென்று சாரா.

உள்ளிற்சாகிலன் புறத்தினுஞ்சாகிலனுலவாக்
கொள்ளைத்தெய்வவான் படைக்கலம்யாவையுங் கொல்லா
நள்ளிற்சாகிலன் பகலிடைச்சாகில னமனார்
கொள்ளச்சாகில னினியவனுயிர் கொள்வார்.

நீரிலுஞ் சாகான். நெருப்பிலும் வேகான். காற்றிலும் இறவான். தேவர்களனைவரும், அசுரர்களெவர்களும், பிரமா விஷ்ணு ருத்திராதியர்களும், அவனைக்கொல்ல யத்தனப்பட்டாலும் உயிர்மாளான். மக்கள் மனிதர்கள் மிருகங்கள் பறவைகள் முதலான பலபலஜீவராசிகளாலும் அவனுக்கு மரணமேயில்லை. அண்டர்கள் முனிவர்கள் முதலிய மற்றயாவருமிடுகின்ற சாபங்களும் அவனைச் சேர்கிறதேயில்லை. அவனுக்கு அகத்திலுஞ் சாவில்லை. புறத்திலுஞ் சாவில்லை. இரவிலுஞ் சாவில்லை. பகலிலுஞ் சாவில்லை. தெய்வீகமாகிய சக்கராயுதம், சத்திவேல், யமதண்டம், யமபாசம், பிரமதண்டம், பிரமபாசம், பி

ராமாஸ்திரம், நாராயணாஸ்திரம், பாசுபதாஸ்திரம், இந்திராஸ்திரம், அக்கினியாஸ்திரம், வருணாஸ்திரம், நாகாஸ்திரம், மாயாஸ்திரம், இவை முதலாகிய அநேகவகை ஆயுதங்களும் அவனைக்கொல்லமாட்டா. யமன்வந்து பிடித்துக்கொண்டுபோனாலும் சாகமாட்டானென்றால், பின்னையார்தான் அவன் பிராணனை மாய்க்கின்றவர்கள்? பஞ்சமகா பூதங்களும் ஒன்றாகக்கூடி ஒருருக்கொண்டுவந்தாலும் மாளான். வேதத்திற்சொல்லப்பட்ட மந்திரங்களினாலும், ஔஷதங்களினாலும், இறக்கமாட்டான். பெற்றபிதாவே அவனைக்கொல்ல ஏற்பட்டாலும் பிராணவயப்படான். இவையாவும் அவனுடைய பராக்கிரம நிலைமை.

### பிரகலாதன் சிறப்பு.

கவி.

ஆயவன்றனக் கருமகனறிஞரி னறிஞன்
தூயரென்பவர் யாரினுமறையினுந் தூயன்
நாயகன்றனி ஞானநல்லறத்துக்கு நாதன்
தாயின்மன்னுயிர்க் கன்பினனுளனொரு தக்கோன்.

இப்படி எல்லா உலகங்களுக்கும் தானொருவனே தலைவனாகி யாவரும் தனக்கெதிரில்லாமல் மகத்தாகிய நிரகுசப்பிரதாபத்துடனே வாழுங்காலத்தில், அவ்விரணியனென்பவனுக்கு அறிவுடையவர்களுக் கெல்லா மேலாகிய அறிவினையுடையவனாகியும், நல்லவர்களெல்லாரிலும் மிகவுநல்லவனாகியும், வேதத்தைக் காட்டிலும் மகாபரிசுத்த முள்ளவனாகியும், தாயைப்பார்க்கிலும் அதிக தயையுள்ளவனாகியும், அளவிறந்த தவத்தினையுடையவனாகியுமுள்ள மகாநுபாவனொருவன் அருமைத் திருமகனாக உற்பவித்து, பிரகலாதனென்கிற பெயரினையுடையவனாய்வளர்ந்து, ஐந்துவயதுள்ள சிறுபிள்ளையாயிருக்கிறான்.

### இரணியாசுரன் தன்மகனாகிய பிரகலாதனுக்கு சண்டமார்க்கனால் வேதாத்தியயனஞ் செய்வித்தல்.

கவி.

என்றொரந்தண னெல்லையிலறிஞனை யேவி
நன்றுநீயிவற் குதவுதிமறையென நவின்றான்
சென்றுமற்றவன் றன்னொடுமொருசிறை சேர்ந்தான்
அன்றுநான்மறை முதலியவோதுவா னமைந்தான்.

ஓதப்புக்கவ னுந்தைபேருனையென லோடும்
போதத்தன்செவி தொளையிருகையினாற் பொத்தி
மூதக்கோயிது நற்றவமன்றென மொழியா
வேதத்துச்சியின் மெய்ப்பொருட்பெயரினை விரித்தான்.

ஓநமோநாராய ணாயவென்றுரைத்துள முருகித்
தாமரைத்திரு சடக்கையுந்தலையின்மேற் றாங்கிப்
பூமகட்கண்கள் புனலுகமயிர்ப்புறம் பொடிப்ப
ஞானநாயக னிருந்தனனந்தன னடுங்க.

அக்காலத்தில் அநேகாயுகங்களைக்கடந்தும் அபிவிர்த்தித்துக்கொண்டிருக்கின்ற ஆயுஷியத்தையுடையவனாகியும், சதுர்த்தசபுவனத்தாரும் தன் பாதத்தை வணங்கும்படி ஏகசக்ரேஸ்வரனாயிருக்கின்ற இரணியாசுரன் மனமகி



ழ்ச்சிகொண்டிருக்கி மகனைப்பார்த்து, அப்பா என் புத்திரசிரோமணியாகிய பிரகலாதா! நீ சகலசாஸ்திரங்களுங் கற்றுக்கொள்ளுக வென்று அபரிமிதமாகிய கல்வியும் விவேகமுமுடைய அசுரகுருவான சுக்கிராசாரியார் புத்திரனான சண்டமார்க்கனென்பவனை அழைப்பித்து, நீர் என்கண்மணியாகிய பிரகலாதனுக்கு வேதசாஸ்திராப்பியாசம் பண்ணுவியுமென்று திட்டப்படுத்தியனுப்பினான். அவ்வண்ணமே அந்தஉபாத்தியாயன் பிரகலாதனைக் கூட்டிக்கொண்டுபோய்க் கல்விக்கழகத்தினிடத்திற்சேர்ந்து, வேதத்தை யோதுவிக்கத்தொடங்கி, அசுரேந்திரனுடைய தவக்குமாரனைப்பார்த்து, பிள்ளாய்! (ஓம் இரணியாய நம:) என்று உன்பிதாவினுடைய நாமத்தை முன்னே ஸ்மரணைசெய்யென்று சொன்னான். அதுகேட்ட அந்தப்பாலன் தன்னிரண்டுசெவிகளையுங் கைகளால் மூடிக்கொண்டு, ஓ பேரறிவையுடைய உபாத்தியாயரே! நீர் இப்படிச்சொல்லுகிறது நன்மையல்ல. நான் சொல்வதைக்கேளும். என்று சொல்லி வேதத்தின்முடிவிலே சொல்லப்பட்டு தத்துவார்த்தமாய் விளங்கிநிற்கும் பிரமசாக்ஷாத்காரத்தின் திருநாமத்தைக்கருதி, (ஓம் நாராயணாயநம:) என்று நாவினாற்சொல்லி மனமுருகி ஸ்தப்பாகிருதியாயமைவுற்றுநின்று, தன்னுடைய இரண்டுகைகளையும் தலையின்மேல் அஞ்சலிபண்ணிக்கொண்டு நமஸ்கரித்து, தாமரைமலருக்கிணையாகிய கண்கள் ஆனந்தபாஷ்பம்பொழிய, தேகம்புளகிக்க, மயிர்க்கூச்செறிய, இந்தப்பிரகாரம் அந்தஞானசிரேஷ்டனாகிய பிரகலாதாழ்வான் பக்திபரவசனாய்ப் பகவத்தியானத்திலிருந்தான்.

அப்போது அந்தப்பிராமணனாகிய சண்டமார்க்கனுடைய சரீரம் நடுநடுங்கி, என்னடா துரோகி! என்னடாபாவி! என்னடா சண்டாளா! ஐயையோ!! என்னையுங்கெடுத்தாய். என்னைக்கெடுத்ததல்லாமல் உன்னையுங்கெடுத்துக்கொண்டாய். நீ கெட்டதுமல்லாமல் சகலத்தையுங் கெடுத்துவிட்டாயே: அடகெடுவாய்! அடகுலநாசகா! அந்தப்பிரமாதிதேவர்களுஞ் சொல்லுகிறதற்கு அடாததாய் அயோக்கியமானதாயிருக்கின்ற வீதா ஒன்றைச்சொல்லும்படி உனக்குப்புத்திபிறந்தது. நாவெழுந்ததே: இது என்னகாரணம்? ஆ! ஆ!! என்ன அக்கிரமத்தைச்செய்ய நினைத்தாயென்றான்: இப்படி உபாத்தியாயன்சொன்னதற்குப் பிரகலாதன் சொல்லுகிறான், ஐயா வித்தியாகுருவே! நான்செய்ததென்னவென்றால். முதல் என்னையுய்யும்படிச்செய்துகொண்டேன். பின்பு என்தந்தையை உய்யும்படிச்செய்தேன். அப்பால் உம்மையுய்யும்படிச்செய்து இந்த உலகத்தையும் உய்யும்படிச்செய்ய உத்தேசித்து, வேதாத்தியயனம் செய்கின்றவர்கள் ஆதியிலும் அந்தத்திலும் அந்தவேதத்தின் முதற்பொருளாகிய ஸ்ரீ அரியையல்லவோ ஸ்துதிசெய்கிறது? அஃதல்லவோ சம்பிரதாயம்? நானும் அந்தப்படியே சொன்னேன். நான் சொன்னதில் என்னகுற்றம்? என்றுசொல்லவும் அதுகேட்ட உபாத்தியாயனாகிய சண்டமார்க்கன் சொல்லுகிறான்.

அடா குழந்தாய்! தேவர்களுக்கெல்லாம் தலைவனாயிருக்கிறவன் இந்திரன். அந்த இந்திராதிதேவர்களுக்குந் தலைவர்களாயிருக்கின்றவர்கள் திரிமூர்த்

திகள். அந்தத்திரிமூர்த்திகளுக்குந் தலைவனாயிருக்கிறவன் உன்னைப்பெற்ற தந்தையாகிய இரணியேஸ்வரன். அப்படிப்பட்டவனுடைய பெயரைச் சொல்லுகிறதற்கு அருகனாயிருக்கிற பிராமணோத்தமனான என்னைப்பார்க்கிலும் நீயென்ன விசேஷமாகத்தெரிந்தவனோ? இந்தக்காரணகரமாகிய பெயரைச்சொல்லி என்குடியைக்கெடுக்காதே: அப்பா! உனக்குப் புண்ணியமாய்ப்போகிறது. என்று சண்டமார்க்கன் சொன்னபோது நிர்மலசித்தத்தையுடைய பிரகலாதனவனைப்பார்த்து, ஐயா! நான் அந்த ஆதிநாயகனுடைய திருநாமத்தையல்லாமல் வேறொன்றையுமறியேன். என்னறிவுக்குச் சொல்லவேண்டியது பிறிதொன்றுமில்லை. அவனுடைய கடாக்ஷத்தினாலே எனக்குப் போதிக்கப்படாதபரமார்த்தமும் வேறில்லை. என்றுசொல்லி அச்சண்டமார்க்கனைப்பார்த்துப் பின்னுஞ்சொல்லுகிறான். ஐயா உபாத்தியாயரே! புராதனமாகிய வேதங்களால் கிரமமாக நிச்சயித்துச்சொல்லப்பட்ட பொருளுக்கெல்லா முடிவாகிய பரம்பொருளாயிருக்கின்ற ஸ்ரீமந்நாராயணன் எனக்குள்ளேவந்துபுகுந்து, என்னுடைய இதயகமலத்தைத் தனக்கு உறைவிடமாகக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றான். ஆகையால் அவனைவிடப் பெறுதற்குரிய பயன் எனக்கு வேறொன்றுமில்லை. ஆனாலும் நானறியாதது ஏதாவதிருந்தால், அதை நீதிதவறாமல் ஓதுவியும். ஐயா! பிர்மக்கியானசிரேஷ்டர்களெல்லாம் ஆரைச்சொல்லுகின்றார்கள்? வேதங்களும் விஞ்ஞானமும் எந்தவஸ்துவைச் சொல்லுகின்றன? உபநிடதங்கள் எதைச்சொல்லுகின்றன? அமரர்களுமுனிவர்களுஞ் சொல்லுகின்ற அந்தச்சர்வேஸ்வரனுடைய திருநாமத்தைச் சொல்லவேணுமேயல்லாமல் வேறேசொல்லத் தக்கதும் ஒன்றுண்டோ?

மகாத்மாக்களானவர்கள் இருக்காதி வேதங்களினாலும், அக்கினிஷ்டோமாதியாகங்களினாலும், தத்துவக்கியானத்தினாலும், மற்றுமுள்ள எவ்வகைப்பட்டசாதனப்பொருள்களாலும்சாதித்துப்பெறுவதற்குரிய பொருளையே நான்முக்கியமாய்ப்பெற்றிருக்கின்றேனாகையால்; இனியொருவர் ஓதுவிக்கும்படி ஓதி, கேட்பிக்கும்படி கேட்கத்தக்கபொருள் இன்னுமொன்றுண்டாயிருக்கின்றதோ? அஃதில்லவே இல்லை: உன்னதமாய் ஆகாயபரியந்தம் வளர்ந்த ஆரணியவாசஞ்செய்தும், மரங்களடர்ந்த மலைக்குகைகளிற் சேர்ந்திருந்தும், கிருஷ்ணாசனந் தரித்தும், சிரமுண்டிதஞ்செய்தும், ஜடைவளர்த்தும், அக்கினி மத்தியிலிருந்தும், தவம்பண்ணியும், சாந்திராயண விரதத்தை யனுஷ்டித்தும்,ஜலம்பருகியும், சருகுகந்தமூல பலாதிகளைப் பக்ஷித்தும், காற்றைப் பிடித்தடக்கியும், அஷ்டாங்கயோகஞ் செய்தும், ஞானநிஷ்டை சாதித்தும், இந்தக்கிரமத்தினால் மோக்ஷத்தையடைந்த முக்தாத்மாக்கள்பெற்ற பாக்கியத்தினு மிகவும் உத்கிருஷ்டமாகச் சொல்லப்பட்ட பகவத்கடாக்ஷமாகிய பரமபாக்கியத்தை நான்பெற்றேன். இதைப்பார்க்கிலு மென்மேலும் வருந்தப்பட்டுச் சம்பாதிக்கவேண்டியது எதுவிருக்கின்றது?

ஸ்ரீதெய்வநாயகனுடைய அடியார்க்கடியாராயிருக்கின்றவர்கள் செவிகளினாற் பலகேள்விகளைக்கேளாதவர்களானாலும், வாயினாற்பலநூல்களைப்படி



யாதவர்களானாலும், தேவர்களுக்கு அவிகொடுக்கின்ற மந்திரங்களைச் சொல்லுகின்ற சதுர்வேதங்களின் பூர்வார்த்த உத்தரார்த்தங்களை அறியார்கள். வித்துவஜனர்களாயினோர் உண்மைப்பொருளைக் காண்பார்கள். அவர்களுடைய பிரபாவத்தை யாரறிவார்கள்? எனக்கும், சதுர்முகப்பிரமாவுக்கும், சகலமானவர்களினுமுயர்ந்த தனக்கும், மற்றச் சராசரங்களுக்கும் தலைவனாயிருக்கின்றபெருமான் என்மனதிலெழுந்தருளி யிருக்கின்றமையால்; எனக்குச் சகலமும் எளிதிற்கிடைத்திருக்கின்றன. ஐயா உபாத்தியாயரே! உமக்கும் இதைவிட யுக்தமானது மற்றொன்றில்லை. இப்படியே நீருஞ்சொல்லி, இந்த அநுஷ்டானத்தையே கைக்கொண்டு, உம்முடைய ஆத்துமா உஜ்ஜீவிக்கின்றவிதத்தை நாடிக்கொள்ளுமென்று சொன்னான்.

அண்ணா சுக்கிரீவரே! இவ்வாறெல்லாம் பிரகலாதன் சொல்லக்கேட்டு அந்தச்சண்டமார்க்கனென்கிற உபாத்தியாயன் அவைகளுக்குப் பிரதியாகயாதொருசொல்லுஞ் சொல்லாமல் மனமறுகி, இனியெனக்கென்ன பெருமையிருக்கின்றது? என்பிராணனுக்கே முடிவுவந்தது. இரணியனிடத்திற் போய் அவனைக்கண்டு நல்லவிசேஷத்தைச்சொல்லித் தப்பிவருகிறதே மகாபிரயாசம், அப்படியிருக்க — இந்தக்கொள்ளையை எப்படி மனந்துணிந்து நாவானதுகூசாமற் சொல்லுகிறது? சொன்னால் அவனென்னசொல்லுவானோ? நான் வேதங்கற்பிக்கச்சொன்னால் ஏதேதோ துர்ப்போதனைகளைப்பண்ணி நீயென்பிள்ளையின் புத்தியைக் கெடுத்துவிட்டாயென்பானோ? கோபத்தினால் கொலைசெய்வானோ? இதுவரையிலுஞ் சுகமாக ஜீவித்தேன். இப்பொழுதெனக்குக் கிரகசாரந்தான்போதாதோ? ஐயையோ!! இதேது தர்மசங்கடமாயிருக்கின்றது. என்று எண்ணுதலுமெண்ணி முகம்வாடிக்கிலேசித்துப் பயந்து, நடுநடுங்கிக்கொண்டேபோய் இரணியனைக்கண்டு, அதிகபயபக்தி விசுவாசத்துடனே சாஷ்டாங்கமாகவிழுந்து வணங்கியெழுந்து, கைகட்டி வாய்புதைத்து, வஸ்திரத்தை பொதுக்கிக்கொண்டுநின்று இவ்வாறுசொல்லுகிறான்.

## பிரகலாதன் கருத்தைச் சண்டமார்க்கன் இரணியனுக் குணர்த்தல்.

கவி.

மாற்றம்யாதொன்று முரைத்திலன்மறையவன் மறுகி
யேற்றமென்னெனக் கிறுதிவந்தெய்திய தென்று
ஊற்றமில்லவ னோடினன்கனகனை யுற்றான்
றோற்றவந்ததோர் கனவுகண்டானெனச் சொன்னான்.

எந்தைகேளெனக் கிம்மைக்குமறுமைக்கு மியம்பச்
சிந்தையாலிறை நினைத்தற்குமடாதன செப்பி
முந்தையோனினைந் தென்பொருள்முற்றுமென் றுரைத்தான்
மைந்தனோதிலன் வேதமென் றுரைத்தனன் வணங்கி.

சுவாமி! அடியேனொரு கனவுகண்டேன். அதைத் தேவரீரிடத்திற் சொல்லும்படி வந்தேனென்று சொன்னான். அதுகேட்ட இரணியன் அந்தச் சண்

டமார்க்கனை நோக்கி, ஐயா! நீர்கண்ட கனவின் விபரம் யாது கூறுமென்று கேட்டனன்; அதற்கு குருபுத்திரனாகிய உபாத்தியாயர் நடுங்கி, ஓ எங்களுக்கெல்லாந் தந்தையாயுங் குலதெய்வமாயு மிருக்கின்ற இரணியேஸ்வரனே! உம்முடைய வரகுமாரன் என்பாவியர் இம்மையிலு மறுமையிலும் வாயினாற் சொல்லத்தக்கதாயு மனதினால் நினைக்கக்கூடாததாயு மிருக்கின்ற புலவிதச்செறற்களை, ஒருவர் சொல்லிக்கொடுக்காமல் தானே சொல்லிக்கொண்டிருக்கின்றான். வேதமோதென்று சொன்னால் ஓதாமல், நான் முன்னமே தானே சகலார்த்தங்களையும் அறிந்திருக்கிறேனென்று சொல்லுகிறான். ஐயா! இதற்கு நான் செய்யத்தக்கதியாது? என்றுகூறிய உபாத்தியாயன் சொல்லைக்கேட்ட இரணியன் அவனைத்தேற்றி, ஐயா சண்டமார்க்கரே! பிராமணர்களுக்கு யோக்கியமல்லாதவைகளாயும், முன்பு யாவருஞ்சொல்லிய கிரமத்திலே சம்பந்தப்படாதவைகளாயும், நீர் வெறுக்கும்படியாயும், அவன் தன்னறிவினாலே புதுமையாக வெடித்துச் சொன்னவைகள் யாவென்ன சொல்லுமென்றான். அதற்குப் பிராமணன் பயந்து, சிரசின்மேற் கைகூப்பி நமஸ்கரித்துச் சொல்லுகின்றான்.

சுவாமி! காதுக்குள்ளே விஷசர்ப்பம் நுழைகிறதுபோல மகாகுரூரமாயிருக்கின்ற சொல்லை அடியேன் தேவரீரிடத்திற் சொல்வேனேயாகில், இரௌரவ நரகத்திலே போய் விழுவேன் என்னுடலும் இப்பொழுதே வெந்து இற்று விழுந்துபோம். என்று சொல்லவும் அதுகேட்ட கொடியவனாகிய இரணியாசுரன் ஆச்சரியித்தனனாகி, சீக்கிரமாக என்குமாரனை அழைத்துவாருங்களென்று ஆக்கிராபித்தான். அந்த க்ஷணமே தூதர்களோடிப்போய் அழைத்துவந்தார்கள். தனக்கு ஒருதுணையும் வேண்டாமலிருக்கின்ற ஏகமூர்த்தியைத் துணையாகவுடைய பிரகலாதன் வந்து தகப்பனைக்கண்டு சேவித்தான். அப்படிச்சேவித்த புத்திரனை மணிபாரம் பிரகாசிக்கின்ற தன் மார்பினிடத்திலணிந்த பொற்சுண்ண முதலானவைகள் அவன்மார்பிற் படியும்படி அன்பினால் இறுகத்தழுவி, பக்கத்தில்வைத்துக்கொண்டு, அவனுடைய திருமேனி முழுமையும் பார்த்து, அப்பா பிரகலாதா! உன்னுபாத்தியாயர் கோபிக்கும்படி நீ பழுதாக என்னவார்த்தை சொன்னாய்? அதைச் சொல்லுகவென்று இரணியன் கேட்கவும் அதற்குப் பிரகலாதன் சொல்லுகிறான்.

### இரணியன் பிரகலாதனை யென்னசொன்னாயென்று கேட்க அவன் தான்சொன்னதைச் சொல்லுதல்.

கவி.

சுந்தியாதியிற் றொடங்குறுமெல்லையிற் சொன்ன
ஒருவன்யாவர்க்கு நாயகன்றிருப்பெய ருணராக்
கருதக்கேட்டிடக் கட்டுரைத்திடர்க்கடல் கடக்க
உரியமற்றிதி னல்லதொன்றில்லென வுரைத்தான்.

ஐயா! வேதமோதும்போது பிரதமத்திலே சொல்லப்பட்டதை நான் உச்சரித்தேன். அறிந்தாலும், நினைந்தாலும், கேட்டாலும், சொன்னாலும் துன்



பக்கடலைக் கடப்பதற்கு உரியது அதுவேயாம். அதைவிட நல்லது வேறொன்றில்லையென்று பிரகலாதன் சொன்னான். தேவர்களுக்குத்தக்க வொழுக்கத்தையுடைய அந்தப் பிரகலாதன் அப்படிச்சொல்லவே, பொல்லாதவனாகிய இரணியன் குற்றமில்லாத உபாத்தியாயன் சொல்லத் தக்கதையே சொல்லியிருப்பான். ஆனாலாகட்டும்; இவனுடைய அபிப்பிராயத்தை யறிவோம், என்று நினைத்துக்கொண்டு நீ சொன்ன அந்தச்சொல் யாது? அதனைச் சீக்கிரமாகச் சொல்லென்று கேட்டான். அதற்குப் பிரகலாதன் சொல்லுகிறான்.

கவி.

காமம்யாவையுந் தருவதுமப்பதங் கடந்தால்
சேமவீடுறச் செய்வதுஞ்செந்தழன் முகந்த
ஓமவேள்வியி னிறுபதமுய்ப்பது மொருவன்
நாமமன்னது கேணமோநாராயணாய.

ஐயா பிதாவே! மனோபீஷ்டத்தை யெல்லாங் கொடுப்பதும், அவைகளையனுபவித்துக்கடந்தால் மோக்ஷத்தை அடையும்படிச் செய்வதும், ஓமங்கள் யாகங்கள் செய்தவர்களை அவைகளுக்குரிய பதவிகளிற் செலுத்துவதும், ஆகிய ஏகவஸ்துவா யிருக்கின்றவனுடைய திருநாமமே; அது பிரணவத்துடனேகூடிய (ஓம் நாராயணாயநம:) என்னும் திருமந்திரமேயாம்.

பூமண்டலமுதற் பிரமலோக பரியந்தம் வாழ்கின்ற எண்ணிக்கையில்லாத பூதபௌதிக சராசரங்கள் யாவற்றினுள்ளும் கலந்து நிறைந்து, அந்தக்கரணங்களிலும் பொருந்தி, அங்கிருந்து உதிக்கின்ற உணர்வினால் உணரப்படுவது இந்தத் திருவஷ்டாக்ஷரமேயல்லது வேறில்லை. சதுர்முகப் பிரமாவாதியாக மனிதர்கள்வரையிலும் இந்தத் திருமந்திரத்தை மறந்தவர்கள் இறந்தவர்களே! இதை ஒருவர்காண்பிக்க ஒருவரறிகிறதோ? மகாபிரயாசம்; அப்படியானாலெப்படித்தான் அறிகிறதென்றால், சொல்லுதற்குரிய அதிகாரியாகிய சதாசாரியனும் கேட்பதற்குரிய பக்குவியாகிய சிஷனுங்கூடி, ஒருமித்திருந்துகாட்டக் கண்டறிந்தாலறியலாம். மற்றப்படி அனதிகாரியாகிய ஆசாரியனும், அபக்குவியாகிய சிஷனும், அதனிலையைக் காட்டவும் அறியவுமாட்டார்கள். ஜனனமாகிய சமுத்திரத்தின் பழவினையாகிய சுழலில் நின்றும் கரையேற்றுகின்ற நல்லமரக்கலமாயிருப்பதும், யாவருக்குங் கிடைப்பதற்கு அருமையாகிய பூஷணமாயிருப்பதும், சொல்லுக்கு மங்களகரமாயிருப்பதும், இருஷிகள் வேதத்தின்முடிவில் சிலாக்கியமாகத் தெளிந்தெடுத்த மெய்ப்பொருளுமிதுவே; இதற்குச் சமானதிகமுமிதுவேயல்லாமல், மற்றொன்றுமில்லை. உம்முடைய ஆத்துமாவுக்கும், என்னுடைய ஆத்துமாவுக்கும், இவ்வுலகத்திலுள்ள சகல ஆத்துமாக்களுக்கும், இதுவே உறுதியென நான் சிந்தித்துச் சொன்னது. என்று தத்துவக்கியானிகளிற் சிறந்தவனாகிய பிரகலாதாழ்வான் இவ்வண்ணம் உயர்ந்தறியினுச்சிப்பொருளாகிய அஷ்டாக்ஷரத்தை யோதிய ரீகச் சொல்லினான்.

### இரணியன் கோபித்துப் பிரகலாதனுக்குப் பயமுறுத்தி அப்பெயரைச்சொன்ன துணைக்காரரென்றும் நீயேவ்விதஞ் சொன்னுயென்றுங்கேட்டு தனக்கும் அவ்வரிக்கும் இருக்கும் பகையைக் கூறல்.

கவி.

அற்றைநாண்முதல் யாதுளநாள்வரை யப்பேர்
சொற்றவாயையுங் கருதியமனத்தையுஞ் சுடுமென்
ஒற்றையாணைமத் தியாருனக்கிப்பெய ருரைத்தார்
கற்றதாரொடு சொல்லுதிவிரைச்செனக் கனன்றான்.

இரணியன் சோதிமின்னலைப்போலப்பிரகாசிக்கின்ற தன்கையிலேந்திய வீரவேலாயுதத்தைச் சுழற்றி, கண்களை நெருப்பு ஜொலிக்க விழித்து, அடா துஷ்டப்பயலே! நான் பிறந்தநாள்முதல் இந்நாள்வரைக்கும் இந்தப் பெயரைச்சொன்ன வாயையும், இதை நினைத்தமனதையும், என்னுடைய ஒப்பற்ற சக்ராயுதமானது தகித்துவிடும். அப்படியிருக்கப் பின்னையாருனக்கிந்தப் பெயரைச்சொல்லிக் கொடுத்தவர்கள்? நீ எவ்விடத்திற் கற்றுக்கொண்டாய்? சீக்கிரத்தில் உள்ளதைச் சொல்லுக. என்று காலாக்கினி சொரூபமாய்க் கோபித்து, இருடிகள் முதலிய திரிலோகங்களிலுமுள்ள மற்றச் சகலமானவர்களும் என்னுடைய உபயபாதத்தையே தியானஞ்செய்கிறது. என்பெயரையே ஸ்துதிசெய்கிறது. ஆகையால் - அவர்களெல்லாம் உனக்கிதைச் சொல்லுகிறதற்குப் பயப்படுவார்களே. அப்படியிருக்க நீ எப்படித்தான் அறிந்தாய்?

மேலும், அந்த விஷ்ணுவானவன் என்னிடத்தில் யுத்தஞ் செய்யும்படி அநேகதரம் வந்து எதிர்த்து, தானேறிய கருடவாகனத்தின் வேகத்தால் துப்பியோடிப்போய்க் கடலிலேவிழுந்து அமிழ்ந்து, இன்னமும் எழுந்திராமற் கிடந்து உறங்குகின்றான். அவ்வாறு உறங்குகின்றவனுடைய பெயரை உனக்கு உறுதியான பொருளென்று சொன்னவர்களைக் காட்டடா! சமுத்திரத்தின் சிறுமணலையெண்ணி அளவிட்டாலும், நம்முடைய குலத்திலே தோன்றிய பெரியோர்களை அளவிடக்கூடாது. அத்தனைபேர்களும் அவனொருவனே கொன்று நீக்கும்படி இறந்துபோனார்கள். எலியானது தனக்குக் கூற்றுவனாகிய கொடிய பாம்பின்பெயரைச் சொன்னதனால் அதற்கு என்ன நன்மையுண்டு? அப்படியாக விருக்கிறது நீ அந்தச் சத்துருவின்பெயரைச் சொல்லுகிறது. உனக்கிந்தத் துர்ப்புத்தி வந்ததற்குக் காரணம் என்னவென்று சொல்லடா! மேலேழு லோகங்களையும் கீழேழு லோகங்களையும் தன்வயிற்றுக்குள்ளே அடக்கிவைத்துக்கொள்ளத்தக்க ஐயப்பாடின்றிய பலசாலியாகிய என் தமையன் இரணியாக்ஷனென்பவனை ஒரு பன்றியாக வடிவெடுத்துக் கொம்பினாற் குத்திப்பிளந்து மடித்தவனுடைய பெயரைச் சொல்லுகிறதற்கோ உன்னை நான் பிள்ளையாகப் பெற்றது? ஐயோ! உலகத்திற் பிள்ளையைப் பெறுவது தந்தையின்பெயரைச் சொல்லுகிறதற்கல்லவா?



அடா பிரகலாதா! இவ்வுலகத்திற்கும், அதிலுள்ள உயிருக்கும், மற்றெல்லாவற்றிற்கும் நானொருவனே தலைவனாயிருக்கிறேன். சகல உயிர்களையும் உண்டாக்கல்—காத்தல்—அழித்தல்—என்கின்ற இம்மூன்று தொழில்களும் என்னாலே செய்யப்படுகின்றன. இந்தப் பிரத்தியக்ஷமாகிய காரியத்தைப் பாராமல் வேறே காரணமுண்டென்று நீ சொல்லுகின்றது எந்தவேதத்தின் சம்மதமென்று தேறினாய்? ஆதியந்தமில்லாத அளவிறந்த உலகங்களிலும் வேதம் எந்தமார்க்கமோ? அந்தமார்க்கத்தையே சார்ந்து அதுசொன்ன விதிப்படியே குற்றமற்ற நல்வினையைச் செய்தவர்கள் மேன்படுவார்கள். தீவினையைச்செய்தவர்கள் தாழ்வார்கள். யோசிக்குமிடத்தில் இது உண்மையாம். பூர்வத்தில் மகத்தாகிய தவத்தைச் செய்ததனால் அரியயப்பிரமாக்கள் திரிமூர்த்திகளென்று யாவருஞ் சொல்லத்தக்க பதத்தைப் பெற்றார்கள். பின்பு நான் அவர்களைப்பார்க்கிலும் விசேஷமாகிய தவத்தைச்செய்து, உண்மையாகிய நாயகத்துவத்தை வகித்ததனால் அந்தப்பதத்தை யவர்களிழந்து, இனி யிச்சித்தாலும் அதுகிடைப்பது துர்லபமென்று நினைத்துப் பூரணமாகிய என்னதிகாரத்துக்குள்ளடங்கி நடக்கின்றார்கள். புத்தியில்லாத இளம்பிள்ளையாகிய நீ இப்பொழுது செய்தபிழையை நான் பொறுத்துக்கொண்டேன். இனிமே லிப்படிப்பட்ட விரோதமாகிய வார்த்தைகளைச் சொல்லாதே. உபாத்தியாயர் என்னசொன்னாலும் அதை இதமாகவே கொள்ளக்கடவாய். இனி யோதப்போவென்று இரணியாசுரன் சொல்லவும் அதற்குப் பிரகலாதன் சொல்லுகிறான்.

### தன்னையே தெய்வமென்று கொள்ளச்சொன்ன இரணியனுக்குப் பிரகலாதன் சிலவார்த்தை கூறல்.

கவி.

உரையுளதுணர்த்துவ துணர்த்துகோடியேல்
விரைவிலவலங்கலாய் வேதவேள்வியின்
கரையுளதியாவருங் கற்றுங்கல்வியின்
பிரையுளதென்பது மைந்தன்பேசினன்.

ஐயா திரிலோக பயங்கரனுகிய என் பிதாவே! உமக்கு நான் அறிவிக்கவேண்டிய வார்த்தைகள் சிலவுள. அவற்றை நீர் சற்று மசட்டையன்றுமற் கேட்டறியவேண்டும். அஃதென்னவென்றால்—வேதமாகிய கடலுக்குக் கரையாயும், வேள்விக்குப் பயனாயும், யாவருங் கற்கின்ற கல்வியாகிய பாலுக்குப் பிரையாயுமிருக்கின்றதென்று பிரகலாதன் சொல்லத் தலைப்பட்டான். வித்தில்லாத விளைவு ஒன்றுமில்லை. உம்முடைய பைத்தியத்தைவிட்டு அறிவீரேயாகில் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போலக் காண்பீர். தனக்குள்ளேயிருந்து உலகங்களையெல்லாம் உற்பவிக்கப்பண்ணியும், தானும் அவ்வுலகங்களுக்குள்ளே கலந்திருந்தும், தனக்குப் பின்னுமில்லாமல் முன்னுமில்லாமல் ஏகவஸ்துவாயுமிருக்கின்றவனுடைய மகிமைப் பிரபாவமானது ஒருவரால் நிச்சயித்துச் சொல்லத்தக்கதோ? விரிந்து வியாபித்திருக்கின்ற பிரு

திவி முதலாகிய தத்துவங்களையெல்லாம் வெவ்வேறாகப் பகுத்துக்காண்கின்ற சாங்கியநெறியும் யோகநெறியுமென்று இரண்டுவழிகளுண்டு. அவ்வழிகளை யறிந்தவர்களுக்கல்லாமல் மற்றவர்களுக்கு அவனுடைய மேலாகிய உயர்ந்தநிலை இன்னதென்று அறியக்கூடுமோ? வேதமுடிவில் சித்தென்று தெளிந்து சொல்லப்பட்ட மெய்ப்பொருளாகிய அவனுடைய தன்மையைத் தம்மைத் தாமுணர்ந்த ஞானிகளாகிய பெரியோர்களறிவார்கள். அப்படியல்லாமல் விஷயங்களையே பொருளென்று மதித்துக்கொண்டிருக்கின்ற பித்தர்களுமுண்டு. அவர்கள் தம்மையறியாமையால் அவனுடைய தன்மையையும் அறியார்கள். அவர்கள் மோக்ஷமும் பெறமாட்டார்கள்.

மேலும் — பிரத்தியக்ஷமுதலாகிய அளவைகளால் அளவிடப்படாததாகியும், மனதுக்கு எட்டாததாகியும்; உபநிடதங்களிற் சொல்லப்பட்ட வாக்கியங்களாலும், அந்தவாக்கியார்த்தங்களாலும், அறிவிப்பதற்கு எட்டாததாகியுமிருக்கின்ற அந்தப்பரமபுருஷனுடைய ரகசியத்தை மெய்மையைக்காணாத பாமரர்களறிவார்களோ? செம்மைதங்கியவாகிய மூன்றுலகங்களாகியும், மூக்குணங்களாகியும், யாவரும் யாவையுமாகியும், இவைகளுக்கு வேறுபட்டும், நீக்கமில்லாமலிருக்கின்ற ஒப்பற்ற நிலைமையையுடைய பரம்பொருளாகிய அவ்வொருவனுடைய கிர்த்தியங்கள்; பிரமாதிதேவர்களாலும் முனிவர்களாலுந்தாம் அறியப்படுமோ? கர்மமும், அந்தக்கர்மத்தாலாகிய பயனும், அப்பயனைத்தருகின்ற கர்த்தாவும் தானாயிருக்கின்றான். அவனுடைய அருமையையும் - பெருமையையும் - யாரேனும் அறிவார்களாகில், அவர்கள் இகபரமென்கின்ற கடலைக்கடந்து கரைபெறுவார்கள். மந்திரமும், மாதவமும், அவைகளால்வரும் பிரயோசனமும், அவைகளைக்குறித்துக் கிரமமாகச் சொல்லப்பட்ட தெய்வமும், வேதமும், வேள்வியும், ஆகுதியும், அவனேயன்றி வேறில்லை. இவற்றை முறைதவறாமற் செய்தோர்க்கு முன்னே கொடுக்கவேண்டியபலனை, முன்னே கொடுக்கிறதும், பின்னே கொடுக்கவேண்டியபலனைப் பின்னே கொடுக்கிறதும், அந்நாராயணன்செய்கையே. இதை அவனுடைய அற்புதமாகிய மாயையினாலே அநேகரறியாதிருக்கின்றார்கள்.

நல்வினையானது நன்மையும், தீவினையானது தீமையுமாகிய ஒவ்வொரு பலனைக் கொடுக்குமல்லாமல், விசேஷமாகக் கொடுக்கமாட்டா. அந்தப்பகவானுடைய கருணையின்பிரபாவம் அப்படியல்ல. பலகாலம் ஜனனமரணத்துக்கேதுவாகிய இருவினைகளும் பற்றறும்போகும்படி. ஆசிரித்தவர்களால் நினைத்தவைகள் என்னென்னவுண்டோ? அவைகளையெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கின்றது. இதையன்றி வேறுதிருஷ்டாந்தமும் வேண்டுமோ? யாகஞ்செய்கின்ற சோமயாஜிகள் யாகமுடிவிலே அந்தச்சேஷசாயிக்கு ஒரு ஆகுதிகொடுப்பார்களானால், அதுசராசரங்களுக்கெல்லாம் திருப்தியாகும். வேதமும் இப்படியே சொல்லுகின்றது. மூலப்பிரகிருதியென்னும் மாயையினிடத்திலிருந்துதோன்றிய பஞ்சபூதபௌதிகங்களைத்தத்த முதற்



பொருளானது, அந்தப் பூதபௌதிகங்களாலாகிய நரககதி—மிருககதி — மானுடகதி—தேவகதி என்னும் நான்கு கதிகளிலும் போக்குவரவற்ற நிலைமையை அடையாத மேலானவர்களுடைய அறிவுக்கும் எட்டுமோ?

## ஸ்ரீமந் நாராயணன் பெருமையைப் பிரகலாதன் கூறல்.

கவி.

எழுத்தியனுளத்தி னெண்ணிலாவகை
முழுத்தனிநான்முகன் முதலமற்றுயிர்
வழித்தரும்பொருட்டதோர் புரையின்கைகுமால்
விழுத்தனிப்பல்லிதழ் விளையிலாமுகிழ்.

கண்ணினுங்கரந்துளன் கண்டுகாட்டுவான்
உண்ணிறைந்திடுமுணர் வாகியுண்மையால்
மண்ணினும்வானினு மற்றைமூன்றினும்
எண்ணினுநெடியவ னொருவனெண்ணிலான்.

பிரமன்முதலான சராசரங்களெல்லாம் அந்தஜோதிசொரூபியின் இலக்கணமமைந்த திருநாபிக்கமலத்தின் பொகுட்டில் ஒருபுரைக்குள்ளே அடங்கியிருக்கின்றன. காண்கின்றவர்கள் காட்டுகின்றவர்களுடைய கண்ணுக்குள்ளும் அவனொளித்திருக்கின்றான். பஞ்சபூதங்களுக்குள்ளும் நிறைந்திருக்கின்றான். சகலருடைய நினைவிலுஞ் செய்கையிலுஞ் சொல்லிலும் வாழ்ந்திருக்கின்றான். இந்திரியங்கடோறும் சேர்ந்திருக்கின்றான். இப்படிக்கெல்லாமிருக்கின்றதை ஒருவன் தானெவ்வளவும் நினைக்கிறதில்லை. முன்பு ஏகாக்ஷரமாகிய பிரணவமும், பின்பு த்வயாக்ஷரமாகிய நமசப்தமும், அப்பால் பஞ்சாக்ஷரமாகிய நாராயணயவென்பதோடுகூடி எட்டெழுத்தாகி; மூன்றுபதமும் இரண்டுசந்தியுமாய்த் தழைத்திருக்கின்றான். காமம் வெகுளி மயக்கம் இவைகளினாலுண்டாகிய தீமைகளையெல்லாநிவர்த்திசெய்கின்ற அந்தஷாட்குண்ய பரிபூரணனான எம்பெருமானுடைய திருநாமத்தையும் அதன்மகிமையையுங்குறித்துப்பேசாதவர்கள், அவன்து இருப்பை எப்படியறிந்து பேசமாட்டுவார்கள்? காலமும் - கருவியும் - இடமும் - பயனும் - அந்தப்பயனை அனுபவிக்கின்றவனுமாகி, சீலமும் அச்சீலத்தாலாகுஞ் சம்பத்துமாயிருக்கின்றான்.

பெரிதாகிய ஆலமரமும் சிறிதாகிய அதன்வித்தும்போலச் சங்கோசமாயும் விகாசமாயுமிருக்கின்றான். சங்கீதவித்துவான்கள் ஸப்தஸ்வரங்களையும் தங்களுக்குள்ளே உதிக்கின்ற உணர்வினால் முன்புசிந்தித்துக் கண்டறிந்து, பின்பு வீணையினிடத்தில் வாசித்தலினால் செவிக்கு விஷயமாகும்படி அறிகிறதுபோல; பெரியோர்கள் யோகத்தில் தியானத்தின்வழியாகத் தமக்குள்ளே தரிசித்து, அந்தயோகதிடத்தினாலே புறத்திற்காண்கின்றார்கள். அதனால் அகத்திலுள்ளவனாகியும், புறத்திலுள்ளவனாகியும், ஆகாசமானது மற்றப்பூதங்களோடுசேர்ந்திருந்தும் அவைகளுடனே கலவாமலிருப்பதுபோல அவன் பி

ருதிவிமுதலான தத்துவங்களுடனே கூடியிருந்தும் அவைகளிலெல்லாம் தாக்கற்று நிற்பவனுகியும், வேதங்களும் பிரமிக்கின்ற தன்மையையுடையவனுகியு மிருக்கின்றான்.

ஐயா எனதுதந்தையே! ஓங்காரமாகிய ஓரெழுத்துக்குள் அதனுயிராயுமிருக்கின்றான். அறிவுக்கறிவாயுமிருக்கின்றான். மூன்றுலகங்களையுங் கடந்துமிருப்பதனுல் புகையும் அக்னியும்போலவு மிருக்கின்றான். பலபேதமாகிய சமயங்களைப்பற்றி வாதிக்கின்ற சமயவாதிகளுடைய மாறுபாடுகளையொழித்து ஏகபாவனையாய்ப் பேசுகின்றவர்களுக்கெல்லாம் பலமலர்களைக்கொண்டு தொடுக்கப்பட்ட மாலையினிடத்துள்ள மணம்போலவும், கடலும் அதனலையும் போலவும், வேறுபாடில்லாமலிருக்கின்றான். இப்படிப்பட்ட பரமாத்துமாவை நீரிகழ்ந்துபேசி, உம்மைச்சார்ந்திருக்கின்ற செல்வமும் உம்முடைய தீர்க்காயுளும் பெயரற்றுப்போம்படி நீரும்பிராணனை இழந்துவிடுகிறீரேயென்று நினைத்து; நானந்த ஜெகதீஸ்வரனுக்குத் தண்டஞ்சமர்ப்பித்து மங்களாசனமாக அவனுடைய திருநாமத்தைச் சொன்னேனென்று பிதாவுக்குப் பிரகலாதாழ்வான் தெரியும்படிச் சொன்னான்.

## இரணியாசுரன் மிகவும் கோபித்து பிரகலாதனைக் கொல்லும்படி கோலையாளர்வச மொப்புவித்தலும் அவர்கள் வதைசெய்தலும்.

கவி.

எதிரினின்றவ னிவையுரைத்திடுதலு மெவ்வுலகமுமஞ்ச
முதிரும்வெங்கத மொழிகொடுமூண்டது முதுகடற்கடுவேய்ப்பக்
கதிரும்வானமுஞ் சுழன்றன நெடுநிலங் கம்பித்தன கண்கள்
உதிரங்கான்றன தோன்றினபுகைக்கொடி யுமிழ்ந்தது சொற்றீயே.

வேறுமென்னொரு தரும்பகைபிறிதினி வேண்டலென்வினையத்தால்
ஊறியென்றனை யுதித்ததொருபிப்பினி யுணர்குவதுள தன்றால்
சீறிலென்பெரும் பகைஞனுக்கன்புரா லடியன் யானென்கின்றான்
கோறியென்றனை யென்றலும்பற்றினர் கூற்றினுங்கொலைவல்லார்.

தாயின்மன்னுயிர்க் கன்பினன் றன்னையுந் தவமெனுந்தகவில்லோர்
ஏயெனுந்துணை மாத்திரத்தெய்தனை வெறிந்தனவெறிகோறும்
தூயவன்றனைத் துணையெனவுடையவ னொருவனைத்தான்னுதார்
வாயின்வைதனவொத்தனவத்துணை மழுவொடு கொலைவாளும்.

அன்று இராவணேஸ்வரா! இப்படிக்கெல்லாம் எதிரேநின்று பிரகலாதன் சொல்லவே அந்த இரணியனுக்கு எவ்வகையுலகங்களும் அஞ்சும்படிச் சமுத்திரத்தில் தோன்றிய ஆலகாலவிடம்போலப் பிரபலமாகிய கோபமுண்டாயது. சூரியனும், சந்திரனும், ஆகாசமும் சுழன்றன. பூமிகம்பிதமாயிற்று. அவனுடையகண்கள் உதிரத்தைக்கக்கின. கொடிபோலப் புகையெழுந்தது. யுகாந்த காலாக்கினியைப்போல உக்கிரமாகிய அக்கினிஜொலித்தது. இவ்விதமாகப் பொங்கிய அந்த இரணியேஸ்வரன் அடக்கற்கரிய கோபத்தினால் அந்



கைபோடங்கை யறைந்து, ஆ! ஆ! ஆ! என்னுடைய பகைக்கின்றவர்களினி வேறில்லை. இவன் குடலுக்குள்ளோ தினைபோல என்னிடத்திலேதானே பிறந்து, என்சத்துருவுக்கே நானடிமையென்று சொல்லுகின்றான். ஆகையால் இவனைக் கொண்டுபோய்க் கொலைசெய்யுங்க ளென்று ஆக்கியாபித்தான். அந்த கொடுமிலேதானே காலனைப்பார்க்கிலும் அதிகமான கொடுமையைச் செய்கின்றவர்களாகிய அசுரர்களனேகர் வந்து, ஒருயானைக்குட்டியைச் சிங்கக்கூட்டம் பிடித்து இழுத்துக்கொண்டு போவதுபோலப் பற்றியிழுத்துக்கொண்டு சென்று, மலைபோல் உயர்ந்த ரத்னகசிதமாகிய பிராசாதத்துக்கு வெளியிலேயிருந்து, சக்தி, மழு - வாள் - சூலம் - வேல் - குந்தம் - கெதை - இவைமுதலாகிய ஆயுதங்கள் ஒன்றுபோல அநேகமாயிரங்களைக் கொண்டு பிரகலாதன்மேற் பிரயோகஞ்செய்து, இவனை உயிருடனே இன்று தீர்ப்போமென்று இடியைப் போலக் கொக்கரித்துக் கண்களால் நெருப்பைச்சொரிந்தார்கள்.

இப்படி ஜீவகோடிகளினிடத்தில் பெற்றதாயைப் பார்க்கிலுமதிகவும் அன்புசெலுத்துகின்ற அந்தப்பிரகலாதன்மேல் தவத்தைச்செய்யாத பாவிகளாகிய அசுரர்கள் பிரயோகித்த ஆயுதங்களெல்லாம், நல்லொழுக்கத்தையுடைய மெய்ஞ்ஞானியைப் பாமரர்கள் திட்டிய திட்டுப்போலாய்விட்டன. அவன் ஒருதன்மையாகிய வைராக்கியத்தில் நிலைபெற்ற சித்தத்தையுடையவனாய்த் தானே அகக்கண்புறக்கண்களால் தரிசிக்கப்பட்ட தெய்வநாயகனாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடியைமறவாமலும் அவன்றிருநாமத்தைவிடாமலும் தியானம்பண்ணிக்கொண்டிருந்ததனால், அவன்மேலெறிந்தவைகளும் - எய்தவைகளும் - எற்றியவைகளும் - குத்தியவைகளும் - அரிந்தவைகளுமாகிய பலபடைகளும் முறிந்து ஒடிந்து உதிர்ந்து சிறுபொடிகளாய்ப் போனவைகளேயல்லாமல்; அவனுடைய திருமேனியிலுண்டாகிய தினைவைக் குறித்துச் சொரிந்த அம்மாத்திர வுபத்திரவமுஞ் செய்யவேயில்லை. அதை யந்த அசுரர்கள் பார்த்து ஆச்சரியங்கொண்டு, இரணியனிடத்தில்வந்து, சுவாமி! எங்களிடத்திலுள்ள ஆயுதங்களையெல்லாம் பிரயோகஞ்செய்தோம். அவைகளெல்லாந் தவிடுபொடியாய்விட்டன. உம்முடைய குமாரன் சரீரத்துக்கு யாதொருதுன்பமுமில்லை. இனிமேல்வேறேநாங்கள் செய்யவேண்டிய தென்னவென்றார்கள். அப்போது அசுரேந்திரன் மிகுந்த கோபமுண்டானவனாகி, பிரகலாதன் கபடமானநெஞ்சையுடையவனானதால் ஏதோ மந்திரந்தட்டினால் அந்த வாயுதங்களெல்லாம் தன்னுடலில்தாக்காமல் முறிந்துபோகும்படி செய்தான். நல்லது: இப்பொழுது நீங்கள் கடூரமான அக்கினியை மூட்டி, அதிலே அவனைக்கட்டித் தள்ளிவிடுங்களென்று சொன்னான்.

## பிரகலாதனை அக்கினிக்குழியிற்றள்ளல்.

கவி.

குழியிலிந்தனமடுக்கினர் குன்றெனக்குடந்தொறுங் கொணர்ந்தெண்ணெய்
இழுதுநெய்சொரிந் திட்டனர்நெருப்பெழுந் திட்டது விசும்பெட்ட

அழுதுநின்றவரயர்வுற வையனைப்பெய்தன வெரியென்று
தொழுதுநின்றன னாயகன்றுணை குளிர்ந்தது சுடுதீயே.

அப்படியே அந்தத் துஷ்டர்கள் அதிகவகலமு நீளமு மாழமு முள்ளதாக ஒருபெரிய குழிவெட்டி, அந்தக்குழியிலே பர்வதம்போலப் பருத்த புளியங்கட்டைகளை மேலுமேலு நிறையவடுக்கி, ஆயிரங்குடம் எண்ணெயுநெய்யுங் கொண்டுவந்து சொரிந்து தணல்மூட்டினார்கள். அந்தத்தணலினுடைய ஜுவாலையானது தெய்வலோக மட்டும்போய்த் தவழும்படி பற்றிக்கொண்டு பிரளய காலாக்கினிபோ லெரிந்தது. அவ்வண்ணமா யெரியும்பொழுது அங்கிருந்தவர்களெல்லாம் உயிர்சோரும்படி எங்களையுடைய பிரகலாதாழ்வானைக் கைகையுங்காலையுங்கட்டி, நிர்த்தாக்ஷிண்ணியமாய்த் தள்ளிவிட்டார்கள். அக்காலவன் லோகரக்ஷகனுடைய திருவடியை நமஸ்கரித்து, ஹரி ஹரி! ! என்று அதிலேவிழுந்தான். அவனுக்கு அதியுஷ்ணமாகிய அவ்வனலானது குளிர்ந்து, சீதளசந்தனக் குழம்புபோ லாய்விட்டது.

அண்ணே! கேட்டீரோ? அன்று அநுமானுடைய வாலிலே வஸ்திரங்களைச்சுற்றி நெய்யிலேதோய்த்து விஷத்துக்குச்சமானமாகிய ராக்ஷதர்கள் கொளுத்திவிட நம்முடைய லங்கையாதியந்தமுஞ் சுட்டதியானது. பதிவிரதா ரத்னமாகிய ஜானகியானவள் சொன்ன ஆசீர்வசனத்தினால் உஷ்ணமாகாம்படி அந்த ஆஞ்சநேயனுடைய வால் எப்படிகுளிர்ந்ததோ? அப்படியே பிரகலாதனுடைய மாணிக்கத்தை யொத்த அருமைத் திருமேனியானது குளிர்ந்தது. அப்பொழுது இரணியனிடத்தில் அசுரர்கள் சென்று, ஐயா! தேவரீர் உத்தரவின்படி நெருப்புக்குழியில் தள்ளியும் உம்முடைய புத்திரனை ஜுவாலையிருந்த அந்தநெருப்பானது எவ்வளவும் தகிக்கவேயில்லை. இனியென்னசெய்கிறதென்று கேட்டார்கள். இரணியாசுரன் விழிகள்கொதிக்கும்படி மகத்தாகிய குரூரத்தைக்கொண்டு, அப்படியா? இனியந்த அக்கினியைக் கட்டிச்சிறைபிடியுங்கள். இந்தத் திருட்டுப்பயலை அஷ்டமாநாகங்களைவிட்டுக் கடிப்பித்து உயிரைக்குடிக்கும்படி செய்யுங்கள். அவன்றிற்சீவாம லிருக்கிறதைப் பார்ப்போம். என்று ஆக்கியாபித்தான்.

## பிரகலாதனை அஷ்டமாநாகங்களை விட்டுக் கடிக்கச்செய்தல்.

கவி.

அனந்தனேமுதலாகியநாகங்க ளருளென்கொலென வன்றான்
நினைந்தமாத்திரத் தெய்தினவெய்தினி னெருப்புகு பகுவாயால்
வனைந்ததாமன்ன மேனியினான்றன்மேல் வாளெயிறுற வூன்றிச்
சினந்தனீக்கொளக் கடித்தன துடித்திலன் றிருப்பெயர்மறவாதான்.

இப்படி இரணியேஸ்வரன் சொன்னமாத்திரத்தில் ஒருவரும்போயழைக்காமலே அனந்தன் - வாசுகி - சங்கன் - குளிகன் - பதுமன் - மகாபதுமன் - தக்ஷகன் - கார்க்கோடகன் - என்கின்ற தெய்வீகமாகிய சர்ப்பங்களெட்டும் அதிசீக்கிரமாக எங்களுக்கு என்னகட்டளையென்று வந்து, அவன்



சொற்படியே கொடிய விஷாக்கினியைச் சிந்துகின்ற வாயினால் இமைச்சவிட்டுச்சீறி, பிரகலாதனுடைய அழகிய திருமேனியில் வரிசைப்பிரகாரம் நின்றுவளைந்து கூர்மையாயிருக்கின்ற பற்களூன்றும்படி மரணமடைவதற் கேதுவாகிய திதியும் நக்ஷத்திரமுங் கூடிய தினத்திற் கடித்தன. கடித்தவுடனே படம் விரித்துக்கொண்டாடித் தரையிற் புரண்டன. அப்போது பிரகலாதன் தன்னைச்சீரத் துடிக்காமல், எம்பிரானுடைய திருநாமத்தையே தியானம் பண்ணிக்கொண்டிருந்தான். அக்கால் பக்கத்தில் நின்றவர்கள் பயத்தினால் வாயின்வழியாக இரத்தத்தைக் கக்கவும், பாம்புக்கு வைரியாகிய கருடனு நடுக்கத்தை யடையவும், வெந்தமேகத்திற்குள்ளே பாலசந்திர னுறைகிறதுபோல் கடிமிகாத உறுப்புக்களில் காளி-காளாஸ்திரி - யமன் - யமதூதன் - என்கின்ற நான்கு பற்களூர்த்ததைத்துருவ எழும்பி யெழும்பிக் கடித்ததனால், அந்தப் பாம்புகளின் பற்களெல்லாம் வலியற்றொடிந்து உதிர்ந்தன. பிரகலாதனுக்குக் கடித்தவிடங்களிலெல்லாம் விஷம் பாயாமல் அமிர்தம் ஊறியெழுகத் தலைப்பட்டது.

அதுகண்ட அரக்கர்கள் இரணியாசுரனிடத்திலோடி, அஷ்டநாகங்களும் சூழ்ந்து உம்முடைய மைந்தனைப்பற்றிக் கடித்தும் அவைகளின் பற்கள் சற்றுமழுந்தவில்லை, விஷமேறவுமில்லையென்று, சொன்னார்கள். அவனதைக் கேட்டு, திக்கஜத்துக்கு முன்னே கொண்டுபோய்ப்போட்டு அதன்காலா லிடறச்செய்து விடுங்களென்றான்.

## பிரகலாதனை யானையின் காலாலிடறச் செய்தல்.

கவி.

பகையிற்றங்கலிற் சிந்தையர்பல்லோர், திசையிற் சென்றனர் செப்பின னென்னலும்
இசையிற்றந்தன னிந்திர னென்பான், விசையிற் றிண்பணை வெஞ்சின வேழம்.

அம்மாத்திரத்திற் பலபேர் தங்களுடைய பகையில்லாத மனதைப்போற் கிழக்குத்திசையில் விசையாயோடி, இந்திரனேறுகின்ற ஐராவதமென்கிறபெயரையும் - கொடிதாகிய கோபத்தையும் - பலம்பொருந்திய நான்குகொம்புகளையுமுடைய வெள்ளையானையை அதிசீக்கிரமாகக் கொண்டுவந்து நிறுத்தி, அதன்முன்னே பிரகலாதனைக் கைகளிலும் - கால்களிலும் - மார்பிலும் - கழுத்திலும் - தெய்வீகமாகிய பாசங்களை இறுக்கி யொடுக்கிக்கட்டி எடுத்துக்கொண்டுபோய்ப் போட்டார்கள். அந்தநுணத்தில் மெய்ப்பொருளை யறிந்தவனாகிய பிரகலாதன் அந்த யானையைப்பார்த்து, ஓ ஐராவதமே! உன்தாயைப்பெற்ற பாட்டனாகிய கஜேந்திரனைப் பூர்வகாலத்தில் ஒரு முதலையானது விழுங்கினபோது, ஆதிமூலமேயென் றழைக்க அதன் முன்னேவந்து ரக்ஷித்த கஜேந்திரவரதன் என் மனதினிடத்தில் வசிக்கிறானென்று சொன்னான்.

இப்படிச் சொல்லாததற்கு முன்னேதானே அந்தவெள்ளையானையானது இவன்சாக்ஷாத் அரிபுத்திரன். இவன் விஷயத்தில் அபசாரப்படலாகாது. என்று பிரகலாதனைப் பிரதக்ஷணமாகவந்து, தன்னுடைய நெற்றியிலணிந்த சேர்

னப்பட்டமானது நிலத்திற் பொருந்தும்படி அவனுக்குத் தெண்டம் சமர்ப்பித்துவிட்டுத் திரும்பியது. இந்தச்செய்தியை அரக்கர்கள் இரணியனுக்குப் போய்ச் சொன்னார்கள். அவனதுகேட்ட மாத்திரத்தி லாச்சரியித்தனாகி, ஆ! ஒரு யானையானது உலகத்தில் எங்குந் தனக்கு இடங்கிடையாமல் எனக்குப் பயந்துபோய், சமுத்திரத்திலே தூங்குகின்ற விஷ்ணுவென்பவனையே பெரியபொருளாக மதித்துக்கொண்டு என்னுடைய அழியாத வீரத்தையும் ஆக்கினையையும் அழித்ததல்லவா? ஆகையால் அவ்வைராவதத்தைக் கொல்லுங்களென்று நெஞ்சுகொதிக்கச் சொன்னான். உடனே அசுரர்கள் ஐராவதத்தைக் கொல்லும்படிப் பிரயத்தனப்பட்டார்கள். அப்படி யவர்கள் தன்னைக் கொல்லவந்தபோது அவ்வியானை பயந்து, இரணியனே கொடியவனாயிருக்கின்றான். பிரகலாதனே சுவாமிக்கு அடியவனாயிருக்கின்றான். இதென்ன பெரியசங்கடமாக நேர்ந்ததென்று நினைத்துத் துக்கித்து, பின்பு ஒருவிதத்தில் மனந்துணிந்து, பொன்னொளியை மழுங்கச்செய்கின்ற தேஜஸையும் கீர்த்தியையுமுடைய சத்தியசந்தனாகிய பிரகலாதனைக் கொல்லும்படி வந்து, மின்னலை யழிக்கின்ற பிரகாசத்தையுடைய தன்கொம்புகளினால் அவனுடைய வலிபெற்ற மார்பிற் குத்தியழுத்தியது.

இவ்வண்ணமாக ஐராவதமானது தனது பூரணமான வலிவுடன் அழுத்தவே அந்தத் தந்தங்கள் நான்கும் இளவாழைத் தண்டுபோல் முறிந்துபோய்விட, அதுகண்ட உண்மையில்லாத அசுரர்கள் இரணியாசுரனிடத்திற் கண்ணிமைப்பதற்குள்ளாகச் சென்று, சுவாமி! ஐராவதம் உம்முடைய குமாரனைத் திரும்பிவந்து குத்திப்பாயவும் அதன் கொம்புகள் இற்றுவிழுந்ததென்று சொன்னார்கள். அதுகேட்ட அசுரேந்திரன் கோடைக்காலத்துச் சூரியனைப்போலச் சுடுகின்ற கண்ணையுடையவனாய்க் கோபித்து, அவனை ஏழுநிலைகளையுடைய நமது பெரிய உப்பரிகையின்வாசற் கோபுர சிகரத்தின்மேலேற்றிப் பூமியிலே தள்ளிவிடுங்களென்று உத்தரவு செய்தான். பல்லாயிரங்கோடி அண்டங்களையும் உண்டருளிய பரமாத்துமனுடைய உபயதிருவடிகளைத் தியானிக்கின்ற புண்ணியாத்துமனாகிய பிரகலாதனைப் பிரசண்டவாயுவைப்பார்க்கிலும் அதிகபலத்தையுடைய கொலையாளர்கள் அப்படியேகட்டித் தூக்கிக்கொண்டுபோய், மகாமேருவைப்போல அண்டபரியந்த முயர்ந்த இரணியனுடைய வாசலிலிருக்கின்ற கோபுரசிகரத்தின்மேலேற்றி, அங்கிருந்து தலைகீழாகவுருட்டித்தள்ளிவிட்டார்கள். அந்தச்சமயத்தில் பூமாதேவியானவள் இரணியனுடைய தமயனாகிய இரணியாக்ஷன் தன்னைப்பாயாகச்சுருட்டிக்கொண்டுபோனபோது அவனை வராகரூபமாயவதரித்துக்கொன்று தனதாபத்தை நீக்கிய பகவானுடையபக்தன் இவனாகையால், இவனுக்குவந்த ஆபத்தைத் தானே நீக்கவேண்டுமென்று எண்ணிப் பிரகலாதனிடத்தி லிரக்கத்தையுடையவளாகி, அவனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லாமல் மாந்தளிருக் கொப்பாகிய தன்கைகளினால் அவனை எதிரே ஏந்திக்கொண்டாள்.



அதை இரணியனறிந்து உடல்வெதும்பி, புத்திராபேக்ஷையென்பது கடுகளவுமில்லாமல், அந்தக்கள்ளனை யாவராலும் அசைக்கப்படாத பெரிய மலையுடனே நெருக்கிக்கட்டிக் கரைகாணக்கூடாத சமுத்திர வெள்ளத்திலே விட்டுவிடுங்களென்று ஆக்கியாபித்தான்.

## பிரகலாதனைப் பர்வதத்திற் கட்டிச் சமுத்திரத்திலிட்டமுத்தல்.

கவி.

ஒட்டிக்கொல்ல வுணர்ந்து வெகுண்டான், விட்டிட்டானல வென்று விரைந்தார்
கட்டிக்கல்லொடு காலிசையிற்போய், இட்டிட்டார்கட லின்னடுவெந்தாய்.

இவ்வண்ணமாக ஆக்கியாபித்தபோது அந்த அசுரர்க ளதற்கிசைந்து, பெற்ற தகப்பனே கொஞ்சமாவது பச்சாத்தாபமில்லாமலும்—இவன் பிள்ளையாகையால் இவனைக் கொல்லுகிறது நமக்குத் தர்மமல்லவென்று நினையாமலும் - இடைவிடாம கொட்டிக்கொல்லேற்பட்டாரேயென்று தாங்களும் தயையில்லாமல், ஓர்பர்வதத்துடனே சேர்த்துக்கட்டி வாயுவேகமாய்க் கொண்டுபோய்க் கடலினது நடுவிலே விட்டார்கள். அவ்வவ் வான்மாக்களிற்குள் அந்தரியாமியும், சகலகாரியங்கட்கு நடுவுநிலைமையுமாகிய ஏகநாயகன் திருநாமத்தை மனம் வாக்கு காயமென்னும் திரிகரணசுத்தியோடு இடைவிடாது உச்சரிக்கின்ற செய்கையையுடைய பிரகலாதனென்னும் புண்ணியனுக்குப் பாதாளபரியந்த மாழ்ந்த அந்தப் பெரியசமுத்திரமானது சிறிய மடுவைப்போலிருந்தது. அந்த நெடியமலையும் சுரைக்குடுக்கையைப்போல மிதந்தது. அலைமோதுகின்ற கடலிலே மூழ்காமல் தனக்குத் தெப்பமாய் மிதக்கின்ற பர்வதத்துடனே அந்தப் பாலன் மிதக்கின்றது எப்படியிருந்ததெனில், மகா பிரளயத்தின்மத்தியிலே ஆலிலையின்மேற் குழந்தை வடிவுகொண்டு சயனித்திருந்த ஜெகத் ரக்ஷகனைப்போ லிருந்தது. அப்போது பிரகலாதனானவன் தலையின்மேற் கைகூப்பிக்கொண்டு, தீர்க்கவைராக்கியத்தையுடையவனாகி, அந்த ஜெகத் ரக்ஷகனுடைய ஆயிரந் திருநாமங்களையுஞ் சொல்லி ஸ்துதி செய்யத் தலைப்பட்டான்.

## பிரகலாதன் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைத் துதித்தல்.

கவி.

அடியாரடியே னெனும்பார்வமலால், ஒடியாவலியா னுடையேனுளனோ
கொடியாய்குறியாய் குணமேதுமிலாய், நெடியாயடியே னிலைநேர்ந்திலையோ.

கள்ளந்திரிவா ரவர்கைதவனீ, உள்ளந்தெரியாத வுனக்குளவோ
துள்ளும்பொறியின் னிலைசோதனைதான், கெள்ளந்தருமின் னமுதேவிதியோ.

வருநான்முகனே முதல்வானவர்தாம், திருநான்மறையின் னெறியேதிரிவார்
பெருநாடெறிகின் றிலர்பேதைமையேன், ஒருநாளுனையெங் ஙனமுன்னுவனே.

செய்யாதனவோ வினைதீவினைதான், பொய்யாதனவந்து புணர்ந்திடுமால்
மெய்யேயுயிர் தீர்வதொர்மேல்வினைநீ, ஐயாவொரு நாளுமயர்த்திலையோ.

ஆயப்பெறுகீன் னெறிதம்மறிவென், றேயப்பெறுமீசர்க ளொண்ணிலரால்
நீயப்புறநிற்க நினைக்கிலர்கின், மாயப்பொறி புக்குமயக்குவரால்.

தாமேதனிநா யகராயெவையும், போமேபொரு ளென்றபராரர்தாம்
யாமேபரமென் றனரென்றவர்க், காமேபிறர்கின் னைதாருளரோ.

ஆதிப்பரமா மெனிலன்றெனலாம், ஓதப்பெருநூல்க ளுலப்பிலவர்ல்
பேதிப்பனசி யவைபோர்கிலையால், வேதப்பொருளே விளையாடுதியோ.

உம்போருகனு தியர்தாமரியார், எம்போலியரென் னிடிலெய்பலவாம்
கொம்போடடைபூங் கனிகாயெனினும், வம்போமரமொன் றெனும்வாசகமே.

நின்னிற்பிறிதாய் நிலையிற்றிரியா, தன்னிற்பிறிவா யினதாவெனினும்
உன்னிற்பிறிதா யினவோவுலகம், பொன்னிற்பிறிதா மியபொற்கலனே.

தாய்தந்தையெனுந் தகைவந்தனைதான், நீதந்தனைநீ யுறநெஞ்சினியான்
நோய்தந்தவனே நுவநீர்வுமெனு, வாய்தந்தனவின் செவிவாங்கிலையோ.

ஓ துஷ்டர்களை நிக்கிரகஞ்செய்கின்ற நாராயணனே! ஓ எவர்களாலும் குறித்தறியப்படாதவனே! ஓ தோஷகுணம் யாதொன்று மில்லாதவனே! ஓ விராட்சொருபனே! நானும்முடைய அடிமைக்கடிமையா யிருக்க வேண்டுமென்கின்ற விருப்ப முள்ளவனேயல்லாமல், மாயாயோகத்திலாழ்ந்து அழியாத அகங்காரத்தையுடையவனால் உமக்கு எதிர்க்கக்கூடியவேனோ? ஆயினும் என்னுடைய பக்தியினாகிய வலைக்கு நீர் இணங்கி அருள்வீரோ! வஞ்சகத்தைக்கொண்டு நடிக்கின்றவர் நீரானையால், உள்ளத்தினுள்ளே ரகசியங்களில் நீரறியாததுவுண்டோ? ஓ அமிர்தப்பிரவாகமாக விருக்கின்றவனே! இப்படிப்பட்ட துன்பங்களை நானடைவது ஊழின் சோதனைதானோ? பிரமேந்திராதியான சகலதேவர்களும் வேதஞ்சொன்ன நெறிப்படி நடக்கின்றார்களே யல்லாமல், அநேககாலமா யுமது மகிமையை அறியவில்லை. அப்படி யிருக்க நானுமது பிரபாவத்தை எப்படி யறிவேன்? அடியேன்செய்யாத பாபகர்மோ இல்லை. அவைகளெல்லாம் தவறாமல்வந்து என்க்குப் பிராப்தமாகின்றன. இது எதார்த்தந்தான். ஒருகாலத்தில் அந்தக் கர்மம் என்றுத்தமாவைவிட்டு நீங்கும்படி எத்தனப்பட்டாலும், அதை பெக்காலமும் என்றுத்தமாவுடனே சம்பந்தப்படும்படிச் செய்கின்ற செய்கையை நீர் மறவாதிருக்கின்றீர். ஆகையாலது உமதருளில்லாமல் எப்படி நிவர்த்தியாகும்? ஆராய்ந்து அடையப்பெறுகின்ற நல்ல நெறியானது தர்மமேயென்று பொருந்தப்பெற்ற தேவர்கள் அநேகருண்டு. நீர் அவர்களுடைய அறிவுக்கும் அப்புறத்தில் நிற்க, உம்மை யென்றுதவர்களா யவர்களெல்லாம் உம்முடைய மகாமாயையாகிய வலைக்குள் அகப்பட்டே மயங்குகின்றார்கள்.

தாங்களே தனிநாயகமாய்த்தோன்றி எல்லாப்பொருள்களுந் தங்களுக்குத் தெரியுமென்று நிச்சயித்த முன்னோர்களெல்லாம், நாமே பரத்துவமென்று எண்ணி யிருந்தார்கள். அப்படி எண்ணத்தக்கதாக அவர்களுக்கு அந்தப் பரத்துவஞ்சித்தித்ததா? சாக்ஷாத்காரம் உம்மையல்லாமல் வேறே யா



ரிருக்கிறார்கள்? ஒருசமயத்தார் காரணகாரியத்தைப்பற்றி ஜெகத்துக்கு நீரே ஆதியாகிய பரமென்றால், மற்றொரு சமயத்தார் தமதுமாயாயுக்கத்தால் அல்லவென்றுஞ்சொல்லலாம். இந்தப்படி பலவிதத்திலுஞ் சொல்லுகிறதற்குச் சாஸ்திரங்களும் அநேகமாயிருக்கின்றன. அந்தச் சாஸ்திரங்களெல்லாம் பேதிக்கும். நீரப்படிப் பேதிக்கமாட்டீர்.

ஓ வேதார்த்தமா யிருக்கின்றவரே! இப்படிக்கெல்லாம் நீர் கபடநாடகம் நடிக்கிறீரன்றோ? எல்லாம் நீராயிருக்கின்ற உமது பிரபாவத்தை யறியாத என்னைப்போ லிருக்கின்றவர்கள் ஒருதன்மையாக உம்மையே குறியாமல், பிரமனென்றும் - உருத்திரனென்றும் - மற்றும் பலபலதேவர்களென்றும் வெவ்வேறாகக் குறிப்ப தென்னதன்மை? கொம்பு - இலை - மலர் - கனி காய் - என்று சொல்லும்படி வெவ்வேறாய் அநேகமாயிருந்தாலும், விருக்ஷமொன்றேயென்கின்றசொல் இப்பொழுதுதான் புதிதாய்த்தோன்றினதோ? உலகம் உம்மாலிருந்து வெளிப்பட்டு விகாரமாய்த் தனக்குள்ளே பலபேதப்பட்டதானாலும், உமக்கு அந்நியமா யிருக்கின்றதோ? பொன்னினாலாகிய ஆபரணங்கள் அந்தப் பொன்னுக்கு அந்நியமாகுமோ? தாயாகியும் தந்தையாகியும் வந்து நீரே யென்னைப் படைத்தருளினீர். நீ ரெழுந்தருளி யிருக்கின்ற நெஞ்சத்தையுடையவன் யான். எனக்கு ஜனனமரணமாகிய நோய்களைத் தந்தவன் நீராதலால், அந்தநோய்களுக்கு நிவர்த்தியு நீரே சொல்லவேண்டுமென்று பிரலாபிக்கின்ற எனது வார்த்தைகளை நீர் உமதுசெவியில் வாங்கவில்லையோ? என்று பக்திபரவசனாய் இந்தப்படிக்குப்பலவிதத்திலும் தன்வாக்கில் வந்தவைகளைச் சொல்லிச்சொல்லி ஸ்தோத்திரஞ்செய்து வணங்கினான்.

அதை அசுரர்களா லறிந்த மகாபராக்கிரமசாலியாகிய இரணியன் அவனைக்கொண்டுவந்து என்முன்னே விடுங்களென்றான். அவ்வாறே சமுத்திரத்தில் மிதந்துகொண் டிருக்கின்ற பர்வதத்துடனே கட்டிய கட்டவிழ்த்துவிட்டு, அவனையழைத்துக்கொண்டுவந்து அவ்விரணியனெதிரில்விட்டார்கள். அப்படி விட்டமாத்திரத்திற் சீறியெரித்துப்பொங்கி, இவனுக்குவிஷங்கலந்த அன்னம் - பதார்த்தம் - பால் - பழம் - பஞ்சகச்சாயம் - இவைமுதலாகிய ஆகாரங்களை ஊட்டி, இவனைக் கொன்றுவிடுங்களென்றான். அவ்வாறே அநேகவகைப்பட்ட விஷான்னத்தையும் ஊட்டினார்கள். அவைகளையும் அவனுண்டு, பகவத் கடாக்ஷத்தினாலே ஜீரணம் செய்துகொண்டு சாவாமலிருந்தான். அதுகண்ட இரணியன் ஆச்சரியமாகி, இவனை இருப்புப் பணையின்மேல்வைத்துச் சம்மட்டிகளைக் கொண்டு கை - கால் - தலை - உடல் - இவை முதலானவைகளும் சிதைந்து பொடியாய்ப் போகும்படி அடியுங்களென்று ஆக்ஞாபித்தான்.

அவ்வண்ணமே அந்தக் கொலையாளர்கள் பிரகலாதனைக் கட்டிக் கொண்டுபோய்ப் பணையின்மேல் வைத்து, எத்தனையோ பெரிய இருப்புச்சம்மட்டிகளைக் கொண்டு பலமாக ஓங்கியடித்தார்கள். கொடியவாதகர்களாகிய அசுரகளிற் றுணைக்கில்லாதவர்கள் மூச்சுவிடாது ஓயாமல் அடிக்கவே, இவிபேறு

இவன் பிழைக்கிறதா? தனவிதுவுமில்லை: என்று சகல மானவர்களு மெண்ணும்படியாயிருக்கிற சமயத்தில், அந்தப் பிரகலாதாழ்வார் தனக்குள்ளே பகவானைத் தியானித்து, அந்தரியாமியா யிருக்கின்ற எம்பெருமானுக்குக் கைகளோ ஆயிரமல்ல: அநேகம். திருவடிகளோ அளவிறந்தன. திருக்கண்களோ எண்ணத்தொலையாதன. என்று இந்தப் பிரகாரம் பகவானுடைய அவயவ முதலாகிய ரூபநாமகுணங்களை ஒழியாது தியானித்து மனதுருகிக்கொண்டிருந்தானே யல்லாமல், தன்னை யடிக்கிறார்களென்கின்ற நினைவு சிறிதாவது கொள்ளவில்லை.

## இரணியாசுரன் பிரகலாதனைத் தானே கொல்ல முயறல்.

கவி.

ஊனேறுயிர்க்கே றுபடாவாயம், தானேயுடையன் றனியாமையினால்
யானேயிருண்ட வென்னக்கனலா, வூனேமுகவெங்கிடவந்தனனால்.

கேட்டீரோ அன்னை! இப்படி என்னசெய்தும் ஊறுபடாததுகண்ட இரணியன் ஏதோவொரு மாயையினால் இவன் உடலுஞ் சிதையாமல் உயிரும் பிரியாமலிருக்கத்தக்க உபாயத்தை யுடையவனா யிருக்கின்றானாகையால் இனி நானே கொல்லுகிறே னென்று, கோபித்து, உலகங்களெல்லாம் நடுங்கும்படிப் பிரகலாதன்சமீபத்தில் வந்தான். அவ்வண்ணங்கொல்லவந்த பிதாவைப் பிரகலாதன் வணங்கி, ஐயா! என்னுயிரை வாங்கும்படி நீர் வருத்தப்படவேண்டாம். இது உம்மாலே சாத்தியமாகத்தக்கதல்ல, சகல புவனங்களையும் உண்டாக்கிய ஸ்ரீமந்நாராயணனே கொள்ளும்படி யிருக்கின்றதென்று சொன்னான். அதைக்கேட்ட இரணியாசுரன் - அடா பயலே! உலகங்களை யுண்டாக்கினவ னென்று சொன்னாயே: உலகங்களை யுண்டாக்கினவனா? என்பெயரையோது தியானித்துக்கொண்டிருக்கின்ற திரிமூர்த்திகளென்று சொல்லப்பட்டபிரமனா? விஷ்ணுவா? உருத்திரனா? அல்லது முனிவர்களா? அல்லது தங்களுக்குள்ள வைகளையெல்லாம் என்னிடத்தில் தோற்றுப்போ யிருக்கின்ற தேவர்களா? அல்லது மற்றவர்களிலேயோ அதனையெனக்குத் தெரியச்சொல்லடா வென்று சொல்லி, அப்படிப்பட்டவனொருவன் உண்டாயிருந்து அவனைக்காட்டுவானாற் காணலாமென்று நினைத்தவனாய், தனக்குக்கோபமுண்டெழுந்தும் தன் பிள்ளையைக் கொல்லவில்லை. அப்பொழுது பிரகலாதன் அவனைப்பார்த்து, ஐயா பிதாவே! நீர் அவனுமொன்றுங் கேட்டீரல்லவோ? அவன் யான்குறித்தபடியே இந்தச்சர்வாண்டங்களாகிய உலகங்களைப் படைத்தவனும், அவைகளுக்குள் நானாபேதமாகிய உயிர்களைப் படைத்தவனும், அந்த அழியாத உயிர்களிடந்தோறும் அந்தரியாமியா யிருந்து அங்கங்கே வாசஞ்செய்கின்றவனும், பூவினிடத்தில் மணமும் எள்ளினிடத்தி லெண்ணெயும்போல் அளவில்லாத பலபொருள்களிலுங் கலந்து நிறைந்திருக்கின்றவனும், அளவில்லாத வேதங்களெல்லாம் பன்னெடுங்காலந்தொட்டுப் புகழ அப்புகழை மேற்கொண்டவனுமாகிய அரியென்பவன்தான். அவன் என்கண்ணினால் நோக்கிக் காண்பதற்கு



எவ்விடத்திலு மிருக்கின்றான். உம்மிடத்தில் நான் அவனைக்குறித்து அன்புடனே சொன்னால், நீர் ஒன்றாவது உறுதியாகக் கொள்ளவில்லை, ஆகையால், உம்முடைய கண்களால் நோக்கிப்பார்ப்பதற்கு உமக்கு மூத்தவனாகிய இரணியாக்ஷனுடைய உயிரைமாய்த்த அத்தாமரைக் கண்ணன் அத்தனை இலேசாய்க் கிடைக்கின்றவனோ?

## பிரகலாதன் சுவாமியின் பெருமை கூறல்.

கவி.

மூன்றவன் குணங்கள்செய்கை மூன்றவனுருவமூன்று
மூன்றுகண்சுடர்கள்சோதி மூன்றுதன்னுலகமூன்று
தோன்றலுமிடையுமீறுந் தொடங்கியபொருள்களெல்லாம்
சான்றவனிதுவேவேத முடிவதுசரதமென்றான்.

படைத்தல், காத்தல், அழித்தலென்னும் மூன்றும் அவன் தொழில்கள். அருவம், உருவம், அருவுருவம் என்னுமூன்றும் அவனுருவங்கள். சூரியன், சந்திரன், அக்கினி என்னு முச்சுடர்களும் அவனுடைய நேத்திரங்கள். சுவர்க்கம், மத்தியம், பாதலமென்னு மூன்றுலகமும் அவனுடைய உலகங்கள். முதல், இடை, கடை, என்னு மூன்றிடமும் அவனிடங்கள். உலகங்களிலுள்ள சராசரப்பொருள்கட்கெல்லாம் அவனே சாக்ஷியா யிருக்கின்றான். இதுவே வேதத்தின் முடிவு. இதுவே சத்தியம். என்று சொன்னான் பிரகலாதன்.

இப்படிச் சொல்லவே இரணியாசூரன் தன்னுடைய தந்தங்கள் பிரகாசிக்கும்படி கலகலவென்று நகைத்து, அடா பயலே! உலகத்திலுள்ள பலபொருள்களி லெல்லாம் அந்த அரியென்கிற ஒருவன் புகுந்து நிறைந்திருக்கின்றானென்று சொன்னாயே: அப்படியானால் நான்கண்டு, பின்பு அதற்குத்தக்கபடி செய்கிறேன். அப்படியே அந்தத் திருடனிருப்பானாகில் அவனுடைய நிலைமையைத் திருஷ்டாந்தப் படுத்துக பார்ப்போமென்று சொன்னான்.

## அரியென்பவர் எங்குநிறைந்தவர் இத்தூணிலுமிருப்பார் சோதனைசெய்துகொள்ளென்று பிரகலாதன் இரணியனுக்குச்சொல்ல அவ்விரணியன் பதிலுரைத்தல்.

கவி.

சாணினுமுளனோர்தன்மை யணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக் குன்றினுமுளனிந்நின்ற
தூணினுமுளன்முன்சொன்ன சொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றா னன்றெனக்கனகன்சொன்னான்.

அதற்குப் பிரகலாதன் - ஐயா! அந்தப் புருஷோத்தமன் சாணிலுமிருக்கின்றான். அணுவிலு மிருக்கின்றான். அந்த அணுவை அநேகங்கூறாகச் செய்யப்பட்ட பரமாணுவிலு மிருக்கின்றான். மகமேருவிலு மிருக்கின்றான். இவ்விடத்தில் நிற்கின்ற தூணிலுமிருக்கின்றான். நீர் சொன்னசொல்லிலு மிருக்கின்றான். அவனில்லாதபொரு ளொன்றுமில்லை. அந்த அதிசயத்தைப்

பார்க்கவேணுமானால், சீக்கிரத்திற் சந்தேகமில்லாமற் பிரத்தியக்ஷமாகச் சோதித் தறிந்துகொள்ளுமென்றான்.

இவ்விதமாகச் சொல்லவே இரணியன் நல்லதென்று சம்மதித்துப் பின்னுஞ்சொல்லுகின்றான். தேவர்களுக்கும் உனக்கும் ஒத்தவனுகி இந்தவுலகமெங்கு நிறைந்திருக்கின்ற அந்தமகாவிஷ்ணுவை இங்கேநிற்கின்ற தூணினிடத்திலிருக்கக்காட்டுக. காட்டாமற் போவாயானல் மஸ்தகத்தையுடைய மதயானையைச் சிங்கமானது அறைந்துகொல்வதுபோல உன்னைநான் கொன்று, உன்னுதிரத்தைக் குடித்து, உடலையுந் தின்றுவிடுவேனென்று சொன்னான். அதுகேட்ட அறிவிலே சிரேஷ்டனாகிய பிரகலாதன் சொல்லுகின்றான்.

பிரகலாதன் உறுதிமொழி கூறல்.

கவி.

என்னுயிர்நின்னாற்கோறற் கெளியதொன்றன்றியான்முன்
சொன்னவன்சொட்ட தொட்ட விடத்தொறுந்தோன்றானுயின்
என்னுயிர்யானேமாய்ப்பல் பின்னும்வாழ்வுகப்பலென்னின்
அன்னவற்கடியேனல்லே னென்றனனறிவின்மிக்கான்.

கேளுமையா பிதாவே! என்னைக் கொல்லுகிறேனென்று அடிக்கடிச்சொல்லுகின்றீர்: என்னுயிரானது உம்மாலே கொல்லப்படுகிறதற்கு அத்தனை யெளிதாயிருக்கின்றதல்ல. நானுமக்கு முன்னேசொன்ன சர்வேஸ்வரன் நீர் குறித்த இடங்களிலெல்லாம் அவசியம் காணப்படுவார். அவ்வண்ணம் காணாமற்போவாரேயாகில் என்னுயிரை நானே மாய்த்துக் கொள்ளுகிறேன். அப்படிமாய்க்காமல் பின்னும் பிராணனுட னிருப்பேனானால், அவருக்கு நான் அடிமையல்ல. எனக்கவராண்டவனல்லவென்று பிரதிக்ஞை பண்ணினான்.

இரணியன் பராக்கிரமத்தோடு எதிர்நின்ற தூணைத் தனது கையாலறைய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி நரசிம்மாவதாரங்கொண்டு அத்தூணிற் றோன்றுதல்.

கவி.

சைதிறந்திலங்கப்பொங்கி நின்றுநகன்றென்னநக்கு
விசைதிறந்துருமுவீழ்ந்த தென்னவோர்தூணின்வென்றி
இசைதிறந்தமர்ந்தகையா லெற்றினனெற்றலோடும்
திசைதிறந்தண்டங்கீறிச் சிரித்ததுசெங்கட்சீயம்.

ஐயா இலங்கையையாளும் இராக்ஷசேந்திரனே! அப்பொழுது இரணியாசுரன் தன்னுடைய வக்கிரதந்தங்கள் பிரகாசிக்கும்படிச் சிரித்து, காலாக்கினிபோல மனம்பொங்கி, நல்லது: நல்லது: என்றுசொல்லி இடிவிழுந்தது போல அதிக ஆரவாரமாக எதிரேயிருந்த சொர்ணமயமாகிய நெடியதூணைத் தனது வயிரக்கடகங்களை யணிந்த ஜெயம்பெற்ற கையினால் ஓங்கி உக்கிரத்துடனே விசைகொண்டு அறைந்து, இதில் எங்கே காட்டாவென்றான். அப்படி அறைந்தமாத்திரத்தில் அந்தத்தூணினின்று ஒருபேரோசையானது எழுந்து, திசைகளைக்கிழித்து, அண்ட முகட்டையும் பிளந்துகொண்டு வாடு



ருவும்படிச் சிவந்தகண்களையுடைய சிங்கமானது லோகாலோகங்க ளெல்லாங் கிடுகிடாய்க்கும்படியாக மிகவும் உக்கிரமாய்ச் சிரித்தது.

சர்வகாலமும் சதுர்முகப் பிரமனாதி தேவர்களும் தேடியுங் காணப்படாத அதிதூரத்திலிருக்கின்ற சர்வக்ஞனும், சர்வபரிபூரணனுமாகிய எம்பெருமான் அந்தஸ்தம்பத்திற் சிரித்தவுடனே, முன்புபரமாத்துமனை நான் எப்படியும் உமக்குத் தேடிக்காண்பிக்கிறேனென்று இரணியனுக்கு உறுதியாகச் சொல்லியிருந்த மகாக்கியானியாகிய பிரகலாதாழ்வான் எழுந்து கூத்தாடினான். ஆனந்தக் கண்ணீர்விட்டழுதான். அவன்விஷயமாயிருக்கின்ற திவ்வியகீர்த்திகளைப் பாடினான். சிரசின்மேற் கைகளை அஞ்சலிபண்ணிக்கொண்டான். சாஷ்டாங்கமாகச் சேவித்தான். மான்கன்றுபோலத் துள்ளித்துள்ளி உலகமெல்லாம் ஓடியோடித் திகைத்தான்.

அந்தச்சமயத்தில் இரணியன் கொக்கரித்து, அடடா! தூணிலிருந்து சிரித்தனையே: நீயாரடா! இந்தப்பையல்சொன்ன விஷ்ணுதானோ? எனக்குப் பயந்து ஓடிப்போ யிதுவரையிலும் ஒளித்துக்கொண்டிருந்த சமுத்திரத்தினிடம் பேதமென்றோ இப்பொழுது இந்தத் தூணினிடத்தைத் தேடி இதிலே வந்து ஒளித்தாய். ஆகட்டும்: என்னுடனே யுத்தம்பண்ணத்தக்க வல்லமையை யுடையவனானால் தூணைவிட்டுச் சீக்கிரமாகப் புறப்படு: புறப்படு: ஏன் காலதாமசஞ் செய்கின்றாய்? என்றுசொல்லிப் பின்னும் அதட்டியார்ப்பரித்தான். அப்பொழுது அண்டம்வெடித்ததுபோலப் படீரென்று அந்தத் தூணும்பிளந்து, அதிலிருந்து உக்கிர நரசிங்கமானது பிறந்தது. பிறந்தவுடனே வளர்ந்து, அஷ்டதிக்குகளையும் பகிரண்ட முதலானவைகளையும் அளந்துகொண்டேபோய் எங்கும் நிறைந்தது.

ஆயினும் பகிரண்டத்திற்கு அப்பால் நடந்த செய்தி என்னமோ அந்த யாரறிந்து சொல்லுகிறவர்கள்? ஆனலாகாசம் கீழுமேலும் கிழிந்தது: பரிமளம்பொருந்திய துளபமாலையை யணிந்த நரசிங்கமூர்த்தியின் திருவுருவம் வானத்தை மூடுருவப்போனதை நாமறிடமாட்டோம். திருவடித் தாமரைகள் பூமியிலே தோயும்படி நின்றபொழுது நெடிதாகிய அண்டமுகட்டில் சத்தியலோகத்திலிருந்த பிரமதேவன் அன்றுதான் அந்த நரசிங்கப்பெருமானுடைய திருவுந்திக் கமலத்தில் உற்பத்தியானவன்போல விளங்கியிருந்தான். அப்படிப்பட்ட நரசிங்க சொரூபத்திற்கு எத்தனையோ கைகள், எத்தனையோ கால்கள், எத்தனையோமுகங்க ளுண்டாயிருந்தன. அவைகளைக்குறித்து இவ்வளவென்றெண்ணிக் கணக்கிட்டுச் சொல்லத்தக்க விவேகிகளு முண்டோ?

உலகமெல்லாம் பரவியிருந்த அசுரசேனைகள் ஆயிரங்கோடி வெள்ளமுமாண்டுபோம்படித் தனித்தனியே நரசிங்கமூர்த்தியின் கைகள் அள்ளிக்கொண்டன. அந்தச்சகஸ்திரகோடி வெள்ளமாகிய அசுரர்களுக்குள்ளே ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு திருமுகமும் இரண்டிரண்டு கைகளுமுள்ளவ

ராயினர். அன்றியும்-ஒவ்வொரு சிரசுக்கு மும்மூன்றுகண்களுமாயங்கங்கே காணவும்; திருமேனியில் முடங்கிய ரோமங்களசையும்பொழுது அவைகளிலிருந்து உண்டாகிய காற்றானது பிரளயகாலாக்கினியை அவிக்கவும், சுவாசம் பிரசண்டமாருதத்தை அடக்கவும், கண்களினின்று ஜொலிக்கின்ற கோபாக்கினியானது சமுத்திரஜலத்தைச் சுவறச்செய்யவும், வாயிலுள்ள நீர் சகலமாகிய புவனங்களிலு நிரம்பவும், பல்லாயிரங்கோடி யண்டங்களும் நெருங்கிய ரோமங்கள்தோறு முட்டைகளைப்போ லொட்டிக்கொண் டிருக்கவும், இத்தப்படி கோரவிகாரமாகிய சொரூபத்துடனே உலகமெங்கு மிடமில்லாமல் நிறைந்து தோன்றினர். இப்படித் தோன்றிய அந்த நரசிங்கமூர்த்தியானவர் ஊழிக்காலத்தில்சகலவுயிர்களையும் திருவுதரத்தில்வைத்து வாழ்விப்பதுபோல, பிரமன் முதலாகிய தர்மாத்மாக்களை யெல்லாம் அப்பொழுது தமதுகர்ப்பத்தினிடத்தில் வைத்துத் தாயைப்போ விரக்ஷித்துக்கொண்டனர்.

## நரசிங்கமூர்த்தி அசுரப்படைகளை வதைத்தல்.

கலி.

பேருடையவுணர்தம்மைப் பிறையெயிற்றடக்கும்போரப்
பாரிடைத்தேய்க்குமீளப் பகிரண்டத்தடிக்கும்பற்றி
மேருவிற்புடைக்குமாளவிரல்களிற்பிசையும்வேலை
நீரிடைக்குமிழிபூட்டு நெருப்பிடைச்சுரிக்கநீட்டும்.

அங்குள்ள அசுரர்கள்மேல்தாவி, அநேகரை யெடுத்து அர்த்தசந்திரனுக்கொப்பாகியதம்முடைய வக்கிரதந்தங்களுக்குள் அடக்குவார். அநேகரைவாரிப்பூமியிலிட்டுத் தேய்ப்பார். அநேகரைத்தூக்கிப் பகிரண்டத்தில் மோதுவார். அநேகரைப் பிடித்து மகமேருவிலடிப்பார். அநேகரை விரல்களினாற் பிசைவார். அநேகரைக் கடல்நீருக்குள் அமிழ்த்திக் குமிழியெழும்படிச் செய்வார். அநேகரை வடவாமுகாக்கினியிலிட்டு வாட்டுவார். அநேகரை யிருபாதியாகக்கிழிப்பார். அநேகரைக்குத்தி வாயைப்பிளப்பார். அநேகரை நகங்களாற்கீறித்தோலுரிப்பார். அநேகரைக்கண்களைத் தோண்டி யெறிவார். அநேகரை வயிற்றைப்பீறிக் குடலையறுப்பார். அநேகரைப் பசையற்றுப்போம்படி நசுக்குவார். நகச்சந்திற் பதுங்கியிருப்பவர்களை நகத்தினாலேயே அழுத்திக்கொல்லுவார்.

அவ்வசுரர்களுக்கு வாகனமாயிருக்கின்ற தேர்கள் யானைகள் குதிரைகள் முதலானவைகளை உடல்கள் பின்னப்படாமல் உயிரைமாய்த்து விழுங்குவார். ஸப்த சமுத்திர ஜலங்களையும் அவைகளிலுள்ள பெருமீன் சிறுமீன்களுடனே மொடமொடவென்றுகுடிப்பார். ஏழுமேகங்களையும்இடிகளுடனே உட்கொள்ளுவார். இந்தக்கோரத்தைக்கண்ட தர்மதேவதையும் இனிமேது சுவாமிக்குக் கோபம் தணியுமோவென்று அஞ்சிச் சலிப்புற்றது. பின்னுஞ்சில அசுரர்களைச் சக்கரவாளகிரியோ டெற்றுவார். சில அசுரர்களைஅஷ்டகுல பர்வதங்களின்மே லடித்துக்கொல்லுவார்.



சில அசுரர்களை அஷ்டதிக்குகளிலும் அடங்கியிருக்கின்ற இருட்பிரதேசத்திற் கொண்டுபோய் தமது பெரியகையாலரைத்துத் தேய்ப்பார். சில அசுரர்களை மலையைப்போல உருண்டு விழும்படியாகத் தமது கையினுனிநகத்தாற் றலைகளைக்கிள்ளி யெறிவார். சில அசுரர்களைவாரிச் சூடுபிறக்கும்படித்தேய்ப்பார். சில அசுரர்களைக் கொல்லுகின்ற முறைமைப்படி கொல்லுவார். சில அசுரர்களுடைய உயிரைப்பறித்துப் பானம்பண்ணுவார். சில அசுரர்களைப்பிடித்துக் கடல்நீர் ஆகாசத்திலெழுந்து தாவும்படி யெறிந்து அக்கடலைநிறையத்தூர்த்துவிடுவார். இந்த நரசிங்கமூர்த்தியினுடைய கைகள், மூன்றுலோகங்களிலுள்ள அவுணகோடிகளில் ஒருவரையுந்தவிராமற் பிடித்துக்கொன்று, அவ்வவுணஸ்திரீகளுடைய கருப்பமு மழிந்துபோகும்படியாகச் செய்து, இந்த அண்டத்தினு மவுணரில்லாமற்கொன்று அப்புறத் தண்டங்களிலுந் தேடித்தடவிக்கொண் டிருந்தன.

இந்தப்பிரகாரமாக நரசிங்கப்பெருமான் இரணியனையும் அவன்புதல்வனாகிய பிரகலாதாழ்வானையுந் தவிர மற்ற வசுரர்கூட்டங்களையெல்லாம் ஓரிமையளவுகாலத்தில் கொன்றதை அவ்விரணியன் பார்த்து, தனது வலதுகையில் வச்சிராயுதத்தை யுருவிக்கொண்டு, இடதுகையில் ஆகாசத்தையு மறைக்கும்படியான கேடகத்தைப்பிடித்து, தேவர்களுடைய மனது தீயும்படியாகவும்- சப்த சமுத்திரங்களும்வற்றி மணல்காணும்படியாகவும்-அஷ்டகுல பர்வதங்களு நடுங்கும்படியாகவும் கெர்ஜித்து, உயிருள்ள மகமேருவைப்போல உதட்டை மடித்துக் கடித்துக்கொண்டு நின்றான். அவ்வாறுநின்ற தன்பிதாவைப் பெரியோர்களெல்லாந் துதிக்கும்படியாக நிற்கின்ற பிரகலாதாழ்வான் பார்த்துச் சொல்லுகின்றான்.

ஐயா திரிபுவனங்களையும் அரசாக்ஷிசெய்யும் ஏகசக்ராதிபதியே! இப்போது இந்நரசிம்மமூர்த்தியைப் பார்த்தும் நீர் உம்முடையமனதில் ஒன்றுமாலோசிக்கவில்லையல்லவா? இந்தக்கருணைக்கடலாகிய நரசிம்மமூர்த்தியை வணங்கும். நீர் வணங்குவீராகில் அவரிடத்தி லிதுவரையில் நீர்செய்திருக்கிற அபராதமாகிய குற்றங்களையெல்லாம் அவர் பொறுத்துக்கொள்ளுவார், என்றுசொல்லக்கேட்ட இரணியன் அதிகஉக்கிரமாகிய கோபங்கொண்டு, அடா சிறுபயலே பிரகலாதனே! இதைக்கேள், உன் கண்முன்பாக வெளிப்பட்டிருக்கின்ற இந்த நரசிங்கத்தினுடைய தோள்களையும் - கால்களையும் - வெட்டித்தள்ளி, உன்னையும் இரண்டுதுண்டமாகத் துண்டிட்டு, என்னுடையவாளை வணங்குவேனே யல்லாமல்; இந்த நரஹரியை வணங்குவேனோ? எனது தேவிமார்களுடைய ஊடல்காலத்திலும் நான்வணங்கினதை நீகண்டதுண்டோ? என்று அண்டங்களெல்லா நடுங்கும்படியாகக் கடகடவென்று சிரித்தான்.

அப்படிச் சிரித்த வாயிலும், கையிலும், அக்கையிற்பற்றியிருக்கின்ற வாளிலும், நடக்குங்காலிலும், குபுகுபுவென்று தீப்பொறிபறக்கும்படியாக அதிககோபத்தோடு தேவர்களெல்லாரையும் ரக்ஷிக்கும்படியாக வந்த அந்த நரசிம்

மத்தை எதிர்க்கவந்தான். இப்படி வந்தமாத்திரத்தில் கொடுமைகளைச் செய்துகொண்டிருக்கின்ற அசுரர்களுடைய தந்திரங்களுக்கெல்லாமேலாகியஉபாயங்களைச்செய்யும் அனேகவித சாமர்த்தியமுள்ள அந்தநரசிம்மமூர்த்தியானவர் கணித சாஸ்திர பண்டிதர்களாலும் கணக்கிட்டு இவ்வளவென்று தொகை சொல்லுதற்கரிதான தம்முடைய எண்ணிறந்தகைகளினலும் கால்களினலும் அந்த இரணியாசுரனைச்சூழ்ந்து கட்டிப்பிடித்தார். இரணியாசுரனும் சுவாமியினுடைய உக்கிரத்தைக்கண்டு அஞ்சாமலும் தன்னைக்கொல்லுவாரென்ற எண்ணத்தைச் சற்றுமாலோசியாமலும் தனது பூரணமாகிய பலத்தோடுசேர்த்து இறுகக்கட்டிப்பிடித்தான். இந்தப்படிக்கொருவரையொருவர் கட்டிப்பிடித்து எல்லாவுலகங்களுக்குமேலாய் ஒருவருங்காணுதபடி உயர்ந்துநிற்கின்றதன்மையைக் காணும்போது, யாவருங்கண்டு பயப்படும்படியான தோற்றத்தையுடைய இரணியாசுரன் மேருமலைக்குச் சமானமாகவும், இந்த நரசிம்மமூர்த்தி மற்ற அஷ்டகுலாசலங்களுக்குச் சமானமாகவுங்காணப்பட்டார்கள்.

மேலும் இந்தநரசிம்மமூர்த்தியானவர் தமது மிகுந்த கர்ஜனையாலும், வேலாயுதம்போன்ற நகங்களையுடைய அநேகமாயிரங் கைகளாலும், சப்திக்கின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலானது பிரமலோகத்தைத் தாவிக்கொண்டுபோகிறதுபோற் காணப்பட்டார். இரணியன் அச்சமுத்திரத்திற்கு நடுவிலகப்பட்ட மேருமலைக்குச்சமானமாகவிருந்தான். இப்படி இருவருமிகுந்த உக்கிரத்தோடு யுத்தஞ்செய்யும்போது, இந்தநரசிம்மமூர்த்தியானவர் தமதொருகையினலே இரணியனுடைய இரண்டுகால்களையும் சேரப்பிடித்துவாரி, அவனுடையவாளும்—கைகளும்—தலையும்—பிரமலோகத்தின்மேலாகிய அண்டச்சுவரில் உரைபடவும், சூரியனென்பவன் தன்னுடைய பரிவேடத்தோடு சுற்றிவருகிறதைப்போலத் தோன்றவும் கிறுகிறென்று சுழற்றினர். அக்காலத்தில் அந்த இரணியனுடைய இரண்டுகாதுகளில் தொங்கிக்கொண்டிருந்த குண்டலங்களிரண்டும், கிழக்கிலொன்றும் மேற்கிலொன்றுமாக விழுந்தன. அவைப்பார்க்கும்போது சூரியனென்பவன் உதயகாலத்திலும் அஸ்தமனகாலத்திலும் பிரகாசிக்கின்ற காலைமாலைகளின் கிரணங்களைப்போன்றிருந்தன. இந்தப்பிரகாரமிவர்களிரண்டுபேருஞ்செய்த யுத்தப்பெருமையில் சுவாமிக்குவந்த கோபத்தையும் அவர்செய்யும் யுத்தத்தையும் இத்தன்மையதென்று யாவராற் சொல்லக்கூடும்?

### நரசிம்மமூர்த்தி இரணியனுடைய மார்பைப்பிளந்து மாய்த்தல்.

கவி.

ஆயவன் றன்னைமாய னந்தியினவன்பொற் கோயில்
வாயலின்மணிக்கவான்மேல் வயிரவாளுகிரின் வாயால்
மீயெழுகுருதிபொங்க வெஞ்சினவீர மார்பு
தீயெழப்பிளந்துநீக்கித் தேவர்களிடுக்கண் டீர்த்தான்.



இப்படி யுத்தஞ்செய்கின்ற நரசிம்மமூர்த்தியானவர் அந்திநேரத்தில் அங்குள்ள கோபுரவாசற்படியில் தமது திருத்தொடைகளின்மேல் இரணியாசுரனை இறுக்கிப்பிடித்துக்கொண்டு, திக்குகள்தோறுமசைகின்ற தமது கையிலுள்ள வச்சிரம்போலும் பலமுங்கூர்மையும்பெற்ற நகங்களினல் அவன்மணிமார்பை இரண்டாகப்பிளந்து கண்களில் அக்கினிப்பொறி பறக்கும்படி அவனுடைய உதிரங்களையெல்லாம் பூமியின்மேற் சிந்தவொட்டாமல் வாயினலுறிஞ்சிக் கொப்புளித்து, அவனைச் சம்மரித்து, அவனுல்தேவர்களுக்கு உண்டாயிருந்த துன்பங்களைப் போக்கினர்.

### பிரமனுதிதேவர்கள் ஸ்ரீநரசிம்மமூர்த்தியைத் துதித்தல்.

கவி.

முக்கணனெண்கணனு முளரியாயிரக்கணனும்
திக்கினுந்தேவரோடு முனிவரும்பிறருந்தேடிப்
பக்கநாடறிகுறுமற் றிரிகின்றார்புகுந்துமொய்த்தார்
எக்கணுற்காண்டுமெந்தை யுருவமென்றிரங்கினின்றார்.

கேட்டீரோ அண்ணா! அந்தச்சமயத்தில் இரணியாசுரனுக்குப் பயந்தோடிப்போய்த் தாங்களிருந்த விடந்தெரியாமல் மறைந்திருந்த மூன்று கண்களையுடைய உருத்திரனும்—எட்டுக்கண்களையுடைய பிரமதேவனும்—ஆயிரங்கண்களையுடைய இந்திரனும்—திக்குப்பாலர்களும்—மற்றெல்லாத் தேவர்களும்—சமஸ்தரிஷிக்கூட்டங்களும்—மற்றுமுண்டான சகலமானபேர்களும் ஒன்றுசேர்ந்து, எவ்விதத்திலுந் தேடித்தேடியெங்கும் காணப்படாதவஸ்து வினைத்தமையால், அவ்விடத்தில்வந்து சூழ்ந்துகொண்டு, நம்முடைய ரக்ஷகராகிய இந்தநரசிம்மமூர்த்தியின் பயங்கரமான ஸ்வரூபத்தைக்கண்டு கண்கூசி, எந்தக்கண்களாற் காண்போமென் றிரக்கமுற்றவர்களாய் நிற்கவும்; பார்த்தபேர்களுடைய கண்களுக்கு முன்பாகத் தமது திருமுகமும்—திருக்கைகளும்—திருமேனியும்—திருவடிகளுமாய்த்தோன்றி, எல்லாவிடங்களிலுந் தாமாய்நிறைந்து, வாக்கினலு மனத்தினலு மறிவினலும் அளவிடக்கூடாதபடி திருவடிகள் பாதலத்திற்குக் கீழாகவும்—இடைப்பிரதேசம் இந்திரனுதியோருங் காணவரிதாய்படியாகவும்—திருமுடி சத்தியலோகவாசியான பிரமதேவனுலும் அளவிட்டுக்காண முடியாததாகவும், பெரிய உருவத்துடனே சேவைசாதிக்கின்றதைக்கண்டு சமஸ்தமான அத்தேவர்களும் ரிஷிகளும், பயந்துநிற்கவும்; இப்படி பல்லுக்குப்பல் இடைவெளி ஆயிரங்காதமாகவும், கோடானுகோடி திருமுடிகளையுடையவராகவும், அளவிடுதற்கரிதான பெரிய திருமேனியையுடையவராகவும், பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற அந்த நரசிம்மமூர்த்திக்கெதிரே கமலோற்பவனுன பிரமதேவன்வந்துநின்றுகொண்டு, அவருடைய புகழையெடுத்துச் சொல்லத்தொடங்கினன்.

### பிரமதேவன் தோத்திரஞ்செய்தல்.

கவி.

தன்னைப்படைத்ததுவுந் தானேயெனுந்தன்மை
பின்னைப்படைத்ததுவே காட்டும்பெருமை

யுன்னைப்படைத்தாய்நீ யென்றுனுயிர்ப்படைப்பான்
என்னைப்படைத்தா யெனுமிதுவுமேதாமோ.

பல்லாயிரங்கோடி யண்டம்பனிக்கடலுள்
நில்லாதமொக்குளெனத் தோன்றுமானின்னுழையே
எல்லாவுருவமுமாய் நின்றக்காலிவ்வுருவம்
வல்லேபடைத்தால் வரம்பின்மைவாராதோ.

பேழைபொருபொருட்கே பல்வகையாற்பேர்த்தெண்ணுந்
தாரைநிலைப தனியைபிறரில்லை
யாரைப்படைக்கின்ற தியாரையளிக்கின்ற
தியாரைத்துடைக்கின்ற தையாவறியேமால்.

நின்னுளேயென்னை நிருமித்தாய்நீயல்லா
தென்னுளேயப்பொருளு மியாவரையும்யானீன்றேன்
பின்னிலேன்முன்னிலே னெந்தைபெருமானே
பொன்னிலேதோன்றியதோர் பொற்கலனே போல்கின்றேன்.

ஓ சர்வஜீவதயாபரமூர்த்தியே! தேவரீருடைய கல்யாணகுணங்கள் ஒவ்வொன்றுந் தன்னைத்தானே சிருஷ்டித்துக் கொண்டதென்று நினைப்பதற்கு அக்குணங்கள் தேவரீருடைய திருவருளன்றியில் தன்னைத்தான் பிரத்தியேகமாகச் சிருஷ்டித்துக் காட்டுமேயானால் அந்தப் பெருமையை உடையதாகும். அப்படிக்கில்லாமல் தேவரீரே உம்முடைய திருவருளையும், அத்திருவருளுக்குப் பிரகாசமாகத் திவ்யகல்யாண குணங்களையுஞ் சிருஷ்டித்தீராகில்; உலகஜீவகோடிகளைச் சிருஷ்டிக்கும்படி என்னை நீர் சிருஷ்டித்தீரென்னுஞ் செய்கை யெத்தன்மைத்தாகும்? பல்லாயிரங்கோடி அண்டங்களும் குளிர்ந்த சமுத்திரத்தில் தோன்றி அழியுங் குமிழியைப்போல உம்மிடத்தி லுற்பவித்தழியும். எல்லா வுருவங்களும் நீரேயாயிருக்க, அவற்றை யெல்லாம் அழிக்கும்படியான இவ்வுருவத்தையும் வகித்துக்கொள்ளுவீரேயானால் அனவஸ்தா தோஷமென்கின்ற ஒரு குறைவு வரமாட்டாதோ?

நீராகிய வஸ்துவுக்கே பலபெயரிட்டுப் பேதித்து நினைக்கும்படியானகாட்சியை யுடையவர் நீரொருவரேயன்றி வேறொருவரில்லை யாதலால், நீராரைச் சிருஷ்டிக்கின்றீர்? யாரை இரக்ஷிக்கின்றீர்? யாரைச் சம்மரிக்கின்றீர்? அம்மாயாலீலையை நாங்களொன்று மறியமாட்டோம். உமது உந்திக்கமலத்திலடியேனையுண்டாக்க, உமதுகிருபையுடையமனத்தினு லென்னிடத்தினின்றும் எல்லாப்பொருள்களையும் எல்லாஜீவர்களையும் யான்சிருஷ்டித்தேன். உம்மையன்றி எனக்கொருகாரணமுமில்லை. காரியமுமில்லை. பிரமருத்திரேந்திராதியர்களான எங்கள் பிதாவாகிய ஓ பெருமானே! ஒரு பொன்னினுண்டான பூஷணங்களைப் போல்வோமேயன்றி எமக்கு யாமே முதலல்ல. நீயே யெவருக்குமுதலாகும். என்றிப்படியாகப் பிரமதேவனும்—மற்றத்தேவர்கள்முதலியயாவர்களுஞ் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து இரண்டுபக்கங்களிலு நின்றுகொண்டிருக்க, சக்கரதாராகிய சாக்ஷாது ஸ்ரீவைகுண்டபதியானவர் அடங்



காத தமதுகோபமாறி, இப்பொழுதே லோகமெல்லா மழிந்துபோகுமென்று மனமடுங்கிக்கொண்டிருக்கின்ற பிரமருத்திரேந்திராதி சமஸ்ததேவர்களையும் பார்த்து பயப்படாதேயுங்களென்று கிருபைசெய்து, தாமரைமலர்போன்ற தமதுதிருக்கரத்தால் அபயங்கொடுத்தார்.

## சுவாமியின் கோபந்தணிய பிரமனாதிதேவர்கள் மகாலட்சுமியைப் பிரார்த்தித்து சுவாமியினிடம் சேர்த்தல்.

கவி.

பூவிற்றிருவை யழகின்புனைகலத்தை
யாவர்க்குஞ்செல்வத்தை வீடென்னுமின்பத்தை
ஆவித்துணையை யமுதிற்பிறந்தானை
தேவர்க்குந்தம்மோயை யேவினார்பாற்செல்ல.

செந்தாமரைப்பொகுட்டிற் செம்மாந்துவீற்றிருக்கும்
நந்தாவிளக்கைநறுந்தா ழிளங்கொழுந்தை
முந்தாவுலகு முயிருமுறைமுறையே
தந்தானைநோக்கினான் றன்னெனப்பொன்றில்லாதான்.

தீதிலாவாக வுலகீன்றதெய்வத்தைக்
காதலாநோக்கினான் கண்டமுனிக்கணங்கள்
ஓதினார்சீர்த்தி யுயர்ந்தபராஞ்சுடரும்
கோதலாங்கில்லாத வன்பனையேநோக்கினான்.

இப்படிப்பட்ட சமயத்தில் தேவர்களெல்லாரும் தங்கள் பயநிவாரணத்தின்பொருட்டு ஒன்றாகச்சேர்ந்து,பூவில்வீற்றிருக்கின்ற ஸ்ரீமகாலக்ஷ்மியும், அழகுக்கு அழகானவளும், சர்வத்திராளுக்கும் ஐஸ்வரியமானவளும், பரமபதவின்பத்தைக் கொடுப்பவளும், பிராணரக்ஷகியும், தேவாமிர்தத்தோடு பிறந்தவளும், தேவர்முதலிய யாவரையும்பெற்ற தாயானவளுமாகிய பெரியபிராட்டியாரை அந்த நரசிம்மமூர்த்தியினிடத்தில் கெழுந்தருளும்படியாகப் பிரார்த்தித்தார்கள். இப்படித் தேவர்கள் பிரார்த்தித்தபிரகாரம் தம்மெதிரிலெழுந்தருளிய செந்தாமரைப்புட்பத்தின்மீது வீற்றிருக்கும் நுண்டாவிளக்கானவளும், நல்லவாசனைபொருந்திய புஷ்பமாலையிற்கட்டியவிளங்கொழுந்தைப் போன்றவளும், எல்லாவுலகங்களையும் அவ்வுலகங்களிலுள்ள பிரமேந்திராதி ஜீவகோடிகளையும்பெற்ற தாயாகியவளுமான சாக்ஷாது ஸ்ரீமகாலட்சுமியைச் சமானுதிப ரகிதனான நரசிம்மமூர்த்தியானவர் கிருபையுடனே கடாக்ஷித்தார். அம்மாத்திரத்தில் ரிஷிக்கூட்டங்களெல்லாம் புருஷசூக்தத்தினால் ஸ்தோத்திரம் பண்ணினார்கள்.

ஓ இலங்கைக்கரசே! அப்போது பரஞ்சோதியாகிய ஸ்ரீநரசிம்மமூர்த்தியானவர் சந்தோஷத்துடன் தமக்கெதிரில்நிற்கின்ற பக்தசிரோமணியாகிய பிரகலாதாழ்வானைக் கடாக்ஷித்து; ஐயா பிரகலாதாழ்வானே! உன்னுடைய தகப்பனாகிய இரணியனை நான் உன்கண்ணெதிரேகொன்று அவனுடைய

உயிரைப் போக்கினகாலத்திலும், உன்மனது கிஞ்சித்தேனுஞ் சஞ்சலப்படாமல் தர்மமார்க்கமான செய்கையுடனே என்மீது அத்தியந்தபக்தி வைத்திருந்தாயன்றோ? அப்படிப்பட்ட பக்தியுள்ளவனுக்கு நானென்ன பிரதியுபகாரமாக யாதுசெய்வது? ஒரிமைப்பொழுதை ஆயிரம்பங்கிட்டு அதிலொருபங்கான சிறுகாலத்திற்குள் உன்தகப்பனதுயிரைமீட்டிரம் நீக்குகிறவனைப்போன் றுவந்து, அளவற்ற அசுரர்களுடனோடு அவனுடைய தேகத்தையும்பிளந்து சின்னபின்னப் படுத்தக்கண்டும், பொறுமையமைந்த நல்லமனதுடனே நீ இருந்ததையே அல்லவன்றோ ஆச்சரியம்; ஆகையால் இனிமேலுனது சந்ததியார் என்னிடத்தில் அன்பில்லாத பலகுற்றங்களைச் செய்தபோதினும், அவர்களைக்கொல்லுகிறதேயில்லை. உனக்கு நல்வரமாக விருக்கிறேன். நீவிரும்பிய வரங்கள் எவ்வளவோ அவ்வளவும் நாணாமல் நீ கேட்பாயானால் யாம் தருவது உண்மையே ஆதலால் கேட்கக்கடவாயென்று ஆக்கியாபித்தருளினார்.

## பிரகலாதன் வரங்கேட்டலும், சுவாமிவரமீதலும்.

கவி.

முன்புபெறப்பெற்றதே பரேருமுடிவில்லை
பின்புபெறும்பேறு முண்டோபெறுவதேல்
என்புபெறாத விழிபிறவிபெய்திடினும்
அன்புபெறுகை யருள்பெறெனக்கென்றான்.

அன்னானைநோக்கி யருள்சாத்தமனத்தினனும்
என்னனைவல்லே னெனமகிழ்ந்தபேரீசன்
முன்னனைபூதங்கள் யாவையுமுற்றிடினும்
என்னனாருமலவாய்நீ யென்போனினையென்றான்.

அப்போது பிரகலாதாழ்வான், ஸ்வாமி! உம்மால்முன்பு அடியேன்பெற்றபேறுகளுக்கு ஓரளவில்லை. ஆயினும் இன்னொருவரம் அடியேனுக்குக் கிருபைசெய்யவேண்டும். அஃதென்னவென்றால்-அடியேன் எதும்பில்லாத இழிபிறவியாகிய புழுவாகச்சென்பித்த போதினும், உம்மிடத்திலும் - உம்மடியாரிடத்திலும் - அத்தியந்த அன்புபெற்றிருக்கும்படியான இந்த அரியவரமொன்றுமாத்திரமே வேண்டுமென்றான்.

அப்படியாகக்கேட்ட பிரகலாதாழ்வானைக்கடாக்ஷித்து, கருணைபெருகிய திருவுள்ளத்தராகி, ஓ பிரகலாதாழ்வானே! பிரமன் இந்திரன் முதலிய சமஸ்ததேவர்களும் - பஞ்சபூதமாதிதத்துவங்களும் அழியத்தக்க அந்தவூழிகாலத்திலேயும் நீ அழியாமல், என்னைப்போல் நித்தியனாய்ச் ஜீவன்முக்தனாகக் கடவாய். ஓ பொன்னுலகநூமதித்த புண்ணியரூபா! இனிமேல் மூன்றுலோகவாசிகளும் உனக்கடிமையல்லவோ? அவர்களென்னை வணங்கியடையும் பிரயோசனங்களையெல்லாம், உன்னைவணங்கி உன்னருள்பெற்று உஜ்ஜீவிக்கக்கடவர்கள். எனக்கன்பானவர்களெல்லாம் உனக்கன்பராகக்கடவர்கள். நீ அசுரர்களுக்குமாத்திரமா அரசனாயிருப்பது, ககனவாசிகளாகிய தேவர்களுக்கும்



நீயேயரசன். நல்லதர்மமும்-சத்தியமும்-நான்கு வேதங்களும்-பெரியஞானமும்-பொறுமையும்-எண்குணங்களும்-உன்சொற்படிநின்று, உனக்குவேண்டியவைகளைச்செய்துயக்கடவன. இனி எனக்கு முனக்கு மொருபேதமுமில்லையென்றுகூறிக் கடாக்ஷித்தனர்.

## பிரகலாதனுக்கு சுவாமி தமது திருக்கரத்தால் திருமுடிசூட்டுதல்.

கவி.

என்றுவரமருளி யெவ்வுலகுக்குங் கட்பு
முன்றின்முரச முழங்கமுடிசூட்டி
நின்றவமரரனைவருநேர்ந்திவனுக்
கொன்றுபெருமை யுரிமைபுரிகென்றான்.

தேமன்னுரிமை புரியத்திசைமுகத்தோன்
ஓமமியற்ற வுடையான்முடிசூட்டி
தோமன்னவனுகி மூவுலகுங்கைக்கொண்டான்
நாமமறையோதா தோதிகனியுயர்த்தான்.

இந்தப்பிரகாரம் பிரகலாதாழ்வானுக்கு எம்பெருமான் வரங்கொடுத்து, பின்பு எல்லாலோகத் தவர்களும் கைகூப்பி வணங்கும்படியாகவும் - ஆசாரவாசலில் ஜெயபேரிகை முழங்கும்படியாகவும்-பிரகலாதாழ்வானுக்குத் திருமுடிசூட்டத் தேவர்களையெல்லா மழைத்து, நீங்கள் இந்தப்பிள்ளைக்குச்செய்யவேண்டிய உரிமை பெருமைகளையெல்லாம் செய்யக்கடவீர்களென்று ஆக்கியாபித்தார். அப்படியே தேவர்களெல்லாரும் பிரகலாதாழ்வானுடைய பட்டாபிஷேகத்தில் தங்கள் தங்களுக்குரிய கடமைகளைச் செய்யவும், பிரமதேவன் ஓமம்வளர்க்கவும், சாக்ஷாத் நாராயணனால் முடிசூட்டப்பெற்று பிரகலாதாழ்வான் மகாராஜனாய்த் திரிலோகத்தவர்கள் ஸ்தோத்திரம்பண்ணவும், மகாரிஷிகள் வேதபாராயணஞ் செய்யவும், தனது தந்தையிருந்த சிம்மாதனத்தின்மீது எழுந்தருளியிருந்தான். இதுபூர்வவிருத்தாந்தமாகும். ஓ அண்ணா இராவணேஸ்வரா! நீர் இதை நன்றாய்த் தீர்க்காலோசனைசெய்யவேண்டும். என்னமோ சாமானியமென்று அலக்ஷியம்பண்ணுவீரானால் நினைவினைகிறது சத்தியமாகுமென்று புத்திமான்களிற் சிரேஷ்டனான விபீஷணாழ்வான் தன் தமயனாகிய இராவணனுக்குச் சொன்னார்.

இரணியன் வதைப்படலம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

நான்காவது,

# விபீஷண னடைக்கலப் படலம்.

இப்படலத்தில் விபீஷணர் இரணியகசிபுவின் சரித்திரமுகாந்திரம் பலவாறு தெருட்டியும் இராவணன் சிறிதுமுட்கொள்ளாது சினந்து அப்பாற் செல்லுகவென்று கூறவும் அவரவ்வாறே விண்ணிலெழும்பிப் பின்னும் வன்வற்றையுங்கூறி இலங்கையைவிடுத்ததும், அக்கால் தன்னைத் தொடர்ந்த அனலன்முதலிய நான்கமைச்சர்களோடு விபீஷணர் மந்திராலோசனைசெய்துகொண்டு கடலைத்தாண்டி ஸ்ரீராமருடைய வானரசேனைகளைக்கண்டு வியந்து ஓரிரவு மறைந்திருந்ததும், அப்போதக்கடற் சார்பாகிய நெய்தனிலப்பொருள்களின்தன்மைகளை ஸ்ரீராமர்கண்டு உலாவிக்கொண்டிருக்க விபீஷணர்வானரசேனையில்வந்து கலந்ததும், கலந்தவரைவானரவீரர்கள்கொல்லயத்தனித்தபோது அவர் ஸ்ரீராமனைக் கூவியலயிடவும் அவராக்ஞையாலவ்விபீஷணர் கருத்தறியவந்த மயிந்தனுக்கு அனலன்சொல்லுவதும், அதனாலவர்கருத்தறிந்த மயிந்தன் ஸ்ரீராமனுக் கதை யுணர்த்ததும், அப்படியுணர்ந்தபின் ஸ்ரீராமர் மற்றைத்துணைவர்களோடாலோசித்தபோது சுக்கிரீவன்-சாம்பவந்தன்-நீலன்-இவர்கள் தங்கள்கருத்தைத்தனித்தனியுரைத்ததும், பின்பு ஸ்ரீராமர் ஆஞ்சநேயரை வினவ அவர் சிலவனுபவங்கள்கூறி விபீஷணரைச்சன்மானித்ததும், உடனே ஸ்ரீராமர் சில உத்தமதருமங்களை யாவருக்குமுணர்த்தி சுக்கிரீவனைக்கொண்டு விபீஷணரை யழைப்பித்ததும், சுக்கிரீவனழைக்கவந்த விபீஷணர் ஸ்ரீராமனைச்சேர்ந்து, ஆனந்தபரவசரானதும், அப்பால் ஸ்ரீராமபிரான் அவ்விபீஷணருக்கு இலங்காதிபத்திய மளித்து அவர் வேண்டுகோளின்படி தமது திருவடிச்சுவடேறிய முடிசூட்டித் தேவர்முதலிய சகலருங்கொண்டாடும்படி ஊர்க்கோலமுதலிய விபவங்களை நடப்பித்ததைச் சொல்லப்படுகின்றது.

## விபீஷணர் சொல்லியவைகளைக்கேட்ட இராவணன் கோபித்தல்.

கவி.

கேட்டனனிருந்துமக் கேள்விதேர்கலாக்
கோட்டியசிந்தைய னுறுதிகொண்டிலன்
மூட்டியதீயென முடுகிப்பொங்கினன்
ஊட்டரக்கூட்டிய வினையவொண்கணான்.

விபீஷணரான புண்ணியசீலர் கடினசித்தத்தையுடைய தன் தமையனாகிய இராவணனுக்கு நல்ல ஞானமுண்டாகும்படி இரணியகசிபுவினுடைய சரித்திரங்களை யெடுத்துச் சொல்லக்கேட்டு, சீதையின்மேல் வைத்திருக்கிற பேராவினால் தம்பிசொன்னவிஷயங்கள் ஒன்றும் மனதிற்குக்காமலும் அதைஆராயாமலும் தனக்கபஜெயகாலம்நேர்ந்து, லோகரக்ஷகனாகிய ஸ்ரீராமன் கோதண்டத்திற் சந்தித்துவிடும் பாணத்திற்கு இரையாகவேண்டுமென்ற ஊழ்வினை



வர்த்தால்செவ்வரக்கூட்டியதுபோல் இரண்டுகண்களுஞ்சிவந்து, ஓ விபீஷணா! இரணியாசுரன் மிகுந்தபலமுள்ளவனென்றும், அப்படிப்பட்டவனை அந்தவிஷ்ணுவானவன் கொன்றுபோட்டானென்றும்பயந்து, இந்தமனிதரிடத்தில்பக்ஷம் வைத்திருக்கின்றாய். மரணமென்கின்ற ஒருமுடிவுகாலத்தினால் அவ்வவனுக்கும் பலமொழியுமேயல்லாமல் வேறல்ல. அப்படிப்பட்ட இரணியனாற் பெற்று வளர்க்கப்பட்ட பிரகலாதன் வளர்த்தகடா கையிற்பாய்ந்ததுபோலத் தன்தகப்பனை அந்தவிஷ்ணுவானவன்பிளந்து சம்ஹரித்தகாலத்தில் விசனமென்பது எள்ளளவேனுமில்லாமல், தான் மிகுந்த மகிழ்வடைந்திருந்தான். அந்தப்பிரகலாதனும், என்பகையாளிகளான அந்தமானிடர்களுக்குச் சிநேகம் பூண்டிருக்கின்ற நீயும், சமானமானவர்கள். உங்களைப்போலொத்த துரோகசிந்தையுடையோர்கள் வேறொருவருண்டோ? ஆ விபீஷணா! மிகுந்த பெருமையுடையவனாகிய இரணியனுடைய குமாரனான பிரகலாதனுடைய சுபாவத்தைப்போலச் செய்யவேண்டிய தந்திரங்களை நீ செய்துமுடித்து, நானிந்தமனிதனுக்குத்தோற்றபின்பு ஏழையான நீஎன தைசுவரியத்தை அடைந்து வாழலாமென்றிருக்கிறாய். உன்னுடைய நினைவின்படி இது உனக்குக்கிடைக்குமோ? நீ அவர்களிடத்தில் வெகுநாளைய உறவாளிகளைப்போல மிகுந்த அன்பு வைத்திருக்கின்றாய். எனக்குப் பகையாளிகளாகிய அந்தமனிதரிடத்திற் சிநேகம் வைத்திருக்கின்றாய். அவர்கள் பக்ஷத்தில் மெத்த உருகிப்போகிறாய். அழுகிறாய். அவர்களை ஸ்தோத்திரம்பண்ணுகிறாய். ஆகையால்; நீயே உளவாயிருக்கின்றாய். இதற்கு வேறேசாக்ஷி வேண்டியதில்லை. அந்த மனிதர்களிடத்திற்குப்போய் அவர்களை சிநேகஞ் செய்துகொண்டு, செய்ய வேண்டிய தந்திரங்களை யெல்லாம் நன்றாயாலோசனைபண்ணிக்கொண்டாய். என்னைச் செயிக்க வேண்டுமென்றும் நினைத்திருக்கின்றாய். இந்த ராஜ்யகத்தின்பேரிலும் ஆசைவைத்திருக்கின்றாய். உன்னுடைய செய்கையானது வெகு கொடூரமானதாக விருக்கின்றது. உன்னைப்பார்க்கிலுமெனக்குப் பகையாளிகளாரிருக்கின்றார்கள்? ஆ! ஆ! நீ மகாகொடியவன்.

அன்றைக்கொரு குரங்கு வந்து நம்முடைய அசோகவனத்தை யழித்துவிட்டதைப்பற்றி அதைக்கொல்லும்படியாக நான்சொன்னதற்கு, தூதரைக் கொல்லுவது வெற்றியல்லவென்று விலக்கிவிட்டாய். இனி நடக்கவேண்டிய காரியத்தை நினைத்துக்கொண்டு வெற்றிமாலையை அணிந்துவந்திருக்கின்ற ஸ்ரீராமனை உனக்குத் துணைவனாக்கிக் கொள்ளுகிறதற்குத் தீர்மானித்திருக்கின்றாய். நீ உன் பிராணனுக்குப் பயந்திருக்கின்றாய். ஆனபடியால், எதிரிகளோடு யுத்தஞ்செய்கிறதற்கு நீ தக்கயோக்கியனல்ல. அந்த மனிதர்களிடத்தில் சிநேகம் வைத்திருக்கிறாய். உன்மனதிற் சூதிருக்கின்றது. நீ பிறந்த இராக்ஷச நிலைமையையு மாற்றிவிட்டாய். விஷத்தைச் சமீபத்தில் வைத்திருப்பதுபோல உன்னையு மென்னுடன் வைத்துக்கொண்டிருக்கிறதினால் நன்மையுண்டாகுமோ? ஆகையால் சகோதரஹத்தி யென்கின்றதை நினைத்து உன்னைக்கொல்லாமல் விட்டுவிட்டேன். நீ ஒன்றும் பேசாதே. சீக்கிரமாய் வெ

ளியேபோய்விடு. என்கண்முன் நிற்பாயேயாகில் மரணமடைந்திடுவாயென்று, இனி மறித்துப்போகின்றவனும் தனக்குள்ள வழிவெல்லாங் கெட்டவனுமான இராவணன் சொன்னான்.

விபீஷணர் தன் கருத்திற்கிணங்காத இராவணனிடத்தினின்றும் பிரிந்து ஆகாசமார்க்கத்திற்சென்று சில்வார்த்தைகூறி, ஸ்ரீராமபிரானை யடைவதே நலமெனப்புறப்படல்.

கவி.

என்றலும் நீவவு மெழுந்துவானிடைச், சென்றனன் றுணைவருந் தானுஞ் சிந்தியா
நின்றனன் பின்னரு நீதிசான்றன, வொன்றலபலபல வுறுதியோதினன்.

இப்படி அவன் சொன்னமாத்திரத்தில் விபீஷணாழ்வான் அந்தச் சபையைவிட்டெழுந்திருந்து, ஆகாசமார்க்கத்திற்போய் அநேக நீதியான காரியங்களை ஆலோசித்து, அண்ணா பிரதாபலங்கேஸ்வரா! மிகுந்த வாழ்வுடனே வழிகாலபரியந்தம் உம்மோடேகூடி வாழ்ந்திருக்கிறதை என்னளவும் நீர் நினையாமல், அற்பமான பேர்கள் சொல்லுகிறதையேகேட்டுக் கெட்டுப்போகிறது நியாயமாகுமா? தருமத்தப்பின பேர்களுக்கு ஆண்மையுமுண்டா? உமது பிள்ளைகளென்ன? உமது சுற்றத்தாரென்ன? உமது மிகுந்தபந்துக்களென்ன? உமது சிநேகிதர்களென்ன? பகைஞர்களும் பலமுள்ளவர்களுமாய் உம்மைச் சேர்ந்தபேர்களென்ன? இந்தப்பேர்களையும் ஸ்ரீராமருடைய அம்புக்கிரையாகக்கொடுத்து நீருமிறந்துபோவீர். நான் பலவகையாலும் உறுதியானவைகளையும், தருதியானவைகளையும், உமது மனதுக்கிசையும்படியாகத் தெரிவித்தேன். அவைகளையும் நீர் ஆலோசிக்கவில்லை. அண்ணா! என்குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும், என்று உத்தமனான விபீஷணாழ்வார் சொல்லிவிட்டு, அவ்விலங்காநகரத்தைவிட்டுப் புறப்பட்டார்.

விபீஷணர் தன்னைத்தொடர்ந்த வமைச்சரோடு மந்திராலோசனைசெய்து விடியுமட்டு மிருந்திருத்தல்.

கவி.

அனலனு மனிலனு மரன்சம்பாதியும், வினையவர் நால்வரும் விரைவின் வந்தனர்
கனைகழற்காலினர் கருணைக்கேயியர், இனைவருமுடனே யெழுந்தேகினர்.

அப்போது அனலன் - அனிலன் - அரன் - சம்பாதி - என்கிற நான்கு மந்திரிகளும் வேகமாய்வந்து விபீஷணாழ்வாருடனே புறப்பட்டார்கள். அவ்வாறு புறப்பட்ட நான்குதோழர்களும் எப்பேர்ப்பட்டவரென்னில், ஒலிக்கின்ற வீரகண்டாமணியணிந்த பாதங்களையுடையவர்கள். மேல்வருங் காரியத்தை ஆராய்ந்து அதற்கு நடத்தவேண்டிய காரியம் இன்னதென்று ஆலோசித்து உணர்த்தும்படியான விவேகசாமர்த்திய முடையவர்கள். அப்படிப்பட்ட குணவான்களாகிய மந்திரிகளுடன்; விபீஷணாழ்வாரும் சூரியன்பட்டபின் இராமலட்சுமணர்களென்கிற இரண்டு மனிதர்கள் சமுத்திரக்கரையில் வந்து சேர்ந்திருக்கிறார்களென்ற சமாசாரங்கேட்டு, வேறேரிடத்துக்குப்போய்



இந்த நான்கு தோழர்களுடன் விபீஷணாழ்வா ராலோசிக்கத் தொடங்கினார். ஐயா தோழர்களே! தருமசிந்தை யுடையவர்களிடத்திலே எனக்குப் பக்ஷமுண்டாயிருக்கின்றது. நான் புகழையல்லாமல் வாழ்வை விரும்பவில்லை. அவ்வாழ் வென்பதை முற்று மறந்துவிட்டேன். இனிநான் செய்யவேண்டிய தென்னமோ? அதனை நீங்கள் சொல்லுவீர்களென்று கேட்டார். அதற்குத்தரும சாஸ்திர நிபுணர்களான அந்த நான்கு ஆலோசனை மந்திரிகளும் ஒருவருக் கொருவர் நன்றாயாலோசித்துச் சொல்லத்தொடங்கினார்கள்.

ஐயா விபீஷணமகாராஜனே! பெருமையிற் சிறந்தது இதினும் வேறொன்றில்லை. குறைவில்லாத ஐஸ்வரியமானது தர்மசொரூபியாகிய அந்த இராமச்சந்திரனைத் தரிசித்துக்கொண் டிருக்கின்றதே: இனி உமக்குத் தர்மமுமிது வேயாகுமென்று அவர்கள்சொல்ல அதை விபீஷணாழ்வார் கேட்டுச்சொல்லுகிறார்.

கவி.

நல்லதுசொல்லினீர் நாமுமீதினி, அல்லதுசெய்துமே லரக்காதுமரல்
எல்லையில்பெருங்குணத் திராமன்றாளிணை, புல்லுதும்புல்லிப்பிறவிபோக்குதும்.

ஐயா மந்திரிகளே! நல்லவார்த்தை சொன்னீர்கள். நாமிதைத் தவிர்த்து வேறொருகாரியஞ் செய்வோமேயானால், இராக்ஷதர்களாகவே போய்விடுவோம். ஆகையாலினி நம்முடைய அற்பமான ஜென்மநீங்கிக் கடைத்தேறும்படி, அனந்தகல்யாணகுணகணனான ஸ்ரீராமமூர்த்தியினுடைய செந்தாமரை மலர்போன்ற இரண்டுதிருவடிகளையும் அடைக்கலமாய்ச்சேரக் கடவோம். என்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றார்.

அந்த ஸ்ரீராமமூர்த்தியை நான் முன்பொருக்காலும்பார்த்ததுமில்லை. அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. அவரிடத்தில் என்க்கன்பு பிறந்ததற்குக் காரணமுந்தெரியவில்லை. என்தேகமெல்லாம் ஆனந்தமென்னுங்கடலிற் குளித்துக் குளிர்ந்துவிட்டது. என்னுடைய நெஞ்சு திடமாய் நிற்கவேயில்லை. அடிக்கடி உருகிப்போகிறது. அவர் என்னுடைய அற்பமான மாளாத ஜெனனமென்னும் வியாதிக்குப் பகையாளிபோலக் காணப்படுகின்றார். ஈஸ்வரபக்தியும், நல்தர்மமும், பட்சபாதமின்மையும், பிறவியிலகற்றிலருளும், ஸ்ரீவேதவித்துக்களுடைய ஆசிர்வாதங்களும், மூலதாமரசபுஷ்பத்தில் வசித்துக்கொண்டிருக்கின்ற சாட்சாத் பிரமதேவனை நோக்கித் தவஞ்செய்த காலத்தில் நான் விரும்பிப்பெற்றவரங்களாலு முண்டாகிய பிரயோசனங்களே என்னை யிப்படிப்பட்ட பரிசுத்தவானாகச் செய்தவைகளென்று நினைக்கின்றேன். ஆதலால் பிரமேந்திராதி தேவர்களுக்கெல்லாம் ஏகநாயகனாகிய அந்த ஸ்ரீராமமூர்த்தியினுடைய திருவடிகளைத் தியானித்து, நம்முடைய மனதில் நினைத்த எண்ணங்களையெல்லா முடித்துக்கொள்ளும்படியாயிற்றே யென்று கூறினர்.

கவி.

இருளுறவெய்தவ தினிதன்றுமெனப், பொருளுறவுணர்ந்தவப் புலன்கொள்புந்தியர்
மருளுறுசூழலின் மறைந்துவைகினர், உருளுறுதேரவ னுதயமெய்தினன்.

இப்படியாகக்கூறிய விபீஷணரானவர் மிகுந்தவாநந்தபூரணராய்த் தமது மந்திரிகளுடன் கடலைத்தாண்டிச்சென்று, அக்கரையில் எங்கும் விளக்குவெளிச்சம்பிரகாசிக்கின்றதனாற் பாற்கடலில் தாமரை புஷ்பித்திருக்கிறதுபோலக் காணப்படுகின்ற பெரியவானரசேனைகளைத் தனதுகண்ணினாலே பார்த்து, தேகத்தோடுகூடிய சகலஜீவகோடிகளையும் இந்தவானரங்களையும் ஓரிடத்தில் நிறுத்தி மதிப்பிடுவோமானால் இந்த வானரசேனைகளின் தொகையே பெரிதாயிருக்குமென்று தன்னுடையமந்திரிகளுக்குச்சொல்லி, நாமிப்போது இராத்திரிகாலமாயிருக்கிறபடியினாலே அவ்விடத்திற்குப்போகிறது நமக்குத் தகுதியல்லவென்று உயர்ந்த பொருள்பட ஆலோசனைசெய்து, அதிவிவேகியான அந்தவிபீஷணாழ்வார் ஓரிடத்தில்மறைந்து ஸ்ரீராமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். தமது தீவினைகளெல்லாம் தம்மைவிட்டொழிவதுபோல் உலகிலுள்ள இருட்கூட்டங்களெல்லாம் ஒழியும்படி ஒற்றைச்சக்கரத்தைப் பூண்ட தேரையுடைய சூரியனு முதயமாயினன்.

## ஸ்ரீராமர் கடற்கரையடைந்து அங்கு நிகழுங் காட்சியைக் காணல்.

கவி.

அப்புறத்திராமனை யலங்குவேலையைக்
குப்புறக்கருதவான் குலனைநோக்கிதன்
துப்புறச்சிவந்தவாய் சீதைக்குசோர்குவான்
இப்புறத்திருக்கரை மருங்கினெய்தினன்.

அந்தச்சமயத்தில் லோகரக்ஷகனான ஸ்ரீராமமூர்த்தியானவர் சமுத்திரத்தைக்கடக்கும்படியாக நினைவுகொண்டவராகி, நீலோற்பல புஷ்பம்போன்ற கண்களையுடைய சீதாபிராட்டியின் பவளத்தைக்காட்டிலும் சிறந்து பிரகாசிக்கின்ற சிவந்தவிதழை யெண்ணி யெண்ணிச் சோர்வடைந்து, அந்தக்கடற்கரைக்குச் சமீபத்தில்வந்து, அங்குள்ள சோலைகளையும் - பலகழிகளையும் - மணல்வெளியையும் - தாழஞ்செடிகளையும் - நீலோற்பல புஷ்பங்களையும் - கருங்குவளைப் புஷ்பங்களையும் - புன்னைவிருக்ஷங்களையும் - அவற்றின் பக்கத்தில் மிகுந்தவெண்மைநிறமுள்ள அன்னங்கள் ஆணும் பெண்ணும் ஒன்றோடொன் றணையும்படியாகக் காமவேட்கையை வளர்க்கத்தக்க புஷ்பச்சோலைகளையும் : அவ்விடத்திற் கும்பற்கும்பலாக அலைகளினாற்சேர்ந்து இடக்கின்ற முத்துக் குவியல்களையும் - பவளக்குவியல்களையும் - மற்ற மணிக்குவியல்களையும் - சொர்ணமயமான கடற்கரையும் - யாவரும் பயப்படும்படியான அநேகமரங்களடர்ந்த தோப்புகளையும் - மணற்குன்றுகளையும் - அவற்றின்மேல் புரண்டுவருகின்ற கடலலைகளையும் தமது நேத்திரானந்தமாகப்பார்த்தார்.



இப்படிப்பார்த்த ஸ்ரீராமர் மின்னலைப்போலும் பிரகாசிக்கின்ற சில செம்படவ ஸ்திரீகள் தங்கள் நாயகன்மார்களெப்போது வருவார்களென்று அழகிய விரல்கள் தேயும்படியாகச் சுழிகள் சுழித்துச் சகுனம் பார்க்கும்போது தங்கள் கண்ணீரானது அந்தச் சுழிகளை அழித்துவிட அதனால் விசனமுடையவர்களாய் மறுபடியும் அச்சுழிகளைச் சுழிக்கின்ற சமுத்திரக்கரையிலுள்ள புன்னைமரச் சோலையைப் பார்த்துப் பிரமித்தவராகியும், குளிர்காலத்தி லுண்டாகின்ற பனித்துளிகளைப்போல் அச்சமுத்திரத்தின் வெண்மையாகிய அலைகளினின்று மெழும்பிய நீர்த்திவலைகள் காற்றினால் சாஞ்சரமாக எழும்பி மேற்றெளிக்க அக்கரையின்கண் வளைந்த தாழஞ்செடிகளின்மேல் அன்னங்கள் ஓர்புறத்திறகினால் தனதாசை மிகுந்த பெட்டையைப் பக்கத்தி லணைத்துக்கொண்டு ஆனந்தமாக நித்திரை செய்கிறதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டவராகியும், உண்ணுதற்காக மீன்கொண்டுவரும்படி அந்த மரக்கிளையை விட்டுப் பிரிந்துபோன ஆண்கொக்கின்மேல் ஆசைகாதல்கொண்டு அஃதெப்போது திரும்பி வருமோவென்று, அது சென்றதிசையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற வெண்மையும் இளமையுமுடைய பெட்டைக்கொக்கைப்பார்த்து மனமிரக்க முடையவராகியுமிருந்தார்.

மேலும் - ஒரு பெண்கொக்கின்மேல் மோகங்கொண்ட இரண்டு ஆண்கொக்குகள் மிகுந்த கோபமுடையவைகளாய்க் கண்களில் நெருப்புப் பொறிபறக்க ஒன்றோடொன்று பின்னிடையாமல் யுத்தஞ்செய்வதைக்கண்டு தானுங் கோபங்கொண்டு வளைந்தபுருவத்தை யுடையவராகியும், நிறைந்த ஊடலினாலே ஆணன்னத்தை ஜெயித்த பெண்ணன்னமானது கலவியில் ஆணன்னத்திற்குத் தோல்வியுற்று நிற்கிறதைக் கண்டு தனது பவளம்போன்ற விதழை முத்தையொத்த பற்களினால் அதுக்கிக்கொண்டு துக்கமுடையவராகியுமிருந்தார். இப்படி அந்தச் சமுத்திரக்கரையி லுண்டான ஒவ்வொரு செயல்களினால் பிரமித்தும் - பெருமூச்சுவிட்டும் - மனமிரக்க முடையவராகியும் - புருவநெறிப்புடையவராகியும் - துக்கமுடையவராகியும் - உலாவிக் கொண்டிருந்த சக்கரவர்த்தித் திருமகனானவர், இளையபெருமாள் - சுக்கிரீவமகாராஜன் - சாம்பவர் - அநுமார் - இவர்கள் முதலியோர் தேறுதலைசொல்லித் திருவுளத்தைத்தேற்ற ஒருவாறு தேறி, சுபாவ வழியோடுகூடிய பித்தரைப்போல அவ்விடத்தைவிட்டுத் தமது உறைவிடமே வந்து சேர்ந்தனர்.

## விபீஷணர் வானரசேனையிற் கலத்தல்.

கவி.

உறைவிடமெய்தின னொருங்குகேள்வியின்
துறையறிதுணைவரோ டிருந்தசூழலின்
முறைபடுதானையின் மருங்குமுற்றினன்
அறைகழல்வீடண னயிர்ப்பில்சிந்தையான்.

இவ்வண்ணம் ஸ்ரீராமச் சந்திரன் ஆராய்ச்சியின் வல்லமை மிகுந்த துணைவர்களோடு தமது உறைவிடமடைந்தபோது அங்கு முறைப்படி அணி

யணியாய் நிற்கின்ற வானரகூட்டத்தி னோர்புறம் விளக்கழ லொலிக்கின்ற விபீஷணாழ்வார் மனதினிடத்தில் கலக்கமில்லாமல் ஸ்ரீராமஸ்மரணைசெய்து கொண்டு வந்துசேர்ந்தனர்.

விபீஷணரைக் கண்ட வானரவீரர்கள் கோபிக்க அவ்விபீஷணர் ஸ்ரீராகவ சரணமென்று ஓலமிட்ட சத்தம் தன் காதிற்பட ஸ்ரீராமச்சந்திரன் அங்குள்ள வர்களை வந்தவர்களாரென்று பார்த்துவர ஏவுதல்.

கவி.

முற்றியகுரிசிலை முழங்குதானையின்
ஊற்றனர்விருதர்வந் தென்னவொன்றினார்
எற்றுதிர்பற்றுதி யெறிதிரென்றிடை
சுற்றினருருமெனத் தெழிக்குஞ்சொல்லினர்.

மற்றொருபொருளை தென்னின்மாறிலாக்
கொற்றவசரணெனக் கூயதோருரை
உற்றதுசெவித்தலத் தையமெல்லென
நற்றுணைவனைமுக நயந்து நோக்குறா.

எந்தையேயிராகவ சரணமென்றசொல்
தந்தவரெவரோ சார்தியென்னென
மந்தணமுற்றுழி யையவெஞ்சேனையின்
முந்தினர்க்குற்றதை மொழிகுவாமரோ.

இப்படி வானரசேனைகளில் வந்த விபீஷணாழ்வாரையும்—அவருடைய தோழர்களையும்—அவ்வானரசேனைகள் பார்த்து, நம்மிடத்திற்கேன் இவ்விராக்ஷதர்கள் வந்தார்கள்? வந்தவர்கள் என்னசெய்ய நினைக்கின்றார்களோ அதை அறியோம். ஆதலால் இவர்களைத் தள்ளுங்கள், பிடியுங்கள், அடியுங்கள், என்று இடியிடித்தாற்போற் கர்ச்சித்துச் சொல்லிக்கொண்டு அவர்களைச் சுற்றிக்கொண்டார்கள். அப்போது விபீஷணாழ்வார்முதலிய ஐவரும் இனைத்து, ஓ ஸ்ரீராமா! கோதண்டராமா! சீதாராமா! அயோத்திராமா! தசரதராமா! இரகுகுலோத்தமா! புருஷோத்தமா! தேவரீருடைய திருவடித்தாமரைகளுக்கு அபயம்: அபயம்: இவ்விடத்திலெமக்கு வேறொரு துணையுமில்லை. என்று பேரோசையிட்டுக் கூவினார்கள். இப்படியாகக்கூவிய சப்தமானது சக்கரவர்த்தித் திருமகனாருடைய திருச்செவியில் நுழைந்தமாத்திரத்தில் தமது துணைவராகிய இளையபெருமாள்—சுக்கிரீவர்—அநுமார்—சாம்பவர்—முதலானவர்களைக் கிருபையோடு முகமலர்ந்து பார்த்து, அபயமபயமென்று சொல்லுகிறார்களே: அவர்களியாரென்று பார்த்துவந்து சொல்லுங்களென்று ஆக்கியாபித்தார்.

அவ்வாக்கியாபனையைக்கேட்ட வானரவீரர்கள் சற்றுநிதானித்து, முன்னர் பிடிக்கவு மடிக்கவு மெண்ணியிருந்த தங்கள் கருத்தை யொழித்தார்கள். அவ்வாக்கியாபனையைக் கேளாத வானரவீரர்களிற் சிலர் விபீஷணரை விடாமற்பார்த்து, தர்மதேவதையே இலங்காதிபதியானவனை இங்கேகொண்டுவந்



துவிட்டதோ என்பார்கள். யதார்த்தமாய் என்னமோ வொருபொல்லாங்கு செய்கிறதற்கு இவ்விடத்திற்குவந்தான் என்பார்கள். சிலர் இவனே யிராவணனாதலால் நம்முடைய வெண்ணத்தை முடித்துக்கொள்ளலாம் என்பார்கள். சிலர் மகாபாவியாகிய ராவணனுக்கு இருபது கைகளும் பத்துத்தலைகளு மிருக்கின்றதாய்ச் சொல்லுவார்களே; அவைகளெல்லாம் அறுந்துபோய் விட்டனவோ என்பார்கள். சிலர் இவன் நம்மோடு சண்டைசெய்ய மாட்டானோ என்பார்கள். என்றிப்படி சிற்சிலர் சில வார்த்தைகளாகச் சொல்லினார்கள். சிலர் மிகுந்த கோபத்தோடு நெருங்குவார்கள். சிலர் இவனைப்பிடித்து சிறையில் வைத்துவிட்டு அதன்பிறகு நம்முடைய சுவாமிக்குச் சொல்லுவோ மென்பார்கள். சிலர் இவனைப்பார்த்தும் கொல்லாமல் க்ஷணப்பொழுதாவது நாம் சும்மா நிற்கவேண்டிய தென்னவென்றுசொல்லிப் பின்னும் சமீபமாக நெருங்கிப் போகின்றார்கள்.

சிலர் இவர்கள் கொடிய தீவினைகள் நிறைந்த இராக்ஷசசாதியிற் பிறந்தவர்களாதலால் க்ஷணப்பொழுதுக்குள்ளாக ஆகாசமார்க்கமாய் மறைந்துபோய்விட்டால் அப்பால் நாம் செய்வதென்ன வென்பார்கள். சிலர் இவனைச் சும்மா கொல்லுவது தகுதிப்பாடன்று; குத்திநசுக்கிவிடுவதே நல்லதென்று வெகு கோபத்துடனே சொல்லுகிறார்கள் இப்படி அவரவர்களுக்குத் தோன்றியபடி சொல்லும்போது, முன்பு ஸ்ரீராமபத்திரருடைய ஆக்கியாபனையைக் கேட்டிருந்தவர்களில் நிபுணர்களான மயிந்தனென்பவனும்—துமிந்தனென்பவனும்—விரைவாயோடிவந்து, கொல்லும்படியாகப் போகின்ற வானரவீரர்களை விலக்கி, வேதசாஸ்திரங்களை யுணர்ந்தவர்களான அந்த இரண்டு வானரவீரரும் அந்த அரக்கரைப்பார்த்து, இவர்கள் கோபக்குறியுடையவர்களல்லவென்று தெரிந்து, சாமுத்திரிகா சாஸ்திரப்படி அவர்களின்விவேகாதிகளையெல்லாம் ஆராய்ந்து கேட்கின்றார்கள்.

சுவாமியின் உத்தரவுப்படிசென்ற மயிந்தனும் துமிந்தனும் விபீஷணரைக்கண்டு நீர்யாரென்று வினவ, அவ்விபீஷணரின் மந்திரிகளில் ஒருவன் அவர் இன்னாரென்றதுமல்லாமல் வந்தகாரியமுங் கூறல்.

கவி.

யாரிவணெய்திய கருமம்யாவது, போரதுபுரிதிரோ புறத்தொரெண்ணமோ
சார்புறநின்றநீர் சமைத்தவாறெலாம், சோர்விலிர்மெய்ம்முறை சொல்லுவீரென்றான்.

நீங்கள்யார்? இவ்விடத்திற்கு வந்தகாரணமென்ன? சண்டைசெய்கிறதற்காகவோ? அல்லது வேறொரெண்ணமாகவோ வந்தீர்கள். மேலும்—நீங்கள் இவ்விடம் வந்து சேர்ந்ததற்குக் காரணமெதுவோ? அவைகளையெல்லாம் ஒளியாமல் உண்மையாகச் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள். அதற்குச் சத்தியவந்தரான விபீஷணாழ்வாருடைய தோழரில் ஒருவனாகிய அனலன் சொல்லுகிறான்.

கவி.

பகலவன்வழிமுதற் பாரிநாயகன்
புகலவன்கழலடைந் துய்யப்போந்தனன்
தகவுறுசிந்தையன் றருமநீதியன்
மகன்மகன்மைந்தனுன் முகற்குவாய்மையான்.

ஐயா புண்ணியவான்களே! இவர் பிர்மாவினுடைய குமாரரான தபாசிலரும் தருமவானுமாகிய புலஸ்தியப் பிர்மாவினுடைய புத்திரர். விபீஷணரென்னும் பெயரினையுடையவர். சூரியவமிச சிரேஷ்டரும் லோகநாயகருமான ஸ்ரீராகவபிரானுடைய திருவடிகளைச் சரணமடைந்து உஜ்ஜீவிக்கவந்தார். தருமநிலை தவறாமை, சாக்ஷாத் நாராயணமூர்த்தியினிடத்தில் நிறைந்த அன்பு, சதாகாலமு நிலைத்த சத்தியம், பிராமணர்களிடத்தில் விசுவாசம், இவைமுதலாகிய நற்செய்கைகளையெல்லாம் பிரமதேவனை நோக்கித் தபசுசெய்து பெற்றுக்கொண்டார். இதன்றியும்—இவர் இராவணனைப்பார்த்து, ஐயா இராவணேஸ்வரா! நீர் அக்கினியை முன்றானையில் முடிபோட்டுக்கொண்டிருக்கின்றவர்களைப்போல அவிவேகமுள்ளவராய் லோகநாயகருடைய தேவியாகிய சீதாபிராட்டியாரைச் சிறையில் வைக்கலாமா? அந்தச் சீதாபிராட்டியை விட்டுவிட்டால் நீர்கடைத்தேறுவீர். விடாமற் போவீரானால் அழிந்துபோவது சித்தம். என்று பற்பலவிதமான நல்ல புத்திமதிகளைச் சொன்னார். இதைக்கேட்ட கொடூரமான துர்ச்சிந்தையையுடையவனும், புத்திஹீனனுமான இராவணன்—இவரைப்பார்த்து, நீ எனக்குப்பின்பிறந்தவனென்கிற காரணத்தினால் பிழைத்துக்கொண்டாய். வெளியேபோய்விடு. என்கண்முன்னாகநின்றால் இறந்துபோவாயென்று சொன்னான். இதைக்கேட்டமாத்திரத்தில் அந்த இராவணனினின்றும் நீங்கி வந்துவிட்டார். இதுசத்தியமான வார்த்தையென்று சொன்னான்.

இப்படி விபீஷணர்மந்திரியான அனலன் நடந்த சவிஸ்தாரங்களையெல்லாம் விவரித்துச்சொல்லியதை மயிந்தனென்பவன் கேட்டு ஆலோசித்து, இந்தவார்த்தையைச் சுவாமியினிடத்தில் அவசியம் சொல்லவேண்டுமென்று திரும்பி, துமிந்தனையும் இளையபெருமாளையும்—வானரசேனைகளையும் நோக்கி இவ்விபீஷணரைக்காத்துக்கொண்டிருங்களென்றுசொல்லி, ஞானம்—தருமம்—தவம் இவைகளை மதிலாகவும், பொறுத்தற்கரிய பெருமை—பொறுமை இவைகளைவாயிலாகவும்கொண்ட கிருபையாகிய கோயிலிற்குள் எழுந்தருளியிருக்கின்ற சக்கரவர்த்தித்திருமகனாருடைய அருள்பெற்று அவரது சந்நிதியில் மிகுந்த பயபக்தியுடனேபோய் அவர்திருவடிகளில் தெண்டனிட்டு, எழுந்து கைகுவித்துநின்று, சுவாமி! அடியேனுக்கொரு விண்ணப்பமிருக்கின்றதென்றுசொல்ல, அதற்குத்தாமரைத்தடாகம்போன்ற திருமேனியையுடைய, ஸ்ரீராமமூர்த்தியானவர் மண்டலாகாரமாகிய சடாமகுடம்வாய்ந்த தமது சிரசையசைத்து ஓ உண்மையுள்ளநேசனே! நீ கண்டவதிசயத்தையுங் கேட்டவிஷயங்களையும்சொல்லுவாயென்று ஆஜ்ஞைசெய்ய, அதைக்கேட்ட மயிந்தன் பகவானைப்பணிந்து சொல்லத்தொடங்கினான்.



## மயிந்தன் விபீஷணர் கருத்தை ஸ்ரீராமருக் குணர்த்தல்.

கவி.

விளைவினையறிந்திலம் வீடணப்பெயர், களிமலர்க்கையினு னல்வரோடுடன்
வளவியல்வஞ்சனை யிலங்கைக்காவலற், கிளவலுஞ்சேனையி னுதியணைந்தினன்.

ஓ இராகவமூர்த்தியே! அடியேங்களுக்கு மேல்விளையுங்காரியம் இன்னதெனத் தெரியாது. குவித்த தாமரைமலர்போன்ற கரங்களையும் விபீஷணனென்கின்ற பெயரையுமுடைய ஒருவன், பிராட்டியாரை வஞ்சகத்தோடு களவுசெய்துகொண்டு போனவனும், தேவர்குலாந்தகனுமாயிருக்கின்ற இலங்காபுரியின் காவலனாகிய இராவணனுக்குத் தம்பியாம். அவன் தன்னுடைய மந்திரிகளான நான்குபேரோடுகூட நம்முடைய வானரசேனைகளின்மத்தியில்வந்து சேர்ந்தான். அப்படிவந்து சேர்ந்தவனை அனேகவானரவீரர்கள் கொல்லுங்கள், பிடியுங்கள், தள்ளுங்களென்று சீறிக்கொண்டு நெருங்கிப்போனார்கள். அதையடியேன் பார்த்துப் பொறுங்களென்று அவர்களைத் தடுத்து, அவனை நீயார்? உன்னுடைய நிலைமையென்ன சொல்லென்றுகேட்டேன். அதற்கவனது துணைவர்களில் அனலனென்றொருவன் சொன்னதாவது இந்தவிபீஷணர் கொடுமையைச்செய்துமுடித்த தன் தமையனான இராவணனைவிட்டுப்போய்ச் சேருவது துன்பமிருந்த நரகஸ்தானமே; தன்னைக்காப்பதற்கு வேறொரு இடமுமில்லையென்று கிருபாநிதியாகிய சக்கரவர்த்தித் திருமகனாரை இவர்சரணமடைந்தார். என்று சொன்னதுமன்றி, இந்தவிபீஷணன் ஸ்ரீமந்நாராயணனிடத்திற் பற்றுள்ள சிந்தனையையும்—உண்மையையும்—பிரமதேவனிடத்தில் வெகுகாலந் தபசுசெய்து வரமாகப்பெற்ற பரிசுத்தவானென்றுஞ் சொன்னான்.

மேலுமிந்தவிபீஷணன் தன்தமையனைப்பார்த்து, பதிவிரதாசிரோமணியான சீதாபிராட்டியை நீவிட்டுவிடாமற் சிறைவைத்திருப்பையேயானால், சூரியன் நேராகவாராமற் பக்கத்திற் சுற்றிப்போகும்படியான பெருமையையுடைய இந்தலங்காநகரத்தில் கிரீடங்களணிந்த உனது தலைகள் புரளுமென்று ஒருநல்ல புத்தியுஞ் சொன்னானாம். அதற்கு இராவணன் அதிககோபமுள்ளவனாய்க்கண்களில் தீப்பொறிபறக்கும்படியாகவெழுந்து, ஓ விபீஷணா! நீ ஒருக்ஷணப்பொழுதேனும் என்சமீபத்தில் நிற்பையேயாகில், உனக்கு மரணஞ்சம்பவிப்பது நிச்சயம். ஆகையால் என்கண்முன்பு நிற்காமல் அப்பாற்போய்விடென்று சொல்லவும் உடனே லங்கையைவிட்டுவந்து தேவரீரைச் சரணமடைந்தானாம். இஃதடியேன் கேள்விப்பட்ட விருத்தாந்தம். என்று மயிந்தனென்பவன் விண்ணப்பஞ் செய்தனன்.

## ஸ்ரீராமர் விபீஷணரைக்குறித்துத் துணைவர்களோடாலோசிக்க அவருட்சுக்கிரீவன் தன்கருத்துரைத்தல்.

கவி.

அப்பொழுதிராமனு மருகினன்பரை, இப்பொருள்கேட்டநீ ரியம்புவீரென
கைப்புகற்பாலனோ கழியற்பாலனோ, ஒப்புறநோக்கிநும் முணர்விநாலென்றான்.

அவ்வார்த்தையைக்கேட்ட சக்கரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் தமக்கருகில்நிற்கின்ற சுக்கிரீவமகாராஜன் முதலான அனைவர்களையும் பார்த்து, இப்போதிந்த மயிந்தன் சொன்னதைக்கேட்டீர்களே: இந்தவிபீஷணன் அடைக்கலம்புகத்தக்கவனா? நீக்கப்படத்தக்கவனா? உங்களுடைய புத்திநுட்பத்தால் சீர்தூக்கிப்பார்த்துச் சொல்லுங்களென்று நியமித்தார்.

இப்படிநியமித்த விசாலமான கமலலோசனருக்கு இராஜகாரிய விவகாரங்களை நடத்துகிறதில் காலதேசவர்த்தமானங்களைத் தகுந்தபடி ஆலோசித்தறியத்தக்க சமர்த்துள்ள இரத்தினகிரீடதாரனாகிய சுக்கிரீவமகாராஜன் தெண்டன்சமர்ப்பித்து, ஆதியான வேதங்களையும் மநுமுதலான சாஸ்திரங்களையுங் கரைகண்ட தேவரீர் இப்படிப்பட்ட காரியங்களைக்குறித்து விசாரிக்கவோ எங்களை வினவினகாரியம்? ஓ பிரமனுக்கு மேலாயிருக்கின்றவரே! ஓ கிருபாசமுத்திரமானவரே! ஆகிலும் அடியேன் சொல்லுவது தகுந்ததல்லாததும் சாஸ்திரோக்தமல்லாததுமாயிருந்தபோதிலும், என்னறிவுக்குத் தகுதியானவைகளை விண்ணப்பம் பண்ணுகின்றேன். அதைத் தேவரீர்கிருபைசெய்து திருச்செவிசாத்தியருளவேண்டும். இனிவிளைவது தேவரீருக்கே தெரியும். இப்போது சண்டைதொடங்குகிறதாயிருக்கின்றதே, அதற்காகவுமல்ல. எதிரிகள் சொல்லும்படியாக வந்திருக்க, அதை ஆலோசியாமையுமல்ல. இவன் தன்னுடைய தமயனை நீக்கிவிட்டுவந்தது தருமமாகுமா? அயோக்கியரான ராக்ஷதர்களுக்குள் யோக்கியர்களு முண்டாயிருப்பார்களா?

கவி.

*தசையுறுதம்முனைத் தாயைத்தந்தையை, மிசையுறுதாரமைப் புலனின்வேந்தனைப்*
*பசையுறவுகுதலுந் துறந்தபண்பிது, நசையுறலன்றிய நாகத்பாலதோ.*

ஓ ஸ்வாமி! பெற்றகாலமுதல் தயவுவைத்துப் போஷித்துக்கொண்டுவந்த தாய்தகப்பன்மார்களையும், தனக்குமுன்பிறந்த பிராதாவையும், தன் ஆசாரியர்களையும், அரசர்களையும் விரோதித்து; அவர்களைப் பகைக்கிறதும், அவர்களைவிட்டுப்பிரிகிறதும், யோக்கியர்களுக் கிகழ்ச்சியாகுமேயல்லாமல் சந்தோஷிக்கும்படியானதோ? இப்படியிருக்க—இவன் தன்தமையனிருக்குமிடத்திலிருந்து அவன்பிரவேசித்தயுத்தத்திற்குத் தானும்பிரவேசித்து அவனுடன் மாண்டுபோக வேண்டியதாயிருக்க, அதற்குப்பயந்து நம்மிடத்தில் வந்துசேர்ந்தான். இது உலகத்தில் வீரலட்சணத்துக்குப் பழியையுண்டாக்குமல்லவோ? ஒருவன் தர்மத்தையே விரும்பினபோதிலும், தன்னுடைய பந்துக்களையெல்லாம்விட்டுப் பலர் நகைக்கும்படியாகத் தன்மானம் புறமானதென்பதில்லாமலிருந்து எதிர்த்தபகையாளிகளிடத்திற் சேர்ந்துகொள்ளுதல் எக்காலத்திற்கும் பழியாகாமற்போகுமா? இவன் தன்னுடைய தமையனை இராவணன் வாழ்ந்திருக்கிறகாலத்தில் அவனுடைய செல்வத்தைப் பங்கிட்டு அனுபவித்துக்கொண்டிருந்து, இப்போதவனை யெதிரிகள் பகைத்து வந்திருக்கும்போது அந்தயுத்தத்தில் அவனுக்குதவியாயிராமல் நம்மிடத்தில்வந்து சேர்ந்தானானால், இவன் நமக்கு உதவியாயிருப்பனென்னலாகுமா?



ஓ கிருபாநிதியாகிய ரகுராமா! பொன்மானுருவான மாரீசன் தன்மருமகனாகிய இராவணனுடைய துற்புத்திக்கிசைந்து அவனுடையசெஞ்சோற்றுக்கடனுக்காகத் தன்பிராணனைக் கொடுத்ததைப் பார்த்திருந்தும், இந்தவிபீஷணன் தமயனென்னும் பக்ஷத்தை மறந்து விரோதங்கொண்டு வந்தவனாயிற்றே இவனை நீக்கிவிடாமல் நாம்சிநேகங்கொள்ளலாகுமோ? மூன்றுலோகத்தவர்களும் ஒருமிக்கக்கூடிக்கொண்டு உம்மோடெதிர்த்தகாலத்திலும் தேவரீர் அவர்களை யொருவழியம் பண்ணுதவராகவிருக்க நமக்குச் சத்துருவாகிய இராவணனுடைய தம்பியான இந்தவிபீஷணன் நம்மிடத்தில்வந்து சேர்ந்ததினால் நமக்கு இவன் சிநேகனாவானா? இராக்ஷசர்களையெல்லாங் கொன்று கருவறுத்துத் தர்மத்தைப் பரிபாலிக்கும்படியாகி வந்தோமென்கின்ற பெருமையையுடைய நாம் இரக்கமென்பது சிறிதுமில்லாத அவ்விராட்சசர்களைச் சிநேகமாக நாம் அங்கிகரிப்போமேயானால், நாம் பலவீனர்களென்று பிறர் நினைப்பார்களல்லவா?

பந்துக்களில் ஒருவர்க்கொருவர் பிரிந்தகாலத்திலும், ஒருவரையொருவர் நேர்கண்டகாலத்திலும், ஒருவர்பொருளை யொருவர் கைக்கொண்டகாலத்திலும், ஒருவர்க்கொருவர் அளவளாவி உண்ணுங்காலத்திலும், வித்தியாசப்படாமல் ஒரேநிலைமையா யிருப்பார்கள். நாமிந்த விபீஷணனைப் பக்ஷமாக அங்கிகரித்தபோதிலும் விஷத்தைப்போல் நமக்குத்தீமை செய்யவந்தவனேயல்லாமல், அடைக்கலமாக நம்மிடத்திற்கு வந்தவனல்லவென்று சுக்கிரீவமகாராஜன் தன்னபிப்பிராயத்தை விபரமாகச்சொன்னதைக்கேட்ட ஸ்ரீராமனானவர்; அவன்பின்னாகநிற்கின்ற அநேக சாஸ்திரக்கேள்விகளையுடையவனும், தனக்குச் சமானமில்லாத பலோஷ்டிகனுமான ஜாம்பவானைப்பார்த்து, உன்னுடைய அபிப்பிராய மென்னவென்று கேட்டனர். அதற்கு அநேககாலபரிசு வெகுகாரியங்களை அநுபவமாயறிந்த ஜாம்பவன் சொல்லுவதாயினன்.

ஜாம்பவன் தன்கருத்துரைத்தல்.

கவி.

*அறிஞரேயாயினு மரியதெவ்வரைச், செறிஞரேயாவரேற் கெடுதறிண்ணமாம்*
*நெறிதனைநோக்கினு நிருதர்நிற்பதோர், குறிநனியுளதென வுலகங்கொள்ளுமோ.*

ஓ நீலமேகம் போலும் திவ்யதிருமேனியையுடைய ஸ்ரீராமச்சந்திர சுந்தரனே! விரோதிகள் நட்பமிகுந்த அருமை பெற்ற அறிவில் சிரேஷ்டம் பெற்றவர்களாயிருக்கினும் அப்பகைவரை எவர்கள் சேர்ந்தபோதிலும், அவர்கள் கெட்டுப்போவர்களென்பது நிச்சயமே: இராட்சசர்கள் நல்ல நெறியை யுடையவர்களாயினும் உலகத்தார் அவர்களை நற்குணமுடையவர்களென்று அங்கிகரிப்பார்களோ? பகைவரானவர்கள் நம்மைச்செயிக்கொள்ளவெண்ணுவார்களாகில் ஒருசமயத்தில் தாங்கள் தோல்வியடைவதைப் போல் நடித்து, நம்மைச்செயம்பெறச் செய்வார்கள். அதிகவிசேஷ விஸ்வாசமுள்ளவர்களாகவு மிருப்பார்கள். செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்காகவுமுடிப்

யார்கள். தீர்க்கபகையாளிகளாகவு மிருக்கமாட்டார்கள். ஆனபோதிலும் அவர்களைச் சிநேகர்களாகக் கொண்டாற்பெருமை யுண்டாகுமோ? மேலும் வேதவிதிகளையும்--யாகதருமங்களையும்—மாறுபாடாக்கிப் பிராமணர்களுக்குத் துக்கத்தையும்—தேவர்களுக்குத் துன்பத்தையும்—செய்துகொண்டிருக்கின்ற மகாபாதகர்கள் நம்மிடத்தில் வந்திருந்தால், யோக்கியர்களாய் நமக்குநன்மை செய்வார்களோ?

அப்படிப்பட்டவர்கள் நம்மைச்சரணமடைய நாம் அவர்களைக்காப்போமானால், அவர்கள் பொய்யைக்கொண்டு வஞ்சனையான துரோகங்களைச்செய்தபோதிலும், அதை எதார்த்தமாகக்கொண்டு நாம் இறந்தபோதிலும், நம்முடைய ஐஸ்வரியங்களை இழந்தபோதிலும், உலகத்தவர்களெல்லாருமிகழும்பழியாகும், தர்மதேவதையுஞ்சகிக்கமாட்டாது. இன்னுமிதற்குமேல் விளைகிறதிங்கை நான்சொல்லவேண்டுமோ? தேவரீர் காட்டில் வாசம்பண்ணுகிற காலத்தில் மானுருவங்கொண்டு வந்தவனுடையவருகை யெப்படிப்பட்டதுன்பத்தைவிளைத்ததோ? அப்படிப்பட்டதாகவே இவனுடையவரவு முடியுமென்று விண்ணப்பம்பண்ணிக்கொண்டான். அதன்பிறகு எல்லாச்சாஸ்திரங்களையும்படித்து அதனுடைய உண்மைப்பொருளைப் பலரிடத்திலும் கேட்டறிந்தவனான நீலனென்கிற வானரசேனாதிபதியை ஸ்ரீராமபத்திரர்பார்த்து, உன்னுடைய அபிப்பிராயமென்னவென்றுகேட்க மிகுந்தபக்திவிசுவாசத்துடன் சொல்லலுற்றான்.

நீலன் தன் கருத்துரைத்தல்.

கவி.

பகைவரைத்துணையெனப் பற்றற் பாலவாம், வகையுளவன்னவை வாய்மில்கேள்வியாய்
தொகையுறக்கூறுவன் குரங்கின்சொல்லென, நகையுறாத்தக்கன நயக்குகோடியால்.

அளவில்லாத சாஸ்திராராய்ச்சியில் வல்லமைபெற்ற சத்துவகுணத்தையுடைய ஸ்ரீரகு குலோத்தமா! சத்ராதிகளைத்துணையெனக் கொள்ளுவதில் அநேகவகைகளுண்டு அவ்வகைகளைச் சொல்லுகிறேன் இஃது; அற்பமாகிய குரங்கினது சொல்லென்று யாவரும் நகைக்கும்படியான சொல்லாயிருக்கினும் அதை ஒரு அலக்ஷியஞ் செய்யாது சற்றுச்செவிகொடுத்து விரும்பிக் கேட்டருள் செய்யவேண்டும். தங்களுடைய பந்துக்களாயிருக்கின்றபேர்கள் யுத்தஞ்செய்கிற காலத்தில் எதிர்த்துவந்த வீரர்களுக்குப் பயந்து அவர்களைப் பலஹீனர்களாகக் காட்டி வந்தவர்களும், குறைவுபடாத திரவியங்களையிழந்து கோபிக்கின்றபேர்களும், தேகாபிமானபேர்களும், யுத்தத்தில் புறங்கொடுத்தோடிவந்தபேர்களும், தாயாதிகளுக்குச் சேரவேண்டிய தாயபாகத்தைக் கொடாமல் அதைக்கொண்டு ஐஸ்வரியவான்களாயிருக்கிறவர்களும், அன்னியரால் பிடிக்கப்பட்ட பந்துக்களைக் கொன்றுவிட்டபேர்களும், அன்னியராஜதண்டனைக்குட்பட்டவர்களை வருத்தப்படுத்தினவர்களும், பகையாளிகளிடத்தில் தம்மினத்தோர்களைவிட்டு டிழுந்தவர்களும், ஆகிய இவர்கள் நம்முடைய



பகைவர்களாயினும்-பிள்ளைகளாயினும் - நம்மிடத்தில்வந்தால், தெண்டனையடைதற் குரியவர்களேயாவார்கள்.

மேலும்—இவர்கள் தங்களுக்குள்ளும் பொறுமையுடையவர்களல்ல. நழுமுறவுசெய்யத் தக்கவர்களுமல்ல. அப்படிப்பட்ட இராசதூதர்களாகையால் நம்மைவந்து சேர்ந்தார்கள். தம்முடைய பந்துக்களுக்குக் கெடுதியுண்டாகும்படியாக அவர்களை விட்டு நீங்கி வந்தார்கள். ஆதலால் இவர்கள் மிகுந்த துணிவுடையவர்கள். இப்படிப்பட்டவர்கள்விஷயத்தில் நாமென்ன ஆலோசிக்கலாம்? இப்போது நாமிருக்கிறகாலத்தைப் பார்க்கும்போதும், தாங்களினுடைய கருத்தை ஆராயும்போதும் தமயன்மேற் கோபங்கொண்டுவந்த இவனுடைய நிலைமை இத்தன்மையதென்று நாமறியும்படியான தன்மையையுடையதாயிருக்கின்றதோ? என்று தனக்குத் தோன்றிய நியாயங்களையெடுத்துக் காட்டினான். பிறகு ஸ்ரீராமர் மற்றமந்திரிமார்களையும், அநேக வித்துவான்களையும், தனக்குச் சிநேகராயிருக்கின்றவர்களையும் பார்த்து, இந்த விபீஷணன் விஷயத்தில் உங்களுக்கிருக்கும் அபிப்பிராயமென்னவென்று கேட்டனர். அதற்கவர்களெல்லாரும் வித்தியாசப்படாமல் ஒரேமொழியாய் இவனையங்கீகரிக்கிறது கிருபாநிதியாகிய தங்களுக்குத் தகாதென்று தீர்மானமாய்ச் சொன்னார்கள்.

ஆஞ்சனேயர் தமதுகருத்தை அநுபவத்தோடுரைத்து விபீஷணரைச் சன்மானிப்பித்தல்.

கவி.

உறுபொருள்யாவருமொன்றக்கூறினர்,செறிபெருங்கேள்வியாய்கருத்தென்செப்பென
நெறிதருமாருதி யென்னுநேரிலா, அறிவனைநோக்கினு னறிவின்மேலுளான்.

இவ்வண்ணமாக யாவரும் தங்கள் தங்களுக்குத் தோன்றியவைகளையெல்லாம் எடுத்து விபீஷணரை இங்ஙனஞ் சேர்ப்பது தகாதென்று சொல்லினர். அவையனைத்துங் கேட்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் எல்லாரினு முதன்மைப்பட்டவரான அநுமானைப்பார்த்து, ஓ சமானமில்லாத மிகுந்த நல்ல அறிவையுடைய மாருதியே! உன்னுடைய அபிப்பிராயத்தையுஞ் சொல்லுகவென்று கேட்டனர்.

கவி.

இணங்கியரறிவிலரெனினுமெண்ணுங்கால்
கணங்கொளாக்கைநம்மனோர் கடன்மைகாணென
வணங்கியசென்னியன் மறைத்தவாயினன்
நுணங்கியகேள்வியா னுவல்வதாயினான்.

அதற்கந்த அதிநுட்பமான கேள்வியையுடைய ஆஞ்சனேயர் மிகுந்தபக்திவிநய விஸ்வாசத்துடனே தலைவணங்கி, கையினால் வாயைப்பொத்திக் கொண்டு, சுவாமீ! அடியேங்கள் தேவரீருடைய திருவுளத்துக்கு இணங்கும்படியாகச்சொல்லத்தக்க விவேகத்தை யுடையவர்களல்லவென்றாலும், மந்திரா

லோசனைசெய்து காரியநடத்துகிறது தேவரீர் சந்நிதியின் கடமையாதலால் அதன்படி தேவரும் கேட்கத் திருவுளங்கொண்டீர். சுவாமீ! ஆலோசித்துச் சொல்லவேண்டியவை யெவ்வளவுண்டோ? அவ்வளவையும் தேவரீருடைய சந்நிதியில் உத்தமமானது இன்னதென்று இங்குள்ள பெரியோர்களெல்லாரும் விவரமாய் விண்ணப்பஞ் செய்திருக்க, அடியேனைப் போன்றவர்களென்ன விசேஷித்துச் சொல்லவிருக்கின்றது? இந்தப் பெரியோர்கள் சொன்னஆலோசனை மிகவுமுயர்ந்ததே: ஆயினும் - அடியேன் கண்ணாரக்கண்டறிந்த சிலகாரியங்களைச் சொல்லுகிறேன். தேவரீர் அவைகட்குத் திருச்செவி சாத்தியருளவேண்டும்.

ஓ தயாநிதியாகிய தயரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரராகிய ஸ்ரீராமச்சந்திரரே! இந்த விபீஷணரைத் தீயவனென்று சந்தேகித்துச் சொல்லமாட்டேன். அடியேன் இலங்கைக்குப்போய் இராவணன் சமுகத்திற் சேர்ந்தபோது அவன் என்னைக் கொல்லும்படியாகத் தன்னுடைய கிங்கரரை யேவினான். அப்போது இந்த மகாநுபாவராகிய விபீஷணர் அவனைத்தடுத்து, பகையாளிகளுடைய தூதுவரைக் கொல்லுவது தகாது. பொல்லாத பழியாகும். மேலும் வெற்றியுமில்லை. என்றுசொல்லி அவர்களைவிலக்கி, ஸ்திரீகளைக் கொல்லுகிறதும், கண்ணில்லாத குருடர்களைக் கொல்லுகிறதும், தூதர்கள் எவ்வளவு கொடியானவர்களாயினும் அவர்களைக்கொல்லுகிறதும், சற்றும் நல்லதல்லவென்று இப்படிப்பட்ட சிறந்தவேதுக்களை இராவணனுக்குத் தெரியச் சொல்லினார். இன்னும்பிராட்டியைத் தேடிக்கொண்டு இராத்திரிகாலத்தில் இவருடைய திருமாளிகைக்குள் நான்பிரவேசித்தபோதும், அவ்விடத்திலுலாவிக்கொண்டிருந்தபோதும், நல்லசகுனங்கள் அடியேனுக்குக்காணப்பட்டனவல்லாமலும்; ஓ ஸ்ரீராமமூர்த்தியே! இன்னும் அடியேன் கண்டவைகளைச்சொல்லுகின்றேன் கேட்டருள்வீர். இவர் திருமாளிகைக்குள் மதுமாமிசங்களிருக்க நான் கண்டதில்லை. அஃதெப்போதும் தருமம் – தானம் – வந்தனை – வழிபாடு – இவை முதலானவற்றால் பிராமணர்கள் வசிக்குமிடமேபோற் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

மேலும் – இவருடைய குமாரத்தியான திரிசடையென்பவள் என் தாயாகிய சீதாபிராட்டிக் கருகிலிருந்துகொண்டு, அம்மா! இந்தத் துர்ப்புத்திமானான இராவணன் உன்னைக் கையால் தொடமாட்டான். ஒருவேளை தொடுவானானால் அவன்தலை சகஸ்திரபின்னமாய் வெடித்து, அவனும் இயமலோகத்தை யடையும்படியாகப் பிரமதேவரிட்ட ஒரு சாபமுண்டாயிருக்கின்றது. என்று இவை முதலான இனியவார்த்தைகளைச் சொல்ல அடியேன் காதாரக் கேட்டிருக்கின்றேன். ஓ துளபமாலிகாதரராகிய சுவாமீ! அன்றியும் - நெஞ்சில் வஞ்சனையுள்ளவர்களுடைய முகத்தைப் பார்த்தமாத்திரத்திலே அவரவர்களுடைய குணம் வெளியாகாமல் மறைவாகமாட்டாது. உடைந்த கப்பலை விரும்பிச் சமுத்திரத்தில்முழுகிப் போகிறவர்களைப்போல அடியேன்



இவர் விஷயத்தில் பொய்சொல்லுவேனோ? மனதிலுள்ளதை வாயாற்சொல்லுகிறதற்கு முன்னமே அவரவர்களுடைய முகங்களே வெளியாக்கிவிடும். வழிபறித்துண்போர்கள் தாங்கள்செய்யும் சோரவினைகளை இராக்காலத்தில் பள்ளத்தாக்கான மார்க்கங்களிலன்றி மேடான வெளியிடங்களில் யாவருக்குந் தோன்றும்படியாகச் செய்வார்களோ?

சுவாமீ! இலங்காதிபதியாகிய இராவணனை அலக்ஷியமாகத் தன் வாலிற்கட்டி நான்கு கடற்கரையிலு மிழுத்துக்கொண்டுதிரிந்த வாலியானவன் சுவர்க்கத்தை யடையவும் அவனுடைய பட்டத்தைச் சுக்கிரீவமஹாராஜனடையவும் வளைத்த உம்முடைய வில்வல்லமையையும், ஜயப்பிரதாபத்தையும், நல்லகுண சீலத்தையும் கேள்விப்பட்டு; உம்மையடைந்து ஞானப்பிரதேசமான பரமபதவாழ்வை யடையும்படி இந்த விபீஷணர் உம்முடைய திருவடியில் அடைக்கலம் புகுந்தார். மேலும்—மிகுந்த இராக்ஷசர்களுடைய இராஜரீகம் வேதமார்க்கத்துக்கு விரோதமான கொடுங்கோன்மையோடு கூடினதாகையால் இது நிலைத்திருக்க மாட்டாதென்று நம்பி, இந்தச் சமுத்திரஞ்சூழ்ந்த உலகமுழுவதையும் உம்முடைய தம்பியாகிய பரதாழ்வாருக்குக் கொடுத்துவிட்ட அபாரகருணையையும் சத்தியத்தையும் விரும்பிவந்தார். இவர் தகுதியல்லாதகாலத்தில் வந்தாலும் குறைவல்ல. வாலிக்குச் சமானமான பலமுள்ளவர்களாகி மூலபல சைனியங்களினுடைய வல்லமை தங்களுக்கு உதவியாக இருந்தபோதிலும், அந்த ராக்ஷசர்களுக்கு முடிவுகாலம்வந்து விட்டதென்கின்ற நம்பிக்கையினால் தம்முடையசகோதரனை உண்மையாய்ப் பிரிந்து விட்டார்.

அந்தக்கொடூரமிக்க இராட்சதர்களுடைய மாயதந்திரச்செய்கைகள் அநேகமுண்டு. அந்த வித்தையில் நன்றாய்த் தேர்ந்து பழகியிருக்கின்ற இந்த விபீஷணரொருவர் நமக்ககப்பட்டதனால், இனிநாம் எளிதில் வெற்றிபெறலாம். அந்த ராக்ஷதர்களுடைய மனதின் நிலைமையை இனி ஆராய்ந்தறிகிறது இவரால் நமக்கு மிகவும் இலேசாய் முடியத்தக்கதே: மேலும்—இவர்கள் கொடியவர்கள். இவர்களைப்பற்றி யாலோசிக்க வேண்டியதில்லை. இலங்கைக்குள்ளுள்ள ராக்ஷசர்கள் பிரமருத்திர தேவர்களிடத்திற் பெற்றிருக்கின்ற பெரியவரங்களையும், அவர்களுக்குத் தெரிந்த வஞ்சனை சூது முதலானவைகளையும் பார்க்கும்போது; அவர்களையல்லாமல் வேறொருவரும் அப்படிப்பட்ட தவங்களைச்செய்து வரம்பெற்றவர்களில்லை. அவர்களுடைய பெரியவரங்களும், அவர்களுடைய துர்க்குணமான வஞ்சனைசூது முதலானவைகளும், தேவரீர் திருக்கையிற் பிடித்திருக்கின்ற கோதண்டத்திலிருந்து புறப்படுகின்ற பாணத்தினால் வெந்து அழிந்துபோகுமென்று நினைத்து இந்த விபீஷணர் உம்முடைய திருவடிகளை யடைந்தார்.

ஜயப்பிரதாபசீலரான தேவரீர் தேவர்களாலும்-அசுரர்களாலும்-தேவதேவர்களான பிரமேந்திராதியர்களாலும் செய்துமுடித்தற் கரிதான கா

மஸ்தாபனத்தை முடிக்கும்படியாகக் கங்கணங்கட்டிக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றீர். ஆபத்தையடைந்து அபயம் புகுந்தவர்களைச் சந்தேகித்து அகற்றிவிடுவீரேயானால், ஒரு சிறுகிணற்றின் சலத்தைப் பெரிய சமுத்திரமானது சந்தேகித்து நீக்கினாற்போலாய்விடும். இந்த விபீஷணர் பகையாளியைச் சேர்ந்தவரென்றும், நமக்குச் சிநேகரல்லவென்றும், இவரைத்தள்ளிவிடுவோமேயானால்; அறிவாளிகள் பார்த்தால் நகைப்புக்கிடமாயிருக்குமல்லவா? தாயத்தில் ஒருவருக்குச் சேரவேண்டிய பாகப்பொருளையும் விளையுந்தானியங்களையும் அவர்களுக்குக்கொடாமல் தாங்களேயநுபவிச்சிப்பார்களேயானால், தந்தையர்களானாலும் - தம்பி தமையன்மார்களானாலும் - அவர்களல்லவோ பகையாளிகளாய்ப் போர்க்களத்தில் மரணமடையத்தக்கவர்கள்? ஆகையினாலே இந்த விபீஷணருடைய வரவு நல்ல வரவாகுமென்று அடியேனுடையமனதில் நினைத்திருக்கின்றேன். வேதத்திற்குச்சமானமான தேவரீருடைய திருவுள்ளக்குறிப்பு எப்படிப்பட்டதோ தெரியாது, என்று ஆஞ்சனேயர் சொல்லி முடித்தனர்.

இப்படி நான்கு முகங்களோடுங்கூடிய பிரமனாலும் கற்றறிதற்கருமையான சாஸ்திரங்களெல்லாவற்றையும் சூரியனுடைய கதிக்குமுன்னிட்டு அவனுடைய சன்னிதானத்திற் கற்றறிந்தவரும், மிகவுமகன்ற சமுத்திரத்தைத்தாண்டி இலங்கைக்குப்போய் ஜயம்பெற்று இந்தலோகங்களையெல்லாம் ரக்ஷிக்கும்படியாக அவதரித்தவருமான மாருதியானவர்சொன்ன அபிமதவார்த்தையைச் சக்கரவர்த்தித் திருக்குமாரர் தமது திருச்செவியை சாய்த்து மிகுந்த சந்தோஷத்தோடு கேட்டருளி, அந்தச்சமூகத்திலிருக்கின்ற புத்திமான்களெல்லாரும் சபாஷென்று மெச்சிக்கொள்ள அவர்களைப்பார்த்து, இந்த ஆஞ்சனேயர்சொன்னது மகாசிரேஷ்டமான ஆலோசனையாகும். இதற்குமேல் நீங்களெல்லாரும் தெளியும்படியாகச் சொல்லுகின்றேன் கேளுங்கள், என்று அவர்கள்கேட்கும்படியாக ஸ்ரீராமமூர்த்தியானவர் அவர்களைப்பார்த்துத் திருவாய்மலர்ந்தருளிச் சொல்லுகின்றார்.

ஓ எனதன்பிற்சிறந்த அருந்துணைவர்களே! இந்தவிபீஷணன் என்னையடைக்கலம் புகவேண்டுமென்று நினைத்துவந்த இந்தக்காலமும், அவனுடைய மனதில்கம்மேனுண்டான விருப்பமும், அவனுக்கு இராஜஐஸ்வரியத்தின்மேல் ஆசையும் எத்தவிதமாயிருந்தபோதிலும் நம்மிடத்திலடைக்கலம்புகுந்த இத்தப்பெரிய தர்மமொன்றினால்மாத்திரமே தப்பானவனல்லவென்று திருப்திகரமாயிருக்கின்றது. இனிமேல் வேறேசொல்லவேண்டிய வார்த்தையொன்றுமில்லை. இந்தஆஞ்சனேயர் தெளிந்துசொன்ன ஆலோசனையே தகுந்த ஆலோசனை. இப்படியில்லாமல் வேறொன்றினால் வெற்றிவந்தாலுஞ்சரி; தாழ்வுவந்தாலுஞ்சரி; அவைகளெனக்கங்கீகாரமல்ல, இவன் நம்மையடுத்து அடைக்கலமென்று சொன்னபோதே, இவனை அங்கீகரிக்கிறதினாலெனக்குத் தோல்விவந்தபோதிலும் - மரணம்வந்தபோதிலும் - அதுவேயென்பக்ஷம். என்னை



யடைக்கலம்புகுந்தவன் புண்ணியமொன்றுமில்லாமல் மாத்திரமல்ல, தகப்பனையும் தாயையும் கொன்றுவிட்டு அந்தபாதகத்துடனே வந்தபோதிலும் அவனேயென்னக்கு இனிமையைச்செய்கிற சிநேகனாகும். அந்தவடைக்கலத்தைத் தவறினவனுக்கல்லவோ இம்மையிற்பழியு மறுமையில் நரகமுமுண்டாகும்?

என் பிதாவர்க்கங்களில் சிபிச்சக்கரவர்த்தியானவர் புறாவுக்காகத் தசை பெறின தன்மையையெங்கள் வம்சத்தவர்களுக்குள்ளினதந்த வறியுமாறவரையில் மறந்துபோனவர்களில்லை. அப்படியிருக்க-என்னை அடைக்கலமென்று வந்து சேர்ந்தவனைத் துறந்துவிடுவேனேயானால், நானிருந்துஞ்செத்தவனேயல்லாது வேறல்ல. எல்லாச்சீவகோடிகளையுஞ் சிருஷ்டித்து ரக்ஷித்துக்கொண்டுவருகிற சாக்ஷாத்நாராயணமூர்த்தியானவர் உலகத்துக்கெல்லாம் தாமே தர்மதேவதையும் அந்தந்தஜீவர்களுக்குள் அந்தரியாமியுமாயிருந்து தமது திருவடிகளை அடைக்கலமாகச் சேர்ந்தபேர்களுக்கு மாத்திரம் இகத்திலைஸ்வரியத்தையும் மறுமையில் பரமபதத்தையும் கொடுத்தருள்வரென்றால், பின்னைவேறென்ன திருஷ்டாந்தம் சொல்லவேண்டும்? ஐயோ! என்னை "ரக்ஷிப்பார்" களென்று சீதையானவளழுது புலம்பும்போது, அம்மா! பயப்படாதே; உனக்குநான் துணையிருக்கின்றேனென்று கிருபையோடுவந்து இரக்கவார்த்தைகூறிய திரிசடையும், இந்த இராவணனாகிய பாதகனுடனே பெரியயுத்தத்தைச்செய்து ஜயம்பெற்றுத் தெய்வமரணத்தையடைந்த ஜடாயுவாகிய என்பிதா பெற்ற பெருமையும் எனக்குச்சாகவில்லவோ?

"மேலும் - அபயமென்றடைக்கலர்களுடைய உயிரைத் தன்னுயிர்போலிரக்ஷியாத சண்டாளனும், ஒருவன்செய்த நன்றியை நினையாதவனும், களங்கமறப்பரிசோதியாமல் வேதநிச்சயமான மெய்ப்பொருளைப் பொய்யென்று சொன்னவனும், "ஆகியவிவர்களெல்லா மீளாத நரகமடைவார்கள். தேவர்களுக்கு இமிசைசெய்த அநியாயனாகிய இராவணனை நான் கொல்லுவேனென்று சபதம்பண்ணிக்கொண்டது சீதைக்காகவா? என்னை அபயமடைந்த ரிஷிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணினதற்காகவா? இந்தவாக்குத்தத்த நிறைவேற்றுவதற்கு அந்தச்சீதை காரணமாயினளேயன்றி வேறல்ல. ஒருயானையானது முதலையினாலே இம்சிக்கப்பட்டபோது ஆதிமூலமேயானவனே பரப்பிரம்மமே உமக்கபயம். என்னைரக்ஷிக்கவேண்டும் என்று கூப்பிட்ட அந்தக்காலத்தில் வேதோபநிஷத்தினாலு "மறியப்படாத மெய்ப்பொருளான சாக்ஷாத் நாராயணமூர்த்தி அந்தக்கஜேந்திராழ்வானுக்குச் சேவைசாதித்து இரக்ஷித்தாரென்கிறவார்த்தையை ஞானவான்கள்மறந்துவிடுவார்களோ? நம்முடையகாரியமாகாவிட்டாலும் போகட்டும். அடைக்கலம்புகுந்தவர்களை இரட்சிக்கிறதைப்பார்க்கிலும் தயாசீலர்களுக்குப்பெருமை வேறுண்டோ? இவற்றையெல்லாம் நீங்கள் நன்றுயோசித்துப் பாருங்கள்.

## ஸ்ரீராமர் விபீஷணரை யழைக்க சுக்கிரீவனுக்கருளல்.

கவி.

ஆதலானபயமென்ற பொழுதத்தேயபயதானம்
ஈதலேகடப்பாடென்ப தியம்பினீரென்பால்வைத்த
காதலானினிவேறெண்ணக் கடவதென்கதிரோன்மைந்த
கோதிலாதவனைநீயே யென்வயிற்கொணர்தியென்றான்.

ஓ சகாயர்களே! தன்னை அடைக்கலமாகவடைந்தபேர்கள் அற்பர்களாயிருந்தபோதிலும் தன்னுயிரைக்கொடுத்தாவது அவர்களை இரட்சிக்கிலையாமற் போவேனேயானால், அப்படிப்பட்டவன் சக்கரவர்த்தியானபோதிலும் அவனுக்கென்ன மேன்மையுண்டாகும்? ஆனபடியினாலே அபயமென்று சொன்னமாத்திரத்தில் அவனுக்கபயதானங் கொடுக்கவேண்டியதே தகுதியாகும். நீங்கள்சொன்னதெல்லாம் என்னிடத்தி லுங்களுக்குண்டான பக்ஷத்தினாலேயன்றி வேறல்ல. இனியவ்விபீஷணனைப்பற்றி நாமொன்று மாலோசிக்கவேண்டியதில்லை. ஓ சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜனே! இந்தக்ஷணம்போய் அந்தவிபீஷணனை என்னிடத்திற்கு அழைத்துக்கொண்டு வரக்கடவாயென்று நியமித்தருளினார்.

அம்மாத்திரத்தில் சுக்கிரீவமகாராஜன் தேவராஜனான சக்கரவர்த்தித் திருமகனார் திருவுள்ளத்தைப்போலத் தன்மனமுங்களித்து, இதோ அடியேனழைத்துக்கொண்டு வருகிறேனென்று வேகமாய்ப் புறப்பட்டுச் சத்தியவந்தரான விபீஷணாழ்வாரிடத்திற்கு வருகின்றார். அப்போது சுக்கிரீவமகாராஜனை மயிந்தனென்கிற சேனைத்தலைவன்விபீஷணருக்குக்காட்டி, உம்மை யழைத்துக்கொண்டு வரும்படியாக ஸ்வாமிநியமித்தார். அதனாலும்மை எதிர்கொள்ளும்படியாக பெரியமலைக்குச் சமானமான தோள்களையுடைய சூரியகுமாரர் எழுந்தருளினார். என்று சொன்னமாத்திரத்திற் கலங்கிக்கொண்டிருந்த உள்ளத்தை யுடையவரான விபீஷணாழ்வார் மிகுந்தமனக்களிப்புடனே தாமுமவரெதிர் நடந்துபோனார்: அயோக்கியர்களாயிருக்கின்றபேர்கள் நல்லவர்களுடன் தங்களாயுளுள்ளவரையில் பழகினபோதிலும் நட்பாகமாட்டார்களென்றும், புத்திமான்கள் அந்நல்லவர்களைக்கண்டபோதே சிநேகமாவார்களென்றுங் கூறுகின்ற நீதியின்படியே; இருவருடையமனமு மேகமாகும்படி விபீஷணாழ்வாருஞ் சுக்கிரீவமகாராஜனும் இரவும்பகலு மொரேகாலத்திற் கலந்ததுபோல ஒருவரையொருவ ராலிங்கனம்பண்ணிகின்றார்கள்.

## சுக்கிரீவன் ஸ்ரீராமபிரான் கட்டளைப்படி விபீஷணரையழைத்தல்.

கவி.

தொழுவினர்நின்றகாலைத் தாமரைக்கண்ணனன்றக்கண்
முழுவதற்குணத்திற்சேற்ற முறைமையாலுவகைமூள
வழுவலிலபயமுன்பால் வழங்கினனவன்பொற்பாதம்
தொழுதியிவ்விரைவினென்னாக் கதிரவன்சிறுவன்சொன்னான்.



இவ்வண்ணம் ஒருவருக்கொருவர் தழுவுகின்றபோது சுக்கிரீவமகாராஜன் விபீஷணரைப்பார்த்து, ஓ சற்புருஷசிரேஷ்டரே! நீர் சரணமடைந்த சக்கரவர்த்தித்திருமகனாகிய ஸ்ரீராமர் தங்களுடைய வம்சத்துக்குத்தக்க முறைமைப்படி உம்மிடத்திற் கிருபைகூர்ந்து அபயதானம் பண்ணினார். இனிச்சீக்கிரமாய்வந்து, அவர் திருவடிகளுக்குத் தெண்டன்சமர்ப்பியும் என்று சொல்லினான்.

## ஸ்ரீராமபிரான் உத்தரவுபடி சுக்கிரீவன் விபீஷணரை யழைக்க அவ்விபீஷணர் ஆனந்தங்கொண்டாடல்.

கவி.

சிங்கவேறனையான்சொன்ன வாசகஞ்செவிபுகாமுன்
கங்குலினிறத்தினன்றன் கண்மழைத்தாரைகான்ற
அங்கமுமனமுந்தன்னைக் குளிர்ந்ததவ்வகத்தையிக்குப்
பொங்கியவுவகையென்னப் பொடித்தனவுரோமம்புள்ளி.

இப்படி ஆண்சிங்கம்போன்ற சுக்கிரீவமகாராஜன் சொன்னவார்த்தை செவியில் நுழைவதற்கு முன்னமே கறுத்த நிறத்தையுடைய விபீஷணாழ்வார் தமதிரண்டு கண்களிலுமிருந்து ஆனந்தபாஷ்பப் பிரவாகம் கரைபுரண்டோடவும், தேகங்குளிரவும், சந்தோஷமிகுதியினாலே உடல் மயிர்க்குச்செறியவுமாகி; சர்வசங்கபரித்தியாகம் பண்ணினவர்களான ஜீவன்முக்தர்களுக்கு நண்பரான ஸ்ரீராகவபிரான் என்னையும் உறவென்று திருவுளங்கொண்டு அபயதானம் பண்ணினாரோ? ஆ! ஆ! என்னபாக்கியம்? என்னபாக்கியம்? இதுவன்றோ யான்செய்த தவத்திற்குரிய சிலாக்கியம்? இன்றன்றோ நான் என்னுடைய பாபவினைகளெல்லாம்போக்கி, அந்தப் பாபகாரியமான மாயவாழ்க்கையோடுங்கூடிய என்னுடைய பிறவியையும் கடந்து, மறுமையிலடையவேண்டிய நரகத்தையு நீங்கிவிட்டேன்.

அந்தோ! செம்பஞ்சைப்போலுஞ் சிவந்த மிருதுவான திருவடிகளையுடைய லோகமாதாவைப் பிரிவுசெய்த இராவணனுக்குத்தம்பியான என்னையும் வரும்படியாகத் திருவுள்ளங்கொண்டாரே: மயக்கநெஞ்சை யுடையவனான இராவணன் என்சொல்லைமறுத்தபோதே, சூரியனுடைய தேரும் இலங்கைமேலோடுமல்லவா? எம்பெருமானுடைய கிருபை இவ்வளவு சௌலப்பியமாயிருக்குமேயானால், இராக்ஷசர்களுக்கினி பிழைப்புண்டாகுமோ? துஷ்டர்களாயினோர் சகிக்கக்கூடாத இம்சைகளைச் செய்தபோதிலும், கிருபாநிதிகளான பெரியோர்கள் தங்களுக்குச் சுபாவமானநிலைமையில் நின்றுந் தப்பமாட்டார்களன்றோ? முன்னந்தேவர்கள் மந்தரமென்னு மோர்பெரியமலையை மத்தியில்நிறுத்திச் சின்னபின்னமாகக் கடைந்தகாலத்திலும், சமுத்திரமானது அவர்கள் பிழைக்கும்படியாக அமிர்தத்தைக் கொடுத்ததன்றோ? என்று சொன்னபோது மிகுந்த அன்புடையவரான சுக்கிரீவமகாராஜன் விபீஷணரைப்பார்த்து; நம்முடைய சுவாமியானவர் நல்லவர் தீயவரென்

று கருதமாட்டார். தமது திருவடிகளிற் சரணமடைந்தவர்களைக் கடாக்ஷிக்க வேணுமென்கின்ற கருத்தினையுடைய பரமாத்துமா. ஆதலால் தாமதஞ்செய்யாமலெழுந்தருளுமென்றழைத்துக்கொண்டு, அநேகமலைகள்சூழ்ந்துகொண்டு வரும்படியாக இமயமலையும் மேருமலையும் வருகிறதுபோலத் தபோபலத்தையடைந்தவர்களான விபீஷணாழ்வாரும் சுக்கிரீவமகாராஜனும் வானரவீரர்சூழ்ந்துவர எழுமராமரங்களூடுருவும்படியாகப் பாணப்பிரயோகஞ்செய்த பிரதாபசீலரான சக்கரவர்த்தித் திருமகனுடைய சன்னிதிக்குமுன் வந்தார்கள்.

## விபீஷணர் ஸ்ரீராமரைக்கண்டுசேவித்து ஆனந்தபரவசராதல்.

கவி.

மார்க்கடஞ்சூழ்ந்தவைப்பி னங்கதன்மருங்குகாப்ப
நாற்கடலுடுத்தபாரி னாயகன்புதல்வனுமப்
பாற்கடல்சுற்றவிற்கை வடவரைபாங்குநிற்பக்
கார்க்கடல்கமலம்பூத்த தெனப்பொலிவானைக்கண்டான்.

அளவற்ற வானரசைனியங்கள் சூழ்ந்து அக்கடற்கரையின்கண் அங்கதனாகிய வானரச்செல்வன் உடைவாளேந்தி அருகேநிற்க, தம்பியாகிய இலக்ஷுமணப்பெருமான் பரியவில்லைச்சுமந்து மகமேருகிரியைப்போல ஓர்புறமிருக்க, கருங்கடலில் தாமரைக்காடு பூத்ததைப்போலும் அழகிய திருமேனியையுடையவராயும், தேவர்கள்வணங்கி வேண்டிக்கொள்ள களங்கமற்ற அலைகளோடு விளங்கிக்கொண்டிருக்கின்ற பாற்கடலினது நடுவில் யோகநித்திரையைவிட்டு எழுந்தருளியிருக்கின்ற நாதனைப்போற் பிரகாசிக்கின்றவராயும்; அச்சமுத்திரத்தினலைகளே புருவமாகவும், வெள்ளியமணல்வெளியே கண்ணினுட் பிரதேசவெண்மையாகவும், தாம் நீலநிறத்தோடு அங்கெழுந்தருளியிருந்ததலே கண்ணின் கருவிழியாகவுமிருத்தலால் சீதாபிராட்டியாரின் கண்மணியையொப்பானவராயும்; மேகத்தை வாகனமாகவுடைய தேவேந்திரன் தன்வில்லைவிட்டிருத்தற்போல இரத்தினாபரணங்களை நீக்கிப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற திருமார்பையுடையவராயும், கடலைக்கடையும்போது மந்தரகிரியிற்பூட்டிய வாசுகியைக்கழற்றி விட்டதுபோல இரத்தினகங்கணங்கள் நீங்கிய திருத்தோள்களையுடையவராயும், தனது பிரகாசத்தை நீக்கி கிருபையினாலே அமிர்தத்தைப் பொழிகின்ற சோடச கலைகளையுடைய சந்திரனுக்குச்சமானமான திருமுகத்தையுடையவராயும், தமதுபிதாவாற் கொடுத்த ராஜமுடியைத்தமது திருத்தம்பியாருக்குக் கொடுத்தருளிச் சிறியதாயாரால் பெற்றஜடா மகுடத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற திருமுடியையுடையவருமாயெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமமூர்த்தியை விபீஷணாழ்வார் தமதுகண்ணாரக் கண்டு தரிசித்தனர்.

கவி.

வீரனைநோக்கியங்க மென்மயிர்சிலிர்ப்பக்கண்ணீர்
வாரநெஞ்சுருகிச்செங்க ணஞ்சனமலையன்றாகில்



கார்முகில்கமலம்பூத்த தன்றிவன்கண்ணனல்லால்
ஆருள்சரக்குநீதி யறநிறங்கரிதோவென்றான்.

இவ்விதத் தன்மையையுடையவராகி யிருக்கின்ற ஸ்ரீராமச்சந்திரப்பிரபுவைப்பார்த்தது தன் தேகத்திலுள்ளமிருதுவாகிய உரோமங்கள்சிலிர்க்கக் கண்களினின்றும் ஆனந்தபாஷ்பமொழுக மனமானதுருகி, சிவந்தகண்களும் அஞ்சனமலையைப் போலும் திருமேனியுமுடைய எங்கள் மகாவிஷ்ணுவா யிராவிடில் கறுத்தமேகத்தில் மலர்ந்த சிவந்த தாமரைமலரைப் போலும் பத்தவயவத் தாமரைகளுந்தோற்று. ஆகையால்சாக்ஷாத் வைகுந்தவாச நாதனேயன்றி மற்றொருவரல்ல. தன்னையடைந்தவர்கட்கு நிறைந்த கிருபையைப்பெருக்கும் நீதியாகிய தருமத்தின் மேனி கருநிறந்தானோ வென்றெண்ணி, மின்மினிப்பூச்சியின் ஒளிதோன்றி மறைவதுபோல அழிந்துபோகும் பிறவியையும் தமக்குரிமையான இராஜகிரீடத்தையும் நீக்கிவிட்டு, ஸ்வாமியினுடைய திருவடித்தாமரையினை சிரசிற் சூடிக்கொள்ளவந்த விபீஷணர் இன்னும் யாதுநினைத்தனரெனில், எனக்குப் பிதாவாகிய புலஸ்தியருக்குப் பிரபிதாமகனையும், பாட்டனாகிய காசிபருக்குப் பிதாமகனையும், பிரபிதாமகனாகிய பிரமனுக்குப் பிதாவாயும், எனக்குநேர் முப்பாட்டனையும் இங்கெழுந்தருளிய ஸ்ரீராமமூர்த்தியை நான்வணங்கும்படியாக வெனக்கு உபகாரஞ்செய்த என் தமயனாகிய இராவணனுக்கு யாது உபகாரஞ்செய்யப் போகிறேனென்றெண்ணினார். அன்றியும் - மிகுந்ததபசு செய்தபேர்களுடைய பிறவிப்பிணியைப் போக்கு மருந்தாகவிருக்கின்ற சாக்ஷாத் நாராயணனே வில்லிலம்பைப் பூட்டிக்கொண்டு இந்த அரக்கர்களைக் கொல்லும்படி நின்றனையின், இவர்கள் பெருமையை என்னசொல்லப் போகிறேன்? ஆதலால் - இந்த அரக்கர்கள் அளவில்லாத அருந்தவஞ்செய்தவர்களேயென்றுகூறி ஆச்சரியமானசராய்த் தமது இரண்டுகைகளையு மிரத்தினகிரீடந் தரிக்குஞ் சிரத்தின்மேற் கூப்பிக்கொண்டுவருகின்றனர்.

இப்படி ஆனந்தபரவசராய்வருகின்ற விபீஷணரானவர் கல்லுமரமு முருகும்படியான காட்சியையுடைய கிருபாமூர்த்தியாகிய ஸ்ரீராமச்சந்திரர் இரக்கத்துடன் கடாக்ஷித்தருளும் போதெல்லாம் தண்டஞ்சமர்ப்பித்துக் கொண்டேபோய் சர்வாபீஷ்டங்களையு நிறைவேற்றும்படியான இரண்டுதிருவடிகளும் தமது சிரசிற்பொருந்த நமஸ்காரம்பண்ணினார்.

## ஸ்ரீராமர் விபீஷணருக்கு இலங்காதிபத்தியமளித்து மகுடஞ்சூட்டுதல்.

கவி.

அழிந்தருபிறவியென்னு மகத்தியன்முகத்திற்காட்ட
வழிந்தகண்ணீரின்மண்ணின் மார்புறவணங்கினனைப்
பொழிந்ததோர்கருணைதன்னாற் புல்லினனென்றுதோன்ற
எழுந்தினிதிருத்தியென்று மலர்க்கையினிருக்கையீந்தான்,
ஆழியானவனைநோக்கி யருள்சுரந்துவகைதூண்ட
எழிலேடெழாய்நின்ற வுலகுமென்பெயருமென்றான்.

வாழுநாளன் றகாறும் வானெயிற் றரக்கர்வைகும்
தாழ்கடலிலங்கைச்செல்வ நின்னதேதக்கதென்றான்.

தம்முடைய பிறவியென்னுந் துன்பம் ஒழிந்துபோய் விட்டதென்று கிளைவு முகத்திலே பிரகாசிக்கவும் - ஆனந்தக்கண்ணீரோடு பூமியில் மார்புபடியும்படியாகவும் - அனந்தமுறை கீழேவிழுந்தும் புரளுவர். மீட்டுமெழுந்து நிர்த்தமாடுவார். யான் பெற்றபேறுக் கிணையுண்டோவென்று ஆனந்திப்பார். இப்படியாகச்சொல்லுதற்கரிய பிரமானந்தசாகரத்தில் மூழ்கியிருக்கின்றவிபீஷணாழ்வாரை ஸ்ரீராமபத்திரானவர் கிருபையுடனே ஆலிங்கனம்பண்ணினது போலக் கடாக்ஷித்து, எழுந்திருக்கக்கடவாயென்று நியமித்து. தமது திருக்கையினால் இருக்கும்படி சைகை பண்ணி, மிகுந்த சந்தோஷம் பொங்கும்படியாக அவரைக்கிருபையோடும் பார்த்து, ஓ விபீஷண மகாராஜனே! இத்தப்பதினாலு லோகங்களும் - என்பெயரும் - எத்தனைகால மிருக்குமோ? அதுபரியந்தம் நீர் அழியாமல் சிரஞ்சீவியாகவும், இராக்ஷசர்களுக்கு வாசமாகவிருக்கின்ற இவ்விலங்கையினைஸ்வரியமெல்லாம் உமக்கேயாகும்படியாகவும் இப்பொழுதே கொடுத்தேனென்று வாக்குத்தத்தம் பண்ணியருளினார்.

இப்படி சுவாமி அருளிச்செய்த கிருபையைப்பார்த்தீரோ? அவரால் எல்லாப்பெருமையையும் பெற்ற விபீஷணாழ்வாருடைய தர்மசிந்தையை யெண்ணியோ? வேறென்ன காரணத்தினாலேயோ? வாக்குத்தத்தம் பண்ணின மாத்திரத்தில் உலகத்திலுள்ள சராசரங்களெல்லாம் தனித்தனியே தமக்கே வாழ்வுண்டானது போலப் பெருங்கோஷமாகச் சத்தமிட்டன. பிறகு கிருதார்த்தனானேனென்று அடிக்கடி வணங்கிக் கொண்டுநின்ற அஞ்சனம் போன்ற நிறத்தையுடைய விபீஷணாழ்வாரிடத்தில் ஸ்ரீராமர் கிருபைகூர்ந்து தமதருகில் நிற்கின்ற இலக்ஷ்மணரைப்பார்த்து, ஓ நித்திரைசெய்யாத தேத்திறத்தையுடைய ஐயனே! அடைக்கலம்புகுந்து நமக்குத்துணைவராய் குற்றமற்ற கீர்த்தியோடுங்கூடிய விவருக்கு முடிசூட்டக் கடவாயென்று நியமித்தார். அதைக்கேட்ட மாத்திரத்தில் மேல்விளையுங் காரியங்களையெல்லா மறியும்படியான புத்தியையுடைய விபீஷணர் ஸ்ரீராமரை நமஸ்கரித்து, சுவாமி! எனக்கெக்காலு மழியாத அளவிறந்த பெருமையைத் தரத்தக்க நல்லசெல்வத்தை யருளிச்செய்திரேயாயினும், பரதாழ்வாருக்குப்பாதுகை முடிசூட்டியது போல் திருட்டுச்சுபாவமுள்ள இராக்ஷசனான இராவணனுக்குத் தம்பியென்கின்ற சம்பந்தமொழிந்து அடியேன் கிருதார்த்தனாக என்பொருட்டும் தேவரீர் தமது திருப்பாதுகையாகிய மௌலியை அடியேனுக்கும் சூட்டியருளவேண்டுமென்று விண்ணப்பம்பண்ணினார்.

அதைக்கேட்ட ஜகத்ரக்ஷகனாகிய சீதாபிராமன் சொல்லுகின்றார். ஓ விபீஷணமகாராஜனே! நாங்கள்முதலில் நான்குசகோதரர்களாகப் பிறந்தோம். அப்பால் குகனோடுசேர்ந்து ஐந்துபேராயினோம். மேருகிரியைச் சுற்றிவருகின்ற சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜனைச் சேர்ந்து ஆறுபேராயினோம்.



இப்போது எங்களிடத்தில்வைத்த அன்பினாலே இங்கேவந்துசேர்ந்த மனப்பூரணமான காதலையுடைய உன்னோடு ஏழுபேராயினோம். இருள்சூழ்ந்த தடர்ந்த நெடியகாட்டிற்கு என்னைப் போகும்படியாக நியமித்த உம்முடையபிதாவாகிய தசரதமகாராஜனும் இந்தப்புத்திரர்களால் மிகுந்த கீர்த்தியையடைந்தனையா விபீஷணரேயென்றார். இப்படியென்று சொன்ன சுவாமியினுடைய வார்த்தையை விபீஷணர்கேட்டுச் சொல்லுகின்றார்.

கவி.

நடுவினிப்பகர்வதென்னே நாயகநாயினேனை
உடனுதித்தவர்களோடு மொருவனென் றுரைசெய்தாய்
அடிமையிற்சிறந்தேனென்று வயிர்ப்பொடுச்சரித்தித்
தொடுகழற்செம்பொன்மௌலி சென்னியிற்சூட்டிக்கொண்டான்.

சுவாமி! சர்வலோகரக்ஷகநாயகனேதேவரீர் இனி வேறென்ன சொல்லவேண்டியதிருக்கின்றது? நாய்க்குச்சமானமான அடியேனைத் தேவரீருடன் பிறந்தவர்களோடொருவனென்று மருளிச்செய்தீர். ஆகையால் நான் அடியவர்களுக்குள் சிறப்புற்றேனென்று சொல்லி, சந்தேகபய நிவாரணராய் ஸ்ரீராகவபிரானுடைய திருவடிச்சுவடேறிய பாதுகையைத் தமது சௌர்யகிரீடந் தரிக்கும்படியான சிரசிற்சூட்டிக்கொண்டு, சூரியனைத்தனதுச்சியிற்கொண்ட ஓர் பெரியமலையைப்போல் விபீஷணர் நின்றனர்.

இப்படிநிற்கின்ற இலங்காதிபதியான விபீஷணாழ்வாரைப் பார்த்து, ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் களித்தார்கள். அப்பால் சுக்கிரீவமகாராஜன் முதலான வானரர்களெல்லாம் சந்தோஷித்தார்கள். தேவர்கள் புஷ்பவருஷமும் சொர்ணவருஷமும் வருஷித்து மங்களங் கூறினார்கள். சப்தசமுத்திரங்களும், சப்தமேகங்களும் சப்தித்தன. தேவதுந்துபியும் தேவசங்கமு முழங்கின. அமிர்தத்திற்குச் சமானமான சொல்லையுடைய சீதாபிராட்டியார் விஷயத்தில் முறைமைதப்பி அபசாரப்பட்ட என்னுடைய வம்சத்திலுண்டான ராக்ஷசகுலம் இப்போதுதான் ஸ்ரேஷ்டத்தை யடைந்ததென்று பிரமதேவர் துக்கநிவாரணமாயினார். பிறகு தர்மதேவதையும் இராவணனுடைய செல்வமழிந்துபோய்விட்டதென்று ஆர்த்துக்கூத்தாடி அபரிமிதமாகச்சந்தோஷித்தது. இப்படிப்பட்ட காலத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் இலங்காதிபத்திய ஐஸ்வரியமெல்லாம் விபீஷணாழ்வார் பெற்றதைப் பலரும் கேட்டறியும்படியாக எங்கும் கட்டியங்கூறும்படிச் செய்து, அங்கேதமது பக்கத்தில் அதிக விஸ்வாசத்துடன் வாய்பொத்திக்கொண்டு நிற்கின்ற சுக்கிரீவமகாராஜனையும், இளையபெருமாளாகிய லக்ஷ்மணரையும் பார்த்து, நீங்களிருவரும் சகல வானரப்படைகளுடன் இவரை நம்முடைய பாடிவீட்டைச்சுற்றி ஊர்க்கோலஞ் செய்வியுங்களென்று நியமித்தார்.

அந்தப்படியே விபீஷணாழ்வாரை இரண்டு திருவடிச்சுவட்டைத் தரித்த முடியுடனே சந்தன விமானத்திலேற்றி அந்த விமானத்தை வானரவீரர்கள்

சுமந்துகொள்ளவும், பலவானரசைனியங்கள் பந்திபந்தியாகக்கூடி, ஓ இந்திர போக ஐஸ்வரியத்தையடைந்த இலங்காதிபதியே! எச்சரிக்கை பராக்: பராக்: என்றுகட்டியம் கூறிக்கொண்டு ஸ்ரீராமருடைய பாடிக்கூடாரத்தை வெகு விநோதமாகிய வேடிக்கையுடனே சுற்றி நகர்வலம் வருவதைப்போல் வந்தார்கள். மேலாகிய பரஞானத்தை அடைந்தவர்களால் தேடும்படியாக நின்ற பரமபதநாதனாகிய நமது சுதீராப்திவாசனது திருவடிகளைப் பிரமதேவன் அளவற்ற கற்பங்கள் தேடியுங்காணாது, தனது சந்ததியாரில் ஒருவராகிய விபீஷணருக்கு எளிதில் கிடைத்து அவர் சிரஸிற் சூடிக்கொள்ளும்படியாக நேரிட்ட தவமகிமையால் தானும் அன்றுதான் கண்டவனாய் ஆனந்தித்து அப்பகவானுக்குக் கைங்கரியங்களைச் செய்து புளிப்பாரும்படி ஸ்நானஞ்செய்த ஜலத்தில் யாராவது மூழ்குவார்களேயாகில் அவர்களது பஞ்சமகா பாதகங்களும் போய்த் தேவர்களாவார்களெனில் அப்பகவானுடைய திருவடிகளைச் சிரசிற் சூடிக்கொள்பவர்களையும் பதவி இன்னதென்று யாவராற் சொல்லக்கூடும். இரிஷிகளும், தேவர்களும், ஞானவான்களும், பக்திமான்களும், யாகாதிகளைச் செய்துமுடிக்கின்றவர்களும், மகத்தாகிய தபசிகளும், இந்தவிபீஷணரும்வான் பெற்றபேறு இதுவரையிலும் யார் பெற்றாரென்று ஆச்சரியப்பட்டார்கள்.

விபீஷண னடைக்கலப் படலம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்

ஐந்தாவது,

# இலங்கை கேள்விப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் விபீஷணருக்கு வேண்டியசிறப்பை நடத்தியபின் இராஜசின்னங்களுண்டா யெங்கும்பாலிக. அவதியான வர் பிராட்டியின் பிரிவைச் சகிக்கக்கூடாமையால் வருந்தக்கண்ட சுக்கிரீவ மகாராஜன்வந்து அவரைத்தேற்றினார்: உடனே பச்சுக்கிரீவமகாராஜனுவ் விபீஷணரையழைப்பித்து இலங்கைமாநகரத்தின் சிறப்பும், அதிலுள்ள உக்ர விச்சைனியங்களின் திறமும், இராவணாதிகளின் பராக்கிரமமும், இலங்கையிலாஞ்சனேயராற் செய்த வீரப்பாடும் இவ்வகையினவென்றுகேட்ட, இரகுநந்தனர் ஆஞ்சநேயருடைய வாற்றலுக் ககமகிழ்ந்துபசரித்தமை சொல்லப்படுகின்றது.

இரகுநந்தனர் பிராட்டியின் பிரிவுக்காற்றாராய்வருந்தச் சுக்கிரீவன்தேற்றுதல்.

கவி.

வந்தடிவணங்கிய நிருதர்மன்னவற்
கந்தமிலாததோ ருறையுளவ்வழித்
தந்தனன்விடுத்தபி னிரவிதன்கதிர்
சிந்தனையெய்யவென் றெண்ணித்திருந்தனன்.

சந்திவந்தனைத் தொழுலின் முடித்துத்தன்னொடு
புந்திகொத்திராமனு மூயிர்ப்பப்பூக்களை

நெ. 45. ஸ்ரீராமருக்குவிபீஷணர்இலங்கையின்அரணிப்பாதிகளை உரைத்தல்.



ஸ்ரீராமர்வருணனைச்சினந்துகடல்மேற்பிரமாஸ்திரம்விடஅவன் காணிக்கையோடுவந்துசரணடைதல்.



இலங்கைகேள்விப்படலம்.

*சிந்திவந்திறுத்தனன் மதனன் றீநிறத்.*
*தந்திவந்திறுத்தது கறுத்ததண்டமே.*

இந்தப்பிரகாரமாக ஊர்க்கோலம்வந்து தமது திருவடியில் தெண்டம் சமர்ப்பித்த நிருதர்குலாதிபதியாகிய விபீஷணாழ்வாருக்கு ஸ்ரீராமச்சந்திரர் அருகே வசிக்கும்படியாக ஒருபெரிய விடுதிசெய்துகொடுத்து அதிலவரையிருக்கும்படிச் சொல்லியருளினர். பிறகு சூரியன் தன்கிரணங்கள் அதிக உஷ்ணமானவைகளென்று அவைகளைத் தன்னிடம் இழுத்துக்கொண்டு அஸ்தமனமானான், சுவாமியும் தமது க்ஷத்திரிய தர்மத்துக்கிசைந்த சந்தியாவந்தனாதி கருமங்களை முடித்துக்கொண் டெழுந்தருளி யிருக்கும்போது, மேற்குத்திசையில் அக்கினிநிறமான செவ்வானமுண்டாகிப் பின்பு ஆகாசமெல்லாம் கருகறுத்தது. அப்போது மன்மதன் புஷ்பபாணங்களை ஸ்ரீராமர்மேற் பிரயோகித்தான். சமுத்திரமானது எங்குஞ்சேர்ந்து மூடிக்கொண்டதுபோல் அஷ்டதிக்குகளையும் இருள்மூடிக்கொள்ள, அந்தச் சமுத்திரத்தில் தாமரை அல்லி முதலானவைகள் புஷ்பித்ததற்கொப்பாக ஆகாசத்திற் கிரகங்களுடனே நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன. இன்னும் அவ்விருளில் நக்ஷத்திரங்களுடன் கூடிய ஆகாசம் எப்படியிருந்ததெனில், இராமமூர்த்தியைக் காமாதுரத்தினால் வருத்தப்படுத்த மல்லிகைக்காடுமலர்ந்ததைப் போலுமிருந்தது.

அவ்வாகாயத்தில் சந்திரோதயமானது எவ்வாறிருந்ததெனில் - என்னைப்போல் இருளினாலே மறைபடாமல் என்னைச் சமானப்படுத்திக்கொண் டிருந்து, ஒளியினாலே என்னைத் தோல்விபடுத்தி ஜெயம்பெற்ற திருமுகத்தையுடைய சீதாபிராட்டியாருக்குச் சிநேகராகிய இந்த ஸ்ரீராமமூர்த்தி இவ்விராத்திரிக்குச் சமானமான திருமேனியையுடையவரா யிருக்கிறபடியால், இவரை வெல்லலாமென்று எண்ணங்கொண்டதுபோலச் சந்திரனுதயமாயினன். இப்படி உதயமான சந்திரனானவன் இந்தஸ்ரீராமரை வருத்தும்படியாக அந்தச் சீதாபிராட்டியாருடைய நிறத்தை நாமுடைத்தா யிருந்தோமானால், இவருடைய மனதைக் கலக்கப்படுத்தி நமது வசப்படுத்திக் கொள்ளலாமென்று நினைத்து; தன்னுடைய சந்திரிகையாகிய வலையைக் கடல்சூழ்ந்த உலகமுழுவதிலும்வீசினன். அப்போது சமுத்திரமானது அப்பூரணசந்திரனைக்கண்டு பொங்கினது எவ்வாறிருந்ததெனில், இந்த ஸ்ரீராமர் நம்மைப்போன்ற நிறத்தையுடையவராயிருந்தும் தம்முடையவானரசேனைகளால் நம்மேலணையிடும்படியாக என்முன்னே வந்தனரல்லவா? அப்படி வந்தவரை சும்மாவிடத்தகாது இவரோடு சண்டைசெய்து போராடுகிறதற்குச் சமயமிதுதானென்று உடல்பூரித்ததுபோன்றிருந்தது.

மேலும் - சமுத்திரமாகிய பாயானது வளர்ந்ததோலையுரித்துத் தள்ளினதுபோல் விளங்குகின்ற மணற்குன்றுகளால் விசாலித்திருக்கின்ற சமுத்திரப் பிரதேசத்திலெல்லாம் பாலைக்கவிழ்த்துவிட்டதுபோற் சந்திரிகை

பிரகாசித்தது. அப்போது வாசனைபொருந்திய மல்லிகையரும்பென்கிற பல்லையும், தேனில் மொய்த்துக்கொண்டிருக்கின்ற வண்டுகளென்னும் கருவரிகளையுடைய தேனுகிய கண்களையும், மலைக்குகையிலிருந்து பாய்கின்ற சத்தியையுமுடையதான தென்றலென்கின்ற ஒருபுலியானது ஸ்ரீராமர்மேற் சீறிக்கொண்டு புறப்பட்டது. கடலைக்கடைந்து அமிர்தங்கொடுத்தவனுன வாலியினுடைய மார்பையும் - காட்டிலிடத்தில் ஓங்கி வளர்ந்திருந்த மராமரங்களையும், தமது கையிற்கொண்ட பாணத்தினுலே துளைத்த ஸ்ரீராமருடைய திருமார்பிற் பாய்ந்திருக்கின்ற மன்மதபாணத்தோடு சந்திரிகையினுடைய கிரணங்களாகிய வாளாயுதமும் பாய்ந்தது.

அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்முடைய இளைத்த திருமேனியைப்பார்ப்பார். இனிய உயிருக்கொப்பாகிய சீதாபிராட்டியாரைநினைப்பார். தமக்குச் சம்பவித்த துன்பத்தை ஆலோசிப்பார். வேறொன்றையும் பாராமல் தம்மெதிராகவிருக்கின்ற கடலைப்பார்ப்பார். இராவணனுகிய திருடன் வாசம்பண்ணுகின்ற இலங்காதிபமெங்கேயென்று சுற்றிப்பார்ப்பார். கோதண்டத்தைப் பார்ப்பார். இப்படி சீதாபிராட்டியாரிடத்திற்கொண்ட மோகப்பித்தேறிய மனத்தையுடையவரான ஸ்ரீராமபிரான் அச்சீதையினது பிறந்த அழகுவாய்ந்த முத்தைப்போன்ற தந்தபந்தியுடன்கூடிய பவளத்துண்டத்தையொத்த திருவதரத்தை மனதில் நினைத்து மீட்டு மறவாமல் வருத்தமடைவார்.

கவி.

ஆயதோரளவயி னருக்க ன்மைந்தனீ, தெய்வதெங்காரிப் பிறப்புஞ்சிந்தையை
பேயவன்றன்னொடு மெண்ணியே வினீத், தூயதுன்னிலைக்கிலை யென்னச்சொல்லினுன்.

இவ்வண்ணம் சோகதாபத்துனிய ஸ்ரீமஹாபகவான் சீதாபிராட்டியைப் பிரிந்து நினைந்து மிகவும் மனம்நொந்துருகி வருந்தப்பின்சமயத்தில் சூரியன் புத்திரனுகிய சுக்கிரீவமகாராஜனென்னும் வானராதிபதி அவரைச்சேவித்து, தேவ எல்லாக்காரியங்களையும் பூரணம்பண்ணத்தக்க திருவுளத்தையுடைய சுவாமி! தேவரீர் இனி விபீஷணனோடு ஆலோசித்து மேல்நடக்கவேண்டிய விஷயத்தை எண்ணுமல், இப்படிவருந்தப்படுவது இருபாசமுத்திரம்போன்ற தமது பெருமைக்குத் தக்கதோவென்று சொல்லினுன்.

இப்படி சுக்கிரீவமகாராஜன் சொன்னமாத்திரத்தில் ஸ்ரீராமர் மூர்ச்சைதெளிந்து துக்கநீங்கினவராகி, சீக்கிரமாகப்போய் விபீஷணனை அழைத்துக்கொண்டுவாவென்று அச்சுக்கிரீவனையே நியமித்தனர். உடனே சுக்கிரீவமகாராஜன்விபீஷணனிடத்திற்றுப்போய் உம்மை சுவாமி வரும்படி நியமித்தாரென்ன, அந்தக்ஷணம் அக்கிரமமல்லாதமார்க்கத்தையடைந்தவரான விபீஷணுழ்வாரானவர் தாமரைகளொருங்கேபுஷ்பித்த தடாகம்போல் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமருடைய சன்னிதியில்வந்து அவருடைய திருவடித்தாமரைகளில் தெண்டம் சமர்ப்பித்தனர். அந்தவிபீஷணுழ்வாரை ஸ்ரீராமபிரான் எழுந்திருந்து உட்காரும்படியாக நியமித்தார்.



## ஸ்ரீராமர்கேட்கவிபீஷணர் இராவணன் உதவிச்சைனியங்களின் திறமுரைத்தல்.

கவி.

ஊர்சவியிலங்கையி னரணுமவ்வழி
வார்கெழுகனைகழ லரக்கன்வன்மையும்
தார்கெழுதன்மையி னளவுந்தன்மையும்
சீர்கெழுதன்மையாய் நிகழ்த்துவாயென்முன்.

அப்படியே உட்கார்ந்தபோது ஸ்வாமி விபீஷணரைப்பார்த்து, தம்பி விபீஷணு! சமுத்திரத்தினுற் சூழப்பட்ட இலங்காபட்டணத்தினுடைய அரணிப்பும், அதிலுள்ள ராக்ஷதசக்கிராஜாவாகிய நீண்டவீரகண்டையையணிந்த பாதத்தையுடைய இராவணனது வல்லமையும், சைனியங்களினுடைய தொகையும் விவரமாய்ச்சொல்லவேண்டுமென்றார். அப்போது விபீஷணுழ்வார் எழுந்திருந்தார். அதைக்கண்டசுவாமி நீ இருந்தேசொல்லென்ன, விபீஷணுழ்வார் இரண்டு கைகளையுங்கூப்பிக்கொண்டு சுவாமியைத்தொழுது, வினவின காரியங்களை விவரமாகச் சொல்லத்தொடங்கினர்.

ஓ என்னிருமையுங்கெடுத்தாண்ட எந்தையே! முன்னொருகாலத்தில் ஆதிசேஷனும் வாயுபகவானும் தங்கள்வலிமையைச் சோதிக்கும்படியாக ஆயிரஞ்சிகரங்களோடுகூடிய மேருமலையினிடமாக வந்து, ஆதிசேஷன் தன்னுடைய ஆயிரந்தலைகளாலும் ஆயிரஞ்சிகரங்களையு மறைத்துக்கொண்டார்; அப்போது வாயுபகவான் பூமிக்கஞ்சநவாணியாக நிலைத்திருக்கிற அம்மேருமலையை அலையும்படிசெய்து, தம்முடையபலத்தினுலே ஒருசிகரத்தைப் பறித்துக்கொண்டுவந்து சமுத்திரத்தின்மத்தியிலெறிந்துவிட்டார். அதுதான் இவ்விலங்காதீபம். அந்தத் தீபம் எழுநூறுயோசனை விஸ்தீரணமாகும். அதைச்சூழ்ந்த கோட்டைமதில் இலக்ஷயோசனை ஆழ்ந்ததும், சூரியமண்டலத்துக்கு முயர்ந்ததுமாய், உலகத்தைச் சக்கரவாளகிரி வளைத்துக்கொண்டிருக்கிறதுபோல அவ்விலங்காபுரத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றது. அதற்குச்சுற்றிலுமுள்ள தந்திரங்களையும், சித்திரவேலைப்பெருமைகளையும், காவலாக அமைத்திருக்கின்ற அரண்புதனைவகைகளையும், விரித்துச்சொல்ல வேண்டுமானுல் ஆயுள்போதாது. அடியேன் அதைப்பற்றி வேறென்ன சொல்லவேண்டியிருக்கின்றது? அதற்குச் சமுத்திரமே அகழாகவிருக்கின்றது.

அப்படிப்பட்ட கோட்டையின் வடக்கு வாசலுக்குக் காவலாயிருப்பவர்கள் பதினுறுகோடி அரக்கர்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் யுகாந்தகால இயமனுஞ்சமானமல்ல. சாக்ஷாத் ரிஷபவாகன ருடரான உருத்திரனுஞ்சமானமல்ல. வாசலில் உருத்தநிற்கின்ற காவலாளிகள் அவர்களைப்பார்க்கிலும் இரண்டுகோடிபேர் அதிகமானவர்கள். அவர்கள் கண்ணைதிறே இமைமனிவரக்கண்டால் அவனுடைய இரத்தச்சித்தமாயுமிசையு முண்டுவிடுவார்கள். தெற்குக்கோட்டைவாசலைக் காக்கின்ற துஷ்டர்கள் மலைக்குச்சமானமான ஆகாரமுள்ள பதினைந்துகோடிபேர்கள். அவ்விடமனுடைய அரசையும் பிடுங்கிக்

கொள்ளத்தக்க வல்லமையுடையவர்களாகும். கிழக்குக்கோட்டை வாசலிலிருக்கின்ற துஷ்டர்களும் பதினாறுகோடிபேர்களாமென்று சொல்வார்கள். அவர்களஷ்டதிக்கஜங்களையும் பின்னங்கால்களைத்தூக்கிப் பூமியி லறையத்தக்க வல்லமையுள்ளவர்கள். ஆகாசத்திற் காத்துநிற்கின்ற துஷ்டர்கள் முப்பத்திரண்டுகோடி பேர்களென்பார்கள் தேவர்கள் வருவார்களென்று பூமிக்குள் பதுங்கிக்கொண் டிருக்கின்ற இரக்கமற்ற ராக்ஷசர்களுக்கு அளவில்லை.

அந்தக் கோட்டையின் மதிலுக்குப் புறத்திலும் அகத்திலும் தூக்கமில்லாமற் காற்றை யாகாரம் செய்துகொண்டு காற்றாடியைப்போல இடைவிடாது சுற்றித்திரிந்து காத்துக்கொண்டிருக்கின்ற இராக்ஷசர்கள் ஆயிரங்கோடிபேர்கள். இந்தப் பிரகாரமாக அந்தலங்காபுரிக்கு மூன்று அரணைகளுண்டு. அவ்வகைகளைக் காக்கின்ற ராட்சசர்கள் மதிலொன்றுக்கு முப்பதுகோடியாக மதில்மூன்றுக்கும் தொண்ணூறுகோடிபேர்கள் காவலிருப்பார்களேயானால், அந்த லங்கைப்பட்டணத்தின் பெருமையைச் சிறப்பித்துச் சொல்லவேண்டுமோ? இராவணனால் சிறப்புஞ் செல்வமுமடைந்து நிர்க்கவலையுள்ள அதிசபலவந்தர்களும், விரோதிகள் வந்தால் உண்மையாய்ப் பாடுபட்டு உதவிசெய்கிறவர்களுமாய் ஆயிரத்துநூறுகோடி ராட்சசர்களிருக்கின்றார்கள். அதுவுமல்லாமல் அவனுடைய அரண்மனை வாசலில் இந்த வுலகத்தை யொருகையில் தூக்கும்படியான தைரியசாலிகளும், மலைக்குச் சமானமான புயமுள்ளவர்களுமாய்க் கோடாகோடி ராக்ஷசர்கள் காவலிருக்கின்றார்கள்.

மேலுமந்த ராவணனுடைய மேருமலைக்குச் சமானமாகிய இராஜமாளிகைவாசலின் இடதுபக்கத்திலும் வலதுபக்கத்திலும், விஷக்கண்ணர்களும்-அக்கினிக்கண்ணர்களும்-கோபக்கண்ணர்களும்-கண்களை இமைத்தலில்லாமற் பார்க்கிறவர்களுமாய் அறுபத்தாறுகோடி ராட்சசர்கள் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். அல்லாமலும்-பேய்க்குச் சமானமாகப் பிதற்றிக்கொண்டு அவனுக்கு மூலபலமாயிருக்கின்ற ஆயிரவெள்ளம் சைனியங்களைக் கொல்வதற்குப் பிரமகற்ப பரியந்தம் செல்லவேண்டுமென்பது அடியேனுக்குத் தெரியும். சதுரங்க சைனியங்களாய்ப் பதினாயிரந்தேரும், செந்தாமரைப் புஷ்பம்போல் முகங்களையுடைய இருபதினாயிரம் யானைகளும், காற்றைப்போலப் பறக்கும்படியான நாற்பதினாயிரம் குதிரைகளும், எண்பதினாயிரம் ஒட்டகங்களுமிருக்கின்றன. இவ்விலங்கைப்பட்டணத்தினுடைய அரணிப்பு இப்படிப்பட்டது. அதன்சைனியங்களினுடைய தொகை இவ்வளவாகும்.

உலோககர்த்தாவாகிய சிவபிரானிடத்தில் வரமாகவாங்கின வாளாயுதத்தை வலதுகையிற் பிடித்திருக்கின்றவனான இராவணனுக்குத் துணையானவர்களனேகர். அவர்கள் தங்களுக்குவேண்டிய பலங்களையும் வரங்களையும் அநேகதபங்களைச் செய்து பெற்றுக்கொண் டிருக்கிறார்கள். அவர்களில் கும்பனென்று ஒருவனுண்டு. அவன் ஊழிக்காற்றைப்பார்க்கிலு மகாகொடியவன். சுவர்க்கலோகத்திலுள்ள சித்தர்களைச் சிறையிட்டவன். இரதக்



ஜதுரகபதாதிகளான பத்துக்கோடி சைனியங்களையுடையவன். வேறொருவன் அகம்பனென்கிற பேருடையவனுளன், அவனனேகயுகம் தவஞ்செய்து வெகுவரங்களைப் பெற்றிருக்கின்றான். அவன் யுத்தங்களில்லாமல் தனக்குச் சுகந்தருவதாக வேறொன்றையும் இச்சிக்கிறவனல்லன். அவனுடைய சைனியங்கள் அளவில்லாதனவைகள், அவனோ நரசிம்மத்திற்குச் சமானமான வல்லமையுள்ளவன். கிரும்பனென்றொரு பெரியவாகாரமுடையவனுண்டு. அவன் மலையிலும் பெரிதான குதிரைகளும், யானைகளும், தேர்களும், வில்வீரர்களுமாகிய வொன்பதுகோடி சைனியங்களை யுடையவன். இவனோடு யுத்தஞ்செய்யவேண்டுமென்று தனதுவாகனமாகிய ஆட்டுக்கிடாவை வேகமாய் நடத்திக்கொண்டுவந்து யுத்தத்தில் நின்ற அக்கினிதேவனைத் தோற்கடித்தான்.

மகோதரனென்கிற மற்றொரு வீரனுண்டு. அவன்பிசாசங்களும், யாளிகளும், யானைகளும், கழுதைகளும் கட்டப்பட்ட பத்துக்கோடி தேர்ப்படையையுடையவன், தாயாயிருந்தபோதிலும் வஞ்சனைசெய்கிறதில் பின்னிடமாட்டான். மகாதந்திரசாலி. பாகசேது வென்றொரு வீரனுண்டு. அவன் மலையில் வாசஞ்செய்கின்றவர்களான இருபதுகோடி வீரர்களுக்குத் தலைவன். இன்றைக்குள்ளவர்கள் நாளைக்கில்லை யென்னும்படியாய் யாவர்களையும் தன் பற்களுக்கு இரையாக்கிவிடுவான். அநேகம் தடவைகளில் யுத்தத்துக்குவந்த தேவர்களை ஜெயித்திருக்கின்றான். சூரியகேதுவென்று ஒரு வீரனுண்டு. அவன் பூலோகத்திலுள்ளவர்களையும் தேவலோகத்திலுள்ளவர்களையும் ஒன்றாக ஒரே நாளில் தின்றுவிடத்தக்கவனென்று பிரசித்தப்பட்டவன். இவன் எட்டுக்கோடி சைனியங்களையுடையவனும், அக்கினியும் பயப்படும்படியான பார்வையுடையவனுமானவன். மகாபாரிசனென்கிற ஒருவீரன் மலையினுமிகுந்தபலமுள்ளவன். தேவர்களும் - ரிஷிகளும் - பிரமேந்திராதியர்களும் - இவன் பெயரைச் சொல்லவேண்டுமானாலும், பக்கம்பார்த்துச் சொல்லவேண்டும்படியாகிய மகத்தான கோபமுள்ளவன். இவன் பதினாறுகோடி சைனியங்களுக்குத் தலைவன்.

வச்சிரதந்தனென்றும் காலாந்தகனென்றும் பெயருள்ள எரிமுகத்தையுடையவனும், எட்டுக்கோடி சைனியங்களுக்கு அதிபதியும், சூலாயுதத்தையுடைய உமாநாயகனையும் வெல்லத்தக்க பலமுள்ளவனுமாகிய ஒரு வீரனுண்டு. எந்தக்காலத்திலும் சஞ்சலப் படாதவர்களான பத்துக்கோடி சைனியங்களை வசப்படுத்திக்கொண் டிருக்கிற வல்லமையில் தனக்குச் சமானமாக வேறொருவருமில்லாதவனும், யுத்தத்தில் யக்ஷர்களைக் கையினாலே பிசைந்து நசுக்கினவனுமான பிசாசன் என்கின்ற மற்றொருவீரனுண்டு. தேர்களும்-யானைகளும் - குதிரைகளும் - வில்வீரர்களுமாகிய பதினாறுகோடி சைனியங்களுக்குத் தலைவனும், பூமியைப் பேர்த்தெடுக்கத்தக்கவனும், சப்தசமுத்திரங்களும் - சப்தகுலாசலங்களும் - கலங்கச்செய்ய வல்லவனும், கோபித்துப் பேசுகின்ற சக்தியுடையவனுமான நான்முகனென்று ஒருபாபியுண்டு. இலங்

காதிபத்தையொத்த மற்றத் தீபங்களிலே வாசம்பண்ணுகிறவர்களான பத்துக்கோடி இராக்ஷசவீரர்களுக்குத் தலைவனும், வாள்வித்தையில் வெற்றிபெற்றவர்களான வித்தியாதரர்களைத் தோற்கடித்து அவர்களுடைய கீர்த்தியைப் போக்கடித்தவனுமான விரூபாக்ஷனென்கிற அக்கினியைக்கக்கும் பார்வையையுடையவ னொருவனுண்டு.

உயுத்தத்தில் வல்லவனும், மகாஜெயசாலியும், தேவர்கள் மத்தாகக்கொண்ட மந்தரமென்னுங்கிரிக்குச் சமானமானவனும், எல்லாச் சேனாபதிகளினும் அதிகபலமுள்ளவனும், பூலோகத்தாரும் - சுவர்க்கலோகத்தாரும் - கேட்டமாத்திரத்தில் முதுகுகாட்டி யோடும்படியான இரணமஸ்தனென்கிற பெயருள்ள வீரனொருவனுண்டு. தூவாட்சனென்பவன் பிணங்களை மசானத்தில் வைக்கவொட்டாமல் தன்பல்லுக்கே இரையாக்கிக்கொள்ளுகிறவனும், கோடாகோடி ராக்ஷசவீரர்களுக்குத் தலைவனும், தேவர்களையெல்லாம் யுத்தத்தில் முதுகிட்டோடும்படியாகச் செய்பவனுமானவன். இப்படிப்பட்டபேர்களை யெத்தனையாயிரம்பேர்களென்று சொல்லப்போகின்றேன். அவ்விராவணனுடைய ஊதவிச்சைனியங்களா யிப்போது சொன்னவர்களைப்பார்க்கினும், இரண்டுமடங்கு சைனியங்களுக்குத் தலைவனாயிருக்கின்ற பிரகஸ்தனென்று ஒரு வீரனுண்டு. அவனுடைய கொடுமைகள் சொல்லிமுடிவனவன்று.

மேலும் - இந்திரனுடைய ஐராவதமென்கின்ற யானை பின்னிட்டோடவும் - அந்த இந்திரனுடைய எழுசக்கரம்பூட்டிய தேர் சின்னபின்னப்பட்டழியவும் - முப்பத்துமூன்றுகோடி தேவகணங்களு முதுகிட்டலையவும் - தன்னுடைய அம்புகளைப் பிரயோகித்தவனும், அஷ்டதிக்கஜங்களினுடைய நான்கு சந்திரர்களைப்போலப் பிரகாசிக்கின்ற நான்கு கொம்புகளையும் பிடுங்கிக்கொண்டு மேருபர்வதமானது மதங்கொண்டு திரிந்தாற்போலத் திரிந்துகொண்டிருக்கின்றவனுமான கும்பகருணனென்று இராவணனுக்கு ஒரு தம்பியுண்டு. அன்றியும்— சூரியசந்திரர்களையும் சிறையிட்ட மிகுந்த கோபமுடையவனான இந்திரசித்தென்று சொல்லப்பட்டபிள்ளை இவ்விராவணனுக்குண்டு; இவனிந்திரனைப் பிடித்துக் கட்டினதழும்பு அவ்விந்திரனுடைய கையினுங் காலினு மின்னமா றவில்லை.

அந்த இந்திரசித்தையுஞ் செயிக்கவல்லவனும், கொஞ்சமாவது தருமத்துக்கு இரக்கப்படாதவனும், சாக்ஷாது கைலாசமூர்த்தியினிடத்திற் பெற்ற வில்லையுடையவனும், இந்திரசித்துக் கிளையவனான பிள்ளையுமுண்டு. வேறொரு இந்திரனிவனுக்குச் செயிக்கிறதற்கில்லாமையா லிந்திரசித்தென்று பேரில்லாமல், அதிகாயனென்கிறபேருண்டாயிற்று. இவ்விருவரல்லாமலும் அவ்விராவணனுக்குத் தேவாந்தகன்—நராந்தகன்—திரிசிரா - என்கின்ற மூன்று பிள்ளைகளுண்டு. அந்த மூன்றுபேரும் திரிமூர்த்தியை யொத்தவர்கள். உயுத்தத்துக்குப் புறப்பட்டால் அவர்களெதிரில் நிற்கவல்லவர்கள் திரிபுவனங்களிலும் ஒருவருமில்லை. இவர்களுடைய வல்லமை யிப்படியிருக்க, இராவணனுடையபலம் எனக்குத் தெரிந்தமட்டுஞ் சொல்லுகின்றேன்.



## இராவணனுடைய வல்லபமுரைத்தல்.

கவி.

இனையதன்மையர்வலியிஃ திராவணனென்னும்
அனையவன்றிறம் பானறி யளவெலாமறைவென்
தனையுணன்முகன்றனைமகன் சிறுவற்குத்தவத்தால்
முனைவர்கோன்வர முக்கணன்வயத்தொடுமுயர்ந்தான்.

இவ்விராவணன் பிரமதேவன்பௌத்திரரும்காசிபமகாரிஷியின்புத்திரருமான புலஸ்தியப் பிரம்மாவினுடையபுத்திரன். இவன்தபசில் முனிவர்களினும் உயர்ந்தவனாகி, திரிநேத்திராகிய உருத்திரமூர்த்தியை நோக்கித் தவஞ்செய்து எல்லாச்சிறப்பையும் பெற்றான். இவன் பூதகோடிகளெல்லாஞ் சூழ்ந்துகொண்டிருக்கும்படியான சாக்ஷாத் மான்றோலாடையையணிந்த அவ்வுருத்திரமூர்த்தியானவர் பார்வதிசமேதராய்எழுந்தருளியிருக்கின்ற கைலாச பர்வதத்தை, உள்ளங்கையில் வேரோடுபிடுங்கித் திரிலோகங்களு நடுநடுங்கும்படியாய்த் தூக்கினான். உலகங்களைத் தாங்குகின்ற அஷ்டதிக்கஜங்களையும் தந்தங்களை முறியும்படியாகத் தன்னுடைய மார்பினால் தாக்கினான். இனி நம்மீதும் வருவானென்று முப்பத்துமுக்கோடி தேவர்களு நடுக்கங்கொண்டு ஓட்டம்பிடித்தார்கள். இவன்காலகேயர்களை அவர்கள் பந்துசகிதமாக அணிந்த கிரீடங்களோடும் பிடித்த ஆயுதங்களோடும் கொன்றபிறகு, இவனுடைய பெயரைக்கேட்டாலும் இடிமுழக்கங்கேட்ட சர்ப்பம்போல் தானவஸ்திரீகளுடைய கர்ப்பத்திலிருக்கின்ற சிசுவும் இன்னும் பயப்படுகின்றது.

அநேக தடாகங்களாற் சூழப்பட்ட அளகாபுரிப்பட்டணத்தில் இப்போது பதுங்கிக்கொண்டிருக்கிற குபேரன் தன்னுடைய அநேகமான ஐசுவரியங்களெல்லாம் பட்டணவீதிகளிற் சிந்திச் சிதறுண்டுபோகும்படியாகப் புலியைக்கண்ட மானைப்போலப் பயந்து, தன்மானமும் புஷ்பகவிமானமுமிழந்து, இந்த லங்கைப்பட்டணத்தையும்விட்டோடிப்போய்விட்டான். இந்த ராவணனாகிய நமன் நம்மையடித்து உடம்பெல்லாங் காயப்படுத்தினதுமல்லாமல் நம்முடைய உயிரையும் வாங்கும்படியாகச்செய்கையிலிருக்கின்றானே யென்று யமனும் தன்பட்டணத்தைவிட் டோடித் தன்னுடைய ஆயுள்நாளைக் கணக்கெண்ணிக்கொண்டிருக்கின்றான். சூரியனை அவ்விலங்கா நகரத்துக்குள் பிரவேசிக்கவொட்டாமல் வெளியிலேயே நிற்கும்படியாகச்செய்தவன், அந்தச்சூரியனுடைய கண்களுக்கு லங்கையின் பெருமை யிவ்வளவெனத் தெரியாது. வருணனை ஜெயித்து அவனுடைய பாசத்தையும் பிடுங்கிக்கொண்டான். அந்தப் பயத்தினால் அவன் தப்பிப் பிழைத்துச் சமுத்திர ஜலத்திற்குள்ளே மறைந்துகொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட பலமுள்ள ராவணன் மலைகளெல்லாம் பொடிப்பொடியா யழிந்தாலும், இவனுடைய் தோள்களுக்குக் கொஞ்சமேனும் லயமுண்டாகிறதில்லை. இவனுடைய பலம் இன்றைக்கானாலும், நாளைக்கானாலும், இன்னம் கொஞ்சகாலம்போய் அழியுமானாலும், தேவரீராலன்றி வேறொருவராலு மாளான்.

## இலங்கையி லாஞ்சனேயர்செய்த வீரப்பாடுரைத்தல்.

கவி.

தடுப்பட்டவரெண்ணிலர் தோரணத்தெழுவால்
பாடுபட்டவர்படுகடன் பணிலினும்பலரால்
சூடுபட்டதுகொடிநக ரடுபுலிதுரந்த
ஆடுபட்டதேபட்டன ரனுமனலரக்கர்.

இப்படி யிவ்விலங்காதிபதியான இராவணனுக்குவேண்டிய கட்டுங்காவல்களும் கணக்கற்றனவாயிருந்தும், முன்னம் ஆஞ்சனேயராற் புலியினிடத்திலகப்பட்ட ஆடுகளைப்போலச் செத்தழிந்த ராக்ஷசர்களுக் களவில்லை. தோரணக்கம்பத்தினால் வதைபட்ட ராக்ஷசர்கள் கடல்மணலின் தொகையைப்பார்க்கிலும் அளவில்லாதபேர்கள். ஆஞ்சனேயராற் கோபித்தபோதே இராக்ஷசர்களுடைய உதிரமாகிய வெள்ளத்தில் தேராதி மாமிசங்களெல்லாம் மேடுபோலக்குவிந்தன. வடவாக்கினிபோற் சிவந்த கண்களையுடைய அக்கனென்பவனைப் பிடித்துப் பூமியில் தேய்க்கும்போது, அவனது தேகத்திலிருந்து வழிந்த இரத்தநிணக்குழம்புகள் லங்காபட்டணத்துத் தெருவிலின்னமும் உலரவில்லை. இந்த ராவணனுடைய பஞ்சசேனாபதிகள் தேவர்களுக்குரிய சுவர்க்கத்திலுள்ள காவலையும், அரணங்களையும், அழித்தவீரர்களாகும். அப்படிப்பட்டவர்கள் தங்கள்சேனைகளும் பந்துக்களுமாய் யானையின்காலி லகப்பட்ட செல்லைப்போல் இவரால் நசுங்கிஇறந்தார்கள்.

இதுவுமல்லாமல் எண்பதினாயிரம்பேர் கிங்கரர்கள் மலைக்குச்சமானமான ஆகாரங்களையுடையவர்கள். இவர்கள் தங்கள் கொடியகையினாலும், மழுவாயுதத்தினாலும், இருப்புலக்கைகளினாலும், இவரையெதிர்த்துநின்று; உருத்திரமூர்த்தியினால் அழிந்துபோன திரிபுராசுரர்களைப்போலானார்கள். ஜம்புமாலியென்கிற மகாவீரனொருவன் சமுத்திரம்போன்ற சைனியங்களோடுகூட இந்த ஆஞ்சனேயரை எதிர்த்து, இவர்தோளொன்றுக்கு ஆயிரமாயிரமம்புகளைப் பிரயோகித்து, பிறகு அவன்கையினாலேயே அடியுண்டெமலோகம்போய்ச்சேர்ந்தான். இதுவுமல்லாமல் அந்தலங்காபட்டணத்தை இவரெரித்தகாலத்தில் அதிலழிந்துபோன ராக்ஷசர்களை யிவ்வளவென்று யார்கணக்கிட்டுச் சொல்லுவார்கள்? சுவாமி! இவரால் எரிக்கப்பட்ட அந்தலங்காபட்டண நெருப்பானது அவர்களுடைய ரத்தநிணங்களினாலேதான் அவிந்ததென்றால், அந்நெருப்பி லெரிந்துபோகாமல் தப்பி இன்னமும் வீரர்களிருக்கின்றார்களென்று சொல்லவும்போமா? ஆதலால் இலங்கையி லிறந்தவர்களைப்பற்றி வேறேயென்னசொல்லவிருக்கிறது?

இராவணனே அணிந்தமாலையுடனும், பூசின சந்தனத்துடனும், அன்று பூண்ட ஆபரணங்களுடனும், கட்டியவஸ்திரங் களுடனுங்கூட; எழுநாள்வரைக்கும் அந்தலங்கையிலிருக்கச் சகிக்கமாட்டாமல் ஆகாயத்திலேயே யின்



றுவிட்டான். இப்படிப்பட்ட வல்லமைபொருந்திய ராவணனுடைய இலங்கைப்பட்டணத்தின்பெருமையையும், அதன்காவற் பெருமையையும் நானறிந்தவளவில்முன்னமே சொன்னேன். இவைகளிவராலெரிந்து போனபிறகு இராவணனுடைய ஏவலினால் சாட்சாத்பிரம்மதேவரே அந்த லங்காநகரத்தைப் பழையபடியே சிருஷ்டித்துவிட்டார். சுவாமி! மதத்தயானையை பொத்த கரன்முதலாகிய வீரர்களும் — வாலியும் - தேவரால் இறந்ததைக்கேட்டதினாலும், கபிசிரேஷ்டராகிய இந்த ஆஞ்சனேயரால் இலங்காபட்டண மெரிந்ததனாலும் — இவர் ராட்சசர்களைக் கொன்றுவிட்டு வந்ததனாலும் — அடியேன் கண்ணினாற்கண்டதினாலும் தான்; இவ்விடம்வந்து தேவரீருடைய திருவடியையடைந்தேன். என்று தம்முடைய திருமேனியோடு உறவுகொண்ட கறுத்தமேனியையுடையவரான விபீஷணாழ்வார் விண்ணப்பம் பண்ணிக்கொண்டு சேவித்திருந்தனர்.

## ஸ்ரீராமர் ஆஞ்சனேயரை உபசரித்தல்.

கவி.

கேள்கொண்மேலையான் கிளத்தியபொருளெலாங்கேட்டான்
வாள்கொணோக்கியைப் பாக்கியம்பழுத்தனையயிலை
நாள்கள்சாலவுநீங்கலி னலங்கெட்டமெலிந்த
தோள்கள்வீங்கித்தன் றூதனைப்பார்த்திவைசொன்னான்.

இருமையிலும் அழியாத தனதுஸ்நேகத்தைக்கொண்ட விபீஷணர் சொல்லிய வார்த்தைகளிலுள்ள சாரங்களையெல்லாம் ஸ்ரீராமச்சந்திரன் கேட்டு, வாளைப்போலுநீண்டு கூர்மைபெற்ற விழிகளையும், குறைவற்ற செல்வங்களையெல்லாம் தன்னைத்துதிக்கின்ற அன்பர்க்கு அருளுகின்ற மயில்போலுஞ்சாயலையுமுடைய தமதுதேவியாகிய சீதாபிராட்டியை வெகுகாலம் விட்டுப்பிரிந்திருந்ததினால் ஒளிமழுங்கி மெலிந்திருந்த திருத்தோள்கள்பூரித்து, தமதுதூதராகிய ஆஞ்சனேயரைப்பார்த்துச் சொல்லுகின்றார். ஓ வீரசிகாமணியாகிய ஆஞ்சனேயனே! அந்தராவணனுடைய சைனியங்களிற் பாதிசைனியங்களுக்கு மேற்படவே நீகொன்றுவிட்டாய். இலங்காபட்டண முழுவதையும் அக்கினிக்கிரையாக்கிவிட்டாய். இனியங்கே யென்னபலமிருக்கின்றது? சீதையை நீ காணப்பெற்றதும் இங்கேகொண்டுவாராதது என்னுடையவில்லின்வீரத்தைக் காட்டும்படியாகத்தானோ? ஆ! ஆ! உன்னுடைய தோள்வல்லமையை நிறைத்துவைத்திருக்கின்ற அந்தலங்கைப்பட்டணத்தில் நாங்கள்போய் இனிச்செய்யப்போகின்ற காரியங்களினால் எங்களுக்கு என்னபெருமையுண்டாகப்போகின்றது?

ஓ மேருமலைக்குச்சமானமான தோள்களையுடையவனே! நாங்கள் அதிகசேனைகளோடுவந்தும் இனி என்னகாரியத்தைச் செய்தோமென்று கீர்த்தியடையப்போகிறோம்? என்னுடைய சௌரியத்தையும் — இராவணனுடைய வல்லமையையும் — நீ ஜெயம்பெற்றதினாலும், அவனைத்தோற்பித்ததினாலும்

உன் வசப்படுத்திக்கொண்டாய். ஓ என் ஐஸ்வரியமெல்லாம் உருவம்பெற்று வந்ததுபோலும் முற்பவித்த ஆஞ்சநேயனே! இந்த மூன்றுலோகங்களையுஞ் சிருஷ்டித்த பிர்மதேவருடைய பதவியை மறுகற்பத்தில் நீயடையக்கடவாய். என்று அருளிச்செய்த மாத்திரத்தில் அனுமானானவர் சுவாமியினுடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாக தெண்டன்சமர்ப்பித்து, ஒன்றும்பேசாமல்வாய் பொத்திக்கொண்டு நின்றார். இவருடைய பிரதாபத்தைக் கேள்விப்பட்ட வானரவீரர்களும், அவர்களுக்குத் தலைவரான சுக்கிரீவமகாராஜனும், மோக்ஷத்தையடைந்தவர்களைப்போலப் பிரமானந்தபரிதர்களாய் ஆச்சரியமடைந் திருந்தார்கள்.

இலங்கைகேள்விப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஆறாவது,

# வருணனை வழிவேண்டு படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர் விபீஷணரா லிலங்கையினணிப்பு மிராவணனுடைய பராக்கிரமமுங் கேட்டபின்னர் கடலைக்கடக்க வுத்தேசித்துத் தருப்பாசயனத்தில் வருணமந்திரஞ்செபித்துக்கொண்டு ஏழுநாள்வரையிற் சயனித்திருந்தும் வருணன்வாராமையாற் சினந்து அவனுடையவுடம்பிய கடல்மேற் பாணப்பிரயோகஞ்செய்ததும், அப்பாணங்க ளக்கடல்மேற் பலபராக்கிரமங்களைக்காட்டியு மவன்வாராமையாற் பிரமாஸ்திரம் பிரயோகிக்க முயன்ற சுவாமியின் கருத்தை யவனறிந்து உடனே காணிக்கையோடும்வந்து சரண்புகுந்து தான்வருவதற்குக் காலநீடித்ததற்குக்காரணங் கூறியதும், அஃதுணர்ந்த காகுத்தர் கோபமாறி அவ்வருணனுற் பிரம்மாஸ்திரத்திற் இலக்கறிந்து விடுத்துப் பின்பவனுத்தரவின்படிசேதுபந்தனஞ்செய்ய வானரப்படைகட் காஞ்ஞாபித்ததுஞ் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் கடல்கடக்க வழிவிடவராத வருணனைக்கோபித்து கடலின்மேற் பாணப்பிரயோகஞ்செய்தல்.

கவி.

தொடக்குமென்னினிவ் வுலகொரு மூன்றையுந்தோளால்
அடக்கும்வண்ணமும் பழித்தலுமொருபொருளன்றால்
கிடக்கும்வண்ணமெங் கடலினைக்கினர்பெருஞ்சேனை
கடக்கும்வண்ணமுமென்னுதி யென்னுநூல்கற்றாய்.

இவ்வாறு சுக்கிரீவமகாராஜன்முதலிய வானரவீரர்களானந்தமுறும்படியாக ஆஞ்சநேயரை ஸ்ரீராமபிரான் உபசரித்துக்கொண்டிருக்கும்போது விபீஷணாழ்வார் சுவாமியை நோக்கி, ஐயனே! இனிமேலித்த ஆஞ்சநேயரு



க்கு இந்தமூன்றுலோகங்களைச் சிருஷ்டிக்கிறதும், இரக்ஷிக்கிறதும், சம்மரிக்கிறதும், ஒருகாரியமல்ல. இனி வருணனையழைக்கும் விதத்தையும், நம்முடையசேனை யிந்தச்சமுத்திரத்தைத் தாண்டிப்போகும் வழியையும், ஆலோசிக்கவேண்டும். மறைந்துநின்ற உம்முடைய கல்யாணகுணங்களை யாசிரயிக்க இந்தச்சமுத்திரமானது இச்சிக்கின்றது. மேலும் — இஃதும்முடைய வமிசத்தரா லுண்டானதாதலால், தேவர்விரும்பும் வரத்தைத் தீர்க்கமனதோடு கொடுத்தருளும், இனித்தேவரீர் இந்தச்சமுத்திரராஜனைக்கேட்டுச் சைனியங்கள்போகும்வழியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றார். அதைக்கேட்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் விபீஷணாழ்வானுடைய வார்த்தை நன்றாயிருந்ததென்றுசந்தோஷப்பட்டு, வானரசைனியங்களோடு சமுத்திரத்தின் சமீபமாகவந்தனர். அப்போது சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய தேருடன் அஸ்தமனகிரி சென்று மறைந்தனன். உலகத்தில் இருளுஞ்சூழ்ந்தன. அந்த இருள் நீங்கும்படி அமிர்தகலைகளோடுங்கூடிய சந்திரனுதித்தனன். அவ்வேளையி லிந்தச்சமுத்திரஞ்சூழ்ந்த பூமியான தெவ்வாறிருந்ததெனில், பொறிகளோடுங்கூடிய படத்தையுடைய கரும்பாம்பாகிய இராகுவினாலேவிழுங்கியுமிழப்பட்ட அந்தச் சந்திரனைப்போன்றிருந்தது.

தருணமங்கையைமீட்பதோர் நெறிதருகென்னும்
பொருணயந்துநன்னூனெறி யடுக்கியபுல்லில்
கருணையங்கட லுயின்றனன் கருங்கடனோக்கி
வருணமந்திரமெண்ணினன் விதிமுறைவணங்கி.

ஊழிசென்றதன் றிருவுருப் பொருந்தவும்பொறைநீர்
வாழிவெங்கதிர்மணிமுகம் வருடவும்வளர்ந்தான்
ஊழிசென்றனவொப்பன வொருபகலவைபோல்
ஏழுசென்றனவந்தில னெறிகடற்கிறைவன்.

அப்போது சுவாமியானவர் சீதாபிராட்டியாரை மீட்டுக்கொண்டு வரத்தக்க வழியைப்பெறும்படியான திருவுளங்கொண்டவராய், சாஸ்திரோக்தமாக இளையபெருமானால் திருத்தப்பட்ட தருப்பைச்சயனத்தின்மீது வருணமந்திரத்தைச் செபித்துக்கொண்டு, கடலின்மேற் பார்வை செல்லும்படியாகச் சயனித்துக்கொண்டிருந்தார். இப்படி தமது திருமேனியிற் றுகள்படியவும் — சூரியன் திருமுகமண்டலத்தை ஸ்பரிசிக்கவும் — ஒருபகலை ஒரு ஊழிக்காலத்திற் கொப்பாகக்கழித்து ஏழுநாள்பரியந்தம் சயனித்திருந்தும் வருணதேவன் வாராமையைக்கண்ட சுவாமியானவர், இந்தப் பெரியசமுத்திரராஜனைவன் நாம்கேட்டவரம் உண்டில்லையென்று சொல்லும்படியாக வரம்பெற்றுமில்லையே யென்கிற கோபத்தினால் சமுத்திரத்திலே அக்கினி புறப்பட்டதுபோலச் செந்தாமரைப்புஷ்பம் போன்ற இரண்டு திருக்கண்களும் சிவந்தனர். நாம் சிறந்த பெண்சாதியையிழந்து இந்தச்சமுத்திரத்தைத் தாண்டிப்போகிறதற்கு வழிவேண்டுமென்று வேண்டியும், இந்தவருணதேவன் இல்லையென்று சொல்லுவதற்கிடாக, ஒளித்துக்கொண்டான்போலிருக்கிறதே

என்று மிகுந்த கோபத்துடனே பெருமூச்சுவிட்டுக்கொண்டு, நீண்ட வில்லை வளைந்ததுபோல் இரண்டு புருவங்களும் வளைந்தவராகி இதனைச்சொல்லுகின்றார்.

இவ்வுலகத்தில் உத்தமகுண மிகுந்தவர்கள் தாங்கள் பிறருக்குக் கொடுப்பதன்றி தாங்கள் பிறரிடத்தில் ஒருபொருளேனும் வேண்டாதவர்களாயினும், அவர்கட்கும் ஏதாவதொரு விஷயத்திற் சிறிதுகுறை நேரிடுவது சகஜமே; அக்குறையை நீக்குவதற்கு, ஒருவரிடத்தில் ஒருவர் ஏதாவதொன்றை விரும்பிக்கேட்க, அக்குறையை நிவர்த்திப்பதற்குரிய பொருள் தங்கள்பாலிருப்பினும் அதைக்கொடுத்து நிறைவேற்றாதார்கள் சிறுமையுடையவர்களே தவிர பெருமையுடையவர்களல்லர். இன்றைக்கு நாம் கடலைத் தாண்டவேண்டுமென்று வருணராஜனைப் பிரார்த்திக்கவும் அதை மறுத்துவிட்டான். இவனுடைய நீதி நன்றாயிருக்கின்றது. நம்மை அற்பவில்லையுடையவனென்றும், இராவணனபகரித்துக்கொண்டுபோகத் தன்தாரமிழந்த தன்மையையுடையவனானபடியால் வீரமற்ற மனிதனென்றும் அலக்ஷியஞ்செய்து, இந்தவருணராஜன்வராமற்போனான். ஒருதவிசெய்து ஒன்றைப்பெற்றுக் கொள்ளுதலும், சண்டைசெய்து துரத்திவிட்டு ஒன்றைப்பெற்றுக்கொள்ளுதலும், ஆகிய இவைகளெல்லாம் சாதாரணமான வீரர்கட்கு வழக்கமானவைகள். நாமப்படிச்செய்யாமற் கேட்டுவாங்கும்படி வந்தபோது, தன்னியல்பும் தருமமும் குறைவாகும்படி ஒளித்துக்கொண்டது மிக நன்றாயிருக்கின்றது. நம்மைக் காட்டிற்குவந்து காய்கனிகளைத் தின்று உடம்பு வளர்த்துக்கொண்டிருக்கிறவனென்று நினைத்திருந்த இந்தக் கடலுக்குத் தலைவனான வருணராஜனுடைய பெருமையையும், வில்லுடனேநின்ற மனிதனாகிய என்னுடைய சிறுமையையும் தேவர்களே பார்க்கட்டும். இதுகாறும் பழிக்குப்பயந்து நாமிருந்த தன்மையை அற்பமென்று நினைத்து நம்மைநிந்தித்த இந்தச் சப்தசாகரங்களும் வெந்து ஒருபிடிசாம்பலாகும் படியாகவும், பஞ்சபூதங்களும் அழுது கொண்டுவந்து பிராணபிக்ஷை கேட்கவும் செய்கிறேன். அப்போது என்னுடைய சேனைகள் கால்கூசாமல் தாராளமாக இந்தக் கடலின்வழியாக நடப்பார்கள்.

கவி.

மறுமைகண்டமெய்ஞ் ஞானியர்ஞாலத்துவரினும்
வெறுமைகண்டபின் யாவரும்யாரெனவிரும்பார்
குறுமைகண்டவர் கொழுங்கனலென்னினுங்கூசார்
சிறுமைகண்டவர் பெருமைகண்டல்லதுதேரார்.

வருபிறப்பைக் கண்டமெய்ஞ்ஞானியர்களானபோதிலும் இந்தப் பூமியில் வெறுமையோடுவருவார்களானால், ஒருவருமவர்களை லக்ஷியஞ்செய்யமாட்டார்கள். அக்கினியானபோதிலும் சிறிதாய்க் காணப்பட்டால் அதற்குப் பயப்படமாட்டார்கள். உருவச்சிறுமையைக் கண்டவர்கள் குணப்பெருமையைப் பார்த்தாலல்லாமல் உணர்வடையமாட்டார்கள். என்று பலவாறும் வருணனைக்



குறித்துக் கோபித்துக்கூறிய ஸ்ரீராமரானவர் ஊழிக்காலத்தில் அதிகவுக்கிரத்தோடு புறப்படுகின்ற சூரியனைப்போற் பிரகாசிக்கும் திருமுகமண்டலத்தையுடையவராகி, பிலதரம் வில்லைக் கொடுகொடுவென்று தம்பியைநோக்கிக் கேட்டனர். உடனேயவர் உதிரம்போல் கண்கள்செவந்து நெருப்புப்பொறிபறக்கச் சினந்து அவ்வில்லைக் கொடுத்தனர். அதைத் திருக்கைநீட்டி வாங்கிய சுவாமியானவர் வளைத்து நாணேற்றிட்டு, விரலாற் குணத்தொனி பண்ணினார். அந்தக் குணத்தொனியானது கயிலாசபதியினுடைய தேவியாகிய பார்வதிதேவியார் கொண்டிருந்த ஊடலையு நீக்கிவிட்டது.

கவி.

பெரியமால்வரையேழினும் பெருவலிபெற்ற
வரிகொள்வெஞ்சிலை வளர்பிறையாமெனவாங்கித்
திரிசிற்பனயானையு முடிவினிற்றீய்க்கும்
எரியின்மும்மடிகொடியன சுசரமெய்தான்.

இவ்வண்ணம் எமது கர்த்தாவாகிய ஸ்ரீராமச்சந்திரனானவர் மிகவும் பெரிய சப்தகுல மலைகளைப் பார்க்கினு மிகுந்தவலிமை பெற்று வயிரப்பூண்களணிந்து பகைவரது உயிரைவாட்டுதலில் கொடுமைமிக்க தமது கோதண்டத்தை மூன்றாம் பிறைச்சந்திரனைப் போல் வளைத்து சராசரப்பொருள்களையெல்லாம் ஏககாலத்திற் றகிக்கும்படி யெழுகின்ற யுகாந்தவடவாக்கினியைக் காட்டிலும் மும்மடங்கு அக்கினி ஜுவாலையை வீசுகின்ற பாணங்களில் மிகவும் சிறப்புற்றவைகளில் அரிய சிறப்பு வாய்ந்தவைகளைத் தெரிந்தெடுத்து, மாரிக்காலத்திற் பொழியும் மழைத்துளிகளை எண்ணினும் எண்ணுக்கடங்காத அக்கினியாஸ்திரங்களை அக்கடலின்மீது பிரயோகித்தனர், அப்போது சமுத்திரத்திலுள்ளமீன்களும்-பாம்புகளும்- மலைகளும் - மற்றுள்ளவைகளும் சமித்தைகளாகவும், துறைகளோடுகூடிய அந்தச் சமுத்திரஜலமானது ஹோமநெய்யாகவும், பிரயோகிக்கப்பட்டபாணங்கள் அக்கினியாகவும், சமுத்திரக்குழியானது யாககுண்டமாகவும் இருந்தன. மேலும்-அந்தப் பெருமைபொருந்திய நெடிய வில்லி லிருந்து புறப்பட்ட ராமபாணங்கள் சப்தசாகரங்களையும் புகையும்படியாகச் சுட்டெரித்துக்கொண்டு ஊழித்தீயினது கொழுந்துகள் புறப்பட்டதுபோலப் போய்ச் சக்கரவாளகிரிக் கப்புறத்திலிருக்கின்ற இருளையு நாசப்படுத்திவிட்டன.

கவி.

மருமதாரையினெரியுண்ட மகரங்கண்மயங்கிச்
செருமவானிடைக் கற்பகமிரங்கவுந்திய
நிருமியாவிட்ட நெடுங்கணைபாய்தலிநெருப்போ
ஒருமுவீழ்ந்தெனச் சென்றனகடற்றுளியும்பர்.

இவ்வண்ணம் சுவாமியால் விட்டபாணத்தினால் சமுத்திரத்திலுள்ள மகர மீன்கள் மார்புபிளந்து மயங்கி இறந்தன. ஆகாயத்திலுள்ள கற்பகமரங்களுந்திய அச்சமுத்திரத்தின் துளிகள் இடிவிழுந்ததுபோல் தெய்வலோகத்தில் சென்றன. சமுத்திரத்திலுள்ள மலைகள் வெந்துபுகைந்துகொண்டு மேலெழும்பின. அக்கினிப்பொறிகள் ஆகாசத்தைப் பரவினபடியால், அந்த ஆகாசத்திலோடுகின்ற மேகங்கள் வெந்து பூமியிலுதிர்ந்துவிட்டன. நிர்த்தனம் பண்ணிக்கொண்டிருந்த அரம்பாஸ்திரீகளினுடைய கறுத்த கூந்தலெல்லாம் வெளுத்துப்போய் விட்டன. இராமபாணங்கள் மார்பிற்பட்டுப் பாய்ந்ததினால் இரத்தங்கக்கிக்கொண்டு அநேக மகரமச்சங்கள் வற்றியுலர்ந்துபோய் விட்டன. திமிங்கிலங்களும் இன்னும் சில பெரியமச்சங்களும் அநேக கண்டதுண்டமாய் நறுக்குண்டு செத்தன. மலைகளெல்லா மெரிந்து சாம்பல்பறக்கவும், கிழாதுகொண்டு சமுத்திரஞ் சேறாகி அந்தச் சேறுந்தியவும், ஆதிசேஷனுடைய ஆயிரஞ் சிரசுகளுங் காய்ந்துபோகவும், இராமபாணங்களொவ்வொன்று நூறு - ஆயிரம் - கோடி - கோடாநுகோடிகளாகப் புறப்பட்டன.

அச்சமுத்திரத்தின்கண்ணுள்ள வாளை-வரால்-கெண்டை-கெளிறு-குரவை-விலாங்கு-உளுவை-மலங்கு-பாறை-ஆறை-தேடை-தேளி-சொள்ளை-திமிங்கிலம் — திமிங்கிலகிலம் இவையாதிய மீன்களெல்லாம் பொய்சொன்னவர்களுடைய குலம்போலக் கருவற்றுப்போய்விட்டன. பாய்மரங்களோடு கூடிய கப்பல்கள் சமுத்திரத்திலோடித் திரிவதுபோல, அநேக மீன்கள்பாய்ந்த அம்புகளோடு ஓடித் திரிந்தன. சமுத்திரமானது இரத்தங்கள்வழிந்து ஓடும்படியாக நெஞ்சுபிளப்புண்ட இரணியனைப்போலவும், சிவந்த அந்திவானத்தைப்போலவுமிருந்தது. பத்திபத்தியாக ராமபாணங்கள் பறந்துபோனதினாலே அந்தச் சமுத்திரத்திலிருந்த அநேக மீன்கள் வெந்து தீய்ந்துபோயின. அநேக மீன்கள் கரிந்துபோயின. அநேக மீன்கள் பொரிந்துபோயின. சுவாமியினுடைய பாணம் குடித்துவிட்டதினாலே" வற்றி அங்கங்கே கொஞ்சங்கொஞ்சஞ் சலமுள்ளதாய்ப் பக்கத்தில் அனல்கள் சூழ்ந்திருந்து ஜுவாலையோடு வெந்துகொண்டிருக்கின்ற சமுத்திரம் காய்ந்த சட்டிபோலவும், அதில்வேகின்ற சிலமீன்கள் நெய்யில்வேகின்ற மீன்கள் போலவுமிருந்தன.

ராமபாணங்களில்அநேகம்இரத்தத்தைக்குடிக்கிறதுபோற்சமுத்திரஜலத்தையெல்லாம் வற்றிப்போகும்படியாய்ப் பானம்பண்ணினதினாலே, அதில் பிரகாசித்துக்கொண்டிருந்த இரத்தினக்கூட்டங்கள் எப்படியிருந்தனவெனில் கடல்வெந்து மலிக்கக்கூடாதிருந்து நெருப்பைச்சொரிந்ததுபோன்றிருந்தன. சமுத்திரமுழுமையும் சேற்றிவெளியாய்ப்போய்விட்டபடியினாலே சங்குகளெல்லாம் கீழேப்புடனேகரிந்துகிடக்கின்றமீனினங்களைக்கொத்துகுவைத்திருக்கும் பாத்திரங்கள்போலிருந்ததல்லாமல், ஆற்றினிடத்தில்வினைக்களை



வரிசைவரிசையாய் வைத்துத் தகனஞ்செய்த அங்கங்கள்போலுமிருந்தன. சீறிக்கொண்டு வருகின்ற ராமபாணங்களொவ்வொன்றும் நூறாகி அக்கினியை உண்டாக்கினதால், மூங்கிற்காடுபற்றி யெரிகிறதுபோன்றிருந்தது. கடலிலுள்ள மீன்களும் — மற்றஜீவகோடிகளும் — இராமபாணத்தினால் துண்டிடப்பட்டு, அவற்றிலிருந்து பொழிகின்ற ரத்தவெள்ளங்கள் கடலினிடத்து சிப்பிகளில் அலைமோதிக்கொண்டிருந்தன.

ஸ்ரீராமபாண மறுத்துத்தள்ளத் தெறிபட்டு விழுந்த பெரியமரங்களும் அலைகளும் -ஆழ்ந்தசமுத்திரக்கொதிநீர் படும்போதெல்லாம் நெருப்புகுமிழ்குமிழென்றுபற்றி, "உள்ளுருகிய வேரோடுங்கூட எல்லவையும் தோய்ந்து வேகின்றதுபோல வெந்தன. தேவதேவரான ஸ்ரீராமரால் விடப்பட்ட பாணமானது பிரம்மாவினுடைய சாபத்தைப்போலப் பிசகாமல், மகாவேகத்திலு மதிகமாகக்கடுகி, உக்கிரமான அக்கினியை அங்கங்கே கக்கிக்கொண்டு போகிறபடியினாலே சமுத்திரமானது தாமரைமலர்மலர்ந்திருந்த ஒரு தடாகம்போன்றிருந்தது. பெரியோர்கள் கோபித்தாலும் அநுகிரகம்பண்ணக் கொடுக்குமேயல்லாமல் கெடுதியைத் தரமாட்டாதென்பதைத் திருஷ்டாந்தமாய்க் கண்டோம், அஃதெப்படியென்றால் - உப்புச்சமுத்திரமென்று உலகத்தவர்கள் பழிக்கிறதுபோய் ஸ்ரீராமருடைய பாணம்பட்டு வற்றிப்போன அந்தத் தென்சமுத்திரம் சுத்தோதக சமுத்திரமாய்விட்டது. வரிசைவரிசையாக விருக்கிற பெரிய அண்டங்களையெல்லாம் வாரியுண்டருளின சாட்சாத் நாராயணனுக்கு இந்தச் சமுத்திரத்தை வற்றடிப்பதொருவல்லமையோ? பூமியை அமிழ்த்தவல்ல சமுத்திரமென்றும், அந்தச்சமுத்திரங்களையும் ஊழிக்காலத்தில் வடவாமுகாக்கினியானது பருகித்துப்போடுமென்றும் சொல்லுகின்ற வேதவாக்கியத்தி னர்த்தத்தை இவர் நிலைநிறுத்திக் காட்டினார்.

இராத்திரியும் பகலுமாக அந்தக் கடலுக்குள்ளாயிருந்து கடுந்தவமான தவஞ்செய்துகொண்டிருந்த மகாரிஷிகள் அந்த ஸ்ரீலக்ஷ்மிபதியினுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருந்தபடியால், இராமபாணத்தினால் வேகாதவர்களாகி அந்த அக்கினிமயமான ஜலத்துக்குள்ளேயே சஞ்சரித்தார்கள். தென்திசை வடதிசை முதலான எல்லாத் திக்குகளிலும் புகைப்படலங்கள் மூடிக்கொண்டதனால், சூரியனுடைய குதிரைகள் புகையாலுடல்கருகித் திகைத்து, நடக்கக்கூடாமல் வழிதப்பி நின்றுவிட்டன. தம்மைவிட்டு நீங்கின பேர்களனுபவிக்கும்துக்கமை இன்னதென்றறிந்தாற் தெரியுந்தன்மைப்போல், சக்கரவாளப்பக்ஷிகள் தம்மைவிட்டுப் பிரிந்திருக்கின்ற பெடைகளைத் தேடிக்கொண்டுபோய் அந்த அக்கினியிலகப்பட்டுத்தீய்ந்து இறந்துபோய்விட்டன. பொறுமையற்ற கருங்கடல்முழுதும் அக்கினிவிசாலித்து வெந்தடங்கினபோது, அதன்கொடுமையை இன்னும் விரித்துச் சொல்லவேண்டுமோ?

நெருங்கிய பெரும்புகைப்படலம், தங்களைச் சூழ்ந்துகொண்டபடியால் தேவர்களும் கண்ணிமைத்து வியர்வடைந்தார்கள். பூக்களைத் தேடிப்போகாமல், ஒளியைக்கண்டு அவ்விடத்தைச்சேர்ந்து பாவங்களெல்லாம் ஒன்றாய்க் கூடினதுபோன்றிருந்த வண்டுகளெல்லாம் அந்நெருப்பைக்கடந்துபோக வேறு வழியில்லாமையால் வருணராஜனுடைய விருத்தியடையாத புகழைப்போல் மடிந்துபோய்விட்டன. நெருங்கிக் கூடிக்கொண்டிருந்த கடற்பறவைகளெல்லாம் ஆகாசத்திற் பறக்கத்தொடங்கி, அவ்வாகாச வெளியிற்போவதற்குச் சக்தியில்லாமல் நெருப்புப்பற்றி யெரிகிற தேகத்தையுடையவைகளாய்ப் பூமியிலுதிர்ந்துவிட்டன. இறந்துபோன பக்ஷிகளெல்லாம்போக சாகாதபக்ஷிகள் அக்கினிப்படலமானது சூழ்ந்துகொண்டபடியினாலே தாங்கள் முட்டையிட்டு வைத்தவிட மின்னதென்று தெரியாமல், வெந்துமுத்துக்களைத்தம முட்டைகளென்று எடுத்துக்கொண்டு போயின. அக்கடற்கரையிலுள்ள குரங்குகள், ஓ பாவிகளே! சாட்சாத் எம்பெருமானை மனிதனென்றுமதித்து, அவரிடத்திற்சேராமல் இங்கேயிருந்து விட்டோம். அதனாலே அவர் நம்மைத் திருவுளத்தில் நினையாமற்போனார். என்று தங்களுடைய பற்களை இளித்துக்கொண்டு தாவிக்குதித்து ஓடிப்போய்விட்டன.

அதிக நிமையையுடையவர்களாய்க் கடலில் மறைந்துகொண்டிருந்த அசுரர்களெல்லாஞ் செத்து, பெரியமலைகளைப்போற் சமுத்திரத்தில் மிதந்தார்கள். பொற்குடமானது இடையில் விரிந்ததுபோலொத்த வரிகளையுடையபொன்னிறமான மான்களெல்லாம் வெந்து விழுந்துவிட்டன. ஆகாசகங்கையும் வற்றி வரண்டுவிட்டது. வானநக்ஷத்திரங்களும் வெந்துபோய்விட்டன. சிவந்த நிறத்தையுடையவைகளாகவும், அக்கினியைவளர்க்கின்றவைகளாகவும், நீதியைப்போல நடக்கின்றவைகளாகவும், தபசைப்போல விர்த்தியானவைகளாகவும், கோபம் பலவுருவுகொண்டது போன்றவைகளாகவுமிருக்கின்ற ராமபாணங்கள்; அகஸ்தியமகா முனியைப்போலச் சமுத்திரத்தை வற்றக்குடித்து விட்டன. சமுத்திரத்தை மூடிக்கொண்ட தீயினாலே பூலோகமானது மரங்களோடு வெந்து இலங்காபட்டணத்தின் மதிலும் வேகத் தலைப்பட்டபோது, அதிலுள்ள ராட்சசர்களெல்லா முன்சுட்டுவிட்டுப்போன அதன் மறுபடியும் வந்தானோவென்று பயமடைந்தார்கள். சூரியனைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற மேருமலையானது பொற்காறுகளாக உருகியது. இரத்தந்தோய்ந்ததுபோன்ற முருக்கம்பூவுக்குச் சமானமாகக் காடுகள் நெருப்பாய் வெந்தன. பவழக்காடுகளெல்லாம் கரிக்குப்பைக்குச் சமானமாய்விட்டன. பெரியமலைக்குச்சமானமாகப் பருத்திருக்கின்ற திமிலமீன்கள் உயிர்தப்பிப் பிழைத்து, ஒரிடத்திலு மொதுங்குதற் கிடமில்லாதவைகளாய் இரத்தவெள்ளத்திற்குள் நுழைகின்றன. அவைகளிற் சிலமீன்கள் இந்த நீரைக்காட்டிலு நெருப்பே குளிர்ச்சியாயிருக்கின்றதென்று கரையிற்குதித்து உடல் துடிக்கின்றன.



இந்தப் பிரகாரமாக இராமபாணங்களானவை சுருண்டுவிழுகின்ற திரைகளையுடைய கடல்நீரையெல்லாம் பானம்பண்ணிப்போட்டு, இனிப் பானம்பண்ணுகிறதற்கு ஜலமில்லாமல் பூலோகத்திலுள்ள அந்தகாரத்தைக் கெடுத்து நாகலோகத்திலுள்ள இருளுமழியும்படியாகச் சூரியனைப்போலச் சென்றன. உலகத்தைச் சூழ்ந்திருக்கின்ற சப்தசாகரங்களையும் கொதிக்கச்செய்த இராமபாணங்கள் வேகமாய்ப்போய் மேலும் கீழுமாகப் பாய்ந்து பிரமாண்டத்தையும் உருவி, அப்புறத்திலுள்ள பெரும்புறக்கடலையும் தொடர்ந்துபோயின. ஆகாசங்கிழிந்து அவ்விடத்திலிருந்து முதிருகிற செவ்வந்திமணிகள் சொர்க்கலோகம் உடல்கிழிந்து இரத்தவெள்ள மொழுகுகிறதுபோலிருந்தன. கடலின் ஜலமெல்லாம்வற்றி அதன்குடல்கள் கிழிபட்டதுபோலப் பாம்புகள் நெளிந்தன. சமுத்திரம் ஜலம்வற்றி இரத்தினங்கள் வைத்திருக்கின்ற பெட்டியைப்போலிருந்தது. இராமபாணங்கள் தைத்திருக்கின்ற சங்கங்கள் சட்டுவம்போலப் பிரகாசித்தன அநேகமாயிர பாணங்கள் தைத்ததினாலே மலைகளு மநேகமாயிரம் துண்டுகளாய்விட்டன. வித்வான்களாயினோர் கோபித்தால் வீரமனைத்தும் தேய்ந்து நசித்துப்போகிறவர்களைப்போல, அந்தச்சமுத்திரத்திலுள்ள முத்துக்கள் இராமபாணத்தால் வெந்து ஒன்றுமுருப்ச் சிதறிப்போயின.

இப்படி ஸ்ரீராமபாணத்தினாலே வெந்துமாண்ட ஜீவகோடிகளெல்லாம் பரமபதமடைந்து விட்டன. அந்தச் சமுத்திரத்தில் நெருங்கிவளர்ந்த மூங்கிற்காடுகளிற்பற்றிய அக்கினி புறப்பட்டுச் சமுத்திரம் முழுதிலும் பரவிப்போயது. அக்கொடியவக்கினியானது பூமியைச் சுற்றிலும் வளைத்துக்கொண்டதெப்படியிருந்ததென்றால், பூமிதேவி தரித்துக்கொண்டிருந்த நீலவஸ்திரத்தை நீக்கிவிட்டுச் செகப்புவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டது போன்றிருந்தது. படித்தவர்களும் படித்தவர்களு மெப்படி மனஞ்சகித்துக் கூடியிருக்கமாட்டார்களோ? அதுபோல ஸ்ரீராமபாணத்தினுண்டான அக்கினி இந்தச்சமுத்திரஜலத்தைப் பானம்பண்ணுவதைக்கண்டு சகிக்கமாட்டாத வடவாமுகாக்கினியானது உயிர்பதைத்து வேறொருகடலைநாடி ஓடத்தொடங்கியது. இந்தச் சமுத்திரத்திற்பற்றிய நெருப்பானது ஜீவகோடிகள் வாழும்படியான உலகத்தையெல்லா மூடிக்கொண்டு, ஆகாசபரியந்தம் பரவி, ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் அமுத்தியழிக்கும்படியாகப் பொங்கிவருகிற பெரும்புறக்கடலை யொத்திருந்தது. அக்கினியானது ஆகாசத்தை யளாவிச்சுட, அதைச் சகிக்கமாட்டாமல் தேவர்கள் சுவர்க்கலோகத்தைவிட்டுப் பிர்ம்மலோகத்திற்குப்போய் அவ்விடத்திலே தங்குவார்களேயானால், பூலோகத்திலிருக்கின்ற மற்றவர்களுடைய செய்கையை இன்னபடியென்று சொல்லவேண்டுமோ?

## ஸ்ரீராமர் பிரமாஸ்திரந்தொடுக்க வருணன்வந்துதுதித்து தான்வருவதற்குக் காலநீடித்த காரணங்கூறுதல்.

கவி.

இக்கிலியம்புவ தென்னினிக்கவழி
முக்குவென்வருணனை யென்னமுன்னெடு
தெக்கரும்பெருவிசைச் சரமுகம்படை
தெரித்தனைமாருத் துறுக்கவெய்தினர்.

இப்பால் ஸ்ரீராமர்வீரர் இனிஅவன் வருத்தமுண்டாவதனாலேபய தென்ன ? இப்போதே அவ்வருணனையோடி வரும்படிச் செய்கிறேனென்று அதிக உக்கிரமான கோபத்துடனே பிரமாஸ்திரத்தையெடுத்து வில்லிற்பூட்டினர். பூட்டினமாத்திரத்தில் தேவர்களெல்லா நடுங்கிவிட்டார்கள். இனியார் பிழைக்கப் போகிறார்களென்கிற பயத்தால் மேகங்களெல்லாம் கதறின. வருணனென்பவன் காலிற்றண்ணீரில்லாமல் அபயக்கூக்குரலிட்டான். எல்லா லோகத்திலும் அடைபட்டிருந்த ஆறுகளெல்லாம் ததளித்துப்போய் விட்டன.

கவி.

அண்டமூலத்துக்கப்பா லாழியுங்கொதித்ததேழு
தெண்டிரைக்கடலின்செய்கை செப்பியென்றேவன்சென்னி
பண்டைநாளிருந்தகங்கை நங்கையும்பதைத்தாள்பார்ப்பான்
குண்டிகையிலிருந்தநீருங் கொளகொளக்கொதித்ததன்றே.

பிரமாண்டத்துக்கப்புறத்திலிருக்கின்ற பெரும்புறக்கடலுங் கொதிக்குமானால், ஏழுசமுத்திரங்களினுடைய செய்கையைச் சொல்லவேண்டுமோ ? சாக்ஷாத் கயிலாசபதியினுடைய சடாபாரத்தில் ஆதிகாலந்தொட்டு வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஜலஸ்வரூபமாகிய கங்காதேவியும் பதைபதைத்துப்போயினாள். பிரமதேவனுடைய கமண்டலத்திலுள்ள தீர்த்தமும் கொளகொளவென்று கொதித்தது. தமக்குத் தயவுவந்தகாலத்தில் உலகங்களையெல்லாஞ் சிருஷ்டித்துக் கோபம்வந்தகாலத்தில் மறுபடியுஞ் சம்ஹரிக்கும்படியான சர்வேஸ்வரனை இந்தவருணன் அறியாமற்போனானே: அவருடைய கோபத்தைக் கண்டபின்பாவது வந்து அவரைக்காணப் புத்தியில்லாமல் தாமசப்பட்டானே: இவனைப்பார்க்கிலும் பிராக்ஷசர்களா பகையாளிகளென்று தேவர்களெல்லா நடுங்கினார்கள். தானே தனியாயிருந்து தன்னிடத்திலேயே எல்லாவுலகங்களையும் பெற்றவனான சர்வேஸ்வரனால் கோபிக்கப்பெற்றால், இவனினிப் பிழைக்கிறதற்கிடமுண்டோ ? குற்றமில்லாதவர்கள் மேலிலும் இப்படிப்பட்ட தப்பிதம்வருகிறதற்குச் சம்பவித்ததேயென்று சமஸ்தாத்மாக்களும் வருணனைத் தூஷித்தன.

அப்போது வருணனே லோகமெல்லாம் அக்கினிச்சுவாலையோடிருந்த புகைகளாற்பின்னிறே வழிதெரிந்துபோகச் சக்தியில்லாதவனாகி, கண்களில் நீர்தாரைதாரையாய்ச் சலத்தைவிட்டுப் பக்தியுடனே உருகி, மனமிளகித்தொ



ழுது கைகூப்பியும் வாழையைப்போலக் கெஞ்சிப்பதறுகின்ற சொல்லையுடையவனாகி மொழுக்கு, சுவாமி ! தேவரீர் அடியேனை நீர்நீத்ததன்மையைக் கடலுக் கத்தரையில்நின்ற நாய்போன்ற அடியேனறியவில்லையென்று சொல்லிக் கொண்டு சுவாமிக்குச் சந்தேக நீக்கும்படியாக அக்கினியற்றிப் பெரிக்கின்ற சமுத்திரத்தின்மத்தியிலே தட்டித்தடுமாறிக்கொண்டு நடந்து, குழறுகின்ற சொல்லையுடையவனாகியும் - வேகின்ற தலையையுடையவனாகியும் - பயந்தநெஞ்சையுடையவனாகியும் - கருகியிளைத்த தேகத்தையுடையவனாகியும் — கண்களிற் புகைமண்டிக்கொள்ளக் குருடனைப்போல விழிதடவிக்கொண்டு, மிகுந்த வருத்தத்துடனே தாக்கப்பட்டுவந்து நின்று, குற்றமற்ற லோகத்திலெல்லாம் ரக்ஷகராகிய தேவரீரே கோபித்தால் உம்முடைய இரண்டுதிருவடிகளையல்லாமல் அடியேனுக்கு வேறுகதியொன்றுண்டோ ? இந்தலோகமெல்லாமுமக்கு ஒருலட்கியமோ ? உம்மையல்லாமல் எனக்குவேறு ரக்ஷகருண்டோ ? உமக்கே அபயமபயமென்று அடிக்கடி சொல்லிக்கொண்டு இவ்வாறு துதிப்பதாயினான்.

## வருணன் சுவாமியைத்துதித்தல்.

கவி.

ஆழிநீயனலுநீயே யல்லவையெல்லாநீயே
யூழிநீயுலகுநீயே வற்றுறையுமிருநீயே
வாழியாயடியேனின்னை மறப்பனோவயக்குசெந்நீச்
சூழுறவிலக்குபோனேன் றீர்த்தருள்கருணைமூர்த்தி.

காட்டுவாயுலகங்காட்டிக் காத்தவைகடையிற்செந்தீ
யூட்டுவாயுண்பாய்நீயே யுனக்குமொன்றுதண்டோ
நீட்டுவாண்பகழியொன்றா லுலகங்களனைத்துமுய்ய
வீட்டுவாய்நினையினுயேற் சித்தமேவேறுமோதான்.

சண்டவான்கிரணவாளற் றயங்குசுட்கோசொய்க்கு
மண்டலத்துறையுஞ்சோதி வன்னவேழுறையின்வாழ்வே
பண்டைநான்முகனேயாதிச் சராசரமீன்றநாளிற்
புண்டரீகத்துவைதம் புராதனேபோற்றிபோற்றி.

கன்னமாயுலகங்கொள்ளும் கருணையான்மறையிற்கூறும்
எள்ளலாகாதமூலத் தியாதுக்குமுதலாயுள்ள
வன்னலேசாத்தியென்ற மாதரிவருத்தந்தீரப்
புள்ளின்மேல்வந்துதோன்றும் புராதனேபோற்றிபோற்றி.

அன்னைநீயத்தனீயே யல்லவையெல்லாநீயே
பின்னுநீமுன்னுநீயே பேறுநீயிகழ்வுநீயே
யென்னைநீயிகழ்ந்ததென்ற தெங்ஙனேயீசனாய
வுன்னைநீயுணராய்நாயே னெங்ஙனமுணர்வேனுன்னை.

ஓ ஸ்ரீராமமூர்த்தி ! நீரே இந்தச்சமுத்திரங்கள். நீரே அக்கினி, மற்றப் பூதங்களு நீரே. ஊழிக்காலமுநீரே. உலகங்களுநீரே. அந்த உலகங்களில் வசிக்கின்ற ஜீவகோடிகளுநீரே. இப்படிப்பட்ட உம்மையான்மறப்பேனோ ?

அடியேன் மிகவுங்கொடிய அக்கினி சூழ்ந்தெரித்ததினால் வருத்தப்பட்டுப் போனேன். இரக்ஷித்தருளவேண்டும். சுவாமி! தேவரீர் இவ்வுலகங்களை யுண்டாக்குவீர். உண்டாக்கிரக்ஷித்தவைகளைக் கடையிசிற் சுட்டெரித்துவிடுவீர். ஒர் கவளமாகவும் உண்டருளுவீர். உம்மாலாகாத காரியமுமுண்டோ? மிகுந்தகூர்மையுள்ள சூருபாணத்தினாலே இந்தமூன்று லோகங்களையுஞ்சுட்டு நாசமாக்கிப்போடுவீர். அடியேனுக்கு இவ்வளவுசெய்யவேண்டுமோ? ஓ மிகுந்த பிரசண்டகிரணங்களாகிய வாளாயுதத்தினால் எங்குமூடிய இருட்காட்டைவெட்டிச்சாய்க்கும்படியான சூரியமண்டலத்தில் வசிக்கின்ற ஜோதிஸ்வரூபமே? ஓ வேதங்களின் ஆதாரமே! ஓ நான்குமுகங்களையுடைய பிரமதேவனுக்கிச் சராசரங்களைச் சிருஷ்டித்தபோது தாமரசபுஷ்பத்தி லெழுந்தருளி யிருந்த அருளிவஸ்துவே! ஓ ஒருவருக்குந் தெரியாமல் உலகங்களையெல்லா மறைத்துவைத்திருக்கின்ற இருளைப்போக்குங் கதிர்ப்ரகாசமான வேதப்பிரதிபாதவஸ்துவான ஆதிகாரணவஸ்துவே! இரக்ஷித்தருளவேண்டுமென்றழைத்த கஜேந்திரனுடைய துக்கநீங்கும்படியாக் கெருடவாகனம் மீதெழுந்தருளிவந்து சேவைசாதித்த ஓ புராதனனே! உமக்குமங்களமுண்டாவதாக. எனக்குத்தாயு நீரே: தந்தையு நீரே: வேண்டியபொருளு நீரே: ஆதியு நீரே: அந்தமு நீரே: மோக்ஷமு நீரே; நரகமு நீரே. சர்வேஸ்வரரான நீரே உம்மை அறியாதிருந்தால் அடியேன் எப்படி யறியப்போகின்றேன்? அடியேனை இகழக்கூடுமோ? என்றிப்படி பலவாறுகக்கூறித் துதித்தனன்.

வருணதேவன் ஸ்ரீராமபிரானுக்குக் காணிக்கை செலுத்தல்.

கவி.

பாயிருள்சீக்குந்தெய்வப் பரிதியைப்பழிக்குமாலை
மாயிருங்கரத்தான்மன்மே லடியுறையாகவைத்துத்
தீயனசிறியோர்செய்தாற் பொறுப்பதுபெரியோர்மேற்றே
இராமத்தையா சரணமென் றடியில்வீழ்ந்தான்.

இவ்வாறு பத்திவினயத்துடன் துதித்த வருணனானவன் பூலோகத்தில் பரந்து தோன்றுகின்ற இருளைக்கெடுக்கும் பிரகாசமிக்க சகஸ்திரகிரணங்களையுடைய சூரியனைத் தோற்கடிக்கும்படியாக விளங்குகின்ற மாணிக்கமாலையைத்தனது மிகவும் பெரியகரத்தினால் சுவாமிக்குத் திருவடிக் காணிக்கையாக எதிரிற் கொண்டுவைத்து சிறியவர்கள் விசாரிக்காது தீமையான செய்கை செய்தார்களாயின் பெரியோர்கள் பொறுப்பதே கடமையல்லவா? ஆதலால் எனது சிறிய குற்றத்தைப் பொறுக்கவேண்டுமென் றநேகமாகிய திருப்பெயர்களையுடைய ரகுகுலோத்தமா வென்று திருவடியில் சாஷ்டாங்கமாகச் சேவித்தான். இப்படி ஒருமலையானது அக்கினி பற்றியெரிகிறதுபோல் எரிகிற உருவத்துடனே சமுத்திரராஜன் அடியேனுமக் கபயமென்று சொன்னமாத்திரத்தில், மிகுந்த நெருப்பிலே காய்ந்து பொங்கிவழியும் பாலானது கொஞ்சத் தண்ணீரைத் தெளித்தமாத்திரத்தில் அடங்குவதுபோல் ஸ்ரீராமமூர்த்தி



கோபமாறி, அவ்வருணதேவனைக் கிருபையோடும்பார்த்து, ஓ புனல்வேந்தே! இயாம் உமதுமேல்வைத்த கோபமாறினோம். பயப்படாதீர். உமக்கபயந்தந்தருளினோம். உம்மையாம்வேண்டிப் பிரபத்திபண்ணவும்வராமற் கோபித்தபிறகு வந்ததற்குக்காரணமென்ன? அதனை விவரமாகச்சொல்லுமென்று நியமித்தனர். அம்மாத்திரத்தில் வருணன் சுவாமியைத்தொழுது சொல்லத்தொடங்கினன். சுவாமி! பூமிதேவியைப்பார்க்கிலு மிகுந்த பொறுமையை யுடைய உமது பத்தினியாகிய சீதாபிராட்டியாருக்குச் சம்பவித்த துன்பத்தை இன்றைக்குத் தேவரீருடைய வார்த்தையினாற்றா னறிந்தேன். எழுசமுத்திரங்களுக் கப்புறத்தில் மீன்கள் சண்டைசெய்துகொண் டிருந்ததை விலக்கப்போயிருந்தேன். ஆகையினாலே தேவரீருடைய நியமனத்தை அடியேனறியாம லிருந்துவிட்டேன். இதுதான் உள்ளசமாச்சாரமென்று வருணராஜன்கூறி வணங்கினன்.

இவ்வாறுகூறிய வருணனுடைய வார்த்தையைக்கேட்ட ஸ்ரீராமர் இரக்கமுற்று, இந்தக்காரிய நிற்கட்டும். இந்தப்பிரமாஸ்திரம் சும்மா வியர்த்தமாய்ப்போகாது இதைப்பிரயோகிக்கும்படியான இலக்கு இன்னதென்று சொல்லக்கடவீர். என்று நியமிக்கவும் வருணன் மிகுந்தசந்தோஷத்துடன் ஸ்வாமியைத்தொழுது, ஓ மலையைக்காட்டிலும் உயர்ந்ததிருத்தோள்களையுடைய சக்கரவர்த்தித் திருக்குமாரரே! அடியேனும் இந்த லோகங்களும் பிழைத்தோம். பருகாந்தாரமென்கின்ற தீவிலே நூறுகோடி பேர்களுக்கு மதிகமாக அசுரர்களிருக்கின்றார்கள். அவர்கள் இந்த்லோகத்து ஜீவகோடிகளில் அநேகர்களைத் தின்றுவிட்டார்கள். அவர்களெனக்கு மகாபகையாளிகள். இந்தப்பிரமாஸ்திரத்தை அவர்கள்மேற் பிரயோகித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.

வருணன்மேல் தொடுக்கவிருந்த பிரமாஸ்திரத்தை அவ்வருணன் வேண்டுகோளின்படி சுவாமி பிருகாந்தரத்தீவிலுள்ள அசுரர்கள் மேற்றொடுத்தல்.

கவி.

கோடிநூறெரிந்துளோர்க்கு முணர்விற்குமிரங்கன்றோன்
கோடிநூறுயதிய வவுணரைக்குணங்களோடும்
ஒடிநூறென்றுவிட்டா ளொளிமையொடுங்காமுன்னம்
பாடிநூறுகதுறி மீண்டதப்பகழித்தெய்வம்.

கோடானுகோடியாகிய வேதாகமசாஸ்திரங்களைக் கரைபுரக் கற்றுணர்ந்த நிபுணர்களின் அறிவிற்கு மெட்டாது மேலாகின்ற எமது கர்த்தாவாகிய ஸ்ரீராமபிரானவர், நூறுகோடி பேர்களான அந்தத்துஷ்ட அசுரர்களை அவர்களுடைய வம்சசகிதமாகச் சீக்கிரமாய்ப்போய்ச் சம்மரித்துவிடும்படியாக் ஆக்ஞாபித்து அந்தப் பிரமாஸ்திரத்தைவிட்டார். அம்மாத்திரத்தி லப்பிரமாஸ்திரமானது ஒருக்ஷணநேரத்திற்குள்ளாக அவர்களைச் சுட்டெரித்துப்போட்டு, மறுபடியுஞ் சுவாமியின் அம்பறாத்தூணியில்வந்து நுழைந்துகொண்டது.

அப்போது ஸ்ரீராமர் வருணபகவானைநோக்கி, சற்கர்மங்களைச்செய்து தருமந்தப்பாதவர்களுக்கு எப்போதும் நன்மையேசேருமல்லது கெடுதியுண்டாகமாட்டாது. அழித்துவிடும்படியாக உம்மேற்பிறந்த கோபமானது துஷ்டசெய்கையையுடையவர்களான அசுரர்களுக்கே தீமையைச்செய்தது. பாபத்தைச் செய்துகொண்டிருந்தவர்களான அவ்வசுரர்களைத்தேடி அனேக காததூரமோடி, தீபத்தைப்போன்ற ஞானமுடையவர்களான வேதமூர்த்திகளாலிடப்பட்ட சாபத்துக்குச்சமானமாக எம்முடைய வஸ்திரமானது சுட்டுவிட்டபடியினாலே, தர்மத்தைக்காட்டிலும் பலமுள்ளதொன்றுண்டோ. ஓ வருணதேவனே! நீ எம்மிடத்தில் அபயமென்று புகுந்தீர், அப்படிபுகுந்த உமக்கு அபயங்கொடாவிட்டாற் பழியுண்டாமென்று நாம் கோபமாறினோம். பாதகர்களாகிய ராவணாதி ராக்ஷசர்களுடைய தலைகளை அறுக்கும்படியாக இந்தச் சமுத்திரத்தைத் தாண்டிப்போகிறதற்கு எங்களுக்கு வழிகாட்டவேண்டும். என்று சுவாமிகேட்கவும் வருணனவரைத் தொழுது சொல்லுகிறான்.

வருணன் சொற்படி ஸ்ரீராமபிரான் சுக்கிரீவனாதியரோடு சேதுபந்தனஞ்செய்ய வாக்கியாபித்தல்.

கவி.

நன்றிதுபுரிதுமன்றே நளிகடற்பெருமைநம்பால்
இன்றிதுதிருமென்னி லெளிவரும்பூதமெல்லாம்
குன்றுகொண்டடுக்கிச்சேது குயிற்றுதிரென்றுகூறிச்
சென்றனனிருக்கை நோக்கி வருணனுமருளிற்சென்றான்.

ஓ தபஸ்ரேஷ்டரான சுவாமீ! இந்தச் சமுத்திரத்தினுடைய ஆழமும் அகலமும் அறிகிறதற்கு அடியேனாலுமுடியா. இதன் ஜலத்தை இறைத்துக் கட்டிவைக்கிறதற்கு அடுக்காகவிருக்கின்ற இந்த யேழுலோகங்களும்போதா. மேலும்—தேவரீருடைய சேனைகள் இதையிறைத்து வற்றடிக்கிறதற்கு அனேககாலஞ் செல்வதுமல்லாமல், மனத்தளர்வையு மடைந்துவிடும். எல்லா ஜீவகோடிகளும் கல்லைப்போல வலியுடையவைகளாய் ஒன்றின்மேலொன்றாய் நின்றாலும், இதில்மூழ்கிமாய்ந்துபோய்விடும். ஆகையால்—என்மேல்வைத்த பொருளொன்று நழுவிவிழுவொட்டாமலெத்தனைகாலமாகுலுஞ் சுமந்துகொண்டிருக்கின்றேன். தேவரீர் என்தலையின்மீது ஒரு சேதுவைக்கட்டிச் சந்தோஷமாக எழுந்தருளுமென்று விண்ணப்பம்பண்ணிக்கொண்டான். அது கேட்டதும் ஸ்ரீராமரானவர் அப்படியே செய்கிறோமென்று சொல்லி, தம்மைப் புடைசூழ்ந்த வானரவீரர்கட்குத் தலைவனை சுக்கிரீவமகாராஜனைப் பார்த்து, நம்மிடத்தில் வருணதேவன் கொண்டிருக்கின்ற நற்குணத்தினாலே அதிசீக்கிரத்தில் நிரும்படியாக யாவருமலைகளைக் கொண்டுவந்து அடுக்கிச்சேதுகட்டுங்களென்றுநியமித்துவிட்டு, சுவாமி தம்முடைய இருப்பிடம்போய்ச் சேர்ந்தார். வருணதேவனும் ஸ்வாமியினிடத்திற் சந்தோஷமாய் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

வருணனை வழிவேண்டுபடலம் – முற்றிற்று.

No. 46. வானரத்தச்சனாகிய நளனாற்சுக்கிரீவனாதியர்கட்டிற்சேதுபந்தனஞ்
செய்து ஸ்ரீராமருக்கறிவித்தல்.



இராவணனாலேவந்தசுகசாரணர்இராமனாதியர்பலமறிந்துபோய் அறிவித்தல்.



சேதுபந்தனப்படலம்.



ஸ்ரீராமஜெயம்.

எழுபது,

# சேதுபந்தனப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரானுத்தரவின்படி சுக்கிரீவமகாராஜன் வானரத் தச்சனாகிய நளனையழைப்பித்துச் சமுத்திரத்தைப் பந்தனஞ்செய்வதற் கான ஆலோசனையை முடிவுபடுத்த, அதைத்தீர்த்து ஜாம்புவந்தராசனை யால் வானரசைனியங்களும் வானரவீரர்களும் அளவற்ற மலைகளையு மரங்களையு மேற்பாமற் கொண்டுவந்து கொடுக்க நளனானவன் மூன்று தி னத்தில் சேதுபந்தனஞ்செய்து முடித்து ஸ்ரீராமனுக் கறிவித்ததை சொல்லப்படுகின்றது.

## சுக்கிரீவன் சேதுபந்தனஞ்செய்ய நளனுக் காக்கியாபித்ததுணர்ந்த சாம்புவர் கட்டளைப்படி வானரசைனியங்கள்செய்யும் விபரீதம்.

கவி.

அன்னவுரைமதிநூசோ டாக்கர்கோமகற்
கின்னவுரையினி தூட னிருக்கவென்னளினுள்
வினைவளைசெய்வன முடிக்கவேண்டுமோல்
நனைக்குருசென்றனன் கவிக்குநாயகன்,

வானரகுலத்தரசனாகிய சுக்கிரீவமகாராஜன் மிகவும் அறிவிற் சிரேஷ்ட ராகிய ஆஞ்சநேயர் முதலிய அளவற்ற தனது மந்திரிமார்களுடன், இராக்ஷச குலாதிபதியாகிய இராவணனுக் கிளைய விபீஷணர் தம்முடன் கூடியிருக்க ஆலோசித்து, இனிநடக்கவேண்டிய வேலையை முடிக்கும்படித் தீர்மானிக்கி றதற்கு வானரத்தச்சனாகிய நளனைவரவழைத்தான். அப்படியே நளன்வந்து சுக்கிரீவமகாராஜனுக்குத் தெண்டனிட்டு, ஓ மகாராஜனே! அடியேனை யழை ப்பித்தகாரிய மென்னவென்று கேட்டனன். அதற்குச் சுக்கிரீவமகாராஜ னவனைநோக்கி, நாமெல்லாம் இலங்கைக்குச் செல்லும்படி இந்தச் சமுத்திரத் தில் அணை செய்யவேண்டியதாகையால், அதற்குத்தக்கபடி ஆலோசனைசெய்து விரைவில் முடிக்கவேண்டுமென்று சொல்லினன். அதுகேட்ட நளன் அவனை நமஸ்கரித்து, ஐயா சுக்கிரீவமகாராஜனே! கடலைவழியாகக்கொள்ள சேதுக ட்ட வேண்டுமேயானால் நம்முடைய சைனியங்களுக்கு மலைகளைக் கொண்டு வரும்படி நியமியும். அடியேன் பெருமையும் அறிவையும் வித்தியாசத்தோ ற்ற வொட்டாமற் படிக்கச்செய்து கட்டுகிறேனென்றான்.

கவி.

இனவளமிறைவனு மிலங்கைவேந்தனும்
அனவரதங்குலத் தரசமல்லவர்
வினைதருங்கருங்கட லணைக்கவம்மனுத்
தனமவிசேனையைச்சாம்பன்சாற்றினன்.

கருவரைகாதங்கள் கணக்கிலாதன
இருகையிற்றோள்களிற் சென்னியேந்தின
ஒருகடலிடைக்கடற் றெறிந்தவேலைகள்
வருவனபோமென வந்தவானரம்.

அப்போது சாம்புவர் வானரசேனையைப்பார்த்து, இளையபெருமானும்-சுவாமியும்-விபீஷணனும்வானரும்-சுக்ரீவமகாராஜனுமல்லாத மற்றவர்களெல்லாம் இலங்கையைச் சூழ்ந்திருக்கின்ற சமுத்திரத்தைப் பந்தனஞ்செய்கிறதற்குப் புறப்படுங்களென்று சொன்னார். அந்தப்பிரகாரமே வானரசேனைகள் வெகுதூரம்போய் அநேக மலைகளைப் பெயர்த்துக்கொண்டு, இரண்டு கைகளிலும் - இரண்டு தோள்களிலும் - தலையின்மேலுஞ் சுமந்துகொண்டு, ஒரு சமுத்திரத்தை யடைக்கிறதற்கு மற்றச் சமுத்திரங்களெல்லாஞ் சேர்ந்துவந்ததுபோலப் புறப்பட்டுவந்தன. சிலவானரங்கள் மலைகளைப் பெயர்த்துக்கொண்டிருந்தன. அப்படிப் பெயர்க்கப்பெயர்க்க அவைகளைச் சிலவானரங்கள் தலைமேல் ஏந்திக்கொண்டு வந்தன. சிலவானரங்கள் தலைமேற் சுமந்துகொண்டுவந்தன. சிலவானரங்கள் அந்த மலைகளால் கடலைத்தூர்த்தன, சிலவானரங்கள் அப்படி கடலைத்தூர்த்த சந்தோஷத்தினாலே நின்று ஆர்ப்பரித்தன. சிலவானரங்கள் கூத்தாடின. சிலவானரங்கள் பாட்டுப்பாடின. சிலவானரங்கள் ஒருமலையைக் காலாலுருட்டிக்கொண்டும், இரண்டுமலைகளை இரண்டுதோளின்மேல் தூக்கிக்கொண்டும், ஆகாசத்தையளாவிச் சூல்கொண்ட மேகங்களாற் சூழப்பட்ட ஒரு பெரியமலையைத் தலையிற் சுமந்துகொண்டு, ஒருமலையை வாலிற்கட்டி யிழுத்துக்கொண்டும் வந்தன.

இந்தப் பிரகாரமாகக் கைக்குக்கை கொண்டுவந்து கொடுக்குந்தோறுங் கொடுங்கள் கொடுங்களென்று நளனானவன் வேகப்படுத்தினபோது, மூன்றுகோடி வானரங்கள் ஒன்றாய்ச்சேர்ந்து தூக்கிக்கொண்டுவந்த பெரியமலையையும் அந்தநளனென்கிற வானரத்தச்சன் ஒரு கையைநீட்டி வாங்கிவைத்து தடுக்கித் தன்சாமர்த்தியத்தைக்காட்டி, வருணதேவனை நகைக்கும்படியாகச் செய்தான்.

கவி.

மஞ்சினிற்றிகழ்தரு மலையைமாக்குரங்
கெஞ்சறக்கடிதெடுத் தெறியவேலவன்
விஞ்சையிற்றாங்கினன் சடையன்வெண்ணெயில்
தஞ்சமென்றோர்களைத் தாங்குந்தன்மைபோல்.

மேகமண்டலம் வரையில் அளாவி உயர்ந்து பிரகாசிக்கின்ற பெரியமலைகளை வானரக்கூட்டங்கள் அதிசீக்கிரமாக எடுத்தெறிந்துவந்துவீச, அப்போது நளனானவன், திருவெண்ணெய் நல்லூரை வாசமாகக்கொண்ட சடையப்பமுதலியார் தம்மையாதாரமென்று அடைந்தோர்களைத் தாங்குகின்ற தன்மைபோல், தான்கற்ற சிற்பசாஸ்திரத்தின் முறைப்படி தனது கரத்தால் தாங்குவான். வெற்றியையுடைய வானரசேனைத் தலைவர்கள் பெரியமலைகளைத்



தங்கள் கால்களால் உதைத்து அசைக்கும்போது, அந்த மலையின்மேலிருக்கின்ற மேகங்களெல்லாங் கூச்சலிட்டுக்கொண் டோடின. யக்ஷர்களும் யக்ஷஸ்திரீகளும் ஓட்டம்பிடித்தார்கள். வண்டுகள் சப்தித்துக்கொண் டிருக்கின்ற பெரியமலைகளை அலைகளையுடைய கருங்கடலின் கரையிற் கொண்டுவந்து அவைகட்டுவதற்குக் குவித்துவைத்திருக்க, அவைகளின்மேல் மோதுகின்ற அலைநீர்த்திவலைகள் சுவர்க்கலோகத்தைத் தாண்டிப்போய் மறுபடியுந்திரும்பிப் பூமியில் விழுகிறபடியால் தேவலோகத்தில் மழைபெய்ததாயிற்று.

இப்படி மலைகளை அடிமோட்டோடுபிடுங்கி வானரத்தலைவர்கள் எறிகிறபோது அந்தமலைகள் ஒன்றின்பேரிலொன்றுபட்டுச் சமுத்திரஜலத்தில் நெருப்புப்பறக்க, அந்த நெருப்பை வருணன்பார்த்து, இது ராமபாணநெருப்போ வென்று பயந்தான். பகைக்கண்ணனென்னும் பேருடைய ஒருவானரவீரன் ஒரு பெரியமலையைக் கையில் தூக்கிக்கொண்டுவந்து சமுத்திரத்தி லெறிந்தபோது, அந்தக்கடலிலுள்ள முத்துக்கள் நீர்த்துளிகளோடுகூடச் சிதறி ஆகாசத்திற்போய் வானநட்சத்திரங்களுக்குச் சமானமாகப் பிரகாசித்தன. சேதுபந்த மலைகளைப்பிடுங்கி எறிந்தபோது நீர்த்துளிகளோடெழும்பிய முத்துக்கள் முன்பு சொத்தியிருந்த முத்துக்களோடு பதிந்ததினால், ஆகாசத்திற் படர்ந்திருக்கின்ற மேகங்கள் மேற்கட்டும் வஸ்திரத்துக்கொப்பாகிச் சூரியனுக்காகப் போடப்பட்ட முத்துப்பந்தலைப் போலுமிருந்தன.

மேகங்களாற் சூழப்பட்ட மலைகளுடன் அலைகளுக்கிடையிலே விழுந்த யானைகள் பெரியவாயையுடைய சுறாமீன்களிடம் வந்து, தெளிவான நீரில் பயந்து, பூர்வத்திலே தடாகத்திலிருந்து முதலையினாற் கௌவப் பட்டுப்பயந்து ஆதியந்தமில்லாத பரம்பொருளேயென்று துதிக்கையைத் தூக்கிக்கொண்டு கூப்பிட்ட கஜேந்திரனுக்கொப்பா யிருந்தன. புலால் நாறிக் கொண்டிருந்த சமுத்திரமானது மிகவும் இனிமையுண்டாகும்படி ஒழுகுகின்ற தேனும் புஷ்பங்களும், சந்தனக்கட்டைகளும், அகிற்கட்டைகளும், இன்னமநேகவாசனைத்திரவியங்களும், ஆகாரமுழுமையுங் கமழுகின்ற தேவலோகம் போலநெருங்கிப் பரிமளிக்கின்றபடியினாலே வாசமுட்டைக் குடத்தில் நிறைத்து வைத்திருக்கின்ற திருமஞ்சனதீர்த்தம்போல் சகலகசமுந்தது. மிகுந்த கொடையாளர்கள் தங்கள் குடும்பமெல்லாம் சிறுமைப்பட்டாலும் யாசகர்க்குக் கொடுப்பதினின்று மாறார்களன்றோ? அதுபோல்மரங்கள் முதலியவைகளிலிருந்து சங்கைகளோடுகூடிய பெரியமலைகளெல்லாம் தங்களிடத்திலுள்ள கனியும் - காயும் - தேனும் - மாமிசமும் - திவ்விய பரிமளபுஷ்பங்கள் முதலான மற்றெல்லாவற்றையுஞ் சமுத்திரத்திலுள்ள மீன்கள் பெற்றுக் கொள்ளும்படியாகக் கொடுத்துச் சிறப்படைந்தன.

மிகுந்தசேற்றுக்குள் அமிழ்ந்துபோகின்ற மலைகள் தங்களுக்குள்ள செல்வங்களைக்கொடாமல் ஒளித்துக்கொள்ளுகின்ற லோபிகளைப் போலவும், அவைகளிலுள்ள தேனிறைந்த புஷ்பங்களையும் - காய்களையும் - கனிகளையும்

இன்னுமுள்ள மற்றப்பொருள்களையும் உண்ணப்பொருத வெண்மையான மீன்களெல்லாம் கொடைபெறாத யாசகர்களைப்போலவே யிருந்தன. மேலும் - காற்றடிப்பைப்போல் மிருத்துவேகமாய்த் திரிந்துகொண்டிருக்கின்றவானரங்கள் பெருமலைகளைச் சமுத்திரக் கடலிற்போடும்படியாகப் பெயர்த்தபோதும் அப்பெரிய மலையிலுள்ள பாம்புகள் யானையைவிழுங்கிப் போட்டுக் கரமாட்டாமல், அறிவில்லாதவர்கள் துன்பம்வந்து சம்பவித்தபோதும் உணர்வடையாதிருப்பதுபோலச் சோர்ந்து உறங்கிக்கிடந்தன. ஆபரணத்துக்கொப்பாய் மின்னுகின்ற பற்களையுடையவைகளாய்ச் சமுத்திரத்திலிருக்கின்ற முதலைகளும், துதிக்கையுடையவைகளாய் மலையிலிருக்கின்ற யானைகளும் கர்ச்சித்துக்கொண்டு, ஒன்றுடனொன்றெதிர்த்துச் சுற்றிப்பற்றி இடியுடன்கலந்த ஊழிக்காலத்தின் மேகத்திற்கொப்பாக யுத்தஞ்செய்தன.

அன்றியும் — அற்பபுண்ணியஞ்செய்தவர்கள் இறந்து சுவர்க்கமடைந்து, அப்புண்ணியத்திற்கேற்ப அந்தச்சுவர்க்கத் தலைமைக் கண்ணுல்மாத்திரங்கண்டு மீள்வதுபோல, சில வானரவீரர்களெறிகின்ற மலைகள் ஒன்றின்மேலொன்றுபட்டு எழும்பித் தேவலோகத்திற்சென்று, அங்கேதங்காமற் கீழே விழுந்தன. தங்கள் நிலைமைவிட்டால் பலவான்களும் அபலவான்களாவார்களென்று அறிவாளிகள் சொல்லுவார்களல்லவோ? அதுபோல வானரவீரர்களால் எறியப்பட்ட மலைகளில் முன்னேவசித்திருந்த வல்லமையுள்ள சிங்கங்களும், புலிகளும், யானைகளும், கூர்மையான பற்களையுடைய சுறாமச்சியங்களாற் கொல்லப்பட்டு நீரினிடத்தில்மாண்டன. கொடையாளிகள் தங்கள்புத்திபூர்வமாக உதவாவிட்டாலும் அவர்கள் அயிசுவரியங்கள் யாவர்களுக்கு முபகாரமாவதுபோல, பெரியமலைகளின் சிகரத்திலிருந்து பெருகியொழுகுகின்ற பூந்தேன்களை அம்மலைகளே கொடாவிட்டாலும் கடல்மீன்கள் நிறையக்குடித்து வானரங்களைப்போலச் சந்தோஷித்துத் துள்ளிக்குதித்தன.

மிகுந்த நெருப்புண்டாக ஒன்றோடொன்று தாக்கும்படி வானரங்கள் அதிகமாக மலைகளைக்கொண்டுவந்து இறக்கிவைத்ததினாலே, தேகஞ்சொரிகிறதுபோலக் குளிர்ந்த நீரைச்சொரிகின்ற அம்மலைகளில் விளைந்த மூங்கிலிற்பிறந்த முத்துகளுக்கு வாய்விரித்த இப்பியினிடத்திற்பிறந்த முத்துக்களும் - வலம்புரி முத்துக்களும் - விருந்துகொண்டாடின. வெண்ணெய் நல்லூரி லடைக்கலமென்று வந்தவர்களைச் சடையப்பமுதலியார் ஆதரித்துத் தாங்குவதுபோல, வானரசேனவீரர்கள் பெரியமலைகளை வருத்தப்பட்டுப்பெயர்த்தெடுத்துக்கொண்டுவந்து ஒருமித்தபோதிலும் வானரதச்சனுகிய நளன் தன்வித்தியா சாமர்த்தியத்தால் அவைகளை ஒரு ஆதாரமாகவேந்தி வாங்கினன். ஆகாசத்தை யளாவிக்கொண்டிருக்கின்ற மலைகளை வானரவீரர்கள் வேரோடுபெயர்த்தெடுத்துக்கொண்டுவந்து சமுத்திரத்திற் குப்பற்கும்பலாய்க்குவித்துவிட்டபடியினாலே, கடலெல்லாம் பூமியிலேறங்கி பூமிகடலா



கவும் கடல்பூமியாகவுமாறிவிட்டன. சாசுராது தாரகமந்திர வாச்சியனுகிய ஸ்ரீராமபிரான் விரும்பினால் எது எப்படியாகமாட்டாது?

கொடுமையான சிங்கங்கள் - வேங்கைப்புலிகள் — யாளிகள் — இவைமுதலியன சூழ்ந்துகொண்டிருக்கின்ற மலைகளும் விருக்ஷங்கள் முதலானவைகளும் நெருங்கியிருக்கின்றபடியினாலே, நெய்தனிலம் குறிஞ்சிநிலமாய்விட்டது. மலையிலுள்ளமிருகங்கள் உண்ணக்கிடையாதவைகளிவையென்றுசொல்லுகிறதற்கின்றி அவைகளுக்குவேண்டிய ஆகாரங்களில் எல்லாமம்மலையிலுண்டு; அப்படியிருந்தும் அம்மிருகங்கள் சமுத்திரத்தில் விழுந்தபோது தாம் உண்ணத்தகாத மீன்களாலே உண்ணப்படாமலிருந்த மிருகங்களொன்றுமில்லை. கொல்லாமல் வளர்க்கின்றவர்களிடத்தில் மிகுந்த தயவுண்டாயிருக்கிறபடியினாலே அப்படிப்பட்டவர்களைவிட்டு ஒருவரும் விலகாதன்றே? அதுபோல இம்மலை எங்களுக்காதாரமாயிருக்கின்றதாகையால் விதைவினையென்று தொடர்ந்ததுபோல எல்லாமிருகங்களும் அம்மலையுடனே கடலில்வந்து சேர்ந்துவிட்டன. இதுபோலவே உலகப்பற்றில்லாத ரிஷிகளெல்லாரும் தினந்தோறும் வருத்தமில்லாமல் உண்ணும்படியாக மிகுந்த கனிகளையும் காய்களையும் பெற்றுச் சந்தோஷமாகத் தவமுஞ்செய்கிறதற்கு நல்லவிடமாயிருந்தபடியால், அம்மலைகளைவிரும்பி அவைகளுடன் தாமுமுழுகிறதற் கிச்சித்தார்கள்.

இந்த மலைகளின்மேற் புலாலின்றி வாழ்ந்துகொண்டிருந்த இராக்ஷசர்கள் தலையின்மேற் கைகளைவைத்துக்கொண்டு, நமக்கினி இருக்கிறதற்கு மலையிடங்கிடையாது, அதைவிட்டாலும் வேறேவாழும்படியான இடமும் நமக்கில்லையென்று சொல்லிக்கொண்டு இலங்கையைப்போய்ச்சேர்ந்தார்கள். சமுத்திரத்தில் முழுநாளும் - மேலெழும்பாமலும் - சிறப்பாகக்கட்டப்பட்ட சேதுவணைக் கட்டினுடைய இரண்டு பக்கங்களிலும், தங்கள்கூட்டத்துடனே வரிசைவரிசையாய்ச்சேர்ந்த சிங்கங்களும் - யாளிகளும் - அந்தச் சேதுவுக்கு இரண்டுபக்கத்திலும் கட்டப்பட்ட ஒழுங்கான எழுதகம் போன்றிருந்தன. முத்திப்போட்ட பளிங்கு மலைகள் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றதைத் தெரியாமல் இடையில் வெளிவிழுந்திருக்கின்றதென்று கருதி, அவ்வெளியை மூட வேண்டுமென்று வானரவீரர்கள் சிலமலைகளைக் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

பூமியானது பள்ளமாய்ப் போகும்படியாக வானரங்கள் பிடுங்கியமலைகளின்வேரைப்போல, அந்தமலைகளினுடைய குகைகளில் நின்றும் பாம்புகள் நழுவிப் பூமியில் தொங்கின. அந்தச் சேதுவில் சூரியகாந்த மலையின்பக்கத்திற் சில இருண்டமலைகளையும் வரிசையாக அடுக்கிவைத்திருப்பனவெப்படியிருப்பனவென்றால், கிருபாமேகமாகிய ஸ்ரீரகுகுலோத்தமனானவர் வருணராஜன் வெறுங்கழுத்துடனிருக்கின்றானென்று அவனுக்குத் திருப்பிக்கொடுத்த கருணைசரமாகிய இரத்தினமாலைபோன்றிருந்தது. யோகீஸ்வரர்கள் தங்க

ருக்குச் சொந்தமான தேகத்தைவிட்டு மறுகூடுபோய்ந்து சித்துவிளையாடுகிறதுபோல, மலைப்பாம்புகள் தாமுன்பு வாழ்ந்துகொண்டிருந்த மலைகளைவிட்டு அம்மலைகளின் பக்கத்திற் சேதுவின் கட்டடத்துக்காகப் போடப்பட்ட வேறுபெரிய மலைகளின்குகையில் நுழைந்தன.

### அனுமார் முதலான வானரவீரர்கள் செய்த சகாயத்தினால் நளன்சேதுபந்தனஞ் செய்துமுடித்தல்.

கவி.

சேதுவின்பெரு மைக்கினைசெப்புவோர்
ஏதுவேண்டுமென் றெண்ணுவதென்கொலோ
தூதனிட்ட மலையின்றுவலையால்
மீதுவிட்டில குற்றன மீன்களும்

அனுமாராற் கொண்டுவந்து போட்ட மலையிலிருந்துண்ட நீர்த்துளியோடு அந்தச் சமுத்திர ஜலத்திலுள்ள மீன்களெல்லாம் சகலாத்ம கோடிகளையும் சம்ரக்ஷணைசெய்யும் ஸ்ரீ உபேந்திரனுடைய லோகத்தைப்போய்ச்சேர்ந்ததினால், அந்தச் சேதுவினுடையசிறப்பைச் சொல்லுகிறதற்கு ஒருமுகாந்திரம் வேண்டுமென்று ஆலோசிக்கவும் வேண்டுமோ? அந்த வாயுபுத்திரனாகிய அனுமாருடைய நீண்ட தோள்களைப் போலப் பருத்திருக்கின்ற மலைகளைக் கரடிப்படைக்குத் தலைவராகிய ஜாம்புவர் பிடுங்கியெறிந்த வேகத்தினாலே சிதறிப்போன கடல்நீரானது தேவர்களுடைய சிரசின்மேற்போய்ப் பட்டது. இடியுடன்கலந்த மேகங்கள்சூழ்ந்த மலைகளைப் பனசனென்கிறவானரவீரன் கொண்டுவந்துபோட, அவைகள் பாதாளலோகபரியந்தம்பாய்ந்ததினாலே அவைகளை ஆயிரப்பணாமுடியையுடைய ஆதிசேஷமூர்த்தி தாங்கமாட்டாமல் அந்த லோகவாழ்க்கை வெறுத்துவிட்டுப் பூலோகத்திற்கு வந்துவிடப் புறப்பட்டார்.

நீலனென்பவன் ஒரு பெரியமலையைப் பிடுங்கியெறிய, அந்த மலையானது சமுத்திரத்தினுடைய அடித்தரைவரையிலும் தாக்கிச்சமுத்திரஜலமெல்லாம் பொங்கிக் கரைக்குமேற்பட்டு வழிந்து பூமிமுழுவதும் சலமூடிக்கொண்டதினாலே, உலகத்திலுள்ள ஜனங்களெல்லாம் அழுதுகொண்டோடத் தலைப்பட்டார்கள். இப்படிவானரவீரர்கள் ஒவ்வொருவரும் ஆயிரம்யோசனை உயர்ந்த மலைகளை அக்கடலிற் போட்டமாத்திரத்தில் ராட்சசர்கள் வாழுமிலங்காபுரி வீதிகளெங்கும் உப்புநீர்ப்பிரவாகமாய் விட்டது.

கவி.

குமுதனிட்ட குலவரைகூத்தரின்
திமிதமிட்டுத் திரியுந்திரைக்கடல்
துமிதமூர்புக வானவர் துள்ளினார்
அமிழ்தமின்னு மெழுமெனு மாசையால்.



குமுதனென்னும் வானரப்படைத்தலைவன் கொண்டுவந்திட்டகூட்டமாகிய மலைகளினால், நாடகரைப்போ லசைந்தசைந் தெழும்பித் துள்ளிக்குதிக்கின்ற திரைத்த அலைகளையுடைய சமுத்திரத்தினது நீர்த்துளிகள் தேவலோகத்திற்றெறிக்க அங்குள்ள தேவர்கள் முன்னே பிறந்த அமுதம் இன்னும் பிறக்குமென்கின்ற ஆசையால் துள்ளித்துள்ளிக் குதித்துச் சந்தோஷித்தார்கள். அமிர்தமுண்டாகும்படியாகக் கடலைக் கடைந்தவாலியினுடைய புத்திரனாகிய அங்கதனென்பவன் இளையபெருமாளானவர் ஆயிரம் பாணங்களைக்கொண்டு விலக்கினாலும் விலக்கக்கூடாத பெரிய மலையொன்றைப் பிடுங்கியெறிந்து, அக்கடலைக் கலக்கினான். அளவில்லாத கரடிக்கூட்டங்கள் கொண்டுவந்து போடப்பட்ட மலைகள் ஒன்றின்மேலொன்று விழுங்குவதுபோல் ஒன்றின்மேலொன்றுவிழுந்து, புண்ணியஞ் செய்யாதவர்களுடைய ஐஸ்வரியத்தைப்போலப் பொடிப்பொடியாய்ச் சிதறிப்போய்விட்டன. சமுத்திரத்தினுடைய ஆயிரம் யோசனைவரையிலும் நீண்டுயர்ந்து பருத்திருக்கின்ற திமிங்கிலமென்னும் மச்சமானது தன்மேற் பெரியமலைகளின் பாரங்களேற, அதைச் சகிக்கமாட்டாமல் அவ்வுடல் பதைத்துப் புரண்டபோது மலைகளெல்லாஞ் சரிந்து வீழ்ந்துவிட்டன.

இப்படி வானரவீரர்களாற் கொண்டுவந்த மலைகளைவாரிக் கரைகட்டுவதற்கு அடையாளம் பார்க்கின்ற வானரத்தச்சன் மலைகளையொன்றுபோலுடைத்துச் சேர்த்து, சமானமான மலைகளை வரிசையாயடுக்கி, மேல்மட்டம் சரியாகும்படி மணலைவாரிப்போட்டுத் தனதுபெரியகையினாலே சமப்படுத்திப் பரப்புவான். கூட்டமாகிய ஆயிரங்கோடி வானரர்களாற் றூக்கிக்கொணர்ந்து கொடுத்த மலைக்கூட்டங்களை எழுக்கம்போன்றதன்னுடையகையைநீட்டி எல்லாவற்றையு மொருமிக்கச் சேர்த்து வாங்கும்போது; இடையில் நழுவிவிழுகின்ற மலைகளைக்கால்களினாலே தாங்கிச் சேர்த்துக்கொள்ளுவான். மலைகளைச்சுமந்து வருகின்ற வானரக் கூட்டங்கள் ஒன்றின்பின்னொன்று நெருக்குறலால் செல்வதற்கு வழியில்லாமல் நிலைதங்கி நின்றுவிட்டன. அதைப் பார்க்கின் எத்தன்மையாயுளதெனில் கடலிற் கட்டும்படியாகிய சேது ஒன்றுதவிர வானரக்கூட்டங்களின் தலையின்மீதும் ஓர் சேதுகட்டினதன்மையைப் போலிருந்தன.

வானரவீரர்களெல்லாம் பெரியமலையைக் கொண்டுவந்து வரிசைவரிசையாக வைத்திருக்கிறபடியினாலே, சிலவானரர்கள் பூமியில் நடக்க வழியில்லாமற் கையில் தூக்கிக்கொண்டுவந்த மலையைத் தலையிலே தாங்கிக்கொண்டு சமுத்திரஜலத்திலிறங்கி நடந்துபோனார்கள். சிலவானரர்கள் வெகுதூரம் வருந்தப்பட்டுக் காலோய்ந்து பசியினால் சிரமமடைந்து, சுமந்துகொண்டுவந்த மலைகளைக் கீழேயிறக்கிவைத்து, அவைகளிற் கட்டியிருக்கின்ற தேன்களை அடிக்கடிக்குடித்து வெறிமேலிட்டு மெய்ம்மறந்து நித்திரைபோயினர். மலைகளைக் கொண்டு வருகிறதற்காகப்போகிற வானரவீரர்களிற் சிலரை அவ்விடத்தினு

யிருந்து மலைகளைக் கொண்டுவருகிற வானரவீரர்களிற் சிலர் கண்டு, இப்போது சேது எவ்வளவு கட்டியாயிற்றென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

இப்படி திருவணை செய்வதற்கு உபயோகமாகத்தானே வானரக்கூட்டங்களால் கொண்டுவந்த மலைகளிலுள்ள குங்குமங்களும் - குகைகளிலுள்ள தேன்களும் - அநேகஜாதி புஷ்பங்களும் - கலந்து துறைநீரிலும் படிந்திருப்பதினாலே, கருநிறமுள்ள உவர்க்கடல் நிறத்திலும் - சுவையிலும் - சிவந்த மதுரமாகிய தேன்கடலுக்குச் சமானமாயிருந்தது. இந்தச் சமுத்திரமானது அநேகம் பெரியமலைகளைப்போட்டு தன்னை நெருக்கப்படுத்தியும், எவ்வளவு தரித்திரம்வந்த காலத்திலும் சிறிதுங் கலங்காமற் குடும்பசம்ரக்ஷணை செய்கின்ற உயர்ந்தகுடிப் பிறப்பாளனைப்போல் கொஞ்சமும் கலங்காமலிருந்தது. மலைகள் விழுந்தபடியினாலே சிதறின நீர்த்துளிகள் எங்குந்தெறித்தல் எப்படியுளதெனில், இந்தக்கடல் தூர்ந்துபோனபடியினாலே வேறொரு கடலிற் சேருகிறதற்குப் போவனபோன்றிருந்தன. கொழுந்துவிட்டுப்படர்ந்துவளருகின்ற பவளக்கொடிகள் அமிழ்ந்துபோகும்படியாக எறியப்பட்ட மலைகளாற் சிதறுண்ட நவரத்தினங்கள் எவ்விடத்திலும் இந்திரவில்லினது காந்தியைப்போல் ஒளிவீசின.

வானரவீரர்கள் ஆலமரங்களைப் பறித்தபோது அதில் வாழ்ந்துகொண்டிருந்த பக்ஷிக்கூட்டங்கள் குடும்பத்தைத் தாங்குகிறவன் இறந்தபோது அவனால் ரக்ஷிக்கப்பட்டவர்கள் வேறே தங்களுக்கு ரக்ஷகரில்லாமையால் அழுது துக்கிக்கிறதுபோலக் கூச்சலிட்டுக்கொண்டு பறந்தன. மாமரங்களெல்லாம் கடலில் விழுந்தபோது அந்தமாமரங்களில் வாழ்ந்துகொண்டிருந்த வண்டுகளெல்லாம், அரசனிறந்துபோக ஆதரவில்லாத ஏவலாளர்களைப்போல பலபக்கங்களிலும் ஓடின. வானரவீரர்களால் வேரோடு பறியுண்ட புஷ்பங்களையுடைய விருக்ஷங்களைச் சூழ்ந்து படர்ந்திருந்த பூங்கொடிகள் அவைகளுடனே வெகுதுன்பமடைந்தவைகளே யாயினும், குலஸ்திரீகள் தங்கள் நாயகன்மார்களை விடாததுபோல் அந்தமரங்களைவிடாமற் பற்றியன.

சிலவானரசூரர்கள் மலைகளைப் பிடுங்கிக்கொண்டு வரும்போது அவற்றிலுள்ள யானைகளுடைய மதசலத்துக்கு ஆசைப்பட்டு அவைகளைப் பின்தொடர்ந்து மொய்த்துக்கொண்டுவந்த வண்டினங்கள் அந்தயானைகள் மலைகளுடனே சமுத்திரத்தில் விழுந்தபோது, நாயகன் சௌக்கியமாயுள்ளவரையிலும் அவன் கைப்பொருள்களைப்பறித் தனுபவித்துக் கொண்டிருந்து அவனுக்குச் சங்கடம் நேரிட்டமாத்திரத்தில் அவனைவிட்டு விலகிப்போகின்ற வேசியர்களைப்போல் திரும்பிப்போய்விட்டன. மலைகள் விழுவதனாற் சிதறுண்ட உப்புக்கடலினது நீர்த்துளிகள்பட்டுப் பெரும்புறக்கடலினது ருசியும் நீங்கிப்போயின. அன்றியும் - மேகத்தினிடத்து அக்கினிமயமாக விருக்கின்ற இடிகளும் குளிர்ந்துபோய்விட்டன. இவ்வளவுதானோ? மேகமளாவுகின்ற



மழைத்தண்ணீரும் உப்புகரித்தது. பெரியமலைகள் விழுந்தபோது எதிர்த்தெழுந்த நீர்த்துளிகள் படுகின்றதினால், சூரியனுடைய உஷ்ணகிரணங்களானவை சந்திரனுடைய கிரணங்கள்போலும் குளிர்ந்து விட்டன.

அன்றியும் — பெய்த்தெறிந்த மலைகளாற் சிதறுண்ட நீர்த்துளிகளோடு மேலெழுந்த பவளத்துண்டங்கள் - பிரகாசியத்தினாலே, ஆகாசமுழுமையும் மின்னற்கொடிகள் சொலிக்கிறதுபோ லிருந்தன. முத்துக்களைப்பரப்பினாற்போ லிருக்கின்ற மணற்பிரதேசங்களின் பக்கங்களிலே அக்கினிநிறமாகப் பிரகாசிக்கின்ற அநேகவிதமான கனிவர்க்கங்களை உண்ணுதற்குப் பரப்பிவைத்திருக்கின்ற வானரங்களினுடைய கூட்டத்தின் விசாலம் அநேகபெருமணிகளையுடைய சமுத்திரப்பரப்பையொத்திருந்தது. இந்தப்பிரகாரமாக வானரகூட்டங்கள் லங்காபரியந்தம் மூன்றுநாளைக்குள்ளாகச் சேதுவென்னுந்திருவணைகட்டி முடித்தனர். கட்டிமுடித்த சந்தோஷத்தினாலே அவ்வானரகூட்டங்கள் மிகுந்தபேரோசையையுடைய கெர்ஜிக்க அக்கர்ஜனையால் அண்டகோளம் படீரென்றுபிளந்துவிட, அப்போதிருந்த ஆகாசம் மற்றொருலோகத்தின் ஆகாசம்போலக்காணப்பட்டது. அக்கால் நளனாற்கட்டப்பட்ட அச்சேதுவானது எப்படிப்பிரகாசித்ததென்றால், பிலத்துவாரத்திற்குள்ளிருந்த ஆதிசேஷன் மேலெழுந்து, இச்சேதுவைக்கட்டுகிறதற்குவேறேயொருவரைத் தேடவேண்டிய காரணமென்ன? ஜெகன்மாதாவாகிய சீதாபிராட்டியாருடைய துன்பத்தை தீர்க்கும்படிக்கு நீங்களென்னுடையமுதுகின்வழியாய் லங்கைக்குப்போகலாமென்று தனதுமுதுகை யுயரத்தூக்கினதுபோற் பிரகாசித்தது.

இன்னும் அத்திருவணை எத்தன்மைத்தெனில் மெய்யைவிரும்பிய லங்கையென்கிற ஸ்திரீயானவள் இராக்ஷசர்களாற் செய்யப்பட்ட தீமையைச் சகிக்கமாட்டாதவளாகி, ஸ்ரீ சர்வேஸ்வரனுடைய சேனையைக்கண்ட சந்தோஷத்தினால் தன்னது கையைநீட்டி உபசரிப்பதுபோலிருந்தது. அன்றியும் — ஆகாசகங்கையான ஆகாட்டாறுகளாலே நிறைந்த சமுத்திரத்தைச் சர்வக்ஞயான ஸ்ரீராமச்சந்திரருடைய சேனைகள் தாண்டிப்போகிறதற்கு ஆறென்று பெயர்பெற்ற வழிகாணவல்லாமல் வேறொருவழியென்று சமுத்திரத்தின் குறுக்காக ஆகாயகங்கை வந்ததுபோலிருந்தது. இப்படி வானரசைனிக வானருகிய ஆசாரியங்களாற் கட்டப்பட்ட சேதுவானது நவரத்தினக் கற்களினாலே பிரகாசிக்கின்றபடியினால், ஆகாசத்திலுள்ள இந்திரவில்லானது சமுத்திரத்தின் குறுக்கே கிடக்கிறதுபோலும் தோன்றின. இப்படிப்பட்ட சிறப்பையுடைய சேதுவை மிகுந்த சந்தோஷத்துடனே கட்டிமுடித்தபிறகு, வானரசேனைபதியான சுக்கிரீவமகாராஜனும் — இலங்காதிபதியான விபீஷணாழ்வாரும் - இன்னும் அங்குண்டான சகலமானவர்களும் ஸ்ரீகோதண்டதீக்ஷா குருவினிடத்திற்கு வந்து தெண்டஞ்சமர்ப்பித்து, நூறியோசனை நீளமும் பத்துயோசனை அகலமுமான சேதுவென்னுந் திருவணைகட்டி முடிந்ததென்பதாக விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள்.

சேதுபந்தனப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

எட்டாவது,

# ஒற்றுக் கேள்விப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரான் வானரவீரர் சகாயத்தினால் வானரதச்சனாகிய நளனாற்செய்துமுடித்த சேதுபந்தனத்தைக்கண்டு, அவர்களைக்கொண்டாடி, பின்னர்யாவரும் புடைசூழ்ந் துபசரித்துவர வச்சேதுமார்க்கமாய்க் கடலைத்தாண்டி இலங்கைக்குச் சமீபத்துள்ள ஓர்பர்வதத்தணுகி, யாவர்க்கும் பாடிவீடு சமைக்கும்படி நீலனுக்குத் திட்டஞ்செய்ய அவனுத்தரவால் நளனவ்வாறே முடிக்கச் சுக்கிரீவமகாராஜன் முதலிய சகலரும் ஸ்ரீராமனோடு சென்று அப்பாடி வீட்டிற் றங்கினராக; அங்கே இராவணனால் ஏவப்பட்டு குரங்குருவங் கொண்டுவந்திருந்த சுகசாரணரென்னு மொற்றர்களை விபீஷணனாலறிந்த ஸ்ரீராம னிராவணனுக்குணர்த்தும்படி சிலவற்றைச் சொல்லியனுப்பியதும், அக்காலவ்விலங்கையி லிராவணனியமித்த மந்திராலோசனைச்சபையில் மாலியவான் கூறிய சன்மார்க்க வார்த்தைகளை துன்மார்க்க வார்த்தைகளாகப் பிரகஸ்தன் தடுத்துரைக்கும்போது சுகசாரணர்கள்வந்து விபீஷணனியரால் தங்கட்கு நேர்ந்த விபத்தையும் ஸ்ரீராமனாலேற்பட்ட சகாயத்தையுஞ் சொல்ல வக்கால் மகோதர னிராவணனைத்தேற்றி உச்சாகப்படுத்தக்கண்டு மாலியவான்மீட்டு மிராமனுடைய உற்பவங்கூறியுபிவுறுத்தவு மிராவணன் தன் பராக்கிரமங்கூறி யகங்கரித்ததுஞ் சொல்லப்படுகின்றது.

## ஸ்ரீராமனாதியர் சேதுவாற் கடலைத்தாண்டி நளனாற் சமைத்த பாடிவீடுகளிற் குடியேறியிருத்தல்.

கவி.

ஆண்டகையுமன்பினொடு காதலமிழ்தாற
நீண்டகையினானவனை நெஞ்சினொடுபுல்லி
ஈண்டவெழுவென்றனை யிழைத்தபடியெல்லாம்
காண்டலரன்பேனெடிய காதன்மூதிரின்றான்.

இப்படி சுக்கிரீவமகாராஜனாதியோர் சேதுபந்தன நிறைவேறியதென்று தெரிவித்தபோது ஆண்மைக்குண நிறைந்த எமது ஐயனாகிய ஸ்ரீராமபிரானனவர் ஆசையாகிய வமுதவெள்ளம் பெருக தமதாநீண்ட செந்தாமரை மலரைப்போன்றதிருக்கையினால் வானரத்தச்சனாகிய நளனைத்திருமார்போடு சேர்த்துத்தழுவி, எல்லா முடிந்ததாவென்றுவினவி அத்தியந்த சந்தோஷராய் இளையபெருமாளுடன் இச்சமுத்திரத்திற் கட்டப்பட்டதுருமிக்க சேதுவைப்பார்க்க அங்குள்ள சுக்கிரீவன், அநுமான், அங்கதன், நளன், நீலன், மயிந்தன், துமிந்தன், ததிமுகன் முதலிய வானரசிரேஷ்டர்களைநோக்கி யாவரும் புறப்படுவீர்களென் றனுக்ஞைசெய்து தம்முடைய பழையவாசஸ்தலமாகிய பாலசமுத்திரத்திற்கு எதிராகச் சேதுசமுத்திரத்தின் மத்தியிலிருக்கின்றநீல



மேகவண்ணனாகிய சாக்ஷாத்பரமபதநாதனைப்போன்றியாவரும் மெண்ணித்துதிக்கும்படியாகப்படைவீரரோடு எழுந்தருளி திருவணையாகிய சேதுவினிடத்திற்சேர்ந்து தம்முடைய பிராணனையொத்த சீதாபிராட்டியாரைக் கண்டதுபோல மிகுந்த சந்தோஷமுடையவராகி, இந்தப்பெரியகடல்மேற்பாறைகளைக்கொண்டு தூர்த்து அணைகட்டினது மகா அருமையாகும்; உலகங்களைச்சிருஷ்டித்த பிரமதேவனேவந்து கட்டினபோதிலும் இதுமுடிகிறதற்கு சத்தியகாலஞ் செல்லுமென்று ஆச்சரியசித்தராய்ச் சந்தோஷித்தார்.

பின்னும் ஜுடிராதனாகிய ஸ்ரீதாசரதியானவர் வானரவீரர்களால்முடிந்த அந்தச் சேதுபந்தனத்தைக் காணுந்தோறும் மிகவும் வியப்புற்றவராகி, இந்தக்கடலினாழம் ஒருவராற் சொல்லிமுடியுமோ? இந்தச் சமுத்திரத்தைக் கட்டியும் இலங்கை பெரிதாயிருக்கின்றது. ஆகையாலிந்தக் கடலேயன்றி இதற்கு மேலான சப்தசாகரங்களையும் ஒரு க்ஷணமாத்திரத்திற்குள்ளாக இந்த வானரக் கூட்டங்கள் தூர்த்துவிடுவார்களென்பதற்குச் சந்தேகமுண்டோ?

கவி.

நெற்றியிலரக்கர்பதி செல்லிறைநன்னூல்
கற்றுணருமாருதி கடைக்குழைவரத்தன்
வெற்றியுணர்தம்பியொரு பின்புசெலவீரப்
பொற்றிரள்புயக்கரு கிரிக்களிறுபோனான்.

என்று சொல்லிச் சைனியங்களுக்கு முன்னாக விபீஷணாழ்வாரைப் போகும்படியாகவும், பின்பக்கத்தில் சாஸ்திரோக்தங்களையெல்லாம் விதிதமாக நன்றாய்க் கற்றுணர்ந்த சமர்த்தரான ஆஞ்சநேயனை வரும்படியாகவு நியமித்துத் தமக்குப் பின்னாக இளையபெருமாள் எழுந்தருள வீரத்தோடுகூடிய மகா அழகிய திருத் தோள்களையும் கறுத்த திருமேனியையுமுடைய எமது இறைவனாகிய தாசரதியானவர் ஆண்யானைக் கொப்பாகத் தாமெழுந்தருளினார். பெரியவானர சேனைகள் இரத்தினங்களையு முத்துக்களையு மெறிந்துகொண்டு அருகிலே யோங்கிவளர்ந்திருக்கின்ற சோலையில் தாவி விழுகின்ற அலைகளுக்குச் சமானமாகவும், கருங்கடலிற்போய் விழுகின்ற காவிரியாற்றின் பெருக்கைப்போலவும், உயர்ந்த சேதுவின் வழியாகப் போயின.

அஃதெப்படியென்றால்? அந்தக் காவிரிநதி குறிஞ்சிநிலத்திலுள்ள ஆதாரங்களையும், முல்லைநிலத்திலுள்ள ஆதாரங்களையும், மருதநிலத்திலுள்ள சகலபொருள்களையும், மரங்களையும், தான்சுமந்துகொண்டு போய்ச் சமுத்திரத்தில் சேர்வதுபோல் இந்தவானரசேனைகள் குறிஞ்சிநிலமுதலானவற்றிலுள்ள உணவுப்பொருள்களி லொன்றும்விடாமற்கொள்ளைகொள்ளையாய் வாரிக்கொண்டு கடல்மார்க்கமாகப் போயின. அந்தச்சேதுவினது அழுந்தும்படியாக மிதித்துக்கொண்டு ஒருவர் போனவழியில் ஒருவர் போவதினாலே காலடிபட்டுத்தேயும்படியாகிய அந்த வழியில் சமுத்திரத்தினலைகள் பாய்கிற போதெல்லாம் குதிரைமேலேறிச் சவாரிசெய்துகொண்டு போகிறவர்களைப்

போல வானரவீரர்கள் குதித்துக் குதித்துத் தாவிக்கொண்டுபோனார்கள். அப்படி போகும்போது ஒருவர்தேகத்தோடொருவர்தேகநெருக்கி உராய்கின்றபடியால் நடக்கவிரையற்றுக் கால்தவறிப் பக்கத்தில் விசாலமான இடமில்லாமற் கடலில்விழ, அப்படிவிழுகின்றவர்களை முழுகிப்போகாதபடி கைதூக்கி விடுகின்ற தயையுடையவர்கள் கைகொடுத்துத்தூக்கி வரிசைவரிசையாக அழைத்துக்கொண்டுபோக, இப்படி அநேகவானரவீரர்கள் ஒருவர்க்கொருவர் துணைபட்டுப்போனார்கள்.

மேலும் - அநேகவானரவீரர்கள் கருக்கொண்டமேகத்திற்குச் சமானமாகக் கறுத்த ஸ்ரீராமமூர்த்தியினது திருமேனியிற் சூரியனுடைய அதிபுஷ்ணமாகிய கிரணங்கள் படவொட்டாமல், மிகவும் தழைத்து நிழல்தருகின்ற உயர்ந்த அதிக சீதளசந்தன விருக்ஷங்களையும் சுரபுன்னை விருக்ஷங்களையும் பிடுங்கிக் குடைபிடித்துக்கொண்டு ஸ்ரீராமமூர்த்திக்கு இரண்டுபக்கங்களிலும் போனார்கள். அநேகவானரவீரர்கள் தெய்வீகம்பொருந்திய பலவகைப்பட்டயாகாதிகளைச் செய்யும்படியாகிய வேதோத்தமர்களால் அத்தியயனம்பண்ணுகின்ற வேதார்த்தமே தாமாக வெழுந்தருளியிருக்கின்ற அந்தச்சக்கரவர்த்தித் திருமகனாருடைய திவ்யதிருமேனியானது இளைப்படையாமல், நானாவித பரிமளசுகந்தபுஷ்பக்கொத்துகளுள்ள மரக்கிளைகளையொடித்து அவைகளைத் திருத்தவேண்டிய பிரகாரமாகத் திருத்திச் சாமரைபோலவீசிக்கொண்டு சென்றார்கள்.

இப்படி வானரவீரர்கள் அநேகரனேகராய்ச்சூழ்ந்து உபசரித்துவரத் தேவர்கள் பெருந்தவஞ்செய்து பிரார்த்தித்ததின் பொருட்டு வந்தவதரித்தருளிய இரத்தின கடகங்களை யணிந்த காதலத்தையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் சீதாபிராட்டியாருடைய திருமணத்தைத் திருவுளத்தில் நினைத்தவராய், யுத்தத்தின்பேரில் இச்சைகொண்டு போகின்றவர்களான வானரசேனைகளுடனே சமுத்திரத்தைத் தாண்டிக் கரையேறினார்.

கவி.

பெருந்தவமுயன்றமரர் பேணியுதவத்தரல்
மருந்தனையதுப்பியொசிம் வன்றனைவரோயிம்
அருந்ததியும்வந்தனைசெ யஞ்சொலிளவஞ்சி
இருந்தநகரின்புறமோர் குன்றினிடையிறுத்தான்.

தேவர்கள் செய்த பெரியதவத்தால் தேவாமிர்தத்திற்குச் சமானமாகிய நமது திருத்தம்பியாரோடும், சுக்கிரீவமகாராஜன்-விபீஷணாழ்வார்-அனுமார் இவர்கள்முதலான தலைவர்களோடும், அருந்ததியுங்கண்டு கிலயித்துஸ்தோத்திரஞ் செய்யத்தக்க சீதாபிராட்டியார் எழுந்தருளியிருக்கின்ற அந்தலங்காபட்டணத்தின் சமீபத்திலிருக்கின்ற சுவேலாபர்வதத்தின்மேல் எழுந்தருளி, நீலனென்கிற வானரசேனாபதியைப்பார்த்து, அப்பா நீலா! நம்மோடுகூடவந்த சைனியங்களுக்கெல்லாம் நீ பாடிகூடாரம் செய்விக்கவேண்டு மென்று



ஆக்ஞாபித்தார். அம்மாத்திரத்தில் அவன் சுவாமியினுடைய திருவடிகளில் நமஸ்கரித்துச்சென்று, சமுத்திரத்தில் அணைகட்டி வழிசெய்தவனான நளனுக்குச் சுவாமி நியமித்த கட்டளையை விவரமாகச் சொன்னான்.

அதைக்கேட்ட நளன் தன்பிதாவாகிய மயனுக்கு நாணமடையத்தக்கதாக அந்த இடத்தைச் சதுரப்படுத்தி, தலைவர்களான சுக்கிரீவமகாராஜன் விபீஷணாழ்வாரென்று சொல்லப்படுகின்ற இருவர்களுக்கும் மற்ற யாவர்களுக்கும் அவரவர்கள் நிலைமைகளுக்குத் தக்கபடியே பிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்டதுபோலப் பொன்னினாலும் ரத்தினங்களாலும் பாடிக்கூடாரமமைத்து, இரகுகுலோற்பவரான ஸ்ரீகோதண்டபாணி யெழுந்தருளியிருக்கத்தக்க இடத்தையும் விரைவிலுண்டாக்க வேண்டுமென்கின்ற விருப்பத்துடனே அம்மலைச்சிகரத்தை மட்டப்படுத்தி, மூங்கிற்கால்கள் நாட்டி, தருப்பையைப் புற்களால் உறுதிபெறக்கட்டி, திவ்யசுகந்த பரிமளபுஷ்பங்களினால் மேற்கூரை வேய்ந்து பர்ணசாலைகட்டி முடித்தான்.

கவி.

வாயினுமனத்தினும் வாழ்த்திமன்னுயிர்கட்கெல்லாம்
தாயினுமன்பினனைத் தானுறவணங்கிச்சத்தம்
எயினவிருக்கைநோக்கி யெண்டிசைமருங்குமியாரும்
போயினர்பன்னசாலை யிராமனுமொய்திற்புக்கான்.

பின்பு சுக்கிரீவமகாராஜன் முதலான யாவர்களுந் தத்தமது வாசஸ்தானங்களை நோக்கி, எல்லாச் ஜீவகோடிகளிடத்திலும் தாயைப்பார்க்கிலும் மிகுந்த தயாசீலரும் சர்வரக்ஷகருமான ஸ்ரீராமமூர்த்தியை மனப்பூரணமாக வாழ்த்தி, சாஷ்டாங்கமாகத் தெண்டஞ் சமர்ப்பித்து, அந்தமலையின் அஷ்டதிக்குகளிலுமுள்ள அவரவர்களிருப்பிடத்தைச் சேர்ந்தார்கள். அப்பால் சர்வலோகசரண்யராகிய ஸ்வாமியுந் தம்முடைய பர்ணசாலையிற் சந்தோஷமாக எழுந்தருளினார்.

## சூரியாஸ்தமனச் சிறப்பு.

கவி.

பப்புநீராயவீரர் பருவரைகடலிற்பாய்ச்சத்
துப்புநீராயதூய சுடர்களுங்கறுக்கவந்திட்
டொப்புநீகத்தூட்டோய்ந்த வொளிநிறம்விளங்கலப்பால்
ஆப்புநீரவென்போ லருக்கனுமத்துஞ்சேர்ந்தான்.

பராக்கிரமத்தன்மையையுடையவர்களாகிய வானரவீரர்கள் பருத்தமலைகளைச் சமுத்திரத்திலிட அதினின்றுமெழுந்த திவலையால், பவளம்போலுஞ் சிவந்த சூரியனென்பவன் கறுத்த உப்புநீர் பட்டதனது ஆயிரங் கிரணங்களுந் திருமேனியுஞ் சுத்தஞ்செய்வதற்கு அப்புறத்திலுள்ள சுத்தஜல சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்வதற்குச் சென்றவனைப் போல் அஸ்தமனமாயினான். இப்படி யவனஸ்தமித்த மாத்திரத்தில் ஸ்ரீராமபிரானது அஸ்திரப்பிரயோகம்பண்ணுகிற

தற்காக அதிககோபத்துடனே இரண்டு குதையும் ஒன்றுடனொன்று பொருந்தும்படியாக வளைக்கப்பட்ட மன்மதனுடைய வில்லைப்போல, மேற்றிசையில் இருந்த பிரகாசத்துடனே மூன்றாம்பிறைத்திங்கள் உதயமாயிற்று. சந்திர இதழ்களோடுங்கூடிய தாமரைப் புஷ்பத்திலுண்டான வாசனையையுடைய மகரந்தப்பொடிகளையளாவிக் குளிர்ந்த பனிநீர்த்துளிகளை வீசிக்கொண்டுவருகின்ற தென்றற் காற்றைப்பார்க்கிலும், அந்திவானமாகிய செவ்வானத்தைப்பார்க்கிலும், மன்மதபாணமாகிய கூற்றைப்பார்க்கிலும், அந்த மூன்றாம்பிறைச் சந்திரன் அதிகமான குரூரத்தைக் காட்டிக்கொண்டு சுவாலையை வீசினான்.

கோபவேளையிலும் அழகு விளங்கிக்கொண்டிருக்கின்ற திருமுகமண்டலத்தையுடைய சீதாபிராட்டியாரைப்பிரிந்தகாலமுதல் நித்திரையையு நாவிற்குருசேடுதலையு மறந்திருப்பவராகிய ஸ்ரீராமருடையதிருத்தோள்களில்சந்திரகிரணங்கள் பிரகாசிப்பது எப்படியிருந்ததென்றால், பெருமை பொருந்திய ஒரு மரகதமலைமேல் வாசமாயிருந்த ஓர்மயில் பிரிந்துவிட்ட சமயம்பார்த்து, அக்கினிமயமான சுவாசத்துடன் வெண்மையான ஒரு குட்டிப்பாம்பு தவழ்வதையொத்திருந்தது. சீதாபிராட்டியாரெழுந்தருளிய லங்காநகரத்தைக் கிட்டிவந்த வச்சிர கங்கணங்கள் தரித்து அழகுடனே திரண்ட திருத்தோள்களையுடைய ஸ்ரீராமபத்திரர் தேகமெல்லாம் புழுங்கி வருத்தமடைந்தார். அநேக காதத்தூரத்திலே இருந்து நினைக்கும்போதே சுட்டெரிக்கும்படியான செவந்த இதழையுங்கறுத்த கண்ணையுமுடைய அக்கச்சீதையாகிய அக்கினியானது, சமீபத்தில்வந்தால் சுடாமலிருக்குமோ இந்தப்படியாகச்சீதாபிராட்டியாருடைய பிரிவென்னுமக்கினியாலே ஸ்ரீராமபிரானனவர் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்.

### இராவணனேவலால் சுகசாரணரென்னுமொற்றர்கள் வானரவுருவங்கொண்டு வானரசேனைகளில் வந்திருந்ததை விபீஷணர்கண்டு இராமமூர்த்திக்குக் காட்ட அவர் காணல்.

கவி.

இற்றதுகாலமாக விலங்கையர்வேந்தனேவ
ஒற்றர்வந்தனவுநோக்கிக் குரங்கெனவுழல்கின்றாரைப்
பற்றினனென்பமன்னோ பண்டுதான்பலநாட்செய்த
நற்றவப்பயன்றந்துய்ப்ப முற்றுறப்போந்தநம்பி.

இராவணன் தன்னுடையவாழ்நாளுக்கு முடிவுவந்ததினாலே ஸ்ரீராமருடைய பலாபலங்களைத் தெரிந்து வரும்படியாக இரண்டு ஒற்றர்களை அனுப்ப அவர்கள் ராக்ஷசமாயையினால் குரங்குருவங்கொண்டு வானரசேனைகளைச்சுற்றி எவ்வளவு சேனைகளென்று மதிப்பிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, பூர்வத்தில் தாம்செய்த நல்லதபோபலத்தினாலே முத்திவந்து சாட்குண்ணிய பரப்பிரம்மமாகிய ஸ்ரீராமஸ்வாமியை அடைக்கலம்புகுந்த விபீஷணாழ்வார் பெரிய சமுத்திரத்திற்குச் சமானமாகிய வானரசேனைகளை இவ்வளவென்று தம்முடைய உள்ளத்தில் கணித்துவிட்டிருக்கின்றவரானபடியால் பாற்கடலில் ஒரு சிறுதுளிநீர் தெளித்தபோதிலும் அந்தநீரை வேறுபிரித்தறியும்படியான அன்னத்தையொத்த விவேகசாமர்த்தியமுள்ளவராகி, மகத்துக்கு மகத்தாய் அணுவுக்கணுவாயிருந்து ஒரேதன்மையாய்க்காண்டற்கரியதுகண்டாகாரமாய்ப் பருத்துயர்ந்திருக்கின்ற தம்முடைய விராட்சொரூபத்தை யுள்ளடக்கிக்கொண்டு தம்முடைய ஸ்வரூப மிப்படிப்பட்டதென்று தெரியாதபடி மறைந்து அந்தரியாமியாய்ச் சகலாத்துமாக்களிடத்திலும் வசித்துக்கொண்டிருக்கின்ற மகாமாயாசக்தியையுடையவர்களான பெரியபிராட்டியாரும் அவர் நாயகரான நாராயணமூர்த்தியுமாகிய இருவரையும் தங்களுடையஇருதயத்திலே தரிசனைசெய்கின்ற மகாயோகிகளுக்குச் சமானமானவராகி, இராவணனனுப்பிய இரண்டொற்றர்களாகிய ராக்ஷசர்கள் சிறியவானரதேகத்தையுடையவர்களாய்ப் பார்க்கப்பயங்கரமாய்ப் பருத்துயர்ந்திருக்கும் தங்களாகாரத்தை உள்ளடக்கிக்கொண்டு தங்களுண்மையான உருவம் ஒருவருக்குந் தெரியாதபடி மறைத்துக்கொண்டு திரிகின்ற அந்தமாயரூபச் செயலைச் சூசனையாகக்கண்டு, அவர்களைத் தம்முடைய முஷ்டிபிடித்த பலம்பொருந்திய கைகளினாலே வானரக்கூட்டங்களுக்கு இரக்க முண்டாகும்படிக்குக் குமைத்து, வேறொன்றுஞ்செய்யாமல் மிருதபலமுள்ள ஊனுங்கொடியாலிறுகக்கட்டி, இரத்தங் கக்கிக்கொண்டுவரும்படியாக அவ்விருவரையும் கட்டியகட்டுடனே சுவாமிக்கு முன்பாகக்கொண்டுவந்து, இராவணனால் அனுப்பப்பட்ட திருடரிவர்களென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்.



அதைக்கேட்ட சேஷசாயியாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் அவர்களைப் பார்த்து, இராவணனலனுப்பிய ஒற்றர்களானாலும் பகைவரென்று நினையாமல், இவர்கள் நமக்குச் சகிக்கக்கூடாத வருத்தத்தைச் செய்தபோதிலும் குரங்குகளாசகதேயென்று இரக்கங் கொண்டவராகி, ஐயா விபீஷணமகாராஜனே! நம்மைத் தஞ்சமென் றடைந்தவர்களை நாம்வருத்தப்படுத்தலாமோ? ஆதலால் இவர்களைத் துன்பப்படுத்தாமல் விட்டுவிடுங்களென்று திருவாய்மலர்ந்தருளினார். இப்படிச் சுவாமிசொல்லுவதைக்கேட்ட அந்தராக்ஷசத் திருடர்கள் சுவாமியைப்பார்த்து, ஓ வில்வீரசிகாமணியே! இந்தவிபீஷணன் உம்முடைய சேனாசமுத்திரமாகிய வானரவீரர்களுடைய மிகுதியைப்பார்த்து, இவர்களைவெல்லுகிறது அரிதென்றெண்ணி, வஞ்சத்தால் எங்களையெல்லாங் கொல்லுகிறதற்கிங்குவந்தான். நாங்கள் யதார்த்தமான குரங்குகள். எங்களை அங்கிகரித்தருளவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது விபீஷணாழ்வார் சுவாமியினுடைய திருவுள்ளத்தின் தயையை அறிந்து, கண்ணுங் கண்ணீருமாய் நின்று, சுவாமி! இவர்கள் மலையிலுங்காட்டிலும் வாழ்கின்ற குரங்குகளல்லர். தயையும் தாக்ஷிண்ணியமும் சத்தியமு மில்லாத மனதையுடையவனான இராவணனால் ஏவப்பட்டதூதர்கள். இவர்களிரண்டுபேரில் ஒருவனுக்குச்

சுகனென்றுபேர். மற்றொருவனுக்குச்சாரணனென்றுபேர். இவர்கள் மாறுருவம் தரித்துக்கொண்டிருக்கின்ற திருடர்கள். அந்தமாறுபாட்டைத் தேவரீருக்குச் சந்தேகமறக் காட்டுகிறேன் பார்த்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து ஒருமந்திரத்தைச் செபித்தார்.

### விபீஷணர் மந்திரோச்சாடனஞ்செய்ய, சுகசாரணர்கள் வானரவுருவ நீங்கிப் பழைய இராக்ஷச வுருவங்கொண்டு பயந்து நிற்கிறபோது நீங்கள் வந்தகாரியம் யாதெனக் கேட்டல்.

கவி.

கள்ளரேகாண்டியென்று மந்திரங்கருத்துட்கொண்டான்
தெள்ளியவெரிக்குத்தெய்வ நீர்வினைசேர்தலோடும்
துள்ளியினிரதந்தோய்ந்து தொக்கநிறங்கரந்துவேறாய்
வெள்ளியோடிருந்தசெம்பு மாமெனவேறுபட்டார்.

இப்படி விபீஷணாழ்வார் செபித்தமாத்திரத்தில் பாதரசத்துளிபட்டவுடன், தன்னுடைய பழைய நிறமாறி வேறுபட்டு வெள்ளியநிறமாக இருந்த செப்பானது புடமிடுகிறவர்கள் அந்தரசம் போகத்தக்க தகுந்த செய்கைகளைச் செய்து புடமிடத் தன் பழையநிறத்தைப் பெறுமாறுபோல, வானரவடிவுகொண்டிருந்த அந்தத் திருடர்கள் தங்கள் யதார்த்தமான ராக்ஷசவடிவுடனே வக்கிரதந்தங்களை யுடையவர்களாய்ப் பயந்து நின்றார்கள். அப்போது ஸ்ரீராமச்சந்திரர் மலைபோல் நிற்கின்ற அந்தக் கொடியவர்களைப் பார்த்துச் சிரித்து, தம்மையடைந்தவர்களுடைய துக்கங்களை யெல்லா நிவர்த்திசெய்யும் பரமதயாளுவான அந்தராமமூர்த்தியானவர் பயப்படாதேயுங்களென்று கையமர்த்தி, நீங்களிவ்விடம் எதுகாரியத்திற்காகவந்தீர்கள்? அந்தவிவரங்களை யெல்லாம் விசிதப்படச் சொல்லுங்களென்று நியமித்தார்.

### வந்தகாரிய மின்னதென்று அச்சுகசாரணர்கள் சொல்லக்கேட்ட இராமசுவாமி இராவணனுக் குணர்த்தும்படி சில்வார்த்தை சொல்லி விட்டுவிடுதல்.

கவி.

தாய்தெரிந்துலகுகாத்த தவத்தியைத்தன்னைக்கொல்லும்
நோய்தெரிந்துணரான்றேடிக் கொண்டனனுவலவென்றே
வாய்தெரிந்துணரவண்ணன் சுழறுவார்வணங்கிமாய
வேய்தெரிந்துரைக்கவந்தோம் வினையிறைவீரவென்றார்.

வெல்லையினிலங்கைச்செல்வ மிளையவற்கீந்ததன்மை
சொல்லுதிர்மகரவேலை கவிக்குலவீரர்தூர்த்த
கல்லினிற்கடந்தவாறுஞ் சுழறுதிர்காலந்தாழ்த்த
வில்லினர்வந்தாரென்று விளம்புதிர்விளம்பலாதீர்.

அப்படி நியமித்தமாத்திரத்தில் பெரியோர்களெல்லாம் தாயென்று தெரிந்துகொள்ளும்படியான சீதாபிராட்டியாரைத் தன்னைக் கொல்லும்படியான ஒருபெரியநோயென்றறியாமல் தனக்குத்தானே யந்நோயைச் சம்பாதித்துக்



கொண்ட இராவணனால் ஏவப்பட்டவர்கள், இன்னதுசொல்லவேண்டுமென்கிறதைத் தெரியாமல், மனதிலொன்றை நினைத்து வாயிலொன்றைக் கூறுகின்றவர்களாய் வணங்கி, சுவாமி! வஞ்சனையான தந்திரத்தினால் இவ்விடத்திலுள்ள உளவைத் தெரிந்துகொண்டுபோய்ச் சொல்லும்படியாக இராவணனாலனுப்ப வந்தோமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள். அதை ஸ்ரீராமர் கேட்டு, அப்படியா? நல்லது; ஓ சுகசாரணர்களே! உங்களை இங்கே விலங்கிட்டுச் சிறைபடுத்தாமல் விட்டுவிட்டேன். நீங்களிராவணனிடத்திற்போய் இந்த லங்காபட்டணத்திலுடைய அளவில்லாத ஐஸ்வரியத்தையெல்லாம் உன்னுடைய தம்பியாகிய விபீஷணனுக்குக் கொடுக்கப்பட்டதென்றும், வானரசேனை வீரர்கள் மலைகளைக்கொண்டு கடலையடைத்துச் சேதுவைக்கட்டி அந்தவாராவ்தியின் வழியாய்க் கடலைத்தாண்டி எல்லாரும் லங்கைக்குவந்தார்களென்றும், இத்தனைநாள் பொறுத்திருந்த இரண்டுவில்வீரர்களும் வந்திருக்கிறார்களென்றும், பனங்குலையைப்போன்ற பத்துத்தலைகளையுடையவனான இராவணன் வசித்துக்கொண்டிருக்கின்றதும், குரூரர்களான இராக்ஷசர்கள் நிரம்பியதுமான இலங்கைக்கு அரணான சமுத்திரத்தாற் சூழப்பட்டு இந்தமலையி லிருக்கின்றதென்று தெரிந்துகொள்ளக் கூடாமையாயிருந்தபடியினாலே உயிருடனும் [illegible]துடனுமாய் அவனித்தனைநாள் வாழ்ந்திருக்கும்படியாய் நேரிட்டதென்றும், ஜன்பிதாவாகிய ஜடாயுபுருஷனைக்கொன்று அவருடைய பந்துக்களை வருத்தினபடியே அவனுடைய பந்துக்களையும் அவனுடைய பலத்தையும் அவனுக்குண்டான எல்லாவீரங்களின் பெருமையையும் ரணக்களத்தில் நாசப்படுத்தி, என்னுடைய பிதாவுக்காகச் சொர்க்கலோகத்திலிருக்கிற தேவர்களுக்கு அவனுயிரைக்கொண்டுகொண்டபலியூட்டப் போகிறேனென்றும் நான் சொன்னதாகப் போய்ச் சொல்லுங்கள்.

மேலும் - மிகுந்த வேகத்தோடு செல்லுகின்ற ரிஷபவாகனத்தையும் கருடவாகனத்தையு முடையவர்களான மூன்றாம்பிறைச் சந்திரனை யணிந்த உருத்திரமூர்த்தியும்-துளசிமாலிகாதரராகிய விஷ்ணுமூர்த்தியும் -மற்றைச் சமஸ்தலோகநாதர்களும் - அவனுக்குதவியாகவந்து காத்தபோதிலும் என்னுடைய பாணத்தினால் அவனுடைய தேகத்தைப் பலதுண்டங்களாகச் செய்யக் காத்திருக்கிறேனென்றும், பதிவிரதா தவசிரோமணியான சீதையைத் தனித்த ஒரு சிறையிலிருக்கும்படியாக வீரர்களுக்கடுக்காத வஞ்சனையைச்செய்த அந்த மாபாதகக் கொடியோனான இராவணனை அவனுடைய பந்துக்களோடு அக்கினிபற்றி யெரியும்படியான நரகமென்று சொல்லப்பட்ட மகாச்சிறையிலேவைக்க எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேனென்றும் சொல்லுங்கள்.

கவி.

போர்க்கினித்தானேயங்கு நுழைக்கினிநினிவேறென்னும்
ஆக்குவதில்லையாயி னஞ்சமென்றதனுண்டன்றே

வாக்கினின்மனத்திற்கையின் மற்றினிவலியாவண்ணம்
போர்குயின்விரைவினென்று னுய்த்தனமென்றுபோனார்.

நீங்களெங்களுடைய அளவற்ற சைனியங்களை எல்லாம் நன்றாய்ப் பார்த்தாயிற்றே: இனிநீங்கள் செய்யவேண்டியது ஒன்றுமில்லையே: ஆகையால் நீங்கள் போங்களென்று திருவாய்மலர்ந்தருளி, வானரசைனியங்களைப் பார்த்து, நாம் மனப்பூரணமாய் அஞ்சலென் றிவர்களுக்குச்சொன்ன நம்முடைய வாக்கை நினைத்துக்கொண்டு, இவர்களை உங்களுடைய வாக்கினாலும் - மனத்தினாலும் - கையினாலும் - மற்ற உறுப்புக்களினாலும் - ஒரு துன்பமுஞ்செய்யாமற் சீக்கிரமாய் வெளியேகொண்டுபோய் விடுங்களென்று நியமித்தார். அப்படியே கொண்டுபோய் விட்டுவிட்டார்கள். விடப்பட்ட சுகசாரணர்கள் நாங்கள் பிழைத்தோம்: பிழைத்தோம்: என்று சந்தோஷத்துடன் ஓட்டம் பிடித்தார்கள்.

## இராவணனுடைய மந்திராலோசனையில் மாலியவான் சிலவார்த்தைகூற அதற்கிராவணன் கோபித்தல்.

கவி.

அரவமாக்கட லஞ்சியவச்சமும், உரவுநல்லணை யோட்டியவூற்றமும்
வரவுநோக்கி யிலங்கையர்மன்னவன், இரவினெண்ணிட வேறிருந்தானரோ.

அப்போ திராவணன் முன்னர் சமுத்திரராஜன் பயந்து அடைக்கலம்புகுந்ததையும் - வானரங்கள் சமுத்திரத்திற் சேதுகட்டின வல்லமையையும் - அந்தச்சேதுவின் வழியாக வானரசைனியங்களுடன் ஸ்ரீராமர் முதலானவர்கள் வந்திருப்பதையும் அறிந்துகொண்டு, இராத்திரியில் ஓரிடத்தில் தனித்திருந்து, தன்னுடைய பிள்ளைகள்மனைவிமார்க ளொருவரையும் வரவொட்டாமல் நியமித்து, தன்னுடைய உத்திரவில்லாமல் தென்றலும் நுழைவதற் கருமையான மந்திராலோசனைச்சாலை யென்கின்ற ஒரு ரஹஸ்யஸ்தானத்தில் தன்கருத்துக்கிசைந்த மந்திரிமார்களுடன் ஆலோசனை செய்யும்படியாகப் போயினன். அங்கே மிருதுபுத்தியும் - யதார்த்தமும்—சாஸ்திரக்கேள்வியும் - சிறிதேனுமில்லாதவர்களும், ஊமை-செவிடு-முதலான அங்கஹீனர்களும், கூன் - குறள் - சப்பாணி - முதலிய குருபிகளும், விளக்குகளைப் பிடித்துக்கொண்டுநின்றார்கள்.

கவி.

நணியர்வந்து மனிசர்நமக்கினித், துணியுங்காரியம் யாதெனச்சொல்லினன்
பணியுந்தானவ ராதியர்பன்முடி, மணியினுன்விளங் கும்மணித்தாளினன்.

அசுர யக்ஷ காந்தருவர் முதலானவர்கள் வணங்கும்படியான பாதங்களையுடைய பிரதாபலங்கேஸ்வரனாகிய அந்த இராவணன் மந்திரிகளைப்பார்த்து, மனிதர்கள் நம்முடைய பட்டணத்தைச் சமீபித்து வந்துவிட்டார்கள். ஆதலால் - இனிநாம் செய்யவேண்டியகாரிய மென்னவென்று கேட்டான். அப்போது ராவணனுடைய தாயைப்பெற்ற பாட்டனாகிய மாலியவான் அந்த ராவணனைப்பார்த்துச் சொல்லுகின்றான்.



அப்பா ராவணா! ஊழிகாலத்தக்கினிபோன்ற அந்த ஸ்ரீராமனுடைய சரங்களினாற் சமுத்திரராஜன் உடல்வெந்து நடுநடுங்கிச் சூரியனுக்குச் சமானமான இரத்தினமாலைகளைக் கொண்டுவந்து ஸ்ரீராமனுடைய உபயதிருவடிகளில் வைத்துவணங்கி மன்னிப்புகேட்டுக்கொண்டசெய்தியானது, சூலத்தைப் போல என்னுடையநெஞ்சுக்குள் நின்றுதைக்கின்றது. அந்தச்சமுத்திரமானது ஸ்ரீராமபாணத்தாற் சின்னபின்னப்பட்டழிந்ததும், அந்தப் பகவானுடைய உத்தரவின்படியே அணைகட்டி முடிந்ததும், மிகுந்த பயத்தினாலே அந்தக்கடல் அவர்கள் இலங்கையிற் பிரவேசிக்கும்படியாக வழிகொடுத்ததுமாகிய இந்த அபூர்வமான செய்கைகளெல்லாம் என்னுடைய மனத்தைமெத்தவும் வருத்தப்படுத்துகின்றது. மேலும் - உலகத்திலிருக்கப்பட்ட மலைகளையெல்லாம் வேரோடு பிடுங்கிக்கொண்டுவந்த வானரவீரர்கள் தங்களுடைய தோள்களைக்கொட்டிக் கர்ச்சித்ததையும், சமுத்திரத்தைக் கெட்டியாக அடைத்துக்கட்டின சேதுவும், என்னுடைய நினைவை ஸ்தம்பிக்கும்படிச் செய்துவிட்டது. அன்றியும் — மிகுந்த கோபாவேசத்தோடு அளவில்லாத வானரவீரர்கள் தங்களுடைய சக்திக்குத்தக்கபடி மலைகளைச் சுமந்துகொண்டுவந்து கொடுக்க, அவைகளையெல்லாம் அலக்ஷியமாக ஒரு நளனென்கிற வானரவீரன் தன்னுடைய கைக்நுனி விரல்களினால் வாங்கிச் சமுத்திரத்திலிட்டது, என்மனத்தினிடத்தி லிட்டதுபோ லிருக்கின்றது.

பின்னும்இந்த லங்காபட்டணத்தை முன்னொரு குரங்குவந்து சுட்டதையும், மஹா பலசாலிகளான நம்முடைய அநேக ராக்ஷசர்களை அந்தக்குரங்கு கொன்றுவிட்ட விதத்தையும், ஓர் நிமைப்போதிற் சென்றுபோய்ப்பெரும்பின் சமுத்திரத்தைத் தாண்டினதையும், நேரிற் கண்டிருக்கின்றோ மல்லவா? அந்தக்குரங்கு இப்படிக்கொத்த கொடுமையான செய்கைகளெல்லாஞ் செய்துவிட்டு, நம்முடைய கண்ணுக்கெதிராகவே எவ்வளவுமச்சமில்லாமற் போய்விட்டதே: இவைகளையெல்லாம் நாம் அநுபவமாய்ப்பார்த்திருந்தும் அந்த மனிதர்களுடைய பலாபலத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமோ?

கவி.

என்றுதாயைப் பயந்தோனிடம்பனும், நின்றவாளைய விழிவழித்தியுக.,
நன்றுநன்றுனம் மந்திரநன்றெனு, என்றுமவழ்தி யிளவலோடேயென்றான்.

என்று பாட்டனாகிய மாலியவான் நல்லநீதிவார்த்தைகளைச் சொன்னமாத்திரத்தில் இராவணன் பற்களை நறநறவென்று கடித்து, கண்களில் அக்கினிப்பொறி பறக்கும்படியாகக் கோபித்து நம்முடைய மந்திராலோசனை நன்றாயிருந்தது: நன்றாயிருந்தது: என்றுநகைத்து, ஓ மாலியவானே! நீ எப்போதும் பகைவரோடுகூடி வாழ்ந்துகொண்டிருக்கும்படியாக விபீஷணனோடு கூடப் போய்விடுவாயென்றான்.

## பிரகஸ்தன் இராவணன் புஜபலத்தைக்கூறி மாலியவான் வார்த்தையை மறுத்தல்.

கவி.

எனப்போ விகமெனவென்னுறு, மோனமாகி யிருந்தனன்மற்றிருள்
ஆனகாலை யடியினிறைஞ்சிய, சேனைநாத னினையசெப்பினன்.

இதைக்கேட்ட மாலியவான் எப்போதும் துஷ்டர்கள் நல்வார்த்தையைக் கேட்டதென்று நினைப்பார்களென்று எண்ணிக்கொண்டு ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்துவிட்டான். அப்போது அங்கிருந்த சேனாபதியான பிரகஸ்தனென்கிறவன் எழுந்திருந்து வணக்கஞ்செய்து கையைக்கூப்பிக்கொண்டு, ஐயா மாலியவானே! ஏழைகளானமனிதர்கள் இந்த அற்பமாகிய கடலைத்தாண்டி வந்ததொன்றுதானே அவர்களுக்குப்பலம்? அஷ்டதிக்குப்பாலகர்களும் வணங்கும்படியாக ஜயம்பெற்று அவர்களிடம் பிரதாபங்கொண்டிலங்கிய ராவணனுக்கு ஊழியஞ்செய்துகொண்டிருக்கின்ற அந்தயதார்த்தமொன்றையு நினைக்காமற்போய்விட்டீரோ: இந்தக்குரங்குகள் வருத்தப்பட்டுச் சிறுகுன்றுகளைத் தூக்கிக்கொண்டுவந்து கடலையடைத்தனவென்று பிரதாபித்துச்சொன்னீர். இந்தராவணேஸ்வரர் அந்தக்கயிலாசபர்வதத்தைப் பிரமதகணங்களோடும் உமாநாயகனாகிய பரமசிவனோடும் உச்சாணிவேரும் பறிபடும்படிப் பேர்த்தெடுக்கவில்லையோ? அதை இப்போதேன் சொல்லவேண்டும்? இந்த இரண்டுமனிதர்களும், குரங்குகளும், புத்திகெட்டவர்களாய் நம்முடைய வாசஸ்தலமாகிய இந்தலங்கைக்குவந்து சேர்ந்தார்கள். தங்களை நாசப்படுத்துவதானகாலம் பிடரியைப்பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்தபடியால், இனிச்செத்தவர்களேயல்லாமல் பிழைக்கிறவர்கள் அல்லவென்று சொன்னான்.

## இராவணன் தூதர்களாகிய ஒற்றர்கள்வந்தமையை வாயிற்காவலனறிந்து அவர்களை வரவழைத்து அவர்களால் ஸ்ரீராமபிரானிடத்து நிகழ்ந்த விஷயங்களையறிதல்.

கவி.

முற்றமூடிய கஞ்சுகன்மூட்டிய
வெற்றனற்பொறிக் கண்ணினன்வேத்திரப்
பற்றமங்கை யினன்படிகாவலன்
ஒற்றர்வந்தன ரென்னவுணர்த்தினன்.

மனைக்கண்வந்தவன் பாரங்கவாங்கினர்
பிணக்கைக்கண்குரங் கின்பாடிசேனையை
நினைக்குந்தோறுமலை நெருநெஞ்சினர்
கணைக்குந்தோறு முதிரங்கக்குவார்.

வெள்ளவாரி வீதிகொடவ்வீடணன்
தன்னவாரி நிலைமையுந்தாயதன்



உள்ளவாறு முரையினென்றனுயிர்
கொள்ளவாய்வெரு வுங்கொடுங்கூற்றனன்.

அப்போது தேகமுழுதும் மூடிக்கொண்டிருக்கின்ற கிலேயங்கிதரித்தவனும், அக்கினிஜ்வலிக்கின்ற கண்களையுடையவனும், கையிற் பிரம்பைப்பிடித்துக்கொண்டிருக்கின்றவனுமான வாயிற்காவலாளியாகிய ஒரு கட்டியக்காரன் இராவணனிடத்துக் கோடிவந்து, தண்டனிட்டெழுந்து நின்று, சுவாமி! எச்சரிக்கை பராக்: தாங்களனுப்புவித்த ஒற்றர்கள் வந்துவிட்டார்களென்று சொன்னான். அம்மாத்திரத்தில் அக்கினிபொழிகின்ற கண்களுடையவர்களும் மிகுந்த பலமுள்ளவர்களுமான ராக்ஷசர்களுக்குத் தலைவனாகிய ராவணன் அதுகேட்டு, நல்லது: அவர்களை இங்கே அனுப்புக. என்றுநியமிக்கவும் அவனப்படியே புத்தியென்றுபோய் அந்த ஒற்றர்களை உள்ளேபோவீர்களென்று அனுப்பினான். அவர்கள் ராவணனுடைய சமுகத்தில்வந்து அவனுக்கு வணக்கஞ்செய்து, வானரசேனைகளை நினைத்து நினைத்துத் திடுக்கிடும் நெஞ்சையுடையவர்களாகி, நினைக்கும்போதெல்லாம் இரத்தங் கக்கிக்கொண்டு நின்றார்கள். அப்படி நின்றவர்களை யாவரும் பயப்படத்தகுந்த யமனுக்குச் சமானமாகிய இராவணன்பார்த்து, வானரசேனைகளுடைய அளவையும் விபீஷணன்செய்கிற செய்கையையும், இராமலக்ஷ்மணர்களுடைய தன்மையையும், விவரமாகச்சொல்லுங்களென்று கேட்கச் சுகசாரணர் சொல்லுவதானார்கள்.

சுவாமி! நாங்களிந்தச் சமுத்திரத்தை ஒருக்ஷணத்திற்குள்ளே தாண்டி, வானரசேனாவீரர்கள் வசிக்கின்ற பாடிக்கூடாரங்கள்தோறும் அவ்வானரவுருவந்தரித்துக்கொண்டுசென்று, நாங்களந்தச் சேனாசமுத்திரத்தினுடைய அளவைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையுடனே உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டே கருடனிலும் அதிவேகமாகச்சென்றோம். அப்படிசென்றும் அதினுடைய முடிவைப்பார்க்க எங்களாற்கூடாமற் போய்விட்டது. அந்தவானரர்கள் இந்தக்கடலையடைத்தபோது சப்தித்துக்கொண் டெழும்பின அந்தநீர்த்துளிகளே உமக்கு முன்னேவந்து சொல்லியிருக்க, அவர்கள் விரிவை இவ்வளவென்றுபார்த்துச் சொல்லுகிறதற்கு நாங்களும்வேண்டுமோ? பிரமருத்திரேந்திராதிகளாலும் இத்தன்மையரென்று அளவிடக்கூடாத வேதசாஸ்திரங்களைக் கற்றறிந்த அந்தமனிதர் தம்முடைய தோள்களாகிய மேருமலையைப் பார்த்துப் பாணங்களைப் பார்த்துத் தமதுவில்லையும் பார்த்தமாத்திரத்திலே, சமுத்திரமானது வெந்து நீறாய்விட்டது.

ஓ கற்பகப்பூமாலையசைகின்ற இரத்தினமயமான ஹாரமுள்ள மார்பினனாகிய இராவணேஸ்வரா! உம்முடைய லங்காதிபத்திய ஐஸ்வரியமெல்லாவற்றையும் அந்த ஸ்ரீராமமூர்த்தி சூரியசந்திரர்களுள்ளவரையினும், தமது நாமம் பிரகாசித்துக்கொண் டிருக்கிறவரையினும், உம்முடைய தம்பியாகிய விபீஷணருக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டார்; முன்னொருநாள்வந்து ஒருகுரங்கு தன்னுடைய புஜபலபராக்கிரமத் தெரிவித்த பெருமையை இன்று மோ

ருவரு மனவிடவில்லை. அப்படியிருக்க-அந்தக்குரங்கைப்போ லொத்த அனே
கங்குரங்குவீரர்கள் சேதுபந்தனஞ் செய்தார்க ளென்கிறதும் ஒருபுதுமை
யோ? முப்பத்துமூன்றுகோடி தேவர்களும் தேவாமிர்தபானம் பண்ணும்போ
து தங்களுடையபக்தியில் தானவர்கள் மறைந்திருக்கிறதை யறிந்து சர்வவ
ல்லவரான ஸ்ரீமாதவப்பிராணுக்குத் தெரிவித்ததன்மைபோல, உம்முடையத
ம்பி வானரர்களைக்கொண்டு எங்களையடிப்பித்து, மடலோடு மடல்முறியச் சே
ர்த்துக்கட்டி, அப்படியே யிழுத்துக்கொண்டுபோய்ச் சகஸ்திரகோடி. கிரண
ங்களோடுகூடிய இளங்குருஞ்சூரியனைப்போற் பிரகாசித்துக் கொண்டிருக்கின்
ற மகாவீரனான ஸ்ரீராமமூர்த்திக்குக் காட்டி, எங்களை ராக்ஷசர்களென்றுசொ
ல்லி, மந்திரத்தினால் நாங்கள் குரங்கல்லாமையையும் வெளிப்படுத்தினன்.
அப்போதெங்களை ராக்ஷசர்களென்று தெரிந்துகொண்ட அந்தவெற்றிவீரனு
ன ஸ்ரீராமர் எங்கள்மீது பரிபூரண தயையைவைத்ததினால், நாங்களும் பிராணன்
தப்பிவந்து உம்முடைய பாதங்களை யடைந்தோம். மேலும்-அந்த ஸ்ரீராமர்
சொன்னவார்த்தைகள் இவை: இவை: என்று அவர்சொன்னதில் ஒன்றும்வி
டாமல் விவரமாகச்சொல்லி, இதுதான் நாங்கள் போய்வந்த ஒற்றுத்தொழி
லின் விதமென்றுகூறி, உமக்குண்டாகும் குறைவுகளும் பொல்லாங்குகளு
நீங்கி இன்றுமுதல் தீர்க்காயுசுடையவராகக் கடவீரென்று வாழ்த்தினார்கள்.

மகோதரன் சிலவார்த்தைகூறி தன்னை யுத்தத்திற் கனுப்பவேண்டுதல்.

கவி.

வட்டெனக்கொல்லும்விற்கை மானுடர்மகாகீரை
தொய்த்தினிடைத்தபானத் தானையானுவன் றதம்மூர்
வய்தினனென் றபோதின் வேறினியெண்ணவேண்டும்
செய்கிறனுண்டோவென்னச் சேனைகாவலன்செப்பும்.

அப்போது மகோதரன் இராவணனைப்பார்த்து, ஐயா பிரதாபலங்கே
ஸ்வரா! பெரியோர்களுடைய சாபவார்த்தையைப்போல் தப்பாமற்கொல்லத்
தக்க வில்லைப்பிடித்துக்கொண் டிருக்கின்ற அந்தமனிதர்களீ சமுத்திரசலத்
தை லேசிலணைகட்டவல்லமையுள்ள சேனைகளுடனே யாவருந்துதிக்கின்ற ந
ம்முடைய ஊரைவந்து சேர்ந்தார்களென்கிறபோதே இனி நாமயோசித்துச்
செய்யவேண்டிய செய்கையுமுண்டா யிருக்கிறதோ? நாம்சீதையை விட்டுவி
ட்ட போதிலும் தேவர்கள் ராவணன்பயந்தானென் றிகழ்வதுமல்லாமல், உ
ம்மோடு ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்குண்டான பகையை ஒழியவிடார்கள்.
ஸ்ரீராமன் சண்டையில் ஒருவேளை சிநேகமாயிருந்தாலும், உன்தம்பியாகிய
விபீஷணன் அப்படி யாகும்படிவிடான். சத்துருக்கள் நம்முடைய ஊரைக்கி
ட்டினபிறகு, அவர்கள் செய்யப்போகிற அவமானத்தை இப்படியென்று
சொல்லவேண்டுமோ?

நாம் படைகளுடனே போய்ச் சமுத்திரத்தின் அக்கரையி லவர்களிரு
க்கும்போதே வானரங்களுடனே அந்த மனிதர்களையுங்கொன்று திரும்பி நம



மிடம்வந்து சேரவேண்டுமென்கிறதை ஆலோசியாமற்போய்விட்டோம். இப்
போது அவர்களிங்கேயே வந்திருக்கிறார்கள். இனியவர்களைக் கொல்லுவதை
விட நமக்கு வேறே யுறுதிப்பாடு முண்டோ? இச்சித்தது சமீபத்திற்
கிடைக்கப்பெற்றால் வெகுதூரம்போய் பிரயாசப்பட்டு வெற்றிகொள்ளுவதி
லும் சிறப்பானதல்லவோ? ஓ திரிலோககண்டகனாகிய ராவணேஸ்வரா! அபி
ரவெள்ளமான நம்முடையராக்ஷசச்சேனைகள் அழியவேண்டுமானாலும் நாறு
ஊழிக்காலம் வேண்டியதாகும். நமக்குச்சேனையி லென்னகுறைவு? அந்தம
னிதர்களோடு வந்திருக்கின்ற அற்பக்குரங்குக ளெல்லாம் இனிநீர், கோபித்
துப் புறப்படும்போது சிங்கத்தைக்கண்ட நாய்க்கூட்டங்களைப்போ லோடி
விடுமேயல்லாமல், உமக்கெதிரே நிற்கமாட்டுமோ?

கவி.

வந்தவர்தானையோடு மறிந்தும்மாக்கடலில்வீழ்ந்து
சிந்தனரிரிந்துபோகச் சேனையும்யானுஞ்சென்று
வெந்தொழில்புரியுமாறு காணுதிவிடையீதென்று
இந்திரன்முதுகுகண்ட விராவணற்கேயச்சொன்னான்.

நம்மோடு பகைத்துவந்தவர்களைத் தங்கள் சேனையுடனே மடங்குண்டு
பெரியசமுத்திரத்தில் விழுந்து சிதறுண்டோடிப்போகச் செய்யத்தக்க சேனை
யு நானுமாய்ப்போய்க் கொடியயுத்தஞ் செய்கிறவிதத்தைக் கொஞ்சம் தயை
செய்துபாரும், எனக்கு உத்தரவுகொடுமென்று இந்திரனை முதுகுகாட்டியோ
டச்செய்த அந்தராவணனுடைய மனம்சம்மதிப்படிப்படி, மகோதரனென்கி
ற ராக்ஷசவீரனானவன் சொன்னான்.

மாலியவான்மீட்டு மிராமனுதியருற்பவத்திற் கேதுவான தேவரகசியங்கூற,
இராவணன் தன்பராக்கிரமங்கூறி மறுத்தல்.

கவி.

மதிநெறியறிவுசான்ற மாலியவானவ்வாய்மை
பொதுநெறிநிலையதாகப் புணர்த்துதல்புலமையென்று
விதிநெறிநிலையதாக விளம்புகின்றேருமீண்டுச்
செதுநெறிநிலையினுரே யென்பதுந்தெரியச்சொன்னான்.

அப்போது சகலதேவரகசியங்களையும் புத்திபூர்வமாக ஆராய்ந்தறிந்த
மாலியவான் சத்தியமாக நாம் கேள்விப்பட்டதைப் பொதுநெறி நிலையாகச்
சொல்லித் தெரிவிப்பது நல்லவழியாகுமென்று நினைத்து, வேதசாஸ்திரவிதிக
ளினால் நிச்சயமாகச் சொல்லப்பட்ட வஸ்துவானவர்கள் இந்தராமலக்ஷ்ம
ணர்களே யென்பதை இராவணனுக்கு விவரமாகச் சொல்லத்தொடங்கினான்.
அப்பா இராவணா! நம்மிடத்திற் சண்டைசெய்கிறதற் கேற்பட்டுவந்த ஓர்
பெரியவீரன் சமுத்திரத்தாற் சூழப்பட்ட ஐம்பத்தாறு தேசத்திற்கும் ஏக
சக்ராதிபதியான. தசரதனுடைய குமாரனுகத் திருநாமஞ் சாற்றிக்கொண்
டு வந்திருக்கிற பரஞ்சோதிஸ்வரூபனென்றும், வேதத்தினுச்சியி லெழுந்த

ருளியிருக்கும் தேவதேவனான சர்வேஸ்வரனென்றுஞ் சொல்லுகின்றார்கள். அவருக்கினியவனான இலக்ஷுமணனை அப்பரம்பொருளுக்குச் சயனத்தலமாகிய ஆதிசேஷனென்கிறார்கள். இவருயர்ந்த நிலையினின்று மூற்றக்குறைந்து, அகங்கார மமகாரமாகிய குற்றமற்ற ஜீவர்களினிடத்தெல்லாம் சேஷத்துவ பாரதந்திரியமாகிற ஞானநிலையைக் காட்டுகின்றவர்களைப்போல், எல்லா ஸ்வரூபத்திலும் பரிசுத்தவானென்கிறதை லோகப்பிரசித்தமாகச் சொல்லிக்கொள்ளுகின்றார்கள்.

இந்த இரண்டுவீரர்களுடையவிற்களைப் பிரமதேவன் குலாசலங்களுடைய சத்தையெல்லாம் சேருகவெடுத்து வில்லாகச்செய்த அந்தக்காலத்தில், அதற்கேற்றநாணி அத்திருவனந்தாழ்வாரையேஅமைத்திருக்கின்றதாம், பாணமாகச்செய்த காலநேமியின் பராக்கிரமமேயென்றால், ஒருவராலுங் கணிக்க இயலாதென்கிறார்கள். வாலியையும், அவனுக்குப் பிள்ளையாகவந்தவனையும், தேவேந்திரனென்கிறார்கள். நீலனென்கிற வானரசேனாபதியை லோகங்களையெல்லாம் சுட்டழிக்கத்தக்க அக்கினிதேவனென்கிறார்கள். யமனுக்குச் சமானமான ஸ்ரீராமதூதனை வாயுபகவானும் சாம்பவனு மென்கிறார்கள். மேலும் - இந்த ஸ்ரீராமதூதன் இனிமேல் பிர்ம்மாவாகப் போகிறானென்று மொருவிசேஷஞ் சொல்லுகிறார்கள். அந்தப் பிர்ம்மபதவியைஅவருக்குக்கொடுத்தவர் இராக்ஷசர்களுடைய கருவை யறுத்துவிடுவதாக இந்த ஊருக்குவந்திருக்கிற ஸ்ரீராமபத்திரனென்று எல்லாருஞ் சொல்லுகின்றார்கள். இப்படியெல்லாமெனக்குச் சொன்னபேர்கள் இவர்களுடைய வல்லமையைப்பார்த்து ஒப்பிட்டுச் சொன்னார்களோ ? யதார்த்தமே சொன்னார்களோ ? தெரியாது.

மேலும் - குரங்காய்வந்தவர்க ளொவ்வொருவரும் பிர்ம்மாதிதேவர்களென்கிறார்கள். இந்தச் சமாசாரத்தையுஞ் சொன்னவர்கள் பயத்தினால் சொன்னார்களோ ? அல்லது அவர்களுடைய ஞானதிருஷ்டியினால் தெரிந்துசொன்னார்களோ ? தெரியாது. சீதையைப் பிரம்மேந்திராதி தேவர்களுக்கு மெட்டப்படாத பரமபதநாட்டிலுள்ள சாக்ஷாது ஸ்ரீமகாலட்சுமியென்று சொல்லவேண்டுமேயல்லாது இந்த லோகத்துள்ள மற்றுமபெண்களைப்போலொரு பெண்ணென்று இகழ்வாய் நினைக்கப்படாதென்றும், மகாபரிசுத்தமானவளென்றும், அமிர்தத்துடன் அவதரித்தவளென்றும், சர்வலோகங்களுக்கு நிருபாதிகத் தாயானவளென்றும் சொல்லிக்கொள்ளுகின்றார்கள். இப்படி தர்மஸ்தாபனர்கள் மிக்கவர்களுடைய சமுத்திரமாகிய அகழியாற் சூழப்பட்ட மேருகிரியாகிய இலங்காபட்டணத்திற் கிராஜனான உன்னுடையமதத்தை நினைத்துத் தங்கள்சுயேச்சையாகவே மனிதவடிவுகொண்டு காட்டுக்கு வந்ததை, தேவர்களுடைய பிரார்த்தனையால்தான் வந்ததென்று சொல்லுகிறார்கள். அப்படியே அளவில்லாத உற்பாதங்களும் சம்பவித்தனவென்கிறார்கள்.

சர்வஜீவர்களுக்கும் தாயைக்காட்டிலும் அதிககிருபையையுடையவளான சீதாபிராட்டி யெழுந்தருளியிருக்கின்ற அதிரமணீயமான அசோகவனத்



தை யழியத்தக்கவனான ஸ்ரீராமதூதனும் இந்த லங்கையைக் காத்துக்கொண்டிருந்த தேவதையான துர்க்கையும் அந்தக் காவலைவிட்டு ஒழிந்துபோய்விட்டதென்றும், அதனாலேயே இந்த யுத்தமுஞ் சம்பவித்ததென்றுஞ் சொல்லுகின்றார்கள். அந்த ஸ்ரீராமனுடைய அம்புக்கு கைதியானவர்கள் இப்போது நாஜீவஞ் செய்துவருகிற ராக்ஷசர்களென்கிறார்கள். இப்படியென்று நம்முடைய வசத்திலிருந்த பொய்யாத நாவையுடையவனும், எல்லாக் கலைக்கியானங்களிலும் தேவகுருவான பிரகஸ்பதிக்கு ஒருமுழம் உயர்ந்தவனுமான உன்தம்பியாகிய விபீஷணன் சொல்லிவிட்டுப்போனதென்றும் வெளியரங்கமாகச் சொல்லுகின்றார்கள். இவைகளையெல்லாம் நான் கேள்விப்பட்டதுமல்லாமல், என்றுலகம் ஆதியில் நாசமானதும் பரம்பொருளாகிய அவனாலேதான். இவையெல்லாம் உன்னிடத்திலேயிருக்கிற பக்ஷத்தினாலே, இன்னினையும் காரியங்களைக் குறித்து மனதில்வருத்தமுற்று உனக்குச் சொன்னேன். இனியாவது சீதையை விடுவாயானால் விதப்பொல்லாங்கு விலகிப்போய்விடும், என்று பாட்டனான மாலியவான்கூறி முடித்தனன்.

கவி.

மற்றெலாநிற்கவந்த மனிசர்வானரங்கள்வானின்
முற்றுநாளளவுதிக்கு நிமையமென்னுந்தகைமை
கொற்றவா நன்றிடேயுந் தோற்றிநீயென்றுஞ்சொன்னாய்
எற்றவாசன்றுபோவென் றிணையனகூறலுற்றான்.

இப்படிச்சொல்லிப் பன்னிப்பன்னி மாலியவான் சொன்னதைக்கேட்ட ராவணன் அவனைப்பார்த்து நீசொன்னவைகளெல்லா மிருக்கட்டும். அந்த மனிதர்களும் - வானரர்களும் - இன்றுவரையில் என்னிடத்தினின்றும் தப்பின்றதேவர்களென்று சொன்னதுமல்லாமல், அவர்களுக்கு நான் தோற்றுப்போவேனென்றும் சொன்னாய். நீ இதுவரையில் பலசாஸ்திரங்களையும் படித்ததெல்லாம் இவ்வளவுதானோ? என்றிகழ்ந்து மேலும் சொல்லத்தொடங்கினான்; ஐயா! கிழநாயே! இந்தப்பேதைகளான மனிதர்களுடனே குரங்குகளல்ல, மற்ற ராக்ஷசர்கள்தானாகட்டும், பூலோகத்திலுள்ளவர்கள்—நாகலோகத்தவர்கள் - சுவர்க்கலோகவாசிகள் — முதலிய வெல்லாரும் பகைத்து எனமேற் சண்டைக்குவந்தபோதிலும்; சீதையின்விஷயத்தில் நான்றோற்றாலும் என்னெல்லையில் தப்பிப்போய்விடுவேனோ? இந்த லோகங்களையெல்லாஞ் செயித்தவைகளாய் என்கையில் ஒன்றல்லவோ; அனேகமாயிரங்களிருக்கின்றனவே; அவைகளெல்லாம் அனுமானுடைய கோடுமையிலும் மறியாய் முன்பு மிகுந்த பராக்கிரமன் யுத்தஞ்செய்த தேவர்களுடைய முதுகெலும்புளொருவிப்போனவைகளாச்சே: அப்படிப்பட்டவைகள் இன்றிந்தக் குரங்குகளின்மேற் செல்லச் சக்தியற்றவைகளோ?

சூலாயுதத்தைக் கையிற்பிடித்துக்கொண்டிருக்கின்ற பரமசிவனே பொருதுமென்றெதிர்த்து குரங்காய்ப்பிறந்து வந்தாலென்ன? என்னைக்கண்டால் விடைபெற்றுப்போகவேண்

டுமேயல்லாமல் என்னை யென்னசெய்ய மாட்டுவான்? என்கையிலிருக்கின்ற சூரியபாணங்கள் பாற்கடலைக் கடைந்தகாலத் திவ்வுலகமெல்லாம் பயப்படும்படிப் புறப்பட்டுவந்த காலகோடிவிஷத்தையும் கவளீகரிக்க வல்லமைகளாக்கும். என்வல்லமை உனக்குத்தெரியாததுபோ லிருக்கிறது. யுத்தத்தி லெனைக்குத் தோற்றுப்போன சக்கராயுதத்தனை விஷ்ணுவே இந்த ஸ்ரீராமனாக வந்து எதிர்த்தானானாலு மென்ன? என்கையிலிருக்கின்ற பாணங்கள் சூரியசந்திரர்களும் நீங்கிப்போம்படி அதிவேகமாகச் செல்கின்றவைகளல்லவோ? அவைகளையவன் அலக்ஷியஞ்செய்து தன்மார்பில் தரித்துக் கொள்ளுகிறதற்குச் சமுத்திரத்தைக் கடையும்போதுண்டான கௌஸ்துபமணியோ? வெற்றிபொருந்திய வாளாயுதத்தையுடையவர்களான தேவர்களுக்கிராஜனாகிய இந்திரன் குரக்குருவங்கொண்டானே யானால், அன்றைக்கவனாற் பிரயோகிக்கப்பட்ட வச்சிராயுதமுறுக்கச் சிறகுவெட்டுண்டு நிற்கமாட்டாமல் விழுந்த அற்பமலைகளோ என்புஜங்கள்.

என்றிப்படி ராவணன் சொல்லிக்கொண்டிருக்கும்போது குலஸ்திரீகளுடைய உள்ளமே ஆதாரமாகப்போகத் தங்களுயிர்க்குச் சமானமாகிய நாயகன்மார்கள் தங்கள் சொந்தவீட்டிருக்கும்போதாகவும், அவர்களை விட்டுப் பரஸ்திரீகள் சேர்வடையவும், சக்கரவாகப் பக்ஷிகளுடைய வியசனங்கள் விலகவும், மேருமலையை மூடிக்கொண்டிருந்த பிரளயவெள்ளம் வடிந்ததுபோல உலகத்தை மூடிக்கொண்டிருந்த இராத்திரி கழிந்துபோமது விடிந்தது. இலங்கைப்பட்டணத்தின் தன்மை யெப்படிப்பட்டதென்று எட்டிப்பார்க்கவும் பயந்து அந்தமதிலுக்குப் பக்கமாய்த் தினந்தோறும் போய்க்கொண்டிருந்த சூரியன், இப்போது சக்கரவர்த்தித் திருக்குமாரர் யுத்தத்திற்கு வந்திருக்கிறாரதலால் நமக்கு நல்லவிதிகாரம் கிடைத்ததென்று வெகுநாளாய்க் காணாமலிருந்த அவ்விலங்கையைப் பார்க்கிறதற்காகப் புறப்பட்டிருக்கிறதுபோல உதயமாயினன்.

ஒற்றக்கேள்விப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஒன்பதாவது,

## இராம னிலங்கை காண் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபத்திரர் சமஸ்தவானரர்களோடு சுவேலாபர்வதத்தின் சிகரத்திலேறி இலங்காநகரத்தைக்கண்டு, இளையபெருமாளாகிய இலட்சுமணருக்கு அதிலுள்ள ஒவ்வொரு சிறப்புக்களையுந் தனித்தனி காட்டுதல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் சுவேலாபர்வதத்திலுச்சியிலெழுந்தருளி யிருந்தற்சிறப்பு.

கலி.

அருந்ததியனையாக்கை யுவ்வழியிருந்தாளென்று
பொருந்தியகாதலுண்டப் பொன்னகர்காண்பான்போல

No 47. ஸ்ரீராமர்சுவேலாபர்வதத்தின்மேலேறி இலட்சுமணருக்கு இலங்கை விநோதங்களைக்காண்பித்தல்.



இராவணன் உத்தரவாயிற்கோபுரமேறி சுகசாரணரால் ஸ்ரீராமர் சேனையைக்காட்டுதல்.



இராமனிலங்கைகாண்படலம்.

பெருந்துணைவீரர்சுற்றத் தம்பியும்பின்புசெல்ல
இருந்தமான்மலையினுச்சி யேறினனிராமனிப்பால்.

அப்போது ஸ்ரீராமர் அருந்ததிக்குச் சமானமாகிய சீதாபிராட்டியாரைக் காணவேண்டுமென்று கருதி மிகுந்த ஆசையுடனே சுவர்க்கலோகத்தைக் காணப்போகிறவரைப்போல, துணைவர்களான சிறிய திருவடி சுக்கிரீவமஹாராஜன் — அங்கதன் — ஜாம்பவன் — இவர்கள் முதலானவர்கள் சுற்றிவரவும், இளையபெருமாள் பின்னே தொடரவும், சுவேலபர்வதத்தின் சிகரத்தின்மேலேறியருளினார். அங்கே பலவந்தர்களான வீரர்களெல்லா நெருங்கிச்சூழ்ந்துவரவும், சுக்கிரீவமகாராஜனும் — அங்கதனும் — கைலாகு கொடுத்துக்கொண்டு வரவும், ஸ்ரீகாகுஸ்தவம்சோத்தாரகர் அதிகபலமுள்ள சிங்கமும் — யாளியும் — புலியும் — சூழ்ந்துகொண்டு வரும்படியாக உயர்ந்த பருவதத்தி லேறுகின்ற இராஜசிங்கத்துக்குச் சமானமாகவிருந்தார்.

அந்த ஸ்ரீராமர் அலைமோதிப் பொங்கிச் சப்திக்கின்ற சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகமெல்லா மூடிக்கொள்ளுகின்ற இருளைப்போல மொய்த்துக்கொண்டிருக்கின்ற மிகுந்தராக்ஷசர்களுடைய நகரமும் — அதன் ஐசுவரியமும் — அழியச்செய்கின்ற உற்பாதத்தைக் காட்டும்படி, செம்மையாய் உதயகிரியினின்று முதித்துவையாமல் இருந்தாற்போலிருந்து உக்கிரமமாக வடக்கேயொருமலையினுச்சியி லுதித்த சூரியனை யொத்திருந்தார். பெரியயுத்தத்தில் மிகுந்த அஸ்திரவருஷங்களைப் பொழிகின்ற வில்லுடனேகூட அந்தச் சுவேலாசலத்தின்மேல் ஒருபெரிய காளமேகம் தாமரைமலர்களைப் பூத்து வந்ததுபோல, ஸ்ரீகோதண்டபாணியாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் திருக்கைகளும் — திருவடிகளும் — திருக்கண்களும் — திருமுகமும் — திருவாயும் பிரகாசிக்க எழுந்தருளியிருந்தார்.

அன்றியும் — இமயமலையையொத்த திருத்தோள்களையுடைய சக்கரவர்த்தித் திருமகனானவர் பெருமை பொருந்திய தம்முடைய கோதண்ட வல்லமையினால் சமுத்திரராஜனாகிய வருணனை வரவழைத்து, மலைகளாற் சேது கட்டிக் கடலைத்தாண்டி, சுவேலாசலத்தின்மீது வானரவீரர் கூட்டத்தினிடுவே சுவர்ணகிரிகளுக்கு மத்தியிலிருக்கின்ற ஒருமரகதமலையையும் ஒத்திருந்தார். பெரிய சமுத்திரத்தின்மத்தியில் திருவணையைக்கண்டு வருணனிடத்திற் கொண்ட கோபமாறிய ஸ்ரீரகுநாதர் சீதாபிராட்டியென்னும் தமதினிய உயிர் பிரிந்தபிறகு துணைபிரிந்த அன்றிற்சேவலைப்போல வருத்தமுற்றிருந்தவர், தமதிரண்டு திருக்கண்களாலு மிலங்கைப்பட்டணத்தைப் பார்த்து இளைய பெருமானுக்கு அதன்பெருமையைக் காட்டத் தொடங்கினார்.

ஸ்ரீராமர்லக்ஷ்மணருக்கு இலங்கையின் சிறப்புகளைக் காண்பித்தல்.

கவி.

கற்றிருசிகரமாதி சேனைநாயகர்கட்கெல்லாம்
வற்றபெருமைகூறி வழுத்துமாமைந்தனானோ

இந்திரனிருக்கையென்ப இலங்கையையெடுத்துக்காட்டார்
அந்தரமுணர்ந்தோர்தம்மை யருக்கனிற்புலவரம்மா.

அப்பா இலக்ஷ்மணனே! உலகத்தில் வித்துவான்கள் தம்முடைய அயோத்தியாநகர முதலாகிய எல்லாலோகத்திலுமுள்ள எல்லா நகரங்களுக்கும் உபமானஞ்சொல்லிப் புகழ ஏற்படுங்காலத்தில், இந்திரபதமாகிய சுவர்க்கலோகத்தைத் திருஷ்டாந்தப் படுத்துகின்றார்கள்; இந்த லங்காபட்டணத்தையெடுத்து உவமிக்கின்றார்களில்லை. அதற்குமிதற்குமுள்ள தாரதம்மியந் தெரிவதரிதானதா லிதன்பிரபாவத்தை அவர்கள் அறியவில்லைபோ லிருக்கின்றது. அந்தவிலங்கையிற் சூரியமறைப் பிரகாசிக்கின்ற செம்பொற்றகடுபடுத்த தலத்தில் சூரியனும் கண்கூசத்தக்க மிகுந்தவொளியுள்ள நவரத்தினங்களாற்செய்து முடிக்கப்பட்டவைகளும் தவஞ்செய்த சித்திரக்காரராலும் சித்திரிக்கக்கூடாதவைகளுமான மாளிகைகளினுடைய பொருத்தமான வேலைப்பாடுகள் அதிகப்பிரகாசமுள்ள கிரணங்கள் சூழ்ந்ததனால் கண்ணுக்குத் தெரியவில்லை.

ஓ பராக்கிரமத்திற்சிறந்த சுத்தவீரனே! விரிந்த கிரணங்களையுடையவைகளாயும் பிரகாசிக்கின்ற இரத்தினங்களினுடைய கிரணக்கூட்டங்கள் ஆகாசவரையில் அளாவுகின்றதைப் பார்க்கும்போது, சிங்கத்துக்குச் சமானமாகிய வெற்றியோடுகூடிய வல்லமையுள்ள ஆஞ்சநேயன்வைத்த நெருப்பா லின்னமு மிந்தலங்காபட்டணம் எரிகின்றதென்று நினைக்கும்படியா யிருக்கின்றதென்பார். மேலும் — மேகங்கள் பரவிப்படர்ந்திருக்கின்ற பெரியமரகதத்தளத்தில் தங்கத்தாற்கட்டிய உப்பரிகைகளின் நிறைந்த கிரணக்கூட்டங்கள் சூழும்படியாக மத்தியிற்கலந்தமற்ற வயிரக்கற்கள் பதித்துக்கட்டிய வீடுகள், கொடிப்பாசி படர்ந்துள்ள ஒருதடாகத்தில் தாமரைப்புஷ்பத்தில் வசிக்கின்ற அன்னப்பக்ஷிகளைப்போ லிருக்கின்றதைப்பார்.

வளைந்த வில்லின்வடிவத்தைப்போலத் திரண்டதோளையுடைய ஓ இலக்ஷ்மணனே! அக்கினிக்கொழுந்துபோன்ற ஜோதியையுடைய இரத்தினங்களைப் பதித்துக்கட்டிய மிகுந்தபிரகாசமுள்ள மேன்மாடங்கள் நெருங்கிச் சொலிக்கின்றபடியால், கருமைநிறத்துடன் ஆகாசமார்க்கமாய்ப்போகு மேகங்களெல்லாம் அந்தச்சுடர்கள்பட்டு உலைக்களத்தில் வெகுப்படிக்காய்ச்சிய இரும்புக்கொப்பாகச் செவந்து ஒளிவீசுகின்றதைப்பார். அன்றியும் — கோபக்கனலோடுங்கூடிய யானையானது இருள்படிந்த நிறத்தையுடையதாகவிருந்தபோதிலும் உரனுக்குச் சமானமான பலம்பெற்றிருக்கின்ற கால்நகங்களினாற் பொற்றரையைக் கல்லிப்பேர்த்து, தனதுதிக்கையினால் அந்தப் பொற்புழுதியைவாரித் தன்னுடம்பெல்லாம் பூசிக்கொண்டு பொன்மலையைப் போலப் போகின்றதைப்பார்.

உயுத்தஞ்செய்கின்ற வில்லையுடைய ஓ இளையவனே! மிகுந்த பிரகாசத்தோடுகூடிய சுவர்ணத்தேர்களிற் கட்டியிருக்கின்ற ஒளியையுடைய வாசிமாக் காலிகளும், அந்தத்தேரின்மீதுகட்டிப் பறந்துகொண்டிருக்கின்ற சுவர்



ணக்கொடிக்காம்புகளும், ஆகாசத்தினிடத்திற் பரவியிருக்கின்ற மேகமாகிய அழுக்கைத்துடைத்து; அந்த அகண்ட ஆகாசமாகிய கண்ணாடியைப் பிரகாசப்படுத்துகிறதுபோ லிருக்கின்றதைப்பார். இதுவுமல்லாமல் - அவ்விலங்காபட்டணமானது நால்போட்டதுபோல வரிசையாக ஒன்றின்பக்கத் தொன்றுசேர்ந்து சுவர்ணத்தகடு பதித்துச் சித்திரங்க ளமைத்துப் பக்கத்திற்கிளைகள் கட்டியிருக்கின்ற மாளிகைகளாகிய இரத்தினமணிகளுக்கு நடுவேயிருக்கின்ற இராவணனுடைய மாளிகையானது நாயகப்பதத்துக்குச் சமானமாகிய சமுத்திரராஜன் தரித்துக்கொண்டிருக்கின்ற இரத்தினமாலைபோ லிருக்கின்றதைப்பார்.

இசனுடையோருக்கிடையே செருக்குள்ளவரும் நினைத்தற்கரியவனே! இலங்கையினது தெருநெருக்கில்வர்ணத்துக்கொருரத்தினங்களினாற்கட்டப்பட்டிருக்கின்ற உப்பரிகைகளின்வரிசையான நிழல்படுவதனால் தன்னுடைய சொந்தநிறமானது தெரியாமலும், ஒருநிறத்தை யாவது சோராமலும், இன்னதுநிறமென்றறியப்படாமலும், குதிரைகள்போகின்றனபார். மேலும் - மந்தரத்தைக் கண்டு புத்திமருண்டு ஆச்சரியப்படும்படியாய் தெளிவான பளிங்குக்கல்லாற் பிரகாசிக்கத்தக்கதாகக் கட்டின உப்பரிகைகள் வேறே ஒருபொருளின் சாயையிற்போதுமாத்திரங் காணப்படுகின்றவையேயன்றி, அப்படிக்கில்லாதபோது ஆகாயம்போல் யாதொரு நிறமுங்காணப்படவில்லை. அவைகாணப்படுகிறதோற்றம் ஜலத்திலே கட்டப்பட்டவைகள்போல நிழலின்றித் தன்மையுடையவைகளாயிருக்கின்றனபார்.

அரக்கர் செருக்கையடக்கும்படியான வில்லைப் பிடித்திருக்கின்ற அழகியகையையுடைய ஓ இலக்ஷ்மணனே! வெண்மையான நிறம்வாய்ந்த சந்திரனுடையகிரணங்கள் பிரகாசிக்கிறதுபோலும் காணப்படுகின்ற ஆகாசத்தையளாவியுயர்ந்து பக்கத்திலும் மத்தியில் அலங்கரித்துவைக்கப்பட்ட மரகதரத்தினமானது, பாற்கடலின் மத்தியிற் சயனித்துக்கொண்டிருக்கின்ற [illegible]பூருஷனுக்கு நிகராகவிருக்கின்றதுபார். சூரியனைப்போல [illegible] மிகுபிரகாச[illegible] வீசுகின்ற உப்பரிகையின்மீது ஒருநிலைக்கண்ணாடியின் [illegible] மேல் விரிக்கப்பட்ட கண்ணாடியானது [illegible] சந்திரனிடமாக [illegible] வைக்கின்ற கரும்பாம்பு பற்றிவிழுங்க [illegible]க்குகிற சந்திரனுக்குச் சமானமாக இருக்கின்றதைப்பார்.

வெற்றியைக்கொடுக்கின்ற வில்லைக் கையில்வைத்திருக்கிற [illegible]ரசிகாமணியே! அநேக கொடியுளாய் நெருங்கிய உப்பரிகைகளா[illegible]கையிலிருக்கின்ற நீண்டகழுத்தையுடைய, ஒட்டகங்கள், அந்த [illegible] உப்பரிகைகளிற் புஷ்பங்களைப்போலப் பிரகாசிக்கும்படி [illegible]பட்ட இரத்தினங்களினின்று வீசுகின்ற கிரணங்களைத் தேயாவிருக்ஷங்களினுடைய கொத்துகளாகிய தளிர்களென்று மயங்கித் தின்னும்படியாகக் கழுத்தைநீட்டுகின்றதைப்பார். அன்றியும் - ஸ்திரீகள் பூமாலையை நீக்கிவிட்டுத் தங்கள் கூந்தல்

களுக் கூட்டுகின்ற அகிற்புகையினுல் முழுதுஞ் சூழப்பட்ட ஒரு பவளமாளிகையானது, யானையுரியைப் போர்த்துக்கொண் டிருக்கின்ற பார்வதி சமேதராகிய சாம்பசிவ மூர்த்தியைப்போலப் பிரகாசித்துக்கொண் டிருக்கின்றது பார்.

ஓ தசரதமஹாராஜருடைய அருந்தவப் புத்திரனே! விஸ்வகர்மாவானவன் நீல ரத்தினத்தினுல் அலங்கரித்துச் செய்யப்பட்ட செய்குன்றங்கள் ஒருவரும் தெரிந்துகொள்ளக்கூடாத வஞ்சகமனத்தையுடைய ராக்ஷசர்களாலே சம்பாதித்து வைக்கப்பட்ட பாபநிக்ஷேபங்களைப்போன் றிருக்கின்றவைகளைப்பார். மானைப்போல் மதர்த்த தங்களுடைய பார்வையானது வியர்த்தமாகும்படியாக மோகத்தினுற் பிணிப்புண்டு சொந்த நாயகர்களை விட்டுப் பிரிந்து வந்து தங்களிடையைப்போலத் தத்தளிக்கின்ற உள்ளத்தை யுடையவர்களும் சர்ப்பத்தின் படத்திற்குச் சமானமான அல்குலையுடையவர்களுமாகிய ராக்ஷசஸ்திரீகள், வருஷகாலத்தை எதிர்பார்த்துக்கொண் டிருக்கின்ற மயிற்கூட்டங்களைப்போல நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் பார்.

வெற்றிமாலையைத்தரித்த வில்லைக் கையிலேந்திக்கொண்டிருக்கின்ற அதிக பராக்கிரமமுடைய ஓ இலக்ஷ்மணனே! ஆகாசத்தைத் தொடும்படி மாதுளம்பழத்திற்குப் புகையூட்டுவதுபோல வண்ணப்பெண்ணொருத்தி ராக்ஷச ராஜஸ்திரீயினுடைய புஜங்களிற் சந்தனத்தாற் கோலமெழுதி, அவை உலரும்படி பொன்னூபமுட்டியால் அகிற்புகை யூட்டுகின்றதைப்பார். புதுமலராற்றொடுத்த மாலையைத் தரித்திருக்கின்ற ஓ வீரசிகாமணியே! நம்முடைய சைனியங்களைப் பார்க்கும்படியாக விஷ்ணுபதத்திற்குச் சமானமாகிய சோலையுடைய தேவஸ்திரீகளும் தேவபுருஷர்களும், நமக்கு இனி வாழ்வுண்டாயிற்றென்று லங்காப்பட்டணத்தையெல்லாம் பாழ்படச் செய்துவிட்டு ஓடிப்போகிறவர்களைப்போல ஆகாசமார்க்கமாக எழும்பிப்போகிற விதத்தைப்பார்.

என்று இத்தப்பிரகாரமாக லங்காபட்டணத்தை இளையபெருமாளாகிய லட்சுமணருக்குத் தாரகமந்திரவாச்சியராகிய ஸ்ரீ ராமமூர்த்தியானவர் காட்டினபோது, அந்த லங்கையின் பெருமையைக்கண்டு அதிசயப் பட்டுக்கொண் டிருந்தனர்.

இராமனிலங்கைகாண் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பத்தாவது,

# இராவணன் ருவிசகாண் படலம்.

இப்படலத்தில் சகலபரிவாரங்களோடு இராவணனுலங்கையி னுத்தரவாயிற் கோபுரமேறி, சுவேலபர்வதத்தின்கணுள்ள ஸ்ரீராமபிரானுடைய சேனையின் பெருக்கைக்கண்டு, முன்ன ரொற்றுபோய் வந்த



சாரணுல் ஸ்ரீராமன்றவிர வினைய சேனைவீரர்களுடைய திறத்தையும்பெயரையு மின்னின்னபடியென்று தனித்தனி கூறக் கேட்டல் சொல்லப்படுகின்றது.

## இராவணன் இலங்கையினுத்தரவாயிற் கோபுரமேறியிருத்தற் சிறப்பு.

கவி.

இன்னவாறிலங்கைதன்னை யிளையவற்கிராமன்காட்டிச்
சொன்னவாசொல்லாவண்ண மதிசயத்தோன் றுங்காலை
அன்னமாநகரின்வேந்த னரிக்குலப்பெருமைகாண்பான்
சென்னிவான்றடவுஞ்செம்பொற் கோபுரத்தும்பர்சேர்ந்தான்.

இவ்வண்ணம் இலங்கைமாநகரத்தின் காட்சிகளையெல்லாம் எமது பரந்தாமனுகிய ஸ்ரீராமப்பிரபுவானவர் தமது திருத்தம்பியாகிய இலக்ஷ்மணப்பெருமானுக்குக் காட்டி ஒருவர்க்கொருவர் அதிசயப்பட்டுக்கொண் டிருக்குஞ் சமயத்தில் அவ்விலங்காபுரிக்கு நாயகனுகிய இராவணன் ஸ்ரீராமபிரானுடன் வந்திருக்கும் வானரசைனியங்களின் பெருமையைப் பார்க்கும்படி ஆகாயத்தையளாவிய செம்பொற்சிகரம்வாய்ந்த உத்தரகோபுரத்தின் மீதேறி உச்சியில் வந்துசேர்ந்து கட்டிய கயிறுகளெல்லாம் அறும்படியாகக் கோபிக்கின்ற மத்தகஜத்துக்குச் சமானமாகிய அந்தராவணன் சீதையினிடத்தில் வைத்த ஆசையாகிய மன்மதபாணமானது தைக்க வட்டமுற்றும் மல்யுத்தஞ்செய்து காய்ப்பேறியுமிருக்கின்ற தனதிருபது தோள்களும்பிரகாசிக்க, அநேககுகைகளை யுடைய ஒருபெரியமலைபோல் நின்றான். இப்படிநின்ற ராவணன் அப்போது எப்படிவிளங்கினனென்றால், சுகுமாரியாகிய சீதாபிராட்டியாருடைய அழகினுலே தளர்வடைந்து மெலிந்திருந்ததோள்கள் சண்டையென்று சொன்னமாத்திரத்தில் மேருமலையைக்காட்டிலும் பருத்துப்பலங்கொள்ளும்படியாகக் கர்வித்திருக்கின்ற மனஉறுதியுடையவனுகி, தனது பத்துசிரசிலும் பத்து சொர்ணகிரீடங்கள் பிரகாசிக்கவும் அழகியபொன்மலைக்குச் சமானமாக உத்தரகோபுரம் பிரகாசிக்கவும் விளங்கினுன்.

அன்றியும் - பிரளயகாலத்தில் உலகமூழ்கும்போது உலகத்தைவிட்டு மேலெழும்போகின்ற அநேகசிரசுகளோடுங்கூடிய சர்ப்பராஜனுகிய வாசுகிக்குச் சமானமானவனுய், பஞ்சபூதங்களோடுங்கூடிய பத்துத் திசைகளிலும் மற்ற பக்கங்களையு மறைத்து நிழல்பரப்புகின்ற விசாலமாகிய குடை பிரகாசிக்கவும்; பக்கங்களில்நின்றுகொண்டுவீசுகின்ற வெண்சாமரைக்காற்றினுல் கெய்த்திருண் டியர்ந்திருக்கின்ற ஒருபெரியமலையின்மீது தத்திவிழுகின்ற அருவியாறுகளைப் போல நீண்ட பெரிய உத்தரீயங்கள் தன்னுடைய விஜயம் பொருந்தியமார்பில் அசைந்துகொண்டிருக்கவும் விளங்கினுன்.

மேலும் - தேவலோகத்தி லிருக்கின்ற, ஊர்வசியும் - வாசனையுள்ள தாமரைமலர்போலப் பரிமளிக்கின்ற தேகத்தையும், அம்மலரிலுள்ள தேனைப் போலும் இன்பத்தையுமுடைய திலோத்தமையும் - சிவந்த விதழையும் கு

ழிலையொத்த சொல்லையுடைய மேனகையும் — அப்படிவில்லுயர்ந்த ஸ்திரீகளெல்லாம் தாங்கள் தெய்வமாதர்களாயிருந்தாலும், சீதாபிராட்டியாருக்கு ஆயிரத்திலொருகூறும் ஒப்பாகாமற் சூரியனைக்கண்ட சந்திரனைப்போல விளங்குகின்றமையால் அவளுக்கு அழகைவிளைவித்துக்கொண்டு பக்கத்தில்நின்று நிருத்தம் பண்ணவும், வீழிப்பழத்திற்கொப்பான இதழையும்மூங்கில்போன்ற மிருதுவான தோள்களையுமுடைய கந்தருவஸ்திரீகளில் நன்றாய்ப் பாடத்தக்கவர்கள் பக்கத்திற்குப்பதினாறாயிரம் பேர்களாக இரண்டுபக்கத்திலும் இரண்டுவரிசையாய்ச் சூழ்ந்து பாடிக்கொண்டு நிற்கவும் விளங்கினான்.

பின்னும் — வாயாகிய உறையினிடத்திற்பதிந்திருக்கின்ற வளர்ந்த கூர்மையான மிருத்யுபிரகாசமுள்ள வாளாயுதத்திற்கொப்பாகிய பற்கள் இளஞ்சந்திரிகையை வீசிக்கொண்டிருக்கவும், குண்டலங்கள்படிந்து அழுந்திக்கொண்டிருக்கின்ற தோள்களாகிய ஒவ்வொரு மலையினிடத்திலும் அப்பதிகின்ற மேகங்கள் மழைத்தாரைகள் சொரிந்தாற்போல முத்துமாலைகள் பிரகாசிக்கவும், அருமையான உயிரானது தேயும்படி மனமானது சிதைந்து வெந்துகருதாநிற்கவும், பலசாஸ்திரங்களைக் கேள்விப்பட்டிருக்கின்ற செவிகளாகியவாய்கள் தேவராத சாங்கங்களையுடைய வீணையினிசையின்றேறு நாரதமகாமுனிவர் பாடுகின்ற சாமவேதகீதாமிர்தத்தை வாரிக் குடிக்கவும், கொடுமையான கையினிடத்தில் வேலாயுதத்தையுடையவர்களும் வாளாயுதத்தையுடையவர்களும் வில்லையுடையவர்களுமாய்ச் சங்காரமூர்த்திக்கும் தோல்வியடையாத பலசாலிகளான நூறுகோடி ராக்ஷச மெய்காப்பாளர்கள் சூழ்ந்து காத்துக்கொண்டிருக்கவும் விளங்கினான்.

அன்றியும் — உலகங்களையெல்லாம் போர்த்து உள்ளங்கையில் அடக்கத்தக்க சக்தியையுடையவர்களும் லங்காபட்டணம் தோன்றினகாலத்திலிருந்திருக்கிறவர்களுமாகி யாதொருகுற்றமுமில்லாத கணித்துச்சொல்லக்கூடாதே கணக்கிட்டுச்சொல்லப்பட்ட நூறுகோடி யக்ஷர்கள் பக்கத்தில் வில்லேந்தி நின்று சூழ்ந்து ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கவும், பூமியிற் சஞ்சரிக்கின்றவர்களும் ஆகாசத்திற் பறவிநிருக்கின்றவர்களுமாகிய அநேகர் ஜலபூர்ணமான மேகத்தினுடைய சப்தத்தையொத்த பேரிகைகளையும் — முழங்குகின்ற வாத்தியங்களையும் — ஆருளியென்கிற சிறுபறையையும் — சத்தோதஷவாத்தியங்களையும் — சமுகத்துவாரத்தில் முழக்கிக்கொண்டிருக்கவும் — விஷத்தையும் மேகத்தையுமொத்த விழிகளையுடைய நாகஸ்திரீகளும், பூங்கொடிக்குச் சமானமாகிய இடையையுடைய பூலோகஸ்திரீகளும், இனியமதுரம் பொருந்திய ஆவையைத்தருகின்ற சொற்களையுடைய சுவர்க்கலோகத்து ரம்பாஸ்திரீகளுடன் சேர்ந்து மதுரமான கானங்களைப் பஞ்சமசுதியில் பாடிக்கொண்டிருக்கவும் விளங்கினான்.

மேலும் — மேருமந்தரம்படியாகக் கர்ச்சிக்கச்சொல்லையுடைய கட்டியக்காரர்கள் விஷத்தைக் கக்கிக்கொண்டு அக்கினி ஜொலிக்கின்ற கண்களையு



டையவர்களாயும் — பலநிறமுள்ள மெய்ச்சட்டையையணிந்து கையிற் பிரம்பைப் பிடித்துக்கொண்டிருக்கின்றவர்களாயும் — கேசயப் பக்ஷியையொத்த வேகத்தையுடையோர் நடந்து நான்குதிக்குகளிலும் கட்டியங்கூறிக்கொண்டு திரியவும், அஷ்டகுலாசலங்களையும் சமானஞ்சொல்லுகிறதற்குக் கூடாத விசாலமான தோள்களினிடத்துப் பூசியிருக்கின்ற கலவைச் சாந்தினுடைய பரிமளமானது இராவணன் வருகிறானென்று ஒற்றர்கள் சொல்லுதல்போல அஷ்டதிக்குகளிடத்தும்போய்க் கமழ்ந்துகொண்டிருக்கவும், கையிற்பிரம்பையுடையவர்களும் — நீட்பாறக்கும்படியாக விழிக்கின்ற கண்களையுடையவர்களும் — க்ஷணத்துக்கு க்ஷணம் ஒவ்வொரு வகையான கோபத்தையுடையவர்களும் — நகரக்காவலை விரும்புகிறவர்களுமாகிய பதினாயிரம் ராக்ஷசவீரர்கள் சூழ்ந்துகொண்டு நிற்கவும் விளங்கினான்.

## இராவணன் ஸ்ரீராமபிரானைக் காணல்.

கவி.

தோரணத்தின்மிசை வாயின்மிசைச்சுல்
நீரணைத்தருமி லாமெனநின்றான்
ஆரணத்தையரி யைம்மறைதேடிய
காரணத்தைநிமிர் கண்கொடுகண்டான்.

இப்படியாக அழகிய தோரணவாசலின்மீது கருக்கொண்ட கறுத்தமேகம்போல நின்ற இராவணன் ஸ்வதப்பிரமாண வேதப்பிரதிபாத்திய வஸ்துவாயும், அபௌருஷேயமாகிய வேதபுருஷனுந்தேடிக் காணவரிதான முதற்காரணப்பொருளுமாகிய சாக்ஷாத் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைத் தன்னுடைய இருபதுகண்களாலும் நன்றாயுற்றுப்பார்த்த மாத்திரத்தில், பத்துவாய்களுமடித்தன. இருபதுகண்களிலும் குபுகுபென்று நெருப்புப்பொறி பறந்தன. அப்படிப்பட்ட சமயத்தில் அஷ்டதிக்குகளிலு மிடியிடித்து, அவனுடைய நெஞ்சிற் கோபாக்கினியானது திகுதிகென்று பற்றியெரிந்து, இடதுகண்களும் இடதுதோள்களும் துடித்தன. இப்படிப்பட்ட துர்ச்சகுனங்கள் காணும்படியாக இக்ஷ்வாகு வம்சப்பிரபுவான ஸ்ரீராமமூர்த்தியைக்கண்ட இராவணன் ஆகாசமார்க்கமாய்ச் செல்லுகின்ற செவந்த கிரணங்களையுடைய சூரியன் தனதுராசியில்வரக்கண்டெதிர்த்த கொடியராகுவைப்போல அதிகமாகக்கோபித்தான்.

## இராவணன் சாரனென்னு மொற்றனால் ஸ்ரீராமமூர்த்தியின் படைவீரரைக் காணல்.

கவி.

ஏனையோனிவ னிராமனெனத்தகும்
மேனியேயுரைசெய் கின்றதவன்றிச்
சேனைவீரர்படை யைத்தெரியென்று
தானவிறைவெதிர் சாரன் விளம்பும்.

இவ்வண்ணம்கோபித்து இராவணன் சாரனென்கிற ஒற்றனைப்பார்த்து, ஸ்ரீராமனுடைய வடிவமே அவனையெனக்குத் தெரிவிக்கின்றது. மற்றச்சே

ளுவீர்களோ இன்னின்னாரெனத் தெரியக்காட்டென்று வினவ, சாரன் காட்டத்தொடங்கினன். ஐயா இராவணேஸ்வரா! அதோ இளஞ்சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டு ஸ்ரீராமபிரானுக்குப் பக்கத்திலிருக்கின்றவன்தான் சூர்ப்பநகையைத் திரிலோக பயங்கரராகிய உம்முடைய தங்கையென்று கேட்ட மாத்திரத்திற் பெருங்கோபங்கொண்டு, தனது அழகிய கையினிடத்தில் வாளையுருவி, அம்மங்கையர்க்கரசியானவள் ஓவென்றலறி புலம்பும்படி ஸ்தனத்தையும், மூக்கையும், செவியையும் சேர்த்துப்பிடித்து அறுத்தவனாகிய இலட்சுமணன்.

இவன் தருமசிந்தையுடையவனேயல்லது அதருமயோக்க முடையவனல்லாதவனும், கருங்கடலைச் சக்கரவாளகிரியானது சூழ்ந்தாகாத்துக்கொண்டிருக்கிறதுபோல ஸ்ரீராமபிரானுக்கு யாதொருவருத்தமும் நேராதபடிச் சகலபணிவிடைகளையுஞ்செய்து, சுவர்க்கத்தை யடைந்தபேர்களும் துறக்கக் கூடாத நித்திரைக்கு அதிதேவதையாகிய க்ஷுதாமிதேவதையை ஓடும்படியாகக் கோபித்துத் துரத்திவிட்டவன். அந்த ஸ்ரீராமன் கைதொட்டுக்கொண்டிருக்கும்படியாகக் கைலாகுகொடுத்துக்கொண்டு நிற்கிறவன் தன் தமையனை வாலியோடு இவ்வண்டங்களெல்லா நடுங்கும்படியாகக் கொடிய யுத்தஞ்செய்து தன் கீர்த்தியாற் பிரகாசித்துக்கொண்டிருப்பவனும், சூரியகுமாரனுமான சுக்கிரீவனென்கிற நாமதேயமுடையவன். அவன்பக்கத்தில் நிற்கிறவன் அசுரர்களுக்குத் தோல்வியடைந்தவர்களான தேவர்களுடைய வாசஸ்தலமாகிய தேவலோகத்திற் கமிர்தமுண்டாகும்படியாக மந்தரகிரியிலே வாசுகியென்கிற சர்ப்பராஜனைக் கயிறாகப்பூட்டி, தனதுபெரிய தோள்களினாலே க்ஷீரசாகரத்தை மத்தித்த வாலியினுடைய குமாரனாகிய அங்கதனென்கிற பெயரினையுடையவன்.

அவனைச்சேர நிற்கின்றவன் சூரியனுடைய ரதத்திற்கு முன்பாகப்போய் அவனிடத்தில் நவவியாகரணங்களைக் கற்றுணர்ந்தவனும், இந்தப்பூலோகத்தைத் தனது ஹஸ்தத்தினால் பெயர்த்தெடுக்க ஆதிபுருஷனாக மூர்த்திக்குச் சமானமாகிய பலத்தையுடையவனும், இந்தச்சமுத்திரத்தைத் தாண்டி முன்னம் இந்தலங்கைக்கு வந்தவனுமாகிய அனுமானென்கிற பெயரினையுடையவன். இவனுடைய காரியங்களையெல்லாம் முன்னமே நீர்பார்த்திருக்கின்றீரல்லவா? இதோ நிற்கின்றவன் அக்கினி குமாரனாகிய நீலனென்கிற பெயரினையுடையவன். இவனைத் தெரிந்தவர்கள் பலம்பொருந்திய சூலாயுதமும் பாசமுமில்லாமல் வந்திருக்கின்ற விதத்திற்குச் சமானமாகக் கருதத்தக்க எமனென்று சொல்லுவார்கள். அதோ மலைக்குச்சமானமாக பெரியவாகாரமுள்ளவன்தான் நளனென்னும் பெயரினையுடையவன். அவன் வருணன் வழிகொடுக்கவில்லையென்று ஸ்ரீராமமூர்த்தி அதிககோபங்கொண்டு அக்கினியாஸ்திரத்தினாற் கடலைச் சுட்டபோது, அச்சூடாறுதற்கு முன்னே விசாலமாகிய சமுத்திரத்திலே சேதுவைக்கட்டி வழியுண்டாக்கினவன்.



அவன்பக்கத்தே நிற்கின்றவன் மூன்றுகாலத்தையும் தன்னுடைய புத்தியினாலே முறைப்படி யறியத்தக்கவனும், தேவர்களெல்லாரும் சமுத்திரத்தில் விஷமுண்டாகும்படியாகக் கடைந்த காலத்தினு மிருந்த பெரியோனுமான முதிர்ப்புடைக்குத்தலைவன். அவன்பெயர் ஜாம்புவனென்பார்கள். அவன் இவ்வளவு வயதாகியும் இன்றைக்குங்கூட இந்தச்சப்தலோகங்களையும் அம்மனைக்காய்போல வெடுத்தெறியத்தக்க அதிக பலாஷ்டிகனாயிருக்கின்றான். அந்தச்சாம்புவனுக் கிருபாரிசத்திலும் ஒருகரியமலையி னிருபக்கத்தில் இரண்டு பெருமலை நிற்கின்றதுபோல நிற்கிறவர்கள் இராமலட்சுமணர்களுக்குச் சமானமானவர்களும், தெய்வமருத்துவர்களுடைய புத்திரர்களுமாகிய மிகுந்த பலசாலிகளாகும். அதோ நிற்கின்றானே அவன்தான் குமுதனென்று பெயருள்ளவன். அவனைச்சார்ந்து இருக்கின்றவனே குமுதாக்ஷனென்பவன். இந்தப்பக்கத்திலிருக்கின்றவன் பெயரென்னவெனில், கவயன். அவனுக்குச் சமீபத்திலிருக்கின்றானே அவன்தான் கவயாக்ஷன்.

அதோ இருக்கின்றானே அவன்தான் சிவனென்னும் - பிரமாவென்னும் - நாமஞ்சேர்க்கும்படி முன்னமிலங்கைக்குவந்த தூதனாகிய அனுமானுடைய பிதாவென்னும் வாயுதேவனுக்கொப்பாக நினைக்கத்தக்க கேசரியென்கிற நாமதேயத்தையுடைய அதிகபலசாலியானவன். இதோ மிருகபதித் தொடைகூடிய தோள்களையுடைய நரசிங்கத்திற்குச் சமானமாக, விஷத்தையுடைய சர்ப்பராஜர்களும் சிவரத்தினங்களைக் கக்கும்படியாகக் கோபித்துக் கொண்டிருக்கின்றானே; அவன் அஷ்டகுலாசலங்களையும் வேரோடே பெயர்க்கத்தக்க வல்லமையையுடைய சரபனென்கிற நாமதேயத்தையுடையவன். அவன்பக்கத்தில் இருக்கிறவன் சதவலியென்கிற பெயரையுடைய வானரவீரன். இதோ மூன்று கண்ணில்லாதவனாயிருந்தபோதிலும் திரிபுரங்களைச் சுட்டெரித்த ருத்திரமூர்த்திக்குச் சமானமாக நிற்கின்றவன் பனசனென்கிற வானரவீரன். அதோ நிற்கின்றானே யவன் இந்தச்சண்டைக்கெல்லாம் நானென்று எதிர்த்து நிற்கின்றவனாகிய இடபனென்கிற நாமதேயமுள்ளவன். அவனுக்கெதிராகத் தோன்றுகின்றவன் மகாயுத்தியானாகிய சுஷேணனென்கின்ற பெயரையுடையவன்.

மூன்றுபுதுகுகளுள்ள மலைகளையெல்லாம் வேரோடேபிடுங்கிப் பூமியின்கடினத்தன்மையை நீக்கி மிருதுத்தன்மையையுண்டாக்கினவனும், வடவாமுகாக்கினியையும் குளிரும்படிச்செய்த கோபத்தையுடையவனும், சூரியகுமாரனான சுக்கிரீவனுக்கு இடதுபக்கத்திலே நிற்கின்றவனுமான காலநாதன் துன்முகனென்கிற பெயரினையுடையவன். அவனுக்குப் பக்கத்தில் நிற்கின்றவன்தான் நிக்கவென்னும்படியான பலமுடைய சங்கனென்று சொல்லப்பட்டவன். செம்மையா பிரதாபலங்கேஸ்வரா! இந்தவானரசேனியர்களுக்கு எண்ணுமில்லை; எல்லையுமில்லை: ஆகாயநக்ஷத்திரங்களை இத்தனையென்று கணக்கிட்டாலும், சமுத்திரத்திலுள்ள மீன்களை எண்ணிப்பார்க்கக் கூடுமானாலும்,

கடல்மணலையெல்லாம் கணித்துத் தொகைசெய்தபோதிலும், இந்தவான ரர்களைக் கணக்கிடுவதரிது. ஆதலால் — பின்னுமுள்ளவர்களுடைய பெருக் கை நீ போருமையாவென்று காண்பித்தான்.

சாரன்காட்டிய வானரவீரர்களை இராவணன்
எனக்கொரு லக்ஷியமன்றெனல்.

கலி.

சினங்கொடின்றிற லரக்கனுந் திருகைசெய்தான்
புனக்கொள்புன்றலைக் குரக்கினைப் புகழுதிபோலாம்
வனக்கரும்படர் வரைதொறுந் திரிதருமானின்
இனக்களும்பல வென்செயு மரியினையென்றான்.

இப்படிச் சாரன்சொன்னவற்றையெல்லாம் பிருந்தபலவானாகிய இராவ ணன்கேட்டுக் கோபித்துப் புன்சிரிப்புச்சிரித்து, ஓ சாரா! காட்டிலேவசித்து க்கொண்டிருக்கின்ற அற்பமாகிய குரங்கைப் புகழுகிறாயென்ன? வனங்களி லும் பலமலைகளிலும் திரிந்துகொண்டிருக்கின்ற அநேக மான்குலங்கள் கூ ட்டங்கூடி, ஒருசிங்கத்தை என்னசெய்யமாட்டும்? அதுபோல இந்தவானர ங்களெல்லாம் என்னை யென்னசெய்யக்கூடுமென்று சொன்னான்.

இராவணன் தானைகாண் படலம் - முற்றிற்று.

ஸ்ரீ ராமஜெயம்.

பதினோராவது,

## மகுடபங்கப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமராக்ஞைப்படி இலங்கையி னுத்தரவாயிற் கோபுர த்தினின்று இராவணனையு மவன்படைவீரர்களையுங் காட்டத்தொடங் கிய விபீஷணர் முன்னம் இராவண னின்னானென்று காட்டியமாத்தி ரத்தில் சுக்கிரீவமகாராஜன் சுவேலபர்வதத்தினின்றுங் கிளம்பி இரா வணனை நிரீக்ஷித்தபோ யட்டகாசம் செய்து நின்றதும், உடனேயவ்விரு வரும் ஒருவரையொருவர் திக்கரித்துச் சமர்விளைத்ததும், ஸ்ரீராமர் சு க்கிரீவமகாராஜன்செயலுக்காகுலித்ததும், அக்கால் சுக்கிரீவமகாராஜ னிராவணனுடையபத்துமகுடங்களையும்பங்கப்படுத்தி அவற்றின் ஜீவர த்தினங்களைக்கொணர்ந்து ஸ்ரீராமருடைய திருவடியிற் காணிக்கைசம ர்ப்பித்ததும், அக்காலவர் செயலுக்கிரங்கிய சுவாமியைச் சுக்கிரீவமகா ராஜன் தன்குறைகூறிக் கெஞ்சிக்க விபீஷணருங் காவலவாயிந்து புகழ் ந்ததும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் இலங்கைக் கோபுரத்தின்மீது நிற்கின்றவர்களின்னாரின்னா ரென்று காட்டும்படி விபீஷணரைக்கேட்டருள அவர் கூறுதல்.

கலி.

ஏன்றுங்கேழலையி லிராவணர்த்தொகையெலா மிராமன்
கன்னிமாமதி ளகத்தின்ற கவ்வயிகாண்பான்

சுக்கிரீவன் உத்தரகோபுரத்தில்நின்று இராவணன்மேல்பாய்ந்து அவன்
48. மகுடத்துள்ள ஜீவரத்தினங்களைப்பறித்துவந்து ஸ்ரீராமரைசரணடைதல்.



இராவணன் மந்திராலோசனைக்கூட்டி அணிவகுக்கவும் இராமரு மணிவகுத்து இலங்கையை நாற்புறத்தும் வளைத்துக்கொள்ளுதல்.



மகுடபங்கப்படலம்.

முன்னிவானிறு சூடிநின்றார்களை முறையால்
இன்னநாமத்த ரினையரென்றியம்பு தியென்றான்.

அந்தச்சமயத்தில் வீரியமிக்க வட்சோத்பவராகிய ஸ்ரீராம மூர்த்தியானவர் இராவணனுக்குத் தம்பியாகிய விபீஷணாழ்வானைப்பார்த்து, தம்பி விபீஷணா! அதோ லங்கைக்கோட்டைக் கோபுரத்தின்மேல்நின்று, நம்முடைய சைனியங்களைக் காணும்படியாக நினைவுகொண்டு, ஆகாசமுமறையும்படியாகக் கூடியிருக்கின்றவர்களைக் கிரமமாய் இன்னபெயரினையுடையவ ரின்னாரென்று சொல்லக்கடவாயென்று நியமிக்க, விபீஷணாழ்வான் சொல்லுகின்றார். ஓ சக்கரவர்த்தித் திருக்குமாராகிய சுவாமி! அரம்பை — மேனகை — ஊர்வசி - திலோத்தமை முதலான ஸ்ரீகளுக்குநடுவே கோபுரச் சிகரத்தின் மீதேறி நிற்கின்றானே: அவன்தான் தன்பந்துக்களாகிய நாற்றுக்களையெல்லா நரகமாகிய கழனியில் நடும்படியாக அந்நிலத்தைச் சேறுசெய்து வைத்திருக்கின்ற அற்பகிருத்தியத்தையுடையவனான இராவணனென்கிற பெயரினையுடையவனென்று சொல்லினான்.

## சுக்கிரீவமகாராஜன் சுவேலாபர்வதத்தினின்றுங் கிளம்பி இலங்கையி னுத்தர கோபுரத்திற்பாய்ந்து இராவணன் முன் அட்டகாசஞ் செய்துநிற்றல்.

கவி.

கருதிமற்றென்றுங் கழறுதன்முனம்விழிக் கனல்சீ
பொருதபுக்கனன் முந்துறச்சூரியன் புதல்வன்
கருதியன்னைமுன் சிவந்தகற்கனியென்று சொலப்
பருதிமேற்பண்டு பாய்ந்தவனுமெனப் பாய்ந்தான்.

என்று சொல்லிய விபீஷணாழ்வான் மற்றொருவனை நினைத்துச் சொல்லுகிறதற்கு முன்பாக சூரியகுமாரராகிய சுக்கிரீவமகாராஜன் கண்களில் நெருப்புப்பொறி பறக்கும்படியானவராகி அவ்விராவணன்மேற் சண்டைக்குப்பாய்ந்தார். அச்சுக்கிரீவமகாராஜன் பாய்ந்தபாய்ச்சல் எத்தன்மைபோலுமெனில்? அஞ்சனாதேவியானவள் தன்குமாரனுக்குச் சூரியனைக் காட்டிச் சிவந்த கனியென்று சொன்னமாத்திரத்தில், அந்தச் சூரியன்மேற் பாய்ந்த அஞ்சனேயனைப்போலக் குதித்தென்று பாய்ந்தார். அன்றியும் — தன்னுடைய பிதாவாகிய சூரியபகவான் ஆயிரங் கிரணங்களையும் பரப்பிக்கொண்டு உதயகிரியினிடத்திலிருந்து அந்தலங்கைக்கோபுரமாகிய மலையானது சிதறுண்டுபோகும்படியாகப் பாய்ந்ததுபோலுமென்று கண்டோர் சொல்லும்படியாக, தேவாசுரர்கள் திரண்டிருந்ததுபோலுள்ள சுவேதகிரியி னுச்சியைவிட்டு இராவணனேறிநின்ற உத்தரகோபுரமானது கிலைத்து போகும்படியாகவும் பாய்ந்தார். இப்படி பள்ளத்தைத் தேடிப்போகின்ற ஜலத்தைப்போல அதிவேகமாகச்சென்று மேருமலையினது ஒரு சிகரமாகிய லங்கையானது முழுமையு நடுங்கி நொறுங்குமென்னும்படி. அவ்வுத்தரகோபுரத்தின்மேற்பாய்ந்த சுக்கிரீவமகாராஜனானவர், சமுத்திரத்திற்குச் சமானமான விசாலவக்ஷத்தையு

டைய சீதாபிராட்டியார் தம்மை ராவணனபகாரஞ்செய்ய தாம் துக்கித்தழுத காலத்தில் அந்த ராவணன்மீது தனது புத்திபூர்வமாகப் பாய்ந்து சென்ற ஜடாயுமகாராஜனுக்குச் சமானமானார்.

இப்படி சுக்கிரீவமகாராஜன் பாய்ந்தபோது ஜனனவிடாயப்பட்டோடிவந்தடைந்த மெய்ஞ்ஞானியர்கள் கண்டு விடாய்தணியும்படியான நீலமேகஸ்யாமளரூபரும், கிருபாசமுத்திர மானவருமாகிய ஸ்ரீராமபிரானைப் பார்க்கும்படியாக இமையாக்கண்களைப் பெற்றுப் பேறடைந்தோமெனச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்த அரம்பைமுதலான ஸ்திரீகள், தாம்வசித்துக்கொண்டிருக்கிற மலையினிடத்தில் இடிவிழுந்த மாத்திரத்தில் நடுங்கிப் பறந்துபோகின்ற மயிற்கூட்டங்களுக் கொப்பாக வோடிப்போனார்கள். உதயகாலத்திருளை நாசம்பண்ணுகின்ற சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜன் மிகுந்த பலமுள்ளவனான இராவணனுக் கெதிராகப்போய், நீலமலைக்கு முன்னின்ற கயிலைமலைபோலவும், க்ஷீரசாகரத்தைக் கடைந்தபோது அதிற்பிறந்துவந்த ஆலகாலவிஷத்திற்கு முன்பாகநின்ற உருத்திரமூர்த்திக்குச் சமானமாகவும், நின்றார்.

## இராவணனும் சுக்கிரீவமகாராஜனும் இகல் விளைத்தல்.

கவி.

இத்திசையின்வந்தபொரு ளென்னெனவியம்பத்
தத்தியெதிர்சென்றுதிசை வென்றுயர்தடந்தோள்
பத்தினொடிபத்துடைய வன்னுடல்பதைப்பக்
குத்தினனுரத்தினிமிர் கைத்தலங்குளிப்ப.

திருகிடசினத்தொடு செறுத்தெதிர்விழித்தான்
ஒருபதுதிசைக்கரமு மொலித்தவொலியொப்பத்
தருவனமெனப்புடை தழைத்துயர்தடக்கை
இருபதுமெடுத்துரு மிடித்தெனவடித்தான்.

அப்படி நின்ற சுக்கிரீவமகாராஜனை ராவணன்பார்த்து, இவ்விடத்திற்கு நீவந்தகாரியமென்னவென்று கேட்டான். அதற்கு சுக்கிரீவமகாராஜன் பதிலுத்தரமொன்றுஞ் சொல்லாமல் எதிரேபோய், அஷ்டதிக்குகளையும் வென்றுயர்ந்த அவனது பெரிய தோள்களிருபதும் உடையவும்—தேக நடுக்கங்கொள்ளவும்—அவனுடைய மார்பிற் பதியும்படியாகத் தம்முடைய இரண்டு கைகளாலுமோங்கிக் குத்தினார். அந்தக் குத்தைப் பட்டுக்கொண்டராவணனானவன் மிகுந்த கோபத்தோடும் ஆக்கிரமித்து, நெருப்பு பறக்கும்படியாகப் பார்த்து, பத்துத்திசைகளினிடத்தும் பிரதித்தொனி யுண்டாகும்படியாக மகாவிருட்சங்களைப்போற் பக்கத்தில் தழைத்துயர்ந்திருக்கின்ற இருபது பெரியகைகளாலு மோங்கி, இடிபிடித்தது போலச் சுக்கிரீவ மகாராஜனை யடித்தான்.



அப்படியடித்த ராவணன் தன்னுடைய விரல்கள்பட்டவிடத்தில் அவருடைய தேகத்திற் காயம்பட்டு ரத்தஞ்சிதறி யொழுகாநிற்கக் கர்ஜித்துக்கொண்டு, எதிரேபோய் ஒருவருடனே டொருவருடல் தாக்கும்படியாக இடித்து, கண்களில் நின்றும் அக்கினிபறக்கும்படியாகக் காலினாலெற்றியுதைத்துத் தள்ளினான். அப்படி யவன் உதைத்துத் தள்ளின மாத்திரத்திற் சுக்கிரீவமகாராஜன் குபீரென்று பாய்ந்து, கிரீடங்கள் தரித்திருந்த பத்து தலைகளினிடத்தும் பத்து முகங்களினிடத்தும் எட்டியுதைத்தார். அப்படி யுதைத்த சுக்கிரீவமகாராஜருடைய இரண்டுகால்களையும் ராவணன்பிடித்து, ஒருக்ஷணநேரத்திற்குள்ளாகத் தேகமானது பதைபதைத் தலையும்படியாகப் பலவித சேஷ்டைகளைச்செய்து, ஒரு மதத்தயானையைச் சிங்கமானது பிடித்து அலட்டினாற்போல அலட்டி, அந்தக் கோபுரதளத்தின்மீது போட்டுத் தன்காலைக்கொண்டு மிதித்துத் துகைத்தான்.

அப்படி மிதித்துத்துகைத்த இராவணனுடைய பெரிய தேகத்தைச் சுக்கிரீவமகாராஜன் வேகமாய்ப்பற்றி இழுத்து, தனது மிகுந்த பலத்தினாலே அந்தத் தளத்தின்மீது தள்ளியமுக்கி, இரண்டு கோரதந்தங்களையுடைய அவன் வாயிற்குத்தி, மலைக்குகையிலிருந்து சொரிகின்றதுபோன்றொழுகுகின்ற ரத்தத்தைக் கையினால்வாரிக் குடித்தார். அப்படிகுடித்த சுக்கிரீவமகாராஜனுடைய தேகமாகிய மேருமலையை அநேகபடங்களோடுங்கூடிய தலையினையுடைய சர்ப்பராஜனைப்போல இருண்டநிறத்தையுடைய இராவணன் பலகைகளினாலும் பிடித்து, மிகுந்த கோபத்துடனே திக்குகளினிடத்தும் - மலைகளினிடத்தும் - பூமியினிடத்துமாகக் கிறுகிறென்று சுழற்றினான். அப்படி சுழற்றின ராவணனுடைய மார்பில் ரத்தம் சிந்தும்படியாகச் சுக்கிரீவமகாராஜன் குத்தி, தனது பருத்துயர்ந்த பெரியகைகளைக்கொண்டு அவனிடுப்பைப்பிடித்துத்தூக்கி, அவன் மனதுதிடுக்கிட்டுப் பலமுந் தைரியமுங் கெடும்படியாகத் திரிபுரங்களை அன்று சுட்டெரித்த யுகாந்தகால ருத்திரனைப்போல அவனைக் கசக்கி இலங்கைக்கோட்டையைச் சூழ்ந்த அகழியில் விட்டெறிந்தார்.

அப்படியாகத்தன்னை அகழியில்விட்டெறிந்த சுக்கிரீவமகாராஜனை ராவணன்சீக்கிரமாகப்பாய்ந்து பிடித்து,தானுமவரை அந்த அகழியில் விட்டெறிந்தான். அவருமப்படியே மறுபடியும் குபீரென்றுபாய்ந்து இவனை யெதிர்த்து நிற்க, இருவரும் ஒருவரையொருவர் விடாமல் இறுகக்கட்டிப் பிடித்துக்கொண்டு, பாய்ந்து அவ்வகழியில் விழுந்தார்கள். அப்படி விழுந்தவர்களாகிய இராவணனும், சுக்கிரீவமகாராஜனும் கிறுகிறென்று சுழன்றார்கள். ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாகத் திரிந்தார்கள். ஒருவரையொருவர் காயப்படுத்தினார்கள். ஒருவருக்கொருவர் தோற்கவில்லை, ஒருவரையொருவர் விட்டு நீங்கவுமில்லை. ஒவ்வொருவரும் வீரபௌருஷவார்த்தைகளைப்பேசி, ஒருவர்மேலொருவர்பாய்ந்து, ஒருவருக்கொருவர் பின்னிடையாமல் எதிர்த்து நின்றார்கள். இப்படி யவ்விருவரும் மிகுந்த

கோபங்கொண்டு, தளர்ச்சியடையாமலும் வீரத்திற் சிறிது நஷ்டப்படாமலும், சமயுத்தஞ்செய்தார்கள்.

அப்போது சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜன் அந்த அகழியே சமுத்திரமாகவும், சமனது அழகு பொருந்தியவைகளே வாசுகியாகவும், இராவணனைப்பற்றி வலிக்கும்போது அந்தச் சுழியி லகப்பட்டுக்கொண்டுழலுகின்ற ஜலயந்திரம்போலச் சுழலுகின்ற இரக்கமற்ற ராக்ஷசனாகிய அவ்விராவணன் மந்தரகிரியாகவும், தாம் அந்தக்கிரியைப்பற்றிக் கடைந்த வாலிக்குச் சமானமாகவும் தோன்றினார். இந்தப்பிரகாரமாக ஒருவரையொருவ ரடித்துக் காயப்படுத்தினபோது அந்தக்காயங்களில் நின்றும் ஒழுகுகின்ற ரத்தமானது ஆலையிலுடைந்த கரும்பினின்றும் புறப்பட்டசாறானது பெருக்கெடுத்தோடுகிறதுபோலப் பெருகியோட, அவ்விருவரும் கழுகும் — பருந்தும் - பறக்கிறதுபோல ஆகாசமார்க்கமாக வெழும்பினபோது அவர்கள் கண்களில் நின்றும் புறப்பட்ட கோபாக்கினியாலே லோகமெல்லாந்தீயத் தலைப்பட்டன. விசாலமான ஆகாசத்தில் யுத்தஞ்செய்கின்ற சுக்கிரீவமகாராஜனானவர் கருமேகம்போன்ற நிறத்தையுடைய மேருமலையையொத்த கோபமுள்ளவனான இராவணனுடைய வெற்றிமாலையைத்தரித்த இருபது தோள்களினாலும் கட்டிப்பிடிக்கப்பட்டபோது, இராகுவினாலே பிடிக்கப்பட்ட பரிவேடத்தோடு கூடிய தன்பிதாவாகிய சூரியனுக்கொப்பாக விருந்தார்.

இந்தப்பிரகாரம் ஆகாசத்தில் யிருந்தயுத்தஞ் செய்துகொண் டிருக்கிறபோது சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜனுடையமேனியைத் தனது திரண்ட தோள்களினாலே மறைத்த மிகுந்தபலமுள்ள இராவணனானவன், உஷ்ணமாகிய கிரணங்களையுடைய சூரியபகவானைமறைத்த மேகத்திற்குச்சமானமாக இருந்தான். அப்போதச் சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜன் பாதச்சிலம்புகள் சப்திக்கும்படி நடந்துவந்து வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கின்ற ராக்ஷசஸ்திரீகளெல்லாரும் கீழேவிழுந்து கதறும்படியாகவும், பகைவர்களாகிய ராக்ஷசர் பெரியலங்காபட்டணம் முழுவதுமோடி இளைப்படையவும், உத்தரகோபுரமானது நலிகிறாய்விழுந்து பொடிப்பொடியா யிடியவும், ஸ்வர்க்கலோகத்திலிருந்து ஒரு சிங்கமானது தனித்துக் குதித்தாற்போல வந்துகுதித்தார். அப்படி குதித்தமாத்திரத்தில் மிகுந்தகோபத்தோடு அதிகபலாட்டியனான ராவணனானவன் பூலோகத்தைப் பொருந்தும்படியாகவந்து விழுந்த இடியுடனே சம்பந்தப்பட்ட மின்னலாகிய பற்களையுடைய ஒருபெரிய காளமேகமானது விழுந்தாற்போல, உன்னைக் கொன்றுநின்று விடுவேனென்று அவரைப் பின்றொடர்ந்துவந்து இரண்டுகைகளையுந் தாவிப்பிடித்தான்.

இப்படிப்பிடித்த ராவணனைச் சுக்கிரீவமகாராஜன் அதிக கோபாவேசத்தோடெதிர்த்து, அவனுடைய இருபதுகைகளையும் சேரப்பிடித்து, எமனும் பயப்படும்படியாகப் பூமியில்வாரியறைந்தார். அப்போது இராவணன் சுக்கிரீவமகாராஜனையொருயந்திரப்பிரதிமையைத்தூக்கியெறிவதுபோல் ஆகாசத்தில்



விட்டெறிந்தான். அவர் அதைத் தப்பித்துக்கொண்டு ஒருபந்து தாக்குண்டு எழும்பினதுபோலச் சடுதியிற் பாய்ந்து ராவணனை யெதிர்த்து நின்றார். இப்படியாக அவர்கள் லங்காபட்டணத்திலுள்ள விருக்ஷங்களெல்லாம் புற்பூநெசுங்குவதுபோல நசுங்கவும் — விசாலமான அந்தப்பூமிமுழுமையும் பாளம்பாளமாகக் கிழிந்துபோகவும் - கொடியகோபமுதிர்த்து ஒருவரையொருவர் ஓங்கிக்குத்தும்போது, பெரியசுவர்களெல்லாம் நெக்குவிடப் பிளந்துபோய் விட்டன. உயர்ந்தமலைகளெல்லாம் பொடிப்பொடியாய் நொறுங்கிவிட்டன. இலங்கைப்பட்டணத்தின்கோட்டை மதில்களெல்லாம் அஸ்திவாரத்தோடு இடிந்து விழுந்துவிட்டன.

இவ்விருவருநெருங்கி உயரப்பறக்கிற காற்றாடியைப்போற் கிறுகிறுவென்று சுழலும்போது அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்த ராக்ஷசர்கள் அந்தவேகத்தாலே அவர்களுடையதிருமேனியை வெண்மை கருமையென்று அறியமாட்டாமல், தங்கள்கைகளைப்பிணைத்துநின்று சுற்றியவிருவரும் ஒருவரைவிட்டொருவர் பிரிந்தார்களென்றும் ஒருவரோடொருவர் சேர்ந்தார்களென்றும் தெரிந்துகொள்ள மாட்டாதவர்களாகி, இராவணனைச் சுக்கிரீவமகாராஜன் வாரியெறியும்போது ராவணனெறிந்தான் சுக்கிரீவனெறிய வில்லையென்றும், சுக்கிரீவனை ராவணன் வாரியெறியும்போது சுக்கிரீவனெறிந்தான் ராவணனெறிய வில்லையென்றும், சுக்கிரீவன் ராவணனைத்தாக்கும்போது ராவணன் தாக்கினான் சுக்கிரீவன் தாக்கவில்லையென்றும், இராவணன் சுக்கிரீவனைத் தாக்கும்போது சுக்கிரீவன் தாக்கினான் ராவணன்தாக்க வில்லையென்றும், அவர்களுக் கெதிரேநின்றும் அவர்களின்னாரின்னாரென்று அறியாதவர்களாய்த் தாங்கள்கற்றறிந்த யுத்தவித்தைகளெல்லாவற்றையும்இந்தப்பிரமையினா லிராவணனுக் குதவிபுரியாது மறந்துவிட்டார்கள்.

### ஸ்ரீராமர் சுக்கிரீவன்செயலுக்காற்றாராய் வருந்திக் கிலேசித்தல்.

கவி.

இன்னதோர்தன்மையெய்து மளவையினெழிலிவண்ணன்
மன்னுயிரனையகாதற் றுணைவனைவரவுகாணான்
உன்னியகருமமெல்லா முன்னொடுமுடிந்ததென்னாத்
தன்னுணர்வழிந்துசிந்தை யலம்வந்துதளர்ந்துசாய்ந்தான்.

இந்தப்பிரகாரமாகச் சுக்கிரீவமகாராஜனு மிராவணனும் யுத்தஞ்செய்துகொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் தம்மைச் சரணடைந்தவர்களுக்கு வேண்டியவைகளை வேண்டியபடி அருளுகின்ற கருணைசலதியும் அதிமானுஷசேஷ்டிதருமாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் தம்முடைய உயிருக்குச் சமானமான மிகுந்தபக்ஷமுள்ள துணைவனென்னும் சுக்கிரீவமகாராஜனைக் காணாததினால் வியசனமுற்று, அப்பா சுக்கிரீவா! நானினைத்திருந்த காரியங்களெல்லாம் இன்றைக்குன்னோடு முடிந்துபோய்விட்டதே யென்று தமதுணர்வுமாறி, மனக்கலக்கமுற்றுச்சோர்ந்து சொல்லுகிறார். தம்பி சுக்கிரீவா! ஒருமைப்

பாடான என்னுயிர்த்தோழனே! என்னுயிர்க்குச் சமானமாகிய துணைவனே! உன்னையிழந்து நான் மாத்திரம் இருக்கின்றதினும் எனக்கு ஒரு காரியமுமாகாது: அதுவுமல்லாமல் தேவர்களெல்லாரையுந் துக்கசாகரத்தில் மூழ்கவைத்து இராக்ஷசர்களெல்லாரையும் இன்பசாகரத்தில் முழுகவைத்தாயோ? உன்னுடைய கோபமானது என்னைக் கெடுத்துவிட்டதே;

சீதையினுடைய ஆபரணங்களைக்காட்டி என்னுயிரைக்கொடுத்த ஓ உபகாரனே! இவ்விராக்ஷசர்கள் தெய்வத்தன்மையுள்ள அஸ்திரசஸ்திரங்களையுடைய மகாபலவந்தர்கள்; மேலும் மாயாவித்தைகளிலே மிகவும் கைதேர்ந்தபாவிகள். அப்படிப்பட்ட துஷ்டர்களுடைய கையில் நீ அகப்பட்டுக்கொண்டாயே ஆகையால் அவர்களுடைய காவலைக்கடந்து நீ எவ்விதமாய்வருவாய்? நீவராமற்போவாயேயானால் இந்தப்பதினாலுலோகங்களையும் நான் பெற்றபோதும்; அந்தவாழ்வோடு வாழ்ந்திருப்பேனோ? உன்னைவிட்டுத் தனியனாய் உயிர்வைத்துக்கொண்டிருப்பேனோ? ஐயோ! நானொன்றாக நினைக்க, கர்மம் தானொன்றாய் முடிந்துவிட்டதே: ஆகையினாலே இனிநான் வாழமாட்டேன். நீ இல்லையென்கிற வார்த்தையைக் காதினாலேகேட்கவுஞ் சகிக்கக்கூடவில்லை. உன்னை அந்தத் துர்க்குணனான ராவணன் கொன்றானேயானால், எப்போதும் நிலைநிற்கும்படியான பழியுண்டாகத்தக்கதாய் பெரியயுத்தகளத்திலே என்னைக்கொன்றவன் நீயேயாகிறாயல்லவோ?

அப்பா என்கண்மணியான சுக்கிரீவா! நீ இறந்துவிட்டாயென்கிற சொல்லைக்கேட்டால் உடனே நானுயிர்துறந்துபோகாமல் ராக்ஷசர்களுடைய பலவானசேனைகளை இந்த உலகத்திலில்லாமல் நீக்கிப் பிறகென்னுயிரை மாய்த்துவிடுவேனானபோதிலும், இந்த ஸ்ரீராமன் தனக்கு நன்மைசெய்தமித்திரர்களான அநுமான் – சாம்புவன் – நளன் இவர்முதலாகிய பேர்களுடனே தன்னுயிருக்குச்சமானமானவனாக சேர்ந்த சுக்கிரீவனை மறந்துவிட்டானே; இவனொரு சத்தியவீரனோ? என்று உலகத்தார் பழிப்பார்களே: ஆகையினால் அந்தக்காரியமும் செய்யமாட்டேன். நீ வெகுகுரூரமானகாரியஞ் செய்துவிட்டாய். பட்சமும் தயையுமில்லாதவெனக்கு எப்போதுந்நிலைநிற்கும்படியான உபகாரஞ்செய்த உன்னை நான் ஒழித்துவிட்டு வாழலாமோ? இந்த எழுபதுவெள்ள வானரசைனியங்களில் ஒருவராவது குறையாதபடி இருந்த வைபவத்தையுடைய அயோத்தியாபுரியைப்போய்ச் சேர்ந்தாலல்லவோ துக்கமற்றுச் சந்தோஷமாயிருப்பேன்? என்று ஸ்ரீராமர் துக்கப்பட்டுப் புலம்பிக்கொண்டிருந்தார்.

## சுக்கிரீவமகாராஜன் ராவணனுடைய மகுடரத்தினங்களைக் கொணர்ந்து ஸ்ரீராமருக்குப் பாதகாணிக்கை வைத்தல்.

கவி.

என்றவனிரக்குங்காலைத் திருவருமொருவர்தம்மில்
வென்றியர்தோற்றிலாரவ் வெஞ்சமர்விளங்குங்கேலை



வன்றிறலரக்கன்மௌலித் தனிமணிவலியால்வாங்கிப்
பொன்றினனிவனென்றெண்ண, வவன்வெட்கவிவனும்போந்தான்.

தொழுமணிமுடிகடோறுங் கொண்டனகுழுவின்கூட்டம்
அழுதயருறுவின்றன்ற னடித்தலமதனிற்சூட்டித்
தொழுதயனுணர்கின்றான் நாயகனிருவரோடும்
எழுபதுவெள்ளயாக்கைக் கோருயிரெய்திற்றன்றே.

அப்படியிருக்கையில் சுக்கிரீவமகாராஜனும், இராவணனும் ஒருவரையொருவர் வெற்றிகொள்ளாமலும் – ஒருவருக்கொருவர் தோல்வியடையாமலும்–மகாவேகத்தோடுசெய்யும் கொடுமையான யுத்தத்தில் மகாபலவந்தனான ராவணனுடைய பத்துகிரீடங்களிலுள்ள ஒப்பற்ற நவரத்தினங்களையும் சுக்கிரீவமகாராஜன் தன்னுடைய பலத்தினாலேபற்றிப் பறித்துக்கொண்டு, அவன்செத்தவனைப்போல வெட்கப்பட்டுக்கொண்டு நிற்கக் குதிகொண்டு பாய்ந்து, வானரசேனைக்கு மத்தியில்வந்து, கூட்டமாகிய ரத்தினங்களிழைத்த ஒவ்வொரு கிரீடங்களிலுமிருந்து பறித்த நாயகஜீவரத்தினங்களைத் தன்னைக்காணாது சுக்கிரீவா சுக்கிரீவா என்று அழுது துக்கித்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீரகுநந்தனருடைய திருவடித்தாமரைகளிற் பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்து நமஸ்காரஞ்செய்து, சகலருக்கும் ஜீவன்வந்ததுபோல எதிரே நிற்கின்றார்.

அப்படிநின்ற சுக்கிரீவனுடைய சரீரத்திற்பட்ட புண்களிலொழுகி வருகின்ற இரத்தமும் நீசச்சேரியில் வசிக்கும் ராக்ஷசனைத் தீண்டிவந்த ஆசுசமுந்தீர ஸ்ரீராமர் அந்தச் சுக்கிரீவனாகிய தமதன்பனைத் தமது மார்பிலே தழுவிக்கொண்டு கருணைசுரந்து, மண்டிநிறக் கொழுநவதுபோலத் தாரைதாரையாய் பொழுகாநின்ற தமது செந்தாமரைமலர்போன்ற கண்ணீராலே ஸ்நானம்பண்ணுவித்து, அப்பா சுக்கிரீவா! என்மனைவியவமானதுமிளக்குவதும், அக்குமிக்கு பாளிதுபோறவர், சரீரம் ஸ்தம்பித்துத் தெளிவில்லாமல் விதனத்துப்போகவும், எல்லாநாள்களையுங் கூறுணர்ந்து உன்மனதிலிருந்து என்னைப் பிரிந்துபோனாயே: பெருமை – வண்மை – ஆண்மை – இவைகள் பொறுமையினாலல்லவோ உண்டாகின்றன? செய்யத்தகாததையும் எனக்குச் சம்பவிக்கப்போகின்ற பழியையுமறிந்து, இகபரமிரண்டையுங் கெடுக்கும்படியாய் நீ என்னை நினைத்து என்னசெய்தாயப்பா!

ஆ! தம்பி! நீ போனவிடத்தில் அந்தத் தலைகெட்டபாவியாகிய ராவணன் உன்னைக்கொன்றானேயானால், பிற்பாடு நான் பிராணனை வைத்துக்கொண்டிருந்து இந்த ராக்ஷசர்களை வேரோடேயழித்து வெற்றிகொண்டாலும் தோற்றவனேயல்லவா ஜயித்தவனாவேனோ? இப்போது நீ விரைவாய்வராமற் சற்றுத் தாமதித்திருப்பாயேயானால், எனக்குச் சீதையினாலேயிந்தப் பூமியினாலேயும் காரியமென்ன இருக்கின்றது? நீ இறந்துபோனாயென்று உன்னைத்தொடர்ந்து நான்வருவேன். என்னை இந்த மூன்றுலோகங்களுந் தொடர்ந்துவரும், அப்படியாகும்படியாய் விளையாட்டிலேயே நான் உன்னைத்தவறும்

யாகச்செய்துவிட்டாய்? என்றிப்படியாக ஸ்ரீராமபிரான் சொல்லச் சுக்கிரீவமகாராஜன்சொல்லுகிறார். சுவாமி! தேவரீருடைய காரியத்திற்காகக் காட்டிலே கழுகரசரான ஜடாயுசெய்ததுபோலவும், நாட்டில் ஸ்ரீகுகப்பெருமான்செய்த நன்மைபோலவும் செய்யாமற்போனேனே: அவைகளைக் காதினாற்கேட்டவனுமல்லாதவனாய்விட்டேன். நான் உண்மையாய்க் கேட்டவனேயானால் செகன்மாதாவை மீட்டுக்கொண்டு அரக்கனுடைய பத்துத்தலைகளையுங் கொய்துகொண்டல்லவோ வருவேன்.

ஐயோ! பெரியபகையுண்டிருக்கவும் என்குரங்குப் புத்திக்குத் தக்கபடியோடித் தீராதிருக்கும்பகையைக் களையாமல்வந்தேன். என்பகையைத்தீர்த்து என்பிராணனையும் ரட்சித்துச் சகலசாம்ராச்சியமுங் கொடுத்த உமக்கு, உம்முடையபகையை உமக்கேகொடுத்தேன். இன்னம் பிராணனையும் வைத்துக்கொண்டு திரிகிறேன். திக்கஜத்தினுடைய தந்தங்களைவிட, என்தோள் பலங்குறைந்துபோச்சே: அப்படி குறையவில்லையென்பேனாகில் அந்தத் துராத்துமாவினுடைய மார்பில் என்கைகள் புதையும்படி குத்திவிட்டல்லவோ வருவேன். உம்முடைய அப்புக்குமுன்னே நான்போயந்தப் பகையை யறுக்கிறேனென்று கோபித்த எனதுடைமுகாலும் யாதொரு தீங்குமில்லாமலே வந்துசேர்ந்தோம். எல்லாச்சாஸ்திரங்களையுங் கற்றறிந்த உம்முடைய தூதரானவர் முன்னம்போயிருந்தபோது, அனேகப்பலவான அஸ்திரங்களுடனே அநேககோடி ராட்சசர்கள்வந் தெதிர்த்தார்கள். அவர்களையெல்லாமவர் கொன்று தமதுவாலினுடைய பலத்தைக்காட்டி வந்திருக்க, நானந்தவூரிலே என்கால்பலத்தைக்காட்டி ஓடிப்போயோடிவந்துவிட்டேனே யல்லாமல் ஏதாகிலும் கைவலியினாலாகிய காரியமுண்டாயிற்றா? என்றுசொல்லித் தமது தலையை வளைத்துக்கொண்டு வானராதிபதியான சுக்கிரீவமகாராஜனின்றார்.

### விபீஷணாழ்வார் சுக்கிரீவமகாராஜனாற்றலை வியந்து புகழ்தல்.

கலி.

இன்னபலவும்பன்னி யிறைஞ்சியமுடியனாகி
மன்னவர்மன்னன்முன்பு வானரமன்னனிற்ப
அன்னவன்றன்னை நோக்கி யழகனைநோக்கியாழி
மின்னைவிளக்கும்பைம்புண் வீடணன்விளம்பலுற்றான்.

இப்படி விசனமுற்று வணங்கிநின்ற சுக்கிரீவமகாராஜனை இலங்காதிபத்தியமோதிரமு மிகுந்த ஆபரணமும் பூண்ட விபீஷணாழ்வானவர்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகின்றார். ஐயா கபிச்சக்கரவர்த்தியே! அந்த ராவணேஸ்வரனுடைய கிரீடமென்றால், அவன் தலைமேலிருக்கிறதன்றோ? அந்தத்தலையினும் அது அதிகமாச்சே! அதினுமுயர்ந்த தென்னவிருக்கிறது? அந்தக்கிரீடம் அவன்தலையைப்பார்க்கிலும் உயிரைப்பார்க்கிலுஞ் சிறந்ததாயிற்றே: அவனுடைய பிரதாபகீர்த்தியை வேரோடே பிடுங்கிவந்துவிட்டீரே: ஆதிசேஷன் சிரோரத்தினத்தைப் பறிக்கவேண்டினால் தன்காலினாலே கல்லி



யெறிந்துவிட வல்லவனான அந்தராவணனுடைய சிரசிலுள்ள ஜீவரத்தினங்களைப் பறித்துவந்தீரே: இதுமிருக்க சௌரியவந்த திரிபுராந்தகனாலேயும் ஆகுமா? இதற்குமேலானகாரியமும் வேறேயுண்டா? ஓ வாகுவலயங்கள் பூண்ட புஜபலமுள்ளவானராதிபதியே! ஸ்ரீ உபேந்திரனுடையமார்பிலே தரித்திருக்கிறகௌஸ்துவமணியையும், காளகண்டனான சிவபிரானுடையசடையிலே தரித்திருக்கிற பாலசந்திரனையும் பறித்தாலும்; அந்தராவணனுடைய சிரங்களிலே தரித்திருக்கிறகிரீடங்களைப் பறித்துவந்ததே வீரியாதிக்கமாச்சே:

ஐயா சுக்கிரீவமகாராஜனே! சிவபிரானது கையிலிருக்கிற வாளைவாங்கிக்கொண்ட அந்தராவணனுடைய கிரீடத்தைப் பறித்துவந்தபோதே, அவனை ஜயம்பண்ணுகிறதற்கு அஸ்திவாரம்போட்டு வந்ததுபோலாயிற்று." என்று விபீஷணர் சொல்லக்கேட்ட ஸ்ரீராமர் சந்தோஷித்து, ஐயா விபீஷணாழ்வானே! அதுமெய்தான். இப்போது தம்பிசெய்துவந்தகாரியங் கொஞ்சமா? இஃதந்த ஆதிபுருஷ தாரகஸ்வரூபரான பகவான்செய்தாலென்னமோ சொல்லமாட்டோமேயல்லாமல், பின்னையொருத்தராலேசெய்து முடிக்கிறகாரியமா? தன்னுடையபுயத்திற்கு இது ஜயமல்லவென்றும், சுத்தவீரர்கள் செய்யத்தக்க திறுவாவென்றும் தானெண்ணிச் சொல்லுகின்றதேயல்லாமல்; இது யாராலேசெய்யச் சக்தியம்? என்று ஸ்ரீராமர் அத்தியந்த இரக்கத்துடனே சொன்னார். அப்போது சூரியன் தன்னுடைய குமாரனானவன் இலங்கன்று பயமறியாதென்கிற சாமர்த்தியத்தினாலே ராவணனுடைய கிரீடங்களைப்பறித்துவந்தானே: ஒன்றுபோய் மற்றொன்றாய் முடிந்ததே: இனியிதனாலென்ன விளையுமோ? என்று அந்தராட்சசனுக்குப் பயந்து ஒளித்துப்போகிறவனைப்போல அஸ்தமனகிரிக்கப்பால் மறைந்துபோயினான்.

ஸ்ரீராமர் சுக்கிரீவன்செய்துவந்த ஜயத்தை மனதில் நிறையவைத்து நினைந்து நினைத்துத் தோள்கள் பூரித்துக்கொண்டிருக்க, அப்போது வந்த இருளுக்கிராவணனுடைய கிரீடரத்னமானது கைவிளக்காய்ப் பிரகாசிக்கச் சுவேலாசலத்தைவிட் டிறங்கித் தமதிருப்பிடம்போய்ச் சேர்ந்தார். ஒருநாளுமிப்படிப்பட்ட அவமானமடைந்தவனல்லாத இலங்காதிபதியான இராவணேஸ்வரன் இதைத் தேவர்கள்வந்து நின்று கண்டார்களேயென்கிற நாணம் அதிகரிக்கவும், ஸ்ரீகள் பார்வை அப்போது பார்த்திருந்த புருஷர்கள் நோக்கம்போலக் கூசாமற் பார்த்திருக்கவும், சாகாதுசெத்தவனுடைய அபகீர்த்தியைப்போல அவ்வுத்தரகோபுரத்தை விட்டிறங்கிச் சென்றனன்.

மகுடபங்கப்படலம்—முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பன்னிரண்டாவது,

# அணிவகுப்புப் படலம்.

இப்படலத்தில் சுக்கிரீவமகாராஜ னிராவணனுடைய மகுடபங்கஞ் செய்தபின் ஸ்ரீராமமூர்த்தியு மிராவணனும் சுவேலாசயிலத்தினின்றும் உத்தரகோபுரத்தினின்று மிறங்கித் தத்தமிருக்கை யடைந்திருந்தபோது முன்பிராவணனா லேவப்பட்டுள்ள சார்த்தூலனென்னுமோர் தூதன்வந்து ஸ்ரீராமச்சந்திரருடைய அணிவகுப்பின் திறத்தைக்கூற, அதுகேட்ட ராவணன் அன்றிரவில் மந்திராலோசனைச் சபை கூட்டி ஆலோசிக்கையில் அம்மானாகிய திரும்ப னவனுக்கறிவுறுத்த, அதற்கவனை இராவணன் சினந்து பிரகஸ்தனாதிய பரிசனங்களைக்கூவி அணிவகுத்துத் தானும் யுத்தசன்னத்தனாக, சூரியோதயமானவுடனே ஸ்ரீராமர் தமது சேனைகளோடு வெளிப்பட்டுச் சென்று இலங்கையை நாற்புறத்தும் வளைத்துக்கொண்டமை சொல்லப்படுகின்றது.

## இராவணன் மகுடபங்கமான வருத்தத்தோடு தனதரண்மனையடைந்து வருத்தமுற்றிருக்க, சார்த்தூலனென்னுந் தூதுவனால் ஸ்ரீராமமூர்த்தியினுடைய படையணிவகுப்பின் திறமுணர்தல்.

கவி.

மானத்தானல்லற்பட்ட மறுமத்தான் வதனமெல்லாம்
கூனற்றுமறையிற்றோன்ற வான்றொடுங்கோயில்புக்கான்
பானத்தானல்லன்றெய்வப் பாடலானல்லனூடற்
றூனத்தானல்லன்மெல்லென் சயனத்தானுமையுந்தாரான்.

இவ்வண்ணம் இராவணன் மானமென்னும் வேலினால் துளைக்கப்பட்ட மார்புடனே முகங்களையெல்லாம் தலைவளைந்த தாமரைமலர்கள்போல வளைத்துக்கொண்டு, தனது அரண்மனைக்குப்போய் மத்தியபானத்தையும் ஆடல்பாடல்களையும்விட்டு, ஒருவருடனேயும் பேசாமல் தன்படுக்கையிலேவிழுந்து சோர்ந்தான். அந்தப் படுக்கையானது திரைகளையுடைய பாற்சமுத்திரம் போலவும், அதின்மேலில் ஜீவரத்தினங்களையிழந்து படுத்திருக்கிறாவணன் பலதலைகளினுமுள்ள ரத்தினங்களையிழந்து தன்மீது சயனித்திருக்கும் ஸ்ரீசாட்குண்ணிய பரப்பிரமத்தைப்பிரிந்திருக்கிற ஆதிசேஷனுக்கொப்பாகவுமிருந்தான்.

கவி.

தாயினும்பழகினாருந் தன்னிலைதெரிக்கலாகா
மாயைவல்லொருவன்றான்முன் வருதலும் வாயில்காப்பான்
சேயவர்சேனைநண்ணிச் செய்திறந்தெரிந்திவ்வென்
நேயவனெய்தினானென் றரசனையிறைஞ்சிச்சொன்னான்.
அழைமெனவெய்திப்பாதம் வணங்கியவறிஞன்றன்னைப்
பிழையறவறிந்தவெல்லா முரைத்தியென்றரக்கன்பேச
முழையுறுசியமன்னன் முகத்தினையத்தைநோக்கிக்
குழையுறுமெய்யன்பைய வரன்முறைகூறலுற்றான்



அப்படியிருக்கின்ற சமயத்தில் தாயைப்போல் தன்னுடன் பழகினவர்களுக்கும் தன்னுடைய நிலைமை இப்படிப்பட்டதென்று காட்டாத மாயவித்தையில் தேர்ந்த சார்த்தூலன் பள்ளியறைவாசலில்வந்து நிற்க, வாசற்காவலாளிகளிலொருவன் இராவணனருகேவந்து, சுவாமி! எதிராளிகளுடைய சேனையிற்போய் அவர்கள்காரிய மறிந்துவரச்சொல்லியனுப்பின தூதன் வந்திருக்கிறானென்று வணங்கிச்சொல்ல, உடனே யவனை யழையென் றாக்கியாபித்தான். அவன் வந்து வணங்கி நிற்கவு மவனை இராவணன்பார்த்து, அடா சார்த்தூலா! நீ யறிந்துவந்த எல்லாக்காரியங்களையு மொளியாமற் சொல்லென்று கேட்டனன். அதற்கந்தச் சாதூரிய புத்திமானான தூதுவன் இராவணனுடைய முகக்குறிப்பினா லவனுடைய மனத்தை யறிந்துகொண்டவனாகி, தனது நீளமான சரீரத்தை ஒடுக்கிக்கொண்டு கையினால் வாயைப்பொத்தி குனிந்து மெல்லிய குரலுடன் தான்போய்வந்த வரலாற்றைச் சொல்லுகிறான்.

சுவாமீ! திரிலோகாதிபதியே! நமது எதிரிகளாகியயாவரிடமிருவரும் குரங்குக் கூட்டங்களும் செய்துகொண்டிருக்கிற யோசனையைச்சொல்லுகிறேன் சற்றுதயைசெய்து ஏழையேன் சொல்பவைகளைக் கேட்டருள்வீராகவென்று சொல்கிறான். பதினேழுவெள்ளஞ் சேனைகளுடனேயும், விரலட்சணர்ந்துடனேயும், அனுமானென்பவன் நம்முடைய மேற்கோட்டைவாசலரணைக் கைப்பற்றவிருக்கிறதற்காக விருக்கிறான். அல்லாமலும் அங்கதன் பதினேழுவெள்ளஞ் சேனைகளுடனே தெற்குவாசலைச்சாதிக்க வந்திருக்கிறான், நீலன் பதினேழுவெள்ளஞ் சேனையுடனேயும், அநேகம் படைத்தலைவருடனேயும், கீழ்க்கோட்டை வாசலிற்சேர்ந்திருக்கிறான். வேறே பதினேழுவெள்ளஞ் சேனையும் சுக்கிரீவனும் தன்னைப் பிரியாமலிருக்கும்படியாய் வடக்குவாசலில் நிற்கும்படி அந்தத்தசரதபுத்திரன் தனதுதம்பியுடன் குதூகலமாகவந்திருக்கின்றான். இந்தச்சேனைகளுக்கெல்லாம் ஆங்காங்குள்ள காயுங்கனியுஞ் சுற்றித்திரிந்து கொண்டுவரும்படியாக மற்றுமிரண்டுவெள்ளஞ் சேனைகளை யனுப்பியிருக்கின்றான். இந்த வாசல்கள்தோறுந் திரிந்து நமது இரகசியங்கள் தெரிந்து சொல்லும்படியாய் உம்முடைய தம்பியைத் திட்டம்பண்ணியிருக்கின்றான். தானும் தன்தம்பியுமாய் உம்மோடு சண்டைக்கெதிர்த்து நிற்கிறதாயிருக்கின்றான். இதுதான் அவ்விடத்தில் நடந்த செய்தியென்று அந்தச் சார்த்தூலன் சொல்லி முடித்தனன்.

கவி.

சார்த்தூலனிதனைச்சொல்லத் தழறெறிதறுகணானும்
பார்த்தாளிவாடைபொங்கப் பலவெதுப்பிமாபார்த்தி
போர்த்துளிதுடைப்பெறுனை யவருடற்பொறையினின்றும்
தேர்த்துறுகுருதிதன்னை லெவ்றனனெயிறுதின்னா.

இதையனைத்துங்கேட்ட இராவணன் கண்களிலெல்லா நெருப்புப்பொறிபறக்கச்சினந்து, நாளையதினம் அவர்களுடைய சரீரங்கள் என்னுடைய தேர்க்காலிலே நசுங்கும்போது அவர்கள் ரத்தம் புழுதியுடனேகூடப் பறக்

கும்படியாய்ப் பண்ணிப்போடுகிறேன் பாரென்று பல்லை நெறநெறவென்று கடித்து, முன்னம் சுக்கிரீவன்குத்தின குத்துகளினாலே தன்னுடலெங்கு பிரத்தம்பீறிட்டு, சூரியோதயமான நீலமலை இளவெயிலோடு பிரகாசிக்கிறது போல அந்த ரத்தக்குழியாற் சிவந்து பிரகாசிக்கின்ற தோள்களையுடையவனாகி, அந்தத் துக்கத்திலும் சிலநேர மன்மதபாணத்தால் எரிக்கப்பட்டு, பின்பு புஷ்பமெத்தையைவிட்டு வேறே ரத்தின சிங்காதனத்திலே போயிருந்தான்.

## இராவணனுடைய மந்திராலோசனையி லம்மானாகிய நிகும்பனறிவுறுத்த, அவனைக்கடிந்து தானுமணிவகுப்பித்தல்.

கவி.

செய்வனமுறையினெண்ணித் திறத்திறமுறையிற்றேரும்
மெய்யறமரபின்வந்த வமைச்சரை வருகவென்றான்
பொய்யெனப்பளிங்கிற்செய்த விருக்கையின்புறத்தைச்சுற்றி
ஐயிரண்டாயகோடி பேய்க்கணங்காப்பதாக்கி.

அந்தந்தகாலத்திற்குத் தக்கபடி யோசித்துப் பலாபலங்களை யறிந்து சொல்லுகின்ற தன்வம்ச பரம்பரையாய் வந்த மந்திரிகளை அழைத்துவரச் சொல்லி ஆக்ஞாபித்தான். அப்படியே அவர்களுமந்த அரண்மனைவந்துசேர்ந்தார்கள். பாலைவனத்திற் கானலாகிய தங்களுடைய தேரைச் சுற்றிக்கொண்டிருப்பதுபோற் பளிங்குக்கல்லாற்கட்டிய ஒரு பெரியமண்டபத்தைச் சுற்றிக் காவல்செய்யும்படி பத்துகோடிப் பேய்க்கூட்டங்களை ஏவி, மிகுந்த அறிவுள்ளவர்களான மந்திரிகளோடு அந்த மந்திராலோசனை மண்டபத்தைச் சேர்ந்து அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ எனதன்பிற்சிறந்த அமைச்சர்களே! குரங்குச்சேனைகள் எங்கும்வந்து சுற்றிக்கொண்டன. வாசலுக்கு வாசல் வானரங்களாக நிறைந்து யுத்தத்திற்குத் தலைப்பட்டன. நம்மை யின்னமும் விடாது வருத்தப்படுத்துகின்றன. நாமிதற் கென்னகாரியம் செய்யத்தகும்? என்று அவர்களை வினவினான்.

கவி.

கதிவர்திகழ்ச்சியென்று வெளிவிழித்திடியினக்குப்
புதலத்தடித்தகைய னிகும்பனென்றொருவன்பொங்கி
வேதனைக்காமமந்தோ வேரொடுங்கெடுத்ததென்ன
மாதுலத்தலைவன்பின்னு மன்பினோர்மாற்றஞ்சொன்னான்.

அதற்கு அவனுடைய அம்மானாகிய நிகும்பன் மிகுந்தகோபங்கொண்டு, கண்களில் நெருப்புப்பொறிபறக்க இடியிடித்தாற்போலச் சிரித்து, பூமியைக் கையாலறைந்து சொல்லுகின்றான். அப்பா இராவணா! எழுபதுவெள்ள வானரசைனியங்கள் நம்முடைய கோட்டைமதிலையெல்லாம் சூழ்ந்து முற்றுகை செய்துகொண்டன. இப்போது நீ வேறென்னமோசெய்ய வேற்பட்டாய்போலு மிருக்கின்றது. நமக்குப் பெரியசமுத்திரத்திற்கொப்பான ஆயி-



ரம்வெள்ள மிராக்ஷசச் சேனைகளிருந்தும், சத்துருக்கள் கோட்டையினவளிப்பைப் பற்றிக்கொள்ளும்படியாக நெருங்கி மேற்கொண்டுவந்து விட்டார்கள். முன்னம் தேவர்களுக்கு நமக்கும் நடந்த யுத்தத்தில் வஜ்ரதடி — மழுவாயுதம் — தண்டாயுதம் — வில் — வாள் — சூலாயுதம் — என்று சொல்லப்பட்ட பெரிய ஆயுதங்களைக் கையிற்பிடித்துக்கொண்டு நம்முடைய ராக்ஷசவீரர்கள் கோபித்தகாலத்தில், இவர்களுக்கத்தேவர்கள் கும்பிடுபோட்டுவிட்டுத் தங்களுடைய சைனியங்களுக்கு முன்னாக ஓட்டம்பிடித்தார்களன்றோ? அப்படிக்கிருக்க — கையிலொரு ஆயுதங்களுமில்லாமல் இந்தக் குரங்குப்படைகள் வெறுங்கையால் வெற்றிகொள்ளுவது ஆச்சரியமாக இருக்கிறது. ஐயோ! காமவிகாரமல்லவோ நம்மை இப்படி வேரோடுங் கெடுத்துவிட்டது? என்று பின்னும் அதிக பக்ஷத்தோடு அவ்விராவணனைப்பார்த்துச் "சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கினான்.

ஐயா இலங்கேஸ்வரா! இந்த ஊருக்குவந்து நெருப்புவைத்துச் சாம்பலாக்கிவிட்டுப்போன ஓர் குரங்கின்கையிலே சக்கரமுண்டா? மலைகளுக்குச் சமானமான பத்துத்தலைகளையுடைய பிரதாபலங்கேசனாகிய உன்னுடைய கிரீடத்திலுள்ள நாகரத்தினங்களைப் பறித்துக்கொண்டுபோன சுக்கிரீவனுக்குச் சூலாயுதமும், வாளாயுதமும், வேலாயுதமும், உண்டாயிருந்தனவோ? இவ்விரண்டு குரங்குகளின் கைகளில் ஓராயுதத்தையும் கண்டோமில்லை. ஆகையால் — இனிராமனுடைய பாணம் வரிசைவரிசையாகப் புறப்படுகிறதற்கு முன்னதாக ஸ்திரீகளுக்குள்ளே அதிக உத்தமியான அந்தச்சீதையைக் கொண்டுபோய்விட்டு, ஆயுதமில்லாத அந்தச் சேனைகளைச்சேர்ந்து பலவாயுதங்களையுமுடைய நாம் அடைக்கலம்புகவேண்டுமேயல்லாமல் அவரவர்களமட்டில் தப்பி யொளித்துக்கொள்ளுகிறதற்கும் வேறேவழியிருக்கின்றதோவென்று சொன்னான்.

கவி.

என்புழிமாலிதன்னை யெரியெழநோக்கியென்பால்
வன்பழிதருதிபோலாம் வன்முறையறியாவார்த்தை
அன்பழிசிந்தைதன்னோ டடாதனவறையலென்றான்
பின்பழியெய்தநின்றா னவன்பின்னைப்பேச்சவிட்டான்.

அப்போது கண்களில் தீப்பொறிபறக்கும்படியாக இராவணன் மாதுலனைப்பார்த்து, ஓ அம்மானே! நீ பெம்மான்கூட்டத்திற் சேர்ந்த வேலையோ நானறியேன். எனக்கு அபகீர்த்தி சம்பாதிக்கிறப்போ லிருக்கின்றது. நீ என்மீது பட்சமில்லாதவனாகி, நமது குலத்தின் பராக்கிரமமுதலியவற்றை அறியாதவர்கள் சொல்லுகிற தகாதவார்த்தைகளையா சொல்லுகிறாயென்று பின் பிறரால் நிந்திக்கப்படுகின்றவனான ராவணன் மிகுந்தகோபத்துடனே சொன்னான். அந்த நிகும்பன் பின்பொன்றும் பேசாமலிருந்தான்.

அப்போது திரிலோககண்டகனாகிய ராவணன் பிரகஸ்தனைப்பார்த்து, ஓ காலகேயர் யாவரையும் சம்ஹாரம்பண்ணின ஆயுதங்களையெல்லாந் தரித்திருக்கின்ற சேனாபதியே! நீ இருநூறுவெள்ளம் ராக்ஷதசேனைகளோடும், உன்பந்துஜனங்களோடும், கிழக்குவாசலைக் காத்துக்கொண்டிருவென்று ஆக்கியாபித்தான். அப்படி யவனுக் காக்கியாபித்துத் தென்றிசைக்கதிபனாகிய யமனுடையவகங்காரத்தை யடக்கின மகோதரனைப் பார்த்து, நீ அதிக சீக்கிரமாகச்சென்று மதத்துவீரனான மகாபாரிசனென்பவனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு இருநூறுவெள்ளஞ் சேனைகளுடனே தெற்குவாசலிலே நின்று அங்கே வருகின்ற வானரசேனைகளை யெல்லாஞ் சம்ஹரித்துப் போடென்று கட்டளையிட்டான். அப்பால் இந்திரசித்தைப்பார்த்து, அப்பாகுமாரா! அநுமானுடைய பலத்தை நீ அறிந்திருக்கின்றாயாகையால், இருநூறுவெள்ளஞ் சேனையுடனே பொழுதுவிடிகிறதற்குள்ளாக மேற்கு வாசலிற்போய்க் காத்திருவென்று உத்தரவுசெய்தான். பின்பு விரூபாக்ஷனைப்பார்த்து, இவ்வுலகைக்குந் தேவர்களை ஜயப்பண்ணிக்கொண்டிருந்த நீ குரங்குப்படைகளின் மேல்சண்டைசெய்யும்படிப் போகிறது அற்பமாகும். கீர்த்தியும் வரமாட்டாது. இருக்கிற மூலச்சேனைகளுடனும் - மந்திரிகளுடனும் - பட்டணத்தைக் காத்திருவென்று ஆக்கியாபித்தான்.

அப்பால் பிரமனுலகத்திற் சிப்புதத்தினுள்ளவர்களை யெல்லாம் ஜயித்துவிட்டு வெகுநாளாகச் சண்டைகிடைக்கவில்லையே யென்று கோபித்துக்கொண்டிருக்கின்ற யானைவீரர் - குதிரைவீரர் - தேர்வீரர் - காலாள்கள் - ஆகிய இருநூறுவெள்ளஞ் சேனையுடனே வடக்குவாசலை நான் காத்துக்கொள்ளுகிறேனென்று யுத்தசன்னத்தனானான். அப்போது இருதிறத்தாருக்கும் யுத்த வேட்கையுண்டாகி விரைவிற் பொழுதுவிடிய வில்லையென்று உதயத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தமையால், அந்தராத்திரி ஒருகற்பகாலம்போல நீண்டதாகக் காணப்பட்டது. அல்லாமலும்- இனி ராக்ஷதர்களாலுண்டாகும் உபத்திரவங்கள் ஒழிந்து விடுமென்றெண்ணிக் குதூகலமாயிருக்கும் தேவர்கள் முனிவர்கள் முதலிய சாதுஜனங்களுக்கும், உலகங்கள் சுகிப்பதுவே தாம்சுகிப்பதாகவும் துக்கிப்பதுவே தாம்துக்கிப்பதாகவும் கொள்பவராகையால் ஆதிசங்கற்பத்தின்படி நிறைவேற்றக் காலம் வாய்த்ததென்றிருக்கிற ஸ்ரீராமபிரானுக்கும், இவருடைய சௌந்தரியத்தில்மூழ்கி இவருடைய திருமார்பைவிட்டுப் பிரியாத காலங்கிடைத்ததென்பதினால் ஜானகிப்பிராட்டியாருக்கும், தன்னுடைய பேதைமைப் புத்தியால் மனுஷியரென்றெண்ணி நாளை சமரத்திலே வெற்றிகொள்ளலாமென்று அகங்கரிக்கும் இராவணனுக்கும் ஆநந்தத்தை விளைவிப்பதாகவுமிருந்தது. அப்போது பொறுமை - தயை - முதலிய சற்குணங்களில்லாத அதிக பலாட்டியனாகிய ராவணனுடைய கொடுமைக்குப் பயந்து வெளிப்படாமல் வேதனைப் பட்டுக்கொண்டிருந்த ஒருவன், அக்காலத்தில் இராமப் படைவோருடைய கர்வத்தைப் போக்கிக்காக்க வல்ல இறைவனைக்கண்டு வெளிப்பட்டாற்போலச் சூரியன் உதயமானான்.

தூதனுப்புதல்.
№ 49. ஸ்ரீராமர்விபீஷணுதியரோடாலோசித்து இராவணனன்அங்கதனைத்



அங்கதன்தன்னைக்கொல்லஇராவணனுலேவியகாவலரக்கரையுங்கொ ன்றுவந்து ஸ்ரீராமனைச்சரணமடைதல்.



உயுத்தகாண்டம். அங்கதன்தூதுப்படலம்.



கவி.

உலைப்புறமோதவேலை யோங்கலையொலிக்கத்தூர்ப்ப
அளப்பருந்தூளிச்சுண்ண மாசைகளலைப்பப்பூசல்
இலைப்பருந்தலைவர்முன்ன மேவிவினையிலைமுற்றும்
வலைத்தனர்விடியத்தத்தம் வாயில்கடோறும்வந்து.

தந்திரமிலங்கைமூதூர் மதிலினைத்தழுவித்தவி
அந்தரக்குலமின்சிந்த வண்டமுங்கிழியவார்ப்பச்
செந்தனிச்சுடரோன்சேயுந் தம்பியுமுன்புசெல்ல
இந்திரன்றெழுதவாழ்த்த விராமனும்பெயர்ந்துசென்றான்.

அப்போது ஸ்ரீராமபிரானுடைய சேனைகள் அதிக சௌரியத்துடனே கடல்களினலைக ளோய்ந்துபோகவும் — ஆகாசமெல்லா மறைபட்டுப்போகவும் - தூளிகளெழும்பும்படியாகப் புறப்பட்டு, தங்கள் ராஜனுகிய சுக்கிரீவமகாராஜாவி னுக்கினையின்படி அந்தந்த வாசல்களின் சமீபத்திலேபோய் லங்கையை வளைத்துக்கொண்டு, அதன் கோட்டை மதிலைத் தாவி, ஆகாசத்தை மூடிக்கொண்டிருந்த இருளெல்லாம் இச்சேனைகளினுடைய தேககாந்தியால் அழிந்துபோகவும் - அண்டமு மடுக்கங்கொள்ளவும் — ஆர்ப்பரித்தன.

அப்போது சுக்கிரீவமகாராஜனு மிளையபெருமாளும் பின்னேவர, தேவேந்திராதி தேவர்கள் தொழுதுவாழ்த்த, ஸ்ரீராமமூர்த்தியும் இலங்கையை நோக்கிநடந்தார். சகல சாஸ்திரபண்டிதராலும் அளவிடக்கூடாத பலமுள்ள ராட்சசசேனைக்கடலை உள்ளேயுடையதாக விருந்தும், கருங்கடலாலே வெளியே சூழப்பட்டதால் விளங்கியும், பின் வானரசேனைகளால் வளைத்துக்கொள்ளப்பட்ட அந்தப் பாவியினுடைய லங்காபட்டணமானது பாற்கடல் மத்தியிலுள்ள ஒருநகரத்தைப்போலிருந்தது. இராக்ஷசசேனைகளைப் பிடிக்கவிருப்பவலைபைப்போல் வானரசேனைக ளிலங்கைமா நகரத்தை வளைத்துக்கொண்டன. மேலும் — அந்தலங்கையானது பிரளயகாலத்திற் பிரம்மேந்திராதி அநந்தமகோடிகள் தங்கியிருக்கத்தக்க மாயப்பெருமானுடைய திருவுதரம் போலவும் பிரகாசித்திருந்தது.

அணிவகுப்புப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதின்மூன்றாவது,

# அங்கதன் தூதுப் படலம்.

இப்படலத்தில் எழுபதுவெள்ளம் வானரசேனைகளோடு இலங்கைமாநகரத்தைநோக்கிச் சென்ற ஸ்ரீராமர் வடக்குவாயிற் சமீபத்தெழுந்தருளி இராஜதருமமுறைமைப்படி முன்னம் தமது பகைவனுகிய இராவணனுக்கு ஓர் தூதனுப்பி போர்த்தொழிற்கண் முயல்வது புஜபலவீரர்கட்

குத் தகுதியென்று விபீஷணாழ்வாராதியரோ டாலோசிக்க, அவர்கள் அதற் குடம்பட்டதறிந்த இலட்சுமணர் துர்விருத்தியனுக்குத் தூதனுப்புதல் முறையன்றென்று தடுக்க, ஸ்ரீராமரவரைத்தேற்றி அங்கதனை யாய்த்துவிடுக்க, அவனவ்வாறேசென்று இராவணனையெதிர்ந்திடலும், அவன் இவ்வங்கதனது வரலாற்றைக் கேட்டறிந்து வாலியின் மகனென்றுணர்ந்து சன்மானிக்க, அச்சன்மானத்தையு மவனையு மங்கதனிகழ்ந்து அவனுள்ளத்தையுலையும்படிச்செய்ய, அதனாலிராவணனுக்குக் கோபமீறி அங்கதனைக்கொல்லும்படி நான்கு இராட்சசரைவிடுக்க, அவர்களை யவ்வங்கதன் தூக்கியவாறே ஆகாயத்திலெழும்பிக் கொன்றெறிந்து ஸ்ரீராமரிடம்வந்து இராவணனுடைய மனோபாவத்தைப் புலப்படுத்தமை சொல்லப்படுகின்றது.

## ஸ்ரீராமரிராவணனுக்குத் தூதுவிடுக்க முயன்றதை இலட்சுமணர்தடுக்க, அவரிவரைத் தேற்றுதல்.

கவி.

வள்ளலும்விரைவினெய்தி வடதிசைவாயின்முற்றி
வெள்ளமோரேழுபத்துக் கணித்தவன்சேனையோடும்
கள்ளனைவரவுநோக்கி நின்றனன் கணக்கிலாதான்
ஒள்ளியதுணர்ந்தேனென்ன வீடணர்க்குரைப்பதானான்.

தமது செந்தாமரை மலரைப்போலும் திருவடியை ஸ்மரிக்கின்ற பகவத் ஜனங்களுக்கு விரும்பியவைகளையெல்லாம் ஓயாது தந்தருளும் பரமோதாரனாகிய ஸ்ரீராமபிரான் இத்தப்படி அதிசீக்கிரமாக வடக்குவாசலின் சமீபத்திற் றெழுந்தருளி, எழுபதுவெள்ளஞ் சேனைகளையுடையவராய் அக்கள்ளனை வரவு பார்த்துக்கொண்டேயிருந்து, அவன் வரவுகாணாததினாலே விபீஷணாழ்வானைப்பார்த்துத் திருவாய்மலர்ந்தருளுகிறார். தம்பிவிபீஷணா! எனக்கொரு நல்லயோசனை தோன்றுகிறது. அதாவது - இப்போது ஒருதூதனை இராவணனிடத்திற் கனுப்பிச் சீதையை விடுகிறாயாவென்று கேட்டனுப்பவேண்டும். அதற்கவன் மறுத்துச்சொல்லி அனுப்புவானாகில் அதன்மேல் யுத்தத்திற்கு ஆரம்பிக்கலாம். அதுவே நல்யோசனையும்-இராஜதருமமும்-நீதியுமென்று கிருபாநிதியானவர் சொல்ல, அந்தவார்த்தையை இராக்ஷஸாதிபதியான விபீஷணாழ்வான்கேட்டு, சுவாமி! தேவரீராலோசித்தது மிகவுநன்றாயிருக்கின்றதென்றார். வானராதிபதியான சுக்கிரீவமகாராஜனும் இஃதிராஜதருமமேயன்றி வேறல்ல, ஆதலால் இக்காரியம் செய்யத்தக்கதே யென்றார். இவைகளையெல்லாம் இளையபெருமாள்கேட்டு, சுவாமி! அவனைஇரந்து நாம்கேட்பது மிகுந்த ஈனமாகும். ஆகையால் - இனி நாம் இராக்ஷதர்மேல் அஸ்திரப்பிரயோகஞ் செய்வதேயல்லது, அவனையொரு பொருட்டாக வெண்ணிச் சமாதானவார்த்தைசொல்லி, யனுப்புவதுதகாதென்று பின்னையுஞ்சொல்லுகின்றார்.



கவி.

தேவியைச்சிறையில்வைத்தான் தேவருக்கிடுக்கண்செய்தான்
பூசுரர்க்கலக்கணீந்தான் மன்னுயிர்புடைத்துத்தின்றான்
ஆசையினளவுமெல்லா வுலகமுந்தானேயாள்வான்
வாசவன்றிருவுங்கொண்டான் வழியலாவழிமேற்செல்வான்.

ஐயனே! மகாதேஜஸையுடைய லோகமாதாவைச் சிறையிலேவைத்ததல்லாமல் தேவர்கள் ரிஷிகள் முதலானபேர்களையு மிகுந்த வருத்தப்படுத்தினான். சகலஜீவகோடிகளையும் அடித்துக்கொன்று தின்றுவிட்டான். திசைகளின் முடிவுவரையில் சகலலோகங்களையும் தானேஆளுகிறான். இந்திரனுடைய சகல சாம்பிராச்சியங்களும் தானே அபகரித்துக்கொண்டான். தருமத்தப்பினவழியே நடக்கின்றான். அல்லாமலும் - தேவரீர் அளவில்லாத துக்கசாகரத்திலே முழுகியிருக்கும்படியாக வஞ்சனைசெய்து தேவியாரையும்பிரித்தான். திக்கில்லாதவராயழுதுகொண்டுபோகின்ற சீதாபிராட்டியாரது துக்கத்தைச் சகிக்கமாட்டாமல்தனிமையாயுத்தத்திற்குவந்த உம்முடையபிதாவாகிய ஜடாயுவையும், அவனேகொன்றிருக்கின்றான். அப்படிப்பட்ட பாவிக்கு நாம் தூதனுப்பினால் அவனதற்கிசைந்து பிராட்டியாரை விட்டுவிடுவானேயாகில், அப்போது அவனைக்கொல்லாமல் விடவேண்டியதல்லோ வரும்? அந்தப்படி விட்டுவிட்டால் தேவரீருடைய பேருங்கீர்த்தியு மிருக்கிறவரைக்கும் இலங்காதிபத்தியம் உனக்கென்று இவருக்கு வாக்குக்கொடுத்திருக்கிறது வீணாகுமல்லவோ?

அன்றியும் - தேவரீர்பண்ணின சபதம் எப்படிமுடியும்? உம்முடைய அன்பினாலேஅவைகளையெல்லாம் விட்டுவிடுவீராகில், இவ்விலங்கையினுடைய பலத்தைப்பார்த்து இதில் நாம்பிரவேசிப்பது மிகுந்த பொல்லாங்கைத் தருமென்று அஞ்சி நின்றுவிட்டாரென்று உலகத்திற்குத்தோன்றுமே; ஆதலால் எவ்விதத்திலும் போர்செய்வதே அதிக சிறப்பாகுமென்றுஞ் சொன்னார். அந்தவார்த்தையைக்கேட்ட சிரசிகாமணியாகிய ஸ்ரீராமமூர்த்தி நகைத்து, ஒருவார்த்தை அருளிச்செய்கிறார்.

கவி.

அயர்த்திலன்முடிவுமஃதே யாயினுமறிஞராய்ந்த
நயத்துறைநூலினீதி நாந்துறந்தமைதனன்றே
புயத்துறைவலியரேனும்பொறையொடும் பொருந்திவாழ்தல்
சயத்துறையறனுமஃதே யென்றிவைசமையச்சொன்னான்.

தம்பி இலக்ஷ்மணா! நானொன்றையு மொருபோது மறந்தவனல்லேன். எல்லாம் பிராரப்தப்படிக்குவந்து முடியப்போகிறது. ஆனாலும் - தெரிந்த பெரியோர்கள் சொல்லியிருக்கின்ற நீதிசாஸ்திரத்தை நீக்கிநடப்பது யுக்தமல்லவே: அதிகபலசாலிகளானாலும் பொறுமையினாலேயே காரியமும் செய்யவேண்டும். அப்படிச் செய்கிறதே ஜெயமானகாரியம். அதுதான் தருமமுமாகுமென்று அவருக்குச் சம்மதியாகும்படிச் சொன்னார்.

## ஸ்ரீராமர் அங்கதனையாய்ந்து இராவணனிடந் தூதாகவிடுக்க அவன்செல்லுதல்.

கவி.

மாருதியின்றுஞ்செல்லின் மற்றிவனன்றிவந்து
சாருதல்வலியாரில்லை யென்பதுசாலுமன்றே
யாரினியேகத்தக்கா ரங்கதனமையுமொன்றூர்
வீரமேவிளைப்பரேனுந் தீதின்றிமீளவல்லான்.

இந்தப்படி லக்ஷ்மணனைத்தேற்றிய ஸ்ரீராமர் பின்பு யாவரையும்பார்த்து, இந்தக்காரியத்திற்கு ஆரையனுப்புவோம்? அனுமானை அனுப்பினால், இவனைத்தவிர இவ்விடத்திற்கு வரத்தக்கபேர் அவ்விடத்தில் வேறேயில்லையென்று அவர்களுக்குத்தோன்றும். ஆகையால் - அங்கேபோனவிடத்திலே அவர்கள் தங்கள் சௌரியத்தைக்காட்டினாலும், அவைகளையெல்லாம் ஜயித்துச் சுகமாய்ப்போய் வரத்தக்கவன் அங்கதனென்றெண்ணி அவனை அழைத்து, பிள்ளாய்! நீயிந்த அனுமானுக் கிரண்டாவதானவன். ஆகையால் - நீ அச்சத்துருவினிடத்திற்குப்போய் என்னபிப்பிராயத்தைச் சொல்லிவரவேண்டுமென்று ஸ்ரீராமபிரான் சொன்னார். அவரருளியதைப்பெற்ற அங்கதராஜனுக்குத் தோள்கள்பூரித்தன. அக்கால் அவனுடைய சந்தோஷநிலைமையை இவ்வளவவ்வளவென்று கூறத்தரமாகுமோ? உடனேயவன் சந்தோஷத்துடனே எழுந்திருந்து சுவாமியைப்பார்த்து, ஐயனே! அடியேன் அந்தக்கொடியோனை ராவணனிடஞ்சென்று யான்சொல்லவேண்டுங்காரிய மென்னவென்று பரிந்து கேட்டனன்.

கவி.

என்னவற்குரைப்பதென்ன வேந்திழையாளைவிட்டுத்
தன்னுயிர்பெறுதனன்றேல் வன்றெனிற்றலைகள்பத்தும்
சின்னபின்னங்கள்செய்யச் செருக்களஞ்சேர்தனன்றே
சொன்னவையிரண்டிலொன்றே துணிவெனச்சொல்லிடென்றான்.

அதற்கு ஸ்ரீராமர் அவனைப்பார்த்துச் சொல்லுகின்றார். அப்பா அங்கதா! நீயந்தராவணனை நேரிற்கண்டு, எவர்களும் புகழ்ந்துசொல்லும் பெருங்கீர்த்தியைப் பெறவேண்டிச் சீதையைவிட்டுப் பிழைப்பனோ? அல்லது நகரத்திற் கேதுவாகப் பத்துத்தலைகளும் பனங்காய்கள்போலச் சின்னபின்னமாயறுபட்டு மாண்டுமாய்வனோ? உன்சம்மதியென்னவென்று கேள்; விரோதமாக அவன்கோபங்கொண்டு மறுத்தானேயாகில், நாங்கள் வந்திருக்கும்போது நீ கோட்டைக்குள்ளே மறைந்திருக்கிறது தருமமல்லவே; சௌரியத்தனத்திற்கு அழகாகுமோ? அல்லது ஆண்மையாமோ? சாமார்த்தியமுமல்லவே; உனக்கெதிரில்வந்து யுத்தஞ்செய்யச் சக்தியுண்டானால் வந்தெதிர்க்கலாமெனச் சொன்னதாகச் சொல்லக்கடவாய். என்று ஸ்ரீராமபத்திரர்சொல்லினார்.

கவி.

பார்மிசைவணங்கிச்சீயம் விண்மிசைப்படர்வதேபோல்
வீரன்வெஞ்சிலையிற்கோத்த வம்பெனவிசையிற்போனான்



மாருதியல்லனாகி லீயெனுமாற்றம்பெற்றேன்
ஆரினியென்னோடொப்பா ரென்பதோரின்பமுற்றான்.

அவரை அங்கதன்சேவித்து, ஒருசிங்கமானது ஆகாசத்தில் தாவிப்போகிறதுபோலவும் - ஸ்ரீராமபாணத்தின் விசையைப்போலவும் - அதிகவேகமாகி, அனுமாருக் கிரண்டாவது நீயென்றுசொல்லும்படி நல்லவார்த்தைபெற்றேனே; எனக்குச்சமான மாரிருக்கிறார்கள்? என்கிற மகிழ்ச்சியுடனே கிளம்பினான். இப்படி கிளம்பியமாத்திரத்தில் வேலாயுதத்தையுந் தோற்கடித்து நெருப்புப்பொறி பறக்கும்படியாகப் பார்க்கிற ராட்சசரைச் செயங்கொள்ளும்படிக்குத் திருப்பாற்கடற் சயனத்தைவிட்டு அயோத்தியி லெழுந்தருளின ஸ்ரீராமருடைய நியமனத்தைச் சிரசாகவகித்த தூதனான அந்த அங்கதராஜன், சூரியனுந் தாண்டிப் போகக்கூடாத மகமேருவினு முயர்ந்திருக்கின்ற மதில்களையெல்லாந்தாண்டி அந்தராவணனிருக்கிற இடம்போய்ச்சேர்ந்தான். அவ்விடத்தி லநேகராட்சசர்கள் இவனைக்கண்டமாத்திரத்தில் அழுதுகொண்டு, அந்த அனுமானே வந்தானேயென்று பயந்து இராவணனிடம் போய்த் தொழுது முறையிட்டார்கள். இப்படி அழுதுகொண்டும் தொழுதுகொண்டும்வந்த பந்துக்களாகிய ஸ்திரீபுருஷர்களையும் தன்னிடத்திற்கு வந்து முறையிட்டுக் கொள்ளுகிற வீரர்களையும், தன்காலில்விழுந் தலறுகின்ற சேனைகளையும்பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண் டிருக்கிற ராவணனை அங்கதகுமாரன்கண்டு; நாம் கல்வியினாலும் - மாத்திறனாலும் — இந்தச் சிறுகடலைக்கட்டினது பெருமையென்றல்லவோ எண்ணியிருக்கோம்? இவன் பிரதாபத்தைப்பார்த்தால் இவனையும் வெல்லநினைத்துத் தைரியங்கொண்டெதிர்ப்படுவோர்களுமுண்டோ? இவன்கையி லாயுதமெடுப்பானால் ஸ்ரீராமர்கையில் வில்லொன்றிருப்பதல்லாமல், வேறேயெதிர்த்து நிற்பவர்கள் இவ்வுலகம் தேவருலகம் பாதாளவுலகம் ஆகிய இவ்விடங்களில் எங்குமில்லை. என்றுகருதி மிகுந்த ஆச்சரியத்துடன் பிரமித்துநின்று பின்னுமாலோசிக்கிறான்.

இந்தராவணனை வெல்லவேண்டுமென்று நினைக்கிறவர்கள் யுத்தத்திலே இவனைத்தோற்கடித்த என்தந்தையாகிய வாலியின்மார்பில் ஒரு அம்பெய்து கொன்றுவிட்ட அந்த ஸ்ரீராமனைக் குறிப்பதல்லாமல், பிழைத்திருக்கின்ற மற்றவராலே இவனை யேதேனுஞ்செய்யலாமோ? ஆபரணங்களில்லாமலே அழகை விளைவிக்கும்படியான என்னன்னையாகிய சீதாபிராட்டியார்பேரில் ஆசைவைத்திருக்கின்ற இவனைக்கொன்று, இவனுடைய துராசையை அறுத்தெறியவல்லமையுள்ளவர்கள் அந்த ஸ்ரீராமபிரானையல்லாமல் யாரிருக்கின்றார்கள்? ஆதிசேஷன்மீதுபாய்ந்து அவனுடைய சிரோரத்தினங்களைப் பறித்துவந்த கருடாழ்வானைப்போல முன்னமிவன்மேற் பாய்ந்து, இவனோடு மல்லயுத்தமுஞ்செய்து, இவனுடைய கிரீடத்திலுள்ள ஜீவரத்தினங்களைப் பறித்துக்கொண்டுவந்த நம்முடைய சிறியதந்தையே வல்லவர். என்று கிருபாநிதியாகிய ஸ்ரீராமதூதனான அங்கதன் இப்படிப் பலவாறு நினைத்து, கொடிய அக்கினிமயமான இடியையும் யமனையுஞ்சேர்த்து அவைகளுடனே காலகோடி

விஷத்தையுங்கூட்டிச் செய்ததுபோலக் கிரீடங்கள் மின்ன ஒரு கருங்கடலி ருக்கிறதுபோல் இருக்கிற சிங்கத்தையொத்த இராவணனுக்கு முன்னே போய்நின்றான்.

இராவணன் தன்னெதிர்வந்த அங்கதனைப்பார்த்து நீயாரென யான் இராமதூதன் உனக்கு சேதிசொல்ல வந்தேனென அவ்வங்கதனை அவ்விராவணன் வாலிபுத்திரனென்றுணர்ந்து சன்மானித்தல்.

கவி.

நின்றவன்றன்னையன்னா னெருப்பெழ விழிப்பப்பார்த்தின்
றின்றிவண்வந்தநீயா ரெய்தியகருமமென்னை
சொன்றவர்நின்றுமுன்னங் கூறுதிதெரியவென்றான்
வன்றிறல்வாலிசேயும் மாவெயிற்றிலங்கைக்கோன்.

பூதநாயகனீர்சூழ்ந்த புவிக்குநாயகனப்பூமேல்
சீதைநாயகன்வேறுள்ள தெய்வநாயகனீசெப்பும்
வேதநாயகன்மேனின்ற விதிக்குநாயகன்றான்விட்ட
தூதன்யானபணித்தமாற்றஞ் சொல்லிடவந்தேனென்றான்.

இவ்வண்ணம் தன் சமுகத்தில் நின்ற அங்கதனாகிய இராமதூதனை இராவணன் தன்னிரு விழியினின்றும் அனற்பொறி பறந்தெழப்பார்த்து, ஏ குரங்குருவங்கொண்டு வந்தவனே! நீயார் இவ்விடம் வந்தது யாதுகாரணம் இதோ-என்னுடைய சமுகத்திலிருக்கின்ற இராக்ஷசவீரர்கள் நீ சொல்வதற்குத் தாமதிக்கின் கொன்று தின்றுவிடுவார்கள். அப்படி அவர்கள் கோபங்கொள்ளுவதற்குமுன்னே நீ சொல்லிவிடின் நலமாகுமென்று சொல்ல, அதற்கு எந்நாளுங் கலங்காத சௌரிய பராக்கிரம நிறைந்த வாலிபுத்திரனாகிய அங்கதகுமாரன் பிரகாசிக்கின்ற தனது தந்தங்கள் வெளியிற்றெரியும்படியாகச் சிரித்து, ஏ ராவணா! நான் யாரென்றால் சொல்லுகிறேன். பிருதிவ்யுதகளான பஞ்சபூதங்களுக்கும், சமுத்திரத்தாற் சூழப்பட்ட இந்தப் பூலோகத்திற்கும், நீபூமியோடு பேர்த்தெடுத்துக்கொண்டுவந்த லோகமாதாவான ஸீதாபிராட்டிக்கும், சமஸ்தலோகநாயகர்களாகிய பிரம்மேந்திராதி தேவர்களுக்கும், நீ நாள்தோறும் ஓதிவருகின்ற வேதத்திற்கும், சகலாத்துமாக்களையும் தன்னியமப்படி நடத்திவருகின்ற மேலாகிய விதிக்கும், நிருபாதிக நாயகனாயிருக்கின்ற ஸ்ரீராமநாமதாரகப் பிரம்மத்தினால் விடப்பட்ட தூதனாகக்கொள்ளும். அவருனக்கு ஆக்ஞாபித்த நியமனத்தைச் சொல்லும்படியாக நான் வந்தேன். இதுதான் யானுனதெதிரில்வந்து நின்றதற்குக் காரணம். என்று அங்கதன் சொல்லி நின்றனன்.

இவ்வாறு சொல்லிநின்ற அங்கதனை இராவணன் பார்த்து நகைத்து, ஓ தூதனே! அரனுமயனுமரியுமல்லாமற் குரங்குகளைக் கூட்டிக்கொண்டு வந்து, கடலாகிய குட்டைக்கு ஒரு சேதுகட்டி, இன்னம் பயந்துகொண்டு உன்னைத் தூதனுப்பின நானோ லோகநாயகன்? நீ சொன்ன லோகநாயகனுடைய செ



ய்தி மிகநன்றாயிருக்கின்றது. கங்கையையு மூன்றாம்பிறையையுந் தரித்த திரிநேத்திரதாரிக்கும் — கையில் சங்கு சக்கரந்தரித்த விஷ்ணுவுக்கும் — முன்னமென்றாற் சம்பவித்த சகல விபத்துக்களையு மனனறித்திருக்கலாம். அப்படியறிந்திருந்தும் இந்த ஊரைவந்தடைந்த அந்தராமன் யாராயிருந்தாலும், அவன் கெட்டிருக்கட்டும். அந்தமனுஷனுக்குத் தூதாக இங்கேவந்து பயப்படாமலிப்படிச்சொன்ன நீயார்? அதனையெனக்கு முன்னே சொல்லுகவென்று கேட்டனன். அதற்கு அங்கதனவனைப்பார்த்து. ஓ தசக்கிரீவனே! தேவேந்திரனுடைய குமாரனும், பூர்வகாலத்தில் இராவணனென்கிற உன்னை அழகானதோள்களோடு சேர்த்துத் தன்வாலிலே கட்டிக்கொண்டு மலைகளைத்தாண்டித் திரிந்தவனும், தேவர்களுண்ணும்படிக்கு மந்தரகிரியினாலே கடலைக்கடைந்து அமிர்தங்கொடுத்தவனுமான வாலியினுடைய புத்திரன் நானென்று சொன்னான்.

அதைக்கேட்ட ராவணன் அவனை நயமுகத்தோடும் பார்த்து, அப்பா! உன் தகப்பன் எனக்குச்சிநேகிதனென்கிறதற்குப் பழையகதையைச் சொன்ன நீயே சாக்ஷியாக இருக்கின்றாய், அப்படிப்பட்டவன் மகனான நீ மனுஷனுக்குத் தூதனானதைப் பார்க்கிலும் நிந்தனை வேறே யுண்டோ? உனக்கு வானராதிபத்தியம் நானேகொடுத்தேன். நீ அவர்களிடத்தி லிழிவடையாமல் வந்து பெரிய உபகாரஞ்செய்தாய். வாலிக்குப் பிள்ளையாகையா லெனக்கும் நீ பிள்ளைமுறையே யல்லது வேறல்ல. தகப்பனைக் கொன்றவன் பிறகே கும்பிட்டுக்கொண்டு திரிந்து சேவகனைப்போ லிருந்தா யென்கிற அபகீர்த்தியும் தீர்த்துவிட்டாய். முன்னே சீதையைப்பெற்றேன். இப்போது உன்னை என்குமாரனாகவும் பெற்றேன். இனியென்னால் முடியாத காரியம் என்னவிருக்கின்றது? அந்தமனுஷர்கள் இன்றைக்கோ நாளைக்கோ மாண்டுபோகிறதற்குச் சந்தேகமில்லை. உன்ராஜரீகத்தை உனக்கே கொடுத்தேன். நீ ஊழிகாலபரியந்தம் அந்த ராச்சியத்தை யாண்டுகொண்டு சுகமாகவிரு. தேவர்களெல்லாம் கைதொழப் பொற்சிங்காதனத்திலே வைத்து மஹாராஜாவாக உனக்கு நானே முடிசூட்டுவேன். என்று ராவணன் சொல்லி அவனைச் சன்மானித்தான்.

அங்கத னிராவணனையு மவன் சன்மானத்தையு மிகழ்ந்து தான் வந்தகாரியத்தைக் கூறுதல்.

கவி.

அங்கதனதனைக்கேளா வங்கையோடங்கைதாக்கித்
துங்கவன்றோளுமார்பு மிலங்கையுந்துளங்கநக்கான்
இங்குநின்றார்கட்கெல்லா மிறுதியேயென்பதுன்னி
நுங்கள்பானின்றசெம்பாற் போந்தனனும்பியென்றான்.

இப்படி ராவணன் சன்மானித்துக்கூறிய வார்த்தைகளனைத்தையும் அங்கதன்கேட்டு, தனது இருகரங்களையும் ஒருங்குசேரத்தட்டி உயர்வும் பராக்கிரமமும் பொருந்தியபுயமும்மார்பும் அவ்விலங்காபுரியும் குலுங்கும்படியாகச்

சிரித்து, ஓ இலங்கைவேந்தனே! இங்கேயிருக்கிறவர்களுக்கெல்லா முடிவுகாலம் வந்ததென்பதை அறிந்துதானே உன்னுடைய தம்பி உங்களையெல்லாம் விட்டு எங்களிடம் வந்து சேர்ந்தான். அதைநீ சுத்தமாகமறந்து உன் வாயிலே வந்ததைச் சொல்லி என்னை உன்வசஞ்செய்து, நானும் திரிலோகநாயகராகிய ஸ்ரீராமரால் விடப்பட்ட தூதனாகவந்து உன்னால் அரசாளப்பெறுகிறது புத்திமான்களால் ஆலோசிக்கத் தகுந்ததே; மேலும் - சிங்கமானது நாயின் கையில் மகுடாபிஷேகம் பெற்றதுபோல உன்னால்நான் அரசாட்சி பெறுவேனேயானால், இதற்குச் சமானமாகிய இழிவு வேறென்னவிருக்கின்றதென்று சொல்ல அப்போது ராவணனுக்கு அங்கதனைக் கொல்லத்தக்க கோபம்பொங்கி, ஓ குரங்கே! தங்களையுள் முடிந்தமனுஷரை நம்பிச் சாகத்துணிந்திருக்கிற நீ இங்குவந்த காரியத்தைச் சொல்லென்று சொல்லினன். அதைக்கேட்ட அங்கதன் சொல்லுகிறான்.

கவி.

கூவியின்றென்னைநீபோய்த் தன்குலமுழுதுங்கொல்லும்
பாவியையெய்தியஞ்சி யரண்புக்குப்பதுங்கினானைத்
தேவியைவிடுகவன்றேற் செருக்களத் தெதிர்ந்துதன்கண்
ஆவியைவிடுகவென்று னருளினன்விடலைமிக்கான்.

ஸ்ரீராமஸ்வாமி என்னை அழைத்து, நீபோய் தன்னுடைய குலத்தையெல்லாங் கொல்லுகிறதற்கேற்பட்ட பாவியாகியும் யுத்தத்திற்குப்பயந்து கோட்டைக்குள்ளே பதுங்கியிருக்கின்றவனுமான ராவணனைக்கண்டு, சீதாபிராட்டியை விடுகிறையா? இல்லாவிட்டாற் போர்செய்ய வருகிறையா? என்று கேட்டறிந்து வரும்படியாகக் கிருபைநிறைந்த மனமுடையவராய்ச் சொன்னார். அதுவுமல்லாமல் — பருந்துக்கிரையாகும்படி உன்பாட்டியாரைக் கொன்றபோதும், அநேகசேனையுடனே உனது தேவாமிர்தத்தைக் காட்டினும் சிறப்புற்ற அம்மானைக் கொன்றநாளிலும், ஆரணியத்திலேவந்து உன்தங்கை சூர்ப்பநகையினுடைய மூக்கையும் ஸ்தனத்தையும் எங்களிளையபெருமாள் அரிந்தநாளிலேயும் வாராத நீ; இனி ஆண்மையுங்காட்டப் போகின்றாயோ? பந்துக்களோடும் அநேக ராக்ஷசக்கூட்டத்தோடும் உலகத்திற்குக் களைபிடுங்கினதுபோலக் கரதூஷணர்களான உன் தம்பிமார்களைக் கொன்றதைப் பார்த்திருந்தும், உன்மனதிற் சற்றுமெண்ணிவந்தவனல்லை. மேலும் - இளையபெருமாளைப் பிரியும்படியாக வஞ்சகஞ்செய்து சீதையைக்கொண்டுபோன வக்கிரத்தங்களையுடைய ராக்ஷசனை நீ யுத்தத்திற்கு வருவாயா?

இவையல்லாமல் முன்னே இவ்விலங்கையில் அனுமார்வந்து சீதையைக் கண்டு எதிரேவந்தெதிர்த்த ராக்ஷசர்களையெல்லாம் காலால் எற்றிவிட்டு, உன்பிள்ளை அக்ஷனையும் தரையிற்போட்டுத் தேய்த்துவிட்டு, உன் ஊரிலேயும் நெருப்புவைத்துக்கொளுத்தி, நீயும் பார்த்திருக்கவே கடலைத்தாண்டிவந்திருக்கச்செய்தே உடனே கூடத்தொடர்ந்துவரமாட்டாத நீ செய்யுஞ்சண்டையு



மென் னிருக்கின்றதோ? உன் இனத்தாராகிய சுகசாரணர்களுக்குப் பிராணபிரதிஷ்டை கொடுத்து அவர்களுடைய கள்ளத்தன்மையையும் அறிந்து அவர்களை யுனக்குப் புத்திசொல்லி அனுப்பினபோதும், வருணன்வந்து எங்களாண்டவராகிய ஸ்ரீராமரை வணங்கினபோதும், உன்தம்பிக் கிலங்காதிபத்தியங் கொடுத்தபோதும், சமுத்திரத்தை அடைத்து அணையிட்டபோதும் வாராத உன்னுடைய ஆண்மைக்கும் ஒருசிறப்புண்டா? உன்மீது பகைகொண்டிருக்கிற தேவர்களும் - உன்மீது ஆசைகொண்டிருந்த ஸ்திரீகளும் - தங்கள் தங்கள் கண்களாரப் பார்த்துக்கொண்டிருக்க, என்சிறியதந்தையாகிய சுக்கிரீவ மகாராஜாவே கிரீடங்களைப் பறிகொடுத்தும் யுத்தத்திற்கு வாராதவன். இனி நீ உன்வீரத்தைப்பற்றி யென்னசொல்லப்போகிறேன்?

ஐயோ! நெஞ்சிற் கொஞ்சமும் தயவில்லாத உன்னை உன்குலத்தாடனே கொன்றபோதும், அதனால் எங்களாண்டவராகிய ஸ்ரீரகுநந்தனருக்கு ஒருகீர்த்தியுமில்லையாம். நீ அவ்வளவு இழிவானநிலைக்குத் தாழ்ந்துவிட்டாய். எல்லாரும் தூஷிக்கிற அவஷணையானது உன்னைச் சூழ்ந்துகொள்ளும்படி உனதூர்வாசல்களை யடைத்துக்கொண்டும், இன்னும் வெளியேவராமற் பதுங்கிக்கொண்டிருக்கின்றாய். நீ திக்குவிஜயம்பண்ணின கீர்த்தி யாவும் இன்றுமிறந்துவிடுகின்றது. என்றிப்படிப் பலவாறுகச்சொல்லிப் பின்னும் அங்கதன் இராவணனைப்பார்த்து, ஓ இலங்கைவேந்தே! எங்களாண்டவர் அங்கீகரித்தருளினபடி உனக்கு நன்மைவேண்டுமானால், எங்கள் சீதாபிராட்டியாரைக் கொண்டுவந்துவிட்டுச் சுவாமியை வணங்கிச் சுகமாய்வாழ்ந்திரு. அப்படிக்கில்லாமல் உன் பந்துக்களுடனே நீயும் போர்க்களத்தில் மடிந்துபோகவேண்டுமென்கிற எண்ணமிருக்குமானால், ஸ்ரீராமர் உன்னுடைய கோட்டைவாசலிற் கையும்வில்லுமாக உன்வரவை எதிர்பார்த்திருக்கின்றார். ஆதலினால் இப்போதே என் பின்னாலேவா.

மேலும் வருணமண்டலத்திலும் - அக்கினிமண்டலத்திலும் — பூமண்டலத்திலும் — சுவர்க்கலோகத்திலுமுண்டான வீரர்களையெல்லாம் போர்க்களத்திலே தோற்றுப்போகும்படி ஜெயம்பெற்ற நீ, இப்போது இலங்கையிலொளிந்துக்கொண்டு அதை மங்கும்படிச் செய்வாயானால் யாவருக்கும் பழியாய்விடும், என்று அவனுடையமனம் உளையும்படிச் சொல்லினான்.

### இராவணன் தன்னை அங்கதன் இகழ்ந்த இழிவைப் பொறாது கோபித்து நாலு வீரர்களை கொல்லுங்களென்றேவ அவ்வீரர்களை அங்கதன் ஆகாயத்திற் றூக்கிக்கொன்று சில வார்த்தை சொல்லி மீளல்.

கவி.

சொற்றவார்த்தையைக் கேட்டலுந்தொல்லுயிர்
முற்றுமுண்பது போலுமுனிவினன்
பற்றுமின்கடி தென்னெனப்பார்மிசை
ஒற்றுமின்னென நால்வரையேவினன்.

எவினன்பிடித் தாரையெடுத்தெழத்
தாவினனவர் தந்தலைபோயறக்
கூவினனவன் கோபுரவாயிலில்
ஆவினன்றனைத் தானிவைசொல்லினன்.

இதைக்கேட்ட மாத்திரத்தில் இராவணன் அங்கத னுயிர்முழுதையும் வாரி உண்டுவிடுகிறவனைப்போல மிகுந்த கோபமுள்ளவனாகி, நான்கு மகாவீரர்களான இராக்ஷசர்களைப் பார்த்து, இவனைப்பிடித்து மூளை சிதறிப்போகும்படிப் பூமியிலறையுங்களென்று ஏவினான். அந்தப்படியே அவர்கள்வந்து பிடித்தார்கள். அம்மாத்திரத்தில் அங்கதன் அவர்கள் நாலுபேர்களையுந்தூக்கிக்கொக்கரித்துக்கொண்டே ஆகாசமார்க்கத்திலெழும்பி, அவர்கள் தலைகளறுந்து அந்த ராவணனுடைய கோபுரவாசலில்வந்து விழும்படி அவர்களைக் காலினாலே துவைத்தெறிந்து, மற்றவர்களைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகின்றான்.

"ஓ ராக்ஷசர்களே! ஏழைகளான நீங்கள்யாவரும் ஸ்ரீராமரால் விடப்பட்ட கோடிப்பாணம் தகத்தகாயமாய் மின்னலைப்போல வருவதற்கு முன்னமே, ஓடிப்பிழையுங்கள்: ஓடிப்பிழையுங்கள்: என்று ஆரவாரித்தான்.

### அங்கதன் ஸ்ரீராமபிரானிடமடைந்து இராவணன் கருத்தைக்கூறல்.

கவி.

அந்தரத்திடை யார்த்தெழுந்தானவன்
சிந்துரத்தந் துறைத்தெழுசெச்சையான்
இந்துவின்னின் றிழிந்தனதாமென
வந்துவீர னடியின்வணங்கினன்.

இவ்வண்ணஞ் சொல்லிக்கொண்டு ஆகாசமார்க்கமா யெழும்பிச்சென்று, சந்திரன் பூமியிலிறங்குவதுபோ லிறங்கி, இராகவனுடைய பாதாரவிந்தத்தில் வணங்கித் தெண்டன்சமர்ப்பித்தனன். அக்கால் ஸ்ரீராமர் அங்கதனைப் பார்த்து, அப்பா அங்கதா! இராவணனென்னுங் கொடியோனுடைய அபிப்பிராயமியாதோ? அவையெல்லாம் தெரியச்சொல்லுகவென்று கேட்டனர். அதற்கவ்வங்கத னவரைப்பணிந்தெழுந்து, சுவாமி! அவைகளைச் சொல்லுவதா லுண்டாகிற சாரமென்னை? அந்தமூர்க்கனுடைய பத்துத்தலைகளையு மறுத்துத் தள்ளினாலல்லாமல், அவன்சீதாபிராட்டியார்மேல் வைத்த ஆசை அவனுக்கொருநாளுமாறாதென் றுசொல்லினான்.

அங்கதன்தூதுப் படலம் - முற்றிற்று.



ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் நடந்தமுதல்நாள்போர்.

№ 50.

உயுத்தகாண்டம். முதற்போர்ப்படலம்.



ஸ்ரீ ராம ஜெயம்.

பதினொன்றாவது.

# முதற்போர் படலம்.

இப்படலத்தில் இராவணனிடம் தூதுபோய்வந்த அங்கதனுடைய வாக்கினையால் வானரசேனைவீரர்கள் இலங்காபுரியி னகழியைதூர்த்துக் கோட்டையை வளைத்துக்கொள்ளவும், அதுகண்டு நகரிலிருந்தெழும்பிய இராக்ஷச சேனையோடு வானரசேனைகள் வெகுவாய் யுத்தஞ்செய்து குலைந்துபோகவும், அப்போது சுக்கிரீவனால் வச்சிரமுஷ்டியும் - இன்னும் சில வானரவீரரால் சில் ராக்ஷசவீரர் இறக்கவும், இவையனைத்தையுங் கேட்ட இராவணன் யுத்தகோலங்கொண்டு வெளிப்பட்டதையறிந்த ஸ்ரீராமரும் யுத்தசன்னதமாய் வந்துநிற்க, அக்கால் சுக்கிரீவ மகாராஜனும் - ஆஞ்சநேயரும் - இளையபெருமாளும் - இராவணனோடு போராடிமெலியவும், மீட்டுமனுமான் அவனோடு குத்துச்சண்டையாடிச் சலிக்கவும், அதுகண்ட இலக்ஷுமணர் அவனைவளைத்துப்பொருது மூர்ச்சையாகவும், அனுமானவரை யெடுத்திச்சென்று இராமமூர்த்திக்கு முன்விடவும், அப்பால் ஆஞ்சநேயர் வேண்டுகோளின்படி அவர்தோளி லாரோகணித்த ஸ்ரீராமர் இராவணனோடு அபரிமிதமாகச் சண்டைபோர்விளைத்து மெலியச்செய்து நிராயுதபாணியனுப்பிற்கு மவனுக்குச் சிலவறிவுறுத்தி நாளைவாவென் றனுப்பினமை சொல்லப்படுகின்றது.

அங்கதனுத்தரவால் வானரசேனைவீரர்கள் இலங்காபுரியி னகழியைத்தூர்த்துக் கோட்டையை முற்றுகைச் செய்துகொள்ளுதல்.

கவி.

பூசலேபிறி தில்லையெறப்புறத்
தாசைதோறு முரசுயறைந்தெனப்
பாசறைப்பறை யின்னிடம்பற்றிய
வாசநேறு முறையில்வருத்திரால்.

இவ்வண்ணம் வானரகுலங்களுக் கிறைவரசாகிய அங்கதகுமாரன் ஸ்ரீராமசுவாமியை யடிவணங்கி விண்ணப்பித்து இனியுத்தஞ் செய்வதற்குத் தாமதித்தல் கூடாது வேறொரு யோசனை செய்யலாகாதென்று வானரப்படைவீரர்களை நோக்கி திசைகளெல்லாம் பேரிகை முழங்கியதுபோல நம்முடைய பாடிக்கூடார வாசல்கள்தோறும்போய் எல்லாருக்கும் யுத்தமென்று தெரியச்சொல்லுங்கள். மலைகளு மரங்களும் பிடுங்கிவந்து முன்சமுத்திரத்தைத் தூர்த்துப் பழகினகைகளினாலே இலங்கைக்கோட்டைக்கு அரணாயிருக்கின்ற அகழிகளைத் தூர்த்துப்போடுங்கள். இராக்ஷசர்களை யெங்குந்திரியவொட்டாமற் பலவிருக்ஷங்களால் அடித்து, அவர்களை யுத்தத்திற்கு வரச்சொல்லி அழையுங்கள். சூரியனானவன் மேற்றிசையண்டி வருதற் கரியதாகிய அவன் - கோட்டை

மதில்களைப்போய் இந்தக்ஷணமே முற்றுகை போட்டுக்கொள்ளுங்கள். என்றிப்படி பலவாறு ஆஞ்ஞாபித்த மாத்திரத்தில் சிங்கங்களையொத்த வானரசேனைகள் பெரியமலைகளையு மரங்களையும் பிடுங்கிக்கொண்டு வந்து முதலைகளெல்லாம் ஓடிப்போகும்படியாகவும் - அதிலுள்ள ஜலமெல்லா மேலேறியோடிவிடவும் — அந்தலங்கையி னகழியைத் தூர்த்துவிட்டனர்கள்.

இப்படி எழுபதுவெள்ளம் வானரசேனைகளும் எட்டாங்கட லென்று சொல்லும்படியாக மிகவும் விஸ்திரணமிக்க அவ்வகழியைத் தூர்த்தமாத்திரத்தில் அதிலேயிருந்த தண்ணீரெல்லாம் அந்தவானரங்களுக்கு உதவிசெய்வதுபோலப் பொங்கிவழிந்து, அந்தக்கோட்டைவாசல் வழியாகப்போய் லங்கைப்பட்டணத்தைமூடி வளைந்துகொண்டது. அநேகவானரங்கள் ஜெயப்பிரதாபசாலியான அந்தராவணனுடைய பெருங்கீர்த்தியை வேருடனே பிடுங்குகிறதுபோல விசாலித்துத் தழைத்துமலர்ந்த தாமரைக்கொடிகளை வளையங்களுடனே பிடுங்கிக்கொண்டன. அதிலே நீலோத்பல புஷ்பங்கள் குவிந்தது எப்படியிருந்ததென்றால் - நிந்தைக்குப் பாத்திரவானான ராவணனுடைய புகழானது அவனுடனேகூட அழிந்துபோய் விடுகின்றதேயென்று அந்த அகழ் கண்ணைமூடிக்கொண்டு அழுகிறதுபோன் றிருந்தது. தாமரைகளெல்லாம் பிடுங்குண்டுபோனபடியினாலே அதிலேயிருந்த வண்டுகளெல்லாம் பறந்துபோய்விட்டன. அன்னங்களெல்லா முட்டைகளைத் தங்கள்வாயிலே கவ்விக்கொண்டு பறந்து ஓடிவிட்டன.

தாரமென்னும் பண்ணைப்பாடுகிற வண்டுகள் மொய்த்திருக்கின்ற கமுகு-தெங்கு-இவைமுதலியவைகளின்பாளைகளினுள்ள பூந்தாதுகளுதிர்ந்திருக்கின்ற நிறைந்த நீரினுள்ள தண்டையுடைய தாமரைமலரினிடத் திருக்கின்ற அம்சக்கூட்டங்கள் ஓடிப்போக வளைமீன்கள் தாவும்படியாக, வானரவீரர்கள் ஒரிடத்திலிருந்து வேறோரிடத்திற் குதித்துப் பார்த்தார்கள். கூட்டங்கூட்டமாக பெரிய விருக்ஷங்களும் - மலைகளும் - பூந்தாதுகளும் — மேன்மேலுமடர்ந்து அகழியில் விழுந்து நெருங்குகிறபடியால், அதிலுள்ள நீரெல்லா மேலேறிப் பல ஆறுகளாய்ச் சமுத்திரத்தின்மேற் பரவியோடியது. அந்த ஆறுகள் கடலில்விழு மிடங்கள்தோறும் அங்கங்கு தோன்றுகின்ற நீர்ச்சுழிகளில் சுரிந்துமுழுகி மேலெழுகின்ற தாமரைப்புஷ்பங்கள், சமுத்திரஜலத்தில் ஸ்நானம்பண்ணி மேலெழும்புகின்ற ஸ்திரீகளுடைய முகத்தை யொத்திருந்தன.

கவி.

தன்மைக்குத்தலை யாயதசமுகன்
தொன்மைப்போகமும் வானரந்தூர்த்தலால்
இன்மைக்கும்பொன் னுடைமைக்கும்யாவர்க்கும்
வன்மைக்கும்மோர் வரம்புமுண்டாகுமோ.



புராதனமாகவிருந்த அகழியே வானரக்கூட்டங்களால் தூர்ந்துபோகும்படியானகாலம் வந்து நேரிட்டதனால், இனி மற்றவர்களுக்குள்ள பலத்திற்கும்-பாக்கியத்திற்கும் - தரித்திரத்திற்கும் — ஒரு பிரமுண்டாகுமா?

இப்படி அகழியைத் தூர்த்த வானரசேனைகள் அந்த அகழிக்கரையை இடித்துத் தகர்த்துவிட்டு, அந்தக் கோட்டைமதில் முழுதையும் தாங்களேறி நடக்கிறதற்குத் தக்க ஒருவரப்பாக்கிக்கொண்டு, அதின்பேரில் நின்று சப்தசாகரமும் சப்தமேகமும் கலங்கும்படி கர்ச்சித்தன. சகல மேன்மையான தன்மைகளுக்கு முதலானவைகளிய பத்துமுகங்களையுடைய இராவணனு லாளப்பட்ட இலங்காபுரியினது வட்டாகாரமாகிய ஓர் மகாமேருகிரியைப்போல அண்டமுகட்டை அளாவியிருக்கின்ற அந்தமதிலின்மேலேறி ஆகாசத்தைத் தொட்டுக்கொண்டு நிற்கின்ற சிலவானரங்கள், அந்தமதிலுக்கு அலங்காரமாகக் கட்டியிருக்கிற அநேக வெள்ளைக்கொடிகளைப்போலக் காணப்பட்டன. அளவில்லாத ரத்தினங்களாலும் சுவர்ணங்களாலும் இயற்றப்பட்ட மேருமலையைப்போ லிருக்கின்ற கோட்டைமதில், தன்னை ஒருவரு பிடிக்கவேண்டாமலே இந்தவானரவீரர்கள் எதிர்நிற்கிறதைச் சகிக்கச் சக்தியில்லாமல் தானே பூமியி லழுந்திப்போய்விட்டது.

இராட்சதசேனைகளோடு வானரசேனைகளெதிர்த்துப் போராடிக்குலைந்து சுக்கிரீவ ராஜனிடம்போயடைதல்.

கவி.

அறைந்தமாமுர சாலைப்பதாதியால்
மறைந்தவானெடு வானகமாதிரம்
குறைந்ததூளி குழுமிவிண்ணூடுபு
குறைந்துதாங்கவர் போர்செழுமோதையே.

அப்போது அவ்விலங்கைக் கோட்டைக்குள்ளும் வெளிப்புறத்திலுமுள்ள இராட்சசர்கள் யாவரும் புறப்படுங்களென்று முரசறைந்த பேரொலிகேட்டுப் புறப்பட்ட ராக்ஷசவீரர்கள் ஆனைமேலேறிப் பிடித்துவந்த கொடிகளால் ஆகாசமறைந்துவிட்டது. இராட்சசசேனைகள் மிகுந்த ஆர்ப்பாட்டத்தோடு புறப்பட்டதனாலெழும்பிய சேனுபாரகம் அஷ்டதிக்குகளிலும் போய்ப் படிந்தன. அந்தச் சேனைகள் சண்டைக்கென்று புறப்பட்ட பேரோசையானது சுவர்க்கலோக பரியந்தம் போய் அளாவியது. எங்கும் சங்கங்கள் தொனித்தன. அவர்களணிந்துகொண்டிருந்த ஆரங்களொலித்தன. நிர்த்தம்பண்ணிக்கொண்டு வருகின்ற குதிரைகள் அனுமானித்தன. தேர்களில் கட்டியிருக்கின்ற மணிகள் கோஷித்தன. யானைகளெல்லாம் பெருங்கூட்டமாகவும் அதிகவேகமாகவு நடக்கின்றமையால், அதனிரண்டு பக்கங்களிலும் கட்டியிருக்கின்ற மணிகள் கணீர் கணீரென்று ஒலித்தன.

கவி.

அரக்கர்தொல்குலம் வேரறவல்லவர்
வருக்கம்யாவையும் வாழ்வுறவந்ததோர்
கருக்கொள்காலம் விதிகொடுகாட்டிடத்
தருக்கியுற்றெதிர் தாக்கினதாலையே.

அந்தச்சமயத்தில் வெகுகாலமாக விருத்தியடைந்திருந்த இராட்சசகுலமாகிய அரிஷ்டங்களெல்லாம் அழிந்துபோகவும் — மற்றத்தேவர்கள் மனிதர்கள் வானரர்களெல்லாரும் வாழ்வடையவும் தக்க க்ஷேமமானகாலத்தை விதிகொண்டுவந்து காண்பிக்க, வானரசேனாசமுத்திரம் அதிக மனவூக்கங்கொண்டு இராட்சசசேனாசமுத்திரத்தோடு கலந்து ஒன்றோடொன்று எதிர்த்தன.

வானரசேனைகள் தங்கள் வாயிலுள்ள பல்லுகளையும், உயர்ந்த குன்றுகளையும், பெரியமலைகளையும், தழைத்த விருக்ஷங்களையுமே தமக்கு ஆயுதங்களாகக்கொண்டுபோர்செய்யப்புறப்பட்டன. இராட்சசசேனைகள் வில் — வேல் — சூலம் — வாள் — முசலம் — சக்கரம் — இவைமுதல் அநேகமான ஆயுதங்களைக்கொண்டு சண்டைக்குப் புறப்பட்டு, ஒருவரோடொருவர் யுத்தஞ்செய்யத்தொடங்கி, வானரங்கள் விட்டமலைகளை ராட்சசர்கள் அம்புகளாற் பொடிசெய்தார்கள். அந்தராட்சசர்களுடைய அம்புகளை வானரர்கள் விருட்சங்களாற்சாடித் துண்டுதுண்டாக்கினார்கள். அந்தவிருட்சங்களால் ராட்சசர்களால்விட்டு உதிரந்தோய்ந்து செக்கச்செவேலென்று பிரகாசிக்கின்ற வேலாயுதங்களும் நொறுங்கிவிட்டன. வானரவீரர்களெறிந்தமலைகளால் வஞ்சகர்களான ராட்சசர்களுடைய தலைகள்சிதறி, அவர்கள் நாக்கின்வழியாயும் — செவியின்வழியாயும் — மூக்கின்வழியாயும் — தலைமூளைகள்வழிந்து சிந்தின. கன்னங்கரேலென விளங்குகின்ற ராட்சசவீரர்கள்விடுத்த அம்புகள்பட்ட புண்களில் ரத்தங்கள்வடியப் பற்களெல்லாந் தகர்ந்து, தங்கள்கையிற் பிடித்திருக்கிற மலைகளோடு அநேகவானரங்க ளுருண்டுபோயின.

இலங்கைக்கோட்டை மதிளின்மேலேறியிருந்த வானரவீரர்கள் வீசியெறிந்த மலைகள் ராக்ஷசர்களின் உடல்மீது மலைகளின்மேல் இடிவிழுந்ததுபோலத் திடீரென்று விழுந்து, அவர்கள் பிராணனைப் பறக்கடித்துவிட்டன. நெருப்பைப்போலெரிந்துகொண்டிருக்கின்ற குரூரப்பார்வைகளையுடைய அரக்கர்கள் கைகளையுதறி வீசியெறிந்த வேலாயுதத்தினால், எதிர்த்துவந்த வானரங்களுடைய தேகங்கள் கோட்டைமதிளுக்குப் புறம்புள்ளமண்ணுக்குள் புதைந்துபோய்விட்டன. வானரவீரர்களதிககோபங்கொண்டு அநேகராக்ஷசர்களைக்கடித்தும், குத்தியும், கையாற் கழுத்தைப்பிடித்துத் தமது நீண்டநகங்களாலிருபிளவாகப்பிளந்தும், அங்கைகளாலறைந்தும், காலினாலுதைத்தெதிர்த்துங் கொன்றுவிட்டார்கள். இராக்ஷசர்கள் சஸ்திரங்களைத்தொட்டும், அஸ்திரங்களைவிட்டும், இருப்புலக்கை — தண்டாயுதம் — இவைமுதலானவைகளால் மோதியும், வேலாயுதத்தைக்கொண்டு தேகத்திலழுத்தியும் சண்டைசெய்த



படியால், வானரங்கள் கூட்டங் கூட்டமாக மடிந்துபோயின. இரத்தத்தினாலே தோயப்பட்டிருக்கிற அந்தப்பொன்மதிலானது பவளத்தினாற் கட்டப்பட்ட மதிலைப்போன்றிருந்தது. இரத்தமானது பிணமலைகளை யிழுத்துக்கொண்டு உப்புநீர்ச்சமுத்திரத்திற்போய் விழும்படி பிரவகித்தது.

ஆகாசமுழுவதும் கழுகு பருந்து முதலான பக்ஷிகள் படர்ந்து வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்த படியினாலே, இலங்காபுரி மறையும்படி ஒருபந்தலிட்டதுபோல விருந்தது. அதனாலாயிரங்கண்களையுடைய இந்திரனுக்கு மிலங்கைக்குள் நுழையக்கூடாமல் திரும்பிப்போகத்தக்கதா யிருந்தது. அவ்வியுத்தகளம் இரத்தமயமாய் நிறைந்ததால் செவ்வானமாகவும், கருநிறம்வாய்ந்த பேய்க்கூட்டங்களோடு கவந்தங்களும் துள்ளிவிளையாடுவதால் இருளாகவுமிருந்த தன்மையைப்போன்று மிருந்தது. இந்த ரத்தக்கடலில் பக்ஷிகள் முழுகி ஆகாசமார்க்கத்திற் பறக்கிறபடியினால், அவ்விரத்தத்துளிகள்பட்டு இலங்கைப்பட்டணத்திற் கட்டியிருந்த கொடிகளுடைய பலநிறங்களும் போய்ச் செந்நிறக்கொடிகளாய்விட்டன. இரத்தவெள்ளமானது லங்கைக் கோட்டை மதிலுக்கு மேற்பட்டுப்பொங்கி வழிவதினாலே, வானரங்கள் மேருமலையின்மேலேறி இறங்கிவருஞ் சமுத்திரத்தைப்போல கோட்டையினின்று மதிலின்மேலேறி யிறங்கி யோடிவிட்டன. நடுக்கங்கொண்ட ராக்ஷசசேனை வெள்ளம் வெள்ளமாக மதிலின் உள்மேடைகளிலும், மேல்மேடைகளிலும், மதிலுறுப்புக்களிலும், கோட்டைவாசல்களிலும், நிலாமுற்றமாகிய அட்டாலைகளிலும், இன்னு மிலங்கைப்பட்டண முழுவதிலுமுள்ள மேட்டுப்பாங்குகளிலும் போய் நிறைந்தன.

இவ்வண்ணம் இராட்சசச்சேனைகள் நெருங்கி நிறைந்திருப்பதைக்கண்ட வானரச்சேனைகள் ரத்தக்கடலிற் குதித்து நீந்தும்போது, அதிகநெருக்கத்தால் நீந்தமாட்டாமல் அதில் அமிழ்ந்தும் — நீந்திக்கையோய்ந்து விழுந்தும் — இவ்வாறோடத் தொடங்கின. வானரசமுத்திரம் இடம்பிடிக்கவே ராட்சசர்கள் கெக்கலிகொட்டிக்கொண்டு, மூன்றுலோகங்களையும் அழிக்கும்படியாகப் புறப்பட்ட மகாபிரளயகால சமுத்திரம்போலச் சப்தித்தார்கள். அந்தராக்ஷசர் முழக்கிக்கொண்டு வந்த பேரிகைமுழக்கமும், முருடுவாத்தியசப்தமும், சங்கவாத்திய நாதமும், தாளவாத்தியத் தொனியும், அவரவர்களுடைய விற்களின் டங்காரவோசையும் ஒன்றாகக்கூடி; சமுத்திரவோசையை மயங்கும்படிச் செய்துவிட்டன. அப்படிப்பட்ட சமயத்தில் பிரமதேவன் தனது நான்கு முகங்களாலும் தந்த எல்லாவுலகத்திலுமுள்ள பிரஜைகளனைவரு நாலு வழியாக நடந்துவந்ததைப்போல் இராட்சசசேனாசமுத்திரங்கள் ஆகாசத்தைத்தொட்டுக்கொண்டிருக்கின்ற இலங்கைக்கோட்டைக் கோபுரத்தின் நான்கு வாயில்களினது வழியாகப் புறப்பட்டன.

அதிக காததூரமளவும் விசாலித்த பூமித்துவாரத்தின் வழியாக பெரிய மலைகளெழும்பி வருவதுபோல அநேகயானைகள் துதிக்கைகளிற்றண்டங்களைப்பிடித்து எட்டுத்திக்குகளிலும்வீசிச் சுழற்றிக்கொண்டுவருவதால், கொடி

யோடுகொடி சிக்கிக்கொண்டன. பிடித்துக் கொண்டு வருகிற கொடித்தண்டுகள் முறிந்தன. முகபடாமணிந்த நெற்றியையுடைய அந்தயானையின் மதங்களால் அவ்விடங்களெல்லாம் சேறாகி, அதினுழிக்காற்றைப்போலோடுகின்ற தேர்களால் அச்சேறுகாய்ந்து புழுதியாகிவிட்டது. வானரவீரர்களா லிடிக்கப்பட்ட மதில்களை ஆடையாகவுடைய இலங்கைப்பட்டணமாகிய பெண்ணானவள் கடலைவாரிக்குடித்து, அதைச் சகிக்கமாட்டாமல் மறுபடியும் கக்குகின்ற அப்பெரியகடலினுடைய அலைகளைப்போலக் குதிரைகள் கோட்டைவாசல் வழியாகப் புறப்பட்டன. "சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்" என்று பெரியோர்களால் உலகில் வழங்கிவரும் பழமொழிப்படி, இராவணன் இலங்காபுரியி லரசாகுதற்கு வந்தநாள்முதல் அவ்விடத்தில் சூரியப்பிரகாசமில்லாதபடியால் நாள்தோறுஞ் சென்றுகூடி நம்மினமென்று பிரியாத இருட்கூட்டங்கள் ஏககாலத்தில் அவ்விடத்தைவிட்டுப் பிரிந்துவருந்தன்மையைப்போல் கறுத்த நிறத்தையுடைய இராட்சசக் காலாட்கள் புறப்பட்டார்கள்.

இப்படிப்புறப்பட்ட இரத கஜ துரக பதாதிகளான சேனைகளின் காற்றூளி பூமியைச் சுமந்துகொண்டிருக்கின்ற ஆதிசேஷனுடைய வரிசையான ஆயிரந்தலைகளினுடைய சுமைகுறையும்படியாகப் பறந்து, சுவர்க்கலோகத்தின் மேல்முகடுமுழுவதையும்-அண்டபித்திகையின் புறப்பக்கத்தையும்-அஷ்டதிக்குகளின் வெளிப்புறத்தையும்போய்த் தொத்திக்கொண்டு, மறுபடியுங் கீழே உதிராமலிருந்துவிட்டது.

கவி.

நெருக்கிவந்து நிருதர்நெருங்கலால்
குரக்கினப்பெருந் தானைகுலைந்துபோய்
அருக்கன்மாமக னாமராசையால்
செருக்கிநின்றவ னின்றுழிச்சென்றதால்.

அந்தராக்ஷசர்கள் இப்படி மிகுதியாய் நெருங்கிவந்தபோது குரங்குச்சேனைகள்குலைந்து, யுத்தஞ்செய்கின்ற ஆசையினாலுண்டாகிய செருக்குடனே நிற்கிற சூரியகுமாரனை சுக்கிரீவ மகாராஜனிடத்திற்குப்போய்ச் சேர்ந்தன.

## சுக்கிரீவமகாராஜனுக்குக் கோபமுண்டு போருக்கெழுந்து வச்சிர முஷ்டியென்னும் இராக்ஷசச் சேனைவீரனைக் கொல்லுதலும் சிலவானர வீரர்களால் சில இராக்ஷசரிறத்தலும்.

கவி.

சாய்ந்ததானைத் தளர்வுஞ்சலித்தெதிர்
பாய்ந்ததானைப் பெருமையும்பார்த்துறக்
காய்ந்தநெஞ்சன் கனல்சொரிகண்ணினன்
ஏய்ந்ததங்கொர் மராமரமேந்தினன்.



அப்போதந்தச் சுக்கிரீவமகாராஜன் தன்சேனைகள் சாய்ந்து தளர்ந்ததையும் கர்ச்சித்துக்கொண்டு வந்த ராட்சசசேனையினுடைய பெருமையையும் பார்த்து, கோபாக்கினியுடனே அங்கேயிருந்த ஒரு மராமரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு புகுந்து, யானை - குதிரை - தேர் - பதாதிகளான நால்வகையாகிய சேனைகளுக்கெதிரே ஒவ்வொருத்தருக் கொவ்வொருவராக நெருங்கி, முன்னாலே தோரணக்கம்பத்திருந்து அடித்தவனிவனென்று நினைக்கும்படியாக அந்தராட்சசர்களுக்குக் காணப்பட்டு, தேர்களும் - யானைகளும் - குதிரைகளும் - இராட்சசர்களும் - உருளும்படியாகவும், அவர்களுடைய ரத்தவெள்ளத்தில் தன்கையிலிருக்கிற மராமரமானது வெள்ளைநிறந்தோற்றாமற் சிவந்தநிறமாம்படி குளிக்கவும், கிறுகிறென்றுவீசி அடித்தார். அப்போது வானரகுலவீரர்கள் தம்மரசனுக்கெதிரிற் சண்டைக்குவந்த ராட்சசர்களுடன் பெரும்போர் செய்யத்தொடங்கி மலைகளைப்பிடுங்கி அரக்கர்மேலெறிய, அதனால் அவர்களில் அநேகம்பேர் நசுங்கிமடிந்தார்கள். இராட்சசர்கள்விட்ட அம்புகள்பட்டு அநேக வானரர்களும் இறந்தார்கள்.

அப்போது ரணக்களத்திற் பேய்க்கூட்டங்கள் பாடத்தொடங்கின. கவந்தங்கள் கூத்தாடின. இரத்தவெள்ளங் கடலைக்கிழித்துக்கொண்டோடியது. பதிவிரதாசிரோன்மணிகளான ஸ்திரீகள் யுத்தகளத்திற்குவந்து, தங்கள் தங்கள் நாயகன்மார்களுடைய சரீரங்களைத் தேடத்தலைப்பட்டார்கள். அல்லாமலும்; அதிக உக்கிரமான கோபத்தையுடைய வானரவீரர்களால் தங்களாயுள் முடிந்த ராக்ஷசர்களுடைய ரத்தவெள்ள மோடுகின்ற ரணக்களமானது வெறுங்களமாம்படி, தப்பி யுயிரோடிருந்த ராக்ஷசர்கள் சண்டைக்கு ஆற்றமாட்டாமல் ஓட்டம்பிடித்தார்கள். அப்போது வச்சிரமுஷ்டியென்கிற ராட்சசன் தங்கள்சேனையின்னிடைய அதிக கோபத்துடனே கடலிலோடுகின்ற கப்பல்போலத் தேரைப் பருந்துக்கூட்டங்கள் பின்தொடரும்படி முடுக்கிக்கொண்டுவந்து எதிர்த்து, அந்த வானரங்கள்பேரிலே சராசிகளைப் பொழிந்து சின்னபின்னமாகும்படிச் செய்தான். அதுகண்ட இந்திராதிதேவர்கள் மனந்திகைத்தார்கள்.

கவி.

நோக்கிவஞ்ச னெறிவயமாப்பரி
வீக்குதேரினின் மீதெழப்பாய்ந்துதோள்
தூக்குதூணியும் வில்லுந்தொலைத்தவன்
யாக்கையுஞ்சிதைத் திட்டெழுந்தனன்.

அப்போது சுக்கிரீவமகாராஜன் மனதுகொதித்து, அவனுடையதேரும் - அதில் வெகுசித்திரமாகக் கட்டியிருக்கின்ற குதிரைகளும் - அவனும் - பொடிப்பொடியாய்ப் போகும்படியாகப் பாய்ந்துகுதித்து, அவன்கையிலிருந்த வில்லையும் அம்பறாத்தூணியையும் பிடுங்கியொடித்து, அவனுடைய சரீரத்தைச் சிதைத்துவிட்டுப் போய்விட்டார். ஒருபெரியமலையானது அழிந்ததுபோல வச்சிரமுஷ்டி யென்கின்றவன் மாளமடையவே, மற்றராக்ஷசர்களெல்லா திற

கமாட்டாமல் நிலைகுலைந்து வரைப்பார்த்தோடத் தலைப்பட்டார்கள். அப்ப
டி யோடுகிறதைக்கண்டு அங்கிருந்த வானரர்கள் சமுத்திரகோஷம்போலே
ஆர்ப்பரித்துக் கொக்கரித்தார்கள். இவர்களிங்கே இப்படியிருக்க - கிழக்கு
வாசலிலே விழிப்பழும்போலச் செவந்த குரூரமான கண்களையுடைய ராக்ஷ
சர்கள் பிரளயகால சமுத்திரம்போற் புறப்படக்கண்ட வானரவீரர்கள், தங்
களோடு மாறுகொண்டெதிர்த்த பகைவர்களான அவ்விராக்ஷசர்கள்மேற் ப
கைத்து யுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள்.

விஷத்தையொத்த அந்தராக்ஷசர்கள் சூலம் – வாள் - தோமரம் - வா
ளா – சக்கரம் - அம்பு - இவைமுதலான ஆயுதங்களைச் சேனை மழையைப்
போல இடைவிடாமல் அவரவர்கள் கைகளாற் சோர்வடையாமற் பொழிய
வே, அதனுற் சில்வானரங்கள் வாலுங்காலும் அறுபட்டுத் தறிபட்டுக் குறை
பட்டு முறையிட்டு மடிந்தன. வெற்றிபெற்ற சிலவானரங்கள் வீசியெறிந்த ம
லைகளும் – மரங்களும் – யுகாந்தகால நமனைப்போல் போய்விழுந்தமாத்திர
த்தில், அநேகராட்சசர்க ளிறந்தார்கள். குதிரைகளும், யானைகளும், இரதங்
களும் விழுந்துநாசமாயின. அப்போது மற்றராக்ஷசர்கள் மிகவுங்கொதித்து
ஆக்கிரமித்துப் பராக்கிரமத்தோடு தண்டு வாள்முதலான படைகளினாலே வ
தைக்க, வானரசேனையின் சரீரங்கள் கிழிபட்டுச் சல்லடைக்கண்களாகக் கு
ழிபட்டு ரத்தப்பிரவாகமாய் நிற்கமாட்டாமல் ஓட்டமெடுத்தார்கள்.

அந்தச் சமயத்தில் அக்கினிபுத்திரனாகிய நீலன் அங்கு அண்டமளாவு
ம்படியாக நீண்டு பருத்து உயர்ந்திருந்த ஒரு பெரியமராமரத்தை அதிவேக
மாய்த் தனது பலம்பொருந்திய கைகளினால் வேரோடே பிடுங்கிக்கொண்டு வ
ந்து, இராக்ஷசப்பூண்டுகள் கூண்டோடழிந்து சின்னபின்னமாகும்படிப் பிர
ளயகாலாக்கினியைப்போல அடித்தான் அந்த மராமரத்தாலடியுண்டு அ
னேகந் தேர்கள் – தேர்த் தலைவர்கள், யானைகள் - யானைவீரர்கள், குதிரைக
ள் – குதிரைவீரர்களாகிய இவர்களோடு; அந்தராட்சசர்கள் தங்கள் தேர்க
ளிற்கட்டிவந்த சிங்கங்கள் - யாளிகள் - ஆகியயாவும் பூமியிலே விழுந்து மடி
யவே இரத்தப்பிரவாகம் எங்கும் பிரவகித்தோடிச் சமுத்திரத்தில் விழுந்து
நிறைந்தது. அவ்வாறடிந்த ராட்சசர்கள்போக மற்றவர்கள் ஓட்டமெடுத்
தார்கள். அவ்விராக்ஷசச் சேனைத்தலைவனை குப்பானு வென்பவன் அதிக
கோபத்துடனே தன்கைவில்லில் அஸ்திரங்களைப்பூட்டிப் பிரயோகித்தமாத்
திரத்தில், அந்த அஸ்திரங்கள் எண்ணிறந்தனவாய்ப் பிரவேசித்துப்போய் அ
நேக வானரங்களைத் துண்டந் துண்டமாகத் துணித்துவிட்டன.

அப்போதங்கு பார்த்துக்கொண்டிருந்த சாதிக்குத் தலைவனை இடும்ப
னென்பவன் ஒருபெரியபர்வதத்தைத் தனது புஜபலத்தினால் உக்கிரமாய்ப்
பேர்த்துக் கையிலேந்திக்கொண்டு கும்பானுவைக் கெதிராகவந்து குதித்து,
அவன் பிரயோகஞ்செய்த அநேக அஸ்திரங்கள் நெருங்கிவருகிறதற்குமுன்
னமே அவனுடைய கொடிகளும் - வில்லும் - அம்பும் - தேரும் - தேரிற்பூட்



டின குதிரைகளும் – நாசமடையவும், சிங்கங்கள் அழியவும், அந்தப் பர்வத
த்தினால் எறிந்தான். உடனே கும்பானுமேகத்தில் நின்றும் இடியானது பா
ய்ந்ததுபோலப் பூமியிழிந்து பிளக்கும்படியாகப் பாய்ந்து, வானரங்களெல்
லாம் புறங்காட்டியோடும்படி யுத்தஞ்செய்து, இடும்பன் மார்பிலே ஓங்கி ஒ
ருகுத்துகுத்திக் கொக்கரித்தான். அப்படிக்குத்துக்கு எதிரேநின்ற அந்தக்கு
ம்பானுவை இடும்பன் தன்னத்திலறைந்து, தலைமயிரைப் பிடித்திழுத்து மட
லோடுடல்சேரக் குண்டுகட்டாகக்கட்டி அவனைக்குப்புறத்தள்ளி, அவனி
டுப்பில் தன்னிரண்டு காலுமூன்றி எதிர்ந்துகொண்டு, மலைச்சிகரம்போலிரு
க்கிற அவன்தலையைக் கையினாற்பற்றி முனைசிதறும்படிச் சாடிப் பூமியிலெ
றைந்துகொன்றான்.

அதைக்கண்ட சுமாலி புத்திரனான பிரகஸ்தன் அதிகமனவருத்தமுற்று,
வில்லைவளைத்து வானரசேனைகள் பேரிலே ஒன்று - பத்து - நூறு – ஆயிரம்-
பதினாயிரம் – நூறாயிரமாகச் சரமாரிபொழிந்து, க்ஷண நேரத்திற்குள்ளே
வானரசேனைகள் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போகும்படிச் செய்தான்.
அதை இடும்பன்பார்த்து, வெகுகோபத்துடனே பக்கத்திலிருந்த ஒருமலை
யைப் பிடுங்கியெறிந்து, எமனைப்போல அந்தப் பிரகஸ்தன் சேனையை நாசப்
படுத்தினான். அப்போதப்பிரகஸ்தன் அஸ்திரவருஷத்தால் அந்தமலையை ஒ
ன்று நூறுபுதிரும்படிச் செய்தான். இடும்பன் பின்னையுமொரு மராமரத்தை
வேரோடே பிடுங்கிக்கொண்டு இடிபோல மோதியடிக்கவே. பிரகஸ்தன் கை
யிலிருந்த வில்லும் – தேரும் - குதிரைகளும் - தூள்தூளாகச் சிதறிப்போ
யின. இப்படித் தேரும் வில்லும் இழந்துபோகவே பிரகஸ்தன் இடியிடித்தா
ற்போலச் சத்தித்து, ஆகாயத்திலுள்ள சூரியன் பரிவேடத்தை நீக்கிக் கை
யிலொரு தண்டாயுதமெடுத்துக்கொண்டு பூமியிலிழிந்து ஓடிவருவதுபோல
வாயைமடித்துக்கொண்டு, இரண்டு கண்களிலும் அக்கினிப்பொறிகள் பறக்
கும்படியாக ஓடிவந்தான். வந்தமாத்திரத்தில் அக்கினிகுமாரனான நீலன் வெ
குகோபத்துடனே அவனுக்கெதிரே பாய்ந்து, அவன் பிடித்துவந்த தண்டா
யுதத்துடனே அவனைத்தூக்கி ஆகாசத்தில் விட்டெறிந்து கர்ஜித்தான்.

அப்போது சுமாலிபுத்திரன் ஆகாசத்திலே நின்றுங்குதித்து, தேவர்கள்
நடுங்கும்படியாய் நீலன்பேரிலே தண்டாயுதத்தினால் மோதினான். அந்த அடி
க்கு நீலன் இளையாமல், அடா இராவணப்பதிதனுக்கு இனியதூனைவனே! உ
னது தண்டாயுதத்தைப் பறித்தெறிந்துவிட்டு உன்பிராணனை இதோ முடிக்
கிறேனென்று சொல்லிக்கொண்டு தன்கையினாலோங்கி, அநேகரை வதை
த்து முன்குடித்திருந்த இரத்தத்தைப் பிரகஸ்தன் கக்கும்படி யறைந்
தான். அதற்குப்பிரகஸ்தன் சலியாமலும், கொஞ்சமாகிலும் கூசாமலும், நீல
னுடைய மார்பிலேயோங்கி ஒருகுத்துக் குத்தினான். இவ்விதமாக இருவருஞ்
செய்தயுத்த விதத்தையென்று எவராலேயுஞ் சொல்லமுடியாது. இப்படி
யுத்தஞ்செய்கிறபோது ராக்ஷசசேனாபதியான பிரகஸ்தனை நீலன் தனதுவாலி

ளுலேசுற்றிக் கட்டிவிட்டு, அவன் தோளிலேயும் - மார்பிலேயும் - தலையிலேயும் - கையிலேயும் - அடித்தான். இப்படி நீலனடிக்கவே இடிமுழக்கம்போன்ற அந்த அடியினுற் பர்வதமானது முறிந்துவிழுவதுபோலப் பிரகஸ்தன் துண்டு துண்டாகத் தறிபட்டுத்தெறிபட்டு விழுந்திறந்தான். இவ்வாறு பிரகஸ்தன் விழுந்திறந்ததைக்கண்டு தேவர்கள் சந்தோஷித்து ஆர்ப்பரித்தார்கள்.

அதைப்பார்த்து நெறித்த செம்பட்டமயிரையும் வெண்மையான கோரதந்தங்களையுமுடைய மற்ற ராக்ஷசர்கள் பயந்து முறிந்து, தங்கள் இருப்பிடமாகிய லங்கையைநோக்கி ஓட்டம்பிடித்தார்கள். இவர்களிப்படியிருக்க தெற்குவாசலின் வழியாகச் சுபாரிசனேடு புறப்பட்ட ராக்ஷசசேனைகளையெல்லாம் அங்கதன்கொன்று, அந்தச் சேனைக்குத் தலைவனை சுபாரிசனையும் நிலைகெடும்படி அடித்தான். அப்படி அடித்த அடியினுலே சுபாரிசனென்கிற அப்படைத்தலைவன் குருதிப் பதறி உதறிவிழுந்து செத்தான். அவன் இப்படி சாகவே மற்ற ராக்ஷசக் கூட்டங்களெல்லாம் நிற்கமாட்டாமல் ஓட்டம்பிடித்தார்கள். மேற்கு வாசலிலிருந்த இருநூறுவெள்ளம் ராட்சசசேனைகளும் - மகாபலசாலியான துன்முகனும் - ஒன்றாகப் புறப்பட்டுப்போய், அநுமான் கையென்கின்ற யமனுலே ஒருவருந் தவறாதபடி அத்தனைபேரு மடிந்து போனுர்கள்.

## வச்சிரமுஷ்டிமுதலிய இராட்சசவீரர்கள் மடிந்தமையை தூதுவராலறிந்த இராவணன் யுத்தசந்நாகனுய் வருதல்.

கவி.

அன்னகாலை யயிந்திரவாய்முதல்
துன்னுபோர்கண்ட தூதுவர்சென்றினர்
மன்னவேனென வந்துவணங்கினர்
சென்னிதாழ்க்கச் செவியிடைச்செப்பினர்.

அந்தச் சமயத்தில் கோட்டையின் கிழக்கு வாயில் முதலிய நான்குவாயில்களிலுஞ் செய்கின்ற யுத்தத்தின்பெருக்கைக்கண்ட தூதவர்கள் அதிசீக்கிரமாக ஓடோடிவந்து இராவணனைச்சேவித்து, ஓ எங்கள்சக்கரவர்த்தியே! தேவரீர் இந்த அதிசயத்தைக் கேட்டருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். அதற்கவன் தலையைச் சாய்த்துக்கேட்க, அவர்களவன் காதிலே ரகசியமாக, ஐயா இராவணேஸ்வரா! கிழக்குவாசலிலே புறப்பட்டுப்போன நம்முடைய சேனைகளும், எக்காலத்திலும் ஜெயம்பெற்று வந்தவனும்-உம்முடைய ஆக்ஞாசக்கரத்தைச் செய்தவனுமான பிரகஸ்தனென்னுஞ் சேனாதிபதியின் உயிரும், வானரசேனாதிபதியான நீலனென்பவனுல் வீரசொர்க்கம்போய்ச் சேர்ந்தன. வடக்குவாசலில் வச்சிரமுஷ்டியும், மேற்குவாசலில் மலையையொத்த துன்முகனென்பவனும், ஒருவருஞ் ஜெயிக்கவரிதான ஐம்பது வெள்ளஞ் சேனைகளோடிறந்துபோனுர்கள். தெற்குவாசலிற்போன நம்முடைய ராக்ஷசக்கூட்டத்தோடு சுபாரிசனு மிறந்துபோனுன். கும்பா



னுவும் அவனைப் பின்தொடர்ந்தான். மற்றவர்கள் போனவழியை நாங்கள் அறியோமென்று சொன்னுர்கள்.

இந்தவார்த்தையைக்கேட்கவே இராவணன் நெருப்பிலே நெய்யைவிட்டதுபோலக் கோபாக்கினிமண்டி, கண்களிலே அக்கினிச்சுவாலைகள் எழும்பும்படியாக, அடிக்கடிப் பெருமூச்சுவிட்டு, மறுபடியு மந்தத் தூதர்களைப்பார்த்து, பிரகஸ்தனை யார்கொன்றவன்? நிறுத்திப் பொறுமையோடு சொல்லுங்களென்று கேட்டான். அதற்கோர் தூதனவனைவணங்கி, சுவாமி! நீலனென்பவன் ராக்ஷசசேனைகளையெல்லாம் எங்குந்தலைகாட்டவொட்டாமற் சிதையவடித்துவிட்டு, பிரகஸ்தனுடனெதிர்த்து இருவரும் பற்பலவிதங்களாக யுத்தஞ்செய்தார்கள். அந்தச்சமயத்தில் நீலன் தன்கையினுலோங்கித் தலையிலடித்தான், அந்தப்பலமான அடியினுலே அந்தப் பிரகஸ்தன் மாண்டுபோனுன். அவனுடன்கூடத் துணையாகச் சென்றவர்களில் நாங்கள்மாத்திரந்தான் தப்பிப் பிழைத்துவந்தோம். மற்ற ராக்ஷசர்களனைவரும் சிதைந்து இறந்துபோய்விட்டார்கள். பிரகஸ்த னிறந்தவிதம் இதுதானென்று சொல்லி முடித்தனன்.

இந்தவார்த்தையைக்கேட்ட இராவணன் பல்லை நெறநெறவென்று கடித்து, திசாதிசைக ளெல்லாம் திக்கென்று ஒரேகாலத்திற் பற்றி யெரியத்தக்கதாகக் கண்களில் தீப்பொறிபறக்கப் பார்த்து, தனக்குச் சமீபத்திலிருக்கிற சில ராக்ஷசவீரர்களை நோக்கி, நம்முடைய சேனாதிபதி பிரகஸ்தன் ஒரு மரத்தையெடுத்துவந்து போர்செய்த அற்பக்குரங்கினுல் இறந்து போனுனென்று வெளியரங்கமாகத் தூதுவர்கள் சொன்னுர்களே: இந்திராதி தேவர்களையெல்லாம் ஜெயித்து அதிக கீர்த்திபெற்றவன் ஒரு குரங்கினுலே செத்தானென்கிற வார்த்தையைக் கேட்க என்காதும் வெந்து மனதும்வேகிறதே: அற்பஜெந்துவான ஒரு சிறிய எலியைப்போன்ற குரங்கு அடிக்க, மகம்மேருவைப்போலப் பருத்துயர்ந்த உருவமுள்ளவன் இறந்துவிட்டபடியால் பகையையும் - அக்கினியையும் - கொஞ்சமென் றெண்ணலாகாதென்று சொல்லி இரண்டுகண்களிலுந் தாரைதாரையாகக் கண்ணீரொழுக அங்கலாய்த்து, நல்லது: அஃதிருக்கட்டும். நமக்குக் குறைவுவாராமற் குதிரைப்படையுடனே நீங்கள்யாவரும் இக்ஷணத்திற் புறப்பட்டுப் போவீர்களென்று ஆக்கியாபித்தான்.

இப்படி கைலாசமலையை வேருடன் பறித்த பராக்கிரம சாலியான இராவணன் வில்வீரர்களான ராக்ஷசர்களை அனுப்பி, இனியாகவேண்டும் யுத்தகாரியங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு ஆயிரம் குதிரைகளைக் கட்டியிருக்கிறதும்—சமுத்திரம்போலச் சப்திக்கத்தக்க ஓசையையுடையதும் - தெய்வலோக முதலிய அனேக லோகங்களெல்லாம் சென்றதும் - முன்னுளில் தேவராஜனுகிய தேவேந்திரன் தோற்றுக்கொடுத்ததும் — அதிகபலமுள்ளதும் - உயர்ந்ததும் - விசாலமானதுமாகிய தேரிலே இரிஷபவாகனுருடரான உருத்திரமூர்த்தியை வணங்கி ஸ்தோத்திரஞ்செய்தேறி, மகம்மேருகிரிக்குச் சமா

னமாகிய வில்லைக் கையிலேந்திக்கொண்டு, மஹா அட்டகாசத்தோடு குணத்தொனி செய்தான். அம்மாத்திரத்தில் அந்தச் சப்தத்தால் தென்திசைக்கதிபனான கூற்றுவனுடைய உயிரும் அஞ்சித்திகைக்கிட்டுக் கலங்கி அறிவழிந்தது. பின்னும் தேவர்களுடைய மணிமார்பினிடத்திற்பட்டாலு முறியாதபல முன்னதும் ஒருவர்மீதும் இதுவரையிலும் பிரயோகஞ் செய்யாததுமான பற்பல ஆயுதவர்க்கங்களைக் கைகளிற்பிடித்துக்கொண்டு, வச்சிரகவசத்தை மார்பிலே தரித்துக்கொண்டு, தும்பைமாலையைச்சூடி, இருபக்கங்களிலும் வீசுகின்ற வெண்சாமரைகள் நுரைகள்போலவும் தனதுசரீரமே ஒரு கடல்போலவுமாகி; முத்துக்குடையென்கின்ற பூரணச்சந்திரனுக்குக்கீழே காணப்பட்ட கரியமேகம்போலப் பிரகாசித்தான்.

இப்படி பிரதாபலங்கேஸ்வரனாகிய இராவணன் யுத்தசன்னாகனாகவும் அளவற்ற சேனாசமுத்திரங்கள் அவனைப் பின்னுமுன்னுந் தொடர்ந்தன. முரசுகள் - இரணபேரிகைகள் - தவளச்சங்கங்கள் - காகளங்கள் - இவை முதலான வாத்தியங்கள் அண்டகடாகங்கள் முழுதும் படீரென்று வெடிக்கும்படியாய் முழங்கின.

கவி.

தேருமாவும் படைஞருந்தெற்றிட
மூரிவன்னெடுந் தானையின் முற்றினன்
நீரோரேழு முடிவினெருக்குநாள்
மேருசெல்வதை யென்னவிளங்கினன்.

யானைகளும் - தேர்களும் - குதிரைகளும் - இராக்ஷசர்களும் - வந்து நெருங்கி, யுகாந்தகாலத்திற் சப்தசமுத்திரங்களு மொன்றாய்ப் பொங்கி வந்ததுபோல நிறைந்தன. அதினடுவே மகாமேரு பர்வதம்போலத் தேரிலேறிவந்தவனான இராவணன் சுயஞ்சோதியாகப் பிரகாசித்தான். அந்தத் தேரிலே ச-ரி-க-ம-ப-த-நி என்கின்ற ஏழிசைகளையுங் காட்டுகின்ற வீணைக்கொடி ஆகாசமட்டு மளாவி, பிரளயகாலக்கூற்றுவன் நீட்டியசைக்கின்றநாவைப்போலத் தோன்றியது. இந்தயுத்தத்தில்வந்த ராக்ஷசசேனாசமுத்திரத்தைத் தாண்டுகிறதற்கு ஸ்ரீராமமூர்த்தியையே ஒரு தோணியாக நினைத்து யுத்தத்தைப்பார்க்கவந்ததேவர்கள், நெருப்புப்பற்றி எரிகின்ற மூங்கிற்காட்டை யுடைய மலைகளைப்போலச் செம்பட்டமயிரும் கறுத்ததேகமுமாய்க் காணப்படுகின்ற இந்தராக்ஷசர்களைப் பார்த்துப்பயந்து ஆகாசத்திற் சிதறிப்போனார்கள். தேரிற் கட்டியிருக்கின்ற கொடிகளும் - யானைமேற் பிடித்துவருகின்ற கொடிகளும் - ஒன்றோடொன்று கூடியளாவித் தோய்ந்தபடியினாலே, ஆகாசகங்கையுஞ் சுவறி வற்றிப்போகியது.

இப்படியாக ஆயிரங்கோடி பேய்கள் ஆயுதங்களைச் சுமந்துகொண்டு பக்கங்களில் வரவும், இரண்டாயிரங்கோடி சேமத்தேர்கள் பின்னேவரவும், அநேகராட்சசப் படைத்தலைவர்களுடைய சேனைகள் நெருங்கி ஆர்ப்பரித்துச் சூழ்ந்துவரவும், இந்தமூன்று லோகங்களிலும், வெற்றிகொண்ட இராவணன் புறப்பட்டு வந்தான்.



## இராவணன் யுத்தசன்னாகனைப் புறப்பட்டுவந்தானென வானரதூதர்கள்சொல்ல சுவாமியும் யுத்தகோலங் கொள்ளுதல்.

கவி.

ஓதுறகருக்கடற் கொத்ததானையான்
தீதுறுபிறதொழி லரக்கனிற்றதான்
போதருபெருங்களம் புகுந்தானென
தூதுவர்நாயகற் கறியச்சொல்லினர்.

அந்தச்சமயத்தில் வானரதூதர்கள் ஓடிவந்து லோகநாயகரான ஸ்ரீராமமூர்த்தியைச் சேவித்து, சுவாமீ! அற்பத்தொழிலையுடைய இராவணன் சத்தசமுத்திரம்போல அநேகஞ் சேனைகள்சூழ அதிககோபத்துடனே யுத்தகளத்தில்வந்து சேர்ந்தானென்று சொன்னார்கள். இராவணன் யுத்தத்திற்கு வந்தானென்கிற வார்த்தையை ஸ்ரீராமபத்திரர் கேட்கவே, சீதையை மீட்டதற்கொப்பான தைரிய சந்தோஷத்தினாலே அவருக்கதுவரையிற் சீதையைப்பிரிந்திளைத்திருந்ததோள்கள் பூரித்தன. உடனே மருங்கில் மரவுரிதரித்து அதன்மேல் இடதுபுறத்தில் உடைவாளை இறுக்கிக்கட்டினார். உற்பத்தி-திதி - லயமென்கின்ற மூன்றில் இடையிலுள்ள திதிகாலத்தில் இவ்வுலகவின்பத்தில் யாதொரு இன்பமுமில்லையென்று சாஸ்திரோக்தமாகச் செய்யுஞ் சற்கருமங்களாகிய சரியை-கிரியை-யோகமென்று மூன்றையும் அநுஷ்டித்துமுத்தியடைதற்கு முயலுவதாகிய சாதனங்களைச் செய்யும் பெரியோர்கள் ஞானக்கண்ணினாற் காணப்பட்ட காட்சியனாகிய பராபரவஸ்துவான ஸ்ரீராமர் பூர்வத்திலே வாமனாவதாரத்தில் தமதுதிருவடிகளால் உலகத்தையளந்தகாலத்து வேதங்களுக்கு மிந்தவுலகங்களுக்கு மெட்டப்படாமலிருந்த திருப்பாதவிரல்கள் பக்கங்களில் விரிந்திருந்த தன்மைபோல, அந்தத் திருவடிக்கு வீரகண்டாமணியைத்தரித்தார்.

மேலும் - ஆகாசத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கிறதுபோலத் தமது திருமார்பில் பிராட்டியில்லாம லிருப்பதினால் அவனுக்கு வருத்தமுண்டாகாதென்பதாகக் கருதினாரோ? தெரியாது: அந்தமார்பில் வச்சிரகவசத்தை இறுகக்கட்டினார். கற்பகக்கிளையில் கருப்பாம்பு சுற்றிக்கொண்டிருக்கிறதுபோல் கையில் முன்கைத்தோலைக்கட்டி, இராத்திரிகாலங்களிலும் பகற்காலங்களிலும் வேற்றுமையின்றி ஒரேதன்மையாகத் தானேமலர்ந்து பிரகாசிக்கின்ற தாமரைமலரிருந்ததேயானால் அதற்கொப்பாகப் பிரகாசிக்கின்ற கைவிரல்களுக்குப் புட்டிற்பூட்டி, உலகத்திலுள்ள பலபாஷைகளையுங்கற்றுத் தேர்ந்து அளவிறந்த சாஸ்திரங்களையும் ஆராய்ந்து - பஞ்சவிலக்கணங்களையுங் கற்றறிந்த மகாகவிகளினது நாவிலிருந்து வருஞ்சொற்கள் "தடைபடாமலும் ஒழுங்காயும் அழுந்தகருத்தை யுடையதாயும் சகலரும் மெச்சும்படியாயும்" சன்மார்க்கர்களைப் பூஷிப்பதும்; துன்மார்க்கர்களைத்தூஷிப்பதுமாகு மத்தன்மையாயிருக்குமோ? அம்பாத்திரி விளங்குகிற அக்ஷயத்தூணிரத்தையுந்தோளிற்

ருங்கி, மேகக்கூட்டங்களுக்கு மத்தியிற் பிரகாசிக்கின்ற மின்னலுக்கொப்பாக அளவில்லாத கிரணங்களுடன்கூடிய நெற்றிப் பட்டமுந் தரித்தனர்.

அன்றியும் - இளந்தளிரான இலைகளையுடைய ஆத்திமாலையுடனே அழகிய துளவமலர்மாலையும் தும்பைமலர்மாலையுந் தரித்து, இந்தப் பெரிய உலகமும் - இதிலுள்ள எல்லாச்சராசரங்களும் - தமது திருவயிற்றில் அடக்கிய சமஸ்த வஸ்துக்களும் - தாமேயென்று சொல்லும்படியாக விருந்தும் இப்போது தாம்வேறாக விருக்கின்றாராதலால் இதுவும் வேறொரு பொருளென்று சொல்லும்படியானதான மகாகோதண்டமென்னும் வில்லை இடதுகையிற் பிடித்துக்கொண்டவராய், வானரசேனைகளி னடுவே திருப்பாற்கடலுடனே ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் புறப்பட்டுவருகிறதுபோல வந்து, உலகங்களையெல்லா மழிக்கவந்திருக்கிற பிரளயகால உருத்திர மூர்த்தியைப்போல வானரசேனைகளுக்கெல்லா முன்னணிப்படையில் வில்லுடன் நின்றுகொண்டிருக்கிற தம்பியுடனே இரகுகுலோத்தமராகிய ஸ்ரீராமபத்திரர் வந்து கூடினர்.

அப்போது சப்தசமுத்திரங்களு மேககாலத்தில் திரண்டுவந்ததுபோல வந்த இராக்ஷசசேனைகளோடு மின்னலைப்போலப் பிரகாசிக்கிற பற்களையுடைய வானரசேனைகள் உயிர்களைக் கொண்டுபோகிற எமனைத் தம்வேலையிற் பிரவேசிக்கும்படியாக எதிர்த்துப் போர்செய்யத்தொடங்கின. அச்சமயத்தில் ராட்சசர்களுடையதலைக ளறுந்தன, குடல்கள் சரிந்தன, தேர்கள் சிதைந்துருண்டன, குதிரைகளிறந்தன, எங்கும் ராட்சசப்பிணங்கள் கும்பல்களாகக் குவிந்தன. அந்தப்பிணக்கும்பல்களை வாரிக்கொண்டு ரத்தவெள்ள மெங்கு மோடிப்பெருகியது. தெற்குவடக்காகியதிசைகளில் பற்பலகூட்டமாக நிறைந்த குரங்குப்பிணங்கள்பொற்குவியலைப்போன்றன, இராட்சசருடைய பிணங்கள் மலைக்கூட்டத்தை நிகர்த்தன. மேகக்கூட்டத்தையு மொத்தன. குரங்குகள் இரண்டுகைகளினுலறைய இராட்சசர்களேறிவந்த குதிரைகளுடைய காற்குளம்புகள் சிதைந்துபோய்விட்டன. அவ்வானரவீரர்களுடைய குத்தினால் ராக்ஷசர்கள் மார்பு பிளந்தோடிவிட்டார்கள். அவர்களுடையரத்தம் அங்கங்கு ஆறுகளாயோடியது.

அப்போது இராவணன் கண்களில்நெருப்புப்பொறிபறக்கத் தன்வில்லைவளைத்துத் தேவர்கள் நடுங்கக் குணத்தொனி பண்ணினன். அந்தச்சப்தத்தினாலே சிலவானரசேனைகள் இடிமுழக்கங்கேட்ட சர்ப்பக்கூட்டம்போல ஒடியொளித்தன. சிலவானரங்கள் போர்க்களத்தைவிட்டு ஓடிவிட்டன. சிலவானரங்கள் இனிப்பிழைக்கோமென்றஞ்சின. சிலவானரங்கள் பயத்தோட யத்தனித்தன. சிலவானரங்கள் மூர்ச்சையாய் விழுந்துவிட்டன. நெஞ்சிற் சற்றுமிரக்கமற்ற இராவணன் ஆகாசமுங் கிழிபடும்படியாகச்செய்த வில்லினது நாணொலிகேட்டு அவன்சாதியரான இராட்சசர்களேபயந்துநடுநடுங்கினால், குரங்குகள் பயந்ததை இன்னபடியென்று சொல்லவேண்டுமோ? ஆனால் விபீ



ஷணாழ்வாரும், இளையபெருமாளும், சுக்கிரீவமகாராஜனுமாத்திரம் பயமென்பதில்லாமற் சுவாமியுடனேகூட நின்றார்கள். மற்றவர்களெல்லாம் நாலுதிக்கிலும் ஓட்டம் பிடித்தார்கள். ஆகாசமுந் தூளிப்படலத்தால் மூடிப்போயிற்று. முல்லை - குறிஞ்சி - மருதம் — நெய்தல் - என்னு நால்விதநிலையாகிய இந்தப்பூமியை ஒருகையால்தூக்கி எடுக்கும்படியான பராக்கிரமசாலியாகிய ராவணனது விற்குணத்தொனியானது இந்தப்பூலோகத்தவர்களை நடுங்கச்செய்ததுமாத்திரமோ? சப்தலோகங்களை யழிக்கவரும் பிரளயகால மேககர்ச்சனைபோலத் தேவர்கள்செவியினு நுழைந்தச்சமுறச்செய்தது.

### சுக்கிரீவன் இராவணனோடு போராடி மெலிதல்.

கவி.

எந்திரசிகரமொன்றங் கிந்திரன்குலிசமென்னக்
காந்தியதுருமின்விட்டான் கவிக்குலத்தரசனக்கல்
நீந்தருநெருப்புச்சிந்தி நிமிர்சனுகிருதர்க்கெல்லாம்
வேந்தனும்பகழியொன்றால் வெண்டுகளாக்கிவீழ்த்தான்.

அப்போது வானராதிபதியான சுக்கிரீவமகாராஜன் இந்திரனது வச்சிராயுதத்தையொத்த ஒருபெரியமலையைப் பிடுங்கி, அதிவேகத்துடனே அக்கினி ஜொலிக்கும்படி ராவணன்பேரில் விட்டெறிந்தான். இராவணன் அதையொருபாணத்தினாலே பொடிப்பொடியாய்ச் சிதறிப்போகும்படியாகக் கீழே தள்ளினன். அதுகண்ட சுக்கிரீவமகாராஜன் அதிககோபத்துடனே கண்களிற் பொறிபறக்கவும், பூமியின் வயிறுகிழியும்படியாகவும், ஒருபெரியமராமரத்தை வேருடனே பெயர்த்துப் பிடுங்கிக்கொண்டான். அதைக்கண்ட ராவணன் அநேகயாயிரம் அம்புகளைப் பிரயோகம்பண்ணி, அந்தமரத்தை ஆயிரத்துக்கு மேலும் அதிகதொகையாகத் துண்டங்களாக்கிவிட்டான். பின்பு சுக்கிரீவமகாராஜன் மேருமலையினும்பெரிய ஓர்பருவதத்தைப் பேர்த்தெடுத்துக் கண்களில் நெருப்புப்பொறிபறக்க இராவணன்பேரில்வீசியெறிந்தான். அந்தப்பருவதத்தையு மிராவணன் ஒரம்பினு லுடைத்துத்தள்ளி, திக்குப்பாலகரை முதுகிட்டோடும்படி தோற்கடித்தவில்லைக் கெட்டியாகப்பிடித்து, சுக்கிரீவமகாராஜனுடையமார்பில் ஒருவச்சிரபாண மழுந்தும்படியாக விடுத்தான். அப்படி விட்ட பாணமானது மார்பிற்போய் அழுந்தவே சுக்கிரீவமகாராஜன் சரீரம் பதைத்தான்.

### ஆஞ்சநேயர் இராவணனுடனே போராடி மெலிதல்.

கவி.

சுநேகனைபடுதலோடுந் துணுக்கினன் றுளக்காமுன்னம்
குடதிசைவாயினின்ற மாருதிபுகுந்தகொன்னை
உடனுறைந்தறிந்தாவென்னவோரிமைபொடுங்காமுன்னம்
வடதிசைவாயில்வந்து மன்னவன்முன்புநின்றான்.

அப்படிப் பகைக்கிறதற்கு முன்னமே மேற்குவாசலிலிருந்த பெரிய திருவடியாகிய அனுமான், கடலிலிருந்து கிளம்பின கருடன்போல ஒருநிமிஷத்தில் வடக்குவாயிலிலோடிவந்து சுக்கிரீவமகாராஜனுக்கு முன்னாகநின்று, இராவணனைப் பார்த்து, ஓ இராவணனே! எங்களிராஜா ஆயாசந் தீர்ந்து வருகிறதற்கு முன்னே மிகுந்தபலசாலியான நீ என்னுடனே சற்று போர்செய்யவல்லையோ வென்று சொன்னார். அப்படிச் சொல்லவே வருவதானால் வாவாவென்று அதிககோபத்துடன்சொன்னான். இப்படிச்சொன்னராவணன்பேரிலே வேதங்களையொத்ததோள்களையுடைய அனுமான் ஒரு பெரியமலையைப் பெயர்த்துவீசியெறிந்தார். அந்தப்பருவதமானது ஆகாசத்திற்படர்ந்துவருகின்ற மேகங்களையெல்லாம் எரித்துவிட்டு நெருப்பை வீசிக்கொண்டு அதிகவேகமாய் வருகிறதைக்கண்ட ராவணன் பத்துப்பாணந்தொடுத்து ஆயிரங் கூறாக்கிவிட்டான். அதைப்பார்த்த தேவர்கள் பயந்து நடுங்கினார்கள். அனுமான் பின்னையொரு பர்வதத்தைப்பறித்துத் தமது தோள்பலங்கொண்டு வீசியெறிந்தார். அந்தமலையானது இடியைப்பார்க்கிலும் அதிகவேகமாய்ப்போய் அவனுடைய தோளினின்றிருக்கின்ற வாகுவலயத்துடன்கூடத் தானும் பொடியாய் உதிர்ந்துவிட்டது.

அதுகண்ட அனுமான் அதிககோபாக்கினியுடனே வேறொருபர்வதத்தைப் பேர்த்தார். அப்படிப் பேர்க்கின்ற அனுமானுடைய கைகளிலேயும், தோள்களிலேயும், பத்துப்பாணம் அழுந்தும்படி இராவணனெய்தான். அவைகளை தமது சரீரத்திலே அழுந்தியும் அதற்கு ஆயாசப்படாமல் மிகுந்த தைரியத்துடனே நின்றார். அதைக்கண்ட தேவர்கள் இப்படியார்தான் பொறுப்பார்களென்று ஆச்சரியப்பட்டு ஆரவாரித்தார்கள். அனுமான் பின்னுமொரு மராமரத்தைக் கையினாற் பிடுங்கி வேரோடே சுழற்றிவிட்டார். அப்படிவிட்ட அந்த மராமரம் இராவணனுடைய தேர்ச்சாரதியின் தலையைத் துணித்தெறிந்துவிட்டு, பக்கத்திலுள்ள ராக்ஷசர்களையும் அடித்துக்கொன்றுவிட்டது. உடனே வேறொரு சாரதிவந்து ரதத்தைச் செலுத்தினான். அப்போது கடல்பொங்கினதுபோலக் கோபங்கொண்ட ராவணன் நூறுபாணம் பிரயோகம்பண்ணினான். அந்தக்கணையும் வந்து சரீரத்திலழுந்தவே இரத்தவாறொழுகும்படியாய் மாருதிமெய்மறந்து மிகவுநொந்தார். அதுகண்டராவணன் அவரைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ குரங்குகளே! கல்லுமரமுங்கொண்டு கைகளினாலேயும், வாய்ப்பேச்சுகளினாலேயும், மயிர்வளர்ந்திருக்கின்ற தோள்களினாலேயுமா என்னை ஜெயிக்க வெண்ணியிருக்கிறீர்கள்? உங்களை ஒருபொருளாய் நான் வில்லெடுத்துநின்றால் வெகுபலவந்தர்களைப் போலச் சௌரியங்காட்டமாட்டீர்களா? என்றுசொல்லிப் பல்லைக்கடித்து, நெருப்புப்பொறிபறக்க நகைத்து, வில்லைவளைத்து, குரங்குச்சேனைகளின்மீது பிரளயகாலவிடிக்குச்சமானமான பாணங்கள் ஒன்றைப்பார்க்கிலும் மேன்மேலதிகமாய் ஆயிரங்கோடி பாணம் பிரயோகித்தான். அந்தப்பாணவருஷத்தால் சண்டமாருதத்தினாலே கடலலைந்து பொங்கியிரைவதைப்போல வானரங்கள் துன்பப்பட்டன.



## இலக்ஷுமணர் இராவணனோடுபோராட தனது அம்பறாத்தூணி யறுதல்.

கவி.

கலக்கியவரக்கன்வில்லின் கல்வியின்கவிகளுற்ற
அலக்கணுந்தலைவர்செய்த தன்மையுமமையக்கண்டான்
இலக்குவனென்னைவாளிக் கிலக்கிவனிவனோயின்று
விலக்குவனென்னவந்தான் வில்லுடைமேருவென்ன.

இப்படித் தம்முடைய சேனைகளை வருத்தப்படுத்தின ராவணனுடைய வில்வல்லமையையும், வானரங்கள்பட்ட பாடுகளையும், படைத்தலைவர்கள் செய்த காரியங்களையும்; இளையபெருமானாகிய இலக்ஷுமணர் கண்டு, நம்முடைய பாணத்துக்கே இவன்லக்ஷியமானவன். இன்றைக்கிவனை அதஞ்செய்வோமென்றெண்ணி, தனுசோடுகூடின மேருமலையைப்போலவந்து எதிர்த்தார்.

அப்படி எதிர்த்த ராஜாதிராஜனாகிய தசரதமகாராஜ குமாரரான லக்ஷுமணர் வில்லின்குணத்தொனி பண்ணினார். அதைக்கேட்ட ராவணனுடைய நிலைமை யென்னவென்று சொல்லப்போகிறேன்? அந்தக்குணத்தொனியைக்கேட்டுப் பிரளயகால மேகக்கூட்டங்களினிடியென்று மூன்றுலோகத்தவர்களும் திகைத்து நடுங்கினார்கள். சத்துருக்களெல்லாரும் சிங்கத்தின்தொனியைக்கேட்ட யானைகள்போலப் பயந்து திடுக்கிட்டார்கள். அக்கால் பிரமித்தபடி நின்ற ராவணன் தன் பக்கத்தில்நின்ற ராக்ஷசர்கள் மனது முறிந்து கலங்கின தன்மையைப்பார்த்து, இந்த மகா வீரரான ஸ்ரீராமபிரானுடைய திருத்தம்பியாகிய இளையபெருமானுடைய வில்லினது நாணோசையென்றறிந்து, தன்பத்துத்தலைகளையும் அசைத்து, இவனும் ஒருமனிதனோவென்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தான் அப்படி யவனிருக்கும்போது இலக்ஷுமணப்பெருமானுடைய வில்லிலிருந்து புறப்படுகிற பாணமழைகள் இரதங்கள்பேரிலும், குதிரைகள்பேரிலும், யானைகள்பேரிலும் இராக்ஷசர்கள்பேரிலும், மென்மேலும்வந்துபாய்ந்து எங்கும் ரத்தப்பிரவாகமாக்கிவிட்டன.

சிலபாணங்கள் தேர்ப்பாகர்களுடையமுகங்களிற்பட்டுக்கீழ்நோக்கியுடலினூடுருவிப் பிளந்து தேரினச்சினைமுறித்து, கீழ்லோகங்களையும் ஊடுருவிச்சென்றும் ஓய்வில்லாமலோடின. அப்போது பத்துக்கோடி ராக்ஷசர்கள் யானை-குதிரை-தேர்-இவைகளைப் படைமுன்னணியாக்கிப் பற்பல ஆயுதங்களைப்பிரயோகம்பண்ணிக்கொண்டு, இம்மனுஷன் நம்முடைய அரசனுடனெதிர்த்தால் நமக்குள்ள சௌரியம் என்ன பயன்படப்போகிறதென்று சொல்லிக்கொண்டு, தரித்திரம் நாசமாகும்படியாகக்கொடுக்கிற ஒருபிரபுவை அனேகதரித்திரர்கள் போய்ச் சுற்றிக்கொள்வதுபோல இராமானுஜரைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். அப்படி சுற்றிக்கொண்டு அந்தராக்ஷசர்கள் எறிந்தவைகளும் எய்தவைகளுமாகிய எல்லா ஆயுதங்களையும் இலக்ஷுமணர் சிலபாணசரங்களினாலே யழித்து, பின்னும் ஓயாமற் பாணங்களைப்பொழிந்து அந்த ராக்ஷசர்களைச் சம்மரித்தார். அப்போது ராக்ஷசர்களுடைய உயிர்களை

யுண்டு எமனும் திகட்டிப்போனான். பெருகிய உதிரவாறுகளோ சமுத்திரத்திற் கோடவொட்டாமற் பிணங்கள் மலைபோலக்குறுக்கே மறித்துக்கொண்டன.

இப்படி இளையபெருமாளாகிய இலக்ஷுமணர் எய்கிற பாணங்களினாலே ராக்ஷசர்களுடைய தலைகளெல்லாம் அற்றன. வயிரம்பற்றிய கால்களெல்லா மற்றன. மலைபோன்ற தோள்களெல்லா மற்றன. மார்புகளெல்லாம் அற்றன. அவர்களுடைய வீரநிலைமையெல்லாம் அற்றன. பலங்களெல்லாம் அற்றன. வளைந்தவில்லுகளெல்லா மற்றன. அவர்கள் கற்றிருந்த யுத்தவகைகளெல்லா மற்றன. தேர்களெல்லாம் துணிந்தன. குதிரைக்கூட்டங்களெல்லாம் துணிந்தன. செவத்தகண்களையுடைய மேகம்போன்ற யானைகளெல்லாம் துணிந்தன. வீரர்களுடைய பாதகண்டாமணிகளெல்லாம் துணிந்தன. கழுத்திலே தடிபோலக்கிடக்கிற மாலைகளெல்லாம் துணிந்தன. கர்வித்து நின்றிருந்த அவர்களுடைய நிலையெல்லாம் குலைந்துபோயின. அவர்கள்செய்கிற போர்களெல்லாம் சின்னபின்னப்பட்டுவிட்டன. பூர்வத்திலே ஜெயம்பண்ணின கீர்த்திகளு மழிந்துபோய்விட்டன. மலைப்பாம்புபோலஞ்சாமையும், கடினமான கால்களையுமுடைய ராக்ஷசர்கள் விழுந்தார்கள். அவர்கள்பேரிற் புரவிகள் விழுந்தன. அவைகளின்பேரிலே யானைகள் விழுந்தன. அவைகளின்பேரிலே ரதங்கள் விழுந்தன. அவைகளின் பேரிலே ராக்ஷசர்தலைகள் விழுந்தன. பிணங்களு மிரத்தங்களுமா யந்தரணக்களத்திலே கொஞ்சமாகிலும் வெளியில்லாமல், இந்தப்படியே ஒன்றின்மேலொன்றாக விழுந்து மாண்டன.

அப்போதந்த ராமானுஜர் வில்லிலே அம்பு தொடுக்கின்றதையும், பிரயோகிக்கின்றதையும், ஒருவருங் காணவில்லை. அந்த அம்புகள் வரிசை வரிசையாய்ப்போகின்ற அடுக்கையுங் கண்டவர்களில்லை. அவைகள் வேகமாய் வந்துபடுதலால் வீழ்கின்ற பிணக்குப்பல்களின் பந்திகளைமாத்திரமே அங்கங்கே கண்டார்கள். அத்தனை கடுவேகசரவேகமாய் இலக்ஷுமணர் சரங்களைப் பிரயோகம்பண்ணினார். பர்வதங்கள்போல யானைகளும் — குதிரைகளும் — இரதங்களும் — யாளிகளும் சிங்கங்களும் — மற்றவைகளும் நிறைந்து வந்தவைகளுக்கோ ஒரு அளவுமில்லை. அவ்வளவும் வந்து நின்று நின்று நேரமாகிலு நிற்கவுமில்லை. எல்லாம் அந்தரணக்களத்திற் பிணமாய்க் கிடந்தன. அநேகராக்ஷசர்கள் சூலங்கள் — வேல்கள் — வில்லுகள் — முதலான ஆயுதங்களையெடுத்து இலக்ஷுமணர் பேரிற் பிரயோகம் பண்ணினார்கள். அவையெல்லாம் அவருடைய பாணத்தினால் தூறுதூறு துண்டங்களாயற்றுப்போயின வல்லாமல் ஒன்றாகிலும் தப்பவில்லை. அப்போது ராக்ஷசசேனைகள் நிலைத்துநிற்கமாட்டாமற் பின்னிட்டு ஓட்டமெடுத்து, வழிகளிலே பந்துக்களுடைய தலைகள் தங்கள் காலிலே இடறுவதினால் ஒப்பந்துவிழுந்து மாய்ந்தன. இப்படியாகவே ராவணன் அவ்விலட்சுமணருடைய அம்புகளைப்பார்த்து, வடவாமுகாக்கினிபோல மனங்கொதித்து, காற்றுக்குச் சமானமான குதிரைகள் பூட்டியிருக்கின்ற தன்தேரை மதிவேகத்துடனே செலுத்திக்கொண்டுவந்து லட்சுமணருடன் எதிர்த்தான்.



அப்போது கூற்றுவனுக்குப் பித்தேறினதுபோலக் கொல்லுகின்ற லட்சுமணர் கோபமும் தாபமும் வேறென்று பேதம்தோன்றாதபடி ராவணனைக்கிட்டிவந்து, நான் காத்துக்கொண்டிருந்த பிராட்டியாரை என்காவலைத்தப்பும்படி மோசம்பண்ணி எடுத்துக்கொண்டுவந்த திருடா! இன்றைக்குநீ தப்பிப்போகமாட்டாய். என்றுசொல்லி அக்கினிச்சுவாலையாகப் பெருமூச்சுவிட்டுத் தலைபோட்டைப்பிளக்கின்ற கொடியவிஷத்திற்குச் சமானமான பாணங்களை ஒன்றின்பின்னொன்று அடிக்கடி அடுக்கடுக்காய்ப் பிரயோகித்துப்போர்செய்தார். இப்படியாகப் பொழிந்த பாணங்களெல்லாம் தன்பேரில் வராமல் நடுவே முறிந்துபோகும்படியாக இராவணன் அதிகூர்மையான பாணங்களினாலே தடுத்தான். அதுகண்ட லட்சுமணர் இப்போது நான்விட்டது ஒருவான பாணங்களனைப்படியின்றிலே அறுத்தாய். இனியறுப்பாயென்று மேகம்பொழிகிறதுபோல முன்னிலு மேலான அநேக சரமாரிகளைப் பொழிந்தார். அச்சமயத்தில் ராவணன் சரத்கால மழையைப்போல அஸ்திரங்களைப் பொழிந்து இலட்சுமணர்விட்ட பாணங்களை விலக்கி, இலட்சுமணர் மறுபடியும் பாணப்பிரயோகஞ் செய்யவொட்டாமல் அவருடைய அக்ஷயமாகிய அம்பறாத்தூணியை அறுத்துத்தள்ளினான்.

## ஆஞ்சனேயர் இராவணனோடு குத்துச்சண்டை செய்து மெலிதல்.

கலி.

அப்போரதனையர்வாறிய வனுமானழல்விழியாய்
௧ பொய்ப்போர்செயுரிபேலென வென்றேரெதிர்புகுந்தான்
மெய்ப்போதகமெனமுக்கவன் கடுந்தேரெதிர்நடந்தான்
இப்போரொழிபிற்போருள வவைகேளெனவிசைத்தான்.

அந்தத்தருணத்திலே முன்னம் இராவணனோடு போர்செய்துமெலிந்து இளைப்பாறியிருந்த அனுமான் கண்களில் அக்கினிப்பொறிபறக்கவந்து, பொய்ப்போர் செய்யாதே: பொய்ப்போர் செய்யாதே: என்று அந்த ராவணனுடைய தேருக்குமுன்னாக மறித்துநின்றுகொண்டு, இந்த யுத்தத்தைவிடு, வேறொரு நல்லயுத்த மிருக்கிறது. அதன் விபரத்தைக் கேளென்று சொல்லுகிறார். ஓ இராவணா! நீ சொர்க்கமத்திய பாதாளமென்னு மூன்றுலோகத்தையும் ஜெயித்து இளையாமலிருந்த பலத்துடனே தேவேந்திரனுடைய கீர்த்தியை யழித்துப்போட்டாய். திக்குவிஜயம்பண்ணினாய். ஆனாலும் இன்றைக்கு உனக்கு அபஜெயம் வரும் என்றுசொல்லி அந்தராவணனுக் கெதிரில் கையைத்தூக்கி, அந்தக்கை திரிவிக்கிரமருடைய திருவடியைப்போல எல்லாலோகங்களையு மூடிக்கொண்டு வளர்கின்றதை எங்கும் வெற்றிகொண்டு கொடிகட்டியிருக்கின்ற அந்த ராவணனுக்குக்காட்டி, நீ வில்முதலாகிய ஆயுதபரிசைகளெல்லாம் வெகுசமர்த்துடனே கற்றிருக்கிறாய். இருபதுகைகளுடனே யிருக்கிறாய். நீ மிகுந்தபலசாலி. யுத்தத்திற் கைதேர்ந்தவன். மேலு நல்ல வீரனுமாயிருக்கின்றாய், என திருகைக்குமுன் நீசற்றுநேரம்நில்லு பார்ப்போமென்று சொல்லிப் பின்னும் சொல்லுகிறார்.

ஓ தசக்கிரீவனே! நீ யிதுவரையில் அக்கினியைப்போலச் சுவாசமிட்டுக் கொண்டு உனக்குச் சமானமில்லையென்று மிருந்த ஆண்மையுடனே யிருந்தாய். ஆகிலும் - நீ சிவபிரானிடத்திற் பெற்ற வாள்வல்லமையும், உன்னுடைய சப்தலோகாதிபத்தியமும், சப்தபிராகாரங்களையுடைய இலங்காராஜ்ய சம்பத்தும்; உன்தைரியமும், ஒருவரு மொப்பில்லாம லாளுகைசெய்கிற தன்மையும், உன்தோள்வல்லமையும், உன்பிரதாபமும், ஆகிய விவையெல்லாம் என்னொருகுத்தினாலே நாசமாக்கிவிடுகிறேன். பலவார்த்தைகள் சொல்லியென்ன? கைலாசபர்வதத்திற்கும் செவ்வரக்கைப்போன்ற கண்களையுடைய அஷ்டதிக்கஜங்களுக்கும் அசையாத அதிகபலமுள்ள இருபதுதோள்களுள்ள மார்புடையவன் நீயாயின், இப்போது குரங்கினுடைய கையினாலே குத்துகிறதைப் பொறுத்துக்கொள் பார்ப்போம். இப்போது நான் குத்துகிற குத்துக்கு நீசாகாமலிருந்தாயே யானால், பிறகு உன்னுடைய இருபது கைகளினாலேயும் என்னைக்குத்து. அதற்குநான் இறந்துபோய்விடுவேனேயானால், அப்பால் உன்னுடனே எதிர்த்துப் போர்செய்யவருகிறதில்லை. என்று சிறியதிருவடியாகிய ஆஞ்சனேயர் சொன்னார்.

அதற்கு இராவணன் சந்தோஷப்பட்டு, ஓ அநுமானே! நீ நல்லசௌரியவந்தனாற் சொல்லுகிறவார்த்தையே சொன்னாய். நீ பலசாலியே; சந்தேகமில்லை. இல்லாவிட்டால் என்னெதிரே வேறொருவர் நிற்பார்களோ? இவ்வளவு தைரியமாய் நீ வந்து நின்றாயல்லவா? உனக்கு இந்தஉலகத்திலாவது மற்றெங்கேயாவது சமானமுண்டா? உன்கையிலொரு ஆயுதமுமில்லாமல் நீ பொருவனாய் முன்னே எங்கள் பந்துக்களையெல்லாம் கொன்று, தேரின்மேலேறி வில்லைவளைத்துக்கொண்டு மிருந்த சேனைகளுடனேவந்த என்முன் இவ்வாறே தனியேவந்து நின்றாய். ஆகலால் - உனக்குச் சமானமானவர்க ளாரிருக்கிறார்கள்? இப்படி நீ நின்றபோதே உன்சாமர்த்தியத்தை கானறிந்துகொண்டேன். ஆயினும் - அந்த மும்மூர்த்திமுதல் மூன்று லோகங்களிலுமுள்ள தேவர்களும், தானவர்களும், மற்ற வீரர்களும், பித்துப்பிடித்தல்லாமல் என்னெதிரே நின்று மார்பிற் குத்தென்று நிற்கத்தக்கவர்க ளாரிருக்கிறார்கள்? இந்த ஆச்சரியம் வெளியிற் சொல்லத்தக்கதல்ல. எனக்கு இருபதுகைகளிருக்கின்றன. அஷ்டதிக்குயானைகளும் தோற்றதென்கிற புகழுமுண்டு. இரண்டுகைகளையுடைய நீ என்முன் இப்படிச்சொன்னால், இனிமேல் என்யுத்தமானது எனக்கு வெற்றியைத்தரத்தக்க தல்ல.

ஐயா ஆஞ்சனேயனே! எட்டுத்திக்குகளையுஞ் ஜெயித்த என்கீர்த்தி யழியும்படியான இகழ்ச்சிமுன்னேயே உண்டாயிருக்கின்றது. நீ என் உயிருக்குச் சமானமான அதிகாயனென்னும் புத்திரனைத் தலையைச்சேதித்து, இரத்தவெள்ள மிலங்கையெல்லாம் பரவச்செய்தாய். அத்துக்கம் இன்னு மொழியவில்லை. இப்படியிருக்க - இப்போது நீ என்முன்னின்று இவ்விதமாய்ச் சொன்னாய். நீ சொன்னது இசைவானது தான். இது வீரர்களுக்குப் பொருத்தமானதே;



நீ இப்போது பாவித்ததே சரி. வேறேபேச்சதற்கு? உன்சொல்லுக்குப் பின்னிட்டுத் தலைகுனியமாட்டேன். ஆதலால் - இந்த உலகங்களெல்லாம் பார்க்க நீ என்மார்பிலே குத்தென்று சொன்னான். இந்த வார்த்தையைக்கேட்ட அநுமான் இவன்மகா சௌரியவந்தனென்று மெச்சி, வீரகர்ஜனையுடன் அவன் தேரின்மேற் பாய்ந்து, கண்களிலே அக்கினிப்பொறி சிதறப்பார்த்து, அவன் மார்பிலே தரித்திருக்கிற ஆபரணங்களுடன் கவசங்களெல்லாம் பொடிப்பொடியாய்ச்சிதற வச்சிரம்போலிருக்கின்ற தம்முடைய கையாலோங்கிக்குத்தினார்.

அப்போது பர்வதங்களெல்லா மணலைப்போலுதிர்ந்தன. இராவணன் கண்களில் அக்கினி உதிர்ந்தது. அவன் தலைகளிலிருக்கின்ற மூளைகள் தயிர்போலத் ததும்பிக் குழம்பின. இராக்ஷசக்கூட்டங்களுக்கெல்லாம் பிராணன் கழன்றது. எல்லாவானரங்களுக்கும் மயிரும் பல்லுகளு முதிர்ந்துவிட்டன. மேகங்கள் மழையைக்கக்கின. அந்தராக்ஷச குலாதிபனுடைய கைகளினும், மற்றராக்ஷசவீரர்களுடைய கைகளினும், ஏந்தியிருந்த விற்களிற் பூட்டின நாணிகளெல்லாமறுந்தன. சமுத்திரம் நிலைகுலைந்தது. சப்தகுலபர்வதங்களும் அதிர்ந்து கல்லுகளைச் சிந்தின. சூரியகிரணங்களு முதிர்ந்தன, திக்கஜங்களுடைய பல்லுகளு முதிர்ந்தன. சகலருடைய ஆயுதங்களும் தரையிலே விழுந்தன. இராவணனுடைய மார்பிலே நெருப்புப்பொறி பறந்தது. அநுமானுடைய கைக்குத்துபடவே இராக்ஷசாதிபதியான ராவணனுடைய மார்பிலே பூர்வத்தில் அஷ்டகஜங்களுடைய தந்தங்கள் தைத்தமுந்தி யொடிந்திருந்தவைகளெல்லாம் கீழே பலபலவென்று உதிர்ந்துபோயின.

மேலும் அவனது அன்று வைத்திருந்த கவசத்திலழுத்திய இரத்தினங்களெல்லாம்பேர்ந்து திக்குத்திக்குகளிற் சிதறி, ஆகாசத்திலிருந்து நக்ஷத்திரங்களுதிர்ந்து விழுவதுபோல விழுந்தன. அக்கால் அவன்கண்களிற் பொறியெழும்பியது. பிரளயகாலத்துச் சண்டமாருதக் காற்றடிக்க அலைந்து தள்ளாடிச் சாய்ந்த மகாமேரு பர்வதம்போல இராவணன்சாய்ந்தான். அதைக்கண்ட தேவர்கள் சந்தோஷித்து, ஆர்ப்பரித்து, சிறியதிருவடியாகிய ஆஞ்சனேயர்மேலே புஷ்பமாரி பொழிந்து வாழ்த்தினார்கள். இராக்ஷசர்களெல்லாம் பயந்தார்கள். வானரர்களெல்லாம் ராவணன் தோற்றுப் போனானென்று சரீரம் புளகாங்கிதமாய்க் கூத்தாடினார்கள். அப்போது ராவணன் - மலைகளிலிருந்து யோகாப்பியாசம்பண்ணிச் சுவாசவாயுவினிலையை யறிந்த தபோதனர்கள் தங்கட்குக் கைவந்தசித்தியால் தங்கள் தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்திற் புகுந்து அந்தத்தேகத்துக்கும் மாறுபாடு வந்தகாலத்தில் தங்கள் பழையதேகத்தை யடைவதுபோலவும், அந்தத்தேகத்திலனுபவிக்கக்கூடாத இஷ்டவிஷயங்களை மற்றொரு தேகத்தையடைந்து அநுபவித்துவிட்டு மறுபடியும் பூருவதேகத்தை யடைவதுபோலவும் மூர்ச்சை

தெளிந்து எழுந்து பெருமூச்சுவிட்டு,கண்களில் அக்கினிப்பொறிகளைக் கக்கிக் கொண்டு வாயுபுத்திரனைப் பார்த்துச் சிலவசனம் சொல்லுகிறான்.

ஒருவருஞ் சமானமில்லாத ஓ வீரனே! நீ என்னைச் சின்னபின்னப் படுத்தினாய் இனியென்னுடனே யுத்தஞ்செய்ய மாட்டாயல்லவா? பலமென்பதும், அஃதுண்டென்பதும், உன்னிடத்திலேதா னிருக்கின்றது. மற்றவர்களெல்லாம் பேடிக்குச்சமானமானவர்கள். என்னை மூர்ச்சிக்கும்படியாகக் குத்தியபடியால் உன்பலத்தை இந்தச் சப்தலோகங்களிலும் நிறைத்துவைத்தாய். பிரமதேவன் வந்து சலிக்கக்கடவாயென்று சபித்தாலும் நான்சலியாதவன். வருத்தமென்கிறதை இதுபரியந்தம் அறிந்தவனல்லாத என்னை, அதையறியப்பண்ணினாய். ஓ ஜயசாலியே! இன்னம் ஒருவார்த்தையிருக்கிறது சொல்லுகிறேன் கேள்.உன்மார்பிலே பிரளயகாலத்திடிபோல என்கையால் ஒருகுத்து குத்துகிறேன், அதற்குத்தப்பிப் பிராணனுட னிருந்தாயேயானால், உனக்குச் சமானமானவர்கள் இந்த மூன்றுலோகங்களிலும் ஒருவருமில்லை, நீயே இன்றைக்கும் மற்றென்றைக்கும் உள்ளவன். உனக்கு வேறே பகையுமில்லையென்று சொன்னான்.

அதற்கு அனுமான் அவனைநெருங்கிப் பார்த்து, ஓ நசக்கிரீவனே! எப்போது என்கைக்குத்திறுந் சாகாமல் நின்றுபேசினையோ? அப்போதே நீ என்னை ஜெயித்தவனல்லவோ? நீ நல்லசமர்த்தன், மிகுந்தபலவானென்று எதிரேநடந்து, அவன்சமீபத்திலேபோய், உன்குட்டை நீ வாங்கிக்கொள்ளென்று மார்பைக்காட்டி நின்றார். அப்படி மிகுந்த உற்சாகத்துடனின்ற ஆஞ்சநேயருடைய மார்பிலே இராவணன் தன்பல்லை இறுக்கிக்கடித்துக்கொண்டு, மலைத்திவாரம்போன்ற பத்துவாய்களையுமடித்து, இருபதுகண்களினு நெருப்புப்பொறிபறக்கக் கைகளைமுறுக்கி, பலவிரல்களு நெரியவிசி, அஷ்டதிக்குகளும் போதாதென்னும்படி நீட்டி ஓங்கி இருபதுகையினாலேயும் குத்தினான்

கவி.

பன்னக்கடல்கொள்ளப்படர் படிபேரினும்பதையா
வன்னப்பெறவெள்ளத்தொழும் வலியாரினும்வலியான்
கன்னக்கறையுள்ளத்ததிர் கழல்வெய்யவன்கரத்தால்
தன்னத்தனர்வெள்ளிப்பெருங் கிரியாமெனச்சலித்தான்.

அந்தகுத்துப்படவே மிகுந்த ஆழமுள்ள சப்தசாகரங்களும் பிரளயகாலத்திற்பொங்கியெழுந்து பதினான்கு லோகங்களை யழிக்கினும் சற்றேனுஞ் சலியாத வல்லமையுடைய சிரஞ்சீவிகளிற் றீர்க்க சிரஞ்சீவியான ஆஞ்சநேயர் வஞ்சமாகிய கறையையுடைய நெஞ்சத்தையும், சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த கால்களையுமுடைய தீமையாளனாகிய இராவணன் தனது கரங்களினால் பேர்க்க மிகவும் சலித்த வெள்ளியங்கிரம் வாய்ந்த கைலாசபர்வதம் போல் தேகம் சலித்துத் துடித்தனர். அப்படி யனுமான் சலிக்கவே தேவலோக



மெல்லாஞ் சலித்தன. தர்மஞ்சலித்தது. சத்தியமொழி சலித்தது. இவையன்றித் தவமும், வேதமும், நீதியும், கருணையுமாகிய சகலமுஞ் சலித்தன.

அப்போது வானரவீரர்களனைவரும் ஏககாலத்திலே ஆளுக்கொரு பருவதமெடுத்துக்கொண்டு, ஆகாசத்தில் வெளியில்லை யென்னும்படியாய் நிறைந்து, பிரளயகாலத்தில் உலகங்களையெல்லாமழிக்க மேகங்கள் சொரிகிறது போல ஆயிரங்கோடிக்கு மதிகமான அந்தப்பருவதங்களை இராவணன்மேலே யெறிந்தார்கள். அதுகண்டு தேவர்களும் பயந்து ஓடிவிட்டனர்கள். இப்படி வானரவீரர்கள் மிகுந்தகர்வத்துடன் மலைகளை யெறிந்து ஆகாசத்திலிடமில்லாமல் ஒருவர்க்கொருவர் நெருங்கி விலகாமல் நிறைந்து நின்றபடியால், சூரியனு மறைந்து உலகமெல்லாமிருண்டன. வானரர்களெறிகிற மலைகளினால் ராட்சசர்கள் நசுங்கிப் போய்விடுவார்களென்று நினைத்து, தேவர்களெல்லாம் இனிநமக்கென்ன பயமென்று ஆகாசத்தில்வந்து சூழ்ந்துகொண்டார்கள். வானரர்களெறிந்தமலைகளொன்றுடனொன்று தாக்குண்டுபட்டு, இடிகள்போல நெருப்புப்பறக்கும்படி ஒன்றோடொன்று உராய்ந்துகொண்டு, கோதண்டத்தினின்றும் புறப்படுகின்ற அம்புகள்போலவும் – சிலாவருஷம் போலவும் – பூமியில்விழவே; இராக்ஷசச்சேனைகள் பயந்தோடத் தலைப்பட்டன. அந்தப்பர்வத ராசிகள்போய் விழுவதினாற் சமுத்திரங்களும் தூர்ந்துவிட்டன. உலகமெல்லாம் இன்றையதினம் கற்களால் முழுகிப்போய்விடுமென்கிற பெருந்தொனி எங்குமுண்டாயிற்று.

இந்தப்பிரமாதத்தைக்கேட்ட ராவணன் மிகுந்தகோபங்கொண்டு, தேவர்களுடைய புகழை வேரோடு விழுங்கிய தன்வில்லைவளைத்து, ஆயிரமாயிரங்கோடி பாணங்களைப் பிரயோகஞ்செய்து, அந்தமலைகளையும் பற்பல ஆகாயப் போகும்படி யுடைத்துக் கீழேதள்ளினான். இப்படி அம்புகளினாலே துண்டுகளாய் கீழ்விழப்பட்ட பருவதங்கள்யாவும் இராவணனனிந்திருந்தமலைகள் துண்டுதுண்டா யறுந்துவிழவும்,யானைகளெல்லாம் துண்டங்கள் படவும், ஆளிகள் சிங்கங்கள் கட்டிப் பெரிய கொடிஞ்சிகளுடன்கூடிய தேர்களெல்லாம் சின்னபின்னமாய் நசுங்கிப்போகவும்,கீழ்விழுந்தன. தேவர்களும் ராவணனுடைய பாணம்பாயும் விதமும்,மலைகளொன்று நூறாயிரமாகமுறிந்தவிதமும், மலைகளிடியுண்டு பொடிப்பொடியாய் நொறுங்கினவிதமும் கண்டு; இந்தக் கொடியவன் இவ்வண்ணம் செய்யவும் வில்வித்தைகற்றானேயென்று பயந்து கைகளைவிதிர்த்தார்கள். இராவணனுடைய பலத்தை நாசப்படுத்துவிரேமென்று வானரகூட்டங்க ளெடுத்தெறிந்த மலைகளையெல்லாம் அவனுடைய பாணங்கள் பொடியாக்கிவிடவே, அப்பொடிகளினால் உலகத்தைச்சுற்றியிருந்தகடல் தூர்ந்துவிட்டது. இரணக்களத்தில் நின்றவர்களின் தேகத்தி

படிந்த புழுதிகளையெல்லாம் அவர்கள் தேகத்திலிருந்து வழிகிற ரத்தவெள்ளங் கழுவிவிட்டுப் பூமியையுந் துடைத்துக்கொண்டோடியது.

அப்போது ராவணன் இந்தக்குரங்குக் கூட்டங்க ளிப்படிச்செய்கிறபடியா லிவைகளையெல்லாங்கொன்று, இந்த இரண்டு மனிதரையு மிந்தக்ஷணமே வெல்லுகிறேனென்று அதிககோபத்துடனே பத்துக்கையிலேயும் பத்துவில்லை யெடுத்துக்கொண்டு, பத்துக்கையினாலும் பிரளயகாலத்து மேகம்போலச் சரமாரிகளைப் பொழிந்தான். அப்பத்துவில்லிலேயும் கையொன்றுக்கு ஆயிரமாயிரம் பாணங்களாகத் தொடுத்து எய்கிறபோது, ஆகாசம்—பூமி - சமுத்திரம் — திசைகள் — இவையாவும் அம்புகளாய் நிறைந்துவிட்டன. அந்தரணக்களமானது ரத்தத்தினாலே அந்திவானம்போல் சிவந்தது. வானரங்கள் பந்திபந்திகளாக மடிந்து விழுந்தன. பிணங்கள் மலைமலையாகக் குவிந்திருந்தபடியால், அவற்றைமலைகளென் றெண்ணி மேகங்கள் வந்துகவிந்தன.

கவி.

நீலனைம்பொடுசென்றில னின்றிலனலன்
காலனார்புயத் தடைந்தில னேயன்டகவயன்
ஆலமன்னதோர்சரத்தொடு மங்கதனயர்த்தான்
சூலமன்னதோர்வாளியாற் சோம்பினன்சாம்பன்.

நீலன் தன்னுடலிற்பட்ட அம்புடன் சோர்ந்துவிழுந்தான். அனலனும் மரணமூர்ச்சையாய் விழுந்தான். கவையன் அம்புதைத்து மூர்ச்சையடைந்தான். காலகோடிபோன்ற சமானமான அம்புடனே அங்கதன் மூர்ச்சையாயினான். சூலாயுதம்போன்ற முச்சிரபாணத்தாற் சாம்பவன் சுருண்டுவிட்டான். மற்றவானரவீரர் மார்பில் அம்புகள் தைத்தபடியால், தங்கள் வெற்றிபெற்ற வீரங்களும் - ஆண்மையான செய்கைகளும் - குறைந்துபோனார்கள். சூழ்ந்திருந்த வானரப்பெருஞ் சேனைகளெல்லாம் சின்னபின்னப்பட்டு மெலிந்துபோய்விட்டன. மீதியான வானரவீரர்க ளோடிவந்து முறையிட்டார்கள். அப்போது இளையபெருமாள் கோபங்கொண்டு யாதுசெய்தன ரெனில்?

கவி.

ஆறுகோடிய நூறுநூ றாயிரகோடி
வேறுவேறெய்த சரமெலாஞ் சரங்களால்விலக்கி
ஏறுசேவகன் றம்பியவ் விராவணனெடுத்த
ஆறுநாலுமென் சிலையையுங் கணைகளாலறுத்தான்.

இராவணன்விட்ட ஆறுகோடி நூறுநூறாயிரங்கோடியான பாணங்களையெல்லாந் தமது அஸ்திரங்களால் அறுத்து, அவன் கையிலே வைத்திருந்த பத்துவில்லையும் இரண்டிரண்டாக முறித்துப்போட்டார். அதைக்கண்ட தேவர்கள்சந்தோஷித்து ஆரவாரித்தார்கள். இராட்சசர்கள் வெய்வியர்த்து மனம் வெதும்பினார்கள். முனிவர்களெல்லாம் புஷ்பமாரி பொழிந்தார்கள். இலட்சுமணருடைய திருத்தோள்களைப் பார்த்துப் புகழ்ந்துபாடிக்கொண்டு தரும



தேவதைவந்து சேர்ந்தது. அக்கால் இராவணன் இளையபெருமாளைப் பார்த்து, உன்யுத்தவல்லமை மிகநன்றாயிருக்கின்றது. உன்யுத்தசாதுரியமு மிகநன்றாயிருக்கின்றது. உன்குறிப்பு மிகநன்றாயிருக்கின்றது. உன்கைவேகமு மிகநன்றாயிருக்கின்றது. உன்வித்தியா சாமர்த்தியமு மிகநன்றாயிருக்கின்றது. உன்னாண்பிள்ளைத்திறமும் அதுபோலவே, உன்மேனியழகு மிகநன்றாயிருக்கின்றது. உனக்கு நீயேசமானன். உனக்கு ஆரணியத்தில் அன்றைக்குக்கரனையும் அவன்சேனைகளையுங்கொன்ற உன்தமயனும், இந்திரஜித்தின் வல்லமையால் தேவலோகத்தில் ஜெயித்த என்மகனும் நானுங்கூடச் சரியல்லோம். ஆகையாலித்தலோகத்திலே உனக்கு எதிராரிருக்கின்றார்கள்? என்றுசொல்லிக் கரக்கம்பம் சிரக்கம்பம்செய்து. இவனை வில்லினாலேயும் பாணத்தினாலேயும் நாம் ஜெயிக்க முடியாது. இவனைத்தாமதியாம லின்றைக்கே கொல்லவேண்டுமென்று நினைத்து உதட்டைப்பல்லினாலே யழுத்தி, பிரமன் தனக்குக்கொடுத்த வேலாயுதத்தைத் தன்பலங்கொண்டெடுத்து இலக்ஷுமணர்பேரிலே எறிந்தான்.

## இராவணன் விட்ட வேலினால் இலக்ஷுமணர் மூர்ச்சையாதல்.

கவி.

எறிந்தகாலவே லெய்தவம் பியாவையுமெரித்துப்
பொறிந்துபோயுகத் தீயுக விசையினிற்பொங்கிச்
செறிந்ததாரகன் மார்பிடைச் சென்றதுசேர்ந்தை
அறிந்தவெந்தனு மம்மெனக் களத்திடையயர்ந்தான்.

அவ்வேல்வருகிறபோது லட்சுமணர் அநேகம் அம்புகளைக்கொண்டு தடுத்தார். அந்த அம்புகளையெல்லாம் அவ்வேலாயுதமெரித்துப்பொடியாக்கிவிட்டு, அக்கினித்திரளைக் கக்கிக்கொண்டு அதிகவேகமாய்வந்து இலட்சுமணருடையமார்பிலேபாய்ந்தது. பாயவே மகாபத்திமானாகிய இளையபெருமாளும் அந்தப்பெரிய ரணக்களத்திலே சோர்ந்துவிழுந்தார். அதுகண்டுபயந்து வானரங்களோட்டமெடுத்தன. தேவர்கள் நடுங்கி உணர்வழிந்துபோனார்கள். இரிஷீஸ்வரர்கள் மனம்பதைத்தார்கள். இராக்ஷசர்கள் சமுத்திரத்திற்கிட்டிப்பாகக்கொக்கரித்துச் சந்தோஷித்தார்கள். பூமிசுழன்றது. சூரியனுடைய பிரகாசமு மந்தகாரப்பட்டது. அப்போதிராவணன் இளையபெருமாளைப்பார்த்து, இவன் நமதுவேலுக்குப் பயப்படவுமில்லை. சாகவுமில்லை. மூர்ச்சித்திருக்கிறான். இவனையெடுத்துக்கொண்டுபோய்விடுவோமென்றெண்ணித் தான்தேரைவிட்டிழிந்து, கால்நடையாக ரத்தப்பிரவாகத்திலே ஓடிவந்து, முன்பு உருத்திரமூர்த்தியினுடைய வெள்ளியங்கிரியையெடுத்த போதுதனதுபராக்கிரமத்துக்கு அவமானமாயிற்றேயென்று நாணப்பட்டவன் அந்தநாணந்தீரும்படி அஷ்டகுலாசலங்களுட் சிறந்த மகமேருவாகிய பொன்மலையை இப்போதெடுக்கிறவனைப்போல, விஷத்துக்குச் சமானமான மனதையுடைய அந்தராவணன் இருபதுகைகளாலு மழுத்தி இளையபெருமாளை யெடுத்தான்.

அப்போதந்த இராமானுஜர் தமக்கியற்கையான சேஷத்துவக்கியானங் கெடாமல்; சாக்ஷாத்துஸ்ரீராமமூர்த்தியே அந்தப்பீதாம்பர தாரியாகிய ஸ்ரீயப்பதியென்று தம்முடைய திருவுள்ளத்தில் தியானித்துக்கொண்டு மூர்ச்சித்திருக்கின்றூ ரானதால்; திக்குப்பாலகரை நடுங்கச்செய்து கைலாசத்தையெடுத்த இராவணன்கைகளுக்குத் தாமெடுபடவில்லை. அப்போது பத்துத்தலைகளையுடைய தசமுகனென்கின்ற ராவணன் ஒருகடலையொத்திருந்தான். அவன்கைகள் உதயபருவதங்களையொத் திருந்தன. துளபமாலிகாதரரான ஸ்ரீராமருடைய திருத்தம்பியாகிய இளையபெருமாள் அந்தப்பர்வதத்திலே உதிக்கின்ற பாலசூரியனை ஒத்திருந்தார். இப்படி இராமாநுஜருடைய திருமேனியைத் தூக்கி யெடுக்கப் பலமில்லாதவனான ராவணன் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். அப்போது முன்னங்குத்துச் சண்டையிலடைந்த மூர்ச்சைதெளிந்த அனுமாரோடிவந்து, இராவணனை ஒரிடியிடித்துத் தள்ளிவிட்டு, இலட்சுமணரைக் கையினலேதாங்கி யெடுத்துக்கொண்டு, அதிவேகமாய் அப்பாலே போயினர். தொகுதியாக நெருங்கிய ஞானியர் கூட்டங்களில் மிகச்சிரேஷ்டனான ஆஞ்சனேயப்பெருமான் அன்புடன் தன்னையடைந்தவர்கட்கு அருள் செய்கின்ற ஸ்ரீராமபிரானுக்கு ஒப்பற்ற துணைவனன்றி ஆண்டன்மையை யுடையவனுயினும் மனநிற்றதம்பி யெழுந்தாடுகின்றஆசையினல் இலக்ஷ்மணரைக் கைகளுக்கு கொடுத்துத்தூக்கிப்போவது எப்படியிருந்ததெனில் குட்டியை யணைத்துக்கொண்டு மரத்திற் றுவப்போகும் ஓர் பெண்குரங்கையும் ஒப்பானர். அனுமார் இவ்விதமாய் இலட்சுமணர் சற்றுநேரத்திற்குள்ளாக மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கும்படி தூக்கிக்கொண்டு, கையும் — காலும் - திருக்கண்களும் — செந்தாமரைப் புஷ்பத்திற்குச் சமானமாகப் பிரகாசிக்கின்ற ஸ்ரீராமபிரானுடைய சந்நிதிக்குப்போயினர்.

### இராவணனேடு யுத்தத்திற்கெழுந்த ஸ்ரீராமர் ஆஞ்சனேயர்வேண்டுகோளின்படி அவர்தோளிலாரோகணித்துத் தமது கோதண்டத்தை வளைத்துக் குணத்தொனி செய்தல்.

கவி.

போனசாலையிற்புக்கனன் புக்கவன்போர்வேட்
டியானைமேற்செலுங் கோளரியேறிவனென்ன
வானுளோர்கணமார்த்தனர் தூர்த்தனர்மலர்மேல்
ஆநவின்றவேலரக்கனுந் தேரினைத்தூரந்தான்.

இவ்வண்ணம் தூட்பிடத்து வந்த இலக்ஷ்மணரைக் கண்டு தனது மனம் பொறுது இராவணன்மேற் கொண்ட கோபத்தினல் அவரை என்னவென்றும் விசாரியாது தேவதேவனுகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் யானையின்பேரிலே போருக்குப்போகிற ஒரு சிங்கம்போல இராவணன்பேரில் எதிர்க்க நடந்தருளினர். தேவதைகள் புஷ்பமாரி பொழிந்தார்கள். இராவணனும் தன் தேரைவிட்டுக்கொண்டு வந்தான். இப்படி அவன்ரதத்திலேயும் ஸ்ரீகாகுஸ்த



குலதிலகர் காலநடையாகவும் எதிர்க்கின்றதை அனுமானுகிய சிறியதிருவடியானவர்கண்டு, முன்னல் யாவரும் பரிசுத்தத்தை யடையும்படி கங்கையைத்தந்த திருவடி பாவிகளுடைய போர்க்களத்தில் நின்று சிரமப்படச் சகித்திருப்பரோ? அதற்குச்சிறிதும் மனம்பொறுமல் மிகுந்த பரிவுடனேவந்து,சுவாமீ! அவன் ஆயிரங்குதிரைகட்டிய தேரின்பேரிலேறிவந்து எதிர்க்க, தேவர் பாதசாரியாக எதிர்க்கிறது கலபமாகக்காணும் அடியேன் சிறியேனுனும் என்னுடைய தோளின்மேலேறியருளவேண்டுமென்று பற்பலவிதத்தில் பிரார்த்தித்தார்.

கவி.

நன்றுநன்றெனு நாயகனேறினனுமக்
குன்றின்மேலிவர் கோளரியேறெனக்கூறி
அன்றுவானவ ராசிசெரியம்பினனின்ற
கன்றுதாங்கிய தாயெனமாருதிகளித்தான்.

அப்படிப்பிரார்த்தித்தகாலையில் அனந்தகல்யாணகுணபிராமனும்நல்லது நல்லதென்று சம்மதித்து,பருவதத்தின்பேரிலே தாவியேறுகிற ஒருராஜசிங்கம்போல அனுமானுடைய தோளிலேறினர். அதுகண்ட தேவர்கள் பல்லாண்டு பாடினர்கள். கன்றைத் தாங்கியெடுத்த தாயைப்போல மாருதி சந்தோஷித்துக் களித்தார்.

திருக்குறளான ஸ்வரூபமாய் உலகத்தை யளந்தவருடைய திருவடியை அப்போது அனுமான் செவ்வையாகப் பார்த்தும், பரிசித்தும், சிந்தித்தும மகிழ்ந்து ; எனக்கிது சுகமாகக் கிடைத்ததேயென அதிசயமடைந்தார். "எப்போதும் உரிமையாக அவரைத் திருத்தோளி லெடுக்கிற கருடபகவான், இப்போது ஸ்ரீராமபிரானைத் திருத்தோளி லெழுந்தருளச் செய்துகொண்டு ஆனந்தக்கூத் தாடுகின்ற ஆஞ்சனேயருடைய பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லையே யென்று நாணினர். ஆதிசேஷனும் தலைகுனிந்தான். அப்போது அந்த அனுமான் திருப்பாற்கடல்போலப் பிரகாசித்தார். ஸ்ரீராமர் அந்தத் திருப்பாற்கடலிலே வாசமாயிருக்கிற ஸ்ரீமகாவிஷ்ணுவான புருஷோத்தமரைப்போல விளங்கினர். ஆனாலும் — அந்தப்பரம புருஷோத்தமரைப்போல் இவர் யோகநித்திரை செய்யாமல் வீற்றிருக்கிறபடியினலே, அந்தமாருதி வேதமும், ஸ்ரீராமர் அந்த வேதத்தினுடைய முடிவிலே யிருக்கிற போதசொரூபமான ஸ்ரீஹரியும்போலப் பிரகாசித்தார்கள். மேலும்—அந்த அனுமான் ஞானம்போலவும், ஸ்ரீராமர் அந்த ஞானத்துக்கு மேலேயிருக்கிற பரமபதம்போலவும் காணப்பட்டார். அண்டங்களையெல்லாம் உண்டு வயிற்றிலடக்கின அந்தப் பகவானைத் தாங்கிக்கொண்டிருந்து பலவிதமாகச் சாரிகை திரிகிற அனுமானுடைய தோள் வெண்மையா யிருக்கிறபடியால், அந்த மகாமேருபர்வதத்தையும் சமானமாகச் சொல்லக்கூடாது.

அப்படி தோன்றுகின்ற அனுமானையும் அவர் தோளிலே சேவைசாதிக்கிற சக்கரவர்த்தித் திருமகனான கோதண்ட ராமனையும் ரிஷிஸ்வரர்கள் கண்டு பல்லாண்டு சொன்னார்கள். தர்மதேவதையும் கையை யெடுத்துக்கொண்டு ஆனந்தசித்த மாடியது. உருத்திரன் - பிர்ம்மா — விஷ்ணு — இவர்கள் முதலான சகலமான தேவர்களும் இந்த ராம ராவணர்களுடைய யுத்தப்பார்க்கும்படியாகக் ககனமார்க்கத்தில் வந்து சேர்ந்தார்கள்.

கவி.

அண்ணலுஞ்சனவண்ணனு மமர்குறித்தமர்ந்தான்
எண்ணருப்பெருந்தனிவலிச் சிலையைநாணெறிந்தான்
மண்ணும்வானமு மற்றையபிறவுந்தன் வாய்ப்பெய்
துண்ணுங்காலத்தவ் வுருத்திரனொப்பொத்ததோதை.

நீலமேகம்போலு நிறம்வாய்ந்த நமது பகவானாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் நினைப்பதற்கரியதும் மிகவும் பெரியதும் ஒப்பற்றதும் வல்லமை பெற்றதுமாகிய தமது கோதண்டத்தையெடுத்து நாணொலிசெய்தார். அப்படிசெய்த குணத்தொனியானது பூவுலகத்தையும் வானுலகத்தையும் இன்னுமுள்ள சகல வுலகங்களையும் தன்வாயிலிட்டுண்ணுங்காலத்துப் பேரொலியிடுகின்ற உருத்திரமூர்த்தியினது தொனிபோலிருந்தது. இராக்ஷதர்களும் இயக்கர் முதலாகிய அனைவரும் பிராணன் போகாமற்சோர்ந்து நாவுலர்ந்து கலங்கி, தங்கள் தங்களிடத்திலின்றும் நீங்கி நடுங்கினார்கள். பதினாலு லோகமும் குலைகுலைந்தன. தேவதேவனாகிய உருத்திரனும் — பிர்ம்மாவும், விஷ்ணுவும், இந்திரனும், தலைநடுங்கினார்கள்.

## ஸ்ரீராமர் கடும்போர்விளைத்து இராவணனை மெலியச்செய்தல்.

கவி.

ஊழிவெங்கனலொப்பன துப்பனவுருவ
ஆழிநீரையுங்குடிப்பன திசைகளையளப்ப
வீழின்மீச்செலின்மண்ணையும் விண்ணையுந்தொளைப்ப
ஏழுவெஞ்சரமுடன்றெடுத் திராவணனெய்தான்.

அந்தச் சமயத்தில் இராவணன் தனது வில்லைவளைத்து குணத்தொனிசெய்து பிரளயகாலாக்கினிபோன்றதும்,பவளம்போலுநிறத்தையும்,சமுத்திரநீரையும் குடிக்கத் தக்கவைகளும், திக்குகளெல்லாம் அளக்கத் தக்கவைகளும்,பூமியையும் ஆகாசத்தையும்தொளைக்கத்தக்கவைகளுமாகியஏழுபாணங்களைச்சந்தித்துச்சுவாமியின்மேல்பிரயோகஞ்செய்து ஆர்ப்பரித்தான். அந்தஏழுபாணத்தையும்ஸ்ரீராமர்பதினாலுதுண்டமாக அறுத்துத்தள்ளி,பின்னும்அஞ்சுபாணங்களைக்கோதண்டத்திற்பூட்டிக்காலாக்கினியுந்தீயும்படியான அக்கினியைவீசிக்கொண்டுபோகப்பிரயோகம்பண்ணினார். அந்தஅஞ்சுபாணத்தையும் இராவணன்அஞ்சுபாணத்தினால் ஆகாசத்திலேயே விலக்குவித்து,பத்து அம்புகளைநாணிலேற்றி ஆகர்ணமளவுமிழுத்துவிட்டான். வேதமுதல்வராகிய ஸ்ரீராமபிரான் பத்துஅம்புகளையெய்து அந்தப்பத்தம்பையும் அறுத்துத்தள்ளினார்.



அவன் சமீபத்திலே யிருக்கிற அநேகராட்சசர்கள் பிரயோகம்பண்ணின ஆயுதமழைகளையுஞ் சில அம்புகளினாலே அறுத்துத்தள்ளி,அவர்களுடையயானைகளையும் அக்கினிக்கணைகளாற் சுட்டெரித்து, அவர்களது தலைகளையும் அறுத்து மலைமலைகளாய்க் குவித்தார்.

கவி.

மீனுடைக்கருங் கடல்புடை யிராக்கதர்விட்ட
ஊனுடைப்படை யிராவண னம்பொடுமோடி
வானரக்கடல் படாவகை வாளியான்மாற்றித்
தானுடைச்சரத் தாலவர் தலைமலைதடிந்தான்.

மீன்கூட்டங்களையுடைய சமுத்திரம்போன்ற நிறமும் அளவற்றதன்மையுமுடைய அவ்விராட்சசர்கள் பிரயோகம்பண்ணின ஆயுதங்களையும்-இராவணனெய்கிற அம்புமழைகளையும்—வானரர்கள்பேரில் விழுந்துபடாமல் மறுத்து, அவ்விராட்சசர்களது மலைபோன்ற தலைகளையும் துண்டித்தார்.

அப்போது அனுமானானவர் பூமியிலே யிருந்தாரென்று பார்த்தால் ஆகாயத்தில் இருப்பார். மறுபடியும் ஒரு க்ஷணத்திலே அந்தராவணனுடைய எல்லா முகங்களுக்கு மெதிரே நேராகநிற்பார். அங்குவந்த வஞ்சகரான அந்த ராக்ஷசர்களுடைய முகத்துக்கெதிரேயும் பிரகாசிப்பார். ஆனால் ஸ்ரீராமனுடைய அம்புக்கு முன்னேயும் அவருடைய மனதுக்குமுன்னேயும் நிற்கவல்ல இவருக்கு; இதேதோரதிசயமோ? இந்தப்பிரகாரம் அனுமானானவர் இடசாரி வலசாரியாகச் சுழன்று திரியும்போது, அந்தரணக்களத்திலே எங்கும் கவந்தங்களாடின. அவைகளுடனேகூடப் பேய்களுமாடிப் பாடத்தலைப்பட்டன. இரத்தவாறுகள் துதிக்கையறுபட்டின்ற தந்தங்களையுடைய யானைகளையுங் குதிரைகளையு மிழுத்துக்கொண்டு கடல்போலெங்குமோடின. அந்த ரணக்களத்தில் சிலராக்ஷசர்கள் தாங்களேறிவந்த தேரையுமிழந்தார்கள். சிலராட்சசர்கள் தாங்கள் பிடித்தவில்லிழந்தார்கள். சிலராட்சசர்கள் யானைகளிழந்தார்கள். சிலராட்சசர்கள் குதிரையின்சாலிழந்தார்கள். சிலராட்சசர்கள் யுத்தவலிமை யிழந்தார்கள். சிலராட்சசர்கள் வலியுகவச மிழந்தார்கள். சிலராட்சசர்கள் பலமிழந்தார்கள். சிலராட்சசர்கள் மாலையிழந்தார்கள். இப்படியிழந்தவர்கள் முடிவில் தமதுதலையுமிழந்தார்கள்.

அந்தச் சமயத்தில் அநேகராட்சசஸ்திரீகள் வந்து தங்கள் புருஷர்களுடைய தலைகளைத் தேடிப்பார்த்து, விகாரசொருபமுள்ள அரக்கர்களுடைய தலைகளும் யானைகுதிரைகளுடைய தலைகளும் பேதந்தோன்றுமற் சிதைந்து குழம்பிக்கிடக்கிறபடியால் மயங்கி, யானைத்தலையை இதுதான் என்புருஷன் தலையென்றும், குதிரைத்தலையை இதுதான் என்கணவன் தலையென்றும், இவ்வாறாக வெடுத்து உடற்குறைகளோடு பொருத்திப் பார்த்துத் தழுவிக்கொண்டு அழுதுமாண்டார்கள். ஸ்ரீராமபாணமான காலன் ஒன்று - பத்து - நூறு — ஆயிரமாகத் தலைகளையறுத்துக் குவித்தும், அதன்விசை யோயாமல்

திரிந்துகொண்டு அநேககோடி சேனைகளையும் உருவிச் சென்றது. தன்றேருடனே ராவணனொருவனிற்க, மற்றங்குள்ள சேனைகளெல்லாம் கொலையுண்டுபோகவும் இராட்சசர்களுடையவாய்வார்த்தைகள் ஆர்ப்படங்கின. கண்களிலக்கினிகளைக் கக்கிக்கொண்டு பார்க்கின்ற அவரவர்பார்வைகள் குலைந்தலைந்தடங்கின. இப்படி தன்னுடன்வந்த ரத கஜ துரக பதாதிகளெல்லாமாண்டு பிணங்கள் மலைமலைகளாய் மேகமண்டலமுதல் ஆகாசபரியந்த முயர்ந்து கிடக்கிறதைப் பலதிசைகளிலுங்கண்ட ராவணன் சர்ப்பம்போலச் சீறிக்கோபித்து, அதிசீக்கிரமாகவில்லிலே இரண்டுபாணங்களைத்தொடுத்துத் தோளளவும்வாங்கி, ஸ்ரீராமமூர்த்தியினுடைய மரகதமலையின் சிகரம்போன்ற இரண்டுதிருத்தோள்களிற்போயழுந்தும்படியாய்ப் பிரயோகம் பண்ணினான்.

அதுகண்ட ஸ்ரீராமர் புன்னகைசெய்து, ஒரு திவ்வியாஸ்திரம்வாங்கிப் பிரயோகித்து, ஊழிக்காலத்துச் சண்டமாருதக் காற்றானது மந்தரகிரியை முறித்துவிட்டதுபோல அந்த ராவணன் கையிற்பிடித்திருந்த வில்லைத்துண்டித்துவிட்டார். துண்டித்த மாத்திரத்தில் திடுக்கிட்டு ராவணன் மறுவில்லெடுத்து நாணேற்றி ஆக்கிரமித்து அம்பைத் தொடுக்குஞ் சமயத்தில், அதையும் எம்பிரானாகிய ஸ்ரீராமமூர்த்தி ஒரு தெய்விகம்பொருந்திய அஸ்திரத்தைவிட்டு நாசப்படுத்திவிட்டார். அவ்வளவிலே நில்லாமல் அதிவேகமாக அந்த ராவணனுடைய ரதத்திலேகட்டியிருந்த அநேகம் குதிரைத்தலைகளையும் அறுத்தெறிந்தார். அந்தக் காலத்தில் அதிகபலம்பொருந்திய ராவணன் பின்னொருவில் வில் அஸ்திரமெடுத்துப் பிரயோகஞ்செய்ய எத்தனித்தான். அதையவனெடுக்கவொட்டாமற்கணைகளாலே ஸ்ரீராமபிரான்தடுத்தனர், அன்றியுமவனுடைய குடையும் — கொடியும் — யானைகளும் — தமது கணைகளாலே துணிந்துவிழும்படியாக அறுத்துத்தள்ளி, அவனுடைய அதிகபிரகாசமான கவசத்தையும் அறுந்துவிழத்தள்ளினார். இதுவுமன்றி - அந்த ராவணனுக்கு மேன்மேலும் யுத்தகளத்தில் வருகிறசேமத்தேர்களை வரவொட்டாமல், அதியுக்கிரமான பாணங்களால் விலக்கி நாசப்படச் செய்தார்.

அப்போது தென்றிசைக்கதிபனாகிய எமனும் கைகளை யெடுத்துக்கொண்டு ஆடும்படியாக அந்த ரத்தவெள்ளமோடுகிற இரணக்களத்தில், இராவணன் தானேறிய தேரைவிட்டுக் குதித்தான். குதித்தபோது பிரகாசித்துக்கொண்டிருக்கிற அவன் கிரீடங்களின்மேல் ஸ்ரீராமர் சிலபாணங்களை யெய்தார். அந்தப்பாணங்கள் முன்னாலே சூரியன்பேரிற் பாய்ந்த அனுமானைப்போல அதிக விசையாகச்சென்று, அவன்கிரீடங்களைப் பலமேருமலைகளைத் தள்ளிக்கொண்டு போவதுபோலத் தள்ளிக்கொண்டுபோய்ச் சமுத்திரத்திலே போட்டுவிட்டன. அந்த ராமபாணங்கள் இழைக்கப்பட்ட ரத்தினங்களையெல்லாம் திக்குதிக்குகளிற் சிதறும்படியாகப்பண்ணிக் கிரீடங்களைக் கடலிலே தள்ளினபடியால், வாயுபகவானால் முறியப்பட்ட மேருவின்கொடுமுடிகள் பறியுண்டு கடலில் விழுந்ததுபோல அந்த மகுடங்கள் பிரகாசித்தன. பின்னையும்



ஸ்ரீராமருடைய கோதண்டத்தில் நின்றுபுறப்பட்ட அம்புகளோடு பறியுண்டுபோய்க் கடலில் விழுந்த அந்த மகுடமானவைகள் - பரிவேடத்துடன்கூடிய சூரியர்கள் தங்களை வாயாற் கௌவிக்கொண்ட கிரஹண சர்ப்பங்களுடன் சமுத்திரத்தில் விழுந்ததுபோலவுமிருந்தன. ஓர் சொற்சொல்லுமளவைக்குள் தன்கிரீடங்களையிழந்த அந்தத் துராத்துமாவானவன் சூரியனை யிழந்த பகலைப்போலவும், சந்திரனையிழந்த இராத்திரியைப்போலவும் பொலிவிழந்து காணப்பட்டான்.

இதுவரையிலும் தன்னோடு சண்டைசெய்தவர்களிடத்திலெல்லாம் வெற்றிபெறுவதே யல்லாமல் இந்த ஸ்ரீராமரிடத்தில் தோற்றதுபோல ஒருவரிடத்திலும் தோற்றறியாத வல்லவனான இந்தராவணன் சகலபாக்கியமும்பெற்றுப் பராக்கிரம முள்ளவனானாலும், வித்துவான்களுக்கு ஒருவன் அபகாரஞ்செய்ய அவர்கள் மனதுநொந்து வசைபாடித் தூஷணித்தால், அவனெப்படி தன் கீர்த்தியும் செல்வமு மிழந்து போவானோ அப்படி எல்லா மிழந்தவனானான்.

## இராவணன் யுத்தவலியிழந்து நிராயுதனாய்நிற்க ஸ்ரீராமபிரானவர் சிலவார்த்தைகூறுதல்.

கவி.

அறங்கடந்தவர்செயலிதென் றுலகெலாமார்ப்ப
நிறங்கரிந்திடநிலம் விரல் கிளைத்திட நின்றான்
இறங்குகண்ணினனெல்லழி முகத்தினன்றலையன்
வெறுங்கைநாற்றினன் விழுதுடை யாலன்னமெய்யான்.

நின்றவன்னிலைநோக்கிய நெடுந்தகையிவனைக்
கொன்றலுன்னிலன்வெறுங்கைநின் றானைக்கொல்லா
இன்றவிந்ததுபோலுமுன் றீமையென் றிசையோ
டொன்றவந்ததோர் வாசக மினையன வுரைத்தான்.

தருமந்தப்பி நடக்கிறவர்கள்காரிய மிப்படிதான் முடியுமென்று உலகஞ்சொல்லும்படியாய் முகங்கருகிப்போய் கால்விரலாலே நிலத்தைக் கிளறிக்கொண்டும், தலைகள் குனிந்து தரையைப் பார்த்துக்கொண்டும், முகத்திற் சிறிது பவிஷில்லாமல் வெறுங்கைகள்தொங்க விழுதுகள் தொங்குகின்ற ஒரு ஆலமரம்போல் நின்றான் இந்தப்பிரகாரநின்ற ராவணனைக் கிருபாநிதியான தாசரதிபார்த்து, வெறுங்கையுடனிருக்கின்றவனைக் கொல்லாகாதென்று திருவுளத்திலெண்ணி, ஓ இராவணா! உன்னுடைய அக்கிரமம் இன்றைக்கு அழிந்துவிட்டதுபோலும். என்றுசொல்லிப் பின்னும் சிலவார்த்தைகள் சொல்லுகின்றார்.

ஓ இலங்கைவேந்தே! தருமசிந்தையுள்ளவர்களெவர்களானாலும் அவர்களுக்குச் செயமாகுமே யல்லாமல் தேவர்களானாலும் அதர்மத்திலேஜெயமடையமாட்டார்களென்கிற நீதிவாக்கியத்தை உன்மனதிலே வைத்துக்

கொண்டு, ஐயோபாவி! நீ இப்போதே ஓட்டமாயோடி உன்பதியை யடைந்தாவிடு; இன்னம் க்ஷணமாத்திரம் என்னுடன் மாறுகொண்டு எதிர்த்து இங்கிருப்பாயேயானல், உன்பிராணன்போய்விடும். அது உண்மையாகவிருந்தாலும் அப்படி கானினைத்தவனல்ல, நீ தனியனைபடியினலே மனமிரங்கினேன். உன் குலத்தாருடனேயும், உன் உறவின்முறையாருடனேயும், உன்சேனைகளுடனேயும், அல்லாமலும் உன்னல் என்னென்ன ஆயுதங்கள் சம்பாதித்திருக்கின்றனவோ? அவைகளெல்லாவற்றுடனேயும் மீட்டும்யுத்தத்துக்குவர இஷ்டமிருந்தால் வரக்கடவாய். அல்லது-உனக்கு அவ்வளவு பலாபலத்துடன் வருவதற்குச் சத்தியில்லையாகில், எங்கேயாவதுபோய்ப் பதுங்கிக் கொள்வாயாக;

ஓ அற்பகிருத்தியஞ்செய்கிற அவிவேக குணவானே! நீ சிறையில் வைத்திருக்கிற சீதையையென்னிடந்தந்துவிட்டு, உன்தம்பியாகிய விபீஷணனை இத்தலோகத்திற்குத் தெய்வமெனநினைத்து, இராட்சசர்களுக்கெல்லாம் இராஜனாகப் பட்டங்கட்டிவைத்து, நீ அவனிட்ட வவலைச்செய்துகொண்டிருப்பாயானல் உன்தலையை என்பாணத்தினலறுத்துப் பூமியிற்றள்ளமாட்டேன். அப்படிக்கல்லவென்று யுத்தஞ்செய்ய உனக்குத் தேகவலியிருந்தால், உன் பலமெல்லாங்கொண்டு என்னெதிரேநின்று சண்டைசெய்து மரணமடைந்து, அவர்க்கலோகத்திற்குப்போய் அங்குண்டான சகலருக்கும் நல்லவனைப் பேரெடுத்திரு. இனி நீ பிழைத்திருப்பாயென்று மனதில்லையாதே. நீ பிடித்துவளைத்துநின்ற வில்லுமுறிந்தது. தேருமழிந்தது. நீ கொண்டுவந்த பெருங்கூட்டமான சதுரங்கசேனைகளெல்லாம் நாசமாய்விட்டனவென்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றார்.

### ஸ்ரீராமர் இராவணனுடன் இன்றையதினம்போய் நாளையதினம் யுத்தத்திற்கு வாவெனல்.

கவி.

ஆளையாவுனக்கமைந்தன மாருதமறைந்த<br>
பூளையாயினகண்டனை யின்றுபோய்ப்போர்க்கு<br>
நாளைவாவெனநல்கினன்நாகிளங்கமுகின்<br>
வாளைதாவுறுகோசல நாடுடைவள்ளல்.

அடா ராவணு உனக்குத் துணையாகவந்த பந்துக்களெல்லாம் நமதுபாணத்தினல் காற்றிலகப்பட்ட பூளைப்பூப்போலாய்விட்டன. அதை நீயேநேரில் பார்த்தனை நீயும்வெறுங்கையாய் நின்றுவிட்டாய், ஆகையால் இன்றொருதினமாவது நீ சென்று உனது இலங்கையை ஆள். இனி நீ எக்காலத்திலாவப் போகின்றய் நம்மிடத்தில் போர்புரிய நாளையதினம் வருவாயென்று, மிகவும் இளமையாகிய பாக்குமரங்களில் வாளைமீன்கள் தாவிப்பாய்கின்ற வயல்வளமிக்க கோசலநாட்டிற்கதிபதியாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் சொல்லினர்.

முதற்போர்ப் படலம் - முற்றிற்று.



№ 51. ஸ்ரீராமர் இராவணனுக்கு அறிவுறுத்தி இன்று போய் நாளைவாவென்றுரைத்தல்.

No. 52. ஸ்ரீராமருத்திரவின்படி விபீஷணர்கும்பகர்னனிடம்போய் அவன் மனதை ஆராய்தல்.



ஸ்ரீராமர்கும்பகர்னனோடுகெடும்போர்புரிந்து அவனைச்சங்கரித்தல்.



உயுத்தகாண்டம். கும்பகருணன்வதைப்படலம்.



ஸ்ரீராமஜெயம்.

பதினைந்தாவது,

# கும்பகருணன் வதைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபாணத்தால் மெலிந்த இராவணன் தனியனாய்த் தன்மாளிகைக்கேகி தன்தூதர்களில் நால்வரையேவி நாற்றிசையிலுமுள்ள மற்றச் சேனைகளைக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்து மாலியவானோடு தனக்கு நேர்ந்த குறைகூற அவனதிவுறுத்தியதும், அவ்வறிவைத் தடுத்துரைத்த மகோதரன் துர்ப்போதனையால் இலக்ஷ மிராக்கத மல்லர்களைக் கொண்டு கும்பகர்ணனைத் துயிலினின் றெழுப்பித் தன் கருத்தை யறிவித்ததும், அவனு மனவருந்திப் புத்திமதி கூறியுங் கேளாததால் இனியாவன வற்றைக்கூறித் தானெழுந்து வெளிப்பட்டதும், ஸ்ரீராமர் விபீஷணரால் கும்பகருணனிலைமையை யறிந்தழைத்து வரும்படி விடுக்க அவன் தன்னிடம் வந்த தம்பியோடு தன்றுணிபைக்கூறி விடுத்ததும், பின்னாிருதிறத்தவருங் கைகலந்து நடத்தியயுத்தத்திற் கும்பகர்ணனால் நீலன்-அங்கதன்-அனுமான்-இம்மூவரு மெலிந்ததும், அப்போதிலையபெருமாளவனை பாதசாரியாக்கி அவனோடுவந்த சேனைகளையும், பின்னிராவணனனுப்பிய பெருஞ்சேனைகளையு மாய்த்தொழின்றதும், அக்கால் சுக்கிரீவமகாராஜ னவனை வளைத்துப் போரிடுகையி லவர்மேலவன்விடுத்த சூலத்தை அனுமார் முறித்தெறிந்ததும், மீட்டுஞ் சுக்கிரீவமகாராஜ னிராயுதனாய் வவனோடு மற்போர்விளைத்து மூர்ச்சிக்க அவனவனை இலங்கைக்குக் கொண்டு போக யத்தனித்ததும், அஃதறிந்த ஸ்ரீராமர் அவனைற்றியைப் பிளந்து மூர்ச்சிக்கச்செய்து சுக்கிரீவமகாராஜனை விடுவிக்க அவரவன் மூக்கையுங் காதையு மறுத்துக் கொண்டுபோய் வானரப்படையிற் கலந்ததும், பின்னவன் மூர்ச்சை தெளிந்து இராவணன் மீட்டுமனுப்பிய பதினான்குகோடி ராக்ஷசச்சேனைகளைத் துணையாகக்கொண்டு போர்விளைக்க ஸ்ரீராமரதனைக்கணப்போதில் மாய்த்து அவனை திரண்டுதோளையுங் காலையுந் துணித்ததும், அப்பாலவன் சரீரமொன்றானுந் தனது வீரவல்லமையைக்காட்டிப்போர்செய்யவும் ஸ்ரீராம ரவனப்பிபிராயமறிந்து சங்கரித்து அவன் சிரசைக்கடலில் வீழ்த்தியதும் சொல்லப்படுகின்றது.

## இராவணன் தன்மாளிகைக் கேகல்.

### கவி.

வாரணம்பொருதமார்பும் வரையினையெடுத்ததோளும்
நாரதமுனிவற்கேற்ப நயம்படவுரைத்தநாவும்
தாரணிமவுலிபத்துஞ் சங்கரன்கொடுத்தவாளும்
வீரமுங்களத்தேபோட்டு வெறுங்கையோடிலங்கைபுக்கான்.

இவ்வண்ணம் எமது நாயகனாகிய ஸ்ரீராமபிரானானவர் இன்றுசென்று நாளையதினம் போர்புரிய வருவாயென்று சொன்னவாக்கை இராவணன்கேட்டு அவமானத்தினால் வாய்திறந் தொன்றுஞ் சொல்லாது மிகவும்மனம்வருந்தி,

அஷ்டதிக்கிலுள்ள யானைகளுடனே போர்புரிந்து ஜெயம்செய்த மார்பினது வல்லமையும், கைலாயபர்வதத்தை யெடுத்த புஜபலமும், இருஷிகளிற் சிரேஷ்டராகிய நாரதமகாமுனிவருக் கொக்கும்படியாக வேதாந்தியயனம்பண்ணுகின்ற நாவினது சாதுரியமும், வெற்றிமாலையைத்தரித்துப் பிரகாசிக்கின்ற கிரீடங்கள்பத்தும், சங்கரனாகிய உமாபதியானவர் கொடுத்தவாளும், தன்னுடைய சௌரியங்களு மிரணக்களத்திலேயே இழந்துவிட்டு; வெறுங்கையுடனே திரும்பிப்போய் இலங்கையைச் சேர்ந்தான். தமது யுத்தவன்மையால் எப்படிப்பட்ட பலசாலிகளாலேயும் அழியத்தகாத தேவர்களையெல்லாம் ஜெயித்து மூவுலகத்தையும் தம்வயப்படுத்திய நாயகனாகிய ராவணன் இவ்விதமாக ஆயுதமில்லாமல் ஆலம்விழுதுபோற் றொங்கிய கைகளையுடையவனாய் அபகீர்த்தியானது தன்னோடு தொடர்ந்துவரக் கால்நடையாகச்சென்று நகரம்புகுந்தபோது, சூரியனும் அஸ்தமனமானான். இவ்விதமாகச் சென்றவனாகிய இலங்காதிபதி எத்திசையும் நோக்கான்: வளப்பம்பெற்ற தனது நகரம் பொலிவிழந்திருப்பதையு நோக்கான்; சமீபத்திற் பொருந்திய புத்திரர்களையு நோக்கான்; சைனிய சமுத்திரத்தையு நோக்கான்; மகரந்தப்பொடிகளோடு மலர்ந்த மலர்களையணிந்த கூந்தலையுடைய மாதர்கள் தனித்தனி நின்று தனது சோகத்தையும் தளர்ச்சியையும் நோக்க, தான் பூமியைப் பார்த்துக்கொண்டே சென்றனன். அன்றலர்ந்த தாமரைமலரையொத்த முகங்களையுடைய வண்டோதரி முதலான ஸ்திரீகளின் கண்களெல்லாம் அவனுக்கு வாள்போலவும், தன்பிள்ளைகள் வார்த்தை அந்த ராமபாணம்போலவு மிருந்தன. நவக்கிரகங்களாகிய கோள்களையெல்லாம் ஓரிடத்திற் சிறைவைத்தாண்டுவந்த ராவணனுக்கு, அன்று ஸ்திரீகளுடைய ஸ்தனங்கள் தன்னுடைய வெறுந்தோள்கள்போற் பார்க்கவும் வெறுப்பாக விருந்தன.

மந்திரிகளும் - பந்துக்களும் - தன்பெண்சாதிமார்களும் — சேனைத்தலைவர்களும் - உறவின்முறையார்களும் — தங்கள் தங்கள் மனத்திகைத்து ஒன்றும்பேசாமற் சித்திரப் பிரதிமைபோல நிற்க, ஒருவருமில்லாமல் தான்மாத்திரம் ஒருமதயானை தன்கொட்டாரத்திற் போவதுபோலத் தன்மாளிகையிற் போய்ச் சேர்ந்தான். இவ்வாறு போய்ச்சேர்ந்த இராவணன் அவ்விடத்திலொரு பொற்சிம்மாசனத்திற்போ யுட்கார்ந்து ஆயாசத்தைத் தீர்த்துக்கொண்டு, எதிரே நின்றிருந்த ஒருகாவற்காரனை யழைத்து, நம்முடைய தூதர்களை அழைத்துவாடா வென்று ஆக்ஞாபித்தான்.

## இராவணன் சேனைகளைச் சேர்த்தழைத்து வரும்படித்தூதர்களுக்காக்ஞாபித்தல்.

கவி.

மனகதிவாயுவேகன் மருத்தன்மாமேகனென்றிவ்
வினையறிதொழிலர்மூன்று வாயிலர்விரவினரை
நினைவதன்முன்னநீர்போய் நெடுந்திசையெட்டுநீந்தி
கனைகழலரக்கர்தானை கொணருதிர்கடிதினென்றான்.



இதைக்கேட்ட தூதுவன் அந்தக்ஷணமே அவன்போய் மனகதியென்றும், வாயுவேகனென்றும், மருத்தனென்றும், மேகனென்றும் பேரினையுடைய நான்கு தூதர்களைக்கூப்பிட; அவர்களதிவேகமாய் வந்து நின்றார்கள்.

அப்படி வந்துநின்றவர்களை இராவணன் பார்த்து, இந்தட்சணமே நீங்களோடி நம்முடைய ராட்சசசேனைகள் எங்கெங்கே யிருக்கின்றனவோ? அங்கங்கே விரைந்துபோய் அவைகளையெல்லா மழைத்துக்கொண்டு ஓடிவாருங்கள். இன்னும் சப்தசமுத்திரங்கள் - சப்ததீபங்கள் - அளவற்ற பர்வதங்கள் - பாதாளலோகம்-சக்கரவாளகிரியாகிய விவ்விடங்களிலிருக்கிற ராட்சசர்களென்னும் பெயருள்ளவர்களையெல்லாம் ஒருவரையும் விடாமல், அதிசீக்கிரமாக அழைத்துக்கொண்டு வாருங்களென்று உத்தரவுசெய்தான். இப்படி உத்தரவு செய்தமாத்திரத்தில் அந்தத் தூதர்கள் அவ்வாக்கினையைச் சிரசாகவகித்து இராட்சசர்களைத் தேடிக்கொண்டு போனார்கள்.

## இராவணன் தானடைந்த தோல்வியினால் அவமானத்தோடு புஷ்பசயனத்தில் சோகித்துக் கிடத்தல்.

கவி.

மூவகையுலகுளோரு முறையினின்றேவல்செய்வார்
பாவகமின்னதென்று தெரிகிலர்புதைத்துவிம்மித்
தூவகலாதவைவா யெஃகுறத்தொளைக்கையானை
சேவகமமைந்ததென்னச் செறிமலரமளிசேர்ந்தான்.

முறைப்படி தங்கள் தங்களுக்கிட்ட பணிவிடைகளைச் செய்பவர்களாகிய சுவர்க்க மத்திய பாதல மென்னு மூவகையுலகத்தி லுள்ளவர்களாகிய தேவர் மானிடர் நாகரென்பவர்கள் கருத்து இன்னதென்று தெரியாமல் மனம் வருந்தித் துடிக்க, கூர்மையாகிய நுனியையுடைய வேலினால் தைப்புண்ட யானையொன்று மகாபிரயாசத்தோடு தனது துயிலிடத்தை யடைந்த தன்மைபோல் அவமானமென்கின்ற வேலானது தைத்துவருத்த வருந்துகின்ற சிந்தையுடன் மலர்களாற்றொடுத்த சயனத்திற் சாய்ந்தான். வீணையினது நரம்பின்கண் சப்தசுரத்தையும் ஏழிசையோடு கூட்டி இசைத்தலைப்போலும் இனியமழலைச்சொல்லையும், பவளம்போலும் சிவந்தவாயையும், பச்சென்ற வளையலையணிந்த கைகளையுமுடைய சீதாபிராட்டியாரிடத்தில் வைத்த நினைவு நிறைந்திருக்கிற தனது நெஞ்சில் தோல்வியினா லுண்டான வெட்கமு நிறைந்தபடியால், பிறருக்குள்ளுண்டாவது அவ்வெட்கத்தை மறைத்துக்கொள்ளுகிறதற்குமிடமில்லாமல் வியசனமுடையவனானான். இப்படி வியசனமானது தன்மனதைச் சூழ்ந்துகொள்ளவே, இராவணன் தன்னுள்ளமானது மானத்தைவெளியிற்கக்குகிறதைப்போலப் பெருமூச்சுவிடத் தலைப்பட்டான். சுவர்க்கலோகமுதலாகிய பலலோகங்களையும் தன்புஜபலத்தால் தோல்வியடையப்பண்ணி நகைத்த இராவணன், தன்னை ஸ்ரீராமலக்ஷ்மணர் முதலான பகைஞர்கள் சிறியமனிதர்களென் றெண்ணினவனாயினும் அவர்கள் தன்னை நகைப்பார்க

ளை யென்று வெட்கப்படவில்லை. மிதிலையிற்பிறந்த ஜானகியானவள் சிரிப்பாளென்கிறதற்கு மாத்திர மிருந்துவெட்கமுற்றுச் சோர்ந்துகிடந்தான்.

### இராவணன் சோகித்துக்கிடப்பதைக் கேட்ட மாலியவான் தன்னிடம்வந்து யாதென்றுவினவ யுத்தக்களத்தில் ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் செய்த யுத்தத்தின் பிரபாவத்தையும் தானடைந்த விபத்தையுங்கூறி வருந்தல்.

கவி.

ஆங்கவன்றன்மூதாதை யாகியமுப்பின்யாக்கை
வாங்கியவரிவில்லன்ன மாலியவானென்றொருவன்
பூங்கழலரக்கன்வந்து பொலங்கழலிலங்கைவேந்தைத்
தாங்கியவமளிமாடோர் தவிசடைப்பீடஞ்சார்ந்தான்.

இருந்தவனிலங்கைவேந்த னியற்கையையெய்தநோக்கிப்
பொருந்தவர்க்குற்றபோர்ற் றோற்றனன்போலுமென்று
வருந்தினைமனமுந்தோளும் வாடினைநாளும்வாடாப்
பெருந்தவமுடையவைய வென்னுற்றபெற்றியென்றான்.

இப்படி இராவணன் ஸ்ரீராமலக்ஷ்மணரால் யுத்தக்களத்தில் தோல்வியடைந்துவந்து புஷ்பசயனத்தில் தனியே சோர்ந்துகிடப்பதைக்கேட்டு வயதுசென்றதனால் வில்லைப்போல்வளைந்து கூனியதேகத்தையுடைய அவன்பாட்டனாகிய மாலியவானென்கின்ற ராட்சசன் அவன்படுத்திருந்த மெத்தையின் பக்கத்திலே ஒரு ஆசனத்திலிருந்துகொண்டு, அவ்விலங்காதிபதியினுடைய இருப்பை நன்றாயுற்றுப்பார்த்து, அப்பா பேரப்பிள்ளாய்! "பட்டாற்றெரியும் பறையனுக்" கென்பதுபோலுமிருக்கிறதே நீயிருக்கின்ற இருப்பு ஐயோ! எனிப்படி உன்மனமும், தோளும், வாடியிருக்கின்றாய்? ஒருநாளும் வாடாததபோபலத்தையுடைய என்னையனே! என்ன நடந்தசெய்தி சற்றேயெனக்குத் தெரியும்படிச் சொல்லுக. என்று கேட்டனன்.

கவி.

சவையுறுநெஞ்சன்காந்திக் கனல்கின்றகண்ணன்பத்துச்
சிவையின்வாயென்னச்செந்தீ யுயிர்ப்புறச்சிவந்தமூக்கன்
நவையுறுபாசையன்றி யமுதினைநக்கினும்
சுவையறப்புலர்ந்தநாவா னினையனசொல்லலுற்றான்.

அதற்கிராவணன் அதிகமான மனக்கவலையுடனே காந்தியெரிகிற கண்களையுடையவனாய்ப் பதைபதைத்து, பருத்தகுருத்திகளிற் காற்றுமிகுந்து வருவதுபோலப் பத்துமூக்குகளிலும் அதிககாற்றாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, அமிர்தம் — பாகு — இவைகளை நக்கினாலும் சுவைதெரியாதபடி வறண்ட நாவுடனே பாட்டனைப்பார்த்துச் சொல்லுகின்றான்.

ஐயா என்னுயிருக்குயிராகிய பாட்டனே! கூட்டங்கூட்டமாக இரிஷிகளும், தேவர்களும், நாமும், இதுவரையில் ஒருதேகம்போலப் பேதமற்றிருந்தோம். அப்படிப்பட்ட நம்முடைய "குலத்துக்குப்" பங்கமும் "பழியும்வந்து



நேரிட்டன. குழந்தைச் சந்திரனைத் தரித்த அந்தத் திரிபுராந்தகன் முதலாகத் திரிலோகத்தவர்களு நமக்கு உபபலமாகவந்து எதிர்த்தாலும், ஓபாட்டா! அப்பெருஞ்சேனையெல்லாம் அந்த இளையவனான லட்சுமணன் வில்லைவளைத்துப் பாணப்பிரயோகஞ்செய்தால் அவனுக்கேபோதாது, இப்படியிருக்க அவனுக்கு மூத்தவனாகிய ஸ்ரீராமனோ? அதியுக்கிரமாகப் போர்செய்கின்ற அநேகவெள்ளமாகிய ராக்ஷசவீரர்களுடைய ஆவியைப் பயப்படும்படி கவர்ந்த காலத்திலும், அந்த அவமானத்தையெல்லாம் என்முதுகின்மேற் சுமத்தின காலத்திலும், அந்த மனுஷனுக்குக் கொஞ்சமாகிலும் கோபம்வரவேண்டாமா? அக்கோபக்குறியினுண்மை கொஞ்சமுந் தெரியவில்லை. முன்னாலே கூனிமுதுகில் உண்டைவில் தெறித்தபோது அதைப்படி விளையாட்டாக விருந்ததோ? அதேபிரகாரமவனுக்கின்றைக்கு மிருந்தது.

ஐயா? அம்பானது அவன்கையைவிட்டுப் புறப்பட்டால் உலகங்களையெல்லாந் திரிந்துகொண்டிருக்குமேயல்லாமல், ஊழிக்காலமானாலும் ஓயுமென்று சொல்லக்கூடுமோ? அது பிரளய காலாக்கினியைத் தீய்ப்பதல்லாமல் போகுந்திசைகளையும் தீய்க்கும். மகாமேருவைப் பிளக்கவேணுமென்றாலும், ஆகாசத்தைக் கிழித்துக்கொண்டு அப்பாற் போகவேண்டுமென்றாலும், இந்தப்பூமியைக்கிழித்து ஊடுருவிப்போகவேண்டுமென்றாலும், இந்தச் சமுத்திரஜலத்தைக் குடிக்கப் புறப்பட்டாலும் அதற்கு லகுவியமாகுமா? அதனுடைய வல்லமைக்கு மகமேருவும், உலகங்களும், ஆகாசமும், சப்தசமுத்திரங்களும், அநேக கோடிகளாக விருந்தாலும்; அப்போதாவது போதுமா? அவன் வில்லில் நாணேப்பூட்டி வளைக்கிறதும், அம்பு தொடுக்கிறதும், தேவர்களுக்கும் பார்க்க முடியாதென்றால்; இன்னுமற்ற எவர்கள்தான் தெரிந்துசொல்லப்போகிறார்கள்.

இராட்சசரைச் சம்ஹரிக்கவேண்டுமென்று அவனினைத்தாலே போதும். உடனே யிவ்வுலகமெல்லாம் அம்புக்கூட்டங்களாக நிறைந்துபோகும். இந்த இருநூறுவெள்ளஞ் சேனைகளையும், யானைகுதிரைகளையும், இராட்சசர்களையும், தலைகளையறுத்துத்தள்ளினதேயல்லாமல்; ஓரம்பாகிலும் சரீரங்களிலே தடைபட்டதுண்டா? கல்வித்துவான்கள் நாவில் பொருள்களைக்குறித்தமைக்கப்பட்டதும் ஞானத்தை மனத்தின்கண் விளைவிப்பதுமான சொற்களைப்போலவும், அச்சொல்லாலமைந்த செய்யுட்களினது மோனை - எதுகை — இயைபு — அளபெடை — முதலியவைகளாலமைந்த தொடைகளைப்போலவும், அத்தொடையினளவை நீக்கி அந்தந்த சுரத்துக்கமைந்த சுதிகூட்டி மந்தம் — மத்திமம் - தாரம் — இவைமுதலான இசைவழியாய் ஆரோகணம் அவரோகணத்தாற் பாடப்படும் அளவுக்கடங்காத பண்களைப்போலவும், குன்றக்கூறல்முதலிய குற்றங்களற்ற தன்மை-யுவமை முதலாகிய பற்பல அலங்காரங்களைப் போலவும், அளவிடக்கூடாத பெருமையையுடையதாக விருந்தன.

கவி.

இந்திரன்குலிசவேலு மீசன்கையிலைமூன்றென்னு
மந்திரவயிலுமாயோன் வளையென்றின்னவுங்கண்டேன்
அந்தரமினிதம்மா தாபதனம்புக்காற்ரு
சொந்தனர்யானவாதா ராரணவைநோக்கற்பார்.

ஐயா பிதாமகனுகிய ஓமாலியவானென்னும் பேருடையவரே! அந்தக் காகுத்தனுடைய பாணங்கள் இந்திரனுடைய வச்சிராயுதமும், சிவபிரானுடைய மந்திர சக்தியுள்ள முத்தலைச் சூலாயுதமும், விஷ்ணுவினுடைய சக்கராயுதமும், ஆகிய இவைகளெல்லாம் வருகிற வேகத்தைப் பார்த்தேன். அதற்கு மிதற்கும் வெகுதாரதம்மிய மிருக்கிறது. இந்த மனுஷனுடைய அம்பைச் சகிக்கமாட்டாமல் நானிகமாய் நொந்துபோனேன். என்னையல்லாமல் வேறே யாராவது அதைக்கண்ணுல் பார்க்கமாட்டுவார்களோ? சுடுகாட்டிற் பேய்க்கணங்களுடனே வாசம் பண்ணுகின்ற தன்மையைவகித்த சிவபெருமானுடைய எட்டுத் தோள்களும், இந்திரனுடைய இரண்டு தோள்களும், சர்வலோகங்களையும் தன்வயிற்றி லடக்கிவைத்துக்கொண் டிருக்கின்ற விஷ்ணுவினுடைய ஆயிரம் தோள்களும், இந்த மனுஷனுடைய ஒருவிரலின் வல்லமைக்கு ஈடுகொடுக்க மாட்டுவனவோ? கொடுக்கவே மாட்டா. திரிபுரங்களைச் சுட்டெரித்த பலம்பொருந்திய அந்த மேருவில்லும் இந்தவீரனுடைய வில்லுக்குமுன்னே அம்பென்று சொல்லவுங் கூடுமோ? கூடாது. ஆகையால் அதற் கிணையாகச் சொல்லுகிறதற்கு வேறேயொரு பொருளுங்கிடையாது.

வேதந்தப்பினும், அவனுடைய வில்லிலிருந்து வருகிற அம்புகள் தப்பமாட்டா. மகாவீரர்களுக்குள்ளே அந்த விஷ்ணுவானாலும் கார்த்தவீரியனுக்குச் சமானமாக மாட்டானென்று நான் எண்ணியிருந்தேன். அப்படிப்பட்ட கார்த்தவீரியனும் இந்த மனிதனுடைய தம்பியின் பாததூளிக்கும் சரியாகமாட்டானுல், அவர்களைவிட கலங்காத சித்தத்தையுடையவர்களாக நிற்கத்தக்க வல்லமைசாலிகள் யாரிருக்கிறார்கள்? மேலும்—அவனுடைய பாணங்கள் கோதண்டத்தினின்றும் புறப்படுகிறபோது பிரமதேவனுக் கொப்பாகவும், ஓடுகிற காலத்தில் காலாயிரம் - முடியாயிரம் - கையாயிரமுள்ள விஷ்ணுவுக்கு நிகராகவும், சத்துருக்களுடைய படையைச்சேர்ந்து அவர்களை நிராசேஷமாகச் சம்ஹரிக்கும் காலத்திற் பிரளயகாலஉருத்திரமூர்த்திக் கொப்பாகவும் கண்டோர் சொல்லும்படியாக விருக்கும்.

ஐயா என் மூதாதையே! அதன் பெருமையைச் சொல்லுகிறதற்கு எத்தனைகாலம் செல்லும்? அற்பத்திலே நம்மாற் சொல்லிமுடியத்தக்கதோ? அந்தப்பாணங்கள் மேலேயிருக்கும் ஆகாசத்தையுந் தொளைத்துக்கொண்டு வருமானுல், அவைகளின் வல்லமைக்கு வேறேசாக்ஷியும் நான் சொல்லவேண்டுமோ? இன்னுநா னென்னென்று சொல்லமாட்டுவேன்? அந்த மனுஷனுடைய வில்லானது கிழக்கு—மேற்கு—வடக்கு—தெற்கு—பூமி—ஆகாசம் - மற்ற இடங்



கள்—இந்தத்திசைகளில் எந்தத்திக்கி லிருந்ததோ? இடதுகையிலிருந்ததோ? அல்லது வலதுகையிலிருந்ததோவென்று இன்னு நினைந்து நினைத்துப்பார்க்கின்றேன். அது என்மனதுக்குத் தோற்றப்படவில்லை.

கவி.

ஏற்றமொன்றில்லையென்ப தேழைமைப்பாலதன்றே
ஆற்றல்சால்கலுழனேதா னாற்றுமேயாமினாற்றல்
காற்றையேமேற்கொண்டானே கனலையேகடாவினானே
கூற்றையேயூர்கின்றானே குரங்கின்மேற்கொண்டுநின்றான்.

அஃதிருக்கட்டும்: அவனுடைய வாகனத்தின் பெருமையை நான் என்னவென்று தெரிந்துசொல்லப் போகின்றேன்? அந்தக் கருடனும் யுத்தத்தில் இப்படி முனைந்து இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாகத் திரியமாட்டான். அந்த ஸ்ரீராமன் காற்றின்மேலேதா னேறியிருந்தானே? அக்கினியையேசெலுத்தினானே? எமனையே வாகனமாகக் கொண்டானே? என்றால், அப்படிக்கில்லை. ஒரு குரங்கின் பேரிலேதா னேறியிருந்தான். அது பெருமையுடையதல்லவென்று சொன்னுற் புத்தியீனமல்லவோ? ஆகையால் அநேகமாய்ப்பேசித்திரிகிறதி லென்னவுண்டு? சாந்தத்திற் பூமியையொத்த இந்தச் சீதையானவள் அந்த ஸ்ரீராமனுடைய மேனியையும் அவனுடைய செய்கைகளையுங்கண்ட கண்ணுக்கு, மன்மதனும் - நானும்—மற்றவர்களும் — நாயென்று மதிக்கும்படியாகவு மாவோமா? இந்திரன்-விஷ்ணு — சிவன்-பிரம்மா- ஆகியவிந்தப் பலவீனர்களாலல்லாமல் இந்த மனிதர்களால் நமக்கு நாசகாலம் வந்து முடிந்தாலும் நல்லதே; நாம் நல்ல பகையாளியைத்தான் பெற்றோம். இதுதான் இன்றைக்கு நடந்தசேதி அந்த மனிதனுல் யுத்தக்களத்தில் நான் பட்டதிக்கத்தை என்னசொல்லப்போகிறேன். எனது வீரமும்புகழும் பெருமையும் திரிலோகாதிபத்தியமும் பந்துவர்க்கத்தினரும் புத்திரர்களும் செல்வமும் அவனது ஒருபாணத்தினது முன்பாவது நிற்காதையா என்பாட்டனே யென்று இராவணன்சொல்லி முடித்தான்.

## மாலியவான் இராவணனுக்குச் சில அறிவுறுத்தல்.

கவி.

முன்னுரைத்தேனே வாளா முனிந்தனை முனியாவும்பி
இன்னுரைப்பொருளுங்கேளா யேதுவுண்டெனினுமோராய்
நின்னுரைக்குரைவேறுண்டோ நெருப்புரைத்தாலுநீண்ட
மின்னுரைத்தாலுமொவ்வா விளங்கொளியிலங்கல்வேலோய்.

இவையனைத்துங்கேட்ட பாட்டனுகிய மாலியவான் நெருப்பினுடைய ஒளிக்கும் மின்னலினது ஒளிக்கும் நிகராகாது பிரகாசிக்கின்ற வெற்றிமாலையையுடைய வேற்படையையேந்திய வீரசிகாமணியாகிய இராவணு! இந்தச் சேதியெல்லாம் உனக்கு நான் முன்னமேதானே சொல்லியிருந்தேன். அதற்கு நீ என்பேரில் வீணுய்க் கோபம்பண்ணிக்கொண்டாய். இதுவுமல்லாமல்

உன் தம்பியாகிய விபீஷணனும் எத்தனையோ நல்லபுத்திகளை உனக்குச் சொன்னான். அதையும் கேளாமற் கோபித்துக்கொண்டு அவனையும் துரத்திவிட்டாய். எல்லாவிதத்திலும் உனக்கு நட்புப்பாடியான ஏதுக்களைப் படித்துப் படித்துக் காட்டியும், அவைகளையெல்லாம் மெய்யென்று கேட்டாயில்லையே; அப்பா இராவணா! உன்பேச்சுக்குக் குறுக்கே பேசுகிறவர்களு முண்டோ? ஓ இராவணேஸ்வரா! மிகவும் சாஸ்திரபாராயணமியற்றேறி யெல்லாக் காரியங்களினுடைய உண்மையை யறிந்தவர்கள் ஒன்றைத் தீர்க்காலோசனைசெய்து சொன்னபோது, அது வருத்தப்படத் தக்கவைகளானாலும் பொறுத்துக்கேட்கவேண்டும். நீ சிறிதுங் கேட்காமற் போய்விட்டாய். இப்போது அந்த ஜகன் மாதாவாகிய சீதாபிராட்டியாரைக் கொண்டுபோய் விட்டுவிட்டால், நீ பிழைத்துப்போவாய். அப்படிச் செய்யாவிட்டால் உன்னுடைய கிளைகளும் - சுற்றமும் - வெற்றியும் - உரிமையும் - கல்வியும் - செல்வமும் - சேனையும் - இவை முதலானவைகளுடன்கூட நீயும் மாண்டுபோகிறது நிச்சயம்; நிச்சயம்; என்னுடைய வார்த்தையைப் பொய்யென்று யோசனைசெய்யவேண்டாம். நானே நீயே காணப்போகின்றோம். என்று பாவியவான் சொன்னான்.

இராவணன் மகோதரன் துற்போதனையால் கும்பகருணனை நித்திரையினின்றெழுப்பி யழைத்துவரும்படி சிலஒற்றர்களையு மிருகங்களையு மல்லர்களையு மேவுதல்.

கவி.

ஆயவனுரைத்தலோடு மப்புறத்திருந்தானன்ற
மாயைகள்பலவும்வல்ல மகோதரன்கடிதின்வந்து
தீயெழநோக்கியென்னிச் சிறுமைசெப்பிற்றென்று
ஓயுறுசிந்தையானுக் குறுதபேறுறுதிசொன்னான்.

இவ்வண்ணம் மாலியவானாகிய பாட்டன் சொல்ல இராவணன் கேட்டுக் கொண்டிருக்கும்போது கொஞ்சம் தொலைவில் இவைகளைத்தாங் கேட்டிருந்த மகோதரன் அதிசீக்கிரமாக ஓடிவந்து கண்களில் அக்கினிப்பொறி பறக்க விழித்து மாலியவானைப்பார்த்து ஐயா, உம்முடைய வயதையும் நடையையும் மேனியையும் பார்த்தால் மிகப்பெரியவராகவிருக்கிறது. நீர் சொல்லும் வார்த்தைமாத்திரந்தான் சிறியதாயிருக்கிறது. இந்தச்சமயத்தில் இவ்வண்ணம் அற்பமான வார்த்தைகளைச் சொல்வது யாது? அதுமிகநன்றாயிருக்கிறது: நன்றாயிருக்கிறதென்று சொல்லி, வீரத்தன்மையிழந்து வெதும்பி வருந்துகின்ற மனத்தையுடைய இராவணனுக்குச் சில உறுதிப்பாடாகிய வார்த்தைகளைத் தகாதனவாகச் சொல்லுகின்றான். ஓ இராவணேஸ்வரா! ஆராகிலுமொருவர் ஒருகாரியத்தை இதுநன்மையென்று பிடித்தால், அதனாலே ஜெயம் வந்தாலும் - அல்லது அபஜெயமாகி மரணம்வந்தாலும் - அதைவிடாமல் முழுமையும் சாதிக்கிறதே உத்தமர்களுடைய செய்கையாகும். சொன்னசபதம்



தவறினவனுக்கல்லவோ இம்மையிற் பழியும், மறுமையில் நரகமு முண்டாவது. திரிபுரங்க ளெரிந்துபோம்படி ஒரு அம்பைப் பிரயோகம்பண்ணின சிவபெருமானும் - உலகங்களையெல்லா மோரடியாக அளந்தடக்கின அந்த மகாவிஷ்ணுவும் - உம்மோடு யுத்தஞ்செய்து தோற்றுப்போயிருக்க, இந்த மனுஷனுடைய போருக்கு நீர் பயந்திருக்கின்றது போலக் காணப்படுகிறதே; இதென்ன விந்தையாயிருக்கின்றது?

கைலாசகிரியை வேரோடு பேர்த்தெடுத்த ஓ மகாநுபாவனே! ஒருவேளை வென்றவர் தோர்ப்பார். தோற்றவர் வெல்வார். எல்லாருக்கும் மேலாயிருந்தவர்கள் தாழ்வார்கள். தாழ்ந்திருப்பவர்கள் உயர்வார்கள். இது பிரபஞ்ச நீதியென்று உணர்ந்தவர்கள்தானே ஞானவான்களென்பவர்கள். சாமர்த்தியத்திற்குக் கரையுண்டா? அற்பமனுஷர்கள் செய்கின்ற யுத்தத்தைப் புகழுகிறீர்போலு மிருக்கின்றதே; நாமிப்போது சீதையை விட்டுவிடுவோமேயானால், நமக்கு வந்த இந்தப் பொல்லாங்குகளெல்லா நீங்கிவிடும். இல்லாவிட்டால் யுத்தஞ்செய்து பிராணனைவிடவேண்டும். இவ்விரண்டுமல்லாமல் வேறொரு உபாயஞ் செய்கிறதிற் பிரயோசனமில்லை. நீர் இந்தப் பிரகாரமாக இவ்விடத்தில் தாமசமாக விருப்பதென்ன? உமதுமனதிற் கொண்டிருக்கின்ற கவலையை இப்போதே லக்ஷியஞ்செய்யாமல் விட்டுவிடும்.

அழியாத பெருமையையுடைய ஓ இராவணேஸ்வரா! இன்னஞ் சற்றுநேரம் தாமசஞ்செய்வீரானாற் பனிமூடியிருக்கின்ற சிறிய சமுத்திரஜலத்தைச் சூரியனானவன் சோஷித்துவிடுவதுபோல, இலங்கா பட்டணத்தையும் - நம்மையும் - கனிகளையுடைய விருக்ஷங்களுக்குச் சமானமாக்கி இந்த வானரசேனைகளெல்லாம் கூடிக்கொண்டு துவம்சம் பண்ணிப்போடும். நீர் வருத்தப்பட்டுக்கொண்டு சோர்ந்திருப்பது தகுதியன்று. இந்தத் துன்பத்தை விட்டுவிடும். முன்னாலே சர்வலோக நாயகர்களான திரிமூர்த்திகளுங் உமக்குத் தோற்றுப்போய்விட்டபிறகு, சமஸ்தமான தேவர்களும் உமக்கு ஏவல்செய்யும்படியாக இந்தத் திரிலோகங்களையும் ஏகச்சக்ராதிபதியாய் ஆண்டு வருகின்றீர். அப்படிப்பட்ட நீர் புல்நுனியில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற பனிநீர்த்துளிக்குச் சமானமாகிய இந்த அற்பமனிதர்களை ஒரு லட்சியம்பண்ணி, உமக்கு இளையவனான கும்பகருணனை ஒரு திரணமாகநினைத்து இகழ்ந்துவிட்டீர். இதென்ன ஆச்சரியம்? நீர் அந்தக்கும்பகருணனை வரவழைத்து அந்த மனிதர்கள் மேலிற் சண்டைக்கனுப்பும். மிகுந்த பயங்கரமான மலையையொத்த அந்தக் கும்பகர்ணனுடைய சொரூபத்தை அவர்கள் பார்த்தமாத்திரத்தில், எங்கேயாவதோடி ஒளித்துக்கொள்ளுவார்கள்.

அப்படிக்கில்லாமல் எதிர்த்துச் சண்டைக்கு நிற்பார்களானால், ஒருவருடைய சகாயமுமில்லாமல் அந்தக்கும்பகர்ணன் மாத்திரமே சண்டைமுடியாதவர்களான அந்தமனிதர்களுடைய உயிரைப் பரிகரித்துப் போடுவான். என்றித் துப்பிரகாரமாக மகோதரனுற் சொல்லக்கேட்ட இராவணன் அதற்குட்பட்டு;

சமஸ்தமுந்தெரிந்த ஓ மகோதரனே! உன்னைப்போலச் சமயோசிதமாக எல்லாவற்றையும் சொல்லவல்லவர்களியாரிருக்கிறார்கள்? நீ சமஸ்தமான காரியங்களையும் அறிந்திருக்கின்றாய். மேலும் - நீ என்னிடத்தில் வைத்திருக்கின்ற அன்போ இவ்வளவவ்வளவல்ல. ஆகையினாலே நல்ல உபாயஞ் சொன்னாய். என்று இராவணன் மனம்பேதித்து, நமக்கு ஈஸ்வரயத்தினத்தால் கெடுதிகாலம் வந்து நேரிடுமேயானால் மத்தியில் வேறொன்றினாலே தடுக்கக்கூடுமோ?

கவி.

நன்றிது காருமமென்ன நம்பியையானுகவோடிச்
சென்றிவட்டருதிரென்று னென்றலுநால்வர்சென்றார்
தென்றிசைக்கிழவன்றூதர் தேடினர்திரிவரென்னக்
குன்றினுமுயர்ந்ததோளான் கொற்றமாக்கோயில்புக்கார்.

ஐயா மகோதரனே! நீர் சொன்னது மிகவும் நன்மை நன்மையென்று தனது சமுகத்திலுள்ளவர்களாகிய தூதர்களை நோக்கி இக்ஷணமே அதிசீக்கிரத்திற் சென்று எனது பின்னவனாகிய தம்பியிருக்கின்றானே கும்பகருணன் அவனை அழைத்துக்கொண்டுவாருங்களென்றாக்கியாபிக்க, அவ்வார்த்தையைச் சிரந்தாங்கினவர்களாகிய நான்கு தூதர்கள் தக்ஷணதிசையில் யமனியென்னும் படைவீட்டிற் கதிபனாகிய இயமனது தூதர்கள் கும்பகருணனுடைய உயிரைக்கொண்டு போதற்குக் கும்பகருணனெங்கே யெங்கேயென்று தேடிவருவதுபோல் மலையினுமிக்க பலம்பொருந்திய உயர்ந்த தோள்களையுடையவனான கும்பகருணனுடையவெற்றிபொருந்திய அரண்மனையிற்சேர்ந்து, மகாமேருமலைக்குச்சமானமாகிய அந்தக் கும்பகர்ணன்சயனித்துக்கொண்டிருக்கின்ற பள்ளியறையினது மேகமண்டலத்தளாவிய வாயிலில்நுழைந்து, ஐயா கும்பகர்ணமகாராஜனே! நீர்விழித்துக்கொள்ளக் கடவீர்; நீர்விழித்துக்கொள்ளக்கடவீர், என்று தங்கள் கையிலேபிடித்துக்கொண் டிருக்கின்ற இருப்புலக்கையினாலே தலையிலடித்துச் செவியிற்குத்தினார்கள். பின்னுமந்தக் கொடுங்கண்ணனை கும்பகர்ணன் நித்திரை செய்கிறதைக்கண்டு கோபமுற்று, ஓ கும்பகர்ண மகாராஜனே! எந்தக்காலத்திலும் அழிவில்லாத ராட்சசர்களுடைய இன்பமான மாயவாழ்க்கையெல்லாம் அழிந்துபோகும்படி, உன்தமையனான ராவணன் புத்திபூர்வமாய்த் தெரிந்தே தீமையைச் சம்பாதித்துக் கொண்டார். நீர் இன்றைக்கு உயிர்நீங்கி மாண்டுபோவதே நிச்சயம். இன்னமுமக்கு உறக்கமேதுக்கு? எழுந்திருக்கக்கடவீர். என்று பற்பலவிதங்களைச் சொல்லிப் புரட்டிப் புரட்டி யெழுப்பிப் பின்னுஞ் சொல்லுகிறார்கள்.

கவி.

உறங்குகின்றகும்பகன்ன வுங்கண்மாயவாழ்வெலாம்
இறங்குகின்றதின்றுகா ணெழுந்திராயெழுந்திராய்
கறங்குபோலவிற்பிடித்த காலதூதர்கையிலே
உறங்குவாயுறங்குவா யினிக்கிடந்துறங்குவாய்.



ஐயா கும்பகர்ண மகாராஜனே! எவர்களாலேயும் துதிக்கின்ற தேவர்களையெல்லாம் இம்சித்தும், புவனநாயகியாகிய சீதாபிராட்டியாரைச் சிறையில் வைத்தும், எவர்களுக்கும் அருவருப்பான காரியங்களைச் செய்தும், இப்படி அனியாய வாசாகதியைச்செய்கின்ற உங்களுடைய வஞ்சகம்பெற்ற வாழ்வெல்லாம் அழிந்துபோகிறதை இன்றைக்குப்பார்க்க எழுந்திரும்; எழுந்திரும்; காற்றாடியைப்போற் கிறுகிறுவென்று சுழன்றுகொண்டு வந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற யமதூதர்கள் கையிலே நீரின்றாய்ச் சயனித்துக்கொண்டு உறங்கப்போகிறீரே, இவ்விடத்திலுறங்கினால் யாது பயன் பெறுவீர்? என்றிப்படியாகப் பற்பலவிதமாகச்சொல்லி எழுப்பினார்கள்.

கவி.

என்றுசொல்லவன்னவன் னெழுந்திராமைகண்டுபோய்
மன்றறங்குமாலைமார்ப வன்றுயில்லெழுப்பலம்
அன்றுகொள்கதேண்டிமென்று மாவொடாளியேவினான்
ஒன்றின்மேலொராயிரம் முழக்கிவிட்டெழுப்புவீர்.

தங்களுடைய வல்லமையினாலே எழுந்திராததைக்கண்ட அவ்வொற்றர்கள் திரும்பித் தசக்கிரீவனிடம் சென்று, ஐயா இராவணேஸ்வரா! வாசனையோடுங்கூடிய மாலையையணிந்த மார்பையுடையவரான உமதுதம்பியாகிய கும்பகர்ணன் எழுந்திருக்கவில்லையென்று சொன்னார்கள். இப்படி சொல்லக்கேட்ட ராவணன் அவர்களைப்பார்த்து, ஓ தூதர்களே! குதிரை - யானை - யாளி - இவை முதலானவைகளில் ஆயிரமாயிரமாகவேவி மிதிக்கவிட்டெழுப்புங்களென்று நியமித்தான். அந்தப்பிரகாரம் அவர்கள் அந்தச் சேனைகளைக் கொண்டு மிதிக்கச்செய்தும் அவன் எழுந்திராததினால் மறுபடியும்போய் இராவணனுக்குத் தெரியப்படுத்த, மிகுந்த சாமர்த்தியமுள்ளவர்களான நீங்கள் உங்கள் சைனியங்களாகிய இராக்ஷச மல்லர்களோடேகூடப் போவீர்களென்று ஏவினான்.

### இராவணனுடைய ஒற்றர்கள் இலட்ச மல்லர்களோடு சென்று கும்பகருணனை நித்திரையினின் றெழுப்புதல்.

கவி.

சென்றனர்பத்துநூற்றுச் சீரியவீரரோடி
மன்றலந்தொங்கலான்றன் மனத்தனின்வருத்தமாற
இன்றிவன்முடிக்குமென்ன வெண்ணினரெண்ணிலீண்டக்
குன்றெனவுயர்ந்ததோளான் கொற்றமாக்கோயில்புக்கார்.

அந்தப்பிரகார மகாபலமுள்ள வீரர்களான இலட்சம்பேர் ராட்சசமல்லர்கள் ஓடிப்போய் இராவணனுடைய மனதிலுள்ள வருத்தநீங்க இன்றைக்கிவன் வானரர்களைச் செயித்துக் காரியத்தை நிறைவேற்றுவானென்று அவனையெழுப்ப நினைத்து, மலையைப்போலும் உயர்ந்துநீண்ட தோள்களையுடைய அந்தக் கும்பகர்ணன் சயனித்துக்கொண் டிருக்கின்ற வெற்றிப்பிரதாப மாளிகையில் நுழைந்தார்கள். இந்தப்படி நுழைந்த மிகுந்தபலமுள்ள வீரர்

கள் கும்பகர்ணனுடைய திறந்தவாயினிலிருந்து புறப்படுகின்ற சண்டமாருதத்தையொத்த சுவாசத்தி லகப்பட்டுக்கொண்டு, வருகிறதும் போகிறதுமாய் உழன்று திகைப்படைந்து தத்தளித்து, அந்தச்சுவாசத்தி லிருந்துந் தப்பித்துக்கொள்ளக் கூடாமல் ஒருவர்கையை யொருவர் பிடித்துக்கொண்டு, தங்களுக்குண்டாகிய அளவில்லாத பலத்தினாலே நெக்கிக்கொண்டு, அந்தப் பெரிய சுவாசம்வரும் வழியைக்கடந்து அப்பாற்சென்றார்கள்.

அப்படியாகப் போனவர்கள் எப்படியேனும் அவனுடைய பெரியநித்திரையை எழுப்பவேண்டுமென்ற எண்ணங்கொண்டவர்களாகி மறுபடியும் வேறொருவாயிலில் நுழைந்து, நாமெல்லாரும் இன்றைக்கிவனை எழுப்புகிறதற்கு என்ன உபாயம் செய்யலாமென்று யோசித்து, அவனுடைய பெரியவாயையு மூக்கையுங்கண்டு உடல்நடுங்கி, அவனைக்கிட்டித்தொடுகிறதற்கும் பயந்து, அவனுடைய பெரிய குகைக்குச் சமானமாகிய காதில் சங்கு-தாரை-பூரி-முதலாகிய நாதங்களால் உகாந்தகால பேரிடியைப்போல கோஷமுண்டாகச் செய்தும், அநேககோடி தண்டாயுதங்கள் - சம்மட்டிகள் - குந்தாயுதங்கள் இவைகளைப் பழகுவதிற் சாமர்த்தியமுள்ளவர்களெல்லாரும் கூட்டம் கூட்டமாகக்கூடி அவனுடைய தாடையிலும் - சந்துமுட்டுகளிலும் - மார்பிலும் - தலையிலும் - பலங்கொண்டமட்டும் ஓங்கியடித்தும், குத்தியும், மோதியும், எற்றியும், கையோய்ந்து மெய்களைத்து சக்தியற்றனர்; உடனேசிலர்போய் இராவணனுக்குத் தெரிவித்தார்கள். அதற்கவன்பெரிய குதிரைப்படைகளையெல்லாம் அதிசீக்கிரத்திற் கூட்டங்களாகக் கொண்டுபோகும்படி நியமித்தான்.

அந்தப்படியே அவர்கள் சவாரி செய்யத்தக்க ஜோடிகளோடு ஆயிரங்குதிரைகளை ஆயிரம்வீரர்கள் வேகமாய்ச் செலுத்திக்கொண்டுவந்து, பெருந்தூக்கங்கொண்டு உறங்குகிற கும்பகர்ணனுடைய அகன்ற மார்பின்மீது வருத்தமுண்டாகும்படியாக ஏற்றி, அந்தக்குதிரைகளை நடத்துவித்தும் - ஓடச்செய்தும் - மிகுந்தவேகத்துடனே வையாளி போகச்செய்தும் - ஆர்ப்பரித்தார்கள். இப்படியவர்கள் ஆர்ப்பரித்துச்செய்கிற செய்கையெல்லாம் தான் அயர்ந்து தூங்குவதற்கு உடம்பினைக் குத்துவதுபோல நினைத்துக்கொஞ்சமும் உணர்ச்சியடையாமல் அப்படியே தூங்கிக்கொண்டிருக்கக்கண்டு, விரைவாயோடிப்போய் நெருங்கிய புஷ்பங்கள் கட்டியிருக்கின்ற வெற்றிமாலையையணிந்த ராவணனுடைய வீரகண்டாமணிதரித்த பாதத்தில்விழுந்து, ஐயா ராவணேஸ்வரா! கும்பகர்ணனை எழுப்பும்படியான உபாயங்களில் ஒன்றல்ல; அநேக கடினமானவிதங்களெல்லாம்செய்து எங்களுக்குக் கையும்-மெய்யும்-பலமும்-குதிரைகள் கால்களும்-ஓய்ந்துவிட்டனவேயொழிய, அவரை எழுப்பும்படியாக எங்களால் ஆகவில்லை அவரை எழுப்பத்தக்க உபாயங்கள் இன்னுமேதேனு முண்டாயிருந்தால் தேவரீர் எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள்.



அப்போது ராவணன் அவர்களைப்பார்த்து, ஆ! ஒற்றர்களே! ஓ மல்லர்களே! இவ்வளவுதானா உங்கள்சாமர்த்தியம்? சக்கரங்கள்பூட்டி மணிகளால் அலங்கரித்திருக்கின்ற பெரியதேர்ப்படைகள் தன்மீதுபெயர்ந்துவருகிற காலத்திலும் உடல் அசையாதவனும், அதிகபலம்பொருந்திக் கட்டமுடியாது, சூலத்தினாலும் - மழுவினாலும் - வாளினாலும் - சம்மட்டியாலும் - ஓங்கிக்குத்தி வெட்டியெறிந்து நொடிக்கும்படி அடித்தபோதிலும் தன்னுடையதொடையாவது சற்றேனுமசையாதவனுமாகியவென்தம்பி கும்பகர்ணனை நீங்களெவ்விதத்திலாவது நித்திரையைப்போக்கி அழைத்துவாருங்களென்று உத்தரவுசெய்தான்.

கவி.

என்றலுமேயடிவணங்கி யிரைத்துநூறிராக்கதர்கள்
வன்றொழிலாற்றுயில்கின்ற மன்னவன்றன்மாடணுகி
நின்றிரண்டுகைதப்புமுற நெடுமுசலங்கொண்டடிப்பப்
பொன்றினவனெழுந்தாற்போற் புடைபெயர்ந்தங்கெழுந்திருந்தான்.

அந்தவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் அந்த ஒற்றர்களும் ஆயிரம் ராட்சசமல்லர்களும் அவனுக்குத் தெண்டனிட்டுச்சென்று, அதிபலத்திற்காக நித்திரைசெய்கின்ற கும்பகர்ணமகாராஜனைக் கிட்டிநின்று, இரண்டு கன்னத்திலு நீண்ட இருப்புலக்கைகளைக் கொண்டு கைகொண்டமட்டுக்கும் ஓங்கியோங்கி யடித்தார்கள். அப்படியடித்தபோது மூன்றுலோகத்தவர்களும் நடுங்கும்படியாகவும், அஷ்டதிக்குகளி லிருக்கின்ற பலம்பொருந்திய பருத்த துதிக்கைகளையுடைய எட்டியானைகளும் நிலைபெயராத தத்தம் நிலையிலிருந்து பெயர்ந்துபோகவும், சந்திரசூரியர்கள் திகிலடையவும், தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமதேவனும் - திருப்பாற்கடலைச் சயனமாகவுடைய விஷ்ணுவும் - கைலாசகிரியை வாசஸ்தலமாகவுடைய சாம்பசிவனும் - ஆகிய இவர்கள்முதலான சமஸ்ததேவர்களும் நடுக்கமுற்று ஏக்கமடையவும், செத்தவனுயிர்பெற்றெழுந்ததுபோல அந்தக்கும்பகர்ணன் விழித்துக்கொண்டான்.

இப்படி மேகங்களைப்பற்றிப் பிழியும்படியான பெரியகைகளையும் - ஆகாசத்தை அளவிடும்படிப்பருத்தஸ்தூல ஆகாரத்தையும் - கடலினும் பெரிதாகிய இரண்டுகண்களையும் - அளவிடக்கூடாத பெருமையுமுடைய கும்பகர்ணனாகிய ராவணசகோதரன் விழித்துக்கொண்டு, பூலோகத்தையெல்லாம் தமது திருவடிகளாலளந்து விஸ்வரூபம் கொண்டுநின்ற சாட்சாது திரிவிக்கிரம மூர்த்தியைப்போல ஓங்கியெழுந்து நின்றான்.

## கும்பகருணன் நித்திரை தெளிந்தெழுந்து ஆகாரமுண்ணல்.

கவி.

உறக்கமவ்வழி நீங்கியுணர்ந்தசும்
வறக்கமைந்தன னூனெருவொக்கிய
கறைநக்குடக்கன் பெருங்கனைக்குவான்
இறக்கின்ற முகந்தினையெய்துவான்.

ஆறுநூறு சகடத்தடிசிலும்
நூறுநூறு குடங்களுநக்கினன்
ஏறுகின்ற பசியையெழுப்பினன்
சீறுகின்ற முகத்திருசெங்கணன்.

அவனப்படிக்கு நித்திரையைவிட் டெழுந்தமாத்திரத்தில் உண்ணும்படியாக வறுத்துச்சுட்ட மாமிசங்களோடேகூடச் சில்கள்ளுக்குடங்களை வழக்கப்பிரகாரம்கொண்டுவந்து கொடுக்கப் பெற்றுக்கொண்டுண்டும் தன்னுடைய உலர்ந்த கடைவாயை நக்கிக்கொண்டு, களைமாறின சாமுகத்தை யுடையவனாகி, பிறகு அறுநூறுவண்டிகளிற் கொண்டுவந்த சோறும் — பதினாயிரங்குடக்கள்ளும் — தட்டாதபடி உண்டான். அப்படியுண்டும் தனது மிகுந்தபசியாறாதவனாகி, இரண்டு கண்களினு நெருப்புப்பொறிபறக்க அவ்வண்டிகளிற்கட்டிவந்த ஆயிரத்திருநூறு கறுத்த எருமைக் கடாக்களையும் ஒருலகூழியம் வையாமற் சிறுதிண்டியாகத் தின்றுவிட்டு, அதுவும்போதாமல் இன்னமும் அதிக ஆகாரங்களைக் கொண்டுவந்து கொடுங்களென்று கூவி, இடிகளைப்பிடித்துக்கையினாற்பிசைந்து நெருப்புப்பற்ற வைக்கும்படியான மகாகோபத்தை யுடையவனாய் அவர்களைப் பார்த்துக்கொண்டு படுக்கையிலுட்கார்ந்திருந்தான்.

தானுட்கார்ந்தகாலத்தில் இராவணனாகிய தனது தமயன் எழுந்து நிற்பதற்குச் சமானமான தூலதேகத்தையுடையவனாகிய கும்பகருணன் பெரிய கடலினலைகள் நெறித்ததுபோலப் புருவங்கள்நெறித்த நெற்றியையுடையவனாகி, குடித்தரத்தம் தன்கடைவாயில் வடியும்படியாக உட்கார்ந்தபடியே தூங்கினான். இப்படியாகக் கும்பகருணன் மீட்டும் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்தபடியே தூங்கவாரம்பித்ததைக்கண்ட ஒற்றர்களும்-மல்லர்களும் - என்ன செய்வார்கள் பாவம்: சற்றுநேரம் ஒன்றும் தோன்றாதவர்களாகி, யாவரும் ஒருமிக்கச்சேர்ந்து, ஐயோ! கடல்போன்ற ரத்தங்களுடனேகலந்த மாமிசங்களை எலும்புந்தோலு நீக்கி வாரிவாரி யுண்ணுகின்ற ஆகாரம்வேண்டுகிறவனும், சூரியனைப்போலொத்த வஜ்ஜிரகங்கணங்களைத்தரித்த பருத்த கைகளை யுடையவனும், கருங்காலிக் கட்டைபோல் வைரம்பற்றிய கால்களில் வீரகண்டாமணியைத் தரித்தவனும், மிகுந்தபசி நோய்க்கு மருந்தாக வேலாயுதமும் - இருப்புக்கழுமுட்களும் - அரிவாளும் - தோல்வியடையும்படியானதன் பற்களைக்கொண்டு யானைகளுடைய கொழுத்த மாமிசங்களைத் தின்று வெறிநீங்காத மிகுந்த கள்ளைக்குடிக்க அதிக ஆசையுள்ளவனு மானவன் இவன்.

அன்றியும் - ஒருசூலாயுதத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்ற உயர்ந்த தோள்களை யுடையவனும், சூல்கொண்ட மேகம்போன்ற காத்திரமுள்ள தோற்றத்தை யுடையவனும், இராத்திரிபோலு மேனியையுடையவனும், அந்தகாரம்பொருந்தியமனதையுடையவனும், சத்திக்கின்றபலவிதகழல்களைத் தரித்திருக்கின்ற பாதங்களையுடையவனும், தேகமெல்லாம் நெறிப்புற்றிருக்கின்ற செம்பட்டமயிரை யுடையவனும், தேவேந்திரனைப் பற்களுதிரும்படியாக வடித்த தனது கையினாலே சொர்க்கலோகத்துமதிலு மிடிபட்டுப் பூமியில் விழும்படியாகப் பெயர்த்துத் தள்ளினவனும், ஸ்திரீகளெல்லாரும் வயிற்றைப் பிசைந்துகொண்டு பயந்துபோய் ஒளித்துக்கொள்ளும்படியாக கமுகுலைகளை வரிசையாக வைத்ததுபோன்ற பற்கள்காணப்படுகின்ற வாயையுடையவனும், உடல்கிடந்து நித்திரை செய்யும்போது தேவர்களுக்கு முழுப்பிராண வாயுவும் குடலிற்கிடந்திருக்க வொட்டாமற் பயங்கொள்ளச் செய்யத்தக்க வலியையுடையவனு மானவன் இவன்.



மேலும் - பூமியிற்கிடந்த கடல் நின்றதுபோலவும் - அதன்மேல் மிகுந்தவெப்பமான வடவாமுகாக்கினி எரிகிறதுபோலவும் - கறுத்தமேனியும் தலையிற் செம்பட்டமயிரு முடையவனும், அஷ்டதிக்குகளையும் ஜெயம்பெற்ற இராவணன் கோபிக்குங்கால் மிகுந்த கிரணங்களையுடைய சூரியனு மக்கினியுங்கண்டு மனங்கலங்கிப் பதுங்கியோடி யொளிந்துக்கொள்ளும் பெரியமலையினது குகைத்துவாரம்போன்ற மிகுந்த நித்திரை மயக்கமுள்ள கண்களையுடையவனும், மூங்கில்கள்பொருந்திய பெரிய மலையில்வசிக்கத்தக்க யானைகள் தமதிடமென்று நினைத்து உறங்கும்படியான நீண்ட ரோமராசியுள்ள மார்பையுடையவனும், வந்துசேர்கின்ற பிராணிகளுக்கு ஆதாரமான மலைமுழைபோன்ற மூக்கையுடையவனும், பாம்புகள் தங்கும்படியான செவிகளை யுடையவனுமாகிய கும்பகருணனைப் பார்த்துயோசிக்கின்றார்கள்.

## கும்பகருணன் தூதுவர்வார்த்தையைக்கேட்டு இராவணன் சமுகம்வருதல்.

### கவி.

கூயினனும்மு னென்றவர்கூறலும்
போயினனன்னகர் பொம்மென்றிரைத்தெழ
வாயில்வல்லை நுழைந்து மதிதொடும்
கோயிலெய்தினன் குன்றனகொள்கையான்.

நிலைகிடந்த நெடுமதிட்கோபுரத்
தலைகிடந்த விலங்கையரண்மனைக்
கொலைகிடந்தவேற் கும்பகருணனோர்
மலைகிடந்தது போலவணங்கினன்.

இவனை நாமெல்லோரும் அளவற்ற பிரயாசத்தினால் இவ்வாறெழுப்பியு மீட்டும் கண்களைமூடிக்கொண்டானே: இனியிதற் கென்செய்வோமென்று எல்லோரும் ஒரேகூச்சலாய் ஒருமித்துக்கூவி அவன்கண்களை விழிக்கச்செய்து, ஐயா கும்பகருணா மகாராஜனே! உம்முடைய தமயனாகிய பிரதாபலங்கேஸ்வரன் உம்மை யழைத்துக்கொண்டு வரச்சொன்னாரென்று சொன்னார்கள். உடனே பெரியமலைக்குச் சரியொத்த கடினமான தேகத்தை

யுடைய கும்பகர்ணன் இலங்கையி லுள்ளவர்களெல்லாம் கோவென்று சப்திக்க அதிவேகமாய்ப் புறப்பட்டுக் கோட்டைவாயிலில் நுழைந்து, சந்திரமண்டலபரியந்தம் அளாவிக்கொண்டிருக்கிற இராவணனுடைய அரண்மனையின் வாசலைச் சேர்ந்து, மதில்களாற் சூழப்பட்ட பலநிலைகளமைந்த கோபுரத்தை யுடைய மாளிகையின் மேல்நிலையிற் சயனித்துக்கொண்டிருக்கின்ற தனது தமயனைக் கண்டு அநேகம் பேர்களைக் கொலைசெய்து ஜெயம்பெற்ற வேலாயுதத்தையுடைய அக்கும்பகர்ணன் ஒருபெரிய மலைவிழுந்தது போலச் சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டனிட்டான். நின்றுகொண்டிருந்த ஒருமலையானது தன்னிடத்திற் பிரசண்ட வேகத்தோடும் வந்த மற்றொருமலையைத் தழுவினதுபோல, தசக்கிரீவனாகிய ராவணனெழுந்து தனது வல்லமைபெற்ற தம்பியை இருபது கைகளினாலும் வாரியெடுத்து மார்போடுதழுவி, தன்னுடன்கூட உட்காரவைத்துக் கொண்டான்.

உடனே யந்தராவணன் நித்திரை சோகத்தோடிருக்கின்ற கும்பகருணனுக்குக் குடங்குடமாக நிரப்பிவைத் திருக்கின்ற கள்ளையும் இரத்தங்களையும் குடிப்பாட்டி, நான்குதிசைகளிலும் சூழ்ந்திருக்கின்ற கடல்களினுரைக்குச் சமானமாகிய வெள்ளைப்பட்டு வஸ்திரங்களையுடுத்தி, கிரணக்கூட்டங்களுடன் பலபக்கங்களிலும் ஒளிவீசிக்கொண்டிருக்கின்ற பற்பல ஆபரணங்களைத்தரித்து, முன்னம் அதிகபலமுள்ள இந்திரனுலவன் தானேறி நடத்திக்கொண்டுவந்த ஐராவத மென்கிற யானையோடுகூட இராவணனுக்குத் தோற்றோடும்போது சோர்ந்து விழுந்துவிட்ட பிரகாசமுள்ள ரத்தினங்களிழைத்த நெற்றிப்பட்டத்தை வெற்றிப்பட்டமாக அவனுடைய நெற்றியிற்கட்டி தேசமுழுது மின்னலைப்போலப் பிரகாசிக்கும்படியாகக் குங்குமச்சேறு பூசப்பட்டிருக்கின்ற மத்தகஜம்போல நன்றாய் விளங்கும்படி தெய்வமணம் வீசுகின்ற செஞ்சந்தனக்குழம்பை அவனுடம்பெல்லாம் பூசினான். மேலும் - காலகோடிவிஷமானது மேலெழுந்து பரந்ததுபோல உயர்ந்து ஆகாசத்தை யளாவும்படியாக நீண்ட அவனுடைய மார்பினிடத்தில், அக்கினிக் கொப்பாகிய திருமேனியையும் அஷ்டபுஜங்களையு முடைய சரபசிவமூர்த்தி ரிஷபவாகனருடனாய் வந்து அருளிய கவசத்தை யணிந்தான்.

இப்படி யிராவணன் சிங்காரிக்கும்போது கும்பகர்ணனுடைய மின்னற்கொடிபோல நீண்டுவிளங்கிருக்கின்ற புருவமும் - ஆகாசத்தைத் தொட்டுக் கொண்டிருக்கின்ற தோளும் இடந்துடிக்கக்கண்டு, அண்ணா இராவணேஸ்வரா! என்னகாரணத்திற்காக இப்படிப்பட்ட அலங்காரங்களை ஆரம்பித்துச் செய்கின்றீரென்று கேட்டான். அதற்கிராவணன், தம்பி! மிகுந்த வானரசேனியங்களுடனே இரண்டுமனிதர்கள் கோபித்து நம்முடைய கோட்டையைச் சுற்றி முற்றுகைபோட்டுக்கொண்டிருக்கின்றார்கள். நீபோய் அவர்களுடைய உயிரையுண்டு முடித்திடுகென்றான். அப்போது கும்பகர்ணன் - தமயனாகிய இராவணனுக்குத் தெண்டனிட்டுச் சொல்லுகின்றான்.



## கும்பகருணன் இராவணனுக்குச் சிலஅறிவுறுத்தல்.

கவி.

ஆனதோவெஞ்சம மலைவிக்கற்புடைச்
சானகித்துயரினைத் தவிர்த்தியில்லையோ
வானமுமவையமும் வளர்ந்தவான்புகழ்
போனதோபுகுந்ததோ பொன்றுங்காலமே.

அண்ணா பிரதாபலங்கேஸ்வரா! கொடியயுத்தம் வந்துவிட்டதோ எண்ணற்கரிய பதிவிரதாசிரோமணியாகிய சீதாபிராட்டியாருக்கு மிகுந்த கொடுமைவாய்ந்த சிறையினாலாகிய துக்கமானது இன்னும் நீங்கவில்லையோ? தேவலோகமும் பூலோகமும் பரந்துயர்ந்து வளர்ந்த கீர்த்தியானது நம்மைவிட்டொழிந்ததோ? நாமெல்லாம் நமது வம்சத்தோடு இறக்குங்காலம் வந்துவிட்டதோ? மலைகளின் வலிமையையும் உலகங்களின் வலிமையையும் இவ்வளவென்று வரம்பிட்டுச் சொல்லக்கூடுமானாலும் அளவு சொல்லக்கூடாத ஸ்ரீராமன் தோள்வலியை நீர் வெற்றிகொள்ளலா மென்பது மிகவும் அழகுபெற்ற சீதாபிராட்டியின் திருமேனியைத் தழுவலாமென்று வெறுவாய் மெல்லுவதுமாகிய இந்த இரண்டு முடியாதகாரியங்கள். புலஸ்தியப் பிரம்மாவின் வழியாக முதலிலே உற்பத்தியாகி யதார்த்த தர்மங்களைச் செய்துவந்த நம்முடைய குலத்தினியல்பை அழித்துவிட்டீரே: இப்படிப்பட்ட உமக்கு வெற்றியும் கைகூடுமோ? உம்முடைய பலமெல்லா மழிந்துபோகு மென்பதற்குச் சந்தேக மென்னளவுமில்லை.

ஓ அண்ணா! நிலத்தின்சுபாவ மெப்படியோ? அப்படியே அதைச்சார்ந்த நீரின்தன்மையு மிருக்குமென்பதுபோல, நம்முடைய ராக்ஷசதர்மமே மேலிட்டுவிட்டதல்லவா? இனி இந்திரனுக்கு அரசும் வெற்றியும் கொடுத்துவிட்டீர். உம்மையும் உமது புத்திரமித்திர களத்திராதிகளாகிய அளவற்ற பந்துக்களையும் அழித்துப்போட்டீர். அநேகர்களாகிய ராக்ஷசர்களை யெல்லாம் கொன்று நீக்கிவிட்டீர். இனி உமக்கு நல்லகதியுண்டாகப் போகிறதில்லை. உமக்குத் தர்மமும் பயந்து ஒளித்துக்கொண்டது. இந்தத் தருமந்தான் உமக்கழியாத மிகுந்த வல்லமையையும், செல்வங்களையும், நல்ல யௌவனத்தையும் கொடுத்திருந்தது. அப்படிப்பட்ட தருமத்தைவிட்டு அழியப்போகின்ற உம்மை வேறே யாரெடுத்து நிலைநிறுத்தப் போகிறார்கள்? அடக்கமும், தருமமும், நல்ல நடக்கையும், சத்தியவாக்குமாகிய இவைகளை யுடையவர்களே குறைவில்லாமல் எப்போதும் நீடித்து வாழ்வார்கள். அப்படிக்கில்லாமல் வஞ்சனையும், பாவமும், பொய்யு நிறைந்திருக்கின்ற நாம் அழிந்துபோகிறதற்கு ஒருதாழ்ச்சியுமுண்டோ?

ஓ பிராதாவே! நம்முடைய காவலிலே இந்தக் கருங்கடலைத் தாண்டிக் காற்றைப்போல வரும்படியான குரங்குகளு மிருக்கின்றன. சீதையும் நம்முடைய லங்கையைவிட்டுப் போகவில்லை. வாலியினுடைய பார்வைப் பிளந்து

கொண்டுபோன அம்பைப்போலொத்த வல்லமையுடைய ஸ்ரீராமபாணங்களுமிருக்கின்றன. அதற்குலட்சியமாக நாமுமிருக்கின்றோம், இனி நடக்கப்போகின்ற காரியங்களுக்கு ஏதேனுமொரு குறையுமுண்டாகுமா? இப்படியாக கும்பகர்ணன் இவைபோலின்ன மதிசகாரியங்களைப் படித்துச் சொல்லி, பின்னு மிராவணனைப்பார்த்து, நானுமக்கு ஒன்று தெரிவிக்கின்றேன். அதை அங்கீகரித்துக் கொள்ளுவீராயின் அதனாலுமிகுந்த நன்மையுண்டாகும். அப்படி அங்கிகரித்துக்கொள்ளாவிட்டால் நீர் செத்ததாகவே நிர்மானம் செய்துகொள்ளும். ஐயா இராவணேஸ்வரா! சீதாபிராட்டியைக் கொண்டுபோய் விட்டு, ஸ்ரீராமருடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய உண்மையான தம்பியாகிய விபீஷணனோடு சிநேகஞ்செய்வதுதான் நீர் தப்பிப் பிழைப்பதற்குத்தக்க நல்லவழியாகும். அப்படிக்கில்லாவிட்டால் செய்யவேண்டிய உபாயம் வேறொன்றிருக்கின்றது; அதையும் தெரிவிக்கிறேன் கேளும். ஓ என் முன்தோன்றலே! வரிசை வரிசையாக உம்முடைய சைனியங்களை அவர்கள்பேரில் யுத்தத்திற்கு அனுப்பும். அவைகளெல்லா மழிந்துபோன பிறகு நீர் மாத்திரமே அகப்பட்டுக்கொண்டிருப்பது நியாயமல்ல. உம்முடைய பலமெல்லாங்கொண் டெதிர்த்து அவர்களோடு யுத்தஞ்செய்வதுதான் காரியசித்தியென்று உபாயஞ்சொன்னான்.

## கும்பகருணன் சொல்லிய நீதி வார்த்தையை இராவணன் மறுத்தல்.

கவி.

மானுடரிருவரை வணங்கிமற்றுமக்
கூனுடைக்குரங்கையுங் கும்பிட்டுய்த்தொழில்
ஊனுடையும்பிற்கு முனக்குமேகடன்
யானதுமுடிக்குவே னெழுதிபோதியால்.

அதைக்கேட்ட ராவணன் — ஆ கும்பகர்ணா! ஓ என் பின்தோன்றலே! இரண்டு மனிதர்களை வணங்கிக் கூனலான குரங்குகளையுங் கும்பிட்டு வயிறு வளர்த்துப் பிழைக்கிறசெய்கை, உன் தம்பியாகிய விபீஷணனுக்கும் உனக்குமே தகுதியானதாகும், நானப்படிச் செய்யமாட்டேன். நீ யெழுந்துபோய்விடு. உன்னை நான் கூப்பிட்டது இனிநடக்கப்போகிற காரியத்தைத் தெரிந்துகொள்வதற்காகவல்ல, அற்பபலத்தை யுடையவர்களான அந்த மனிதர்களைப்போய்க் கொல்லுவதற்கே உன்னை நானழைப்பித்தது. என்புத்தியைப் பார்க்கிலும் அதிக அறிவுடையமந்திரி நீயல்ல. நீ இப்போதே அவர்களுக்குப்பயந்துவிட்டாய். உன்னுடைய வீரத்தன்மை பயனற்றதாகப் போய்விட்டது. மிகுந்த பலத்தோடு செய்யவேண்டிய யுத்தத்திற்குத் தகுதியான அதிகமாமிசமும் - கள்ளும் — சாப்பிட்டாய். அதிருக்கட்டும் - நீ இப்போதே கண்ணைமூடிக்கொண்டு இரவும் பகலுமாக நித்திரை செய்யும்படியாகப் போய்விடு. நீ சண்டைசெய்யத்தக்க யோக்கியனல்ல.



ஓ சாரணர்களே! என்னுடைய தேரையும் ஆயுதங்களையும் கொண்டுவாருங்கள். எல்லாரும் புகழ்ந்து சொல்லப்பட்ட எமனும் என்னோடு வந்து எதிர்க்கட்டும். தேவலோகத்திலுள்ளவர்களும், பூலோகத்திலுள்ளவர்களும், இன்னுமற்ற யாவர்களும் அந்தக் கைவல்லமையுடைய இரண்டு சிறுமனிதர்களுடனே சேர்ந்துகொண்டு; எல்லாரும் என்னோடு சண்டைசெய்யட்டும். நானே யுத்தத்திற்குப் போகிறேனென்று புறப்பட்டான். அதைக்கண்ட தம்பியாகிய கும்பகர்ணன் அவனுடைய பாதத்தில் விழுந்து வணங்கி, நான் சொன்னதைப் பொறுத்துக் கொள்ளுமென்று பலம்பொருந்திய நீண்ட சூலாயுதத்தை வலது கையில் தாங்கி, அண்ணா! இன்னமொரு வார்த்தையிருக்கின்றது. அதனையும் சொல்லுகிறேன் கேட்டுக் கொள்ளுமென்று சொல்லுகின்றான்.

ஓ எனது ஜேஷ்டசிகாமணி! நானிப்பொழுதுபோய் ஜெயித்துவருவேனென்று எண்ணங்கொள்ளவில்லை. விதியானது என்பிறகே நின்றுகொண்டு பிடரியைப்பிடித்து நெட்டித்தள்ளுகின்றது. நான் யுத்தகளத்திலிறந்துபோய் விடுவேன். நான் இறந்துபோனதின் பிறகாவது நீர் நன்மையைப் பெறும்படி சந்தோஷத்துடனே சொர்ணச்சாயையோடும் கூடியிருக்கின்ற தோள்களையுடைய சீதாபிராட்டியைக் கொண்டுபோய் விட்டுவிடும். என்னையெப்போது ஜெயிக்கின்றார்களோ? பிறகு உம்மையும் ஜெயித்து வெற்றிபெறுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நீர் பின்னாலோசனைசெய்கிறது புத்தியீனமாகும். ஆகையால் - சீதாபிராட்டியை இன்றைக்கே கொண்டுபோய் விட்டுவிடுகிறது உமக்குத் தவத்தைப்பார்க்கிலுமிகுந்த ஜெயத்தைத் தருவதாகும். இந்திரனுக்குப் பகைவனாகிய இந்திரஜித்தென்னும் உன்னுடைய குமாரன், ஸ்ரீராமனுடைய தம்பியாகிய இலட்சுமணன் பிரயோகிக்கின்ற மந்திராஸ்திரத்தினாலே சாகப்போகிறது சத்தியமாகும். ஓ அண்ணா! இனி நடக்கப்போகின்ற யுத்தத்தில் உமக்கிருக்கிற சேனைகளெல்லாமற் பின்னு மெத்தசேனைகள்வந்து தெய்வானுகூலத்தாற் கூடினாலும், அத்தனையும் காற்றிற்பறக்கின்ற புழுதிபோலாகப் போகின்றன. ஆகையாலே நீர் தகுந்த ஆலோசனை செய்து, உமக்கு யுத்தமான மார்க்கத்தைச் செய்துகொள்ளும்.

## கும்பகருணன் தமயன்மேல் மனஸ்தாபத்தோடு இராமபிரானிடம் சண்டை செய்ய வெளிப்படல்.

கவி.

இற்றைநாள்வரைமுதல் யான்முன்செய்தன
குற்றமுளவெனிற் பொறுத்திகொற்றவ
அற்றதான்முகத்தினில் விழித்தலாரிய
பெற்றனென்விடையெனப் பெயர்ந்துபோயினன்.

அவ்வழியிராவண னனைத்தூட்டரும்
செவ்வழிக்கொடுங் குருதிதேக்கினன்
வெவ்வழியோர்களு மிரங்கிவிம்மினர்
இவ்வழியவனும்போய் வாயிலெய்தினன்.

இன்றைவரையினும் நானுமக்கு முன் செய்துவந்த குற்றங்கள் உண்டாயிருக்குமானால், அவைகளை யெல்லாம் பொறுத்துக்கொள்ளும். உம்முடைய முகத்தில் நான் விழிக்கிறது இன்றையோடு முடிந்துவிட்டது. அண்ணா! விடைகொடு மென்று அந்த ஸ்தானத்தைவிட்டுப் புறப்பட்டுத் திரும்பினான். அப்போ திராவணன், இருபதுகண்களினின்றும் இரத்தக்கண்ணீர்விட்டழுதான். கும்பகர்ணனுடைய பெண்சாதி — பிள்ளைகள் — உற்றார் - உறவின்முறையார் - இவர்கள் முதலான யாவரும் துக்கப்பட்டழுதார்கள். இப்படியாக அழுகிறவர்களெல்லோரையும் பார்த்துக் கும்பகர்ணனும் அழுதுகொண்டு, உத்தர வாயிலில்வந்து சேர்ந்தான்.

## கும்பகருணனுக்கு இராவணன் படைத்துணை கூட்டல்.

கலி.

இரும்படைகடிப்பெடுத் தெற்றிபேருக
பெரும்படையினவலோ டென்றபேச்சினால்
வரும்படைவந்தது வானுளோர்கடம்
கரும்படைமலர்முடி துளிதார்க்கவே.

இவ்வண்ணம் கும்பகருணன் சண்டைக்கு வெளிப்பட்டவுடனே, அதைக்கண்டராவணன் தனது மந்திரிகளைநோக்கி, என் தம்பி கும்பகர்ணனோடுகூட நம்முடைய சேனாவீரர்கள் தங்கள் தங்கள் ஆயுதங்களோடு இரணபேரி முழக்கிக்கொண்டு போகவேண்டுமென்று ஆக்ஞாபித்தான். அம்மாத்திரத்தில் தேவலோகத்தவர்களுடைய வண்டுகள்மொய்த்த கற்பகமாலைசூடிய தலைகளில் சேனாபராகங்கள் படியும்படியாய் இரதகஜதுரகபதாதிகளென்று சொல்லப்பட்ட நால்வகைச்சேனைகளும் புறப்பட்டன. தேரின்மீது கட்டியிருக்கின்ற பதாகைகளும் - யானைகளின் மேற் பிடித்துக்கொண்டு வருகின்ற துவஜங்களும் - முன்னணிப்படைக் கர்த்தர் பிடித்துக்கொண்டுவருகின்ற ஆகாசத்தைத்தாவும்படியான விருதுக்கொடிகளும்-ஒன்றோடொன்றுநெருங்கி, சேனாபராகங்கள்போய்ச் சுவர்க்கமண்டலத்திற் படிந்திருக்கின்றமையால் அந்தத்தூளியைத் துடைக்கிறதுபோல ஆகாச மார்க்கத்திலாடிக்கொண்டு வந்தன.

அந்த ராக்ஷசச் சேனைகளுடைய அனேக ஆயுதங்கள் ஒன்றோடொன்று தாக்குவதினால் அவைகளினின்றுண்டாகிய அக்கினிப்பொறிகளும் - சேனைத்தலைவர்களுடைய கண்களில் நின்றும் புறப்பட்ட நெருப்புப்பொறிகளும் - விசாலமான ஆகாசத்திற்போய்ப்பட, அங்குள்ள மேகங்களெல்லாம் தீய்ந்து உதிர்ந்துவிட்டன. தேர்ப்படைகள் போகிறதினாலும்,யானைப்படைகள் செல்



லுகிறதினால் மிகவு நெருக்குண்டு, முன்னணியாய்ப் போகவேண்டிய சிந்தூரமப்பிய முகத்தையுடைய மேகம்போன்ற யானைகளும் - தேர்களும் - செல்லமாட்டாமல் நிற்க, குதிரைகள் காற்றைப்போல ஓடுகிறதினாலும், கொடிப்படைகள் நடக்கிறதினாலும், பின்வருஞ்சேனைகளானவை முந்திப் பூமியிற் செல்லுகிறதற்குத் தம்மால் முடியாதென்று ஆகாசமார்க்கமாகப் பாய்ந்து போயின.

## கும்பகருணன் இரதாரூடனாதல்.

ஆயிரங்கோளரி யாளியாயிரம்
ஆயிரமதகரி பூதமாயிரம்
மாயிருஞாலத்தைச் சுமப்பவாங்குவ
தேயிருஞ்சுடர்மணித் தேரொன்றேறினன்.

ஆயிரஞ் சிங்கங்கள் — ஆயிரம்யாளிகள் — ஆயிரம்யானைகள் ஆயிரம் பூதங்கள் - பூண்டதும், மிகவும்பெருமைபொருந்திய இவ்வுலகத்தைச்சுமப்பவனாகிய ஆதிசேஷனது சிரமாலையினிடத்தினின்று மெடுத்ததையொத்தமிகக் காந்தியுடைய மணிகளிழைத்ததுமாகிய இரதத்தின்மேல் ஆரோகணித்து இருபக்கத்திலும் தோமரம் - இருப்புலக்கை - தண்டாயுதம் — வேலாயுதம் சூலாயுதம்-வல்லயம்-வாளாயுதம்- மழுவாயுதம் - அலாயுதம் - வளைதடி - சக்கரம் - வில் - கேடகம் - இன்னும்சூக்ஷமத்தில் வைத்திருந்த பற்பல கொடிய ஆயுதங்களை யெல்லாம் அனேகம் இராக்ஷசர்கள்தலையிற்றூக்கிக்கொண்டு, அமரர்களெல்லாம் திடுக்கிடும்படி வந்தார்கள். இதுவல்லாமலும் - சிலபேர்கள் கள்ளுச்சாடிகளைத் தூக்கிக்கொண்டும், சிலபேர்கள் பக்குவமாகவெந்த மாமிசத்துண்டங்களை குறையாமல் நிறைத்துவைத்திருக்கின்ற ஆயிரம் வண்டிகளை யோட்டிக்கொண்டும், சிலபேர்கள் வக்கிரதந்தங்களையுடையவனான கும்பகர்ணனுக்குப் பின்னால் அக்கள்ளு மாமிசமு மாறிமாறி அடிக்கடி முறைப்படி கைநீட்டிக் கொடுத்துக்கொண்டும் வந்தார்கள். இப்படி அனேகராட்சதர்கள் தருகின்ற மாமிசங்களும், கள்ளும் தனது இருகரங்களால் வாங்கி ஒருபிலத்துவாரத்திலிடும் தன்மைபோல் வாயிலிட்டுண்டு யாவருந்திடுக்கிடும்படி கும்பகருணனானவன் சென்றனன். அப்போதனைக்கண்ட தேவர்கள் இஃதிந்தப் பெரியகூட்டங்களாகிய குரங்குகளோடு மாத்திரம் ஒழிந்துபோக மாட்டாது. இவன் தின்னுகிற மிகுந்த கொழுத்த மாமிசத்திற்கு இந்த உலகமும் போதாது. எங்கும் பிணக்காடாகப்போகிறது. யமனுக்கும் குசிதீர்ந்துவிட்டது. இனியவன் சும்மாய்ப் போகமாட்டான். என்று தேவர்களெல்லாம் ஓட்டம் பிடித்தார்கள்.

## கும்பகருணனை ஸ்ரீராமபிரான் கண்டு இவன்யாரென்று சந்தேகித்து விபீஷணரை வினவலும் அவர் இன்னானென்று அவன்வரலாறு கூறலும்.

பாந்தளினெடுந்தலை வழுவிப்பாரொடும்
வேந்தனவிளங்கிய மேருமால்வரை

போந்ததுபோற்பொலந் தேரிற்பொங்கிய
வந்தலையேந்தெழி லிராமனேக்கினன்.

ஆதிசேஷனுடைய ஆயிரஞ்சிரசுகளையும் விட்டு நீங்கிப் பூமியுடனேகூட பர்வத ராஜனென்று சொல்லும்படிப் பெயர்பெற்றிருக்கின்ற பெரிய மேருகிரியானது வந்ததுபோல் சொர்ணமயமாகிய தேரின்பேரில் உக்கிரமாய் வந்திருக்கின்ற கும்பகர்ணனை உயர்ந்த தோள்களையுடைய சக்கரவர்த்தித் திருக்குமாரராகிய ஸ்ரீராமர்பார்த்து, அவனுடைய தேரிற் கட்டியிருக்கின்ற கொடியில் வீணையெழுதி யிருக்கின்றதோ வென்று நோக்கியபோது அஃதில்லாமல் வெற்றிபொருந்திய சிங்கமெழுதியிருக்கக்கண்டு, இவன் ராவணனல்லன். காற்றினு மதிகவேகமாக மனதைச்செலுத்திப் பார்த்தாலும் அளவறிவதற் கருமையான தோற்றமுடையவனாக விருக்கிறான். மேலும் - உயிருடைய பொருளல்லவென்று நினைக்கலாமென்றாலும், ஆபரணங்களையணிந்த மார்புடையவனாகவு மிருக்கின்றான். இவன்யாரோ ? இவனுடைய ஒரு தோளோடு மற்றொருதோளை ஒருசேரப் பார்க்கிறதற்கு அநேகநாள் செல்லும். மேருமலைக்குக் கால்கள் முளைத்தனவோ ? யுத்தஞ்செய்கிறதற் கிசைந்துவந்திருக்கின்ற இவனின்னானென்று தெரியவில்லை. இவன்பெயரென்னவோ ?

கவி.

அரக்கனவ்வுருவொழித் தரியின்சேனையை
வெருக்கொளத்தோன்றுவான் கொண்டவேடமோ
தெரிக்கிலேனிவ்வுருத் தெரியும்வண்ணநீ
பொருக்கெனவீடணா புகறியென்றனன்.

அல்லதிராவணன் தன்னுடைய நிஜரூபத்தைமறைத்துக்கொண்டு, நம்முடைய வானரசைனியங்களைப் பயப்படுத்தும்படியாகக் காட்டுகிறதற்குக் கொண்ட மாறுவேஷமோ ? இந்த உரு இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. ஆகையால் - ஓ விபீஷணா! இதுநன்றாய்த் தெரியத்தக்கதாக எனக்கு நீ விரைவிற் சொல்லவேண்டுமென்று ஸ்ரீராமமூர்த்தி கேட்டனர்.

கவி.

ஆரியனனையகூற வடியிணையிறைஞ்சியைய
பேரியலிலங்கைவேந்தன் பின்னவனெனக்குமுன்னோன்
காரியல்காலனன்ன கழற்கும்பகருணனென்னும்
கூரியகுலத்தானென் றவனிலைகூறலுற்றான்.

இவ்வண்ணமெண்ணித் தம்மைக் கேட்டபோது விபீஷணாழ்வான் அவருடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாகத் தெண்டஞ் சமர்ப்பித்து, ஸ்வாமீ! இவர் மகாபிரதாபசாலியான இலங்கேஸ்வரனுடைய தம்பியும், எனக்கு மூத்தவனும், மேகத்தையொத்த கறுத்தநிறத்தையுடைய யமனுக்குச் சமானமாய் வீரகண்டாமணியைத் தரித்தவரும், கூர்மைபொருந்திய சூலாயுதத்தையுடையவருமாகிய கும்பகர்ணனென்கிற நாமத்தையுடையவர். இவருடைய தன்மை எப்படிப்பட்டதென்றால் - அருமையான தபசைச்செய்கிறவர்களாலும் - வே



தவேதியரானவர்களாலும் - தியானிக்கத்தக்கவரும், கைலாசபதியும் - மூலதாமரைப்புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற சதுர்முகப் பிரம்மதேவனும் - தம்மிலொருவராய்ச் சிந்திக்கும்படியான சாக்ஷாத் ஸ்ரீமந்நாதனுமான சாட்குண்ய பரப்பிரம்மமானவர் யோகநித்திரையைவிட்டு எழுந்திருக்கிறகாலத்தில் அசுரர்கள் நாசமடைவார்கள். இவர் நித்திரைவிட்டு விழிக்கிறகாலத்தில் தேவர்கள் நாசமடைவார்கள்.

ஓ சக்கரதராகிய ஸ்வாமீ! அன்றியுமிவர் அற்பவாழ்நாளையுடையவனும், என் தமையனுமான இராவணனுக்கு அடுத்தசகோதரர். ஊழிக்காலபரியந்தம் நித்திரைசெய்யத்தக்கவர். யமனுடைய உயிருக்கு யமனாகவிருக்கிறவர். வாயுதேவனைப்பார்க்கிலு மிகுந்தவேகத்துடனே நடக்கின்ற கால்களையுடையவர். தேவேந்திரன்முதலானபேர்களும் தோல்வியடையும்படியாக வெற்றிமாலையைத்தரித்த ஒப்பற்ற சூலாயுதத்தைக்கொண்டு அவர்களைக் குத்தினவர். நான்கு கொம்புகளையும் மலைக்குச்சமானமாகிய நான்குகால்களையுமுடைய ஐராவதமென்கிறயானையை, அதின்பேரிலிருக்கின்ற தேவேந்திரன் நழுவிவிழாமல் இருந்தபடியே இருக்கும்படியாக அந்தயானையைப் பின்னங்காலிரண்டையும் பிடித்துக் கிறுகிறுவென்று சுழற்றினவர். அல்லாமலும் - வடவாமுகாக்கினியையும் காற்றையும்பிடித்துப் பிழிந்து, அவைற்றிற் சாறெடுக்கும்படியான சாமர்த்தியமுடையவர். மீன்களெல்லாம் அழிந்து நசுங்கிப்போகும்படியாகச் சமுத்திரஜலத்திலிழிந்து காலால்நடந்து கரையேறத்தக்கவர்.

ஓ பரமதயாளுவே! மாமிசபுஷ்டியின் உறுதியினால் மேருவு நிகரற்ற மிகுந்தபலமுள்ளவர். அதிகதபங்களைச் செய்ததினால் யாரொருவரும்பெறுதமிகுந்தவரங்களைப்பெற்றவர். பூர்வத்தில்இவர்மகோன்மத்தத்தினால் திரிலோகங்களிலும் சாரிபுலாவினபோது, யமபுரியிருக்குச்சமானமாகச் சொல்லவொட்டாமல் எல்லோரையும் பிடித்துக்கொண்டு வந்தார். தெரிக்குகின்றமாலையையணிந்த இவர் அன்றைக்குவந்து படுத்து இன்றையவரையிலும் நித்திரைசெய்துகொண்டிருந்தபடியினாலே, உலகமெல்லாம் இவ்வளவாவது பிழைத்திருந்தது. இவர்கையில் ஒருசூலமிருக்கின்றது. அதுதேவர்களுடைய வாழ்நாளையெல்லாம் உண்டுவிட்டது. அந்தச் சூலாயுதத்தை காலகோடிமகா விடத்தையுண்ட சாக்ஷாத் சிவபிரானால் க்ஷீராப்திநாதனாகிய உலகங்களையெல்லாமுண்டவனுமுள்ள ஸ்ரீமகாவிஷ்ணு தரப்பெற்றவன்.

ஓ கமலநேத்திரரே! மின்னலைப்போலும் பிரகாசிக்கின்ற திவ்வியதேகத்தையுடைய சுவர்க்கலோகவாசிகளாகிய தேவர்கள் அநேகம்பேர் இவருக்குமுன்னாக அமர்செய்ய நின்றார்களென்றபோதிலும், அவர்களெல்லாரும் முதுகிட்டோட அவர்கள் முதுகைப் பார்ப்பாரேயல்லாமல் அவர்கள் முகத்தில் இவர்விழிக்கவே மாட்டார். இவர் இத்தனைக்காட்டிலும் கொடியவனான இராவணனைப் பார்த்து, அண்ணா! சீதாபிராட்டியைக் கொண்டுவந்தது தருமமல்லவே; அதனால் நமக்கு உயிர்ச்சேதமுண்டாகுமே; என்று வெகுவாய்ப்புத்தி

சொல்லியிருக்கின்றார். பெரியோர்கள் இரண்டுதரம் புத்திசொல்லுவார்கள். அப்படியல்ல: இவரதற்குமேல் மூன்றுதரம் சொல்லியிருக்கின்றார். இவர் சொன்ன புத்தியைமறுத்த இராவணனைச் சத்தியமாகக் கோபித்து, இதனுனக்குப் பிராணநாசம் வருமென்பதையும் தெரிவித்தார். அதைக்கேளாததினால் அவனைவெறுத்து, தான்சாகப்போகிறது நிச்சயமென்றுணர்ந்து, அவனிடத்தில் தனக்குண்டாகிய பாக்கியத்தைப் முறித்துக்கொண்டு, இதுநமக்கு நல்லதல்லவென்று தகுந்தநீதியை இராவணனுக்குச் சொல்லி, இன்றைக்குத் தேவரீருடைய சந்நிதிக்கு முன்பாகவந்தார். என்று விபீஷணாழ்வான் கூறிச் சுவாமியை வணங்கினார்.

### ஸ்ரீராமர் சுக்கிரீவன் வேண்டுகோளால் கும்பகருணனைத் தம்பியொருவனாக்கிக்கொள்ளச் சம்மதித்து விபீஷணரை யனுப்புதல்.

கவி.

என்றவனுரைத்தலோடு மிரவிசேயிவனையின்று
கொன்றொருபயனுமில்லை கூடுமேற்கூட்டிக்கொண்டு
நின்றதுபுரிதுமற்றிச் சிறுதர்சோனிடருநீக்கும்
நன்றதுநினைத்தேனென்று நுதனுநலனிதென்றான்.

எதற்குரியார்யாரே யென்னலுமிலங்கைவேந்தன்
ஆகின்மற்றடியனேசென் றறிவினலவனையுள்ளம்
சோகறத்தெருட்டியீண்டுச் சேருமேற்சேர்ப்பலென்றான்
மேகமொப்பானுநன்று போய்சென்றுவிடையுமீந்தான்.

இவ்வண்ணம் விபீஷணாழ்வார் கூறியவிவையனைத்தையுங் கேட்டுக்கொண்டிருந்த சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜனெழுந்து ஸ்ரீராமமூர்த்தியின் திருவடிகளில் நிர்க்கதெண்டன் சமர்ப்பித்து, சுவாமி இரகுகுலோத்தமா! இப்பொழுது விபீஷணமகாராஜர் சொல்லிய அவரது தமயனாகிய கும்பகருணனை நாம் கொன்று அதினாலடையும்படியாகிய பிரயோசனம் யாதொன்றுமில்லை. நம்முடன் சேர்ந்து எங்களைப்போல் தமது திருவடிக்குக் குற்றேவல் செய்வதற்குடன்பட்டால் நாம் சேர்த்துக்கொண்டு மேல்நடக்கவேண்டிய காரியங்களைச் செய்யலாம் இதனால் இவ்விபீஷணரது துக்கமு நிவர்த்தியாகுமென்று சொன்னார். அதற்குச் சக்கரவர்த்தித் திருமகனார் சம்மதித்து, ஆம்: ஆம்: இதுமகா உத்தமமான காரியந்தானென்றுசொல்லி, ஆனால் அவனிடத்திற்குப்போய் இந்தக்காரியத்தைச் சொல்லத்தக்கவர்கள் யாரிருக்கிறார்களென்று விசாரித்தார். அப்போது விபீஷணாழ்வார் தேவருக்குத் திருவுள்ளமானால் அடியேனைப்போய்த் தகுந்த புத்திமதிகளைச் சொல்லி, குற்றமில்லாமல் அவருடைய மனத்திலிருக்கின்ற வன்மைத்தன்மையை இளகச்செய்து, நம்மோடுசேர விருப்பமுள்ளவராகவிருந்தால் அழைத்துக்கொண்டு வருகிறேனென்று சொன்னார்.



அதற்கு நீலமேகத்துக்கொப்பாகிய ஸ்யாமளரூபரான ஸ்ரீராகவபிரான் சம்மதித்து, நல்லது: அப்படியே அதிவேகமாய்ப்போய் வரக்கடவாயென்று அனுப்பினார். உடனே விபீஷணாழ்வார் அந்தராக்ஷசசேனா சமுத்திரங்களைத் தாண்டி, தமக்குச்சிறந்ததுணைவனான கும்பகர்ணனுக்குச் சமீபமாகப்போனார். அம்மாத்திரத்தில் வேவுகாரர்க ளவனைக்கண்டு, ஐயா கும்பகர்ணமகாராஜனே! உம்முடைய தம்பியாகிய விபீஷணர் என்னமோ வெகுவிரைவாக உம்மிடத்திற்கு வருகின்றாரென்று சொன்னார்கள். அதுகேட்ட கும்பகருணன் அளவில்லாத சந்தோஷத்தைக்கொண்டு எக்களிப்புற்றிருக்க, அந்தக்கும்பகர்ணனுடையபாதங்களில் விபீஷணாழ்வார் தம்முடைய சிரசைச்சேர்த்துத் தெண்டனிட்டார். எதிரேவந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்ட விபீஷணாழ்வானைக் கும்பகருணன் கைகளால் வாரியெடுத்து, உச்சிமுகந்து உயிராகத்தழுவி மார்போடணைத்து, தன்னிரண்டுகண்களினும் மழைத்தாரைகள்போல நீரொழுகும்படியாக விருந்து அவனோடு சிலபேசத்தொடங்கினான்.

### கும்பகருணன் தன்னைவந்தடைந்த விபீஷணரை நீ யேன்மயபடி மீண்டுவந்தாயென வினவல்.

கவி.

முந்திவந்திறைஞ்சினானை முகந்துயிர்மூழ்கப்புல்லி
உந்தனையொருவைபோனா யெனமனமுவக்கின்றேனென்
சிந்தனைமுழுதுஞ்சிந்தத் தெளிவிலார்போலநீயீண
வந்ததென்றனியேயென்றான் மழையினீர்வழங்குகண்ணான்.

அவையயற்பெற்றகாறு மமரரும்பெறுதலாற்றா
உவையபோகத்துள்ள சிறப்புங்கேட்டுவேழுள்ளம்
கவிஞரினறிவுசிக்காய் காலன்வாய்க்களிக்கின்றேயபல்
நவையிலைவந்ததென்னீ யமுதுண்டாய்நஞ்சுண்பாயோ.

அப்பாவிபீஷணா! எங்களில் நீ ஒருவன் பிழைத்துப்போய் புத்திமானாய் வாழ்ந்திருக்கிறாயென்று சந்தோஷப்பட்டிருக்கின்ற என்னுடைய சிந்தைமுழுதும் இளைக்கும்படியாக தெளிந்த புத்தியில்லாதவர்களைப் போலே தனித்தவனாய் ஏன் திரும்பிவந்துவிட்டாய்? ஸ்ரீராமபிரான் திருவடியையடைந்து நீ அபயம்பெற்ற விதத்தையும், தேவர்களும் பெறுதற்கேலாத இகலோகபரலோகாதி ஐஸ்வரியத்தைப்பெற்ற சிறப்பையும், நான் கேள்விப்பட்டு மிகுதியு மனங்களித்திருந்தேன். சகலசாஸ்திரக்கியான சம்பன்னனான நீ, யமன் தன்வாய்க்கிரையாக எதிர்பார்த்திருக்கின்ற எங்களிடத்திற்குக் குற்றமுள்ளவனாக ஏன்வந்துவிட்டாய்? ஸ்ரீராமகைங்கரியமான அமிர்தபானம்பண்ணுகின்ற நீ ராக்ஷசகீர்த்தியமாகிய விஷமுண்ணவரலாமோ? அப்பா விபீஷணா! நமது இராக்ஷசமரபின் செய்கை உன்னிடத்தி லழிந்தொழிந்தனினும் புலத்தியப் பிரமவமிசமானது எக்காலும் கெடாத புண்ணியத்தைப் பெற்றதென்று எனது வலதுதோளைப்பார்த்து மகிழ்ச்சியடைந்திருந்தேன். ஓ என் கண்மணியாகிய தம்பி! அப்படியிருந்த என்னை இப்போது உன்வருகையாலே

துக்கப்படுத்தி, என்னுடைய நாவை வறளச்செய்துவிட்டாய். அதை நினைக்கும்போது என்மனது உளைகின்றது.

மகாதர்மிஷ்டிகளான அந்தராமலட்சுமணர்கள் தங்களுயிரை விட்டபோதிலும், அபயமென்றடைந்த உன்னைநீக்கி விடுகிறதற்குச் சம்மதிக்கமாட்டார்கள். அவர்களைவிட்டு விலகினதினாலே நீ மறுமையிலடையப்போகிற நல்லபதவியை இழந்துவிட்டாய். இராமநாமத்தைச் சொல்லிக்கொண்டிருக்கின்றபரியந்தம், இந்த அற்பப்பிறவி யுண்டாகப்போகிறதில்லை. இவைகளையெல்லாம் வேதவேதாந்தங்களாற் கற்றறிந்தும் என்னகாரணத்தினாலே அந்தராமனைப்பிரிந்து நீ இங்கேவந்துவிட்டாய்? தர்ம்மமே ஸ்வரூபமாகின்ற சாக்ஷாது ஸ்ரீராமலட்சுமணருக்குத் தாசத்துவம்பூண்டு, பாவமிலையாய் நிலைபெற்றுநின்ற அக்கியானம் - அன்னியதாக்கியானம்—விபரீதக்கியானம்—என்கிற மூன்றையும் இருந்தவிடந்தெரியாமல் அவர்களாலே மாய்த்துவிட்டு, இன்னும் பலங்கொண்டிருக்கின்ற மற்றப்பாவங்களெல்லாவற்றையும் இந்தப்பிறப்பிலேயே யொழித்துவிட்டு மெய்ஞ்ஞானச் செல்வமுள்ளவனாகிய நீ; பிறர் தாரத்தி லிச்சைவைத்திருக்கின்ற எங்களை உறவாகப்பெற நினைக்கின்றாயோ?

அப்பனே! நீநல்லநீதியையும், தர்ம்மநிலையான நல்லசெய்கையையும், யதார்த்தக்கியானத்தையும், நீசெய்த அளவில்லாத தவங்களினால் ஆதிவஸ்துவாகிய சாக்ஷாது ஸ்ரீயப்பதியாலே பெற்றுக்கொண்டாய். வேதமுதல்வனான ஸ்ரீராகவமூர்த்தியினுடைய இனிய அமிர்தவாக்கினாலே சிரஞ்சீவிப்பட்டமும்பெற்றாய். இவ்வளவு யோக்கியாதிகாரத்தைப்பெற்ற நீ, ஸ்ரேயமான ஜாதிதர்மத்தை இன்னமும் விடவில்லையேயெனக் காண்கின்றதே: எல்லார்க்குந் தலைவரான ஸ்ரீ சக்கரவர்த்தித்திருமகனார் நாணேற்றிய வில்லையுடையவராய் நிற்கின்றார். அவர்பக்கத்தில் ஒருவராலும் தடுத்தற்கரிய வல்லமையுடைய இளையபெருமாளும் நிற்கின்றார். மற்றவானர வீரர்களெல்லாரும் நிறைந்திருக்கின்றார். எங்களைக் கொல்லும்படியாக யமனும் வந்திருக்கின்றான். அதற்கு இசைவாக விதியும் கூடியிருக்கின்றது. இனி எங்களிடத்தில் என்னவல்லமை இருக்கக்கூடும்? நீ ஏன் எங்களோடுகூட மாளவந்தாய்.

ஓ புலஸ்தியவம்சகுலதிலகமான விபீஷணா! நீ அயோத்தியாபுரிக் காரர்களாகிய ஸ்ரீராமலட்சுமணர்களுக்கு அடைக்கலமாகி அவர்களால் உஜ்ஜீவனமடையாமல் இவ்விடத்திற்கு வந்தாயானால், இராட்சசர்களாயுள்ள நாமெல்லாம் அந்த ராமலட்சுமணர்கள் பிரயோகிக்கின்ற அஸ்திர வருஷங்களாலே மாண்டு இலங்காபட்டண முழுவதும் பாழாய்விடப் போகின்றதே: பின்பு கையினாலே எள்ளுந் தண்ணீருமெடுத்திறைத்துப் பிதுர்யாகக் கடமையை நிறைவேற்றத் தக்கவர்களாரிருக்கின்றார்கள்? அப்படிப்பட்டவர்கள் ஒருவரையெனக்குக்காட்டு பார்ப்போம். ஒருவருமில்லையே: இங்கே யிருக்கின்ற பிரபுகளாகிய ராக்ஷசர்களெல்லாம் மாண்டுபோனபிறகு திருவுறைமார்பனான



ஸ்ரீராமபிரானுடனே உன்னுடைய லங்கைப்பட்டணத்துக்குவந்து எந்தக்காலத்திலேயும் அழியாதிருக்கின்ற பெரியசெல்வத்தை அனுபவிக்கத்தக்கவனான நீ, இங்கே வீணாய்த் தாமசஞ்செய்யாமற் சீக்கிரமாய்த் திரும்பி அவர்களிடத்திற்குப் புறப்பட்டுப்போய்விடென்று சொன்ன கும்பகர்ணனைப்பார்த்து விபீஷணர் சொல்லுகின்றார்.

### கும்பகருணனுக்கு விபீஷணர் தாம்வந்த காரியமின்னதென்றுரைத்தல்.

கவி.

இருளுறுசிந்தையேற்கு மின்னருள்சுரந்தவீரன்
அருளுநீசேரினென்றே யையமுமளிக்குமன்றி
மருளுறுபிறவிநோய்க்கு மருந்துமாமாறிச்செல்லும்
உருளுறுசகடவாழ்க்கை யொழித்துவீடளிக்குமன்றே.

அண்ணா! நான் நமது தமையனாகிய இராவணனிடத்தில் மனஸ்தாபம் பெற்றுவரும்போது உம்முடன் வார்த்தை சொல்வதற்கிடமில்லாமல் வந்துவிட்டேனே அதைத் தம்சமுகம் விண்ணப்பம் செய்வதற்குத்தான் வந்தேன். மேலும் அதன்றி முக்கியமான பெரியவிஷயமுமொன்றுண்டு அஃதென்னவென்றுகேட்டால், அக்கியான சிந்தையையுடைய எல்லாரிடத்திலும் இனிய அருள் சுரக்கின்ற மகா வீரசிகாமணியாகிய ஸ்ரீராமமூர்த்தியினுடைய கிருபைக்கு நீர் பாத்திரமானால், அவர் அபயம் கொடுப்பதொன்று மாத்திரமோ? இந்த மாயப்பிறவிப்பிணியை மாற்றுமருந்தாகவுமிருந்து, கீழ்மேலாக மாறிமாறி உருண்டோடுகின்ற சகடத்தினுருளையைப்போல நின்றநிலையில் நில்லாத இந்தமாயவாழ்க்கையை நீக்கிவிட்டு மறுமையில் தன்னுடைய ஜோதியாகிய பரமபதத்தையும் கொடுப்பார். அந்த ஸ்ரீராகவப்பிரான் எனக்குக் கிருபைசெய்து கொடுத்த சகல ஐஸ்வரியத்தையும், குறைவின்றி நிறைந்த இவ்விலங்காதிபத்தியத்தையும், மற்றெல்லாச் சிறப்பையும், உமக்கு நான்கொடுத்துவிடுகிறேன். மேலும் உம்முடைய ஆக்ஞைபின்படி எப்போதும் நடந்துகொண்டும் வருகின்றேன். இதைப்பார்க்கிலும் உமக்கு வேறே யுறுதிப்பாடு ஒன்றுமில்லை.

ஓ உத்தமரான அண்ணாவே! உமக்குப் பின்னாகப்பிறந்த என்னுடைய மனத்தினிடத்தி லுண்டாகிய துக்கத்தைநீக்கி, நம்முடைய பக்ஷவம்ச தர்மத்தையும் விர்த்திசெய்து வாழக்கடவீர். இனி இந்தரணக்களத்தை விட்டுத் தப்பிப்போகிறதோ அருமை. அப்படி தப்பிப்போனபோதிலும் பிராணனோடே தங்குதற்கான இடமுங்கிடையாது. இராவணனாதி ராக்ஷசர்களெல்லாம் வெகுசீக்கிரத்திலேயே நிச்சயமாகச் சாகப்போகிறார்கள். நீரோ? நல்லநீதியையும், தர்மத்தையும், அபேக்ஷித்திருக்கின்றீர். ஆனபடியினாலே இன்னுஞ் சிலநாளைக் கிருக்கத்தக்க பிராணனை விருதாவில் மாய்த்துக்கொள்ள வேண்டிய காரணமென்ன? வேதமார்க்கத்திற்குத்தக்க ஒழுக்கங்களையே கைப்பிடித்து நடக்கவேண்டியது யாவர்களுக்கும் யுக்தமாகும். வேதவிரோதமாகிய பாபகிருத்தியங்களைச் செய்வார்களேயானால் அப்படிப்பட்டவர்கள் தங்களிலும்

துறந்தவர்களானாலும், உடன்பிறந்தவர்களானாலும், உறவின்முறையார்களானாலும், தாய்தந்தையர்களானாலும், அவர்களை வைதீகதர்மவொழுக்கத்தில் நிற்பவர்கள் மதிப்பார்களோ? அந்த நியாயங்களையெல்லாம் நீர் நன்றாயறிந்திருக்கின்றீரல்லவோ? அப்படிப்பட்ட உமக்கு நான் சொல்லவேண்டியதென்னவிருக்கின்றது?

ஓ வாசனைவீசுகின்ற பூவிதழ்களால் தொடுத்த மாலையையணிந்த மார்பினையுடைய அண்ணா! சத்தியத்தைப் பின்பற்றி நடக்கும் உத்தமர்களைப் பாபமானது பின்றொடர்ந்து வருத்துமா? பிள்ளைகளும், வித்தியாப்பியாசஞ் செய்துவைத்த உபாத்தியாயர்களும், கொண்டபெண்டிரும், இனிய உயிர்க்குச் சமானமாகிய சிநேகிதர்களும், இடுக்கண்வந்தபோது உதவிசெய்தவர்களும், தம்மைவந்தடுத்தவர்களும், ஆகிய இவர்களிடத்தில் வைக்கும் அன்பு துக்ககரமான சம்சார பந்தத்தை உண்டாக்குமென்று அத்தியவசாயம்பிறந்த முமுக்ஷுக்கள் துறந்துவிடுவார்கள், வைதீக கருமமொன்று மாத்திரமே இகத்துக்கு நன்மையைச் செய்வதும், பரத்திற்கு அநுகூலமாயிருப்பது மாகும். ஒருவன் அகிருத்தியத்தைச் செய்ய அவனுடன் யாதொரு சிக்குக்குமுடன்படாத மற்றொருவன் மரணமடைகிறது நியாயமோ? அல்லது அநியாயமோ? நீரே ஆலோசித்துப்பாரும், நீர் நன்மை தீமையை நன்றாய்ப்பகுத்தறியும் தன்மையையுடையவ ராச்சே; தபசிரேஷ்டராகிய ஸ்ரீபரசுராமரானவர் தம்மைப்பெற்ற தாயாகிய ரேணுகா தேவியானவள் பாபகிருத்தியத்தைச் செய்ததனாலல்லவோ தர்மத்தைநோக்கி அவளைக்கொன்றுவிட்டார். அக்கிருத்தியத்தைச் செய்த பிர்ம்மதேவனுடைய தலைகளிலொன்றை மூன்றுகண்களையுடைய உமாநாயகராகிய சிவபிரானவர் கிள்ளினாரல்லவா?

ஓ பகைவருடலைப் புண்படுத்திப் புலால் நாற்றம் வீசுகின்ற சூலாயுதத்தைக் கையிற்றாங்கிய மகாவீரசிகாமணியே! இம்மையில் மகாபாபிஷ்டியாய்ப் பலருமிகழும்படி யிருந்து, மறுமையில் ரௌரவமென்னத்தக்க நரகத்தில் வீழ்வதற்கும் புத்திமான்கள் பிரயத்தனப்படுவார்களா? தேகத்திற்கட்டி புறப்பட்டால் அதைச் சத்திரமிட்டு, கெட்டரத்தத்தை நீக்கிவிட்டு, காரம் வைத்துச் சுட்டு, சூக்ஷமருந்தினாலந்தப்புண்ணையாற்றித் துன்பத்தை நீக்கிக்கொள்வார்களல்லவா? மிகுந்த புத்திமான்கள் உரைத்து உடலிலேபூசிப் பரிமளிக்கச் செய்யவேண்டிய வாசனை திரவியத்தை, வீணாகக் கடலிற்கொண்டுபோய்க் கரைத்து அழித்துவிட மாட்டார்களே: ஆகையால் உம்முடைய தமயனான ராவணனைப் பிராணன்போகாமற் காப்பாற்றலாமென்றால், அதற்கேற்ற ஒரு நற்குணமாவது அவனிடத்திற் காணப்படவில்லையே: இனிவேறொருவழியாய்த் தர்மத்தை விருத்திபண்ணலாமென்றாலும், அதையு நிறைவேற்ற அவன் இடங்கொடுக்கமாட்டானே: அஷ்டதிக்குப்பாலர்களும் — பலவகிலங்களிலுள்ளவர்களும் - சிரிக்கும்படியாக, இரணக்களத்திலேயே ராக்ஷசர்களுடையபிராணன்களெல்லாம் போய்விடப்போகின்றனவே; அப்படி போனபிற்



பாடு அவர்கள் பிறவிதொட்டு இதுவரையினுஞ் செய்த பாபகிர்த்தியத்தால் நரகமேயன்றி வேறெந்த வுலகமுஞ் சித்திக்கமாட்டாதே.

ஓ எனக்கருமருந்தன்ன அண்ணா! நீர் மிகுந்தபலத்தைக்கொண்டு மேலுலகங்களையெல்லாம் ஜெயித்தீரே: அங்கேயாவது வசித்துக்கொண்டிருந்தீரா? இல்லையே; இந்தப் பூமியில்வந்து நீர் இறங்கி இன்றையவரைக்கும் உம்முடைய யௌவனவயதெல்லாம் வீணாய்ப் போகும்படியாக நித்திரைசெய்தீரென்கிறதல்லாமல், அதனாலேனும் ஒரு லாபத்தை யடைந்திருக்கின்றீரா? ஒன்றுமில்லையே: நீர் என்னபிரயோசனத்திற்காகத் தர்மத்தைவிட்டு உயிரை மாய்த்துக்கொள்ளுகிறதற்கு ஏற்பட்டீர்? திருவையும் — மறுவையும் - மார்பிலுடையவரும், சாக்ஷாது ஜெகத்ரக்ஷகரும், தைத்தியாரியுமாகிய ஸ்ரீராமருடைய காருண்ணியத்தினால் உம்முடைய அக்கியானமாகிய நித்திரையுநீங்கி எல்லா ஐஸ்வரியச்சிறப்பையும் அடைந்துவாழ்வீர். மேலும் - சிரஞ்சீவிப்பட்டமும் பெறுவீர். ஏகசக்ராதிபதியாய் அரசுசெய்துகொண் டிருப்பீர், எல்லா உரிமையும் உம்மதேயாகும். உமக்கு ஒருகாரியமும் அருமையாக மாட்டாது அவைகளுக்கெல்லா மிதுவே தருந்தகாலமாகவு மிருக்கின்றது.

ஓ எனது மனதுக்கொத்த அண்ணா! தேவதேவனான சக்கரவர்த்தித் திருமகனார் கொடுக்க இலங்கையின் ஐஸ்வரியங்களெல்லாம் பெற்றுக்கொள்வீர், எப்படிப்பட்டவர்களுக்கும நீர்கீழடங்கியிருக்கவுமாட்டீர். யாவரும் உம்மையொறுத்தப்படுத்தவு மாட்டார்கள். திரிமூர்த்திகளி லொருவரான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே ரகுகுல வம்சோத்பவரா யவதரித்து, தர்மமுழுமையும் காக்கும்படியாக வந்திருக்கின்றார். உமக்குப் பிள்ளைகளாக விருக்கின்ற பேர்களும், உம்மோடு கூடப்பிறந்த எனக்குப் பிள்ளைகளாக விருக்கின்றபேர்களும், நம்முடைய யட்சவம்சத்திற்கு முடிவுகாலத்தை ஆலோசித்தவனான இராவணனுடைய பிள்ளைகளுடனே சிரேஷ்டத்தைப் பெற்றுத் திரிந்துகொண் டிருப்பார்களல்லவோ? துஷ்கிருத்தியத்தைச்செய்து அதர்மவானென்று கண்டோர்பழித்துச் சொல்லாமல், நல்லபுத்தியினாலே தர்மவானென்று பேர் பெற்று வாழக்கடவீர்.

ஓ சன்மார்க்க சிரோமணியாகிய அண்ணா! இதுவரையிலும் ராட்சசர்களிடத்தில் வெறுப்புற்றிருந்த மகாரிஷிகளெல்லாரும் இனிமேற் கருணையுடையவர்களாக இருப்பார்கள். சுவர்க்க மத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட திரிலோகத்திலும், இனி யெந்தப்பகையு முண்டாகப்போகிறதில்லை. இனியுமக்கு மரணமுண்டாகுமென்று பயப்படவேண்டியதே இல்லை. இராக்ஷசர்களை வருத்தப்படுத்திக்கொண்டு பகைவர்களா யிருக்கின்ற தேவர்களெல்லாரும் நட்புடையவர்களாகப் போகிறார்கள். இப்படிப் பழம்பழுத்துத் தின்னத்தக்க காலத்தில் மரத்தைவெட்டி, அது துளிர்த்துப் புஷ்பிக்க வேண்டுமென்று நினைத்திருக்கின்றவர்களைப் போலப் பிரயோசனத்தை இழந்துவிடலாமோ? மேலும் — உம்மிடத்திற்றானே என்சொந்த அபிப்பிராயத்தின்படிக்கு வர

வில்லை. அந்த வேதமுதல்வனாகிய ஸ்ரீராகவபிரானே என்மீது தாம் வைத்திருக்கின்ற கிருபையினாலே உம்மிடத்திலும் தயை யுடையவராகி, உம்மை யழைத்துவரும்படியாக என்னை யனுப்பினார். நான்வந்தகாரிய மிதுவேயாகும். ஆனபடியினாலே அந்தச் சக்கரவர்த்தித் திருமகனாரைக் காணும்படியாகத் தர்மத்திற்குப் பிசகிடவாமல் இப்போதே என்னுடன்கூடப் புறப்பட்டு வரக்கடவீரென்று சகோதரவாஞ்சையினால் விபீஷணாழ்வார் கும்பகருணனாகிய தன்தமயனது அழகுபொருந்திய இரண்டு பாதங்களிலும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

## கும்பகருணன் தன்னையழைக்கவந்த விபீஷணரைச் சன்மானித்துத் தன்னுறுதிப்பா டின்னபடியென்று கூறியனுப்புதல்.

கலி.

தும்பியஞ்சொடையன்மாலைச் சுடர்முடியடியிற்றேயப்
பம்புபொற்கழல்கள்கையால் பற்றினன்புலம்பும்பொற்றோட்
டம்பியையெடுத்துமார்பிற் றழுவித்தன் றறுகணூடு
வெம்புணீர்சொரியநின்று வினையனவிளம்பலுற்றான்.

வண்டுகள் ரீங்காரஞ்செய்கின்ற அழகுபெற்ற மலர்களாற்றொடுத்த மாலையையணிந்து பிரகாசிக்கின்ற கிரீடமானது பூமியிற்பொருந்த நமஸ்கரித்துத் தமயனுடைய பொன்னினாற்செய்து ஆரவாரிக்கின்ற வீரக்கழல்களை யணிந்த திருவடிகளைத் தமது காத்தினாற்பிடித்துப் புலம்பும்படியாகிய தம்பியென்னும் விபீஷணரைத் தனது கரங்களால் வாரியெடுத்து மார்பிற் சேர்த்தணைத்துத் தழுவி கோபாக்கினிப் பொறிகளைக் கக்குகின்ற இரண்டு கண்களிலும் தாரைதாரையாக உதிர நீரொழுகும்படியாக வருந்தி கும்பகருணன் சிலவார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தனன். அழகுபெற்ற மாலையையணிந்த மார்பையுடையவனாகிய அடா தம்பி விபீஷணா! நீரிலெழுதிய கோலத்தைப் போலச் சிறிதுபொழுதே தோன்றும் அற்பவாழ்க்கையைவிரும்பி என்னை இத்தனை காலமனைவாக வளர்த்ததுமன்றி, இப்போது போர்க்கோலமுஞ்செய்து யுத்தத்திற்கு அனுப்பின இராவணனிமித்தமாக நான் என்னுடைய உயிரைக்கொடுக்காமல் ஸ்ரீராமமூர்த்தியினிடத்தில் அடைக்கலமாய்ப் போய்ச் சேரமாட்டேன். நீ என்னுடைய வருத்தத்தை ஒழிக்கவேண்டுமென்று உனக்கு இஷ்டமிருந்தால், மேகத்தைப்போலச் சிறந்த அழகு பெற்றிருக்கின்ற திருமேனியையுடையவரான அந்த ஸ்ரீராமமூர்த்தியைச் சீக்கிரமாகப்போய்ச் சேர்ந்து வாழக்கடவாய்.

மூலதாமரைப் புஷ்பத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவருடைய பொய்யாவரத்தினாலே, நீ எப்போதும் கெடுதலில்லாது நிலைபெற்றிருக்கின்ற தர்ம மார்க்கத்தையடைந்தாய்! இந்த லோகமுள்ளளவைக்கும் அழியாமற் சிரஞ்சீவியாகவு மிருக்கப்போகிறாய். மேலுமிந்த லோகமுழுமைக்கு நீயேசர்வாதிபத்தியமும் முடையவனாக விருக்கிறாய். உனக்கே



அந்த அடைக்கலமென்பது தகுதியாகும். நீசத்தன்மையில் மிகுந்த நமது தமயனாகிய இராவணனது நிமித்தமாக மரணமடைகிறது அதிக இழிவைத்தரத்தக்கதேயாயினும், அதுவே எனக்கு மேலான கீர்த்தியாகும். புத்தியீனனாகிய ஒரு எஜமானன் கெடுநினைவை நினைத்தால், அந்தக் கெடுநினைவைநீக்கி அவனைத் திருத்தக்கூடுமானாலல்லவோ அவனைச்சேர்ந்த மற்றவர்களுக்கு நல்ல சுபக்ஷேமமுண்டாகும்? அப்படி அவனைத் திருத்தக்கூடாவிட்டால் குடிகளும் க்ஷேமத்துடனே வாழும்படியாகவு நேரிடுமோ? போர்த்தொழிலைச் செய்கிறதற்கு உரியவர்களான விவேகமற்ற தலைவர்கள் மடிவதற்கு முன்னே மடிந்து விடுதலே அவர்களுடைய சேனைகளுக்கும் - பந்துவர்க்கத்தினருக்கும் - மற்றையர்க்கும் உரியதாகும்.

அருமருந்தன்ன எனது தம்பியாகிய விபீஷணா! வண்டுகளொலிக்கின்ற மாலையையணிந்த தாசரதியாகிய சுத்தவீரனானவன் தொடுக்கும்படியாகிய அக்கினிக்கணைகளாலே நமது தமயனாகிய இராவணன் கொடுமையாகிய ராக்ஷசசைனியங்களுடனு மற்றபந்துக்களுடனும் தேவர்கள் முதலிய மூவுலகத்தவரும்போற்றும்படியாண்டு தம்பிமார்களிலொருவனாவது தனக்குத்துணையின்றி மண்ணுலகத்தில் மாளுதல்நலமாமோ? யுத்தக்களத்தில் தோற்றுத்தங்களுக்கு [illegible]ராமாகிய பற்றுக்கோடொருவருமின்றி வருந்துகின்ற பகைவர்களெல்லாம் நகைக்க நமது தமயனாகிய இராவணன் தன்னுடைய பலத்திற்குக்குறைந்தவர்களுடைய கையினால் மாண்டபோதும், பெண்மானுக்குச் சமானமாகிய விழிகளையுடைய பார்வதியை வாமபாகத்தில் வைத்திருக்கின்ற நங்குலதெய்வமாகிய சாம்பசிவமூர்த்தியானவர் எழுந்தருளியிருக்கின்ற பெரிய கைலாசமலையை நடுங்கும்படியாகப் பெயர்த்த அவ்விராவணனுடைய திரண்டதோள்களை யமன் தனது பாசத்தினாற் கட்டியிழுத்துக்கொண்டு போகும்போதும், முன்னாலே தனக்குத் தோல்வியடைந்து தலைமறைவாய்த் திரிந்துகொண்டிருக்கின்ற அந்த யமனுடைய பட்டணத்துக்கு ஒருவரும் துணையில்லாமல் தனித்துப் போகும்படியாக விட்டுவிடுகிறது நமக்கு நல்லதாகுமோ?

அப்பா என்கண்மணிபோற் சிறந்தவிபீஷணா! செம்பொன்னினாற் கட்டப்பட்டிருக்கின்ற மதில்களாற் சூழப்பட்ட சிரேஷ்டமாகிய இலங்காதிபத்திய ஐஸ்வரியங் கிடைக்குமென்ற ஆசையினால் அப்புனைந்த மார்பையுடைய கோலத்தோடு நான்கட்டவிழ்ந்து வாசனைவீசுகின்றமாலையையணிந்த எனது தமயனுயிரை எவ்வண்ணமாவது தனது கோதண்டத்திற் கிரையாக்கிக் கொள்ளப்போகின்றான். அப்பேர்ப்பட்ட பகைவனுடன் சேர்ந்து அவனைத்துதிசெய்து வாழேன். யானை இயமனையும் தோற்கடித்து வேடிக்கைசெய்தவன். அஃதிந்த வேளையிற் சத்தியமடையாகவு மெனக்குத் தோற்றவில்லை. ஆதலால் அநுமானையும் - வாலிபுத்திரனாகிய அங்கதனையும் - சூரியகுமாரனாகிய சுக்கிரீவனையும் - அழகிய பொன்போன்ற கோதண்டத்தையுடைய ஸ்ரீராமனையும் - அவர் தம்பியையும் - நீலனையும் - சாம்பவந்தனையும் பழங்களத்தின்னும் விருப்பத்

திறைற் காட்டிற் பிரிந்துகொண்டு சீவிக்கின்ற குரங்குச்சேனைகளாகிய பிரளயகாலச் சமுத்திரத்தையும் ஒருமிக்கச்செயித்து, பனிக்கூட்டமெல்லாம் வற்றும்படிச்செய்து இந்த உலகத்தைச் சுற்றிவருகின்ற சூரியனுக் கொப்பாகயான்மகா வீரபராக்கிரம உற்சாகத்தோடு உலாவிவரப்போகிறதைச் சற்றே நீ பார்த்துக்கொண்டேயிரு.

அப்பா தம்பி விபீஷணு! காலகோடிவிஷத்தைப் பார்த்தோடிய தேவர்களைப்போலக் குரங்குகளெல்லாம் சின்னபின்னப்பட்டோடும்படியாக, மேருமலையான அது தன்னுடையகையிலே ஒரு சூலாயுதத்தைப் பற்றிக்கொண்டு அவர்களைப் பின்றொடர்ந்தோடி வருகிறதைப் போலொத்த தோற்றத்தைக் காட்டிக்கொண்டு, கருங்கடலோடவும் - வடவாமுகாக்கினி யோடவும் - சண்டமாருதக்காற் றோடவும் - உலகமெல்லாம் காலமுடிந்தோடவும் - காற்றாடியைப்போலச் சாரிகை சுற்றித் திரியப்போகிறேன். அதை நீ பார்க்கப்போகிறாய். போர்க்களத்திற் சற்றும்பயப்படாமல் வந்து என்கண்ணெதிரே அகப்படுகின்றவர்களில், நீலமலையு மேருமலையுமென்று ஒப்பிட்டுச் சொல்லும்படியான சிறப்பையுடையவர்களாகிய இராமலட்சுமணர்களென்கின்ற இரண்டுபேர்களுந்தவிர, மற்றவர்களெவர்களாயிருந்தபோதிலும் அவர்களிற் பயத்தாற் செத்தவர்கள்போக உயிரைச் சுமந்துகொண்டு திரிகின்ற எல்லோரையும் ஒருவராவது தப்பித்திரியும்படியாக விடாமற் கொன்றுவிடுவேன்.

கவி.

தாழ்கிற்பாயல்லையென்சொற் றலைக்கொளத்தக்கதென்று
கேட்கிற்பாயாயினெய்தி யவரொடுங்கெழீஇயநட்பை
வேட்கிற்பாயினியோர்மாற்றம் விளம்புவதில்லைவென்றென்று
சூழ்கிற்பாயல்லையாருந் தொழுகிற்பாயென்னைச்சொன்னான்.

இனித்தாமதஞ்செய்யாதே என்சொல்லைச் சிரசாவகிக்கத் தக்கதென்று கேட்பாயானால், சீக்கிரமாகப்போய் அவர்களோடுகூடியிருக்கும்படியான நட்பைத் தேடிக்கொள்ளக் கடவாயாக. இனி வேறேது மொருவார்த்தைசொல்லவாயானாலும் யாதொருகாரியமுமுடியுமென்று யோசிக்கவேண்டாம். நீ சீக்கிரமாய்ப்போய்விடு. நிலைபெற்றிருக்கின்ற வேதவித்துக்களாகிய பிராமணரிய தேவனாயிருக்கின்ற ஸ்ரீராமபிரானிடத்தில் உனக்கு வேண்டியவைகளைப்பெற்று, அவர்களுக்கு உண்மையுள்ளவனாகியிருந்து, இந்தப் போர்க்களத்தி லிறந்தபேர்களாகிய எங்களுக்குச் சாஸ்திரவிதிதமான உரிமைக்கடன்களைச்செய்து, நாங்களடையத்தக்க துக்ககரமாகிய நரகத்தை யடையாதவிதமாக எங்களைக் காத்துக்கொள்ளக்கடவாய். அழிந்து போகிறதாய்க் காணப்படுபவைகள் ஆகுங்காலத்தில் அழியாததாய்முடியும். அழிந்துபோகத் தக்ககாலத்திற் சூழ்ந்துநின்று பல உபாயங்களைச்செய்து காப்பாற்றினபோதிலும், அது நசிக்காமற்போகாது. இது சத்தியமாகும்.



எக்காலத்திலு மழியாமற் சிரஞ்சீவியாக விருக்கப்பெற்ற ஓ பாக்கியவானே! மாச்சரியமற்ற ஆலோசனையுடையவர்களில் உன்னிலு முயர்ந்தோர் யாரிருக்கிறார்கள்? இஃதுனக்குத் தெரியாததல்லவே; ஆதலால்-நீ என்மரணத்தைப்பற்றி வியசனப்படாமற் போய்விடு. என்கன்றிமித்தம் நீ துன்பப்படவேண்டாமென்றுசொல்லி மறுபடியும் அவனைவாரியெடுத்து மார்புடனே இறுகத்தழுவிநின்று, இரக்கமுற்று அழுது, கண்ணீருங்கலையுமாய் வெகுநேரம் செவ்வையாக உற்றுப்பார்த்து, எமது செல்வமே! என்னுயிர்த்துணையே! தம்பி விபீஷணு! உனக்கும் எனக்கும் இன்றையோடு உடன்பிறப்பென்கிற ஆசையானது நீங்கிவிட்டதல்லவா? என்று கும்பகர்ணன் மகாவியசனத்தோடுஞ்சொல்லினன். அப்போது வெற்றிபெற்ற மிகுந்த பலமுள்ளவரும், அதிக குணவிசேஷருமான விபீஷணாழ்வான் அவனுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தெழுந்து, தமது தமயனாகிய அக்கும்பகர்ணன் தம்முடையபோதனைக் கிசையாமையால் கண்ணும் - முகமும் - மனமும் - சொல்லும் - அதிக சோர்வடைந்து, வச்சிரதேகமும் வாட்டமுற்று, இன்னும் எதையாவது சொல்லுகிறதினாலே இவருக்குக் கோபமுண்டாகும். அதனால் மிகுந்த பொல்லாங்கு நமக்குவிளையும்; இனிக்காரியமில்லை திரும்பிப்போய்விடவேண்டுமென்று அபிப்பிராயமுற்று, அந்தராக்ஷச சைனியங்களெல்லாம் கைகெடுத்துக்கும்பிடும்படியாகத் திரும்பிநடந்து, ஸ்ரீராமர் சந்நிதானத்தைநோக்கிப் புறப்பட்டார்.

கும்பகருணன் விபீஷணர் சம்மதிக்குடன்படாது அவரை ஸ்ரீராமரிடம் அனுப்பிவிட்டுச் சோர்ந்துநிற்றல்.

கவி.

கள்ளநீரவாழ்க்கையேனைக் கைவிட்டுக்காலும்விட்டான்
பிள்ளைமைதுறந்தானென்னும் பேதுறுசிந்தையனாகி
வெள்ளநீர்வேலைதன்னில் வீழ்கின்றவிழுவெங்கண்
உள்ளநீரெல்லாமாறி யுதிரநீரொழுகநின்றான்.

அப்படியாகப் புறப்பட்டுச் சென்ற விபீஷணாழ்வானைக் கும்பகர்ணன் பார்த்து, வஞ்சகசுபாவமுள்ள குணம்வாய்ந்த வாழ்க்கையையுடைய நம்மை இவன்கைவிட்டு ராக்ஷசசுபாவத்தையும் விட்டுவிட்டான். முலைப்பால் மணமாறாத குழந்தைப்பருவமுள்ள இவன் இவ்வளவு பெருந்தன்மையான நல்ல குணமுடையவனானானென்று தானிருந்த ஆச்சரியப்பட்டு, பித்துக் கொண்டவனைப்போலச் சித்தப்பிரமையடைந்து, திகைத்து, பெரியவெள்ள நீரையுடைய சமுத்திரத்தில் விழுகின்ற ஆற்றுநீருக்குச் சமானமாகத் தன்னிரண்டு கண்களிலிருந்தும் தாரைதாரையாக இரத்தநீர்பெருகி யோடும்படியாக நின்றுகொண்டிருந்தான்.

விபீஷணர் ஸ்ரீராமரிடம்வந்து கும்பகருணன் உடன்படாமையைக் கூறலும் அப்பிரான் விபீஷணரைத் தேற்றலும்.

கவி.

எய்தியவிருதர்கோனு மிராமனையிறைஞ்சியெய்தாய்
உய்திறனுடையார்க்கன்றோ வறநெறியொழுக்கமுண்மை

பெய்திறனெல்லாம்பெய்து பேசினேன்பெயருந்தன்மை
செய்திலன்குலத்துமானந் தீர்திலன்சிறிதுமென்றான்.

கொய்திறச்சடையின்கற்றை சொக்ரனக்கோலக்கொண்டல்
நொய்தினிற்றுளக்கியைய நுன்னெதிர்நம்முனோனை
எய்துறத்துணித்துவீழ்த்த லினிதன்றென்றினையசொன்னேன்
செய்திறனினிவேறுண்டோ விதியையார்தீர்க்ககிற்பார்.

இந்த நிலைமையிற் கும்பகர்ணனிருக்க, ஸ்ரீராமருடைய சந்நிதானத்திற் சேர்ந்த விபீஷணாழ்வான் சுவாமிக்குத் தெண்டன்சமர்ப்பித்து, ஓ சர்வலோககாரணபூதரான சுவாமீ! கடைத்தேறும்படியானவர்களுக் கல்லவோ வைதிகதர்மமார்க்கமும், நல்லொழுக்கமும், சத்தியமு முண்டாகப்போகின்றன. அடியேனாலானமட்டும் சொல்லவேண்டிய புத்திமதிகளையெல்லாம் திருஷ்டாந்தப்படுத்திச் சொன்னேன். அவனுக்குக் கொஞ்சமாவது இராவணனை விட்டுவருகிறதற்கு மனதில்லை. இராக்ஷசகுலாபிமான மவனைவிட்டு நீங்கவில்லை. என்று சொல்லக்கேட்ட நீலமேகஸ்யாமளரூபரான ஸ்ரீராமமூர்த்தியானவர் நெரிந்தவண்ணஞ்சேர்த்துக்கட்டியழகுவாய்ந்த தமது சடைமுடியைச்சற்றே அசைத்து, தம்பிவிபீஷணா! உன்கண்முன்னாக உன்தமையனாகியகும்பகர்ணனை இறக்கும்படி அஸ்திரப்பிரயோகஞ்செய்து துண்டித்தலுத்துத் தள்ளுகிறது அழகல்லவேயென்று, அவனை யழைத்துக்கொண்டு வரும்படி நான் உனக்குச் சொல்லியனுப்பினேன். இதைவிட நான் உனக்குச்செய்யுமுபகாரம் இப்போது வேறென்னவிருக்கின்றது? பிராரத்வகர்மத்தை யாவர்விலக்குவார்களென்று விபீஷணாழ்வான் கருத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டிருந்தனர்.

## இராட்சசவீரர்களும் வானரவீரர்களும் கடும்போர் விளைத்தல்.

கவி.

என்னினிநுரைக்குவேலை யிராக்கதர்சேனையென்னும்
கன்னகடல்சவிமின்றுனைக் கிழியினைவளைந்துகட்டி
முன்னைதொழின்முயன்றதாக மூவுலகையுலகுமுற்றத்
துனிக்கெடுத்தூளியார்த்த தூர்த்திலபரவைதன்னில்.

இப்படி ஸ்ரீராமர் விபீஷணாழ்வானோடு இனியவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே இராக்ஷசச் சேனைகளென்கின்ற பெரியசமுத்திரமானது வானரசேனைகளாகிய கழியைச் சூழ்ந்து முற்றுகைபோட்டுக்கொண்டு யுத்தஞ்செய்யத் தொடங்கியது. அப்போது அந்தச்சேனைகளாலெழும்பிய தூளிப்படலம் சுவர்க்க மத்திய பாதல மென்கின்ற மூன்றுலோகங்களையு மூடிக்கொண்டு, சமுத்திரத்தையும் தூர்த்துவிடத் தொடங்கியது. நாலுபக்கங்களிலும் குதிரைகளும், யானைகளும், ஓடித்திரிந்தன. சக்கரங்களைப் பூட்டிய பலம்பொருந்திய தேர்களோடின. மலைகளையெல்லாம் பெயர்த்துக்கொண்டு பலரத்தவாறுகளோடின. கவந்தங்களெழுந்து கூத்தாடின. ஒருவன் கொலையுண்ணும்போது அந்த உடலிலிரத்தமாமிசங்களை உணக்கென்று



பேய்களொன்றோடொன்று கைகோத்துக்கொண்டாடின. விருதுக்கொடிகள் பறந்தன. ஆகாசமார்க்கத்தில் மாமிசபட்சணிகளாகிய பருந்து, கழுகு, முதலியவை பறந்தன.

வானரவீரர்கள் மேருமலைக்குச் சமானமாகிய தங்கள்தோள்களினாலெறிந்த மரங்களினாலேயும், மலைகளினாலேயும்; இராக்ஷசர்களா லேவப்பட்ட சூலாயுதத்தினாலேயும், வேலாயுதத்தினாலேயும்; இருவகைச்சேனைகளு மொத்துண்டன. அப்போது மூளையும், மாமிசமும், இரத்தமும், எலும்பும், கொழுப்பும், சிதறுண்டு பலதிசைகளிலும் விழும்படியாகக் கோரதந்தங்களையுடைய இராக்ஷசர்களிற் சிலர் தங்கள் தங்கள் கையிற்பிடித்திருந்த வாளாயுதத்துடனே குழம்பிக்குழைந்து மாண்டுபோனார்கள். சிலவானரர்கள் ரத்தவெள்ளத்திலழுந்தி மாண்டுபோனார்கள். சிலராட்சசர்கள் அநேகஆயுதங்களைப் பிரளயகால மேகத்தைப்போல வானரர்கள்பேரில் எவினார்கள். சிலவானரர்கள் மலைகளைப்பெயர்த்து யுகாந்தகால இடியைப்போல ராட்சசர்கள்மீது மோதினார்கள். சிலராட்சசர்கள் வானரர்களை வாரியெறிந்தார்கள். சிலவானரர்கள் ராட்சசர்களைக் கையிற்பிடித்துப் பிசைந்து பிசைந்து கொன்றார்கள்.

சில அரக்கர்கள் வானரர்களை நிந்தித்துப் பேசினார்கள். சிலவானரகுலவீரர்கள் அரக்கர்களை அடித்துத் துன்பப்படுத்தினார்கள். இந்தப்பிரகாரமாக இருதிறத்தாரும் பற்பலவிதமான யுத்தங்களைச் செய்யும்போது, எதாய்முடியுமோவென்று தேவர்களெல்லாரும் பயந்து நடுக்கங்கொண்டார்கள்.

## வானரவீரர்களும் இராட்சசவீரர்களும் கடும்போர் விளைக்கக்கண்ட கும்பகருணன் வானரவீரர்களைச் சின்னபின்னஞ்செய்ய அவர்கள் கும்பகருணனங்கத்தைப் பங்கஞ்செய்தோடுதல்.

கவி.

நீரினையோட்டுங்காற்றுங் காற்றெதிர்நிற்குநீரும்
போரினையாகவென்று பொருகின்றபூசனைக்கித்
தேரினையோட்டிவந்தான் திருவினைத்தேவர்தங்கள்
ஊரினைக்கொக்காவண்ண முதிரவேனேக்கியுள்ளான்.

யுகாந்தகாலத்திற் காற்று முன்னும் — மழைத்தாரை அதன்பின்னும், மழைத்தாரைமுன்னும் - காற்று அதன்பின்னுமாக ஒன்றையொன்று மாறிமாறித் தாக்குவதுபோலக் காணப்படும் விதமாய் ராக்ஷசவீரர்களை வானரவீரர்களும், வானரவீரர்களை ராக்ஷசவீரர்களும், ஒருவரையொருவர் மாறிமாறித் தாக்கிப் பின்னிடைந்துபோய்விடாமல் எதிர்த்து நின்று கடும்போர் செய்கிறதைத்தனக்குவேண்டிய சகலஐஸ்வரியங்களையும் தேவலோகத்தி லிருக்கவிடாமற் பறித்துக்கொண்டு மறுபடியும் அவைகளில் தேவர்களுக்கு இச்சையுண்டாகாதபடிக்குத் தன்னுடைய உதிரந்தோய்ந்த சூலாயுதத்தைப்பார்த்துக்கொண்டேயிருக்கின்றவனான கும்பகர்ணன்கண்டு, வானரசேனைகளின்பேரில் தன்தேரைச்செலுத்திக்கொண்டு யுத்தத்திற்குவந்தான். அப்போது ஜ

ழிக்காலத்திற்புறப்படுகின்ற சண்டமாருதத்தில் உலகங்களகப்பட்டுத் துன்பப்படுவதுபோல, வானரங்களென்றுசொல்லப்பட்டவைகளிலநேகஞ்சேனைத்தூளியிலகப்பட்டும், இரத்தக்கடலில் மூழ்கியும், முகபடாத்தையணிந்த மஸ்தகத்தையுடைய யானைகள்காலிலிடறியும், அவற்றோடு தொடர்ந்துவந்த கும்பகருணனுடைய தேர்க்காலிலகப்பட்டும், இப்படி பலவாறாய் மாண்டன.

இம்மட்டிலே போகாமற் கும்பகர்ணனானவன் தன்மீது மலைகளைக்கொண்டெறிகின்றவைகளும் தன்தேரின் முன்பாகவந்து குதிக்கின்றவைகளுமான வானரங்களிற் சிலவற்றை இரண்டுகைகளினாலும் பிடித்து ஒன்றுடனே யொன்றைமோதியும், சிலவானரங்களைக் காலினாலே தேயும்படி உதைத்தும், சிலவானரங்களைக் காலின்கீழ்ப்போட்டு நசுக்கியும், சிலவானரங்களை வாயிலிட்டு மென்றுமென்றுமிழ்ந்தும், சிலவானரங்களைக் கையினாற் கும்பற்கும்பலாய் வாரியெடுத்து முந்திரிகைப் பழத்தினின்றும் கொட்டையைத்திருகிப் பிட்பதுபோலத் தலைகளைத்திருகிப், பிட்டெறிந்தும், சிலவானரங்களைப் பல்லினாற் கடித்துகடித்துக் கொன்று போராடி; மிகுந்த பராக்கிரமனான வசந்தனென்கிற வானரவீரப்படைத்தலைவனைப் பிடித்து நசுக்கி, அவனுடைய ரத்தத்தை வாரித் தேகத்திற் சந்தனம்போலப் பூசிக்கொண்டான்.

இப்படிச்செய்த கல்லாமலும் சிலவானரவீரர்களைக் கையிற்பிடித்துச் சமுத்திரத்தில் தோய்த்துத் தோய்த்து எடுத்தான். சிலவானரவீரர்களைப் பூமியிற்போட்டுத் தேய்த்துவிட்டான். சிலவானரவீரர்களைச் சமுத்திர ஜலத்திலே அமிழ்த்திவிட்டான். சிலவானரவீரர்களை நெருப்பில் இறக்கும்படி எறிந்துவிட்டான். சிலவானரவீரர்களைத் தன்னுடைய தேரிலறைந்தான். சிலவானரவீரர்களை எட்டுத் திக்கிலும்போய் விழும்படி வாரித் தூவினான். சிலவானரவீரர்களைப் பிடித்து மரத்தூறுகளில் வீசியடித்தான். சிலவானரவீரர்களைக் கிறுகிறுவென்று சுழற்றி மலைகளில் மோதினான். இதைக்கண்டு தேவர்களெல்லாரும் பயந்து பறந்தோடிப் போனார்கள். எங்கே பார்த்தாலும் வானரப்பிணக்குப்பைகள் நிறைந்துவிட்டன. கழுகு பருந்து முதலான பறவைகளெல்லாம் எட்டுத்திக்குகளும் தோன்றாதபடி நெருங்கிப்பறந்தன.

முன்பு வானரப்படைகள் மலைகளையெல்லாம் பிடுங்கி எறிந்து எறிந்து இராக்கதப்படைகளைக் குறைத்ததுபோலவே, அக்குரங்குச் சேனைகளையெல்லாம்யமனும் பயப்படும்படியாகக் கும்பகர்ணன் கொன்று குறைத்துப்போட்டான். அப்போது மிகுதியான வானரசேனைகள் இனிமேல் நாம் கும்பகர்ணன்மேலன்றி மற்றொருவர்மேற்பிடுங்கி யெறிவதற்கு இவ்வுலகத்தில் ஓர்மரத்தையாவது மலையையாவது வைப்பதில்லை-இன்றைக்கேநாம் ஜெயமுடையப்போகிறோம்.சத்துருக்களெல்லாம் இப்போதே முடியப்போகிறார்களென்று தங்களால் ஊக்கங்கொண்டு அடித்தவைகளும் விட்டெறிந்தவைகளுமான, மரங்கள்-மலைகள்-வேர்கள்-கட்டைகள்-காலிலகப்பட்ட புற்பூண்டுமுதலியமற்றெல்



லாவற்றையும் கும்பகர்ணன் தனது பெரிய தோள்களினாலே தாங்கினான். அப்படித் தாங்கினபோது இவர்களால்வீசப்பட்டவைகளெல்லாம் பொடிப்பொடியாய் உதிர்ந்துபோய்விட்டன.

அதைக்கண்ட வானரவீரர்கள் இனி இவன்மீது எறியத் தக்கவைகளும்-வாரி யறையத்தக்கவைகளும் – ஒன்றுமில்லையேயென்று சொல்லிப் பல்லோடுபல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு, இவனை நாமெல்லாரும் சுற்றிநின்று அடிக்கலாம் வாருங்களென்று சொல்லி ஒருமிக்கப் போய்ப்பாய்ந்தார்கள்.

கவி.

குன்றின்வீழ்குரி இச்சுழாத்திற் குழாங்களாக்குதித்துக்கூடிச்
சென்றுமேலெழுந்துபற்றிக் கைத்தலந்தேயக்குத்தி
வன்றிறலெயிற்றாற்கவ்வி வள்ளுகிர் மடியக்கீறா
ஒன்றுமாவின்றதில்லையென்றிழிந்தோடிப்போன.

குரங்குக் கூட்டங்கள் மலையை மொய்க்கும் ஈக்கள்போற் கும்பலாய்த் தாவிக்கூடி, குதித்துக் குதித்துக்கொண்டு போய்க் கும்பகர்ணன்மேற்பாய்ந்து அவனைப்பிடித்து, தங்கள்கைகள் தேய்ந்துபோகும்படியாகக் குத்தியும்-பலம்பொருந்திய பற்களினாற் கௌவிக் கடித்தும் - கூர்மைபொருந்திய நகங்களினாற் [illegible]யாய்க் கிள்ளிப் பங்கப்படுத்தியும் – அவனுக்குக் கொஞ்சமும் [illegible]நேரிடாததைக்கண்டு; இனி நம்மாலொன்றும் ஆகமாட்டாதென்று அவ[illegible]விட்டிறங்கி ஓட்டம் பிடித்தார்கள்.

கும்பகருணனோடு நீலன் போர்விளைத்து மெலிதல்.

கவி.

மூலமேமண்ணின்மூழ்கிக் கிடந்ததோர்பொருப்பைமுற்றும்
காலமேயெழுந்தகால்போற் கையினாற்கடிதின்வாங்கி
நீலன்மேனிமிர்த்தசாங்கோர் நெருப்பெனத்திரித்துவிட்டான்
சூலமேகொண்டுதூற்றி முறுவலுந்தோன்றநின்றான்.

அப்போது ஊழிக்காலத்தில் உலகத்தை யெல்லாம் சுட்டெரிக்கும்படியாக வருகின்ற பிரளயகாலாக்கினியைப்போல நீலனானவன் பூமியில் வேரூன்றிப் பதிந்திருக்கிற ஒரு பெரியமலையைக்கையினாற் பேர்த்தெடுத்து, அவ்வூழிக்காலத்தில் மோதுங்காற்றைப்போல் கும்பகர்ணனுடைய தேகத்தின்மீதிலெறிந்தான். அதைக்கும்பகர்ணன் ஒருசூலாயுதத்தைக்கொண்டுபொடிப்பொடியாய்நொறுக்கிவிட்டுச் சிரித்துக்கொண்டுநின்றான். அதைக்கண்டநீலன்இன்னுமொரு மலையைத்தேடிப்பிடுங்கியெறிந்தபோதிலும் அதுவு மப்படியே தூள்தூளாய்ப் போய்விடும், அதனால் நம்மோடொத்த வானரசைனியங்கட்கு மிகவும் பயமுண்டாகப்போகுதென் றெண்ணித்-தன்னுடையபுஜங்களையே ஆயுதமாகக்கொண்டு கும்பகர்ணனுடைய் தேருக்கெதிரேயோடி அட்டகாசஞ்செய்து நின்றுகொண்டு, யுத்தவாத்தியங்களி னோசையும்-சத்தசமுத்திரகோஷங்களும்-இடியின் முழக்கமும் அடங்கும்படியாகவும், பூலோகத்தவர்களெல்லா

நடுக்கங்கொள்ளும்படியாகவும், நெய்யைச் சொரிந்த அக்கினியைப் போலக் கோபத்தாற் சுவாலித்தெரிந்து பலதரம் கைகளால் ஓங்கித் திடீர் திடீரென்று குத்தி, கால்களினால் எட்டி யெட்டி உதைத்து, கையும் சலித்து, காலுமோய்ந்து, மனதிற்கொண்ட எண்ணம் ஒருவாறு நிறைவேறி நின்றனன். அப்படி நின்றவனாகிய நீலனைக் கும்பகருணன் பார்த்து, அடா குரங்கே! நான் முனைந்தேனெனில் நீ எவ்வளவு உனது உயிரை இப்போதே குடித்துவிடுகிறேனென்று சொல்லி, நிராயுதனாய் நிற்றலைப்பார்த்து நமது சூலாயுதத்தை இவன் மேலெறிவது தகுதியல்லவென்று நினைத்துத் தனது இடதுகையினாற் பிடித்துத்தன்னி ஓர் குத்துக்குத்தவே நீலன் சோர்ந்துவிழுந்தனன்.

### அங்கதன் போராடி மெலிதல்.

கலி.

ஆண்டதுநோக்கிநின்ற வங்கதனெழுந்தன்னான்
நீண்டதோர்நெடுங்குன்ற நிலமுதுகாற்றூக்கி
யாண்டவனரக்கன்றம்பி யென்றலைகேழும்வாழ்த்த
ஆண்டினைதனையன்ற தொருதனித்தோளினேற்றான்.

அப்போது நீலன் சோர்ந்துவிழுந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த அங்கதன் சக்கரவாளகிரியைப்பார்க்கிலும் நீண்ட ஒரு பெரிய பாரமான மலையைப் பூமிதேவியானவள் முதுகை ஆற்றிக்கொள்ளும்படியாகப் பிடுங்கி, இன்றைக்குக் கும்பகர்ணன் மரணமடைந்தானென்று ஏழுலோகத்தவர்களும் மகிழும்படியாக அவன்பேரில் விட்டெறிந்தான். அதைக் கும்பகர்ணன் தனதொரு தோளினாலே தாங்கினான். தாங்கினமாத்திரத்தில் அந்த மலையானது அநேகம் சுக்கற்சுக்கலாயும், துண்டுதுண்டாயும், பாளம்பாளமாயும், பிசிறாகவிழுந்தது. அதைக்கண்ட வானரசேனைகளெல்லாம் இனியெங்களுக்கென்ன கதியிருக்கின்றது? இவனோடெதிர்த்துச் சண்டை செய்ய எங்களால் முடியாதென்றுபயந்து ஓட்டம்பிடித்தார்கள். அந்தச் சமயத்தில் அங்கதன் மிகுந்த கோபத்துடனே பிடித்தவடி மாறாமல் ஒன்றியாய் நின்றான்.

அப்போது கும்பகர்ணன் இந்திரனுடைய வச்சிராயுதத்தையும் — எமனுடைய தண்டாயுதத்தையும் — ஜெயிக்கத்தக்கதும், சமானமற்ற வலிமையுடையதுமான ஓரிருப்புலக்கையை அதிகமான வேகங்கொண்டு இடதுகையினாலெடுத்து, அங்கதனுடைய உயிரைவாங்கக் கடவாயென்று உச்சரித்து வீசியெறிந்தான். அங்கதன் தேவர்களெல்லாரும் தன்னை ஸ்தோத்திரம்பண்ணும்படியாகத் தனதுபலம்பொருந்திய கையினாலே அந்தமுசலாயுதத்தைப் பிடித்துச் சுழற்றிக்கொண்டு, மேகத்தில் தோன்றுகின்ற இடியானது ஒருபர்வதத்தை அக்கினிமூட்டி யெரிக்கிறதுபோல மிகுந்தவல்லமையுள்ள கும்பகர்ணனை அடித்து, அவன் உடல்முழுமையும் உதிரமயமாகும்படிச்செய்து, உயிரைவிடுப்பேனென்று கண்களில் அக்கினிப்பொறிகள் கக்கிக்கொண்டே, அக்கும்பகர்ணனுடைய விருதுக்கொடிகள் கட்டிய பெரிய தேருக்கு முன்பாகத்தாவிக்



குதித்துப்போய் அவனெதிரே நெருங்கினின்றான். இப்படிநின்ற அங்கதனைக் கும்பகர்ணன் நெருப்புப்பறக்கப் பார்த்து, என்னிடத்தில் சாகும்படியாகவந்த நீ வானரசேனைகளுக்கெல்லாம் தலைவனான சுக்கிரீவனோ? அல்லது அவனுடைய குமாரனோ? அல்லது என்னுடைய ஊரில் நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டு மிகுந்த வெற்றிபெற்றுக்கொண்டு போனவனோ? நீயார் உன்னுடையபெயரென்ன? சீக்கிரமாகச் சொல்லுமென்று கேட்டான்.

இவ்வாறுகேட்ட கும்பகர்ணனை அங்கதன் பார்த்து, உன்னுடைய தமையனான இராவணனை வாலினாற் சுற்றிக்கட்டிக்கொண்டு நான்கு திக்குகளிலும் தாவிச்சூலாயுதத்தைக் கையிற்கொண்டசாம்பசிவமூர்த்தியினுடைய திருவடித்தாமரைகளில் வணக்கஞ்செய்த மஹாவீரனான வாலிபுத்திரனும், உன்னையும் அப்படியே வாலினாற்கட்டிக்கொண்டு இராக்ஷசர்களாகிய சத்துருக்களை எதிர்த்துநிற்கின்ற தசரதகுமாரருடைய திருவடிகளில் வணங்கும்படியான ஐஸ்வரியத்தைப்பெற்றவனுமாகிய அங்கதன் நானேயாகுமென்று சொல்லினான். அதைக்கேட்ட கும்பகருணனவனைப்பார்த்து, அப்பா அங்கதா! உன் தகப்பனை மறைந்திருந்து ஒரேயம்பினாலே உயிர்போக்கின அபகாரிகளுக்கு வருத்தப்படுத்[illegible]பகையைச் செய்துகாட்டாமற் போவாயேயானால், உன்னையுலகத்தவர்கள் நிந்தனை செய்யமாட்டார்களா? அப்படிச் செய்வாயேயானால் என்னைப்போல வல்லமையுடைய வீரர்களும் உன்னை ஸ்தோத்திரஞ் செய்வார்களல்லவா? நல்லது அதிருக்கட்டும்; நீ இங்கேவந்தது என்னையுன் வாலினாலேகட்டியிழுத்து இராமனிடத்திலே கொண்டுபோய் வைக்கிறதற்காகவல்ல. தேவேந்திரனுடைய மார்பிலேகுத்திக் கூவிட்டிழுக்கின்ற எனதுமூவிலைச் சூலாயுதத்தினுச்சியால் உன்முதுகைத் தடாரித்துக்கொண்டு போகும்படியாகவும், என்னைக் கட்டுகிறதற்குரியதாகச் சொன்ன உன்னுடைய வாலைப்போற் கையுங்காலும் அச்சூலாயுதத்தில் தலைகீழாய்த் தொங்கும்படி நிற்கவும் வந்தாயென்றனன்.

அம்மாத்திரத்தில் அங்கதன்கண்களிலக்கினிப்பொறி பறக்கும்படியாகப் பார்த்து, மலையின்மீது இடியிடித்து விழுந்ததுபோலப் பிரதித்வனியுண்டாகத்தக்கதாகவும் — உலகத்தவர்களினுடைய நெஞ்சு நடுக்கும்படியாகவும் — தனது அழகுபெற்றுவிளங்கும் பெரிய கையினாலே அந்தக்கும்பகர்ணனை இருப்புலக்கையைக்கொண்டு ஓங்கியடித்தான். அப்படியடித்தவுடனே வச்சிரதண்டத்திற்குச் சமானமாகிய அந்தஇருப்புலக்கையானது அநேகத்துண்டுகளாய்முறிந்து விழுந்துவிட்டது. அந்த இருப்புத்தண்டத்தைத் தனதுகையை உயர்த்தித்தாக்கிப் பொடியாகச்செய்த கொடியவனான கும்பகர்ணனைப்பார்த்துக் கொக்கரித்துப் பூமிகுலுங்கும்படியாகக் குதிக்கின்ற அங்கதனை அதிகபலமுள்ளவனான கும்பகர்ணன்கோபித்து, தேகத்திற் புண்படும்படியாக ஓங்கி யொருகுத்துக் குத்தினான். அந்தக்குத்து பட்டமாத்திரத்

தில் அங்கதன் மரணமூர்ச்சையடைந்து, பூமிபடீரென்று வொடிக்கும்படியாகக் கீழேவிழுந்தான். அதைக்கண்ட அனுமான் உடனேவந்து குதித்தார்.

## அநுமார் போராடி மெலிதல்.

கவி.

மறித்தவனவனைத்தன்கை வயிரவாட்குலமார்பில்
குறித்துறவெறியவுற்ற காலையிற்குன்றமொன்று
பறித்தவனெற்றிமுற்றப் பார்ப்பிடைப்பாய முன்னே
செறித்தெண்சரிக்கவீசித் தீர்த்தனைவாழ்த்திப் பார்த்தான்.

அப்படிகுதித்தவர் மூர்ச்சித்துவிழுந்த அங்கதன்பேரில் அந்தக்கும்பகர்ணன் மறுபடியும் தன்கையிலுள்ள அதிகபலமாகிய உயர்ந்த சூலாயுதத்தை மார்பிற்கு லக்ஷியம்வைத்தெறிய எத்தனித்ததைக்கண்டு, விரைவிலொருமலையைப்பறித்துக்கொண்டுவந்து அந்தக் கும்பகர்ணனுடைய விசாலம்பொருந்திய முழுநெற்றியின் பாதிப்பங்கிற்பாய்ந்து பொத்துக்கொள்ளும்படியாக வீசி ஸ்ரீராமபிரானை வாழ்த்திக்கர்ச்சித்தார். அந்தப்பர்வதமானது கும்பகர்ணனுடைய நெற்றியிலேபோய்ப் பொத்துக்கொண்டு அவனுக்குமற்றொருதலையிருந்தாற்போல நிற்க, அதைத்தானே கும்பகர்ணன் கையினாற்பிடுங்கிக்கொண்டு, வாயுபுத்திரராகிய அனுமானுடைய வச்சிரமலைக்குச்சமானமான மார்பிலே உலைக்களத்தில் வேக்காடுற்ற இரும்பின்மீது தீப்பொறிகள் சிதறத் தாக்குகின்ற சம்மட்டிக்குச் சமானமாக நெருப்புப்பொறிகள் சிதறத்தக்கதாக வெறிந்து, தானும் தன்னுடைய தோள்களைக் கொட்டிக் கர்ச்சித்தான்.

அந்தச் சமயத்தில் முன்னேடிப்போன வானரர்கள் மறுபடியும் பயந்திட்டுமல் வந்து வாலிபுத்திரனாகிய அங்கதனை எடுத்துக்கொண்டு போனார்கள். அப்போது ஆஞ்சநேயர் தாமெறிந்த மலையைத் தன்கையிலேயே விட்டெறிந்த கும்பகர்ணனுடைய சாமர்த்தியத்திற்கு மெச்சி, ஆகாசமுழுதையும் விழுங்குகிறதுபோல மறைத்துக்கொண்டிருக்கின்ற மற்றொரு பெரியமலையைப் பறித்துக் கையிலேந்திநின்று, ஒருவரும் சமானமில்லாத பலமுள்ளவனான அந்தக்கும்பகர்ணனைப் பார்த்து, இந்த மலையை உன்மேல் எறிகின்றேன். க்ஷணநேரத்திற்குள்ளாக நீ நசுங்கி மாண்டுபோகப்போகிறாய். அப்படிக் கில்லாமல் நீ சீக்கிரத்திலிதைத் தடுத்துவிடுவாயேயானால், உன்னுடைய சக்தியின் வல்லமையை நான் அறிந்து மெச்சிக்கொள்ளுகின்றேன். அதன்பிறகு உன்னுடன் சண்டையும்செய்யாமல் திரும்பிப்போய் விடுகிறேன். உலகத்திலே மகாவீரனென்கிற ஒரு பெரும்புகழையு நீ யடையக்கடவாயென்று கூறினர்.

இப்படி அஞ்சாநெஞ்சசிம்மமாகிய ஆஞ்சநேயர் சொல்லியதைக் கும்பகர்ணன்கேட்டு, மலையின்குகையை திறந்தாற்போலப் பிளப்பாகியவாயைத் திறந்துநகைத்து, நீ எறிகிறமலையை அப்படியேயெறி, அது என்மேற்படுகிறகாலத்தில் கொஞ்சமாவது இளைப்படைவேனேயானால், உனக்குநான் தோற்றுப் போனவனேயாவேன். என்னுடைய பலமும் அற்பமானதாக நினைக்கத்தக்



கது. என்றிப்படி இருவரும் சபதம்பண்ணிக்கொண்டார்கள். அப்போது ஆஞ்சநேயர் - அடா! கும்பகர்ணா! நீ சமர்த்தனானால் என்னோடே எதிர்த்து நில்லு; சமர்த்தில்லாவிட்டால் உயிர்தப்பி யோடிப்போய்விடென்று சொல்லித் தமது பெருங்கையினாலே குறிப்பிட்டெறிந்த அந்த வச்சிரமலையை அதிக உக்கிரத்தோடு கும்பகர்ணன் தனது தோளில் தாங்கினான். அம்மலையவன் தோளிற் பட்டமாத்திரத்திற் படீரென்று அநேகம் சுக்கல்களாகப் போய்விட்டது. அந்தச் சப்தத்தைக்கேட்ட உலகத்தவர்கள் மனம் திடுக்கிட்டார்கள்.

அக்கால மவனுடைய தேகம் கொஞ்சமும் கன்றி வருத்தமடையாமலிருக்கிறதை ஸ்ரீராமநாதர் கண்டு, இவனுடைய வல்லமை இவ்வளவென்று ஒருவராலும் அளவிட்டுச் சொல்லிமுடியாது. மேருமலையைச் சமானப்படுத்திச் சொன்னாலும், அதைக்காட்டிலுமிவன் அசையாத நிலைமையுள்ளவன். ஆனதால்-வல்லமையிலும் அழகிலும் அம்மேருவையு நிகர்சொல்லக்கூடாமல் வெற்றியும் சுந்தரமும்பெற்ற தோள்களையுடைய ஸ்ரீராமமூர்த்தியின்பாணங்களே இவனைப் பிளந்தாற் பிளக்குமென்று சொல்லிவிட்டுத் திரும்பிப்போய்விட்டார். இவையனைத்தும் தேவர்கள்கண்டு, இந்தச் சமயத்தில் இவ்வனுமான் வராவிட்டால், எழுபது வெள்ள வானரசேனைகளுள் இதுவரையிலும் இறந்தவர்கள்போக மற்றவர்களெல்லாம் இன்றைக்கே இவனுடைய வலதுபாரிசத்திலுள்ள முத்தலைச்சூலத்தாற் குத்துண்டு கருவற்றுப்போவார்கள். இறந்துபோனவர்களுடைய உதிரமாமிசங்களால் நிறையப்பட்டு ஒரேநாளையில் இந்தவுலகமுழுதும் நாசமடைந்து வேறுபட்டுப்போகும். ஐயோ? இந்தக்கும்பகர்ணனையெதிர்த்து வானரர்கள் குத்தினதில் என்னகுறை? அப்படியாகக்குத்தும் [illegible]ம் தங்கள் கைசலித்துப் போய்விட்டார்களே யல்லாமல் அவனைத் தோற்கடித்தவர்களொருவருமில்லை. அவனை நோகச்செய்தவர்களும் ஒருவருமில்லையென்றுகலங்கி நெஞ்சமொருமி நடுநடுங்கினார்கள்.

அப்போது கும்பகர்ணன் தானொருவனே போர்க்களத்தில் ஒருநாழிகை அடிச்சுவடும் காணவொட்டாதபடி அடித்துத்துரத்தி, தேவர்களைச்செயித்த தன்னுடைய வீரத்தையும் கீர்த்தியையும் மறுபடியும் புதுக்கினவனாகி, குரங்குகளெல்லாம் பெருங்கூட்டங்களாக ஓடிப்போய்விட்டனவே; அந்தரிஷிகளாயிருக்கின்ற இரண்டுமனிதர்களும் இங்கில்லையே; இன்னமும் இலங்கையிருக்கின்றதென்று நினைத்து ஒருவேளை அங்கே போரிடுவதற்குப் போனார்களோ? அவர்கள் எங்கேயிருக்கின்றார்களெங்கே யிருக்கின்றார்களென்று உரத்தசப்தத்தோடு கூப்பிட்டுக்கொண்டு, தேவர்களும் பயங்கொள்ள தன்னுடைய தோள்களைத் தட்டிக்கொண்டு, பேரிடிமுழக்கம்போல வீரகர்ச்சிதஞ் செய்தான். அதைக்கேட்டு யமனும்பயந்து நடுங்கிப்போனான்.

அந்தவேகத்துடனே மோதிவருகின்ற அலையைப்போலத் தாவிவந்த எழுபதுவெள்ள வானரசைனியக் கூட்டங்களுக்குள் கும்பகர்ணனால் இறந்து

போனவைபோக உயிருண்டாயிருந்தவைகளெல்லாம் ஓட்டம்பிடித்தபடியினாலே இரணக்களத்தி லொருவருமில்லாமல் வெறுவெளியாய்விட்டன. உதிரவெள்ளம் பாய்ந்ததினால் சமுத்திரம் பெருக்கெடுத்து பூரணச்சந்திரோதய காலத்தைக்காட்டிலும் அதிகமாய் அலைகள் மேலெழுந்து சப்தித்தன.

## இலக்ஷுமணருக்கும் கும்பகருணனுக்கும் போர்மூளல்.

கவி.

குன்றுஞ்சக்கருமாக்களுங் குறைந்தனகுரங்கின்
வென்றியம்பெருஞ்சேனையோர் பாதியின்மேலும்
இன்றுதேய்ந்ததென் றுரைத்தன மமரர்களிலைப்பச்
சென்றுதாக்கினனொருதனிச் சுமித்திரைச்சிங்கம்.

அச்சமயத்தில் பயந்தோடிய வானரக்கூட்டங்கள் இளையபெருமானாகிய இலக்ஷுமணரிடத்திற்குவந்து எங்களையாளவந்த ஸ்ரீராமச்சந்திரப்பிரபுவின் சோதரரே! இன்று கும்பகருணனுயுத்தத்தில் இவ்வுலகிலுள்ள குன்றுகளென்ன மலைகளென்ன மரங்களென்ன அவைகளிற் பாதிக்குமேலும் குறையும் வண்ணம் போர்புரிந்த வானரகூட்டங்கள் முற்கூறிய பாதிக்குமேலென்னு மளவைப்படியே; அக்கும்பகர்ணப்பதிதனால் இறந்துவிட்டன. இனியாது செய்வதென்றுரைத்து ஏங்கின்ற காலையில், சுமித்திராதேவியின் திருக்குமாரனாகிய ஒப்பற்ற இளஞ்சிங்கவேற்றை யொத்த லக்ஷுமணப்பெருமான் தேவர்களெல்லாம் இன்றே ராக்ஷசப்பூண்டுகெள் அற்றதென்று சந்தோஷிக்கும்படியாக மகாகோபங்கொண்டவராகி கும்பகருணனோடு தானொருவரே எதிர்த்து வில்லின் குணத்தொனி பண்ணினார். அந்தத் தொனியால் திக்கிட்டுக் கைகால்கள் நடுங்கி அநேக ராக்ஷசர்கள் இறந்தபடியினாலே, இராக்ஷச ஸ்திரீகள் தங்கள்கழுத்திற் கட்டியிருந்த பொற்றாலிகளையெல்லாம் அறுத்துத் தரையில் எறிந்துவிட்டார்கள். இடியிடித்ததென்று சுவர்க்கலோகமுழுது நடுங்கியது. அஷ்டதிக்குகளெல்லாம் செவிடுபட்டுப்போய்விட்டன. பேய்க்கூட்டங்களெல்லாம் கையிற்பிடித்துத் தின்றுகொண்டிருந்த மாமிசங்களை எறிந்துவிட்டு, இரண்டு கைகளையும் தட்டிக்கொண்டு கூத்தாடின. இலட்சுமணப்பெருமான் வேகத்தோடும் பிரயோகித்த பாணக்கூட்டங்கள் வெகுதூரமாய் ஆதாரமில்லாதிருந்தபடியினாலே சிறிதுகொண்டு கட்டுப்பாடாக உலைக்களத்தில் வெந்த இரும்புபோல அக்கினியைக் கக்கிக்கொண்டு, யானைகளினது தேகத்தில் நுழைந்து அவைகளுடைய ரத்தத்தையெல்லாம் பானம்பண்ணிவிட்டன. சில அஸ்திரங்கள் சமுத்திரத்தைத் தொப்பாகவந்த ராக்ஷசர்களுடைய தலைகளைக் கொய்துகொண்டுபோயின. சிலபாணங்கள் அவரவர்களுடைய அறுபட்ட சிரங்களில் தைத்து அவைகளை அஷ்டதிக்குகளிலும் கொண்டுபோய் எறிந்தன. சில அம்புகள் அறுந்ததலைகளை விழவொட்டாமல் வேகமாய்க்கொண்டுபோவதினால் இந்த அம்புகளுக்கும் தலைகளுண்டென்னும்படி



யாக இருந்தன. அக்கினிமயமாக இருக்கின்ற சிலகணைகள் மலைக்குச்சரியொத்த யானைகளுடைய முகபடாத்தோடு தலையைக்கத்தரித்துத் தேகத்தினுமூடுருவிப்போய், இரணக்களத்தில் யுத்தஞ்செய்கின்ற அநேக ராக்ஷசர்களுடைய தலைகளையும் சிந்திக்கொண்டு, குகையில் நுழைகின்ற பெரிய மலைப்பாம்பைப்போலப் பக்கங்களிலுள்ள மலைகளிற்போய் நுழைந்துகொண்டன.

சிலசரங்கள் அநேக கூட்டங்கூட்டங்களாக மின்னல்களோடுகிறது போல விரைந்துபோய் எதிர்முகமாக இருக்கின்ற அசுரர்களாகிய ராக்ஷசர்களுடையமுகத்தில் நுழைந்து, அந்த முகத்தில் நுழைந்ததுபோலவே சேனையின் கோடியிலிருக்கின்ற ராட்சசக்கூட்டங்களினது முதுகின் பின்புறத்திலிருக்கின்ற பிடர்க்குள்ளும் சமவேகத்தோடுபோய் நுழைந்தன. சில்சாயகங்கள் தோல்போர்த்திருக்கின்ற பேரிகைகளில் தைத்தன. சில சிலீமுகங்கள் சங்கினையூதுகின்றவர்களுடைய குவிந்தவாயினும், அச்சங்கைப்பிடித்திருக்கின்ற கைகளினும், அபரிமிதமாகப் போய்ப் பாய்ந்தன. சில ஆசுகங்கள் யானைகளுடைய கழுத்திற்போய்த் தைத்தன. சில ஆவிகள் தேர்களிற் கட்டியிழுக்கின்ற மிகுந்த வேகமுடைய குதிரைகளின் தலைகளிற்போய்ப் பதிந்தன. சிலவாளிகள் இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த ராக்ஷசர்களில் ஒருவனையும்விடாமல், அவரவர்களுடைய கண்களிலெல்லா முருவின. இந்தப்பிரகாரமாக எல்லாவிடங்களிலும் இலட்சுமணரால் விடப்பட்ட பாணமயமாக நிறைந்தன.

இப்படியாகப் பாணங்கள்பட்டு யானைகளெல்லாம் தந்தங்கள் முறிபுண்டவைகளும், வாலறுபட்டவைகளும், தீப்பறக்கின்ற கண்களிழந்தவைகளும், துதிக்கைதுணிந்தவைகளும், இரணக்களத்திற் பிரவேசித்தவேகத்தையுடைய முன்னங்கால்கள் தறிபட்டவைகளுமாய்க் கொடுமுடியோடு மலைகளுருள்வனபோற் பூமியில் முண்டங்களாய்ப் புரண்டன. ஆகாயம் பூமி இவ்விடங்களிற் குளம்புகளையுடையகால்களால் மிதிக்காதகுதிரைகள் வரிசை வரிசையாக ஓயாமற் பிரயோகிக்கப் பட்டுக்கொண்டே யிருக்கிறபடியால் அவ்விடங்களிலிருந்து சுதீல் சுதீலென்று வருகின்ற இலட்சுமணருடைய பாணங்கள் மார்பில்தைத்துப் பிளந்ததினாலே மருண்டு உருண்டு புரண்டு மாண்டுபோனவைகளுமாயொழிந்தவைகளே யல்லாமல்; ஒருகுதிரையாவது தப்பிப்பிழைத்து நிற்கவில்லை.

அன்றியும் பலபலவிதமாகப் பாணங்கள் தேரிற்பூட்டிய குதிரைகளைக் கொன்று தள்ளி, இரண்டுகுதையும் வளையும்படியாக வில்லைப்பிடித்துக்கொண்டிருக்கின்ற தலைமையான ரதிகர்களையும் பாகர்களையும் அறுத்து வீழ்த்திவிட்டபடியினாலே, கொடிகள் கட்டியுள்ள பெருந்தேர்களெல்லாம் அளவில்லாமற்பெருகுகிற இரத்தப் பெருவெள்ளத்தினால் இழுப்புண்டு போனவைகளே யல்லாமற் போகவேண்டிய கிரமப்பிரகாரம் போனவைகளல்ல. ஒரு

லையில் நின்றவைகளுமல்லவாயின. செங்கடலுக்கொப்பாகிய ரத்தவெள்ளத்தில் மிதக்கின்ற இராக்ஷசர்களின் தலைகள் அகன்றவாயை யுடையவைகளாய்த் தோணிகளையொத்திருந்தன. தோண்டப்பட்ட கண்ணின் குழிகளும், அறுபட்ட மூக்குகளும், அகப்பைகளுக்குச் சமமாக விருந்தன.

கழுத்தோடுகூட அறுபட்டிருந்த தலைகள் ஒரேபாணத்தினால் வரிசைவரிசையாய்ச் சேர்ப்புண்டு தெப்பங்களுக்கு நிகராகவிருந்தன. இராக்ஷசர்களணிந்துகொண்டு வந்த வெள்ளி உடுக்கைகள் கிழிந்து பூமியிற் குத்திட்டாற்போலவிழ, அவைகளினுடைய வட்டமான வாயிற்படிந்து விழுந்திருக்கின்ற வெண்சாமரைகள் ஸ்ரீராமருக்குச் சீக்கிரத்தில் வெற்றியுண்டாகப் போகிறதென்று நல்ல முகூர்த்தகாலத்தைக் குறித்து முளைகள்வார்த்திருக்கின்ற பாலிகைக்குச் சமானமாயிருந்தன.

வேனிற்காலத்திற்குரிய மன்மதனைப்போல வடிவழகுள்ள இளையபெருமாள்விட்ட கொடிய பாணங்களினாலே கீர்த்திபெற்ற வாளாயுதம்போன்ற வக்கிரதந்தங்களையுடைய இராக்ஷசர்களாயுதங்களெல்லாம் அன்றுண்டு, போனதிசைமுழுதினும் நெருப்புப்பற்றி யெரிந்து, வானமீன்களெல்லாம் ஒளிமிக்க ஆகாசத்தினின்றும் பூமியில் விழுந்ததுபோலப் பலபலவென்று உதிர்ந்தன. அரத்தினால் ராவப்பட்டுக் கூர்மைபெற்ற நீண்டபாணங்களாற் சேனைத்துடனே ஓடுகிற குதிரைகளுடைய கால்கள் ஒடிப்புண்டன. அக்கினிமயமான விருதுக்கொடிகள் அறுப்புண்டன. அலங்காரமாகிய பெரிய தேர்களெல்லாம் அழிந்து போய்விட்டன.

நல்வினை தீவினைகளுக்குக் காரணமாகிய அகங்கார மமகாரங்கள் யதார்த்தக்கியானத்தை நீக்கிவிட்டாலும், அந்தப்பாபத்தை வீரதன்மையானது நீக்கிவிடுமென்பதைத் திருஷ்டாந்த பூர்வமாகப்பார்த்தோம். அஃதெப்படியென்றால் - இளையபெருமாளோடு எதிர்த்து யுத்தஞ்செய்து மரணமடைந்த இராக்ஷசவீரர்கள் இரக்க மற்றவர்களாயும் தர்மத்திற்கு விரோதஞ்செய்தவர்களாயு மிருந்தபோதினும்; வீரவான்களாக இருந்தபடியினாலே அவர்கள் வீரஸ்வர்க்கலோகத்தை யடைந்தார்கள். அப்போது ரம்பாஸ்திரீகளெல்லாரும் அவர்களிடத்தி லதிக விருப்பமுடையவர்களாய் அவர்கள் தேகத்தைத் தழுவிக்கொண்டார்கள். மேகதாரைகள் போலப் புறப்பட்ட கொடுமையான சிலபாணங்கள் வடவாமுகாக்கினியைப்போலவும் — சண்டமாருதத்தைப் போலவும் — உலகங்களையெல்லா மூடிக்கொண்டு அவைகளுடனே வேகமாய்வந்தபோது, கொடிய பாபகிருத்தியத்தையுடைய ராக்ஷசர்களெல்லாம் அந்தப் பாணங்களைத் தடுக்கமாட்டாமல் மரணமடைந்தார்கள்.

இந்தப்பிரகார மரணமடைந்த எல்லாரும் ஒருமிக்கச் சுவர்க்கமடைந்தார்களேயானால், வீரர்களடையத்தக்க அந்தச்சுவர்க்கத்தைப் பார்க்கிலும்



பெரியதொன் றிருக்கிறதாகப் புத்திமான்கள் சொல்லமாட்டார்கள். இலட்சுமணராலே விடப்பட்ட பாணங்கள் இராக்ஷசர்களி லொருவரை இரண்டு முன்னங்கைகளை அறுத்தும், மற்றொருவரைச் சிரந்துணித்தும், மேலொருவரை வீரகண்டாமணிகட்டிய பாதங்களைவெட்டியும், சிலர்தோள்களைப் பிளந்தும், இந்தப்பிரகாரமாக ராக்ஷசர்களை யெல்லாம் அவயவக் கண்டனைகள் செய்தபடியினாலே; மறுபடியும் சம்ஹரிப்பதற்குச் சத்துருக்களில்லாமல் வெறுமையானவைகளாய்ச் சிலபாணங்கள் ரணகளத்தைச் சுற்றிச்சுற்றித் திரிந்து, கொடுக்கத்தக்க வள்ளலைக் காணாமையாற் பிரயோஜனம்பெறாத அநேகயாசகர்களையொத் திருந்தன.

சிலராக்ஷசர்களைச் சிரங்களையும், சிலராக்ஷசர்களைச் செவிகளையும், சிலராக்ஷசர்களை நாசிகளையும், சிலராக்ஷசர்களைக் கைகளையும், அநேகராக்ஷசர்களைக் கண்களையும் சேதித்தமையால்; பூமியினிடத்துத் தாதாக்கள்கொடுக்கின்ற பொருளளவுக்குத் தக்கபடி தண்டமிழ்ப்புலவர்களாற் செந்தமிழ்ச் செய்யுட்களியற்றி முடித்தற்கொப்பாகவு மிருந்தன. தருமதேவதையி னுயிர்க்குச் சமானமாகிய இளையபெருமாள் பிரயோகித்த அஸ்திரங்கள் படுகிறதினாலே, நாமிங்கிருப்போமானால் இறந்துபோவோம், நம்முடைய ராஜனாகிய கும்பகர்ணனும் இன்னும் சற்றுநேரந்தான் இக்ரணகளத்தில் நிற்கப்போகிறான். என்றிராக்ஷசசேனைகளனைத்தும் ஓடிப்போக யத்தனித்தன. போகிறதற்கு வழிதெரியாமல் கூட்டங்கூட்டமாய்ச் சிதறி நான்குதிசைகளினும் இரத்தவெள்ளமோடுவதுபோலப் பயந்து ஓட்டம்பிடித்தார்கள்.

அப்போது புலஸ்திய பௌத்திரனான கும்பகர்ணன் யுத்தகளத்தில் மாண்டவர்களான ராக்ஷசர்களுடைய பரிதாபஸ்திதியையும் இலட்சுமணர்செய்த வில்வல்லமையையும் ஆலோசித்து, திரிபுரசம்ஹார கர்த்தாவாகிய சிவசங்காமூர்த்தியும் இந்த இளையபெருமானுமே வில்வீரர்கள், வேறொருவரு மிவர்களுக் கொப்பாகமாட்டார்கள். என்று ஒருகரத்திற் காயிரந்தரமெடுத்துச் சொல்லிப் புகழ்ந்துகொண்டு, விசாலமாகிய தேர்த்தட்டின் பலவிடங்களினும் சாரதிகளிருந்து செலுத்துகின்றதும், வாயுவேகத்திற்கு மனோவேகத்திற்கு மின்னினவேகமுள்ளதுமான ஆயிரஞ்சிங்கங்கள் பூண்ட ஸ்வர்ணமயமாகிய மேருகிரியை யொத்த தேரை நடத்திக்கொண்டுவந்து இரணரங்கத்தில் நின்றான்.

அப்படிநின்ற வக்கிரதந்தங்களையுடைய கும்பகர்ணன் துணையிட்ட துரகங்களில் அநேகசிம்ஹங்கள் பூண்டிழுக்கின்ற தேரிலிருந்து வில்லைவளைத்து யுத்தஞ்செய்தபோது இளையபெருமாள் பாதசாரியாய் யுத்தஞ்செய்வது மேன்பாடாயிருக்கமாட்டாதென்று ஆஞ்சநேயர் ஆலோசித்து, சமீபமாயிஷ்டராய் அவருக்கு முன்னேவந்து ஸ்வாமி! தேவரீர் அடியேன் தோள்களின்மீது ஆரோகணித்து யுத்தம் செய்தருளுமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்.

### இலக்ஷ்மணர் ஆஞ்சனேயர்மீ தாரோகணித்து யுத்தஞ்செய்தல்.

கவி.

எறிஞனிளங்கோளரி யிமையவராசி
கூறினரெடுத்தார்த்தது வானரக்குழுவும்
மாறுபத்துடைப்பத்தியி னெறிற்பரிபூண்ட
ஆறுதேரினுமகன்றதவ் வனுமன்றன் றடந்தோள்.

அதற்குச் சுமித்திரை இளஞ்சிங்கமாகிய இலட்சுமணரும் அப்படியே ஆருகவென்று வாயுபுத்திரராகிய சிறியதிருவடியின்மீது ஏறியருளினார். தேவர்களாசிர்வதித்தார்கள். வானரவீரப்பெருங்கூட்டம் ஜயாவிஜயபவா என்றார்ப்பரித்தன. ஆஞ்சநேயருடைய திருத்தோள்கள் ஆயிரம்பரிகள்பூண்ட கும்பகர்ணனுடைய ரதத்தினும் விசாலமாகப் பரந்தன. தமக்குச்சமானம் தாமேயல்லாமல் வேறொருவருமில்லாத ஆஞ்சனேயருடைய திருத்தோளின்மீது அதிதேஜோன்மயமான இளையபெருமாள் எழுந்தருளி விளங்குகின்ற காட்சி, மேருமலையானது கயிலாசமலையின்மீதிருந்து பிரகாசித்ததுபோன்றிருந்ததேயல்லாமல் அதற்குச்சமானமாகச் சொல்லுகிறதற்கு வேறொன்றும் உலகத்திற்கிடையாது.

இவ்விதமாயெழுந்தருளிய இலட்சுமணப்பெருமானுக்குச் சமானமாக யுத்தஞ்செய்ய வேண்டுமென்று கும்பகர்ணன் அநேக அஸ்திரங்களை நிறைத்து வைத்திருக்கின்ற அம்பறாத்தூணியை முதுகிற்கட்டிக்கொண்டு, பருத்த தோள்வல்லமைக்குத் தக்கதும் இந்திரதனுவும் வெட்கப்படத் தக்கதுமான ஒருபெரியமலைக்குச்சமானமாகிய வில்லைக் கையிற்பிடித்துக்கொண்டு, இளைய பெருமாளைப்பார்த்து, நீ ஸ்ரீராமன் தம்பி. நான் இராவணேஸ்வரன் தம்பி. நாமிருவரும் யுத்தஞ்செய்ய நிற்கிறோம். நம்முடைய யுத்தத்தைப் பார்க்கிறதற்குத் தேவர்களெல்லாம் ஆகாசத்தில்வந்து பரவியிருக்கின்றார்கள். சமஸ்தமானவீரர்களும் பாரம்பரியமா யனுசரித்து வந்த யுத்தமரியாதைக்குத் தக்கவைகளைச்சொல்லி யாவரும் மெப்புக்கொள்ளத்தக்க யுத்தத்தைச் செய்வோம். நானிப்போது கேட்கிற கேள்விக்குத் தகுந்த உத்தரம் சொல்லக்கடவாய். அநேக தவஞ்செய்து எங்களுடன்பிறந்த சூர்ப்பநகை யென்னும் பெண்ணானவள் யாதொரு குற்றமும் செய்யாதிருக்கவும், அவளுடையமூக்கை வெகு கோபங்கொண்டு அறுத்தது உனக்குத்தகுமா? அப்படியறுத்த உன்வெற்றிப் பிரதாபத்தையும், அவளுடைய அளகபாரத்தைப் பற்றியிழுத்த உன்கையையும், இதோ அறுத்துக் கீழேதள்ளப்போகிறேன் தப்பித்துக்கொள்ளென்று சொன்னான்.

இப்படி இருளைப்போலுங் கறுத்தமேனியையுடைய கும்பகர்ணன் சொன்னதை மல்லயுத்தத்திலுயர்ந்த தோள்களையுடைய இலட்சுமணப் பெருமாள்கேட்டு, அடா கும்பகர்ண! உங்களுக்கு மாறுத்தரம் எங்கள் வில்லினாற் சொல்லும்படி கற்றிருக்கிறோமேயல்லது; வீரலக்ஷணத்துக்கு நாணிழுண்டா



கும்படிச் சொல்லிறைச் சொல்லுகிறதற்கு நாங்கள் சாஸ்திரங்கள் படிக்கவில்லையென்று சொன்னார். அதைக்கேட்ட கும்பகர்ணன் ஆகாசமிரண்டாய்ப் பிளந்துவிழுமென்றும், மேருமலை பூமியுடனே இரண்டாய்க் கிழிந்துவிழுமென்றும், தேவர்களெல்லா மனத்திகைப் படையும்படியாக; தனதிரண்டு கண்களினும் அக்கினிப்பொறிகள் பறக்கப் பதினெட்டு அக்கினிமுகாஸ்திரங்களையொன்றாகத்தொடுத்து இளையபெருமாள்மீது பிரயோகித்தான். அஷ்டதிக்கஜங்களுடைய தந்தங்கள் தன்மார்பிற்பாய்ந்து பதியும்படியெதிர்த்து அவைகளைத் தோற்கடித்தவனும், தேவர்களுடைய வல்லமையைபொடுக்கினவனும், இடிக்குச்சமானமாகிய கொடுங்கோபமுள்ளவனுமான இராவணன்தம்பியாகிய கும்பகர்ணன்விட்ட பதினெட்டு பாணங்களையும்; இளையபெருமாள் வில்லை வளைத்து நாணேற்றிட்டு அதில் நாலுபாணங்களைப் பிரயோகித்து அறுத்தெறிந்தார்.

இவ்வண்ணமாக நமதிளையபெருமாள் கும்பகருணப்பதகனுற் பிரயோகித்த பாணங்களெல்லாவற்றையுஞ் சிதைத்தமாத்திரத்தில் கும்பகருணனானவன் மிகவும் கடூரமாகத்தானே கோபித்தவனாகித் தேவலோகத்துள்ள தேவர்களை யெல்லாந்தலையெடுக்க வொட்டாது அநேககாலம் தண்டித்துக்கொண்டு வந்ததும், ஆயிரஉருவமுள்ளதும், நான்குதிக்குமுகங்களையுடைய பிரமாவானவர் தன்னுடைய தவத்திற்கிரங்கியளிக்கப் பெற்றதும், புள்ளிபெற்ற முகத்தையுடையதும், தெய்வீகமும் பெற்றுவிளங்குகின்ற ஓர் அஸ்திரத்தையெடுத்து அதற்குத் தூபதீப நைவேத்திய சத்திரசாமராதி பாத்தியாசமனார்க்கியங்களை மனதாற்செய்து பிரமாவைப்போற்றி தனது வில்லிற் சந்தித்து, அடா நரா! இதோவருகிறதுபார் எனது அஸ்திரம் உனது தலையைக் கண்டிக்க, நீ சாமர்த்தியவந்தனானால் இதினின்றும் தப்பித்துக்கொள்ளென்று சொல்லி; தேவர்கள் பார்த்துப் பிரமிக்கவும் வானரர்கள் பயந்தோடவும் இலக்ஷ்மணர்மீது பிரயோகித்தான். அது பார்த்த பார்த்த திசைகளிலெல்லாம் பாம்புகளையுடைய பெய்கிற மேகத்திற்கொப்பாக அக்கினியைப்பொழிந்துகொண்டு வருகிறதை இளையபெருமாள் பார்த்து, அதற்குத்தக்க தின்னதென்றுதெரிந்து ஒரு சௌராஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகஞ்செய்து, அந்த சகஸ்திரமுகாஸ்திரத்தை அறுத்துக் கீழேவீழ்த்தினார். அப்போது அஃதிரண்டாயிரம் துண்டுகளாக விழுந்துவிட்டது. கும்பகர்ணன் உடனே பன்னிரண்டு பாணங்களைத் திருமேனியிலழுந்தும்படி அநுமான்மீதும், வேறே இரண்டுபாணங்களை இளையபெருமாள்மீதும் பிரயோகித்து, பின்னுந் தானும் ஐம்பதுமாசத் தொகுத்து ஒருக்ஷணநேரத்திற்குள்ளாக வட்டுத்திக்கையும் - ஆகாசத்தையும் - பூமியையும் — பாணமயமாய் மறைத்துவிட்டான்.

### இலக்ஷ்மணர் கும்பகருண னிரதத்தையழித்து அவனைப் பாதசாரியாக்கல்.

கவி.

மறைத்தவாளிகளைவற்றையு மவற்றினும் மாற்றித்
துறைத்தலந்தொறுந் தலந்தொறு நின்றதேர்சமக்கும்

பொறைக்கமைந்தவெங் கரிபரியாளிமாப்பூதம்
திறத்திறம்படத்துணித்தவன் றேரையுஞ்சிதைத்தான்.

இவ்வண்ணம் பூமியாகாசங்க ளெல்லாவற்றையும்மறைத்த கும்பகருணனுடைய பாணங்களை இலக்ஷுமணப்பெருமான் தனதம்புகளா லழித்து, அவ்வத்துறைகடோறு நிலைபெற்றுநின்று இரதத்தையிழுக்கும்படிப் பூட்டியிருக்கின்ற கொடுமை மிகுந்த யானைகள் குதிரைகள் யாளையாளிகள் சிங்கங்கள் பூதங்களாகிய இவைகளைக் கண்டங் கண்டமாகப் பாணங்களாற் றுணித்து, அவ்விரதத்தின் அச்சு - பச்சு - குத்துக்கால் - கொடுங்கை - விட்டம்-தூண் - நாகவட்டம் - இருசு - வட்டை - இலை - குடம் - குடை - கொடி-மணி - சிகரம்-இவ்விதமாகிய பலவகையுறுப்புக்களையும் சின்னபின்னஞ் செய்துவிட்டனர். அந்தத்தேரைச் செலுத்திக் கொண்டுவந்த சாரதிகளுமொழிந்தார்கள். நீர்கொண்ட மேகக்கூட்டத்தி னிடத்திலுள்ள பெரிய வானவில்லானது அழிவுற்றதுபோலக் கும்பகர்ணன்கையிற் பிடித்திருந்த நெடியவில்லும் இரண்டுதுண்டாய் முறிந்துவிழுந்தது. இப்படி ஏறியிருந்த தேரழிந்து, பிடித்த வில்லு முறிந்து, கருங்கடலானது பொங்கி வந்ததுபோலத் தோற்றுகின்ற கும்பகர்ணன் பூமியிற் பாதசாரியாய்நின்று, இந்தலட்சுமணனுடைய உயிரை இதோ பானம்பண்ணுகின்றே னென்று புறப்பட்டு, ஈனிந்த மூன்றுலோகத்தையும் ஜெயித்ததற்கு அடையாளமான விருதாக மூன்றலைகுடனே தன் கையிற் பிடித்திருக்கின்றதும் யமனுக்குநிகரானதுமான சூலாயுதத்தை யெடுத்தான்.

அப்போது தேவர்களெல்லாம் இளையபெருமான்செய்த யுத்தவேடிக்கையைப் பார்த்து, இவர் அஸ்திரங்களை பெருக்குத் தொடுத்துப் பிரயோகிக்கின்ற கரவேகத்தை அறிந்துகொள்ளக்கூடாமையால் இந்தத்தேரிற் பூட்டியிருந்த பிடரிமயிரினையுடைய கொடிய சிங்கமுதலாகிய கூட்டங்களை அஸ்திரப்பிரயோகஞ்செய்து கொன்றாரோ? அல்லது உயர்ந்த மந்திரோச்சாடனஞ் செய்து சமித்துக்கொன்றாரோ? என்று மனக்களிப்போடு ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தத் தருணத்திற் பூமிபிளக்கும்படியாகப் புறப்பட்டுப் பிரளயகாலவெள்ளம்போலத் தோன்றுகின்ற கும்பகர்ணன் தேரில்லாமற் கீழேபாதசாரியாய்நிற்க, நாம் வாகனத்தின்மீதிருந்து சண்டைசெய்கிறது வீரலக்ஷணத்திற்குப் பங்கமாகுமென்று இளையபெருமான் ஆஞ்சநேயருடைய விசாலமாகிய திருத்தோள்களைவிட்டுத் தழும் கீழேகுதித்துப்போய் கும்பகர்ணனோடு எதிர்த்து நின்றார். இந்தவிரண்டுபேருமிப்படி எதிர்த்துநிற்கிற தருணத்திற் கும்பகர்ணனுக்குத் துணையாக இராவணனா லனுப்பப்பட்ட சேனைகள் முன்னழிந்த சேனைகளினு மிகுமடங்கதிகமாய்ச் சமுத்திரத்தைப்போலக் கோஷித்துக்கொண்டுவந்து, சுமித்திராதேவியின் புத்திரனென்னும் இளஞ்சிங்கமாகிய இளையபெருமானைச் சுற்றிக்கொண்டு கர்ச்சித்தன.

அதைக்கண்ட தேவர்களெல்லாம் திப்பிரமைகொண்டு ஓட்டம்பிடித்தார்கள். இளையபெருமான் கும்பகர்ணனைவிட்டு அவர்கள் பக்கமாய்த் திரும்பி,



அந்த ராக்ஷசசேனைகளெல்லாம் ஏககாலத்தில் தம்மீது பிரயோகித்த ஆயுதங்களை அதிக சாதுரிய சக்தியினால் துண்டு துண்டாய் அறுத்தெறிந்து, மிகுந்த கோபத்துடன் அவர்களை யெல்லா மொருபக்கமாகச் செல்லவிட்டு, கருங்கடல்போன்ற அந்த ராக்ஷச சேனைகளுக்குள்ளே நுழைந்து, கொடிய கண்களைப்பெற்ற அவர்களுடைய அன்றலர்ந்த முருக்கம் பூவையொத்த செம்பட்டமயிர்த் தலைகளையறுத்து மலைமலையாகக் குவித்து, அலைகட்டிச் செம்பையுருக்கினாற்போலொத்த ரத்தவெள்ளங்களோடவும் அந்தப் பிரவாகத்தினால் அத்தலைகள் கடலிற்போய் விழும்படியாகவும் செய்தார். யானைகளுடைய துதிக்கைகளும் - குதிரைகளின் கால்களும் - காற்றைப்போலோடுகின்ற தேர்களின் சக்கரங்களும்-இராக்ஷசர்களுடைய தலைகளும் அறுந்து, அவர்கள் தேகத்தி லொழுகுகின்ற ரத்தவெள்ளமானது ரணக்களமுழுதினும் சுழியிட்டுக்கொண்டோடி, அவ்விராக்ஷசர்களுடைய பிணக்குன்றுகள் நான்கு பக்கங்களிலும் தடுக்கின்றபடியால் அவைகளைத் தாண்டிப்போகிறதற்குக் கூடாமல் தேங்கி நின்றுவிட்டது.

இராக்ஷசர்களுக்கு வெற்றியை யுண்டாக்குகிற வாளாயுதம் - எழுவாயுதம் - தண்டாயுதம் - வேலாயுதம் - மழுவாயுதம் - வச்சிராயுதம் - இவைமுதலிய இன்னம் அநேகவாயுதங்களை இலட்சுமணரெய்த பாணங்கள் ரணக்களமுழுவதும் சுற்றிச்சுற்றி யோடித் துண்டிக்கிறபடியினால், அவைகள் கூட்டங்கூட்டமாய் முறிந்து துண்டுதுண்டுகளாய்க் கீழே விழுந்துவிட்டன. இராக்ஷசர்கள் பூண்டிருந்த குண்டலங்களும் - கிரீடங்களும் - ரத்நாரங்களும் - புஷ்பமாலைகளும் - வீரத்தண்டைகளும் - தோள்வளைகளும் - கைக்கடகங்களும் - ஆகிய விலைமுதலிய ஆபரணங்களை யெல்லாம் அவைகளை அணிந்திருந்த அவயவங்களுடனே கண்டதுண்டங்களாகும்படிப் பாணங்கள் சேதித்துவிட்டபடியால், அவை பூமியில்விழுந்து சூரியமண்டலத்துக் கெதிர்த்தட்டாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவ்விராக்ஷசர்களுடைய விசாலமாகிய வீரதுவசங்களையும், சாமரைகளையும்; நீண்ட விருதுக்கொடிகளையும், அம்புபூட்டியெய்யும் விற்களையும், கேடகங்களையும், மயிற்பிச்சங்களையும், இளையபெருமானுடைய பாணங்கள் வாரிக்கொண்டு போயின. இரத்தவெள்ளமாகிய ஆறுகளிற் பேய்க்கூட்டங்கள் வரிசைவரிசையாய் நீந்திக்கொண்டுவந்து, கரைகளிற் கும்பற்கும்பலாய் நின்றிருந்தன.

## கும்பகருணனைச் சுக்கிரீவ னெதிர்த்துநிற்க, இவர்மே லவன்விட்ட சூலப்படையை அனுமார் முறித்தெறிதல்.

கவி.

சண்டவெஞ்செரு விளையனிகழ்வுழி பெயர்க்கும்
நீண்டவெள்ளயிற் றரக்கன்மற் றொருதிசைநின்றான்
பூண்டவெஞ்செரு விரவிகான்றுலையொடும் பொருதான்
ஈண்டகும்மென விமையவர்குழாக்கொண்டு கண்டார்.

இவ்வண்ணம் இராவணனுலனுப்பப்பட்ட நாலுகன்னுளாகிய இராக்ஷசர்களையும், அவர்களுற ரதம் கஜம் துரகம் பதாதி என்கின்ற நால்வகைச் சைனியங்களையும் அப்படைத் துணையாகின்ற அணித்தலைவர்கள் படைத்தலைவர்கள் யூகத்தலைவராதியவர்களையும் இலட்சுமணர் அறுத்துத்தள்ளியானமும்கண்டு நடுங்கும்படியாகக் கடும்போர் நடத்துஞ்சமயத்தில், அங்குள்ள விராட்சசர்களுடைய கோரதந்தங்களுக் கெல்லாம் நீளமாகியும் வெண்மையாகியுமுள்ள வக்கிரதந்தங்களையுடைய கும்பகருணனென்பவன் ஓர் புறமிருந்து, சூரியபகவான் குமாரனாகிய சுக்கிரீவமகாராஜனோடுங்கொடியவஞ்சக மிகுந்த யுத்தஞ்செய்தான். அவ்யுத்தத்தை இமையாநாட்டம்பெற்றவர்களாகிய தேவர்கள் கனவிலுமில்லின்று, ஆ ஆ! இவ்யுத்தத்தின் பிரபாவத்தைப் போல் நாமெங்கும் பார்த்ததில்லையே யென்றும், அதெப்படி முடிகிறது பார்க்கவேண்டுமென்று கூட்டமாகநின்று பார்த்துக்கொண்டு நின்றார்கள். சஹஸ்திர கிரணங்களையுடைய சூரியபுத்திரனான சுக்கிரீவமகாராஜன் தீப்பொறி பறக்கின்ற கண்களையுடையவராகவும் - புகையெழும்புகின்றவாயையுடையவராகவும் – மிகுந்த கோபமுற்று, ஆகாசத்தையளாவிய ஒரு பெரியமலையைப்பார்த்து, இத்தோடே கும்பகர்ணனுடைய பலம்பொருந்திய தோள்கள் அற்றுப்போய் விட்டனவென்று யாவருநினைக்கும்படியாக விசியெறிந்தார். அப்படி யெறிந்தபோது அந்தமலையிலிருந்து பூமியிலிறங்கிவந்த செம்பொன்மலைபோ லிருக்கின்ற மதத்தயானைகளும், இராக்ஷசசேனையின்கண் யுத்தப்பழக்கமுள்ள யானைகளும், ஒன்றோடொன்று சண்டைசெய்தன. அந்தப்பெரியமலையிலிருந்து புறப்பட்ட மலைப்பாம்புகள் இராக்ஷசர்களுடைய கூட்டங்கள் சிதறுண்டு நடுங்கும்படி அவர்களைக் கவ்விப்பிடித்தன.

இப்படி சுக்கிரீவமகாராஜன் யானைகளும் பெரும்பாம்புகளும் வசித்திருந்த ஒரு பெரியமலையையே யெடுத்தெறிவாரானால், இவரால் பெயர்த்தெறியக்கூடாத ஒரு பெரியமலையும் உலகத்திலுண்டோ? இப்படிப்பட்ட பராக்கிரமமும் சௌரியமுமுள்ளவராற் பறித்தெறிந்த மிகவும் பெரியதாயுயர்ந்த மலையைக் கும்பகர்ணன் தனதுள்ளங்கையினுற் பந்தைப்பிடிக்கிறதுபோலப் பிடித்தான். அப்போது ராக்ஷசவீரர்களெல்லாம் அந்தக் கும்பகர்ணனை வாழ்த்தினார்கள். அவனந்த மலையை ஒருகையினுற் பிடித்துத் தனது மிகுந்த பலத்தினுல் தூளாய்ப் போகும்படிப் பிசைந்து, ஓ குரங்கே! நீ மிகுந்த பலங்கொண்டு பேர்த்தெடுத்தெறிந்த மலையை நீயே யெடுத்துக்கொள்ளென்று சுக்கிரீவமகாராஜனுக் கெதிராகவே காற்றில் தூற்றினான். அவனுடைய பலத்தைக்கண்டு தேவர்கள் திடுக்கிட்டு நடுங்கினார்கள். சுக்கிரீவராஜன் இன்னுமொரு பெரியமலையைத் தேடிக்கொண்டு வருவோமென்று நினைத்துக்கொண் டிருக்கின்ற சமயத்திற் கும்பகர்ணன் அதிகசந்தோஷத்துடனே நிறைவான தவசிரேஷ்டர்களுடைய சத்தியவாக்கைப்போலத் தவறிப்போகாத வல்லமையுள்ளதாய்த் தன்கையிற் பிடித்திருந்த சூலாயுதத்தை யெ



டுத்து, அந்தக்குரங்கைக் கொல்லக்கடவாயென்று அபிமந்திரித்து அந்தச் சுக்கிரீவமகாராஜன்பேரில் எறிந்தான்.

கவி.

பட்டனன்பட்டன னென்றுபார்த்தவர்
விட்டிலம்பிடநெடு விசும்பிற்சேறலும்
எட்டினனதுபிடித் திறுத்துநீக்கினான்
ஒட்டிமோமாருதி யறத்தையோம்புவான்.

அந்தச் சூலாயுதமானது எட்டுத்திக்கிலும் புகைபரப்பிச் சீறிக்கொண்டு வருகிறதைக் கண்டவர்களெல்லாம், ஐயோ! இன்றைக்குச் சுக்கிரீவராஜன் இறந்து போனார்: இறந்துபோனார்: என்று பெருங்கூரலிட்டழுது புலம்புகிறதைத் தருமபரிபாலகரான ஆஞ்சநேயர்கேட்டு அதைச் சும்மாப்போகவிடுவேரா? குதியென்றுபாய்ந்து ஆகாசமார்க்கமாய்ப் போகின்ற அந்தச்சூலாயுதத்தை யெட்டிப்பிடித்து இரண்டுதுண்டாக முறித்தெறிந்துவிட்டார். அப்படிமுறித்த சூலத்தின் ஓசையானது சீதாபிராட்டியாருடைய திருமணக்காலத்தில் தமது திருவடியைப்பற்றிச் சகலசேதனர்களையும் நித்தியவிபூதியாகிய பரமபதத்தையடையும்படிச் செய்கிறவரான சாக்ஷாத் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் ஸ்ரீசாம்பசிவ மூர்த்தியினுடைய வில்லை யொடித்தபோதுண்டான பெரிய வோசையைப்போலச் சுவர்க்கமத்திய பாதலமெல்லாம் செவிபெடும்படியாக ஒலித்தது.

கும்பகர்ணன் அந்த ஆஞ்சநேயருடைய வல்லமையைக் கண்முன்னுகப் பார்த்து, ஆஹா! சபாஷ்! உன்னுடைய வல்லமை நினைக்கவும் சொல்லவும் அடங்கினதல்ல. ஒருவராலு முடியாத காரியத்தை முடிக்கவல்லவன். எல்லா லோகங்களிலும் பார்த்தால் நீ ஒருவன்தா னிருக்கின்றாய். இப்போது நீ செய்த இந்தச் செய்கையினாலே உனக்குச் சமானம் ஆரிருக்கின்றார்கள். என்னுடன் யுத்தஞ்செய்ய விருப்பமுண்டானால் நீ யெப்படிச் சொல்லுகிறாயோ அப்படிப்பட்ட யுத்தத்தைச் செய்கிறேன். சண்டைசெய்யவாவென்று கும்பகர்ணன் கூப்பிட்டபோது அவனைக்கண்டு நகைத்து, முன்னால் இனியுன்னோடு சண்டைசெய்கிறதில்லையென்று சபதஞ்செய்துவிட்டு இப்போது சண்டைக்கு வருகிறேனென்று சொல்லுவது அசத்தியமாகுமல்லவா? ஆகையால், அப்படிச் செய்யத்தகாதென்று சத்தியவந்தரான அனுமார் சொல்லிவிட்டுத் திரும்பிப்போய் விட்டார்.

## சுக்கிரீவராஜன் கும்பகருணனோடு மற்போர்புரிந்து மூர்ச்சிக்கவும், இவனவரை இலங்கைக்குக்கொண்டுபோக யத்தனித்தல்.

கவி.

அற்றதுகாலயி னரக்கனுயுதம்
பெற்றிலன்பெயர்ந்தில னிலையபெற்றியில்

பற்றினன்பாய்ந்தெதிர் பருதிசான்முனே
எற்றினன்குத்தின னெரியுங்கைகளால்.

இவ்வண்ணம் ஆஞ்சநேயருடைய பராக்கிரமத்தால் சூலாயுதமானது ஒடிந்துபோனகாலையில் கும்பகருணனானவன் யாதோராயுதத்தையுந் தொடாதவனாகி, நமது குலமேமுழுதும்போக இனி எவ்வாயுதத்தா லிவர்களை வெல்லப்போகிறேமென்றேங்கி நிற்கையில் சூரியபகவான்புத்திரனாகிய சுக்கிரீவன் கும்பகருணன்மேல் ஒரேபாய்ச்சலாகப்பாய்ந்து அவன்தோளிலும் மார்பிலும் முதுகிலும், தனதுகைகளால் ஓங்கியோங்கி ஓர்பெரிய மலையின்மேல் கோடைகாலத் திடிவிழுவதுபோற் குத்தினர். அக்குத்தையேற்றுக்கொண்ட கும்பகர்ணன் நீ நல்ல வீரன்தான். ஆயினு மின்றையோடு உன்னுடைய கர்வமெல்லா மொடுங்கிப்போகப் போகிறது. என்று உலையிலுருக்கின செம்பைப்போலச் செவந்த கண்களையுடையவனாய்க் கோபங்கொண்டு, சுக்கிரீவமகாராஜனை நெருக்கிப்பிடித்து, அவரைத் தப்பிப்போகாதபடி கட்டித் தன்மார்புடனே சேர்த்து நெருக்கினான். அக்காற் சுக்கிரீவமகாராஜன் அவன்கையை விடுவித்துக்கொள்ள, பின்பு ஒருவரையொருவர் பற்றுவதற்காக இடம்வலமாய்ச் சுழலுகிறவென்று சாரிகைசுற்றினார்கள். இப்படி சுற்றுகிற வேகத்தினால் இவ்விருவரையு மின்னாரின்னாரென்று தேவர்களும் காணமாட்டாமற் போனார்கள்.

இந்தப் பிரகாரமாக வெகுநேரம் ஒருவர்கைக் கொருவ ரகப்படாமல் தப்பித்திரிந்து, பின்பு ஒருவரையொருவர் நெருக்கிப் புஜங்களால் தாக்கியும் கைகளாற் குத்தியும், கால்களா லுதைத்தும், தலைகளால் மோதியும், முஷ்டியா லிடித்தும், அநேக வகையான யுத்தங்களைச் செய்து, கண்களிற் புகையெழும்பித் திகுதிகென்று நெருப்புப்பற்றி யெரியும்போது அந்தத்தீயால் இடிகளுந்தீய்ந்துபோய்விட்டன. இப்படிச் சற்றுநேரமாவது ஒருவரையொருவர் விட்டு நீங்கிச் சோர்ந்துநிற்காமற் கண்களில் ரத்தந்தெறிக்கும்படி ஒருவர்மீ தொருவர்சீறி, ஒருவரையொருவர்பற்றி முறைமுறையாய் மல்யுத்தஞ்செய்தார்கள். அப்போது கும்பகர்ணன் சுக்கிரீவமகாராஜனைச் சகிக்கக்கூடாத விதமாய்த் தனதுநீண்டகைகளினால் கட்டியிறுக்கினான். அக்காற் சுக்கிரீவராஜன் மயங்கி மனஞ்சோர்ந்து மூர்ச்சையடைந்தார்.

கவி.

மண்டமரின்றொரு மடக்குமன்னிலாத்
தண்டலில்பெருப்படை சிந்துந்தக்கதோர்
எண்டருசுருமத் தீதணிவில்லெனக்
கொண்டனன்போயின னிருதர்கோனகர்.

அத்தருணத்திற் கும்பகர்ணன் இன்றையோடு சண்டைமுடிந்துபோக வேண்டுமானால் இந்த வானர சேனையைச் சிதறடிக்கத்தக்க உபாயந்தேடவேண்டும். அதற்கிந்தக் குரங்கைக் கொண்டு போய்விடுவதினும் வே



றேநுபாயமில்லையென்று சுக்கிரீவராஜனை மார்பிலணைத்துக்கொண்டு இலங்கையை நோக்கிப் போகத்தொடங்கினான். அப்போது வானரக்கூட்டங்களெல்லாம் வேடன் தாயை வருத்தப்படுத்திப் பிடித்துக்கொண்டு போகும்போது குஞ்சுகளலறிக் கூக்குரலிடுவதுபோலமனங்கலங்கி, கையோடுகையையறைந்துகொண்டும் - பெருமூச்சுவிட்டுக்கொண்டும் - ஓவென்றழுதார்கள். இராக்ஷதர்களெல்லாம் தங்களுக்குச் செயமுண்டாயிற்றென்று பெருங்கோஷமிட்டார்கள். தேவர்களெல்லாம் நாவுலர்ந்து நெஞ்சந்திடுக்கிட்டார்கள். அக்கால் வானரவீரர்களெல்லா மனமுருகி, ஐயோ! நம்முடைய ராஜா மூர்ச்சித்துக் கண்களை மூடிக்கொண்டதோடு தோள்வலியிழந்து உயிருமடங்கி விட்டாரோ? என்கின்ற அங்கலாய்ப்புடையவர்களானார்கள்.

அப்போது கும்பகர்ணன் விசாலமாகிய ஆகாசத்திலிடமாய் வருகின்ற இராகுவென்னும் கரும்பாம்பைப்போலவும், சூரியகுமாரனென்று சொல்லப்படுகின்ற சுக்கிரீவமகாராஜன் அந்தக் கரும்பாம்பினால் விழுங்கப்பட்டு ஒளிமழுங்கிய சந்திரனைப்போலவும் தோன்றினார்கள். மேலும் அந்தச் சுக்கிரீவமகாராஜன் கும்பகர்ணனுடைய கருநிறவுடலுக்குள் மறைந்து கொஞ்சம் பிரகாசித்தும், மற்றப்பாகமறைந்தும், மேகத்துக்குள் மறைந்து காணப்படுகின்ற சந்திரனுக்கொப்பாக வேயிருந்தார். அவரைப்பின்தொடர்ந்து செல்கின்ற வானரவீரர்களிற் கருங்கடலைத் தாண்டிய நீண்ட திருவடிகளையுடைய ஆஞ்சநேயர் உன்னோடுநான் எதிர்த்துச் சண்டைசெய்வதில்லையென்று முன்னால் அந்தக்கும்பகர்ணனோடு நாம் சபதஞ்செய்ததை நினைத்து அவனை எதிர்க்கக்கூடாமல், ஐயோ! இனி என்னசெய்யப்போகிறோம்? என்று தமது கையைப் பிசைந்துகொண்டு கும்பகர்ணன் பிறகே போயினர்.

### ஸ்ரீராமர் கும்பகருணனை இலங்கைக்குப்போகவிடாமற் போர்க்கூடிட்டு அவனெற்றியைப்பிளக்க, அதனாலவன் மூர்ச்சிக்கச் சுக்கிரீவ னவன் மூக்கையுங் காதையு மறுத்துக்கொண்டு வானரசேனையிற் கலத்தல்.

கவி.

ஆயிரம்பெயரவ னடியில்வீழ்ந்தனர்
நாயகரெமக்கினி யாவர்நாட்டினில்
காய்கதிர்ச்சிறுவனைப் பிணித்தகையினன்
போயினனரக்கனென் றிசைத்தபூசலார்.

உடைப்பெருந்துணைவனை யுயிர்கொண்டுபோய்க்
கிடைப்பருங்கொடிக ணடையிற்கேடெனத்
தொடைப்பரும்பகழியின் மாரிதூர்த்தற
அடைப்பனென்றடைத்தனன் விசும்பினுறெலாம்.

அச்சமயத்தில் அநேகவானரகூட்டங்கள் ஐயோ! ஐயோ! இனிநாம் யாது செய்யப்போகின்றோம் நாம் அரசனையிழந்தோமேயென்று கோவென்றலறிட்டு அநேகதிருநாமங்களையுடைய சக்கரவர்த்தித்திருமகனாரது செவ்

திருவடிகளில்விழுந்து சுவாமி! எங்களுக்கரசனும் சூரியகுமாரனுமாகிய சுக்கிரீவமகாராஜனைப் பயிபாவியாகிய கும்பகருணன் தன் கையினாற் சேர்த்துக் கட்டிக் ககனவழியாய்த் தூக்கிக்கொண்டுபோகிறானே; நாங்களரசனையிழந்தோம். இழந்தோம். இனியோசிக்கில் எங்களைக்காப்பாற்று மரசாரென்று கூச்சலிட்டுச்சொன்னார்கள். இந்தவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் ஸ்ரீராமர் வடவாமுகாக்கினியிலுமிகுந்த செவப்பான கண்களையுடையவராகி, உலகங்களையெல்லாம் சுட்டெரிக்கத்தக்க அஸ்திரங்களையும் வில்லையுங்கையிலெடுத்துக்கொண்டு, ஒருகணநேரத்திற்குள்ளாக இலங்கைக்கோட்டை வாயிலில்வந்துசேர்ந்து, ஒருவராலும் நீக்குதற்கரிய சிநேகனாகிய சுக்கிரீவமகாராஜனை மனதுயிரைக் கிரகித்துக்கொண்டு போகிறதுபோல கொடிகள்கட்டிய அலங்காரங்களமிருந்த இந்தலங்கைக்குள் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால், வெருகெடுதியுண்டாய்விடுமென்றெண்ணி அஸ்திரவருஷம்பொழிந்து சரக்கூடங்கட்டி, எல்லாவழிகளையும் அடைத்துவிட்டு ஆகாசமார்க்கத்தையும் பாணப்பந்தலிட்டு மூடிவிட்டார்.

அப்போது பாணங்களினால் அஷ்டதிக்குகளு மறைந்தன. பிரகாசிக்கின்ற சூரியகிரணசோதியும் பூமியிற்பிரகாசியாமற்போயது. ஆகாசமுழுவதையு மேகங்கள் மறைத்ததுபோலப் பாணப்பந்தல் மறைத்ததனால் கிரகநக்ஷத்திரங்களு நடக்கமாட்டாமல்நின்றுவிட்டன. அக்கால் மனோவேகத்திலு மதிகவேகமாய் ஆகாசமார்க்கத்திற் போகின்ற கும்பகர்ணன் சுற்றிலும் பாணமதிலிட்டிருக்கின்றதனால் தன்வழிபோவதை முடிக்கிறதற்கு முடியாமல் வழிதேடித் திரியும்போது, திருமுகமும் - திருவாயும் - திருக்கண்களும் - திருக்கைகளும் - திருவடிகளுமென்னு மலைமலர்களாகிய தாமரைமலர்க்காடுபூத்து, ஸ்வர்ணமயமான கோதண்ட மென்னும் இந்திரதனுசுடன் மண்டிலமாக மின்னலைவீசிக்கொண்டுவந்த மேகத்துக்கு சமானமாய்ப்பிரகாசிக்கின்ற ஸ்ரீராமமூர்த்தியைக்கண்டு வாயைமடித்துக்கொண்டு, குபுகுபுவென்று புகையெழும்பவும் - இதழ்கள் துடிக்கவும் - புருவங்கள் நெறித்துநிற்கவும் - கண்களில் நெருப்புப்பொறி பறக்கவும் கர்ச்சித்தான். அந்தக் கர்ச்சனையைச் சகிக்கமாட்டாமல் மலைகளெல்லாம் நெக்குவிட்டுப் பேர்ந்தன.

இந்தப்பிரகாரமாகக் கும்பகர்ணன் ஸ்ரீராமரைப் பார்த்து, ஓ சக்கரவர்த்தித்திருமகனே! வனத்திலேதான்வந்து உன்னோடெதிர்த்த மிகவும் துலைராத்தியத்தை யுடையவனாகிய கவந்தனைப் போலவும், சிறுசெடிகளோடும் பூவைப்பறித் தெறியும்படியான வாலியென்னும் பலமில்லாத ஒரு குரங்கைப் போலவும் நான் வலிமிகுந்தவனென் றெண்ணி யென்னுடன் சண்டைசெய்ய வந்தாயோ? அல்லது - இந்தக் குரங்கினுடைய உயிரைக் காக்கவந்தாயோ? சொல்லென்றுகேட்டுப் பின்னுஞ் சொல்லுகின்றான். ஓ ஸ்ரீராமா! நான் உன்தம்பியாகிய இலட்சுமணனைக் கோபிக்கவில்லை. அனுமாருக்குவாகனமாயிருந்து அம்பிபோற் பறந்தவனான அந்தக் குரங்கையும் கோபிக்கவில்லை. அபஜயப்பட்டுப்போன வாலியினுடைய பிள்ளையையும் கோபிக்கவில்லை. நான் யுத்தக்களத்திலேவந்து உன்னுடனே சண்டைசெய்ய நினைத்து, அவர்களுடன் போர்செய்வது நமக்கழகல்லவென்று உன்னை அந்தரணக்கள முழுவதும் தேடினேன். உன் சேனைகளெல்லாம் என்னைக்கண்டு பறந்து ஓடிவிட்டன. உன்தம்பியும் என்னைப்பார்த்து ஒரு பக்கமாயொதுங்கிப்போனான். அனுமானுமென்னோடு யுத்தஞ்செய்ய மாட்டேனென்று போய்விட்டான். இவனொருவன்மாத்திரம் அறிவில்லாமையால் கர்வித்துப் போர்செய்யவந்தான். ஆதலால் - இவனைமாத்திரம் பிசேஷமாயெடுத்துக்கொண்டுவந்துவிட்டேன்.



ஐயா இரகுநந்தனே! இவனைக் காக்கவேண்டுமென்று நீ வந்திருந்தால், உன்னைக் காணும்படியான என்னதிர்ஷ்டமே என்கண்முன்கொண்டுவந்துவிட்டது. ஆதலால் - உன்னுடனே நான் செய்யவேண்டிய யுத்தமாதிரிகளையெல்லாம் செய்து, என்தமயனுக் குண்டாயிருக்கின்ற மோகவிச்சையின் தடையையு மின்று நீக்கி விடுகிறேன். நீ நல்வீரனானால் தேவர்கள் முன்னிலையில் இவ்வற்பக்குரங்கை நான் கட்டியிருக்கிற என்கைப்பிணிப்பை உன் வில்வல்லமையினால் அவிழ்த்துவிடு. அப்படி இவனை விடுவிப்பையேயானால் சீதையும் சிறைவிட்டு வந்தவளாகுமென்று சொன்னான். இப்படி சொன்ன கும்பகர்ணனை ஸ்ரீராமர்பார்த்து நகைத்து, ஓ இராக்ஷதவீரனே! என்னுடைய உயிர்போன்ற துணைவனான சுக்கிரீவனைப் பிணித்துக்கொண் டிருக்கின்ற உன்னுடைய மலையினுமுயர்ந்த தோள்களை அறுத்துத் தள்ளாவிட்டால், உனக்குநான் தோற்றவனே: இனி வில்லும் பிடிக்கிறதில்லையென்று சொன்னார்.

கவி.

மீட்டவன்கரங்களால் விலங்கலானையே
மூட்டருஞ்சிகுவான் முயலும்வேலையில்
வாட்டலைமிடைந்தலை வயங்குவாளிகள்
சேட்டகனெற்றியி னிரண்டுசேர்த்தினான்.

பிறகு கும்பகர்ணன் அஸ்திரங்களினாலாகிய பலம்பொருந்திய மதிலைக் கடந்து போகும்படி யத்தனப்பட்டான். அப்படி யத்தனப்படவே ஸ்ரீராமர் மழுங்காத கூர்மையுள்ளவைகளான இரண்டு பாணங்களைத் தொடுத்துக் கும்பகர்ணனுடைய விசாலமான நெற்றியைப் பிளந்தார். அப்போது வழிந்த ரத்தவெள்ளமானது அவன்தேகமுழுவதையும் பரவிச் செந்நிறமாய்க் காணப்பட்டது. நெற்றியில் ஸ்ரீராமபாணமானது பிரகாசித்த தெத்தன்மைத்தெனில், கிரணமாலியான சூரியனுதயமாவதற்கு முன்னதாயுதிக்கின்ற அருணோதயத்தி... போலக் கொப்பளிளைப்போலத் தோன்றிற்று. மலையிலருவியாய்ப்பெருகுவதுபோல வெள்ளமான அச் சுக்கிரீவமகாராஜனைத்துக் குபுகுபுவென்று வழிகின்ற இரத்தவெள்ளமானது நமதுசோகநீங்கி, நித்திரையுடைய முகத்தைமூடிக்கொண்ட மாத்திரத்தில், நித்திரை செய் தெழுந்தவரைப்போல உணர்வடைந்து, கும்பகர்ணனுடைய நெற்றியில் அதிகப்பிரகாசத்துடன் ஜொலிக்கின்ற பாணத்தைப்பார்த்து, இதுஸ்ரீராம

பாணமென்று யூகித்திருந்து அஞ்சலித்த கையனாய்ச் சுற்றிப்பார்த்தான். அப்போது ஞானபூரணர்களான பிரம்மேந்திராதியர்களுக்கெல்லாம் காரணபூதராயிருக்கின்ற ஸ்ரீராமமூர்த்தி நிற்கிறதைக்கண்டு யாதுசெய்தனனெனில்.

கவி.

கண்டனனயன் றன்னைக்கண்ணுறாத்
தண்டலின்மனமு மாறுந்தாங்கினன்
விண்டவனாசியுஞ் செவியும்வேரொடு
கொண்டனனெழுந்துபோய்த் தமரைக்கூடினன்.

இவ்வண்ணம் எழுந்த சுக்கிரீவமகாராஜன் உலோகநாயகனாகிய ஸ்ரீராமனைக் கண்டவுடனே இவரிடத்து ராக்ஷசர்களையெல்லாம் கொல்லுகிறேனென்று உறுதிவார்த்தை கூறியயான் அவரேபார்க்க ஒருராக்ஷசனிடத்தில் அகப்பட்டுக்கொண்டேனே என்னை இவர் எவ்வளவாகநினைப்பார் ஆ! ஆ! மிகவும்நன்றாயிருக்கிறது என்பலமென்று தன்னைத்தான் வெறுத்து, நிர்க்காதமானமும் வெட்கமு முடையவனாய் அக்கும்பகருணனினின்று நீங்கி அவனது மூக்கை யுங்காதையும் அடிபோடபறித்துக்கொண்டு குபீரென்றுபாய்ந்து தமதுவானரச்சேனையை வந்தடைந்தார். அப்போது வானரர்களெல்லா மங்களம்பாடினார்கள். சப்தமேகங்களும் கர்ச்சித்தன. அரம்பாஸ்திரிகளும் தேவர்களுடன் ஆரவாரித்தனர்கள். மீன்களால் நிறைந்த சமுத்திரமும், மற்றவன்றுகளும் பிரதித்தொனியுண்டாகும்படி கோஷித்தன. தேவர்களும், தர்மதேவதையும், ஆசீர்வாதஞ் சொல்லிச்சப்தித்தார்கள். மகாகோபியான கும்பகர்ணனுடைய கையிலிருந்து வெளிப்பட்ட சுக்கிரீவராஜன் சந்தோஷத்துடன் வந்து சேரப்பார்த்த ஸ்ரீகோதண்டபாணியாகிய சக்கரவர்த்தித் திருக்குமாரரும், தம்முடைய தேவியாகிய ஜானகிப்பிராட்டியார் இலங்கையின் சிறையிலிருந்து வந்துவிட்டாற்போல ஆனந்தித்தார். ஸ்ரீராமபாணமானது கும்பகர்ணனுடைய நெற்றியைப்பிளந்து மார்பினுருவிப் போனபடியால், கும்பகர்ணன் மூர்ச்சையடைந்து சித்திரப் பிரதிமைபோ லிருந்துவிட்டான். அப்போது அவனுடைய செவியையும், மூக்கையும், கையிற்பறித்துக்கொண்டுபோன சுக்கிரீவமகாராஜன் வானரசேனைகளிற்போய்ச் சேர்ந்துகளித்தனர். ஸ்ரீராமபிரானுடைய பெருங்கருணைக் குரியவராயினோரும் ஒருவர்கட்டிய கட்டுக்குள்ளேதானே அடங்கியிருப்பரோ? ஒருக்காலுமிரார்.

## கும்பகர்ணன் கேடயமும் வாளுங்கொண்டு போர்விளைக்க ஸ்ரீராமரவற்றைப் பொடிப்படுத்தல்.

கவி.

அக்கணத்தறிவுவந் தனுகவுங்கைசின்
மக்கனங்கவியார் சென்றுறுண்மையும்
மிக்குயர்நாசியுஞ் செவியும்வேறிடம்
புக்கதுமுணர்ந்தன னுதிரப்போர்வையான்



இப்படி சுக்கிரீவமகாராஜன் தன்கைக்குள் தப்பித்தோடிப்போனவுடனே கும்பகர்ணன் மூர்ச்சைதெளிந்து, தன்கையிலிருந்த வானராதிபதி போய்விட்டானென்கிறதையும்-தன்னுடைய பெரியமலையை யொத்த மூக்குஞ்செவியுமறுந்து வெட்டவெளியாய் வெளிச்சென்றிருக்கிறதையும், செவந்தபதுமராகமலையின்மேல் மழைபெய்யும்போது தாரைதாரையாக ஜலம்வருவதைப்போல நாசிகளினும் சலங்கொத்தக்கொண் டருவிபாய்வதுபோல் தேகமெல்லாம் இரத்தமொழுகுவதையும்பார்த்து இவ்வளவென்று அளவு செய்யப்படாத அக்கிரமங்களைச் செய்தவனாய்த் தான் சண்டைக்குவந்து எல்லாவித்தைகளும் பொதிந்தவனையே யடைந்ததிறல் மனதாபிகளுக்கொத்து, மூக்குங்காதும் புண்பட்டு அப்படி ரத்தநீர் சொரிகின்றனவோ? அப்படியே ரத்தநீரைப்பொழிகின்ற குழிகண்களால் தன்னைப் பரிகாசஞ்செய்துபோகின்ற தேவர்கள்முகத்தைப் பார்ப்பான், அறுந்துபோன தன்னுடைய மூக்கையும் செவியையும் தடவிப்பார்ப்பான். தனக்கு முன்னழிந்துபோன நாள்களிலுண்டான ஜெயங்களையும் இந்நாளிலுண்டான அபஜெயத்தையும் நினைப்பான். பிறகு பூமியைப்பார்த்துச் சற்றுநேரம் ஆலோசித்து, சீ! சீ! நமக்கென்ன இப்படிப்பட்ட அவமானம் வந்ததென்று மனக்கொதிப்படைவான்.

இந்தப்பிரகாரமாகக் கும்பகர்ணன் பெருங்கோபங்கொண்டு, என்முகத்தை நான் கண்ணாடியிற்பார்க்கிறதற்கு முன்னதாக இந்த ஸ்ரீராமனுடைய முகமும்-மூக்கும்-காதும்-இப்படியே அறுப்புண்டிடக்கப்பார்க்கிறேன். இது சத்தியமென்று சபதஞ்செய்துகொண்டு பொன்கட்டிய கேடகத்தை இடதுகையிற்பிடித்து, யுத்தத்தில் வெற்றிப்பிரதாபத்தைப் பெறச்செய்வதாகிய வாளாயுதத்தை வலதுகையிலெடுத்தான். ஆயிரம்பேய்கள் சுமந்துகொண்டுவந்து கொடுத்த அந்தக் கேடகத்துடனும் - இரண்டாயிரம்பேய்கள் தாங்கிக்கொண்டுவந்து கொடுத்த சமானமில்லாத வச்சிரவாளாயுதத்துடனும் - பூரப்பட்டு, இடதுகையிலுள்ள அந்தக் கேடகத்தை நிருத்தியஞ்சுற்றினான். அப்போது அதனுடைய காத்திரத்தினாலும், வேகத்தினாலும், ஆகாசத்திலுள்ள நக்ஷத்திரங்களெல்லாம் ஒளிமழுங்கி நிலைதளர்ந்து விட்டன. தேவர்களெல்லாரும் குடல்குழம்பிப் போனார்கள். அக்கும்பகர்ணன் கோபித்தபோது அவனுடைய நாசியினின்றும் செவியினின்றும் இரத்தங்கள் தாரைதாரையாய்க் குபுகுபுவென்று வடிந்தன.

பின்பு வாளாயுதத்தை ஒருகைக்குக் குலுக்கிக் கிறுகிறென்று சுழற்றினான். அதனால் நக்ஷத்திரங்களெல்லாம் பளபளவென்று பூமியில் உதிர்ந்து விழுவனபோலக் காணப்பட்டன. இப்பால் ஆயிரங்கிரணங்களோடுங் கூடிய சூரியன் சூழ்ந்து வருகின்ற மேருமலைக்குச் சமானமான அந்தக் கும்பகர்ணன் பூமியும் அதைச் சுமந்துகொண்டிருக்கின்ற ஆதிசேஷனுடைய உச்சியும் நடுங்கும்படியாகப் பெருங்கர்ச்சனைசெய்து, தன்கேடகத்தை வீசி யெறிந்தான். அப்படி யெறிந்தபோது அதிலிருந்து புறப்பட்ட காற்றானது

வானரர்களினுடைய பெருங்கூட்டங்களை யொருமிக்கவாரிக் கொண்டுபோய் அஷ்டதிக்குகளிலும் வீசியெறிந்தது. மேலும் — அங்கங்குள்ள பொருள்களெல்லாவற்றையும் வாரிக்கொண்டுபோய் எறிந்ததினால் கடல்களையு மேடு செய்து விட்டோடினது. அப்படி வீசியெறிந்த கேடகத்தை ஆயிரம் திருநாமங்களையுடைய ஸ்ரீராமர் பார்த்துக்கொண்டே யிருந்தார். அவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே கும்பகருணன் அவருக்குத் தெரியாமற் கேடகமெக்கேயென்று கைநீட்டினான்.

இப்படியவன் கைநீட்டிக் கேட்கிறதற்குள் ஒருக்ஷணநேரத்தில் இரண்டாயிரம் பேய்களாற் சுமந்து கொண்டுவந்துகொடுத்த வேறொரு கேடகத்தைக் கையிற் பிடித்துக்கொண்டான். இந்தக்கேடகத்தின் காற்றினால் வானரப்படைகளையெல்லாம்வாரி யெறியப்பட்டும், காலினால் மிதித்துத்துவைக்கப்பட்டும், பிரகாசம்பொருந்திய வாளாயுதமாகிய கமலத்தால் அறுபட்டும், இன்னும்பல கையாலும் சின்னாபின்னமாய்ச் சண்டமாருதக் காற்றினால் அலைக்கப்பட்ட கடலுக்கொப்பாகச் சிதறுண்டு மாய்ந்துபோய்விட்டன. இந்தப்படி கும்பகர்ணன் மேலிட்டுவந்ததும், அவனுக்கெதிர்ப்பட்ட வானரங்களெல்லா நசுங்கிச் சின்னாபின்னப்பட்டதும், அந்த வானரங்களினுடைய தேகத்தினின்று பெருகுகிற இரத்தவெள்ளங்கள் பூமியிலாறுகவடிந்து ஆதிசேஷனுச்சியிலும் சேறுபட்டதும், ஆகிய இந்தச்செய்கைகளெல்லாம் ஒருக்ஷணநேரத்திற்குள்ளே முடிந்துவிட்டன.

இதைக்கண்ட பிரமனினுடைய அம்சபூதரான சாம்பவர் ஸ்வாமியைப்பார்த்து, ஓ பரமதயாளுவே! இதைக்காட்டிலும் வேறேயொரு இக்கட்டு மினிவரப்போகிறதில்லை. இப்போதிவனை நீர் தடுக்காதிருப்பீராகில் வானரசேனைகளை யெல்லாம்தேவரீரேயொழித்து இராட்சசர்களை யெல்லாம் பலங்கொள்ளும்படிச் செய்தீரென்று ஒருநிந்தையானபெயர் சம்பவிக்கும். இப்படித் தேவரீர் வேடிக்கைபார்த்துக் கொண்டிருக்கலாகாதென்று முடுக்கினர். அப்போது ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி வானரசேனை வழிந்ததையும் — கும்பகர்ணனுடைய அதிவீரியப்பிரதாப வெற்றியையும் — அவன்சக்தியையு நினைத்து, இனிநாம் சும்மாவிருக்கிறது தகாதென்று திருவுளங்கொண்டு, இன்றைக்கு மறைந்துகொண்டிருந்த யமனை இவன் கண்முன்னே நிறுத்தி இவனைக் கொல்லுகிறேனென்று சபதம்பண்ணிக்கொண்டு அந்தக்கும்பகர்ணனுக் கெதிராகவந்து என்னசெய்தனரெனில்.

கவி.

ஆறிரண்டேழுகோ லசனியேறென
ஈறில விசையன விராமனெய்தனன்
பாறுநிறையுற விசும்பிற்பாறிட
மாறிலன் வாளிறு நுனைக்குச்சென்றியான்.



தனது கோதண்டத்தை வளைத்து நாணேற்றி, இவ்வுலகங்களை யெல்லாம் நினைக்குமுன் தகிக்கின்ற பதின்மூன்று பாணங்களை இடியேற்றைப் போல் மகாவேகத்துடனே எமதுகர்த்தாவாகிய பரந்தாமனென்னும் ஸ்ரீராமபிரான் பிரயோகித்தனர். பிரயோகித்த பாணங்களை யுத்தசாஸ்திரத்திலுள்ள நுட்பமான விஷயங்களை யெல்லாங் கற்றுணர்ந்த நிபுணனாகிய கும்பகர்ணனானவன் — பருந்தென்னும் பறவையினது உடலினின்றும் உதிர்கின்ற சிறகுகளைப்போல் தனது வாளாயுதத்தினால் வெட்டித்தள்ளினான். புருஷோத்தமரான ஸ்ரீராமபத்திரர் பின்னும் கோடைகாலச் சூரியனைப்போல அதிகூர்மையான பாணங்களை அவன்மீது பிரயோகித்தார். அவைகளையும் தன் கைக்கேடகத்தினாலேயே சிந்திச்சிதறிப் போகும்படித் தட்டிவிட்டான். அப்போது தசரதகுமாரனான ஸ்ரீரகுநந்தனர் புன்சிரிப்புகொண்டு வேறேயொரு அஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணினார். அதுகருடாகவானைப்போல வந்து, கும்பகர்ணன் கையில் வெகுகொடுமையுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற அதிபலமுள்ள வாளாயுதமாகிய சர்ப்பத்தைத் துண்டு துண்டாய்ப் பொடித்தெறித்துவிட்டது. அதுகண்ட தேவர்களெல்லாம் சந்தோஷகோஷமிட்டார்கள்.

அந்தவாளாயுத முறிந்தும் உடனே முடியவில்லையென்று நினைக்கும்படி வேறோர் வாளாயுதத்தை அதிவேகமா யெடுத்துக்கொண்டு, எல்லாரையு முடித்துவிட்டேன்; முடித்துவிட்டேன்; என்று சொல்லிக்கொண்டும் — வடவாமுகாக்கினியும் அஞ்சும்படியாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டும் - ஸ்ரீராமருக்கு முன்பாகவந்து நின்றான்.

கவி.

அக்கொடுவாளையுந் துணித்தண்டகை
பொன்னெடுங்கேடகம் பொடிப்போர்த்தரோ
கன்னெடுங்கவசத்து காயமெங்கணே
மின்னெனுங்கர்ப்பன பலவும்வீசினன்.

புருஷசிம்மமாகிய ஸ்ரீராமபிரானானவர் அந்த வாளாயுதத்தையும் துணித்து, பொன்மயமான கேடகத்தையு மழித்து, அவன்மார்பி லணிந்திருக்கின்ற நல்லவலியுள்ள கவசத்தையு மின்னலைப்போல ஒளியைவீசிச் சத்துருக்களாகிய சர்ப்பங்களுக்குப் பயங்கரத்தை யுண்டாக்கத்தக்க கொடியபாணங்களால் அறுத்து நீக்கினார்.

## இராவணன் கும்பகர்ணனுக்குத் துணையாகப் பதினான்குகோடி சேனைகளை யனுப்ப, ஸ்ரீராமரவற்றைக் கணப்போதில்மாய்த்தல்.

கவி.

அந்தரமன்னது நிகழுமவ்வழி
இந்திரன்றமரொடு மிரியலெய்திடச்

சிந்தவுந்தன்னிலை குலைடச்சேனுற
வந்ததுதசமுகன் விடுத்தமாப்படை.

இப்படி ஸ்ரீராமரும் கும்பகர்ணனும் போர்விளைக்கின்ற சமயத்தில் ஆகாசமார்க்கத்திலின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த தேவேந்திரனுடனே தேவர்களெல்லாரும் கொட்டமெடுக்கவும், சமுத்திரமுந் ததும்பித்துத் தன்னிலைகெடவும், இராவணனால் தன்தம்பிக்குதவியாக வனுப்பப்பட்ட ராக்ஷசப்பெருஞ்சேனைகள் வெகுகோடிவந்தன. அப்போது ஸ்ரீராமரும் இந்தக்கும்பகர்ணனைக் கொல்லுவதற்குத் தகுந்த செய்கை இதுவாமென்று ஆலோசித்துக்கொண்டு தமதுவில்லை ஊன்றினின்று, பலதிவினைகள் பரவினகாலத்தில் ஒருநல்வினையானது பெருகிவந்ததுபோல இராக்ஷசசேனைகளுக்கு முன்னே நடந்து இரணக்களத்தில் விளங்கினார். அக்கால் ஸ்ரீராமர் நான்குபக்கங்களிலும் குதிரைப்படைகளும் - தேர்ப்படைகளும் — பதாதிப்படைகளும் — யானைப்படைகளும் — துணையாகவந்து சூழ்ந்ததைக்கண்டு ஆச்சரிய மனத்தினராகி, அடா கும்பகர்ணா! நீங்கள்யாவரும் அழிந்துபோகும்படியாக சீக்கிரமாய் வருங்கடவீர்களென்று கூப்பிட்டார்.

அப்போது நெற்றிப்பட்டத்தையுடைய மதயானைகளும், குதிரைகளும், குதிரைகளாலும் - யானைகளாலும — இழுக்கப்படுகின்ற சக்கரங்கள் பூட்டிய தேர்களு நிறைந்திருக்கின்ற பதினான்குகோடி ராக்ஷசசேனைகளும் போர்செய்யத் தொடங்கின. மகாபிரளயகால சம்ஹாரமூர்த்திக் கொப்பானவரான ஸ்ரீராமரும் அவர்களுக்கெதிராக விளங்கினார். அப்போது கும்பகர்ணன் எமனையும், அவனுக்குரிய காலத்தையும், அதற்குவேண்டிய பாசங்களையும், அவைகளுக்குப் பிறப்பிடமான இராக்ஷசப்படைகளையும் அணிவகுத்துநிறுத்தி; இந்தப் பூலோகத்தவர்களையும் — பாதாளலோகத்தவர்களையும் — சுவர்க்கலோகத் தவர்களையும் — தன்னுனிநுனியிலே தொட்டு நசுக்கிவிடும்படியான மற்றோர்கொடிய சூலாயுதத்தைக் கையிலேந்திச் சுழற்றிக்கொண்டு யுத்தகளத்திலே திரிந்துநின்றான். இப்படி யிவர்கள் யாவரு மூண்டுநிற்கையில் ஸ்ரீராமமூர்த்தி வில்லைவளைத்து நாணேற்றிட்டு அஸ்திரப்பிரயோகம் பண்ணினாரென்பதையும், இல்லையென்பதையும், ஒருவருந்தெரிந்திலர். அத்தரணக்களத்திற் கவந்தங்கள் கூத்தாடின.

அல்லாமலும் — தேவர்கள் மரங்கள் கிடக்கின்றனவோ? மலைகள் கிடக்கின்றனவோ? என்றுபிரமிக்கும்படியாகக் கைகளற்றுக் கிடந்தன. மெய்களற்றுக்கிடந்தன. பாணங்கள் தைத்துக்கொண்டு சிரங்கள் கிடந்தன. இவற்றைமாத்திரம் யாவருங்கண்டார்களே யல்லாமல். அவர்களுயிர்கொண்டு திரிய ஒருவரும் பார்க்கவில்லை. இரணக்கள முழுவதுமேமூடிட்டுக் கிடக்க அவர்கள் கொண்டுவந்த ஆயுதங்களில் இற்றுப்போகா தவைகளையும், முறிந்து மீதியாய்க் கிடவாதவைகளையும், நடுவேமுறிந்து ரணக்கள முழுவதும் தூர்ந்துகிடவா தவைகளையும், அணிக்கப்படா தவைகளையும், நெருப்பையிறைத்



துக்கொண்டு வெறும் சாம்பலாகாதவைகளையும், ஒன்று நூறும் அற்றுப் போகாதவைகளையும் ஒருவருங் காணவில்லை. யானைகளுடைய விசாலமான மத்தகத்திற்பாய்ந்த பாணங்கள் உருவிச்சென்று பாதிதேகத்தைப் பிளந்துகொண்டுபோக, அதனாற் பெருக்கெடுத்துப் பூமியில் வடிந்தோடுகின்ற ரத்தவெள்ளத்திற் குடல்களெல்லாம் சரிந்துவிழும்படியாகத் துதிக்கைகளுடனே இரண்டு தந்தங்களும் அணிபட்டும் — முன்னங்கால்களறுபட்டும் - பூமியில் விழுந்து கிடந்தவைகளையல்லாமல் நடந்து திரிந்த யானைகளையொருவராவது பார்க்கவேயில்லை.

அன்றியும் — மணிகட்டி யொலிக்கின்ற தேர்களில் ஒளிபிறந்தவைகளையும், விருதுக்கொடி யற்றவைகளையும், சூரியகிரணங்களைப்போலப் பிரகாசிக்கின்ற கூர்மையான அம்புகளால் உடல் பிளப்புண்ட அநேகம் குதிரைகள் கட்டினவைகளையும், வரிசைவரிசையாய் அச்சுகளுடன் அற்றுருவாணியற்றவைகளையும், இரணக்களத்தில் சரிந்துகிடக்கிற வெண்மையான கொழுப்பில் வழுக்குண்டு தலைகீழாய் விழுந்து பூமியிலாழ்ந்தவைகளையும் கிடக்கக்கண்டார்களல்லாமல்; அந்தத்தேர்கள் ஸ்ரீராமபாணங்களாற் பிளக்கப்படுமுன்போ தொருவரும் காணவில்லை. வந்த குதிரைகளெல்லாம் அடலொழிந்தவைகளும், வகிர்ந்த கழுத்தற்றவைகளும், அனுமானிக்கிற குளம்புகளற்றவைகளும், கால்களற்றவைகளுமாகக் கூட்டங் கூட்டமாய் மாண்டு பிணமலைகளாய்க் கிடக்கையால் அப்பிணங்களை அமிழ்த்தித்தேங்கிய ரத்தவெள்ளச் சுழிப்புகளில் அகப்பட்டடித்துக்கொண்டு போகின்றவைகளுமாகக் கண்டார்களேயல்லாமல்; இரணக்களத்திற் குதிரைகள் நின்றுதிரியக் கண்டவர்களொருவருமில்லை.

வேதமுதல்வராகிய ஸ்ரீராகவப்பிரானெய்கின்ற அஸ்திரப்பிரயோக வேகத்தின் விசேஷத்தைக் கணிதசாஸ்திரத்தால் [illegible]ப்படுத்தி அளவிட்டுச் சொல்லவேண்டிய தென்னதினாலென்றால்? அந்த ரணக்களத்திற்பட்ட ராக்ஷசர்களென்னப்பட்ட கொடியவர்களை வீரஸ்வர்க்கத்திலும் தேவர்கள் இவ்வளவினரென்று கண்டிலர். ஆயினும் - இந்த ரணக்களத்தில் அவரவர்கள் நாயகன்மார்களைத் தேடிக்கொண்டு வந்த பெண்சாதிமார்களைத்தான் ஒருவாறு கண்டார்கள். அந்தராக்ஷசர்களுடைய மலையினும் பெரிய தேகத்துவியலைக் கூட ஒருவருங் காணவில்லை.

கவி.

பணிப்பட்டாலெனக் கதிர்வாய்ப்பெது பட்டதப்படைபற்றாற்
றுணிப்பட்டாலெனத் துலங்கினரிமையவர் யாவர்க்குந்தொலாதான்
இனிப்பட்டானென வீங்கிசைக்கரு யெங்கினர்வனைத்தோ
தனிப்பட்டானென வன்முகனோக்கியோன் றுணைத்தனன்றனிநாதன்.

பனிக்கூட்டமானது சூரியனுதயமான மாத்திரத்தில் எப்படி அழிந்துபோகுமோ? அதுபோல் ராக்ஷசப்படையெல்லாம் ஸ்ரீராமமூர்த்தியால் மா

ண்டுபோயிற்று. இராக்ஷதர்கள் கோபங்கொண்டார்களென்று பயந்து நடுங்கின தேவர்களெல்லாம், யாவரையும் ஜெயம்பெற்றுக் கர்வித்திருந்த ராவணன் இனிநாசமடைந்து விட்டானென்று நெஞ்சம் பூரித்தார்கள். இராக்ஷசர்களெல்லா மிதைக்கண்டு துக்கமடைந்தார்கள்.

## ஸ்ரீராமர் தனியேநின்ற கும்பகருணனுடைய கருத்தைக் கேட்டறிந்து போர்விளைத்து, அவனிரண்டுதோளையுந் தாளையுந் துணித்தேறிதல்.

கவி.

ஏதியோடெதிர் பெருந்துணையிழந்தனை யெதிரொருதனிநின்றாய்
நீதியோனுடன்பிறந்தனை யாகலினின்னுயிர் நினக்கீவேன்
போதியோபின்றை வருதியோவன்றெனிற் போர்புரிதி யிப்போதே
சாதியோநினக் குறுவதுசொல்லுதி தெரிவுறச்சமைத்தம்மா.

அந்தச்சமயத்தில் இரகுகுலோத்தமனாகிய ஸ்ரீராமபிரானவர் அங்கே. கும்பகர்ணா! நீ உனது வாளாயுதத்தோடு துணையாகவந்த இரதகஜதுரகபதாதிகளாகிய சைனியங்களையும் இழந்து தனிமையாக நின்றுவிட்டபடியாலும், மகாநீதிமானாகிய விபீஷணனுடன் பிறந்தபடியாலும் உனக்குப் பிராணபிக்ஷை கொடுக்கிறேன். இன்றைக்குப்போய் நாளைவருகின்றாயோ? அல்லாவிட்டா லிப்போதே சண்டைசெய்து உன்னுயிரைக் கொடுக்கின்றாயோ? நீ எதை யாலோசித்து முடிவுசெய்திருக்கின்றாய்? உன்னபிப்பிராயத்தைச் சொல்லக்கடவாய். நானுன் தம்பியாகிய விபீஷணனுடைய வாக்கைக்கொண்டு உன்னை யழைப்பித்தும் உன் தமையன்செய்த பாவவினை முடியாதபடியால் உனக்குணர்வுபிறந்து வரவில்லை. நீயமதர்மராஜனியமித்த ஆக்ஞையின்படி நிற்கின்றாய். உன்னுடைய ஆயுள் நாளெல்லாம் உனது நித்திரையிலேயே கழிந்துபோய்விட்டன. இப்போது வருத்தப்பட்டுச்சாகவேண்டியவனாக இருக்கின்றாய். உன்மனதில் தோற்றுவதைச் சொல்லென்று கேட்கக் கும்பகர்ணன் சொல்லுகின்றான்.

ஓ இரகுநந்தனா! நீ சொன்னவைகளெல்லாம் உண்மையே; ஆயினு மற்றக் காரியங்களெல்லா நிற்கட்டும். பெருமையும் - மானமும் - வீரமும் - நீதியும் வழுவில்லாத வெற்றியும் - குலதர்மமுதலாகிய எல்லாக்கிரமங்களையுமுடைய உங்களால், எங்களைவிட்டுவந்த தன்பெரிய செவியு மூக்கு மறுப்புண்ட என் தங்கையாகிய சூர்ப்பநகையைப்போல என்முகத்தைநான்யாருக்குக்காட்டி உயிர்வாழ்ந்திருப்பேன்? எங்களால் தேவர்கள் தங்கள் ஒழுக்கங்கெட்டு ஒளிமழுங்கிப் போனார்கள். அதை நினைக்கும்போதே மனது வருத்தமாயிருக்கின்றது. அவ்வருத்தத்துடனே மகாலட்சுமிக்குச் சமானமுள்ள அழகும் கற்புமமைந்த பிறன்மனைவியாகிய சீதையைச்சிறையில்வைத்து நகாதென்று தடுத்துச்சொல்லிய பெரியோர்வாக்கை இராவணன் கடந்தானேயென்கிற வியாகுலத்தை யெப்போதும் அனுபவிக்கிறநான், என் செவியையு மூக்கையு மிழந்த பிறகும் இலங்கைக்குப்போவேனோ? ஒருக்காலு முடியாது. என் தமையனைக்களிப்பிக்கவும் — என் தங்கையினுடைய மானத்தைக் காப்பாற்றவும் — உங்கள்



கால்களையும் - தலையையும் - என்கை வாளாயுதத்தால் வெட்டி, உங்களுயிரையும் போக்குகிறேனென்று சபதஞ்செய்து வந்திருக்கிறேன்.

அப்படி வந்தநான், தேவர்களெல்லாம் பரியாசஞ்செய்யும்படி இராவணன் முன்பாக என்தங்கையாகிய சூர்ப்பநகை அலறி மோதி விழுந்ததுபோலத் தலையிற் கையைத்தூக்கிவைத்துக்கொண்டு கண்ணீர் இறக்கிநீராய் வடியும்படியாக அழுது கூவிக்கொண்டு விழுவேனோ? நீயோ சுவர்க்க மத்திய பாதாளமென்கிற இந்த மூன்றுலோகங்களுக்கும் தனித்தலைவனென்று பிரமாற் சொல்லப்பட்டிருக்கும். சிந்தையினதென்றாய்த்தக்கருத்துடையசேவகனும் வந்தவனல்லவோ சேவகனென்றும் - அதுவல்லவோ வீரர்களுடைய கடமையென்றும் — நீயேன் ஆலோசிக்கவில்லை? யுத்தகளத்திலே அதிவீரனான உங்கள் தலைகளை வாளினாலறுத்து மீட்டும் ஒட்டவைத்தால் ஒட்டிக்கொள்ளுமோ? யுத்தத்துக்கென்று துணிந்துப் புறப்பட்டுவந்தநான் அந்த உத்தேசத்தை உன் சொல்லாற் கைசோரவிட்டுத் திரும்பிப்போய் விடுவேனோ? வீரர்களுக்குப் பொருத்தமானதைச் சொன்னாயில்லையென்று சொல்லித் தன்வலது கையிலிருந்த சூலத்தை இடதுகையில் மாற்றிக்கொண்டு, அவ்வலதுகையால் எதிரே நின்ற ஒரு மலையைப் பூமியின்றுடனே பிடுங்குவது போலப் பேர்த்தெடுத்து ஆகாசமெல்லாம் நெருப்பாய்ச் சொரியும்படியாகப் பார்த்து யாவரும் ஸ்ரீராமர்மீது பட்டுவிட்டதென்றே சொல்லும்படியாய் வீசியெறிந்தான்.

கவி.

அனையகுன்றெனு மாணியையாவர்க்கு மறிவருந்தனிமேனி
புனையுஞ்செழு துன்னனன்றி புவலன்றொ ராவென்று
நினையுமாத்திரை பொருகைக்கொருகணையி னீமீர்கின்றதெனவே
நினையின்மாத்திரை துணிபட்ட [illegible]ன்முனை சிந்தினான்சரந்தீந்தி.

அவ்வளவிற் கும்பகருணன் [illegible] இடிபோன்றதுபொத்த பருவதத்தை முற்றத்துறந்த முனிவர்களாலும் அறிதற்கரிய பகவானாகிய ஸ்ரீவைகுண்ட நிவாசனாகிய பரமேஸ்வரமூர்த்தியினது திருமேனியிலே விழுந்த விப்பூமியாகிய பர்வதத்திற்கு சரியாகப் பொடிப்படுத்திய சக்கரவர்த்தித்திருமகன் மறுபடியும் அவன்மேல் அஸ்திரப்பிரயோகஞ்செய்ய யத்தனித்தார். அதற்குள்ளாகக் கும்பகர்ணன் இடதுகையிலிருந்த சூலாயுதத்தை வலதுகையிற்பற்றினான். அப்படிப் பற்றுவதற்குள்ளாக சுவாமியானவர் பாணங்களை அடுத்தடுத்துப் பிரயோகித்து, இமைப்பொழுதுக்குள்ளாக அந்தச்சூலாயுதத்தை அவன்கையிலிருக்கும்படியே துண்டுதுண்டாய்விழச் சிதைத்துவிட்டுப் பின்னும் இடியையும் கட்டெரிக்கத்தக்கவைகளும் - அலைகளையுடைய சமுத்திரத்தை வறள உண்டிடத் தக்கவைகளும் - மேருமலையையு மூடுருவிக்கொண்டு ஓய்வில்லாக செழுமையும் கடக்கத்தக்கவைகளும் - தவறாத உண்மைக்கொப்பானவைகளுமான பாணங்களை இரண்டுதோளையும் ஒன்றோடொன்று சேரும்படியாக வில்லிலைத்துத் தொடுத்து விட்டார்.

அக்கணைகள்போய்ப் பாலநேத்திரனுகிய சம்புமூர்த்தியாற் கொடுக்கப்பட்ட அவன்கவசத்தைப் பேதித்துக்கொண்டு போகமாட்டாமல் அதன்மேல் மோதிகிற்கிறதைச் செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய சக்கரவர்த்தித் திருக்குமாரர்கண்டு, ஓ! ஹோ! இது சங்கரனுற் கொடுக்கப்பட்ட கவசமென்று யூகித்துணர்ந்து சிவாஸ்திரத்தைத் தொடுத்தெய்தார். அது பட்டமாத்திரத்தில் அந்தக்கவசமானது அவிழ்ந்துகழன்று, மேருமலையைச் சூழ்ந்துவருகின்ற சூரியன் பூமியில் விழுந்து விட்டதுபோலத் துண்டு துண்டாய்க் கீழேவிழுந்து விட்டது. அப்படி மிகுந்த பிரகாசத்தையுடைய கவசமானது நொறுங்கி யுதிர்ந்தமாத்திரத்திற் கும்பகர்ணன் இரண்டு கண்களிலும் அக்கினியைச் சிந்தி, தனதுதோளைத் தட்டிக்கொண்டு கர்ச்சித்து, அனேகரை ஜெயம்பெற்ற ஒரு வச்சிரதண்டத்தைக் கையிலெடுத்து, இந்த வானரசேனையை யெல்லாம் குழம்பாக்கிவிடுகிறேனென்று ஆக்கிரமித்து, பூமியை அம்மியாகவும் — அந்த கெடுந்தண்டத்தைக் குழவியாகவும் — வானரங்களைச் சுண்டாங்கிப் பொருளாகவுங்கொண்டு கிரமக்கிரமமாய் அரைக்கத் தொடங்கினன்.

அப்போது ஸ்ரீராமபாணங்களில் ஆயிரம் பாணங்கள் ஆகாசமெல்லாம் பறந்தோடின. ஆயிரம் பாணங்கள் கும்பகர்ணன்மீது பாய்ந்தன. ஆயிரம் பாணங்கள் அவனுடைய பெரியமலைபோன்ற மார்பைச் சல்லடைக் கண்களாகத் திறந்துவிட்டன. ஆயிரம் பாணங்கள் அவனுடலில் தைத்து உருவிப் போகாமல் உள்ளேயே மறைந்தன. ஆயிரம் பாணங்கள் அவனை எதிர்த்துக் கொண்டு நின்றன. இப்படியாக ராமபாணங்கள் அவனை வருத்தினபோதிலும் அவன் கர்ச்சனையிட்டுக்கொண்டு காற்றாடியைப்போலே கிறுகிறென்று சாரிசுற்றிவந்தான். அப்போது நீலமேகம்போன்ற ஸ்யாமளமேனியையுடைய ஸ்ரீராமர் அவனைப் பார்த்து, இவன் கையில் தண்டாயுத மிருக்குமேயானால் நம்முடைய வானரசைனியங்களை விடமாட்டானென்று நினைத்து, பத்துக் கூரியபாணங்களை வரிசையாகத் தொடுத்து எய்தார். அம்மாத்திரத்தில் அந்த வச்சிரதண்டமானது துண்டு துண்டாய் வெட்டுண்டது.

அக்கால் பெரிய வீரகண்டாமணியைத் தரித்த கும்பகர்ணன் வடவாமுகாக்கினியைப்போலப் பொங்கி, வட்டாகாரமான ஸ்வர்ணகேடகமொன்றையும், ஒரு கூரிய வாளாயுதத்தையுங் கையிலெடுத்துக் கொண்டான். அப்படியவன் வாளைக் கையிலெடுத்த உடனே வானரவீரர்களெல்லாம் தைரியங்குறைந்து, நாலா பக்கங்களிலும் காலெடுத்தோடத் தலைப்பட்டார்கள். தேவர்களெல்லாம் வருத்தமுற்றுத் தலைகாட்டாமல் மறைந்துகொண் டோடினர்கள். அப்போது கும்பகர்ணன் ஜயபதத்தை நிறைவேற்றிக்கொண்டு தான் திரும்புவேனென்று சொல்ல, அதைக்கேட்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் கும்பகர்ணனுடைய மலைபோன்ற தோளைப் பிடித்திருக்கின்ற வாளாயுதத்



துடனே துணித்துவிடக் கடவாயென்று தேவர்களெல்லாம் வாழ்த்தும்படியாக ஒரு பாணத்தை எய்தார்.

கவி.

அலக்கணுற்றது தீவினைநல்வினை யார்த்தெழுந்ததுவேர்த்துக்
கலக்கமுற்றன ராக்கதர்சாலவெங் கருங்கடற்றிரைபோலும்
வலக்கையற்றது வாளொடுங்கோளுடை வானயர்முதிபோதும்
இலக்கையற்றதவ் விலங்கைக்குமிராவணன் றலைக்குமென்றெழுந்தோட.

அப்போ திலங்கைக்கும் இராவணனுடைய தலைக்கும் கணக்கு முடிந்துவிட்டதே இனிநாம் வசிப்பதற்கிடமில்லையே யென்னசெய்வதென்று தீவினையானது மனந்திடுக்கிட்டது. படுபாவியாகிய இலங்கேசனது உபத்திரவத்தால் மறைந்திருந்த நல்வினையானது ஆநந்தித்துக்கொண் டோங்கிவளர்ந்தது. இராக்ஷசர்களெல்லாம் தேகம் வெயர்த்து, மஹாகொடுமையான யுகாந்தகாலச் சமுத்திரத்தின் அலையைப்போல மனங்கலங்கினர்கள். இப்படியாகும் சமையத்திற் கும்பகர்ணனுடைய வலதுகையானது தேவேந்திரனுடைய மேனியிலுள்ள கண்களுக் கொப்பாக, ஸ்ரீராமபத்திரர் விட்ட பாணத்தினுற் கிழிபட்ட புண்களுடனே வாளாயுதத்தோ டற்றுவிழுந்தது.

அதிவீரனை அந்தக் கும்பகர்ணனிடத்தில் யாரேனும் பிச்சைகேட்டு வாங்கினுலல்லது வேறேயும் வீரர்களுண்டென்று சொல்லுவதற் கொருவராலு முடியுமோ? அப்படிப்பட்ட வீரனுன கும்பகர்ணன் தனதுதோளோடற்றுவிழுந்த வலதுகையை இடதுகையி லெடுத்து. வீரகர்ச்சனையிட்டுக்கொண்டு வானரப்படையிற் பிரவேசித்து அடித்தான். அப்போது வானரக்கூட்டமெல்லாம் பல்லையிளித்துக்கொண்டு ஓட்டம்பிடித்தன. மஹாதா[illegible]ன ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி காத்துக்கொண்டு நிற்கும்போதே கும்பகர்ணன் வானரசேனையைக் கொள்ளை கொள்ளையாக யமலோகமடையும்படி முன்னிலு மூன்றுமடங்காகச் சிந்திக்கின்ற குறிப்பை மூவுலகத்[illegible]ருக்கும்பார்த்து, இந்த வானரசமுத்திரம் இக்கோடு நாசமாய்விடுமென்கிற துக்கத்தினு [illegible], இருக்கும் கையைப் பார்க்கிலும் அறுந்தகைக்கே அந்த மூன்று லோகத்தாரும் பயந்தார்கள்.

அப்போது கும்பகர்ணன் தன்னிலைக்கண்டு வானரப் பெருங்கடலானது முதுகுகாட்டியோடவும், யானைப்பிணங்கள் பேலமிதக்கும்படி இவன்தோளிலிருந்து வழிந்து இரத்தவாறுகளோடவும், ஆகாயமார்க்கத்தில் தேவர்களெல்லாம் பயந்தோடவும், இலங்கையிலுள்ள பொருள்களும் — மலைகளும் — கடலும் — நிலைகுலைந்து பின்றொடர்ந்தோடிவரவும், மேகங்களெல்லாம் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போகவும், ஆண்சிங்கம்போன்ற மஹாவீரான ஸ்ரீராமரைநோக்கி அவர்மீது அதிவேகமாக ஓடினன்.

கவி.

அற்றகையைமற்றக்கையாற்பற்றிப்பின் றிமையவர்தொழுதேத்தத்
தொற்றக்கையகன் றொழிந்தவனுளவை தொலையவுந்தோன்றுச

கூற்றுக்கையமு மச்சழுங்கெடநெடுங் கொற்றவக்கோலையப்பால்
வேற்றுக்கையையும் வேலையில்விட்டனன் வேறுமோரணையாக.

அக்கால் சிதறுண்ட தேவர்களெல்லாம் ஸ்ரீராமரைநோக்கி, சுவாமி! மற்றொருகையையுமிப்போதே அறுத்துவிட வேண்டுமென்று பிரார்த்தித்து வணங்கினார்கள். அதுகண்ட திக்விஜயப் பிரதாபமான ஜானகிநாயகர் மனதிரங்கி, இவனுக்குத் தோல்வியடைந்து கைக்கப்படாம லொளிந்துநின்று இவன்வாழ்நாள் முடிவையும் பயத்தினால் மறந்துவிட்ட யமனுக்கு இப்போதேனும் கால முடிந்ததோ இல்லையோவென்கிற சந்தேகமும், ஒருவேனை எதிர்ப்பட்டா லென்னபொல்லாங்குவருமோ வென்றிருந்தபயமுநீங்கும்படி; ஒருதிவ்விய பாணத்தினாலே அவனிடதுகையையு மறுத்து வேறொரு சேதுகட்டினதுபோலச் சமுத்திரத்திலே விழச்செய்தார்.

அப்படியறுகிய கும்பகர்ணனது அறுந்துவிழுந்த புயங்கள் பூர்வகாலத்தில் சுவர்க்கலோகவாசிகளாகிய தேவர்கள் அலைகளையுடைய பாலசமுத்திரத்தின்கண்தேவாமிர்தத் தோன்றும்படியாகச் சந்திரனாகிய அணியினிடத்தில் சேர்த்துப் பூட்டிக் கடைந்த மந்திரபருவதத்தை யொத்தது. அப்புயத்திலணிந்த மாணிக்கக்கங்கணங்கள் அம்மந்திர மலையைச்சுற்றிய வாசுகியென்னும் சர்ப்பராஜனை யொத்திருந்தது. மேலும் தன்னிறத்துக்குத் தானேயொப்பானது பெருங்கடலில் விழச்செய்தபடியினாலும், நெருங்கிய ரேகைகளையுடையதான சொர்ணமய விறகுகளின் கமிலிசையால் முடிக்கப்பட்ட செய்கையாலும், திருவிகாரியரான ஸ்ரீயப்பதியின் வைராக்ரமான ஸ்ரீராமமூர்த்தியி னியமனப்படி நடந்ததன்மையினாலும், கூர்மையான ஸ்ரீராமபாணமானது பெரியதிருவடிகளாகிய கருடபகவானைப் போலவும் - அந்த உயர்ந்ததோளானது அக்கருடபகவான் அநாயாசமாக வெடுத்துவந்து கடலிலிட்ட மந்தரகிரிக்குச் சமானமாகவும் - இருந்தன.

இவ்வாறு கும்பகர்ணன் இரண்டுதோளு மற்றபின்பு, தினந்தோறும் சூரியன் சுற்றிவருகின்ற மேருமலையை உள்ளேகுடைந்து ஒருபண்டியாக்கித் திருவிக்கிரமமூர்த்தியானவர் உலகத்தை யளவிடற்கமைத்த ஒருநீண்ட குறுந்தடியைக் கையிலேந்தி யடித்து முழக்கினாற்போலப் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு வானர சேனாசமுத்திரத்தைத் தலையும் - தோளும் - சதையும் - எலும்புமாகச் சின்னபின்னமாய் இரத்தவாற்றினுடன் பெருக்கெடுத்தோடக் கலக்கிவிட்டான். நிலம் - நீர் - தீ - காற்று - என்னும்பூதங்கள் நான்கும் அரக்கனுருவாகி ஒருவராலும் சொல்லுதற்கிசையாத பெரியதோற்றத்தைப் படைத்து வந்ததைப்போலச்சிலகோடிகளையெல்லாம் சம்ஹரிக்கிறவனாய், பிரளயகாலத் தெமனுக் கொப்பாகக் கோபமுற்றுச் சங்கிராமவீரர்களுள் தலைமைபெற்று யாதொருவிஷயங்களிலும் தனக்குத்தானே சமானமானவனென்கிற பிரபலமுற்று வாழ்வுற்றிருந்த கும்பகர்ணனுடைய மலைபோன்ற கறுத்த வலதுகாலை, விஜயகோதண்டபாணியாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்



முடைய வடித்துக் கூரிட்டுப் பகைவர்களுதிரத்திற் காய்ச்சித் துவையலிட்டுப் பொற்கட்டு வச்சிரக்கட்டுகளிட்டுச் சிறப்புற்றோங்கின மயிலிறகு கொக்கிறகைச் சொருகிட்டு விளங்கத்தக்க அதிதீக்ஷண்ணியமுள்ள ஒருகூர்மைபொருந்திய பாணத்தினாற் கதலிப்பதலிச் சிதறத்தக்கதாக அறுத்துப் பூமியில்விழும்படிச் செய்தார்.

அப்போது கும்பகர்ணன் அழகுபெறத்தக்கதா பொன்றுடனொன்று சேர்த்து வரிசைவரிசையாக அமைத்து வைத்தாற்போற் பிரகாசிக்கின்ற, நக்ஷத்திரமென்கிற நக்ஷத்திரக் கூட்டங்களோடு சம்பந்தப்பட்டு முதன்மைபெற்றிருக்கின்ற, இளமைதங்கிய வெள்ளிய மூன்றாம்பிறைச் சந்திரனைத் துண்டிட்டு வைத்ததுபோலச் சொலிக்கத்தக்க கூனலாகிய இரண்டுவெண்கோ தந்தங்க ளிரண்டுகடைவாயிலும் தோன்றும்படியாக, மலையிலிருந்து தாரைதாரையாகப் பெருக்கெடுத்தோடி வருகின்ற அருவிநீரைப்போல இரத்தவெள்ளமானது குபீர்குபீரென்று பாய்ந்து வருவதினால் மாலைப்போதில் காணப்படுகின்ற செக்கர்வானம்போன்ற தன்னுடைய கடைவாயைத் திறந்துகொண்டு, தன்னொருகால் விழுந்தமையால் மற்றொருகாலினால் நடக்கத்திறமில்லாமற் குந்திக்குந்தி, பூமிகுழிபடும்படியாகவும் - கடல்நீர் கொதித்துக் கொப்புளித்துத் ததளித்துக் கலங்கி வழியும்படியாகவும் - அதிகவேகமாயோடி, வானம்பாடிப் பறவையைப்போலவும் - பந்தைப்போலவும் - விசைகொண்டு, பூமியிலிருந்தெழும்பி ஆகாசமார்க்கமாகத் தாவிக்குதித்துநின்றான்.

கவி.

மாறுகாலின்றி வானுறநிமிர்ந்துமா னிலமெலாம்வளைத்தேந்தித்
துறைமாருத மாமலைச்சுழித்தமேற் றொடர்கின்றதொழிலானை
ஏறுசேவக னெரிமுகப்பகழியா லிருநிலம்பொறைநீங்க
வேறுகாலையுந் துணித்தனனறத்தொடு வேதநூல்கூத்தாட.

இவ்வண்ணம் கும்பகருணன் அடியெடுத்து வைப்பதற்குமாற்காலின்றி ஒற்றைக்காலினால் ஆகாயபரியந்தம் தாவிக்குதித்துப் பக்கத்திலுள்ள மரங்கள் - மலைகள் - மண்டபங்கள் - மதில்கள் - மாடமாளிகைகள் - கூடகோபுரங்கள் - அட்டாலைமண்டபங்கள் ஆகிய இவைகளையெல்லாம் தனது ஒருகாலினாற் பேர்த்து வனைத்தெடுத்து இடசாரிவலசாரி வலசாரி இடசாரியாகச் சுற்றிக்கொண்டுசூறாவளியென்னும் காற்றைப்போலக்கறகறவென்று சுழற்றியெறிந்து கட்டுக்கடங்காத மதயானையைப்போலக்கண்களில் தீப்பறக்கத்தக்கதாக ஆக்கிரமித்துக்கொண்டு வானரப்படைகளின்மேல்தாவிவந்தான். அப்போததைக்கண்ட எம்பெருமானாகிய உத்தண்டசண்டப்பிரசண்டபிரபலகோதண்டதீக்ஷாகுருவான ரகுநந்தனர் தனக்கினியனாகிய பூமிப்பிராட்டியினது தலைச்சுமையாகியபெரியபாரமானது நீங்கிப்போகவும், வேதங்களனைவில்லாத சந்தோஷத்தினாலானந்தக்கூத் தாடத்தக்கதாகவும், பொன்னுலகவாசிகளென்கின்ற தேவர்களுடைய மனத்துயரம் தொலைந்து போகும்படியாகவும்,

இராக்ஷசர்களென்கின்ற விஷப்பூண்டுகள் வேரற்றுச் சாகத்தக்கதாகவும், அக்கினிமுகாஸ்திரத்தை யெடுத்து அதற்குச் செய்யவேண்டிய மந்திராகுதிகள் யாவும் கிரமப்படி கொடுத்துத் தொடுத்துவிடுத்தார். அப்படிவிடுத்த அக்கினிமுகாஸ்திரமானது அதிவிரைவாகப்போய், அந்தக் கும்பகர்ணனுடைய இடதுகாலையு மறுத்துத்தள்ளியது. இப்படி கும்பகர்ணன் மிகவும் வலம்பெற்று விளங்கிய தனதிரண்டு கால்களுங் கைகளு மறுபட்டும், கறுத்த மேருகிரியையொத்த விசாலதேகம் இலக்ஷம்பாணங்களாற் சல்லடைக் கண்களாகச் சில்லிசில்லியாகவும் தொளைத்துப் பின்புறம் உருவவும் சற்றும் வியசனமில்லாமலும்-பயப்படாமலும்-திடசித்தத்தை யுடையவனும் மிகுதியாகிய கோபங்கொண்டு சிவந்தகண்களினின்று மக்கினிப்பொறி முன்னினு மிகுமடங்குபெருகிற்று. பூமியே ஆகாயமாகவும், இவன்தேகமே மேகமாகவும், கோபக்கண்களே மின்னலாகவும், கர்ச்சனையே இடியாகவு மிருந்தது. எழுந்தகோபமோ முன்னினு மனேகமடங்கு மிகுந்தது

கவி.

பாதங்கைகளோ டிழந்தனன்படியிடை யிருந்துவான்பகுவாயால்
காதநீளிய மலைகளைக்கடித்திறத் தெடுத்துவெஞ்சுகன்பொங்கி
மீதுமீதுதன் னகத்தெழுகாற்றினுல் விசைகொடுதிசைசெல்ல
ஊதலுதப்பட் டலந்தனவானர முருமின்வீழுயிரென்ன.

இவ்வண்ணம் பதங்களும் கரங்களுமிழந்தவனுகிய கும்பகர்ணன் பூமியிலே உருண்டு தனதுபிளவாகிய வாயினுல் சமீபத்தில் காததூரமளவு நீண்டு வளர்ந்த மலைகளைப் பேர்த்தெடுத்துப் பற்களினுல் கறகறவெனக் கடித்து, பெரு[illegible]ராகிய காற்றோடு கண்களிலிருந்து சிதறும் அக்கினிப்பொறிகள் சேர்ந்து வானரக் கூட்டங்களின்மீது அக்கினிமயமாகிய கோடையிடிவிழுவதைப்போற் போய்விழுந்து அநேகரைக் கொன்ருன்.

இதல்லாமலு மக்கும்பகர்ணனுனவன் மேலுமேலு மதிகரிக்கின்ற பெருங்கோபத்தினுல் கண்களென்கிற பொறிகளிலிருந்து அபரிமிதமாகப் பறக்கின்ற தீப்பொறிஜ்வாலை எட்டுத்திக்குகளிலும்போய்ப் பாய்ந்து தீய்க்கும்படியாகப் பார்த்து, எட்டாப்பொருளைத் தாட்டுக்கோல்கொண்டு எளிதிற் கிரகித்துக் கொள்ளுகிறதுபோல முத்துக்களைச் சொரிகின்ற மூங்கில்கள்வளர்ந் தடர்ந்திருக்கின்ற ஒருபெரியமலையை அதனுச்சியோடு தன்வாய்கட்டிஞற்பற்றி வேரைக்களைந்து பறித்தெடுத்து, கழுகுகள், காக்கைகள், பருந்துகள், வட்டமிட்டுப் பறக்கவும், நாய்கள் நரிகள் ஊளையிடவும், பேய்க்கணங்கள் நடிக்கவும், உதிரந்தோய்ந்திருக்கின்ற ரணக்களமெல்லாம் நிலைகுலையும்படிப்பெரிய பிலத்துவாரம்போன்ற வாயில்வைத்தூதி ஆக்கிரமித் தட்டகாசஞ் செய்தான். அப்போது முன்னம் வேதங்களுக்கு யெட்டப்படாத பரப்பிரம ஸ்வரூபத்தை ஆதிமூலமேயென்று ஓதிவணங்கிய யானையினது வேதனையை நீக்கும்படியாகமுதலையைச் சம்ஹரித்த எம்பிரானுகிய ஸ்ரீராமமூர்த்தியானவர், மதுகரங்கள் தேனுண்டு தெங்களைப்பாடி வாசஞ் செய்யும்படி



முகையவிழ்ந்து மகரந்தம்விரிகின்ற செந்தாமரை மலர்போன்ற தமது திவ்விய திருக்கண்களால் அவன்செய்யு மட்டகாசங்களை யெல்லாம் பார்த்தார்.

இப்படிப்பார்த்த ஸ்ரீரகுநந்தனர் மிகுந்த ஆச்சரியமுற்று, இந்தக் கும்பகர்ணனுனவன் கைகால்முதலானவை தறிபட்டுத் தரையில்விழுந்தும் அதிக ஆங்காரத்தோடு பயமென்பதைக் கடக்கவோட்டி, வீரவைராக்கியத்தைப் பாராட்டி, வானரசைனியங்களைத் திக்குமுக்கிடும்படி வாட்டி, தனக்குண்டான வல்லமையைக்காட்டி நிற்கின்றுனே; இவனன்றோ வல்லவன். என்று மூக்கின்மேல் விரலைவைத்துச் சபாசென்று மெச்சினுர். அந்தச்சமயத்தில் உலகத்தைச் சூழ்ந்துகொண்டிருந்த விருளும் பெரும்பனிக் கூட்டமும் சூரியகிரணங்களைக்கண்டு நீங்குவதுபோலச் சக்கரவர்த்தித் திருமகனுருடைய கோடிசூரியப் பிரகாசம்பொருந்திய அழகுபெற்ற முகாரவிந்தத்தைக் கண்டு கும்பகர்ணனுக்கு நல்லவிவேகம் பிறந்து, கொடியராக்ஷசகுல சம்ஹாரமூர்த்தியும்-கௌசலைகுமாரனும் - மகிமைஞ்சத்தக்கவனுமாய்ப் பருத்துயர்ந்த திருத்தோள்களை யுடையவருமாகிய புருஷோத்தமனுன ஸ்ரீராகவபிரானை நோக்கிப் பார்த்து, ஐயோ! இந்த உத்தமனுடைய கையிற்பற்றி யிருக்கின்ற வில்லின் வல்லமைக்கு என்னைப்போன்ற சுத்தவீரனே கைகாலறுந்து, சூழ்ந்துவந்த சேனைகளுமிழந்து, வேறொருதவியு மில்லாமற் காற்றிற் பஞ்சுபோலப் பறந்துபோவேனையானுல்; என்தமையனுகிய ராவணன் இந்தச் சுந்தரமூர்த்தியை வெல்லுவானென்று சொல்லவும் படுமோ?

அல்லவென் றெண்ணினை அவனுக்குதவியாக ஆயிரமிராவணர்கள்வந்தெதிர்க்கக்கூடுமோ? எத்தனை பேர்களுடைய பிராணனையும், அவர்களுக்குதவியாக ராக்ஷசச்சேனைக ளெத்தனையோ அந்தச்சேனைகளினுடைய உயிரையும், இவன்கைக்கோதண்டமானது கூற்றுவனுலகத்திற்குடியேற்றி விடாமற் சும்மா விட்டுவிடப் போகின்றதோ? நானதன் பெருமையை என்னென்று சொல்லப்போகின்றேன். அளவில்லாத அகண்ட ஐஸ்வரியத்தைப் பெற்று வாழ்வுற்றிருக்கின்ற இந்த ராவணன் காமநோய் தலைக்கொண்டவனுகி, தூண்டாவிளக்கைத் தின்னும்படிவந்த விட்டிற்பூச்சியானது தன்னுடைய பலத்தைத்து சாவதுபோலச் சீதையென்கிற நெருப்பைக்கொண்டு சிறையிட்டபோதே அவனுடைய வாழ்நாள் குறைபட்டதே; இனி ராமபாணத்திற்குத் தப்பி ஒருக்காலும் பிழைக்கப்போகிறவ னல்லனே; என்றுபற்பலவிதமாகக் கும்பகர்ணன் மனதில்நினைத்து, அதிகதுக்காக்கிராந்தனுய்ப் பரிதபித்தான்.

இப்படிப்பரிதபித்த கும்பகர்ணனுனவன் சிந்தூரப்பொடியையுஞ் செம்பஞ்சையும்போன்ற சிவந்த உதிரவாறுனது பலதிசைகளிலும்போய் அங்கங்குள்ள மிக்கபலம்பொருந்திய பெரியதேர்களையும் – யானைகளையும் - குதிரைகளையும் - சிங்கங்களையும் - வாரிக்கொண்டு போவதைப் பார்த்து, உடல் வேர்த்து, நிலைகுலைந்து சித்தங்கலங்கி, பின்னந்தக் கலக்கந் தெளிந்தவனாகத் தெளிந்து, ஸ்ரீராமபிரானுடைய வல்லமையைக் குறித்து அளவில்லாத சந்

தோஷசாகரத்தில் மூழ்கினவனாகி, தனக்கெதிரே சேவைசாதிக்கின்ற கருங்கடல்வண்ணனும் கிருபாநிதியுமான ஸ்ரீ ரகுநாயகருடைய திருமுகமண்டலத்தைப் பார்த்துச் சிலவார்த்தைகளை வணங்கிச்சொல்லுகின்றான்.

## ஸ்ரீராமபிரானைக் கும்பகருணன் விபீஷணரைப் பாதுகாக்கவேண்டுமென்று வேண்டி, தன் சிரசைக் கண்டித்துச் சமுத்திரத்தில் விழும்படியிரத்தல்.

கவி.

புக்கடைந்த புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடக்கார்மதயானை வான்வேந்தன் வழிவந்தீர்
இக்கடன்களுடையீர்நீ ரெம்வினைதீர்த் தும்முடைய
கைக்கடன்தானுயிர்காக்கக் கடவீரென் றடைக்கட்டால்.

நீதியால்வந்ததொரு நெடுந்தருமநெறியல்லால்
சாதியால்வந்தசிறு நெறியறியானென்தம்பி
ஆதியாயுனையடைந்தா னரசருட் கொண்டமைந்த
வேதியாவின்னமுனக் கடைக்கலநான் வேண்டினேன்.

வெல்லுமாநினைக்கின்ற வேலரக்கன் வேரோடும்
கல்லுமாமுயல்கின்றா னிவனென்னுங் கறுவுடையான்
ஒல்லுமாறியலுமே யுடன்பிறப்பின் பயனோரான்
கொல்லுமாலவனிவனைக் குறிக்கோடி கோடாதாய்.

தம்பியெனநினைந்திரங்கித் தவிரானத் தகவில்லான்
நம்பியிவன்றனைக்காணிற் கொல்லுமிறை நல்காதல்
உம்பியைத்தா னுன்னைத்தா னனுமனைத்தா னொருபொழுதும்
எம்பிபிரியலனாக வருளுதியால் வேண்டினேன்.

மூக்கிலாமுகம்வந்து முனிவர்களுமமரர்களும்
நோக்குவார் நோக்காமே யொருகணையால் வென்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் னெடுந்தலையைக் கருங்கடலில்
போக்குவா யிதுவெனக்கு வேண்டுகின்ற பொருளையா.

ஒருவேடுவனால் வருத்தப்பட்டுத் தன்னை அடைக்கலம்புகுந்த ஒருபுறவினிமித்தமாகத் துலையேறினவனும், மேகம்போலு மதநீரைப் பெய்கின்ற யானைச்சேனையுடையவனுமாகிய வெற்றிபொருந்திய கூரிய வாளாயுதத்தைத் தாங்கிய சிபிச்சக்கரவர்த்தி வமிசத்திலவதரித்த இராமலக்ஷ்மணர்களே! அந்தச் சிபிச்சக்கரவர்த்தி செய்ததுபோல நீங்களும் பல அன்பின்கடமைகளைச் செய்யவல்லீர்கள். இனியுங்களுடைய திருக்கைகளாற் செய்ய வேண்டிய கடமையாவது, எங்கள் குலமுழுமையும் உங்கள் பாணத்தால் தொலைத்துவிடுவதே: அப்படி தொலைத்து விடுவீர்களேயானால், எங்களுடைய இருவினைகளையு மொழிந்து நிரதிசயானந்த பரந்தாமத்தை யடைவோம். நீங்களும் எங்களுயிரை ரட்சிக்குங்கடமை யுடையீராவீர்கள். ஓ வேதமுதல்வனாகவும், க்ஷத்திரியகுலத்தில் வந்தவதரித்த அந்த வேதப்பிரதிபாத்திய வஸ்துவுமாகிய எனதையனே! ஓ கோதண்டக் கையனே! எம்மை ஆண்



டருளு மெய்யனே! என்றம்பி விபீஷணன் சகலாத்மாக்களுக்கும் செய்யவேண்டிய நீதியாயமைந்த வேதமார்க்க தருமத்தை அநுசரித்தவனே யல்லாமல், எங்கள் சாதிகிருத்தியமாகிய அற்பமார்க்கத்தை அநுசரித் தறியான்.

அவன் வேதமார்க்கானுசாரியாதலால் உமதுபக்கலிலே அடைக்கலம் புகுந்தான். அவ்வடைக்கலமானது யாதொரு பின்னத்தையு மடையாமலிருக்கவேண்டுமென்பதையே இன்னமு நான் வேண்டுவது. மேலும் - எல்லாலோகங்களுக்கு மேலாகிய பரமபதநாட்டிலிருந்து அவ்வழியாத வீட்டைத்தருகின்ற ஓ வைகுந்தா! ஓ முகுந்தா! ஓ கோவிந்தா! தேவரீரை வெல்லவேண்டுமென்று நினைத்து வெறுவாயை மெல்லுகின்றவனும் வேலாயுதத்தைத் தாங்கினவனுமான என் தமயன், இந்தவிபீஷணன் உங்களுடன் சேர்ந்து தங்களை அடியோடு வேரற்றுப் போம்படிச் செய்யக் கருத்துற்றிருக்கின்றானென்கின்ற எண்ணங்கொண்டு கறுவிக்கொண்டிருக்கின்றான். ஆதலால் இந்தவுத்தமனான விபீஷணன் மாத்திரம் தனியாயவன்கண்ணிலகப்படுவானாகில், சகோதரவாஞ்சையென்பதெள்ளளவுமில்லாமற் கொன்றுவிடுவான். ஓ கிருபாமூர்த்தியாகிய எமதுபெருமானே! அந்தவிபீஷணனை எப்போது மறவாமல் திருவுள்ளத்தில் வைத்துக் காத்தருள வேண்டும்.

இதல்லாமலும் - இக்ராவணாதி ராக்ஷசர்கள் மாயாரூபிகளானதால் எவ்வகைப்பட்ட உருவமெடுத்தேனு மவனைக்கொல்லச் சித்தமாய்க் காத்துக்கொண்டிருப்பார்களென்பது யான்மாத்திரஞ்சொல்லப் பாத்திரனோ? அது தங்கள் திருவுள்ளத்திற்கே விகசிதப்படத் தெரியவரும். ஆகையால் - ஓ சுவாமி! உம்முடைய திருவடியை நம்பியிருக்கும் தம்பியாகிய இளையபெருமானையாவது, உம்மையாவது, அல்லது வாயுபுத்திரனாகிய ஆஞ்சநேயனையாவது, என்தம்பியாகிய விபீஷணன் பிரிந்திருக்கவொட்டாமற் பாதுகாக்கவேண்டிய வரமொன்றும்; மூக்கறுப்புண்ட முகமென்று என்னைத் தேவர்களும் ரிஷிகளும் பார்த்து நகைக்கப்பார்களாதலால், அவர்கள்வந்து பாராமுன்னமே யிப்போதே காலதாமசஞ் செய்யாமல் உம்முடைய திவ்வியாஸ்திரத்தாலே என்கழுத்தைத் துணித்து, தலையைக் கடலிற்கொண்டுபோய் விழச்செய்யவேண்டுமென்கிற வரமொன்றும்; ஆகியவிந்த இரண்டுவரமாத்திரமே அடியேனுக்குக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டான்.

## ஸ்ரீராமர் கும்பகருணன் தலையைக்கண்டித்துச் சமுத்திரத்தில் விழச்செய்ய, தூதர்கள் இராவணனிடஞ் சொல்லச் செல்லுதல்.

கவி.

வரக்கொண்டானினிமறுத்தல் வழக்கன்றென் றொருவாளி
உரங்கொண்டதடக்கிரியி னுயர்நெடுந்தோ ளொடுவார்ச்
சிரங்கொண்டான்கொண்டதனைத் திண்காற்றின் கடும்படையால்
அரக்கொண்டாழ்கருங்கடலு ளழுவத்து ளழுத்தினான்.

அப்போது ஜகத்திரக்ஷகராகிய எம்பெருமான் இவன் வேண்டுதலுக் இசையவேண்டுமேயன்றி மறுத்தல் தகாதென்றெண்ணி அப்படியே யாம் செய்விப்போமென் றழியாவரங்கொடுத்து, உடனே தமது வச்சிரவாகுவலய கடகங்களைத் தரித்திருக்கின்ற அழகிய இரண்டுதோள்களும் பூரிக்கக் கோதண்டத்தைக் கையிலெடுத்து நாட்டிநாணேற்றிட்டு, விஷத்தயிலத்திலூட்டிக் காய்ச்சித் துவைவிட்டுச் சாணையிலோட்டிக் கூரிட்டுத் தங்கக்கட்டொளிட்டு அதிக கூர்மைபெற்றிருக்கின்ற ஒரு திவ்வியாஸ்திரத்தைச் சந்தித்து, சரியானகுறிபார்த்து விடுத்து கும்பகர்ணனுடைய சிரசைத் துணித்தருளி, பிறகு உடனே அதிவேகமுள்ள வாயுவாஸ்திர மொன்றைப்பிரயோகித்து, அத்தலையைக் கடலில்விழும்படிச் செய்தார்.

கவி.

ஆடினார்வானவர்க ளாய்களிரமுதலிசை
பாடினார்மாதவரும்வேதியரும்பயந்தீர்ந்தார்
கூடினார்படைத்தலைவர் கொற்றவனைக்குடர்கலங்கி
ஓடினாரடலரக்க ரிராவணனுக்குணர்த்துவார்.

அதைக்கண்ட தேவர்களும் - இரிஷிகளும் - வேதமார்க்க சிஷ்டாநுபவர்களும் - தேவஸ்திரீகளும் - தாங்கள்கெடுமோனாகக் கொண்டிருந்த துன்ப நீங்கி, அமிர்தத்திற் கொப்பான அளவில்லாத தேவகானங்களைப்பாடி ஆனந்தக் கூத்தாடினார்கள். அன்றியும் - முன்னம் கும்பகர்ணனுக்குப் பயந்து தோற்றோடிப்போன வானரவீரர்களெல்லா மறுபடியும் ஸ்ரீராமரிடத்தில்வந்து சேர்ந்தார்கள். இதிப்படியிருக்க - அந்தக்கும்பகர்ணன் மடிந்துவிழுந்ததைக் கண்ட ராட்சசவீரர்க ளெல்லாம் தங்கள் குடல்குழம்பி உர்முடைய தம்பியாகிய அதிபராக்கிரமசாலியான கும்பகர்ணமஹாராஜன் ஸ்ரீராமபாணத்தால் மடிந்தானென்று இராவணனுக்குச் சொல்லப்போனார்கள்.

கும்பகருணன் வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினறுவது,

## மாயாஜனகப் படலம்.

இப்படலத்தில் கும்பகர்ணன் யுத்தகளத்தில் ஸ்ரீராமனுடிரோடு போர் விளைத்திருக்கையில் நகரத்திலிருந்த இராவணன் மருத்தனைவனை மாயாஜனகனைப்போல் ரூபமாக்கிக்கொண்டுவா மகோதரனைவிடுத்துத்தான் சீதையிருக்குமிடஞ்சென்று தன்குறைகூறியிரக்க, அச்சீதை யவனைத் தன்னெதிரிலிருக்க ஓர்துரும்பாகமதித்திகழ, அதற்கவன் ஜனகனுடிய உன்தந்தை முதலிய பந்துக்களிதோ கணப்போதில்வந்து மடியப் போகின்றதைப் பாரென்று பயமுறுத்த, அக்காலம் மகோதரன் பிடித்து

இராவணன்மாயாஜனகனையுண்டாக்கிக்கொண்டுவந்து சீதையை பயமுறுத்தல்.
No. 53.



இலட்சுமணர்அங்கதனையூர்ந்துபோய்வாயுதேவனுதவியால்அதி காயனைவதைத்தல்.



வந்த மாயாஜனகனைக் கண்டு சீதை பிரலாபிக்க, அப்போதிராவண னினியேனு மென்கருத்துக் கிணங்குவையே லெனது சாம்ராச்சிய மனைத்து மிச்சனகனுக் களிப்பேனென்று கூறிவேண்ட, அதற்குச் சீதை இனியாவனவற்றைக்கூறி அவனைக்கடிய, பின்னரவன் மாயாஜனகனைக்கொண்டு சீதைக்குச் சிலவார்த்தைகூறவு மவனச்சனகனைச் சேதித்துச் சினக்க, அச்சமையத்தி லிராவணன் கும்பகருணனுடையமரணத்தைத் தூதுவராலறிந்து பிரலாபித்து அப்பாற்செல்ல, இப்பால் சீதைக்குத் திரிசடை மாயாஜனகன் வரலாறுரைக்க, அவள்மகிழ்ந்திருந்தமை சொல்லப்படுகின்றது.

## இராவணன் மகோதரனோடு மந்திராலோசனை செய்து மருத்துவனை மாயா ஜனகனாக்கிக்கொண்டு வரும்படி செய்தல்.

கவி.

அவ்வழிக்கருணன்செய்த பேரொழிலாண்மையெல்லாம்
செவ்வழியுணர்வுதோன்றச் செப்பினுஞ்சிறுமைதீரா
வெவ்வழிமாயையொன்று வேறிருந்தெண்ணிவேட்கை
இவ்வழியிலங்கைவேந்த னியற்றியதியம்பலுற்றும்.

கும்பகருணனென்பவன் யுத்தகளத்தில் ஸ்ரீராமனுடியரோடு செய்த யுத்தத்தின் பெருக்கை யிதுவரையிற் கூறினோம். இனிக்கொடுமையினின்றும் சற்றேனு நீங்காத வஞ்சகநிறைந்த மாயையொன்றை இலங்காபுரி நாயகனாகிய இராவணன் மகோதரனோடு தனிமையாக யோசனைசெய்து செய்த காரியத்தைச் சொல்லுவோம்; இங்கே கும்பகர்ணனை ஸ்ரீராமனுடியரோடு போர்வினைக்கவிடுத்த இராவணனென்பவன் அங்கே தனது மந்திரிகளில் தன்குடிக்கொரு கேடனாகவிருக்கின்ற மகோதர னென்பவனுடைய முகத்தைப்பார்த்து உடலம்வேர்த்து, ஐயா, எனது மனதுக்கிசைந்த மந்திரியாகிய மகோதரனே! நான் சீதையைக் கூடிக்குலாவி என்மனக்குறையைத் தீர்த்துக்கொள்ளத்தக்க நல்லவுபாயம் இன்னதென் றொன்றைநாடி அப்படிப்பாடி, எனதுயிரை நிலைநிறுத்திக் காப்பாற்றக்கடவாய். என்று பரிதாபத்துடன் கேட்கவே அதற்கு மகோதரனிசைந்து, சுவாமீ ராவணேஸ்வரா!! உமது புஜங்களிருபதும் பூரித்துமருவும்படி பக்குவமானமாயையொன் றின்றைக்கே நானுண்டுபண்ணி, அந்தச்சீதையை உமது பட்சத்தில்தானே யாகும்படிச் செய்விக்கின்றேன். அதெப்படி யென்றால், மருத்துவனென்பவனை உருத்தெரியாமல் அந்தச் சீதைக்குத் தகப்பனான ஜனகராஜனைப்போ லுருவைமாற்றிக் கட்டிப் பிடித்துக்கொண்டுவந்து அவள்முன்னே விடுவோமாகில், அப்போதே அவள்கண்டுபயந்து திடுக்கிட்டு, வலியத்தானே வந்து அணைவாள். ஆகையால் - அதுவே தகுந்த உபாயமாகும். இந்த உபாயத்தா லுமதுகோரிக்கையை நிறைவேற்றுகிறேனென்று சொல்லினன்.

## இராவணன் சீதாபிராட்டியாரிடஞ் சென்று குறையிரத்தல்.

கவி.

எனவுனுரைத்தலோடு மெழுந்துமார்பிறகப்புல்லி
அனையவன்றன்னைக்கொண்டாக் சனுகுடியனப்பென்றும்

புனைமலர்ச்சரனச்சோலை நோக்கினனெழுந்துபோனான்
விளைகரோக்கற்பின்வென்ற விளக்கினைவெருவல்காண்பான்,

இப்படி மகோதரன் சொல்லியதைக் காமநோயால் மனவருத்தப் பட்
டுக்கொண் டிருக்கின்ற இராவணன்கேட்டுத் திடீரென் றெழுந்திருந்து, அவ
ன் மார்பிறுகத்தழுவி, என்னருமைத்தோழனே! உன்னுடையகருத்தின்படி
யாகவே அதிகசீக்கிரத்தில் நிறைவேற்றுக. என்றவனுக்குச் சொல்லி உத்தர
வுகொடுத் தனுப்பிவிட்டு, பாபிஷ்டர்களான ராக்ஷசர்களென்கின்ற விருட்
கூட்டத்தை நாசப்படுத்தும் அண்டா விளக்கையொத்துப் பிரகாசிக்கின்ற
சீதாபிராட்டி மகோதரனுடைய மாயவஞ்சனைகளுக்குப் பயப்படுகின்றாளோ?
இல்லையோ? அதைக்காணுவோமென்று உத்தேசித்து, பலாகங்களைப் பா
டத்தக்கவண்டினங்கள் மொய்த்து வாசனைவீசுகின்ற புஷ்பங்களால்நிறைந்த
அசோகவனத்தை நோக்கிச் சென்று, சித்திரமானத்தைத் தருகின்ற ராகத்
தையொத்த சொற்களையுடைய ஸ்ரீகளுக்குள்ள சுந்தரமான அவயவங்களை
யெல்லாம் ஒவ்வொன்றுக்கக் கூட்டியமைத்து அளவிடுதற் கருமையான நற்கு
ணங்களையெல்லாம் ஒன்று சேர்த்துச் செய்த சித்திரப்பிரதிமைபோ லெழு
ந்தருளி யிருக்கின்ற சீதாபிராட்டியைக் கண்ணுரக்கண்டான்.

மின்னலைப்போன்ற தனது பத்துக்கிரீடங்களும் சகத்தகாயமாய்ப் பிர
காசிக்கவும் இருள்போன்ற இருபதுதோள்களினு மணிந்திருக்கின்ற ஸ்வர்ண
மயமாகிய மாலைகளானவை நீலமலையிலிருந்து அருவியாறுகள் விழுகிறது
போலத் தொங்கியசையவும், இளமை தங்கிய மூன்றாம்பிறைச் சந்திரனைப்
பழிக்கத்தக்க நெற்றியோடு சேர்கண்டையையும் - வாளையும் - வில்லையும் -
வெற்றிகொண்ட கண்களையுமுடைய தேவமாதர்கள் கொங்கையாகிய மலை
யைச்சுமந்து இடையானது வருத்தமுற முன்னும்பின்னு மணியணியாகச்
சூழ்ந்து ஒரு விளக்கானது மற்றொருவிளக்கைத் தாங்கிவருகிறதுபோலக்
கைகளில் விளக்கைப் பிடித்துக்கொண்டு வரவும், கட்டியக்காரர்கள் இரண்
டு பக்கங்களிலும் எச்சரிக்கைப்பராக்கென்று இடிமுழக்கம் போலச் சொல்
லிக்கொண்டு வரவும், மதத்துக்களித்த யானையும் வெட்கப்பட வெகு
விநோதவாடம்பரத்துடனே நடந்து; அங்கே சீதாபிராட்டியாருக் கெதிரிற்
போட்டிருந்த ஓர் பொற்சிம்மாசனத்தின்மேலிற் சந்திர வட்டக்குடை கவி
யவும் — தேவர்களைச் சிறையிலிட்ட வெற்றிபொருந்திய தோள்கள் பூரிக்க
வும் - பாதங்களில் வீரகண்டாமணி யசையவும் - இருமருங்கிலு மாம்பாவ
கிரிகள் சாமரைவீசவும் - உடைவாளைத் தாங்கிய ஒருராஜ சிம்மம்போல
உட்கார்ந்தான்.

கவி.

என்றுதானடியனேனுக் கிரங்குவதின்றுவென்பான்
வன்றுதாளிரவியோடும் வேற்றுமைதெரிவதென்பால்
என்றுதானனங்கவாளிக் கிலக்கலாதிருக்கலாவ
தென்றுதானுற்றதெல்லா மியம்புவானெடுத்துக்கொண்டான்.



இந்தப்படி வீற்றிருந்த ராவணன் சீதாபிராட்டியாரைப் பார்த்து, ஓ பெ
ண்களுக்கெல்லாம் நாயகமே! உனக்கடிமையா யிருக்கின்ற வென்மீ தென்
றைக்கு நீ இரக்கம்வைத்துக் காக்கப்போகின்றாய்? துன்பப் படுத்துகின்ற
கொடியோனான சந்திரன் என்றைக்குச் சூரியனைப்போல வேறுபாடில்லாமற்
காணப்படுவான்? நெஞ்சிற் சற்றுமிரக்கமற்ற பஞ்சபாணனாகிய மன்மதனெ
ன்னும் பாதகன் தன்னைக் கெஞ்சக்கெஞ்ச என்மீது வஞ்சனையால் விடுகின்ற
பாணங்களுக்கு நான் என்றைக்கு லக்ஷியமில்லாமலிருக்கப் போகின்றேன்?
அல்லாமலும் - வஞ்சனையுள்ளவனாகிய நான் ஓர்பெண் வடிவுற்றிருக்கின்ற ந
ஞ்சாகிய உன்னை என்னுட்கொண்டிருப்பதால், அதை மாற்றிக்கொள்ளும்ப
டியான உன்போகாமிர்தத்தை விரும்பி நாளுக்குநாள் மெலிந்து வாடுகின்றே
ன், இப்படிவாடுகின்ற என்னுடைய சிந்தையைவிட்டு நீங்காமல் எப்போதும்
குடியாயிருக்கின்ற உன்னையான் நினையாமல், ஆவியைவிட்டு நீங்குவதற்கும்
பயந்திருக்கின்றேன்.

ஓ தேவாமிர்தப்போன்ற சீதா! நானுனக் கடைக்கலமல்லவோ? என்
னை மன்மதனுக்குத் தோற்கும்படிச் செய்து, சந்திரனைக்கொண்டு என் மன
த்தைச்சுட்டு, புலிபோற் சீறிவருகின்ற தென்றற்காற்றினால் மோதும்படிச்
செய்து, வச்சிரமலைக்குச் சமானமான இருபது தோள்களையு மெலியவிட்டா
யே: அல்லாமலும் - தேவர்கள் என்னிடத்திற் கொண்டிருந்த பயங்கரத்தை
யும் கெடுத்தாயே: ஆகிலு மிந்தமட்டோ டென்னை விட்டுவிடுவையோ? அல்
லது இன்னுமென்ன துன்பங்களை விளைத்துப் பின்பு உன்மனமிரங்கப்
போகின்றனையோ? அதை அறிகிலேன். ஓ என்னுடைய மனோரம்மியமான
சீதா! உலகங்களிலிருக்கின்ற பெண்களெல்லா நீயேயாகவும், அவர்களு
டைய எல்லாப்பெயர்களு முன்பெயராகவும், என்னுடைய பார்வையெல்லா
நின்மேலாகவும், பார்த்தவிடங்களிலெல்லா மன்மதனாகவு மிருக்கச்செய்து;
அவனுடைய பஞ்சபாணங்களால் என்மேனிமுழுவதும்தொளைபடும்படிக்குப்
பார்ப்பது உனக் கழகல்லவே: அப்படியானால் என்னாற் சகிக்கக்கூடுமோ?

கைலாசபதியாகிய உமாதேவி மணாளன் முதல்மனிதர்க ளீறுதியாகக்
கண்டு அச்சங்கொள்ளும்படி சுவர்க்கமாதி மூன்றுலகங்களையு மிரக்ஷிக்கின்ற
வெற்றி மிகுந்த எனது சௌரியப் பிரதாபத்தைத் தாழ்மையாக இதுவரை
யில் யாதாமொருவரும் பேசினரைக் காணேம். ஒருவற்காவது யான் தோற்
றவனல்லேன். அப்படிப்பட்ட வீரப்பிரதாபசாலியாகிய யான் ஒருபெண்
மேல் வைத்த ஆசை நோயானது என்னை வருத்திக்கொன்றதென்றால்,
எனது ஆண்டன்மைக்குக்குற்றம் வாராதோ? தருமவழியாகச்சம்பாதித்த அறி
வுடையோர்களின் செல்வம் போன்ற மாதே! பாற்கடலில் பிறந்த தேவாமி
ர்தம்போலும் தீஞ்சுவை வாய்ந்த மழலை மொழியையுடைய சீதா! உம்மீது
காமவெறிகொண்ட என்னை நான் உலகிற் பிறந்தும் பிறவாதவனைப் போலா
க்க வந்திருக்கிறீர். நான் பிறந்தும் உம்மையடையாத ஜென்மம் ஒருஜென்ம

மாகுமோ? உன்னுடைய அழகுக் கீடுபடத்தக்க என்னுடைய மானமானது என்னைக்கொல்ல நானுன்னை மறந்ததுபோலப் போம், இறந்த உயிரானது பிழைக்கத்தக்க சஞ்சீவி மருந்தான உன்னால் எப்போது மிறந்தும் பிழைத்தும் வருகின்ற என்னுடைய அருமையை இங்கே அறியத்தக்கவர்க ளாரிருக்கின்றார்கள்?

முற்காலத்தில் தன்மீது மோகங்கொண்டுவந்த சுவர்க்கலோகத் தரசனாகிய இந்திரனைக்கூடிச் சுகித்திருந்த கௌதமரிஷியினுடைய பத்தினியான அகலிகை யென்பவளுக்கு,இந்த உலகத்திற்கீர்த்தியில்லாமற் போய்விட்டதா? இல்லையே; நான் உன்மேற் கொண்ட காமநோய்க்கு அழகிய குமுதமலரை யொத்த உனது செவந்த வாயமிர்தமே மருந்தல்லாமல்! அதை நீக்கிக்கொள்ளுவதற்கான வேறொருமந்திரமும் - மருந்தும் - இயாண்டுமில்லை. என்றவ்விராவணன் பற்பல விதமாக முறையிடுக்கொண் டெழுந்துநின்று, நீலமலைகளுங்கண்டு நாணும்படியான தன்னுடைய் இருபது கைகளையும் தலையின்பேரிற் கூப்பிக்கொண்டு, ஒரு சூரியனைப் பத்தாகப் பங்கிட்டது போலப் பிரகாசிக்கின்ற பத்துக்கிரீடங்களும் பூமியிற்படிய லோகமாதாவாகிய சீதாபிராட்டியினுடைய தாமரை மலர்போன்ற இரண்டு பாதங்களிலும்போய் விழுந்தான்.

இராவணனைச் சீதாபிராட்டி ஓர் துரும்பாகமதித்துக்கூறல்.

கவி.

வல்லியமருங்குகண்ட மானெனமறுக்கமுற்று
மெல்லியலாக்கைமுற்று நடுங்கினள்விம்முகின்றாள்
கொல்லியவரினுமுள்ள கூறுவன்றெரியவென்னாப்
புல்லியகிடந்ததொன்றை நோக்கினள்புகல்வதானாள்.

இவ்வண்ணம் இராவணப்பாதகன்சொல்லிய வார்த்தைகளைக் கேட்டும் திருவடியில் தீர்க்கதெண்டன் சமர்ப்பித்ததைக்கண்டும், சீதாபிராட்டியானவள் தனக்கு யாதொருதுணையும் இல்லாமையாலே புலியைப் பக்கத்திற்கண்டமானைப்போல அச்சமுற்றவளாய், மெல்லியகுணம்வாய்ந்த இளந்தளிர்போன்ற தனது திருமேனிமுழுதும் நடுங்கினவளாய் அழுது விம்மிவிம்மி இராவணனாகிய சண்டாளப் பாவியினது முகத்தைப் பார்த்தாலும் பாவமுண்டாகுமென்று அவன் முகத்தைப்பாராது தனெதிரிற் கிடந்த ஓர் சிறுதுரும்பைப்பார்த்து, அடாபாதகா! நீ இப்பொழுது என்னைக் கொல்லும்படியாக வந்திருந்த போதிலும்உனக்கு அறிவுண்டாகும்படியாகச் சிலவார்த்தை கூறுவேன் கேளென்று சொல்லுகிறாள். ஓ இராவணத்துரும்பே! கற்பென்னும் பதிவிரதத்தன்மையைப் பூண்டிருக்கின்றவர்களை இகழ்ந்துபேசுகிறதினால் பழிபாவமுண்டாகுமென்பதைச் சற்றும்யோசித்தாயில்லை. உன்னுடைய துண்டரீகமுள்ள நெஞ்சைப்பிளந்து வஞ்சகரான உன்பந்துக்களுடனே நாசமாய்ப்போகும்படிச் செய்யாவிட்டால், என்னுடைய கற்பினிலைமைக்கும் - தருமதேவதையின் வல்லமைக்கும் - என்னபெருமை யுண்டாகப்போகின்றது?



அடா நீசத்துரும்பே! தேவதா நிர்ணயப்படிக் கிவ்வுலகில் வாழ்வுற்றிருக்கின்ற மாமிச தேகங்கள்தோறும் உயிரும், அவ்வுயிருக்கேற்ற நல்லுணர்வுமுண்டாயிருக்கின்றனவன்றோ? அதை நீ எவ்வளவு மறியாய்போலும். குகைபோன்ற உன்னுடைய பிலத்தவாயினால் தகாதவார்த்தைகளைப் பேசக்கேட்டும் உன்னை நாசப்படுத்தாமற் சும்மா இருப்பதனால், நீதா னென்ன சொல்மாட்டாய்? என்னசெய்ய மாட்டாய்? மேலும் - சுவர்க்கலோகத்தரசனாகிய இந்திரனையும், சத்தியலோக வாசியாகிய பிரமதேவனையும், திரிபுராந்தகனாகிய சாம்பசிவமூர்த்தியையும், ஸ்ரீவைகுண்டபதியாகிய விஷ்ணுமூர்த்தியையும், அவரவர்களுக்குள்ள வல்லபங்களோடு நீ பார்த்திருந்தும், நீ அவர்களோடு சண்டைசெய்தேன் செயம்பெற்றேனென்று மனப்பால் குடித்துச் சொல்லுகின்ற உன்னுடைய கட்டுக்கதைகளைக் கட்டிவிடக்கடவாய்.

அடா அசேதனத்துரும்பே! இரணகளத்திற்குப்போய் அங்குண்டான வீரர்களையெல்லாம் பார்த்து வந்தேனென்றும் சொல்லுகின்றாய்? அஃது உண்மையா யிருக்குமாகில் அவ்விடத்திருக்கின்ற என்னுயிர்போன்ற நாயகராகிய சக்கரவர்த்தித் திருக்குமாரர் தம்முடைய கோதண்டத்தை நாணேற்றிட்டு உன் தலையைத் துணித்துவிடாம லிருப்பாரோ? ஆனால் - அவருக்கு நீ பயந்தோடி வந்துவிட்டாய் போலக் காணப்படுகின்றது. அன்றியும் இதுவரையில் யான் ஆகாரமென்பதில்லாமலும் - அபிமானத்தினால் உயிரைமாய்த்துக்கொள்ளாமலும் - நாணமுற்று, மிகுந்த வருத்தப்பட்டுக்கொண்டு உன்கண்ணெதிரே வாழ்வுற்றிருக்கிறேனென்று நீ நினைக்கப் போகின்றாய்? அப்படியல்ல. நல்லொழுக்கத்தையே ஆபரணமாகத் தரித்திருக்கின்ற நீலமலைபோன்ற அழகிய திருமேனியையுடைய புண்ணியவந்தரான எனது நாயகரைக் காண்பதற்கும், போர்க்களத்தில் என்னுடைய கொழுந்தரான இளையபெருமாளானவர் பின்னே காவலாகநிற்கத் தம்மோ டெதிர்த்துவருகின்ற உன் பத்துத்தலைகளையும் பந்துக்களையும் இன்றுபின்னப்படுத்திச் சித்திரப்போக வடித்து வெற்றிபெற்றபிறகு எம்பெருமானான அக்கர்த்தாவின் திருமுகதரிசனம் செய்வதற்குமென்றே நீ நிச்சயமாக நம்பக்கடவாய்.

ஐயோ இராவணத்துரும்பே! எனக்கும் என்னுடைய நாயகராகிய அந்தலோகரக்ஷகனுக்கும் உடலிரண்டேயல்லாமல், உயிரொன்றென்று கருதி நீயுன் மந்தபுத்தியை நீக்கி யுணர்ந்துகொள்ளுவாய். செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய ஒரு நீலமலையானது வில்லைப் பிடித்துக்கொண்டு பார்த்தபேர்களுடைய மனத்தை வெட்கமடையும்படியாகச் செய்வதுபோல விளங்கும் பெருமையைபெற்ற புருஷோத்தமர் என்றுமக் கல்லவோ? அதை நீ யோசித்துப்பார். நீயிங்கேனின்றாய் உன்வாய்க்குவந்தபடி உளறிக்கொண்டிராமல் அப்பாற் போய்விடு. என்றுகூறித் தான் சற்றப்பாற்றிரும்பினள்.

## இராவணன் சீதாபிராட்டிக்கு ஓர்கணப்போதில் நின்பந்துக்களிங்ஙனம்வந்து மாய்வதைப்பாரென்று பயமுறுத்தல்.

கவி.

என்றனனென்றலோடு மெரியுறுகண்ணன் றன்னைக்
கொன்றனமானக்தோன்றக் கூற்றனசீற்றங்கொண்டான்
வென்றெனையிராமனுன்னை மீட்டபினவனோடாவி
ஒன்றெனவாழ்திபோலென் றிடியுருமொக்கநக்கான்.

இவ்விதமாகச் சீதாபிராட்டியானவள் கடுமையான வார்த்தைகளால் இடித்திடித்துக்கூற அதைக்கேட்ட பாதகனாகிய இலங்கேசன் இருபதுகண்களிலும் அக்கினிப்பொறி பறக்கும்படியாகக் கோபித்தவனாகி தன்னைக்கொன்றதைப்போல் மானமிகுந்த ஓ பெண்கள் நாயகமே! நீ புகழ்ந்துபேசுகின்ற அந்த ராமன் என்னைக்கொன்றுவிட்டு உன்னை மீட்டுக்கொண்டு போனபின்பு, அவனுடனுயிரோடு வாழலாமென்று நினைத்திருக்கின்ற உன்னெண்ணத்தை நான் பார்க்கிறேன். இஃதிருக்கட்டும். ஓ மின்னற்கொடிபோன்ற இடையையுடைய சீதா! இந்த உலகத்தில் உன்னினத்தார் முதல் மற்றெவர்களாகட்டும், தேவர்களாகட்டும், புனத்துழாய் மாலையைத்தரித்த அந்த விஷ்ணுவென்று நீ சொல்லுகின்ற இராமனாகட்டும் என்னோடெதிர்ப்பார்களேயானால்; அவர்களையெல்லாம் வேரோடு அதஞ்செய்து போடேனோ? நீ இதை நாளையே காணப்போகின்றாய்.

முன்னமொரு குரங்குவந்து ஏதோ புளுகிப்போன அந்தச்சொல்லைநம்பி அவர்களெல்லாரும் சமுத்திரத்தை யணையிட்டுக்கட்டி இலங்கையைக்கிட்டிவளைத்துக் கொண்டார்களென்று நீ மனமகிழ்ந்திருப்பாயேயானால், நானுமென்னைச் சேர்ந்தவர்களும் என்ன மூடர்களோ? அந்தநினைவைமறந்துவிடு. மேலும் - என்முன்னாகத் தோன்றுகின்ற எப்படிப்பட்ட வஸ்துக்களானாலும், அவைகளெல்லாம் விளக்கின்முன் விட்டிற்பூச்சிபோல அழிந்துபோய்விடுமல்லவா? அதிகபராக்கிரமசாலிகளான வெற்றிபெற்ற சிலராக்ஷசவீரர்களை அயோத்திக்கும் மிதிலாபுரிக்கும்போய் அங்குண்டான உன்பந்துக்களையும் - மாமிமார்களையும் - உன்னைப்பெற்ற அப்பன் ஜனகராஜனையும் - கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டு வரும்படியாகவும், ஒருவேளை அவர்களெதிர்ப்பார்களாகில் அப்படிப் பட்டவர்களுடைய தலைகளை யறுத்துப் பச்சையுதிர மொழுகும்படியாய் என்னுடைய கண்முன்பாகக் கொண்டுவரும்படியாகவும் ஆக்கியாபித் தனுப்பியிருக்கின்றேன். இதோ வெகுசீக்கிரமாக வரப்போகிறார்கள். அதற்காகவே நானிங்கு காத்திருக்கின்றேன். என்று சொல்லினான்.

இப்படிச்சொல்லி இராவணன்பயமுறுத்த சீதாபிராட்டியார் நடுங்கி, இஃதென்ன காலக்கேடா யிருக்கின்றதோ? நெருப்புக்குச்சமமான வென்னை மாயவஞ்சனைசெய்து கொண்டுவந்து வைத்திருக்கின்ற சண்டாளர்களுக்கு எந்தக்காரியந்தான் அருமையாகப்போகிறது? என்று பற்பல ஆலோசனைகளைச்



செய்து பெருமூச்சுவிட்டு, ஐயோ! இங்கே நானிப்படியாகவென்று என்தலையிலெழுதிய கபடனாகிய பிரமதேவர், அங்கே என்மாமியார் முதலானவர்களுக்கு மிப்படியே யெழுதியிருக்கமாட்டாரோ? ஆகையால் அவரு நம்மிடத்தில் கல்லிருதையுடையவராகத்தா னிருக்கின்றார். ஒருகாலத்திலும் தருமம் பொய்த்துப்போகாதென்று உலகத்தார் சொல்லுவார்களே: அந்தவார்த்தை பொய்த்துப்போகும்படிக்குத் தருமமும் பொய்த்துப்போயிற்றோ? என்று தனதிரண்டு கண்களிலும் நீர் தாரைதாரையாய்ப் பெருகும்படியாகப் புலம்பிக்கொண்டிருந்தாள்.

## மகோதரன் பிடித்துவந்த மாயாஜனகனைச் சீதாபிராட்டியார் தன்றந்தையென வெண்ணிப் பிரலாபித்தல்.

கவி.

ஆயதுகாலத்தாங்கோ ரரக்கனைச்சனகனாக்கி
வாய்திறந்தரற்றப்பற்றி மகோதரன்கடிதின்வந்தான்
தீயெரியனையாள்முன்னர்க் காட்டினன்வணங்கக்கண்டாள்
தாயெரிவீழக்கண்ட பார்ப்பெனத்தரிக்கிலாதாள்.

அப்போது மகோதரன் மருத்துவனென்னுமோர் இராட்சதனை ஜனகராஜனைப்போல ரூபமெடுப்பித்துக் கையிற்கயிறிட்டுக்கட்டிக்கொண்டு பெருங்கூச்சலிட்டு அதிவேகமாயோடிவந்து, காலகோடி விஷத்திற் கொப்பானவனும் தீக்கண்ணனுமான இராவணனுக்குமுன்னே விடுத்தான். அதைச்சீதாபிராட்டி பார்த்து, இதை மாய்கையென் றறியாதவளாய் நெருப்பில்விழுந்த தாய்ப்பறவையைக்கண்ட குஞ்சுபோலச் சகியாதவளாகி, உடல்பதைத்துக்கைகளை நெரித்து முகத்திலிரண்டுகைகளாலு மோதியறைந்துகொண்டு, மெய்சோரிந்த நெருப்பை மிதிக்கக்கூடாமைபோலத் தனது தாமரைமலர்போன்ற பாதங்களைப் பூமியிற்படிவையாமற் பதைபதைத்து, உள்ளும்புறம்பும் கொதித்துத் தீமூழ்கிருந்து புலம்பத் தொடங்கினாள்.

ஓ தெய்வமே! தெய்வமே! சத்தியமென்பது மறைந்துவிட்டதோ? என்னுடைய பதிவிரதாதருமமானது இந்த உலகத்தைக் கட்டுவிடுமே: இந்தவஞ்சகர்களாகிய ராக்ஷசர்களுக்குத்தானோ ஆண்மையிருக்கத்தக்கது? மற்றவர்களுக்குக் கிடைக்கத்தக்கதல்லவோ? அஃதப்படியானால் நான் பிழைத்திருப்பேனென்று நம்பத்தக்கதோ? என்று புலம்பிய எம்மாதாவாகிய சீதாபிராட்டியார் அங்கே வந்திருக்கின்ற மாயாஜனகனைப் பார்த்து, ஐயா என்பிதாவே! பெரிய தவத்தைச்செய்து என்னைப்பெற்று அருமை பாராட்டிவளர்த்த உமக்கு இப்போதென்பொருட்டுவந்த பொல்லாங்கு மிதுவோ? ஓ தர்மமே ஸ்வரூபமாகப்பெற்று எல்லா வுயிர்களுக்கும் தாயுந்தந்தையுமாகிவந்த மகாதவசிரேஷ்டரே! ஓ வந்தவிருந்தினர்களுக்கு முன்னே அமுதளித்துப் பின்னே பெண்டு பிள்ளைகளோ டுண்டுகளிக்கும் பாக்கியவானே! ஓ அளவற்ற நல்ல தவங்களைச்செய்த என் அப்பனே! உமக்குச் சத்துருக்களாகவிருந்த

எல்லாரையும் வென்று வெற்றிபெற்றிருக்கின்ற நீர், இந்த அற்பர்களாகிய ராக்ஷசர்களைத்தி லகப்பட்டுக்கொண்டது பூர்வம்செய்த மாதவசேஷமோ?

ஓ மதுரமாகிய தேனொழுகுகின்ற வாடாத வெற்றிமாலையைத் தரித்த உத்தமனை என்னப்பனே! இவ்வுலகத்தில் உம்மைப்போல யாகஞ்செய்த பேர்களு மிருக்கின்றார்களோ? மகா பாபாத்துமாக்களாகிய இந்த ராக்ஷசர்களால் வச்சிராயுதத்திற் கொப்பாகிய உம்முடைய தோள்கள் கட்டப்பட்டதென்னவிதியாயப்? இதை யிந்தப் பாபிஷ்டிக் கண்ணினாற் பார்த்திருந்தும் ஆவியைப்போக்காம லிருப்பது தென்னஜென்னமாகும்? என்று பற்பலவாகச் சொல்லி, ஆவியில்லாத சித்திரப்பிரதிமை போல மூர்ச்சையடைந்து, ஆகாசத்திற் றோன்றுகின்ற மின்னற்கொடியானது பூமியில்வந்து படுத்ததுபோலச் சொர்ணமயமாகிய திருமேனியானது மண்படியும்படியாகப் புரண்டு, செவந்த அதரத்தையுடைய அச்சீதாபிராட்டியார் மின்னும்வாய்திறந்து பெண்ணன்றிற் பக்ஷியைப்போல் அழுதுபுலம்புவதாயினள்.

கலி.

பிறையுடைநுதலார்க்கேற்ற பிறந்தவிக்கடன்கள்செய்ப
இறையுடையிருக்கைசூழ்ந்து சென்றுய்வந்திறுத்தலாநீர்
சிறையிடைக்காணநின்று சிறைபெறுஞ்சேர்த்தவாறே
மறையுடைவரம்புநீக்கா வழிவந்தமன்னர்நீரே.

வன்சிறைப்பறவையூரும் வானவன்வரம்பின்றாயப்
புன்சிறைப்பிறவிதீர்ப்பா னானெனப்புலவர்கின்றார்
என்சிறைநீர்க்குவாரைக் காண்கிலேனென்னின்வந்த
உன்சிறைவிசிக்கவல்லா ரியாருளருலகத்துள்ளார்.

பண்பெற்றோர்கேடாப் பகைபெற்றய்பகழியாய
விண்பெற்றாலெனினுகன்றால் வேந்தராயுயர்ந்த மேலோர்
எண்பெற்றபழியும்பெற்று மிருகின்றாற்பெற்றதன்றால்
பெண்பெற்றுபதனாற்பெற்று யாரின்னபேறுபெற்றார்.

சுற்றண்டபாசாஞ்சித் கண் வெயாறிங்குநின்றாற்ற
வெற்றன்கொன்றுநீங்கா விழுதிறுகுண்டையென்னப்
பற்றுண்டகாளையாளாய் பாவிசேவறும்மையெல்லாம்
வீற்றுண்டேனைக்குநீறும் விதியுண்டோகவில்வீழ்ந்தால்.

இருந்துதான்பகையெல்லா மிறகண்டளவிலின்பம்
பொருந்திகைக்கலெனக்கோன் றிருவடிபுனைந்தேனல்லேன்
வருந்திகைவெகொளும்மை வழிகொடுபடுத்தேன்வாயால்
அருந்தினையோத்திவந்த வசர்தம்புகழுமம்மா.

கொல்லெனக்களவற்காக்கோர் கெடுப்பகைகொடுத்தேனென்கை
கல்லெனத்திரண்டதோளைப் பாசத்தாற்கட்டக்கண்டேன்
இல்லெனச்சிறந்துநின்ற விரண்டுக்குமின்னல்குழ்ந்தேன்
அல்லலேநெலையியறையா வரியற்றேனிறக்கலாதேன்.



இணையறுவேள்விமேனு லியற்றியின்றெடுத்தவெற்றை
புனையுறுநிரடோனர்த்துப் பூழியிற்புரளக்கண்டேன்
மனைவினைமுடித்தென்கையை மந்திரமாயிற்றொட்ட
கனைவிளையிலையென்காண்ட லின்றியேகழிகின்றேனே.

அன்னையீரையன்மீரே யாருயிர்த்தங்கைமீரே
யென்னையின்றெடுத்தவெற்றைச் செய்தியிதாதுமொன்றும்
முன்னமீருணர்ந்திலீரோ வுமக்கும்வேறுற்றதுண்டோ
துன்னருநெறியின்வந்து தொடர்ந்திலீர்துஞ்சினீரோ.

மேருவிற்கும்பர்சேர்ந்து விண்ணினைமீக்கொண்டாலும்
நீருடைக்காவன்சூழ்ந்து மெய்தலாநெறியிற்றன்றால்
போரிடைக்கண்டாரேனும் வஞ்சனைபுணர்த்தாரேனும்
ஆருமக்கறியற்பாலா ரனுமனுமுனரேதம்பால்.

சாதமுற்றுவினைத்தக்தார் தவம்புரியாற்றல்சான்ற
பாதனைக் கொணர்தற்கேனு மையுறவில்லையன்னுள்
வாதனும்வாழ்ந்தானல்லன் றம்பியுமினையன்வாழா
விரதமுற்றறத்தினின்றும் கைகொலாம் வினைவமேல்வேல்.

அடைத்ததுகடலைமேல்வந் தடைந்ததுமதிலையாவி
துடைத்ததுபகையைச்சேனை யெனச்சிலர்சொல்லச்சொல்லப்
படைத்ததோருவகைதன்னை வேறொருவினையம்பண்ணி
உடைத்ததுவிதியேயாகில் தன்வலியுரைப்பார்யாரே.

ஓ வேதவரம்பைக் கடவாத வசிஷ்டர்களுடைய சந்ததியிற்பிறந்த ஐயா! என்னைப் பாணிக்கிரகணஞ்செய்த என் பிராணநாதராகிய ஸ்ரீராமமூர்த்தியினுடைய அயோத்தியாபுரிக்கு என்னும்வாரதவரல்லாத நீர், அடியேனைச் சிறையிருப்பிற் காணவேண்டு மென்று நீரும் சிறைபட்டுவந்தீரோ? ஓ மஹா ராஜனே! மகாபலமுள்ள இறகையுடைய கருடபகவானையே வாஹனமாக ஆரோகணித்து வருகின்ற சாக்ஷாது ஸ்ரீயப்பதியானவர், தம்மை ஆசிரயித்தவர்களுக்குமாய்க்கட்டாகிய இந்த அற்பப்பிறவியை நீக்குவாரென்று புத்திமான்களெல்லா நிச்சயித்திருக்கின்றார்கள். இப்படிக்கிருக்க-என்சிறையைநீக்கும் படியான ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரராகிய அவ்விஷ்ணுவை இன்னும்வரக் காணவில்லை. என்னிமித்தமாகக் கட்டுப்பட்ட உம்முடைய சிறையைநீக்கத்தக்கவர்கள் இந்த லோகத்தில் யாரிருக்கின்றார்கள்? இந்தக் குணமுடையர்களிடத்தில் அதர்மவழியான பகையைப் பெற்றீரே; ஐயா! எதிர்த்துநின்று அம்புகள்பட்டுமாண்டு வீரசுவர்க்கம் பெற்றீரேயானாலும் பெருமை உண்டே: உலகத்திலுள்ள வீரத்தானுயர்ந்த க்ஷத்திரியர்களெல்லாம் பரிகாசிக்கும்படியானீரே: எக்நாளு நிலைநிற்கும்படியான பாவத்திற்கு முன்னாய்விட்டீரே; இந்த நஷ்டம் உம்மாலுண்டாயிற்றென்று நினைக்கலாமென்று லும்மாலல்ல. பாபியாகிய என்னைப் பெண்ணாய்ப்பெற்றீரே அதனாலுண்டாயிற்று.

ஓ எனதருமைப்பிதாவே! இப்படிப்பட்ட பேறுபெற்றவர்கள் நம்மையல்லாமல் யாரிருக்கின்றார்கள்? நானிறந்துபோகாமல் உயிருடனிருந்து சத்து

ருக்களெல்லா நாசமடையக் கண்டபோதிலும், நானொருத்தியும் கண்டவ
ளல்ல. உங்களெல்லாரையும் வருத்தப்படுத்தி நாசமாக்கிவிட்டு, அயோத்தி
யினிராஜவம்சர்களுடைய கீர்த்திகளெல்லாம் பிடாரியைப் போல உண்டு
விட்டு, என்னுயகரைக் கொல்லுங்களென்று இந்த லங்கையிலொரு கொடிய
பகையைச் சம்பாதித்துவைத்து, எம்பிதாவாகிய உம்முடைய மலைபோலத்
திரண்ட தோள்களையும் பாசத்தாற் கட்டியிருக்கவும் கண்டேன். இப்படி
புகுந்த வீட்டிற்கும் - பிறந்தவீட்டிற்கும் - அழியாதுக்கத்தைக் கொண்டு
வந்துவிட்டவள் நானல்லவோ? நானென்ன சாமானியமானவளோ? கொஞ்
சமாவது என்னிடத்திற் கிருபையென்பதுண்டோ? இனிநா னுயிருடனிரு
க்கலாமோ? ஆனபடியால் நான் செத்தபோதிலு மென்னகுறை? அப்பொழுதா
ன்றுமில்லை. அளவில்லாத உயர்ந்த யாகங்களை முன்செய்து என்னை வேண்டு
மென்று பெற்றுக்காப்பாற்றிக் கரையேற்றின எம்பிதாவாகிய உம்மை, கை
விலங்கிட்டுப் பற்றியிழுத்து உம்முடைய மேனி புழுதியிற் புரளுகிறதைக்
கண்டேன்.

அல்லாமலும் - என்னை மணம்புரிந்து, செய்யும் சடங்குகளைச் சிறப்பு
றமுடித்து, மந்திரவிதிப்படி பாணிக்கிரஹணம்பண்ணின பெரணநாயகருக்கு
மிந்தத்துன்பத்தைச் சொல்லாமலே முடிந்துபோகின்றேனே? அல்லதுசொல்
லி இடிந்துபோகின்றேனோ? ஒன்றுந்தெரியாது. ஐயோ என் தாயாரே! ஓ என
க்குப் பெரியோர்களாயிருக்கின்ற தமக்கைமார்களே! ஓ என்னுடைய யான
உயிர்போன்ற தங்கைமார்களே! என்னைப் பெற்றெடுத்துவளர்த்த இந்தகப்
பனுக்கு இந்தத் துன்பங்களைத நீங்கள் கொஞ்சமாவது ஆலோசித்துணை
ர்ந்தீர்களில்லையோ: அல்லது உங்களுக்கு மேதேனும் துன்பம்வந்து விட்ட
தோ? அல்லது கூடவே நீங்களும் வந்து வழியி லிறந்துபோனீர்களோ? இந்த
ச்சண்டாளர் மேருமலைக்கு மப்பாலாகப்போய் ஆகாசமார்க்கமாய் வந்தபோ
திலும், அநூற்றுமுப்பட்ட காவலையுடையமிதிலாபுரியினுள்ளே நுழைகிற
தற்கு முடியாதே: அப்படிக்கில்லாமல் ஒருவேளை போர்க்களத்திற் பிடித்து
க்கொண்டு வந்துவிட்டாலும், வேறேயொரு மோசஞ்செய்து என்னைக் கொ
ண்டுவந்தபடி கொண்டுவந்து விட்டாலும், நமது பிதாவாகிய ஜனகமகாராஜனை
இராக்ஷசர்கள் பிடித்து இலங்கைக்குக் கொண்டுபோய் விட்டார்களென்று
தெரிவிக்க அநுமானிருக்கின்றானோ? இல்லையே; உங்களுக்குபாரதிவிக்கப்போ
கின்றார்கள்?

ஐயோ! சத்தியசந்தரான இந்த ஜனகமகாராஜனைக்கொன்றவந்த சண்
டாளர்கள் தர்மத்தைச் செய்து வல்லமைபெற்றிருக்கின்ற . என்மைத்துனரா
கிய பரதமகாராஜனையும், அவருக்கிளைய சத்துருக்ன மகாராஜனையும் கொன்
டுவருகிறதற்குச் சந்தேகமில்லை. அவர்களிறந்து ஒருநாழிகைமுங்காணாத குறுந்
தைகள். ஆ தெய்வமே! விரதங்களை யனுஷ்டித்துத் தர்மமார்க்கத்தில் நில
நிற்கின்றபேர்களுக்குண்டாகிறநன்மை இதுதானோ? இதோ வானரசைனி



யங்கள் சமுத்திரத்தை அணையிட்டதென்றும், அச்சமுத்திரத்தைத்தாண்டிவந்
து இலங்கைக்கோட்டையின் மதிலை முற்றுகைபோட்டுக் கொண்டதென்றும்
சத்துருக்களைச் சம்ஹரித்ததென்றும் சிலர் வந்து சொன்னவார்த்தைகளைக்
கேட்டுக்கேட்டு அடைந்திருந்த சந்தோஷத்தை; வேறொருமோசமான செய்
கைவந்து சிதைத்துவிட்டதே: ஐயோ என் ஊழ்வினையே! என்று பெருமூச்
சுவிட்டு மனந்திகைத்து மூர்ச்சையடைந்து, மறுபடியு மூர்ச்சைதெளிந்து சீ
தாபிராட்டியா ரழுதுகொண்டிருக்கின்றார்.

இராவணன் ஜனகனுக்கும் சீதைக்கும் சில ஆதரணைகூறிவேண்ட,

அதற்கவ ளிவ்வியாவனகூறிக் கடிதல்.

கலி.

எங்குவாரினையபன்ன விழையகரேற்றமெல்லாம்
வாங்குவாளரக்கனுற்ற மனமகிழ்ந்தினிதிறைக்கித்
தாங்குவாளல்லமென்ப மிவனையுந்தாங்கித்தானும்
தூங்குவாளென்னவுன்னி யினையனவுரைக்கலுற்றான்.

அப்போது தேவர்களுடைய வல்லமைகளை யெல்லாம் பயந்தர லொளி
க்கச்செய்யத்தக்க வெற்றிவாளைக் கையிற்பிடித்துக்கொண்டிருக்கின்ற துரா
த்துமாவாகிய இராவணன் அதிக மனமகிழ்வுடனே சீதாபிராட்டியாரைக் கு
ளிர்ந்தமுகமாய்ப் பார்த்து, இவளதிக துக்கத்தைச் சகிக்கும்படியான கடின
இருதய முடையவளல்லள். இவளை யினிச் சமாதானப்படுத்தி நமதெண்ணப்
படிச் சந்தோஷிக்கலாமென்று தன்துன்மதியா லெண்ணிச் சில வார்த்தைக
ள் சொல்லுகிறான். ஓ சீதா! உன்னைச் சேரவேண்டுமென்கின்ற ஆசையால் நி
னைக்கிறதற்கும் சகிக்கமுடியாத இந்தப் பெரிய துன்பத்தைச் செய்துவிட்
டேன். இந்தத் தப்பிதத்தைப் பொறுத்துக்கொள். இனி மிதிலாபுரியிலுள்ள
வர்களை வேரறக் கொல்லுகிறதில்லை. இவனிறந்தாலு மிவனுக்கு மறுபடியு
ம் பிராணனுண்டாகச் செய்கிறேன். ஓ அப்ஸரஸ்களுக்குச் சமமாய் நடக்கின்
ற சீதையே! தேவலோகமானாலும், இந்தப் பதினாலுலோகமானாலும், இந்த
ப் பெரிய லோகமூன்றிலுள்ள என்னரசாக்ஷியே யானாலும்; இந்த வெற்றிமா
லையை யணிந்த உன்பிதாவாகிய ஜனகராஜனுக்கே சொந்தமாக்கி விடுகிறேன்.
இப்போதென்றாற் சகிக்கக்கூடாத காமநோயைமாத்திர நீக்கிவிடுவாயேயானா
ல், உன்னையே தெய்வமாகவணங்கி உன்னுத்தரவின்படி நடக்கிறேன்.

அப்படியல்லாமல் இந்த லங்காபட்டணத்தை இவனுக்குக் கொடுத்துவி
ட்டு என்னை வேறேயோரிடத்தி லிருக்கும்படி நியமித்தாலும், அப்படியே இ
ருக்கின்றேன். எல்லா ஐஸ்வரியங்களையும் கொடுக்கும்படியான சங்கநிதி மு
தலிய மூன்று நிதிகளையும் கொடுத்துவிடுகிறேன். குபேரனிடத்தில் நான்செ
யித்துப் பறித்துக்கொண்ட புஷ்பகவிமானத்தையும் பொதுவாயேறும்படிக்
குக்கொடுக்கிறேன். தேவர்களையெல்லாம் வெற்றிகொண்ட இந்தவாளாயுதத்
தைவேண்டுமென்று கேட்டாலும் கொஞ்சமாவது தடையின்றிக் கொடுத்து

விடுகிறேன். இந்திரன் சூடிக்கொண்டிருக்கிற தேவசாம்ராஜ்ய கிரீடத்தை அந்தத்தேவர்களெல்லாம் இவனை வணங்கும்படியாக மந்திரவிதிப்படியே இவனுக்குச்சூட்டி, தேவஸ்திரீகளெல்லா மிவனுக்கு அடிமைவேலை செய்யும்படியாக நானும் இவனிடம் ஊழியங்கேட்டு நிற்கின்றேன். உன்னுடைய அழகிய பவளம்போன்ற திருவாயாற் கிருபையாக ஒருசிறுவார்த்தை சொன்னாலும் போதும்.

இவ்வுலகமெல்லாவற்றையு மீன்ற என்பாட்டனாகிய பிரமதேவன் எனக்குக் கொடுத்தவரங்களை யெல்லாம் உன்தக்கைக்குக் கொடுத்து, யானே அடிமையாளரைப்போல் குற்றேவல்செய்து நிற்பேன். தேவாமிர்தத்தோடு பிறந்த இலக்ஷ்மியே நீயல்லாமல், அவள்வேறேயில்லை. அப்படிவேறேயிருந்தால் அவளும் உனக்கு அடிமைசெய்வாள், தேவர்களும் - முனிவர்களும் - மற்றபெரியோர்கள் யாவரும் தாமேயோடிவந்து, உன்னுடைய பிதாவாகிய இவனுடைய பாதத்தில்விழுந்து சொன்ன ஏவலைச் செய்வார்கள். சித்திரப்பாவையொத்த நீ இவனுக்குப் பெண்ணாய்ப் பிறந்திருந்தால், இத்தனைநாள் ஒரு பிரயோசனத்தையும் காணவில்லை. இன்னமும் அப்படியிராமல் இப்போதே எல்லா நன்மையும் இவனடையப் போகின்றான். நீயிந்த மூன்றுலோகச்செல்வத்தையும் உன்னியமனப்படி யாவருக்குவேண்டுமோ அவர்களுக்குக் கொடுப்பாய். எனது நெஞ்சிலுள்ள இச்சையைமாத்திரம் நிறைவேற்றவேண்டும். என்றிராவணன் சொல்லக்கேட்ட சீதாபிராட்டி எதிரேகிடக்கிற அந்தத்துரும்பைப் பார்த்து மீட்டும் சொல்லுகிறாள்.

கலி.

இத்திருப்பெறுகிற்பானு மித்திரனிலங்கை தங்கள்
பொய்த்திருப்பெறுகிற்பானும் வீடணன்புலவர்கோமான்
கய்த்திருச்சரங்களுன்றன் மார்பிடைக்கலக்கற்பால
மைத்திருநிறத்தான்றனென் றலைமிசைவைக்கற்பால.

அடா துன்மார்க்கத் துரும்பே! இவ்வைஸ்வரியங்களையெல்லாம் பெறப்போகிறவன் இந்திரனாகும். உங்கள் பொய்வாழ்வான இந்தலங்காராஜ்ய முழுவதையும் விபீஷணாழ்வான் பெறப்போகிறான். தேவதேவராகிய ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரருடைய திருக்கரத்திலுள்ள திவ்யாஸ்திரங்கள் உன்மார்பைச் சின்னபின்னப்படப் பிளக்கப்போகின்றன. அந்தநீலமேகஸ்யாமளரூபரான ஸ்வாமியினுடைய திருவடிகளைத் தரிக்கிறதற்கு என்தலை உரிமையாயிருக்கின்றது. உன்னைப்பார்த்துச் சிரித்துக்கொண்டே சக்ரவர்த்தித்திருக்குமாரருடைய நாமமுத்திரித்திருக்கின்ற பாணங்கள் உன்மார்பிற்புகுந்து, சல்லடைக் கண்களாய்த் துளைக்கப்போகின்றன. உனக்குத் துருத்த புத்திசொல்லப் போகின்றவைகள், ஸ்வாமியின் கோதண்டத்திற் பூட்டிய நாணிலிருந்து மலைகளெல்லா நடுங்கிப் பொடிப்பொடியாயுதிரும்படிப் புறப்படப்போகின்ற மகாதிவ்யசரவருஷங்களே; இப்போதியாவருஞ்சொல்லிக் கொள்ளுகிற வார்த்தையுமொன்றிருக்கின்றதைச்சொல்லுகிறேன் கேள்.



அற்பத் துரும்பே! காக்கைகள் தங்கள் மூக்குகளால் உன் கண்களைக்குத்திக்கிளறும்படியாக, செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய ஸ்வாமியின் கோதண்டத்திலிருந்து அளவற்ற பாணங்கள் புறப்பட்டு வரப்போகின்றன. பிறகு உனதழகுள்ள மாலைகளணிந்திருக்கின்ற மார்பை எக்களித்துக்கொண்டு புலால்நாறுகின்ற வாயையுடைய பிரேதங்களெல்லாம் தழுவப்போகின்றன. எங்கள் ஸ்வாமியினுடைய நாமமுத்திரித்திருக்கிற பலம்பொருந்திய திவ்யாஸ்திரங்களினாலே கோரதந்தங்களையுடைய பெரியவாய்களோடும் கூடிய உன்தலைகள் சின்னபின்னப்பட்டுச் சிதறி நீபோனவிடம்போனவென்ற சமாசாரத்தைத் திவ்யஞானியாகிய வாலிகுமாரனான ஏனாதருமைப்புத்திரன் அங்கதனென்பவன்வந்து சொல்லப்போகிறான். அதைத்தான் நானிருந்துகேட்கப் போகின்றேன் அக்காலத்தைக் கேள்விப்பட்ட பேர்களுக்கெல்லாம் சந்தோஷமாயிருக்கப்போகிறது. இனக்காலத்தில் உன்மகனை இந்திரஜித்தனின் னுயிரை எங்களிளைய பெருமாள் பிரயோகிக்கப்போகிற பாணங்கள் உண்டுவிட, அவனுடலை நாய்கள்தின்ன, ஐயோ! என் மகனிறந்தானே; என்மகனிறந்தானே; என்று நீ புலம்பி வெந்தழியப்போகிறாய். அப்படி நீயழுகிறதை நல்லோருங்கேட்டுச் சந்தோஷப்பட்டுச் சொல்லுகிற வார்த்தையையும் நீ கேட்கப்போகிறாய். அடா சண்டாளத்துரும்பே! இப்போது நான் சொன்ன வார்த்தைகளும் தப்பாது முடியுமென நிச்சயி; என்று சொல்லி முடித்தனள்.

## இராவணன் மாயாஜனகனைச் சீதைக்கறிவுறுத்த, அவளவனைச் சந்தேகித்துச் சினத்தல்.

கலி.

வெய்யவனிவைகேட்டு வெகுண்டெழுந்துவீரக்
கய்யலுமிலைக்குறப்பேழ்வா யெயிறுபுக்கறுக்கக்கவ்வி
ஐயன்மெய்கொடடேலோ டயோதரன்றமர்த்தானின்று
பொய்யுறுற்றுதைத்தவெண்ட விசையுமோதிப்பனென்றான்.

அன்னவன்றனைப்பயமின்றா ஜனகன்றிருக்கவாவி
பொன்றினனுருவின்றந் தரையிடைக்கிடத்தபொய்யோன்
இன்றிதுவெனவெண்ணி யென்னையேக்குவைத்திடுமிட்
கொன்றனையாதிடென்று விலையளைகூறுகின்றான்.

இவ்விதமாய்ச் சீதாபிராட்டியார் சொல்லக்கேட்ட மகாதுஷ்டனான இராவணன் அக்கினிப்பொறிபறக்கக் கண்களைவிழித்து, பலம்பொருந்திய தன் கைகளைமுறுக்கி, இதழ்களைப்பல்லாலழுத்திக்கடித்துச் சீதையின்மேற்பாயும்படி யோடினான். அப்போது துஷ்டமந்திரியாகிய மகோதரன் இராவணனைத் தடுத்து, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! இம்மாதர்சிரோமணி தன்தகப்பன் வேண்டியபுத்திசொன்னால் கேட்பாள். நீர்கோபிக்கவேண்டாம். என்று சமாதானப்படுத்தவும், இராவணன் திரும்பிவந்து அங்கிருந்த ஆசனத்தின்மீது உட்கார்ந்தான். பின்பு உயிர்போனவனைப்போலத் தரையில்விழுந்துகிடந்த மாயாஜனகன்

சீதாபிராட்டியைப் பார்த்து, அம்மா சீதா! நீ இந்த ராவணனிஷ்டப்படி இசையாவிட்டால், என்னையும் - என்குலத்தையும்-நீயே கொன்றுவிட்டவளாகிறாய். வெண்டாமரை செந்தாமரை புஷ்பங்களின்மேலிருக்கின்ற சரஸ்வதியு லக்ஷ்மியும் தம்மையடையும்படி விரும்பிமுயல்கின்ற எல்லாருக்குமுரியவர்களாகவிருக்கிற படியினாலே யல்லவா? அவர்களுக்குப் பொதுமகளிரென்று பெயருண்டாயிருக்கின்றது. இஃதுனக்குத் தெரியாதா?

ஓ பாவியேனுக்கென்றுதித்தபெண்ணே! உன்னிமித்தமாக என்னுயிர் போவது உனக்கு நல்லதோ? சிறையிலகப்பட்டு வருந்தப்படுகிற நீ, தேவர்களுக்கெல்லா மிராஜனான இந்திராவணனுக்குப் பட்டத்துத்தேவியாயிருப்பது உனக்குப்பொல்லாததோ? என்தாயே! என்னை யென்பந்துக்களுடனே மிகுந்த ஐஸ்வரியத்தை அனுபவிக்கும்படி உயிர்வாழச்செய்து, உன்னையுமிந்தக் கொடியசிறையிலிருந்தும் விடுவித்து இன்பமடையச் செய்யக்கடவாயென்றுகூறி அச்சீதாபிராட்டியாருடைய திருவடிகளுக் கருகேவிழ்ந்து, இடியுமுதிரும்படி ஓவென்றலறினான்.

கவி.

அவ்வுரைகேட்டநங்கை செவிகளையமைப்பொத்தி
வெவ்வுயிர்த்தாவிதன்னி வீங்கினள்வெதுளிபொங்கி
இவ்வுரைபெற்றைநகூற வின்னுயிர்காழ்க்கைபேணிச்
செவ்வுரையன்றிதென்றுச் சிறிதின்றினையசொன்னாள்.

இவ்வண்ணம் மருத்துவனாகிய மாயாசனகன் சொல்லிய தீமைமொழிகளைக்கேட்ட சீதையானவள் அரிகரி ஸ்ரீராமராமவென்றெண்ணி நான்யாது செய்வேனென மனம்புழுங்கிப் பெருமூச்சுவிட்டு உயிர்சோர்ந்தழுது மிகுந்தகோபத்துடனே அம்மாயாஜனகனைப் பார்த்து, தர்மநிஷ்டரான என்பிதா நீதியானவார்த்தை சொல்லுவாரேயல்லாமல் உயிரையிச்சித்து இப்படிப்பட்டவார்த்தைகளைச் சொல்மாட்டாரே: இதுவென்னவிபரீதம்? என்று பயந்துகிளியைப்போல வாய்குழறிச் சிலமொழிகள் சொல்லுகிறாள்.

ஐயா ஜனகராஜனே! தர்மமழியவும், க்ஷத்திரிய வம்சத்திற்குசித்த வீரத்தன்மை நாசமாகவும், சத்தியம் சிதையவும், நிந்தையுண்டாகவும், வேதசாஸ்திரநியமம் க்ஷீணித்துப்போகவும், ஆசாரம்பிழைபடவும், தேவர்களாலும் முனிவர்களாலும் புகழும் படியான உனது புகழ்நீங்கவும், இப்படிப்பட்ட துர்வார்த்தைகளைச் சொன்னாய். ஆனதால் நீ என்பிதாவாகிய ஜனகராஜனாவாயோ? இராஜ முறைமைதெரிந்த க்ஷத்திரியர்களாயினோர் தங்கள் வம்சமெல்லாம் அழியநேரிட்டாலும், தங்களுரிமையானவாழ்க்கை க்ஷீணித்துப்போனாலும், நெஞ்சைப்பிளக்கும்படி அக்கினியைக் கக்கிக்கொண்டு வேலாயுதம்வந்து சின்னாபின்னப் படுத்தினபோதிலும், பெரியோர்கள்சொன்ன ஆஞ்ஞையின்படி வாழ்வார்களேயல்லாமல் முறைமைகெட்டு அதர்மிகளாய்ப்பிழைக்கிறசண்டாளர்களுக்குட்பட்டு வாழ்வார்களோ? ஐயோ! பாவம்: நீயும்-உன்



பந்துக்களும் இந்தப் பூலோகமும் - அழிந்துபோனாலும், நான்முறைமைகெட்டு உயிர் வாழ்ந்திருப்பனோ?

மேலும் - வச்சிரமலைக்குச் சமமான பலமுள்ள திருத்தோள்களிடத்தில் ஜகரிசனும்வாளைத் தாங்கிய ஆயிரந் திருநாமங்களையுடைய சாட்சாத் ஸ்ரீயப்பதியாகிய ராகவபிரானுக்கு அருந்தியசேஷமாயிருக்கிறநான், என்னுயிரைக்காக்கும்பொருட்டு இந்தநாயை மறந்தாவது கையாலேனுந் தொடுவேனோ? அந்த ஸ்ரீகோதண்டபாணியல்லாமல் அன்னியபுருஷர் கண்டுவந்தால், விளக்கில்விழும் விட்டிற்பூச்சியைப்போல மாண்டுபோகமாட்டார்களோ? இராஜசிம்மத்துடன் வாழ்ந்திருக்கின்ற பெண்சிம்மமும், சலதாரைச்சேற்றைத்தின்று சீவிக்கின்ற ஒருசிறுநரிக்குட்டியோடும் வாழ்ந்துகொண்டிருக்குமோ? இவன் நாயினுங் கடைப்பட்டவனுச்சுதே: நல்லது: நீ எனக்குத் தகப்பனானாய். ஆனபோது வெற்றிமாலையையணிந்த வீரசிகாமணியாகிய எனது ஸ்வாமியினுடைய கோதண்டத்திற்குப் பல்லாண்டுகூறி, அந்தவில்லால் நாமிருவரும் மீட்கப்படுவோமானால் மீளுவோம். மீட்கப்படாவிட்டால் பிராணனை விட்டுவிடுவோம். நமக்கென்னகுறை வந்துவிட்டது? அப்படிக்கில்லாமல் தகாதசொல்லைச் சொன்னவளென்று ஒரு நிந்தைவார்த்தையையேன்தேடிக்கொள்ளவேணும்? என்றுசொல்லினாள்.

இப்படிச் சீதாபிராட்டியார் சொல்லக்கேட்ட ராவணன் - அப்படியா? ஆனதாகட்டும். இனிநடக்கிறபடி நடக்கட்டும். இதோ உன்கண்முன் நிற்கின்றானே, இவனல்லவோ உன்னைப்பெற்ற ஜனகராஜன்? இந்தக்ஷணத்தில் இவனைக்கொன்று உயிர்குடித்து விடுகிறேன்பாரென்று தன் உடைவாளையுருவிக்கொண்டான். அப்போது சீதாபிராட்டியானவள் அந்தத் துரும்பைப்பார்த்து, அடா துரும்பே! நீ என்னையுங் கொல்லப் போகிறதில்லை. அல்லாமலும் இவனையும் கொல்லப்போகிறதில்லை. இப்போது நீயும் சாகப்போகிறதில்லை. இந்த உலகையும் அழிக்கப்போகிறதில்லை. இதெல்லாம் அற்பஜெந்துக்களாகிய உங்களுக்குண்டாகுமா?

நானிந்தத் துன்பத்தைநீங்கி அழியாத கீர்த்தியை அடையப்போகிறேன். நீயோ? என்பிராணநாயகர்விடும் திவ்வியபாணங்களால் உன்பந்துசகிதமாய்க் கொல்லப்படப் போகிறாயென்று சொன்னாள். அப்போது மகோதரன்ராவணனைப் பார்த்து, ஓ தேவைஸ்வரியமுள்ள திரிலோகநாயகனான இராவணேஸ்வரா! இந்தஜனகன்மேலென்னதப்பிதம்? இவனானமட்டும் வேண்டினான். இவனைக்கொல்லுகிறது உமக்கொரு லட்சியமேயல்ல. நமக்குப்பகையாய்வந்திருக்கின்ற அந்த ராமலட்சுமணர்களை ஜெயித்துவிடுவோமானால், இந்தச்சீதை எப்பாற் போகக்கூடுமெங்கே? இப்போது தகப்பனைக்கொன்றால் அதை நினைத்துக்கொண்டு இவள் எப்போதும் துன்பப்பட்டுக்கொண்டிருப்பாளல்லவா? என்று தடுத்தான்.

## இராவணன் கும்பகருணன் மடிந்ததாக வானரவீரர்முழக்கின பேரொலி கேட்டுச் சந்தேகித்திருக்கும்போது தூதுவர்களோடிவந்து கும்பகருணன் மரணத்தை அறிவிக்க வறிந்து பிரலாபித்தல்.

கலி.

என்றவன்விலக்கவிண்டணை டிருக்கதோரிருநியின்மன்
ருன்றெனநின்றகும்பகருணவெயிராமன்சொல்ல
வன்றிறற்றூதர்சென்றானை காற்றுரயார்த்தவோதை
சென்றிறவசெவியினூடு தேவர்களார்ப்புஞ்செல்ல.

இவ்விதமான வார்த்தையினால் மகோதரன் தடுக்க இராவணன் கோபந் தீர்ந்தவனாய் அங்கு ஓரிடத்திலிட்ட இரத்தினசிங்காதனத்தில் உட்கார்ந்தான். அச் சமயத்தில் மலைபோலுயர்ந்து வளர்ந்த கும்பகர்ணன் ஸ்ரீராமபாணத்தால் இறந்தானென்று வானரவீரர்கள் கர்ச்சித்துக்கொண்ட சப்தமானது தேவர்களுடைய ஆனந்தகோஷத்துடனே வந்து இராவணன் செவியில் நுழைந்தது. அப்படிவந்து நுழையவே, இராவணன் கம்போடு யோசிக்கப்பட்டு தேவலோகத்தாருக்கும் - வானரசேனைகளுக்கும் - பலம் அதிகரிக்கிறதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. அந்த ரணகளத்தில் நிற்கின்ற அவ்விராமனென்பவனுடைய வில்லிற் பிறந்த நாணோசையின் தருக்க வல்லமையே யென்பது எனக்கு நன்றாய்த் தெரிகின்றது. என் தம்பியாகிய கும்பகர்ணனுக்கு இப்போது துணையில்லாமல் தனித்திருக்கும்படியான சமயநேரிட்டிட்டாற்போலிருக்கின்றதென்று மனதில் துக்கமடைந்தான்.

கலி.

புறந்தருசேனைமுக்கீழ்க்குஞ்சிறைபோக்கிப்போதப்
பறந்தனரென்ன தூதர் செவிமருங்கெய்திப்பையத்
திறந்திறமாகநின்ற நகவிப்பெருங்கடலைசிந்தி
இறந்தனனும்பியம்பிற் கொன்றனனிராமனென்றார்.

அப்படி துக்கப்பட்டிருக்குஞ் சமயத்தில் யுத்தகளத்தில் இராமசுவாமியினது பாணங்களுக்காற்றாது சமுத்திரங் கரைபுரண்டு போகிறதைப்போல வேர்த்து ஓடுகின்ற சேனைகட்கு எப்படி காவலாண்டு கண்கொண்டதியமங்குமோ அதைப் போல சிலதூதர்கள் அதிவிசனமாகச் சோர்ந்து வந்து தத்தளித்த நடையையுடையவர்களாகி இராவணனிருக்கு மகோன்னதத்தை யடைந்து இராவணனைக் கண்டு கண்களில் தாரைதாரையாய் நீர்பெருகச் சமீபத்திற்சென்று மெள்ளக்குனிந்து வாயைக் கரங்களினால் மூடிக்கொண்டு அவன் காதினிடத்தில்மாத்திரம் படும்படியாக உம்முடைய தம்பி கும்பகர்ண மகாராஜன் வரிசை வரிசையாக வானரசேனையைக் கடலையெல்லாம் அடித்து விட்டபின்பு, அவனை இராமன் தன்னுடைய பாணத்தாற் கொன்றுவிட்டானென்று சொன்னான். அதைக்கேட்ட ராவணனானவன் பரிவேடத்துடனே கூடித் தோன்றுகின்ற சூரியனைப்போல் வெந்திமதிலையத் தரித்திருக்கின்ற பத்துக் கிரீடங்களும் தரையில் விழுந்துருளப் பூமியில் வேருந்திற்ற மரமானது தன்பாரத்தால பல கிளைகளுடனே வேர்பறிந்து மண்மேல் விழுவது போலத் திடீரென்று விழுந்து, ஒருவரையொருவர் பிரிந்திருக்கின்ற மன்பத்தைத் தாங்கள் பிறந்தகாலமுதல் இன்றுவரைக்கும் ஒருநாளுமடையாமல் உயிரொன்றும் உடலிரண்டுமாய்ப் பிரியாதிருந்தவர்களாதலால் இன்றைக்குத் தன்னைவிட்டு மாசத் தம்பி இறந்துபோனானென்று அறிவுமயங்கிப் பரவசப்பட்டு, சமஸ்தலோகங்களுஞ் செவிடுபடும்படியாய் புலம்பத்தொடங்கினான்.



கலி.

தம்பியோவானவரைத் தமைமைபிங்காமலுக்கும்
தம்பியோகாண்முகத்தேன் செய்கதைத்தோன்றுவோ
நம்பியோவீத்திரனை காமப்பெரும்புதைத்த
எம்பியோயாளுன்னை யிங்ஙனமுறக்கேட்பனே.

மின்னிலேயமேவேனை யாளுவன்வீழ்த்தான
பின்னிலையுழெவ்ற ஆயிர்போனிடுதிந்தேன்
உன்னிலையிநாமி றேடைக்கவித்தில்
பொன்னுலகினைப் புகாதோபுகழ்த்தாரீர்.

வன்னெஞ்சவனியென்னை நீத்துப்போய்வானடைந்தாய்
இன்னஞ்சிலவோ பொருவவிழ்ந்தின்பாரப்பெறுவார்
பின்னஞ்சவெவாய் விழியக்தினாழ்ந்தின்றார்
தன்னெஞ்சதாமே நடைவாரோதானவர்கள்.

கல்லன்றெருநீறல் காலத்தக்காறெய்கரு
மல்லொன்றுரோணம் வடமேருமாறுடையன்
வில்லொன்றுண்ணிலை வீனிவீத்துமதொன்றும்
சொல்லன்றெறுமென்னைச் சுடுமென்றநதிதான்றும்.

மாண்டனவருந் துலருஞ் சசகரும்மசக்கிரமும்
நின்டிமலோவான்றன் செயலாற்றுகாண்டிரித்தே
நீண்டனவைமாறுடைவன் மேல்லாபுமெய்புறுவ
நீண்டனவாயின்னுறுப்பு நின்றாசிதாறுக்கி.

நோக்கநவைப்பிமார் மானவுசெயப்திலங்கை
போக்கநவயாறுலன்றுன் பொன்றவுமெனப்பிந்தான்
மூக்கறவுமாழ்த்தே ஒழுந்திழலைக்கிடேத்த
ஏக்கறவாலின்னை யிசேர்ஞெருவொயிழ்ந்தாம்.

தன்னைத்தான் தம்பியைத்தான் சூனைத்தலையைத்தான்
மன்னைத்தான் மைத்தலைத்தான் மாருதத்தின் காதலைத்தான்
பின்னைக்கமுத்திறையைத்தான்பெருமுடித்தாய்
என்னைத்தான்கெட்டுவ சென்றுணவாழித்தான்.

வழுமசேம வருட வீரநீதன்னல்
வாழுபணியரத்திழ் பூம்பனர்சிவகூடாய்
ஆழுமலைகளத் துனைதைப்பாநைநுவைப்பப்
பூழியனேமேற் மயின்நனையோபோர்க்களத்தே.

செந்தேன்பருகித் திசைதிசையுகிவாழு
உய்ந்தேனினியின்று நானுமுனக்காவி
தந்தேன்பிழையேன் றனிப்போகத்தாழ்க்கிலேன்
வந்தேன்றொடர மதக்களிறேவந்தேனல்.

ஐயோ தம்பி கும்பகர்ணா! தேவர்களாகிய தாமரைக்காட்டை மிதித்து நசுக்கி அழித்துவிடும்படியான ஓ மதயானையே! ஓ பிரமபுதல்வருடைய குமாரனுக்குப் பிள்ளையாகப்பிறந்த புத்திரசிகாமணியே! ஓ அரக்கர்குல புருஷசிரேஷ்டனே! ஓ தேவேந்திரனுடைய பெருமையைத்தெரியாமல் மறையவடித்தவன் பின் பிறந்தவனே! நானுன் விஷயத்தி லிந்த வார்த்தையும் கேட்டுச் சகிப்பேனோ? ஓ இலைவடிவாய் மின்னலைப்போற் பிரகாசிக்கின்ற வேலாயுதத்தையுடையவனே! நீ இப்போதடைந்த நினைத்தற்கரிய மரணத்தை உன் கண்முன்பாக நானடைதல் முறைமையென்றிருந்தேன். அப்படிப்பட்ட நான் இனி உயிர்வைத்துக்கொண் டிருக்கமாட்டேன். உன்னுயுள் நிலை இப்படியாய்விட்டால், தேவேந்திரன் ஐராவதயானையை நடாத்திக்கொண்டு இனித் தன்னுடைய சுவர்க்கலோகத்திற்கு மறுபடியும்போய்ச் சேரமாட்டானோ?

அப்பா தம்பிகும்பகர்ணா! கடின இருதயத்தை யுடையவனாகி என்னை விட்டுவிட்டு நீமாத்திரம்போய் வீரசுவர்க்க மடைந்தாய். இன்னொருவரும் நம்மில் ஒரு தாய்வயிற்றில் யார்பிறக்கப் போகிறார்கள்? ஓ மின்னலு மொளியில் தோற்றுவிடத்தக்க வேலாயுதத்தை யுடையவனே! உன்கண்முன்வரப் பயப்பட்டு உயிர்வாழ்ந்திருந்த தானவர்களெல்லாம் களித்துக்கொண்டு நமது பகைவன் அற்றுவிட்டானென்று மார்பைச்சரங்களினாற் றடவித்தங்களிஷ்டப்படி எல்லா விடங்களையும் கடிதிற்பிடித்துக் கொள்ளமாட்டார்களா? ஓ மல்லயுத்தத்தில் தேர்ந்த தோளையுடையானே! நீ ஸ்நானஞ்செய்யும் காலத்தில் உன் காலைத்தேய்க்குங்கல் மேருமலை யல்லவா? உன்னையொரு மனிதனுடைய வில்லானது கொன்றுவிட்டதென்னும் இந்த அற்பச்சொல்லலலவோ என்னைச்சுட்டெரிக்கின்றது?

அடா தம்பிகும்பகர்ணா! ஆயுதங்களிலெல்லாம் சிறந்திருக்கின்றவைகளான சிவபிரான்கைச்சூலமும், விஷ்ணுவின் சக்கரமும், இந்திரனுடைய வச்சிராயுதமும், உன்மேல் வந்தகாலத்தில் உன்னைத் தொட்டதுண்டா? ஒன்றும் செய்யமாட்டாமல் ஆகாசத்திலேயே தெறித்து மீண்டுபோய் விட்டனவே: அப்படியிருக்க — ஒரு அற்பமனிதனுடைய மெல்லிய அம்பு உன்தேகத்தினூடுருவித் தடாரித்துவிட்டதா? தங்கள் தோள்வலியைப்பார்த்துக்கொண்டு அவர்கள் பிழைத்திருக்கிறார்களா? என்தம்பிமார் பார்க்கிறதற்கு மிச்சமில்லாமல் மாண்டுவிடவும், சபையில் இந்தலங்கையை அவர்கள் கைப்பற்றிக் கொள்ளவும், என்மாமனாகிய மாரீச னிறந்துபோகவும், என்தங்கையாகிய சூர்ப்பநகை மூக்கிழந்துபோகவும், நான்மாத்திரம் ஒருபெண்ணினுடைய மோகத்தை யிச்சித்து அவ்வாசையா லுன்னை யிழக்கும் இன்னமிருக்கப்பட்டேனோ?



ஆ! ஆ! தம்பிகும்பகர்ணா! அந்த ஸ்ரீராமனையும், அவன் தம்பியாகிய லக்ஷ்மணனையும், அந்தக் குரங்குப்படைக்குத் தலைவனான நளனையும், அப்படைக்கு ராஜனான சுக்கிரீவனையும், அவன்மகனையும், வாயுபுத்திரனான அநுமானையும், இன்னம் கரடிக்கிறைவனான சாம்பவனையும் கொன்று; அவர்களை வேரறமாய்த்துவிட்டாயென்று நான்கேட்காமல் இப்படியாகக் கேள்விப்பட்டேன். இஃதென்னகாரியமாய் முடிந்தது? அப்பா கும்பகர்ணா! இலங்கைப்பெண்கள் கால்பிடிக்கக் குளிர்ந்த தென்றல்வீசுகின்ற இரத்தினமயமான பள்ளியறையில் நித்திரைசெய்துகொண்டிருப்பாயே இப்போது பேய்களெல்லாம் சூழ்ந்துகொண்டு முழங்கைமடக்கி விலாவிற்புடைத்துக் கூத்தாடுகிற வோசையைக் கேட்டுக்கொண்டு, இரணகளத்திற் புழுதிமெத்தையின்மீது தூங்குகின்றாயோ?

ஐயோ தம்பி கும்பகர்ணா! நீ அஷ்டதிக்குகளையும் ஜெயித்துச் செவந்ததேனைக் குடங்குடமாகக் குடித்துக்களித்து வாழ்வுற்றிருக்கின்றதை நான் கேட்டு, இதுவரையிலும் பிழைத்திருந்தேன். இனியின்றைக்கே என்னுயிரை யுனக்குக் கொடுத்து விட்டேன். இனிப் பிழைக்க மாட்டேன். நீ மாத்திரம் தனியாய் மாண்டுபோக நானினி தாமசித்திருக்கமாட்டேன். ஓ ஒப்பற்ற யானைக்குச்சமானமானவனே! இதோ வந்துவிட்டேன்: இதோ வந்துவிட்டேனென் றழுவான். பிரதாபலங்கேச்வரனாகிய தசக்கிரீவன் தன்சத்தம் ஆகாசம்போய் முட்டும்படி இவ்விதமாகச்சொல்லிக்கூவி, ஜானகிப் பிராட்டியாரைக் கொண்டுவந்து சிறையிட்ட தனதுதீச்செய்கையினாலே நேரிட்டபோரிற் கும்பகர்ணன்மாள அதினாற் றுழப் பட்டவென்னும் தன்வினை முதலுடன் இயாவரையு மழவிப்போமென்று பிறவினைப் பொருளும் பொருந்தத் தனக்கிட்ட இராவணனென்கிற பெயரின் பயனைத் தோற்றுவித்தான். இப்படியிவனழுவதைக்கேட்ட மாறுபடாத கற்பினையுடைய சீதாபிராட்டி கோவைக் கனிபோன்ற இதழ் துடிக்கவும்— திருமேனியெல்லா மயிர்க்கூச்செறியவும்-கயல்மீன்போன்ற திருக்கண்கள் குளிர்ப்படையவும்-தமக்குள்ளே நெஞ்சம்பூரித்து, திருமுலைக்குடம் விம்மி, வாடினதிருமேனி வாட்டநீங்கித் தழைத்து, மனமுவந்து, தன்னைவிட்டுப்போன உயிர் திரும்பவு மடைந்ததுபோலாகி ஆனந்தித்தனள். அதுபார்த்து அவளுக்குத் தோழியாகப் பக்கத்தில்நிற்கின்ற திரிசடையடைந்த சந்தோஷம் யாவராற்சொல்லி முடியப்போகின்றது? கும்பகர்ணனுடைய மிகவும்பயங்கரமான தோள்களை முன்னொருகாலத்திற் கண்டு பயமடைந்திருந்த சீதாபிராட்டியார் அவனைத் தம்முடையஸ்வாமி ஒருவராலும் தடுக்கமுடியாத பாணத்தாற் கொன்றுவிட, அந்த வார்த்தையைக் காதாரக்கேட்டு அமுதபானம் பண்ணினதுபோல உடல்பூரித்தாள். அப்போது கண்டவர்கள் இவள் முன்னைய சீதாபிராட்டியாரல்ல. வேறொருவராக்கும். என்று நினைக்கும்படியாயினள்.

அக்காலத்திராவணன் அதியுக்கிர கோபங்கொண்டு, இந்த அறியாத உலகத்தில் என் தம்பியின் பிணக்காடனே அந்த இரண்டுமனிதர்களையு மற்ற வானரர்களையுங் கொன்று பிணக்காடாக அழித்துவிட்டு, என்னைக்குறிப்பவாத மும்மூர்த்திகளையும் அமிர்தபானம்பண்ணி அழியாதிருக்கின்ற தேவர்களையும் பிடித்துக்கொண்டு வந்து சிறையிலிட்டுப்போட்டு விடுகிறேனென்று புறப்பட்டான். இப்படிப்புறப்பட்ட அவ்விடத்திலிருந்தவர்களையும் ஜெயிக்கவல்லவனான இராவணன் மந்திரிகள் சமாதானஞ்செய்யக் கொஞ்சங்கோபமாறி, இதோ இக்கணமே போய் அந்த மனிதர்களைக்கொன்று அவர்கள் ரத்தத்தால் என் தம்பிக்குத் திலதர்ப்பணஞ் செய்கிறேனென்று கண்களில் அக்கினி சொரியும்படிச் சீறிக்கொண்டு சிங்காசனத்தைவிட்டுப் புறப்பட்டுப் போயினான்.

பின்பு மகோதரன் இந்திரஜித்து யாகக்குமண்டபப்போகிறதற் கையாலில்லை, அப்போப்பட்ட கும்பகர்ணனை மெய்த்தழுவுகின்ற சீதையைக்கண்டாகிலை மாண்டுபோனான், என்று மெய்யுறைத்தனுப்ப அங்கிருக்கிற ராக்ஷசர்களுக்குச் சன்னைகாட்டி, மாயாஜனகனை வேஷதரிக்கத்திக் கொண்டுபோய் வையுங்களென்று போர்க்குச் சூட்டிவிட்டுப் போய்விட்டான். அக்காலத்தில் ஜனகனைப்பிரித்த கவலையால் வருந்திகள் கொய்த்த மனையை மணியாத கூந்தலெல்லாம் ஒருசடையாய்க் கவலையாகச் சுற்றுவைத்திருக்கிற சூழ்வையுடைய சீதாபிராட்டியார் கிடக்கிறுள்ள அசோகவனத்தில், அவனைத் தொடுத்துக்கொண்டுபோய் விபீஷணனுடைய புத்திரியாகிய திரிசடையென்பவள் தேவர்கள் தந்தைக்கொப்பாகிய விவாதத்தை சொல்லுகின்றாள்.

திரிசடை சீதாபிராட்டியாருக்கு மாயாஜனகன் வரலாறுரைத்து மகிழ்வித்தல்.

கவி.

உந்தையென் றுவக்கெதி ருருவமாற்றியே
வந்தவன்மருத்தனென் றுணரெனமையலால்
அந்தமில்கொடுந்தொழி லரக்கனுஞ்சின
சிந்தையிறுணர்த்தின னருளின்செவ்வியாய்.

அம்மா சீதாபிராட்டியாரே! உம்முடைய தந்தையென்று அதிகாலையில் உமக்கு முன்பாக உருவமாறி வந்தவன் அவனில்லாத மாயையாற் செய்திருந்தான் மெய்யிலே காணவாகவுடைய மருத்தனென்கிற பெயருள்ள ராக்ஷசனாகும். இவனுமுடைய தம்பனாகிய ஜனகமஹாராஜனல்லவென்று சொன்னாள். இந்தவார்த்தையைக்கேட்ட சீதாபிராட்டியானவள் இத்திரிசடையைநன்னோக்கி இதற்குமுன் சொல்லிய வார்த்தைகளைக்கேட்டு அதாவது சமாதிகாலத்தோறும் நடந்தவைகண்ட அதுபவமாகிலும் நின்றபடியால் இப்போதுசொல்லிய வார்த்தையையும்நம்பி, உண்மையாக இவன் என் தந்தையல்லவென்று சொல்லித் தன்துக்கத்தின் ஒழுக்கமும் ஞானமும் விரும்பும்படியும் அத்திரிசடைக்குச்சொல்லிக்கொண்டு தன் துயரமொருவாறு நீங்கியிருந்தாள். இங்கிப்படியிருக்க இவ்விசேஷமனைத்திலிருந்து சென்ற இராவணனெனுமிராவணன் இனிச் செய்யும்படியான காரியங்களைச் சொல்லுவோம்.

மாயாஜனகப் படலம் - முற்றிற்று.



ஸ்ரீராமஜெயம்.

பதினேழாவது,

# அதிகாயன் வதைப் படலம்.

இப்படலத்தில் கும்பகர்ணன் மடிந்ததைக்கேட்டேங்கித் தன்படைவீரர்களைச் சினக்கக்கண்ட அதிகாயனை தன்வல்லபங்கூறி விடைபெற்று, கும்பன் நிகும்பன் அகம்பன் ஆகிய வீரர்களோடு படையெடுத்துச்சென்று போருக்குவரும்படி இலக்ஷ்மணர்பால் மயிடனென்பவனைத் தூதுவிடுக்க, அத்தூதின் கருத்தறிந்த ஸ்ரீராமர் இலட்சுமணரைச்செல்ல விடைகொடுத்தபோது விபீஷணனவ்வதிகாயனுடைய வலிமையும் வரலாற்றையுங்கூறி, அவரார்வைப்படி நான் அத்தம்பியாரோடு துணை போக. உடனேவானரசேனைகள் ராக்ஷசசேனைகளோடு போராடி மெலிவதை இளையபெருமான்கண்டு தாம்விடுத்தபாணங்கள் எங்கும் பராக்கிரமித்து நிற்க, அக்காலெதிர்த்துவந்த தாருகன்-சாலன்-குலிசன்-சாலசங்கன்-மாலன்-மருத்தன்-சணிச்சி-என்னு பிராக்கதவீரரெழுவரை இலட்சுமணர் மாய்த்ததுகண்ட அதிகாயனுடைய சேனைவீரர்கள் இரண்டுகோடி யானைப்படைகளோடு வந்தெதிர்க்கவும், அவற்றையெல்லாம் பிள்ளையவரு மாஞ்சனேயரு மடித்து ஹதமாக்க, அதுகண்டுவந்த தேவாந்தகனும் திரிசிரனும் அவ்வாஞ்சனேயரோடெதிர்த்து மடிந்துபோக, அக்கால் மகர உக்கிரத்தோடாக்கிரமித்துவந்து போர்விளைத்துச் சற்றுமிளையாது பராக்கிரமித்துநிற்கும் அதிகாயனை இலட்சுமணர் அங்கதன் முதுகில் வாரோகணித்துப் போராடி வாயுதேவன்கூறிய சூழ்ச்சியால் மடிக்க, அப்போதுவந்த நராந்தகன் - உன்மத்தன் - வமமஸ்தன் - கும்பன் . நிகும்பன் - இவ்வைவரு முறையே அங்கதன் - நீலன் - விருஷபன் - சுக்கிரீவன் - அனுமான் - இவ்வைவரால் மடிந்துபோக, அக்காலங்கு மிகுதியா யுறபட்டிருந்த இராக்கதர்யாவரு மிலங்கைக்கோடி அதிகாயனதிடர் வதையை இராவணனுக் கறிவிக்கவு மவன் தன்முகனைப்பற்றி ஒன்றும் தோன்றாதவனுய்க் கிலேசித்ததும் அஃதறிந்த தானியமாலை பிரலாபித்ததும் சொல்லப்படுகின்றது.

இராவணன் கும்பகர்ணன்மடிவைக்கேட் டேங்கக்கண்ட அதிகாயனவன் கும்பன் நிகும்பன் அகம்பனாதியரோடுசென்று இலட்சுமணர்பால் மயிடனைத் தூதுவிடல்.

கவி.

கொழுந்துவிட்ட மூள்ளெரி மடங்கல்கூட்டற
எழுந்தெரிவெருவியா னிருமருங்கினும்
தொழுந்தகையமைச்சரைச் சுளித்துநோக்குறு
மொழிந்தனனிடியொடு முகிலுஞ்சிந்தவே.

இவ்வண்ணம் கும்பகருணனிறந்தானென்று சேதிகேட்ட இராவணன் மனதுகலங்கியழுது தனதிடஞ்சென்று கொழுந்தோங்கி யெரியும்படியாகிய

ஊழித்தீயு நிகரல்லவென்று சொல்லும்படியாகக் குபீர்குபீரென்று கோபாக்கினிப்பொறிகளைக் கண்கள் சிந்தும்படியானவனாய்த் தனதிருபுறத்தும் கைகுவித்து நிற்கின்ற மந்திரிகளாதி படைவீரர்களை முகத்தைச்சுளித்துநோக்கி இடியோடு மேகக்கூட்டங்களுஞ் சிதறிப்போகும்படியாகச் சிலகடுஞ்சொற்களைக் கூறுவதாயினான். ஓ வீரர்களே! நீங்கள் என்னுடைய சேனையையும் ஆயுதங்களையும் உதவியாகக்கொண்டு போகின்றீர்களேயல்லாமல், அந்தக்குரங்கு வீரர்கள் சூழும்படியாகவந்த மனிதர்களுடைய வேகமுள்ள வில்வல்லமையை நீக்கிவந்தீர்களில்லை. நீங்களென் னெதிரே மாத்திர நாங்களவர்கள் படையெடுத்துவந்திருக்கின்ற விடத்திற்குப்போய் எல்லாரையும் கொன்றுவிட்டு வந்துவிடுகிறோம். என்று சொல்லுகிறீர்கள். இப்படிப்பட்ட நீங்கள் என்தம்பி கும்பகர்ணனைச் சாகாமல் தடுத்தீர்களா? அன்றி உங்களுயிரை அவனுடனே போக்கிவிட்டீர்களா? நீங்கள் நல்ல வீரர்களென்று பெயரைமாத்திரம் வைத்திருக்கின்றீர்களேயன்றி, உங்களா லொருகாரியம் வேறொன்றுமில்லை.

அன்றியும் — நானிந்த மூன்றுலோகங்களையும் எனதிஷ்டப்படியாண்டுவருவதற்கு உங்களுதவி யொன்றுமில்லை. நீங்களிந்தப் பெரிய ஐஸ்வரியங்களையடைந்திருக்கிறது நானடைந்த வெற்றியினாலல்லவா? அந்தக் கடனுக்காவது உங்களுயிரை என்பொருட்டுக் கொடுத்துவிட்டீர்களா? இதைவிட எங்களுக்கு வல்லமையில்லையென்று சொன்னாலும் சொல்லுங்கள். நானேதனித்து யுத்தத்திற்குப்போய் அவர்களைத்தோற்படைந்து போகும்படிக்கு ஆதி, வெகுகாலமாக யமனுடைய கலப்பையைப்போலச் சத்துருக்களுடைய உயிரைத் தாகசாந்தி பண்ணிக்கொண்டிருக்கின்ற என்னுடைய கூர்மையான வேலாயுதத்தின்முனை அந்த மனிதர்களுடைய முதுகிற்பொருந்தி உருவும்படிச்செய்து, அவர்களை என்கண்ணாற் பார்க்கிறேன்.

ஆகிலும் இனியுங்களை ஒன்றுகேட்கிறேன். நீங்கள் அந்த மனிதரோடு சண்டைசெய்து வெற்றிபெறுகிறோமென்பீர்களேயானால் சண்டைக்குச் செல்லுங்கள். அல்லதுஉங்களுயிரையெல்லாம் இங்கேயே உன்முன்னே கொடுத்துவிடுகிறோமென்பீர்களேயானாலும் அப்படிச் செய்துவிடுங்கள். இவ்விரண்டில் உங்கள் அபிப்பிராயமென்னவென்று வெகுகோபத்துடனே கேட்டான்.

கவி.

நதிகாய்நெடு யானைமுகாறுமுறா
மதிகாய்குடை மன்னனை வைதுரையா
விதிகாயினும் வீரம்வெலற்கரியான்
அதிகாயனெனும் பெயரானுரைவான்.

அப்போது பிரமதேவனே கோபித்தபோதிலும் தன்னை ஜெயிக்கமுடியாத வீரனும் அதிகாயனென்னும் பெயருள்ளவனும், இராவணனுடைய இளையகுமாரனுமான ஒருவன் அதிகாரனமும் வெட்கமுமுற்று, சந்திரனையும்



தோற்கடிக்கத்தக்க வெற்றிக்குடையையுடைய இராவணனை நிந்தித்து இதனைச்சொல்லுவதாயினான்.

ஓ மகாராஜாவே! சுவர்க்கலோகத்தாரும் பயப்படட்டும். பூலோகத்தாரும் பயப்படட்டும். அகடிதகடன சமர்த்தனான அந்த மகாவிஷ்ணுவும் பயப்படட்டும். யுகாந்தகாலாந்தகனான அந்த உமாநாயகனும் பயப்படட்டும். அவர்களுடனே நீரும் பயந்தீரென்று சொல்லும். அப்படிக்கில்லாமல் என்னைப்பயந்தாகப் பொதுவாகச்சொன்னீரே: அது உமக்குத்தகுமா? மிகுந்த கொடியயுத்தம் செய்தவர்களும் அதிபலாட்டிகர்களுமான தானவர்களை முன்பு நான் கட்டிக்கொண்டுவந்து உமக்குக்கொடுக்கவில்லையா? உங்களோடெதிர்த்த தேவர்களையெல்லாம் நான்குலால சக்கரம்போலச்சுற்றியடிக்கவில்லையா? உலையிற்காய்ச்சிச் செய்யப்பட்ட ஆயுதங்கள் கையிலிருந்தும் ஒருகுரங்கின்காலில் தேய்ப்புண்டுமாண்டுபோன அக்ஷயனைப்போலவும், சிலபாணங்களால் மாய்ந்துபோன உன்தம்பியாகிய கும்பகர்ணனைப்போலவும், அந்தச் சிறுமனிதர்கள் வாய்மொழியால் தங்களுக்குப் பலமிருக்கிறதாக ஏமாற்றினதற்கு உடன்பட்ட மற்றொருதம்பியாகிய விபீஷணனைப்போலவுமா என்னை நினைத்திருக்கிறீர்?

ஐயா! நான்போய் எதிரிகளைக்கிட்டிச் சண்டைசெய்து, அந்தக் கர்வங்கொண்ட வானரசேனைகளையெல்லாம் சூழ்ந்துகொண்டு, அவர்களுடைய தலைகளைவெட்டிப் பூமியில்தள்ளி, அந்த இரண்டு வில்வீரர்களையும் பின்கட்டாய்க்கட்டிக்கொண்டுவருகிறேன். நீரிங்குதானேயிருந்துபாரும். உம்முடைய தம்பியாகிய கும்பகர்ணனுக்கு முடிவையுண்டாக்கின ஸ்ரீராமனுடைய தம்பியாகிய இலக்ஷ்மணனைக் கொன்று, அவனண்ணன் மெய்பதைக்கும்படியான துன்பத்தைச் செய்யாவிட்டால் உலகப்பிரசித்தமான உமக்குப்பிறந்தபிள்ளை நானாவேனோ? நீர் என்னைச் சேனாசமுத்திரத்துடனே சண்டைக்குப் போவென்று நியமித்தாலும், அல்லது நீமாத்திரம் தனியாய்ப்போவென்று உத்தரவுகொடுத்தாலும், இவ்விரண்டுமெனக்கு நல்லதுதான். உம்முடைய மனதிற்கிசைந்தபடியே விரைவில் விடைகொடும்: விடைகொடும்: என்று சொல்லவும் இராவணன் அந்தவார்த்தையைக்கேட்டு, அப்பா அதிகாயா! நீ நன்றாய் ஆலோசித்துச்சொன்னாய். நீ அந்தலக்ஷ்மணனுடைய உயிரை வாங்கிவிடுவாயேயானால், நான் அவனண்ணனாகிய இராமனென்கிற பெயரையுடையவனைச் சேதித்து முடிக்கிறேன்.

கவி.

போனாயிது போதுபொலங்கழலோய்
மூவாயிரகோடிய ரோடுமுரண்
காவார்கரிதேர் பரிகாவலினின்
றேவார்சனயா வையுமேவினனால்.

அப்பா சௌர்யமான வீரகண்டாமணியைத்தரித்த அதிகாயனே! நீ மூவாயிரங்கோடி பதாதிகள் — யானைகள் — தேர்கள் — குதிரைகள் — இ

வைகளின் காவலுக் குள்ளாகவிருந்து சண்டைசெய்யப் போவென்று அதிகாயனைச் சேனைகளுடனே யேவினான். அப்போது தேவர்களாலும் வெல்லுதற்கேலாத பலமுள்ளவர்களான அதிக துஷ்டர்களாகிய கும்பனென்பவனும் - நிகும்பனென்பவனும்—மற்றொரு சொர்ணமய வீரகண்டாமணியையுடைய அதிவீரனாகிய அகம்பனும் — செம்பொன்மயமான தேரி லேறிக்கொண்டு, அவனுக்கு முன்பின் இருபக்கங்களிலும் காவலாக நெருங்கினார்கள். சிவபெருமானேறி நடத்தும்படியான நந்திக் கொப்பானவைகளாய், சண்டையிருந்தால் தமக்கும் வீரமிகுவனவாய், வார்பூட்டப்பட்ட ஆயிரங் குதிரைகள் பூட்டின தேரில் மஹாகொடியவனான அதிகாயனேறினான். அவனுடன் இன்னும் ஆயிரங்குதிரைகள் பூட்டிய ஆயிரம் சேமத்தேர்கள் பின்னாலேவர, கொல்லும்பயத்தைக் காட்டுகின்ற ஒருகோடி பெரிய மதத்தயானைகளுடனே ஐம்பது நூறாயிரம் குதிரை வெள்ளங்களும் உடனிச் சேனையாகப் போயின.

யானைகளைக்காட்டிலும் மேலுயர்ந்துக் கறுத்துப் பெருத்துக் காணப்படுகின்ற தேகத்தையுடைய அதிகாயன் அநேகவகைகளான ஆயுதங்கள் சூரியனைப்போல் ஒளிவீசித் தோன்றவும், பலபலபாஷைகளிலும் செளரியவார்த்தைகளைப்பேசுகின்றவீரர்கள் துதித்துக்கொண்டுவரவும்புத்தத்தைமேற்கொண்டு போயினான். அஞ்சனத்தைக்குழைத்துப் பூசினதுபோலக் கறுத்த தேகத்தையுடைய யானைகளும், அளவில்லாத தேர்களும், மலைக்குகைகளிலிருந்து பிரதித்தொனி யுண்டாகும்படிச் சப்தித்தன. இராக்ஷச வீரர்களுடைய வில்லின் ஓசையானது கடலும்பொங்கிக் கொதிகொள்ளும்படி யொலித்தது. இரணபேரிகைகள் மேகங்கள் பயந்தடங்கும்படி முழங்கின. இராக்ஷசசேனைவீரர்கள் சுவர்க்கலோகத்தாரெல்லாரு நடுங்கும்படிக்கர்ச்சித்துக்கொண்டுநடக்கும்போது, பூமியும் அடிபொடிபெயருமென்னும்படிக் காலடியெடுத்துவைத்தார்கள். தங்கள் சேனைபாரத்தாற் கடலையுமேடுபடத் தூர்த்துவிட்டார்கள். இவர்கள் வருகிறதைப் பார்த்துத் தேவர்கள் பயந்து வேர்த்துப் போனார்கள்.

மிகவும் வேகமாயோடுகின்ற மதத்த யானைகளின் பின்பு தொடர்ந்து போய்ப் படைமுன்னணியின் கொடியிற் படிந்துமின்னுகின்ற மேகங்களெல்லாம், முன்னேசெல்லுகின்ற அவ்வாண்யானைகளுக்குரிய பெண்யானைகளைப்போலிருந்தன. அங்குசங்களாற் குத்துண்டமதயானைகளின் கன்னகபோலங்களிலிருந்து பெருக்கெடுத்தூற்றுக்கொண்டு பெருகியொழுகுகின்ற மதநீராற்றில், குதிரைகளும் அந்த யானைகளும்படிந்து சேறுபடாதுமல்லாமல் வெகுவிசாலமாகப் பரவிவருகின்ற சேனைகளும் அச்சேற்றிற் படிந்தன. சூரியனைச்சூழ்ந்து பரிவேடம் போவதுபோலத் தேர்கள்போயின. மின்னிக்கொண்டு மேகக்கூட்டங்கள் வரிசையாகப் போவதுபோல முகபடாமணிந்த யானைகள் சென்றன. சிலகுதிரைகள் பூமிமார்க்கமாக ஓடின. சிலகுதிரைகள் ஓடவிடப்பெறுமல் ஆகாசமார்க்கமாகப் பறந்தன.



இந்தப்பிரகாரமாக வந்த அதிகோபிஷ்டனான அதிகாயன் ஸ்ரீராமனென்கிற மதத்தயானையானது கவளீகரித்துத் தும்சப்படுத்தின இரணக்களமுழுவதையும் பார்த்து, தனது நெஞ்சம் புண்பட்டுப் புழுங்கிப் பரவசப்பட்டுக் குதித்து, மலைக்குச்சமமான வலது தோளோடிடதுதோளும் வெட்டுண்டு கருங்கடல் கிடப்பதுபோற் கிடக்கின்ற தன்சிறியதந்தையின் நிலையைக்கண்டு, அவனுடைய தலையைக்காணாமல் மனம்வெறுப்படைந்து, பலம்பொருந்திய பாணங்கள் பாய்ந்தபடியே கிடக்கின்றதையுநோக்கி, இது உயர்ந்த மலையுமல்ல. அஷ்டதிக்கஜங்களிலொன்றின் உடலுமல்ல. பெரிய சமுத்திரமுமல்ல. ஒருவரும் வெல்லுதற் கேலாதிருந்த என்தகப்பனாகிய கும்பகர்ணனுடைய தேகமேயென்று நிச்சயித்து, உயிர்சோர்ந்து பெருமூச்சுவிட்டு, சீ! சீ! இவைகளைப்பார்க்கவா நானிவ்விடம்வந்தேன்? என்று மிகுந்த கோபத்தை யுடையவனாய்ச் சொல்லிப் பின்னுஞ்சொல்லுகிறான். ஆ! ஆ! அதிபலாட்டியராக விருக்கின்ற அந்தமனிதர்களை நான் கொலைசெய்து என்னுயிரைக்காத்துக் கொண்டு போகா விட்டால், இந்தப்பழி எங்களைவிட்டெவ்வாறொழியும்?

கவி.

என்றுமுனியா விதிழைத்துளவன்
பின்றனையுமிப் படிசெய்துபெயர்த்
தன்றனிடர்கண் டிடாறுவனென்
றன்றுவொருவற் கிதுணர்த்தினனால்.

இவ்விதமாகப் பலவற்றையு மெண்ணியெண்ணிச் சொல்லிச் சொல்லி மிகவும் தனக்குத் தானே கடுங்கோபங் கொண்டவனாய் என்சிறியதந்தையை இப்படிச்செய்த அந்த ஸ்ரீராமனுடைய தம்பியை இவ்விதமே கொன்று, பின்பு அந்த ஸ்ரீராமன்படும் துன்பத்தைக் கண்டு என்துக்கம் தணிகிறேன். என்று ஒருசபதவார்த்தையை யாவருக்கும் தெரியப்படுத்தினான். அன்றியுமுடனே மயிடனென்கிற ஒருதூதனை யழைத்து, நீ அதிவேகமாகப்போய் இலட்சுமணனைக் கண்டு, அதிகாயனென்கிற துர்மஹாவீரன். பிரதாபலங்கேஸ்வரனுடைய கனிஷ்ட புத்திரன். ஒருவருமெதிரில்லாத ஜெயசாலி. இப்படிப்பட்டவன் தன் தகப்பனான இராவணன் தம்பியாகிய கும்பகர்ணனிறந்தானென்றழுது வெருவாய்த் துயர்படுகிறதை நீக்குகிறதாக, உன்னோடும் உன்னுடைய சைனியங்களோடும் சண்டைசெய்யும்படி நிச்சயம் பண்ணிக்கொண்டு இரணக்களத்தில் வந்து நிற்கின்றான்.

ஆதலால் — உன்னெண்ணமென்னவென்று கேட்டுவரும்படி என்னையனுப்பினான். மகாவீரனான அவனுடைய நெஞ்சம் கொதித்துக்கொண்டிருக்கின்றது. இனி நாளைக்காகட்டும், நாளைக் கப்பாலாகட்டுமென்று சொன்னால் பொறுக்கமாட்டான். உன்னைத் தன்சிறியதகப்பனைப்போலக் கைகால்களற்றுக் களத்தி லிருக்கும்படி அஸ்திரப்பிரயோகம் பண்ணப்போகிறதாய்ச் சபதம் பண்ணிக்கொண் டிருக்கின்றான். மேலுமவன் கொன்றவனொருவனிருக்க, கொல்லாத மற்றொருவனைக் கொல்லவெண்ணங்கொள்வது பொல்

லாங்காயிற்றென்று நினைக்கின்றவனல்ல. கொஞ்சமாவது தருமமென்பதை நினைக்கமாட்டான். நீ என்னைத் தூதனென்று அலக்ஷியம் பண்ணுகிறாய். நானும் அந்த யுத்தத்திற்சேர்ந்த வீரன்தான். உனக்கு வல்லமையிருந்தா லென்னோடு கூடவேவா. என்று சொல்லி அழைத்துக்கொண்டு வரக்கடவாய்.

அறிவிற் சிரேஷ்டனாகிய த் மயிடனே எனதருமைத் தகப்பனாகிய இவ்விலங்காபுரி நாயகனது சிந்தையில் உண்டான வருத்தங்களை யெல்லாம், நீங்கும்படியாக என்னெதிரில் அம்மானிடனாகிய இலக்ஷுமணன் வந்தானென்று கொண்டுவந்துவிடுவாயானால் எவ்வுலகங்களிலும் கிடைப்பதற்கரிதாகிய உயர்ந்த பொருள்களெல்லாவற்றையுங் கொடுப்பவர்களியானன்றி யாருனக்குத்தருவார்கள். ஐயா புத்திமானாகிய மயிடனே! சண்டை செய்யவேண்டுமென்கிற ஆசையினாற் புகழ் சம்பாதிக்கிறவர்களான அவ்விரண்டு மனிதர்களையும், பின்னு மென்னோடெதிர்த்துச் சண்டைசெய்து நானுடைய சிறைச்சாலையையடைய விருப்பமுள்ளவர்கள் யாரிருந்தாலும், அவர்களெல்லாரையும் வாருங்களென்று கூப்பிடு. அப்படி நீ கூப்பிடுகிறதினால் அந்த லக்ஷுமணனென்று சொல்லப்பட்ட சிம்ஹம் வருவானேயானால், அவனைத் தேவர்களெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும்படி நானே பலபலதுண்டுகளாய் வெட்டிவிட்டு, உன்னையுமவனுக்கீடாக இராஜபட்டங்கட்டி ஒரு இராஜாவாக்கி விடுகிறேன்.

அல்லாமலும் - தேவலோக வாசிகளும் வித்தியாதரர்களுமாகிய இவர்களுடைய நாயகிமார்களான தேவாமிர்தத்தையொத்த ஸ்திரீகளால் திவ்விய கானம் பாடவைப்பதல்லாமல், ஒருவரு மிதுவரையி லுண்ணாத மாமிசமும்-என்னுமிரஞ்சாடிக் கள்ளும்-உனக்குக் கொடுக்கும்படிப்பண்ணுகின்றேன். சூரியனுக்கொப்பாகப் பிரகாசிக்கின்றவைகளும் - நூற்றிலொன்றாகப் பொறுக்கியெடுத்தவைகளும் -- அதிகதேஜஸை யுடையனவைகளும் - தேவர்களாற் கற்பங்கட்டினவைகளுமான அனேக ஆபரணங்களோடு, அளகாபுரிக்குத் தலைவனான குபேரனால் வரிசையனுப்பப்பட்ட நவநிதிகளும் உனக்குப் பரிசாகக் கொடுக்கின்றேன். இன்னும்-எப்போது மேகதாரைபோல ஒழுகிக்கொண்டிருக்கின்ற மதஜலத்தில் மொய்த்த வண்டுகளும் - பருந்துகளும் - சுற்றிப் பறக்கும்படியான முகத்தையுடையவைகளாய், ஒருநாளும் கோபமாறாத செவந்த கண்களை யுடையவைகளுமான யானைகளில் நூறாயிர முனக்கு நான் கொடையாகக் கொடுக்கின்றேன்.

அநேகமாற்றுயர்ந்து திரிலோகஜ்யோதியாய்ப் பிரகாசிக்கின்ற உயர்ந்த தங்கத்தினாற் செய்த இரதங்களும், மேன்மையாகிய தேவபோகத்திலுள்ள தேவேந்திரனது உச்சைச்சிரவமென்னும் பெயருடைய குதிரைக்கும் நிகரற்றனவாகி, நவமணிமாலையை யணிந்து பூமியிலடிவையாது ஆகாயமார்க்கத்திலேயே தாவிப்பறக்கும்படியாகிய குதிரைகளும் உனக்குத் தருகின்றேன். நவரத்தினங்களைக் கும்பற்கும்பலாகக் கோர்க்கப்பட்டிருக்கின்றவைகளும், மூட்டைமூட்டையாகிய தங்கக்காசால் விலைபெற்றவைகளும், சந்திரனுக்கொப்பான



வெண்பட்டுகளால் தைக்கப்பட்ட நிலையங்கிகள் இரண்டாயிரங் கொடுக்கின்றேன். ஐயா பொன்மயமாகிய வீரகண்டாமணியை யணிந்த மயிடவீரனே! இன்னுமுன் மனதி லிச்சிப்பதற்கருமையாய்த் தேவர்களுக்குங் காணக்கூடாதனவாகி யென்னிடமுள்ள எல்லாவுடைகளும் உனக்குப் பரிசாகக் கொடுக்கின்றேன். நீ சந்தோஷமாகப்போய்வா. என்றுசொன்னமாத்திரத்தில், மல்லயுத்தத்தால் மோதுண்டு காய்ப்பேறித்திரண்ட தோள்களையுடைய அம்மயிடனென்கிற ராக்ஷசவீரன்தூதுபோகச் சம்மதித்துப் புறப்பட்டு, காகுஸ்தவமிசோத்பவராகிய ஸ்ரீராமபிரானுடைய சந்நிதியிற்போய்ச் சேர்ந்தான்.

இப்படிச் சேர்ந்தசமயத்தில் அதிவேகத்துடன் வானரவீரர்கள் எதிரோங்கி வருவதை இந்தமயிடன்கண்டு, பயந்து ஓ ஐயன்மீர்! ஒருசந்தோஷசமாச்சாரம் சொல்லவந்த தூதுவனென்றான். அதைப் பரமகிருபையும்வேத முதல்வனுமுள்ள ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் அவ்வானரவீரர்களாற் சொல்லக்கேட்டு, இவனினியழிந்துபோகின்ற தன்னுடைய எஜமானன்சொன்னவார்த்தையைச் சொல்லவந்தவன். இவன் மற்றொன்று நினைத்து வந்தவனல்ல. சும்மாவந்த தூதனாகையால் இவனைக் கோபியாதேயுங்கள். என்றவ்வானரவீரர்களை விலக்கி, நீவந்தகாரியமென்ன சொல்லென்று கேட்டருளினர். அப்போதந்த மயிடன் - ஐயா வில்வீரசிகாமணியே! அந்தக்காரியம் உமது தம்பியாருடன் சொல்லவேண்டியதென்று சொன்னான்.

தூதுவந்தமயிடன் இலக்ஷுமணரோடு தான் வந்தகாரிய மின்னதென்றெனல்.

கவி.

சொல்லாயதுசொல் விடுசொல்லிடென
வில்லாளனிலங் கிளையோர்வினைப்
பல்லாயிரகோடி படைக்கடன்முன்
நில்லாயென நின்றிகழ்ந்தினனால்.

அப்படிப்பட்ட விஷயங்களை சொல் சொல் சீக்கிரம் சொல்லிடென்று வில்வல்லமையில் மிகவும் சிரேஷ்டத்தன்மையை யுடைய ஸ்ரீராமச்சந்திரனது திருத்தம்பியாகிய இளையபெருமாள் கேட்க மயிடனவன் நமஸ்கரித்தெழுந்து, ஐயா சொர்ணவிக்கிரகம்போலத் தேககாந்தி யுடையவரே! இராவணனுடைய இளையகுமாரன் அதிகாயனென்பவன் அநேககோடி சைனியங்களுடனே கூடத் தேவர்களைத் தாக்கும்படி வெகுகோபத்துடன் மேருமலைபோல் இரணக்களத்தில்வந்து அறைகூவி நிற்கின்றான். அவன்மீது நீர் எதிர்க்கவலியுண்டானா லென்னோடுகூடவே புறப்படும். மையபருவதம்போன்ற உருவத்தையுடைய கும்பகர்ணனாகிய தன் சிறியதகப்பன்தேகத்தை உம்முடைய பிராதாவான ஸ்ரீராமன் எப்படிக் கால்வேறுகைவேறு தலைவேறாக வெட்டியெறிந்தாரோ? அப்படியே உம்மையும்வேகமாய் இந்த ரணபூமியிற் செய்யப்போகிறதாய்ச் சொல்லச்சொன்னான். என் கொன்றவனை விட்டுக் கொலைசெய்யாத வென்னைத் தேடிக்கொண்டுவந்து நிற்கின்றானென்று கேட்

பிரயோகனால், தன்பிதாவான ராவணன் படுந்துக்கத்தைத் தன்சிறியதகப்பனைக்கொன்ற அந்தஸ்ரீராமனும் படவேண்டுமென்கிற விருப்பத்தைக்கொண்டு முக்கியமாய் உன்னோடு போர்செய்ய வந்தானாம்.

ஓ தேவலோகத்துள்ளவர்களே ! ஓ பூலோகத்துள்ளவர்களே ! இன்னு மற்றயாவர்களும் இந்தவார்த்தையைக் கேளுங்கள். அதிகாயனென்பவன் இந்த இளையவீரனுடன் சண்டைசெய்யப்போகிறானாம். இவருக்கு உதவியாக யார்வந்தாலும் அவர்களுடனும் போர்செய்வானாம். வருதற்கு விருப்பமுள்ளவர்களெல்லாம் வரலாமென்றும் சொல்லச்சொன்னான். என்றுசொல்லி இளையபெருமாளைப்பார்த்து, நீர் புறப்படுகிறதாயிருந்தால் என்னோடு விரைவிற்புறப்படுமென்று சொல்கிறேன். இப்படியகந்தையுடன் எரிகிற மழுமுனைபோலக் கர்ணகடூரமாகச் சொல்லவும் பிரபத்திபண்ணும்பாக்கியமுடையவர்களெல்லாம்வணங்கி உச்சிவிக்கும்படியான திருவடித்தாமரைகளையுடைய சர்வலோக சரண்யரான ஸ்ரீரகுநந்தனர் கேட்டு, தம்பிலக்ஷ்மணா ! இவனோடுகூடவே புறப்பட்டுப்போய் அவனைஜெயங்கொண்டு வருக, தாமதிக்கவேண்டாம். என்று நியமித்தார்.

### ஸ்ரீராமர் விபீஷணரால் அதிகாயன் வல்லமையும் வரலாறுமறிந்து தமது தம்பியோடவரைக் கூட்டியனுப்புதல்.

கவி.

எல்லாமுடனெய் தியபின்னிலனே
வில்லானொடுபோர் செயவேண்டுமெனா
நல்லாறுடைவீ டணனானவன்முன்
சொல்லாடின னன்னவைசொல்லுதுமால்.

அப்படிப்பெரியபெருமாள் இளையபெருமாளுக்கு அனுக்ரகித்த மாத்திரத்தில் அதைக்கேட்டுக் கொண்டிருந்த நல்லஞான நடைவாய்ந்த விபீஷணரும் வார்சுதீராய்நியினின்று இராக்ஷசசங்கார நிமித்தியமாகத் தாயினுணர்ந்து உலகமெல்லாங் கடைத்தேறும்படிச் சக்கரவர்த்தித் திருமகனாகத்திருவவதாரஞ்செய்த ஸ்ரீயப்பதியாகிய இரகுநந்தனர் சன்னிதியில் தாழ்ந்தெழுந்து, ஸ்வாமி! பரமதயாளுவே! இப்போது வந்திருக்கின்ற கண்டகனை இச்சொரவனென்று நினையாதேயும் அவனுடனுயுத்தஞ்செய்வதற்கும் அவன் செருக்கை அழிப்பதற்கும் என்னென்னவிஷயங்களையறியவேண்டுமோ அவ்விரகசிய விஷயங்களையெல்லாம் அறிந்தபிறகு தான் அவனுடன் சண்டைக்குத் தொடங்கவேண்டும். ஆதலால் அவைகளையெல்லாம் சொல்லுகின்றேன் கேளுமென்று விபீஷணர் சொல்லுகின்றார்.

ஸ்வாமி ! நாமெல்லோரும் இளையபெருமாளுடன் போகவேண்டும். பிறகிவரே அவ்வதிகாயனென்கிற வில்வீரனுடன் யுத்தஞ்செய்யட்டும். ஏனென்றால் – அவன் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவனை நோக்கி ஒருபெருந்தவஞ்செய்து பெற்றவரத்தினால், தேவர்களும் அசுரர்களுமான பெரியவீரர்கள்



சேர்ந்துசெய்த சண்டையிலும் அவன்செத்தவனல்லன், கொஞ்சமாவது மனஞ்சலித்தவனுமல்லன், அதிபலமுள்ளவனாக விருந்தான். மேலும் - உமாநாயகராகிய திரிநேத்திரருடனே அந்தக்கயிலாசமலையை வேரோடுபறித்தெடுத்தவனான இராவணனே தன்னிலும் இவனே மகாவல்லவனென்றும், அரிபிரமருத்ரேந்திராதி சமஸ்ததேவதா சமூகங்களுடனே மேருபருவதத்தைப் பேர்த்தெடுக்க வல்லவனென்று நினைத்து, இவனுக்கேற்ற ஆயுதங்களெல்லாங் கொடுத்துவளர்த்தான். இன்னுமிவன் க்ஷீரசாகரத்தைக் கடைவதற்கு மந்தரகிரியும், வாசுகியும், விஷ்ணுவும், மற்றத்தேவர்களும் வேண்டாமலேயே. தன்காலினாலே கலக்கிச் சற்றுநேரத்திற்குள்ளே ஆலாலவிஷத்தையும் , அமிர்தத்தையுமுண்டாக்கிவிட வல்லவனுக்கும்.

சகலலோகங்களு மழியும்படியாகிய மகாபிரளயகாலத்திலும் அழியாதவைகளென்னும்படியாய் அஷ்டதிக்குகளினு நின்று லோகத்தைத்தாங்கிக்கொண்டிருக்கின்ற பருத்த மஸ்தகங்களையுடைய யானைகளை, இவன் தோள்வலியால் தள்ளுவானென்பது ஒரு பெருமையோ ? சக்கரவாளகிரியையும் தனதுள்ளங்கையால் தள்ளும் வல்லமையுடையவனுக்கும், வெகுகாலம் வரையிலும் கண்ணிமை கொட்டாத விஷகண்டரான சங்கரமூர்த்தியானவர் அக்கினிகக்குகின்ற சூலாயுதத்தை அவன்மேற் பிரயோகித்தபோது, அதையவன் கையிற் பிடித்துக்கொண்டு இந்தச்சூல முன்னுடைய சூலமல்லவாவென்று அநேதியமாய்ப் பேசினவனுக்கும். இவன் தன்னோடுபகைத்த தேவர்களுடைய ஊரைப் புகையெழும்படிச் சுட்டெரிக்கப்போன காலத்தில், வெற்றிமாலையைத்தரித்த விஷ்ணுமூர்த்தியானவர் பகைவனாகிய இவன்சேனைகளுடைய உயிரை உண்ணும்படி விடப்பட்ட சக்கரத்தையும் தன்வில்வல்லமையினால் தடுத்துவிட்டவனுக்கும்.

உயிருள்ளவைகளைப்போலொத்த ஆயுதங்களாயுள்ளவைகளையெல்லாம் இப்பாவியின்மீது அதிககோபங்கொண்டு இந்திரன் பிரயோகித்தபோது, அவைகளையெல்லாம் இவன் சிறுமணலைப்போலப் பொடிசெய்துவிட்டு, அவனுடைய வச்சிராயுதத்தையும் தன்பாணங்களினாற் சிதறவிட்டான். இவன் வேதசாஸ்திரங்களெல்லாம் கற்றிருக்கின்றான். தேவர்கள் தங்களுடைய ஆயுதங்களை அவர்கள் வல்லமைகொண்டு இவன்முன்னின்றுபிரயோகிக்கக்கூடாதபடியாக உருத்திரனிடத்தில் வரமும்பெற்றிருக்கின்றான். மேலும்-அதிசக்தியைப் பெற்றிருப்பதனால் யுத்தத்தைவிட நல்லதென்று மற்றொன்றையறியமாட்டான். இயாவரிலும் அதிசூரனாயிருக்கப்பட்டவன். அதர்மமல்லாமல் வேறேயொரு தன்மையென்பதை இவனறியவே மாட்டான். யுத்தமல்லாமல் வேறொரு ஆபரணமும் அணியமாட்டான். யுத்தத்தில் வலியில்லாதவர்களைக் கண்டால், அவர்கள்மேல் ஆயுதத்தையெறிந்து அவர்களுடைய அரியவுயிரை வேறுபடுத்தமாட்டான். பலத்தைக்காட்டிலும் கீர்த்தியே உயர்ந்ததென்று விரும்புகின்றவனுக்கும்.

தேகத்தைவிட்டு உயிர்போகின்ற காலத்திலும், வஞ்சகர்களை தன்னோடெதிர்த்துவந்தாலும், தன்தேசத்தவர்கள்செய்யப்பட்ட மாயாதந்திரங்களையெல்லாம் அவர்கள்செய்தபோதிலும்,தானந்த அற்பமான மாயைச்செய்கைகளைச் செய்கிறதற்குக் கொஞ்சமாவது நினைக்கமாட்டான். மேலும் இவன்றிறப்பின் வரலாற்றைக்கேளும் ஸ்வாமி! வானவர்களுடைய லோகத்தைத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டிருந்த மதுகைடவர்களென்கிற இரண்டு அசுரர்கள் முன்னொருநாள் அதிகவஞ்சகத்தைவகித்து, சக்கராயுதத்தைத்தரித்தவரான விஷ்ணுமூர்த்தியினிடத்திற் பகைகொண்டு திருப்பாற்கடலுக்குச் சென்று, ஓய்விஷ்ணுவே! எங்களோடு நீர் சண்டைசெய்யவாருமென்றார்கள். அவரப்படியே நல்லது வாருங்களென்று நியமித்தார். அவர்களும் சண்டைக்குப் புறப்பட்டார்கள். தங்களோடு போர்செய்யச் சூரியன் ஆயிரங்கரங்களுடனே வந்தாலும் அக்கரங்களை முறைமுறையாகக் கழித்துவிட்டுப் பரிகாசம்பண்ணும்படியான அவ்வீரர்கள் அந்த விஷ்ணுவோடு அதிகபகைகொண்டு போர்செய்தார்கள். அந்தப்போரிலனேகநாள் கழிந்துபோய்விட்டன.

பின்பு தங்களுக்குத்தாங்களே சமானமாகிய அந்த மதுகைடவர்கள் தனித்தங்கத்தைப்போலப் பிரகாசிக்கின்ற திருமேனியையுடைய அந்தவிஷ்ணுவைப்பார்த்து, யாவர்களாலு மதிக்கத்தக்க ஓ மாதவனே! புகழுடையவர்களென்று பலமுறைமொழிந்துப் பேசுவதினாற் பயனென்ன? நாங்களெவ்வொருவரே இந்த ஏழுலோகங்களையு முண்டு உமிழ்ந்துவிடுவோம். இப்படிப்பட்ட எங்களிரண்டுபேருடன் நீ இத்தனைநாள் சமயுத்தஞ்செய்தாய். ஆதலால் நீ நல்லகெட்டிக்காரன்தான், உன்னைப்போன்ற வீரர் இனி வேறெவருமுண்டோ! நாங்களுன்னைப்பற்றி மகாசந்தோஷமாயினோம். உனக்கென்னவரம் வேண்டும்? உன்மனதின்படிகேள், அவற்றை நீ கேளாததற்குமுன்னமே கொடுத்துவிட்டோமென்றார்கள். இப்படியவர்கள் உனக்குவேண்டியபடி நல்லதை நாங்கள் கொடுக்கிறதற்கு என்னவேண்டுமென்று கேட்டமாத்திரத்தில், சர்வலோகநாயகனாகிய அந்தப்பகவான் நான் ஜெயித்தேனென்கிறதற்கிடாக உங்களை ஒடுக்கும்படியான வரம் எனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டருளினார்.

அதற்கொழுக்கப்படி நடக்கின்ற ஸ்ரீமான்களான அந்தமதுகைடவர்கள் நாங்கள் வேறோரிடத்திலும் சாகமாட்டோம், உன்னுடைய தொடையில் இறந்துபோவோம். நீ தனியாக எங்கள் சமீபத்தில் வருவாயானால் எங்கள் சொற்படிநடத்திக்கொள்ளலாமென்று வரங்கொடுத்தார்கள். அந்தவரம்பெற்றவுடனே பேருலகங்களேழுலகங்களெல்லாம் கடந்து எட்டாதவராகிய விஷ்ணுவானவர் தம்முடைய இடதுதொடையை நீட்டினார். மதுகைடவர்கள் வினைப்படி அந்தத்தொடையிலேறி நின்றார்கள். அப்போது அந்தவிஷ்ணுமூர்த்தியானவர் தமதுகையால் வலியகதையை யெடுத்துச் சுழற்றியடித்



தார். அந்த அடிபட்டு இருவருமடிந்தார்கள். அவருள் தன் வாளுன்முடிந்த மதுவென்பவனுடைய மாமிசம்பட்டபடியால் இந்தப் பூவுலகமெல்லா மேதினியென்று பெயர்பெற்றது. அந்த மதுவென்பவன்தான் இப்போது தன் வாளுள்கழிந்து மாண்டுபோன தேகவல்லமையுள்ள கும்பகர்ணன். இருப்புச்சலாகையையொத்த கால்களையுடையவனான கைடவனென்பவன்தான் இந்தக்கூரியவேலாயுதத்தைக் கையில்வைத்திருக்கிற அதிகாயனென்பவன். நானறிந்த பூர்வோத்திர மிதுதானென்றுசொல்லி முடித்தனர்.

இப்படி விபீஷணாழ்வான் சொன்னதையெல்லாம் ஸ்ரீராமர்கேட்டு, தம்பி விபீஷணா! நல்லகாரியஞ் சொன்னாய்: நல்லகாரியம்சொன்னாய்: என்று மின்னல் நாணிப் பிறக்கும்படியாக நகைத்துப் பின்னுஞ் சொல்லுகின்றார். தம்பி விபீஷணாழ்வானே! என்னுயிரங்கோடி ராவணர்களும் - சுவர்க்கலோகத்தாரும் - மற்றுலோகத்தாரும் - திரிமூர்த்திகளும், ஒன்றுசேர்ந்து வந்தெதிர்த்தபோதிலும், இந்தலட்சுமணன் வில்வித்தையின் பெருமையை நீ உன்கண்ணூற்பார்க்கப்போகிறாய். சுவர்க்கலோகத்தார்தானென்ன? பூலோகத்தார்தானென்ன? அந்தசாக்ஷாது விஷ்ணுவானாலுந்தானென்ன? வில்வீரர்களுக்குள்ளே நானேதானாகட்டும். பிரமதகணத் தலைவராகிய உருத்திரமூர்த்தியும் பிரமனும் தேவர்பதியாகிய இந்திரனானாலுஞ் சரி. என்தம்பி எல்லாரையும் தோற்கடித்து விடுவான். இவன் தன்வில்லில் கையைவைத்தானேயானால், தேவாஸ்திரங்களாகட்டும்: கோபமென்பதாகட்டும்: பலமென்பதாகட்டும்: குற்றமற்ற வீரமாகட்டும்: மற்றவைகளே யாகட்டும்: இவனுக்கெதிரேநிற்கவல்லமையுள்ளவர்களுமுண்டோ? இதைச்சற்று நீயேபார்க்கக்கடவாய்.

அப்பா விபீஷணா! அந்தப் பெரியதேகத்தையுடைய அதிகாயன் இவன்விடும் பாணத்தோடுகூடவே ஆகாயவரையிலும்போய் இப்பூமியில் விழுந்தபோது, காக்கை - பருந்து - கழுகு - முதலானவைகள் அவனைப் பிடுங்கித்தின்பதை நீயும் இலட்சுமணனுடனே பார்ப்பாயாக. என்றைக்கு என் தேவியை வஞ்சனைசெய்து எடுத்துக்கொண்டுபோனானோ? அன்றைக்கே அந்த ராவணனும், அவனைச்சார்ந்த இவனும், மற்றெல்லாரு முடிந்துவிட்டார்கள். என்தம்பி தன்பாரதந்திரசொரூபம் குறையமாட்டேனென்றிருக்கிறபடியால், இதுவரையினு மெல்லாரும் உயிரோடிருக்கின்றார்கள். ஒருநீருடன் மற்றொருநீரெதிர்த்துக் கூடாமல் நிற்குமோ? அதுபோலத் தர்மத்துடன் தர்மம்சேரும். இந்த முழுதுஷ்டர்களுடனே தேவர்களுக்காக நாம் போர்புரியவந்தது அத்தருமத்தைத் துணைப்பற்றி ஜெயிக்கவந்தோமே யல்லாமல், வேறொருவருடைய உதவியினாலேயா ஜெயிக்கவந்தோம்?

தம்பி! இவர்களோடு யுத்தஞ்செய்து ஜெயம்பெறத்தக்கவர் அந்த ஸ்ரீருத்திரமூர்த்தியொருவர். அவரல்லாவிட்டால் இலட்சுமிபதியாகிய அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவாலாகவேண்டும். அல்லது - இந்த லோகங்களைச் சிருஷ்டி

த்த பிரமதேவராலாகவேண்டும். இவர்களெல்லாராலுமுடியாவிட்டால், சமானமற்றவல்லமையுடைய தர்மசொரூபியாகிய இவ்விளையபெருமாளாலாகவேண்டும். இவனுமல்லாவிட்டால் நானாகட்டும், மற்றவர்கள் யாராகட்டும், இவர்களோடு சண்டைசெய்ய முடியுமா? கும்பகர்ணனோடு வந்தது ஓராயிரவெள்ளம் சேனையா? எவ்வளவோ சேனைகள்வந்தன. அவ்வளவு சேனையையும் ஒரு க்ஷணத்திற்குள்ளாகக் கொன்றவன் இவனையல்லாமல் வேறே யாரையாவது சொல்லக்கண்டாயா? நீயும் கூடவே யிருந்தாயே:

கவி.

கொல்வானுமிவன் கொடியோரையெலாம்
வெல்வானுமிவன் னடல்வீண்டுவெனை
ஒல்வானுமிவன் னுடனேயொருநீ
செல்வாயெனவே வுதல்செய்தனனால்.

அந்த மகாதுஷ்டர்களையெல்லாம் கொல்லப்போகிறவனு மிவனே: அவர்களைக்கொன்று ஜெயமடையப் போகிறவனு மிவனே: அந்தவீரர்களுக்கு மேலிட்டு நிற்கப்போகிறவனு மிவனே: நான்வரவில்லை. இவனோடுகூட நீமாத்திரமே போவென்றவ் விபீஷணரை அனுப்பினார்.

## இலக்ஷ்மணர் ஸ்ரீராமரிடத்தில் விடைபெற்று விபீஷணருடன் யுத்தகளம்புகுதல்.

கவி.

அக்காலையி லக்குவ னாரியனை, முக்காலும்வலங் கொடுமுறுணர்வின்
மிக்கான்மதிலீ டணன்மெய்தொடரப், புக்கானவன்வந்து புகுந்தகளம்

அச்சமயத்தில் இலக்ஷுமணப் பெருமான் ஸ்ரீராமப் பிரபுவை முக்கால் வலம்வந்து நமஸ்கரித்தெழுந்து அறிவிற் சிறந்தவராகிய விபீஷணரும்வார தன்து மெய்காப்பாளனைப் போற்றுடா அதிகாயனென்னும் கொடிய விராட்சசன் வந்திருக்கின்ற யுத்தகளத்தை வந்து சேர்ந்தான்.

## வானரப்படைகளும் இராக்கதப் படைகளும் கலந்து போர்புரிதல்.

கவி.

சேனைக்கடல் சென்றதுதென்கடல்மேல்
ஏனைக்கடல்வந்த தெழுந்ததென
ஆனைக்கடறேர் பரியாண்மிடையும்
தானைக்கடலோ டெலைப்படலும்.

அப்போது வானரசேனை சமுத்திரமானது தென்கடலின் மீதெதிர்க்க வடகடல் வந்ததுபோல் இராக்ஷசச்சேனைக்கடலை எதிர்த்தது. அப்படியெதிர்த்த வானரசேனைகளின் பேரில் அதிகாயனுடைய யானைப்படை - தேர்ப்படை - குதிரைப்படை - காலாட்படை - ஆகியவிவையெல்லா மொருமிக்கச் சேர்ந்து போர்செய்ய யத்தனித்தன.



முன்பு பசியரத்தத்தாற் சேறுபட்டுச் சருக்கலுண்டாயிருந்த அந்தரணக்களம் இப்போது இருதிறத்தாருடைய சேனைகளு மிதித்ததினாலேகாய்ந்து, புஷ்பத்தின் செவந்த மகரந்தப்பொடியைப் போலச் செந்தூளியெழும்பி ஆகாசத்தையெல்லா மறைத்து விட்டது. இடிக்குச் சமமான பேரிகை முழக்கத்தாலும், சங்கத்தொனியினாலும், வீரகர்ச்சித வோசையாலும், பயங்கரமாய் வளைந்த வில்லின் சப்தத்தாலும், சகலவுயிர்களு நடுக்கமுற்றுச் சமுத்திர கோஷமும் அடங்கிப் போய்விட்டது. பாவர்களாகிய ராக்ஷசர்கள் மரணமடையும்போதெல்லாம் மலையினின்றும் பூமியில்விழுகின்ற அருவியாற்றைப் போல ரத்தத்தைக் கக்கிக்கொண்டு விழவும், மரங்களிலிருந்து உதிருகிற இலைகளைப்போல அவர்கள் விருதுக்கொடிக ளறுந்துவிழவும், மலைகள்மீது பாய்கிறதுபோலப் பெரிய யானைகளின் தலைகளின்மேற் பலவானரங்கள் குதித்துப் பாய்ந்தன.

பல மர்க்கடங்கள் கூட்டங்கூட்டமாக மலைகளைப்பிடுங்கி யெறிந்தபோது அவற்றிலிருந்து தேனருவிகள் கீழேயொழுகினதுபோல மதஜலங்கள் ஒழுகுகிற யானைகளின்மீது அம்மலைகள்மோதி, ஒருயானை மற்றொருயானையுடன் தாக்கி விழுவதுபோல மலையும் யானையுமாக இரண்டுங்கீழேவிழுந்தன. பல குரங்குகள் அரக்கர்களுடைய சிலகுதிரைகளைக் கைகளாற் குத்தின. சில குதிரைகளை நசுக்கிவிட்டன சிலகுதிரைகளைக் கைகளாலிறுக்கிப் பிடித்துத் தூக்கின. சிலகுதிரைகளைத் துண்டுதுண்டாக்கி விட்டன. சிலகுதிரைகளை முன்னங்கால்வேறு பின்னங்கால்வேறு தலைவேறாகப் பல்லினாற்கடித்து எறிந்துவிட்டன. சிலகுதிரைகள் வானரங்களுதைத்த உதையால் ரத்தங்கக்கிக்கொண்டு துடிதுடித் திறந்தன. பலகுரங்குகள் மோதினபோது சண்டமாருதக் காற்றடிக்க, அதனால் மேகங்க ளொன்றோடொன்று மோதுண்டு ஓடுங்குவதுபோல் ஒட்டமெடுத்தயானைகள் ஒன்றோடொன்று தாக்கித் தந்தங்கள் முறிபட்டு, அவைகளிலுள்ள முத்துக்கள் பலபலவென் றுதிர்ந்தன.

இந்தப்பிரகாரமாக யானைகள், சத்துருக்களை மிதித்துத் துவைக்கின்ற வச்சிரத் தூணையொத்த கால்கள் முறிபட்டு, யமபாசம்போன்ற வால்கள் அறுபட்டு, அவற்றின்பேரிலிருந்த பாகர்களும் இறந்தார்கள், வானரவீரர்கள் மரங்களையும், கல்லுகளையும், மலைகளையும், வாள்போன்ற பற்களையுடைய மலைப்பாம்புகளையும், இராக்ஷசர்களேறிவந்த யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும், இடைவிடாமல் வாரிவாரி வீசினபடியால்; ஓங்கிவளர்ந்திருக்கின்ற பெருங்காட்டைப்போல ஆகாசமுழுவதும் காணப்பட்டன. வானரத்தலைவர்கள் மலைகளைப் பிடுங்கியெறிய, அவைகள் ஆகாசமெல்லாம் பரவிச்சென்று கடலில் மேகம்படிவதுபோல ராக்ஷசசேனைகளின்பேரில் விழுந்தன. இமைக்குனத்தில் ஓடமாட்டாமற் கால்சறுக்குண்ட குரூரராட்சசவீரர்களை வானரவீரர்கள் பிடித்து, மழுவாயுதம் - வேலாயுதம் - வாளாயுதம் - இவைகளைத் தாங்கிக்கொண் டிருக்கின்ற தோள்களோடு மடக்கி,

அவர்கள் பெரியதேகத்தை ஒன்றுசேரப் பிடித்து, அவர்களுடைய ரத்தவெள்ளத்திலேயே அமிழ்த்திக்கொன்று, அப்பிணங்களை அவ்வெள்ளத்துடன் ஓடும்படிச் செய்தார்கள்.

அதிகபலமுள்ளவைகளான அளவில்லாத வானரங்கள் இரத்தப்பெருக்குகளில் நீந்திநீந்திக்கையிளைத்து யானைப்பிண மேட்டின்மீது ஏறிநிற்க, அவைகளந்த ஆற்றிலடித்துக்கொண்டு போனதினால் அவைகளுமுடனே போய்க் கடலில்விழுந் திறந்தன. சேற்கெண்டைகளுடனெழும்புகிற அலைகளையுடையஆற்றில் ஒருவர் தடியைநீட்டப்பிடித்துப் போகின்றகுருடர்கூட்டம் போல, கால்கள்கால்களா யோடுகின்ற இரத்தப் பிரவாகத்தில் வானரவீரர்கள் ஒருவர்வாலை யொருவர் பிடித்துக்கொண்டு வரிசைவரிசையாக இறங்கி நடந்துபோனார்கள். இராக்ஷசசேனைகள் பலமுறை வானரசேனைகளின்மீது பாய்ந்து ஆயுதங்களாலடிக்க, அவ்வாயுதங்களை விலக்கி விலக்கி வானரங்களுடையகைகள் கொஞ்சங்கொஞ்சமாய்த் தேய்ந்து சிதைந்து சின்னபின்னமாகி, மாமிசங்க ளாகாசமுட்டச் சிதறுண்டு போய் அநேக வானரங்களிறந்தன.

இலட்சுமணர் தமது வானரப்படைகள் இராட்சசப்படைகளால் மெலியக் கண்டு விடுத்தபாணங்கள் அஷ்டதிக்கிலும் பராக்கிரமித்து நிற்றல்.

கவி.

அத்துணையிலக்குவ னஞ்சலஞ்சலென்
றெத்துணைமொழிகளு மியம்பியேற்றினன்
சப்த்துணைவில்லினைக் காலன்வாழ்வினை
பொய்த்துணைநாணினை முழங்கத்தாக்கினன்.

இப்படி வானரசேனைகள் வருத்தப்படுவதை இளையபெருமாள் பார்த்து, பயப்படாதீர்கள்: பயப்படாதீர்கள்: என்றவர்களுக்குத் தைரியம்பிறக்கும்படியான வார்த்தைகளையெல்லாம் சொல்லி அவர்களுக்கு ஊக்கமுண்டாக்கி, தம்முடைய கையிலிருக்கின்றதும் எமனுக் குயிர்ப்பிச்சைகொடுப்பதுமான வில்லில் நாணேற்றிக் குணத்தொனிசெய்தார். அந்தநாணோசையானது சாஸ்திரங்களெல்லா மூழ்கிவிட்டாலும் ஸ்தூலபூதங்கள் சூக்ஷ்மபூதத்திலும் – சூக்ஷ்மபூதங்கள் தன்மாத்திரையிலும் – அந்தத் தன்மாத்திரைகள் கிரமக்கிரமமாய்ப் பிரகிருதியிலுமொடுங்கிப் பிரம்ஹகல்பமுமுடிந்து காரணமாத்திரமுடியாத அந்தக்கடைசி காலத்தில், ஸ்வதப்பிரமாணமான நான்குவேதங்களும் ஸ்ரீயப்பதியினுடைய குணங்களைப் பல்லாண்டுபாடி எங்குமாகக் கோஷித்துக்கொண் டிருப்பதுபோல எங்கு நிறைந்தது.

உடனே அந்தவில்லிலிருந்து அநேகபாணங்கள் புறப்பட்டன. அவைகள் எண்ணிறந்த ராக்ஷசர்களுடைய தேகங்களை யெல்லாமுடிச் சல்லடைக்கண்களாகத் தொளைத்து, ஆகாசமுற்றும் பிணக்காடுகளாக நிறைந்துவிட்டன.



அவர்கள் மார்புபிளந்து புறப்பட்ட ரத்தவெள்ளங்கள் கடலை நிறைத்துவிட்டன. பின்னுமந்த அம்புகள் யானையின் துதிக்கைகளை யறுத்து, தேர்வீரர்களுடைய உயர்ந்த கிரீடங்கள் தரித்திருக்கின்ற தலைகளைத்துண்டித்து, குதிரைகளின் கால்களைத்துணித்து, அவைகளின்மீதேறிவந்த ரத்தசிறக்கண்களையுடைய பாகர்களது தேகங்களைச் சின்னாபின்னங்களாய்ச் செய்து, வில்களை இரண்டிரண்டாக முறித்து, வேலாயுதங்களை யொடித்து, வீரர்களணிந்திருந்த பிரகாசமுள்ள கவசங்களைப் பேதித்து; அவர்கள் மார்புகளைப்பிளந்து, தேகங்களை மலையைப்போல நொறுக்கி, குதிரைகளை யுருளப்போய் அவைகள் பூட்டியிருந்த தேர்களையுடைத்து, யானைகளை யெல்லாம் எமனைப் போலக் கொன்றன.

ஸ்ரீ லட்சுமணர் பாணத்தால் துண்டிக்கப்பட்டு விசையுடனே ஆகாயத்திற்போய்த்தோன்றுகின்ற வெற்றியானைகளின் வளைந்த வெள்ளைத்தந்தங்கள், உலகசிருஷ்டிக்கு முந்தின காலத்தில் ஆகாசத்தினிடமாக இருந்த அநேக மூன்றும்பிறைச் சந்திரனைப் போலப் பிரகாசித்துக்கொண் டிருந்தன. துஷ்டராக்ஷசர்களுடைய பெரியதலைகளானவை அக்கினி சொரிகின்ற இரண்டு கண்களையுடைய மூன்றும்பிறைச் சந்திரர்களைக் கவ்விக்கொண்டனபோன்று தொங்குகின்ற குண்டலங்களாகிய மின்னல்களுடனே, சந்திரமண்டலம் ஆகாசத்திலிருந்து நழுவி மண்ணில்விழுந்து கிடக்கிறதுபோலக் கிடந்தன. கூர்மையான தந்தங்களை யுடையவைகளாயும் – துதிக்கை குறையுண்டவைகளாயும் – இரணக்கள ரத்தவெள்ளத்திற் குப்புற்று விழுந்துகிடக்கின்ற யானைகள் இந்தப் பூமியைப் பேர்த்தெடுத்த ஆதிவராக புருஷமூர்த்தியை யொத்திருந்தன. புண்பட்டுவிழுந்த குதிரைகள் பூட்டிய பூட்டுகளவிழ்ந்து தலைகீழாய்விழுந்த பெரிய தேர்க்கூட்டங்கள், புண்ணியவசத்தாலே சுவர்க்கத்தை யடைந்திருந்து அப்புண்ணியங் குறைபட்டு அந்தச் சுவர்க்கத்திலிருந்து பூமியில்விழுந்த தெய்வவிமானம்போ லிருந்தன.

ஸ்ரீ ராமாநுஜருடைய பாணம் சம்ஹரித்தபடியால் தம்பிட்டத்திலிருந்த உயிரானது விட்டுநீங்காத பாபங்களை முற்றுநீக்கி அடைகிறதற்குத் துர்லபமான மோக்ஷத்தை யடைந்ததென்று சொல்லும்படி, தேகமாகிய சுமைகள் சந்தோஷத்தாற் கூத்தாடுகிறதைப்போல இராக்ஷசக் கவந்தங்கள்கூத்தாடின. நாற்பத்தெண்ணாயிரம் வீரர்களிறந்தால் ஒரு கவந்தம் கூத்தாடுமென்கிற பிரமாணம் யதார்த்தமே: அது யதார்த்தமாதலால் கோடிக்குமேலான கவந்தங்கள் கூத்தாடினபோது இறந்தவீரர்களுடைய தொகை இவ்வளவென்று எவராலாயினும் சொல்லிமுடியுமோ? ஒருகாலத்தும் முடியாது. இயானையினிரத்தப் பிரவாகமும், இராக்ஷசர்களுடைய உதிரவெள்ளமும், மற்றக் குதிரைக்கூட்டத்தின் செந்நீரும், காட்டிலு மலையிலும் பெய்த மேகவருஷங்களாலுண்டாகிய பெருவெள்ளத்தைப்போலப் பரந்தோடி; தெய்வீகமாகிய நதியைப்போலச் சமுத்திரத்தில் விழுந்தன.

இலட்சுமணருடைய பாணங்கள்பட்டுத் தலைகளறுந்த அநேக யானைவீரருடைய உடற்குறைகள், அந்த யானைக்கழுத்தினுள்ள கயிற்றிற் கால்கள் கோத்தபடியே அங்குசங்களைக் கையிற் பிடித்திருந்து அந்த யானைகளைக்கொத்தி யோட்டுகின்றன. பலமுள்ள பாணங்கள்பட்டுக் குதிரைவீரர்களுடைய தலைகள் அறுந்தும் கீழேவிழாமல், முண்டங்கள் கையில் வாளைப்பிடித்துக் குதிரைமேல் இருந்தபடியே கூத்தாடின. ஸ்ரீமத் வேதமார்க்க மகாரிஷிகளுடைய சாப வார்த்தைகளைப் போன்ற பாணங்கள் தேர்வீரர்களுடைய தலைகளையறுத்து நீக்கிவிடவும், அம்முண்டங்கள் முன்பு தாம் பிடித்து வளைத்து அம்புதொடுத்துக் கொண்டிருந்த கையோயாமல் அதிவேகமாய்ப் பாணப்பிரயோகம் பண்ணிக்கொண்டே யிருந்தன. சீதாபிராட்டியாரென்கிற ஒருபயமினை இராக்ஷசர்கள் தேடிக்கொண்டு, தங்களையும் - தங்கள் தந்தைகளையும் — தமையன்மாரையும் - தம்பிமாரையும் — குமாரர்களையும் — பேரர்களையும் - மருமகர்களையும் — சண்டமாருதக் காற்றைப்போல அதிவேகமாய்ச் செல்லும்படியான இளையபெருமாளுடைய ஒரேபாணம் முருக்கிக்கொண்டு போக, அதில் அவர்கள்யாவரு மாண்டுபோனார்கள்.

இலட்சுமணராற் பிரயோகிக்கப்பட்ட பாணங்கள் பாய்ந்து அறுந்து உருண்டுகிடக்கின்ற பெரியதலைகளைக் கழுகுகளிற் சில கவ்விக்கொள்ள, அவைகளில் வைத்திருக்கிற ஆசையால் வேறே சிலகழுகுகள் சகியாமல் கோழிகளைப்போல ஒன்றோடொன்று எதிர்த்துச் சண்டைசெய்தன. ஆயிரக்கணக்காகவும் ஆயிரகோடிக் கணக்காகவும் வருகின்ற அக்கினிமுகபாணங்கள் மனோவேகமாய்ப் போய்ப் பாய்கின்றபடியினாலே இராக்ஷசர்களுடைய உடல்கள் மாய்ந்து நசிக்க, அவ்வுடல்களிலுள்ள உயிர்களைப் பிடிக்கிறதற்கு யமதூதர்களும் ஓடியோடிக் கால்கள் ஓய்ந்துபோகின்றார்கள். இலட்சுமணருடைய பாணங்களால் மேருமலையையு மசைக்கும் வல்லமையுள்ளவர்களான ராக்ஷசர்கள் உடற்சுமை நீங்கி மாண்டு அடிக்கின்றதைத் தேவர்கள்கண்டு, இளையபெருமாளுடைய வல்லமைக்காகத் தங்கள் தலைகளைக் குலுக்கினார்கள். இராக்ஷசர்களுடைய பிணமலைகளின் பாரத்தாற் பூமிதேவியு முதுகுநெளிந்து வருந்துகின்றவளாயினாள்.

## இலட்சுமணருடன் தாருகன் வந்தெதிர்த்து மடிதல்.

கலி.

தாருகனென்றுள னொருவன்றனெடு
மேருவின்பெருமையா னெரியின்வெம்மையான்
போருவந்துழக்குவான் புகுந்துதாக்கினான்
தேரினன்சிலையின னுயிருந்தியினான்.

இவ்வண்ணம் இலக்ஷ்மணனால் அநேகராட்சசக் கூட்டங்கள் மடிவதை, நீண்டுயர்ந்த மகமேருவைப் போலுந் தேகத்தையும் ஊழித்தீயைப்போலுங் கோபத்தையும் யுத்தஞ்செய்வதிலேயே சந்தோஷ மனத்தையும் நவரத்



னகிரீடமாகிய தேரையுடையவனும் பொற்கட்டுக ளமைந்த பருத்தவில்லையுடையவனுமாகிய தாருகனென்று சொல்லப்பட்ட ஓரரக்கன்வந்து யுத்தகளத்தில் இலக்ஷ்மணப் பெருமான் முன்பு இராக்ஷசச் சேனைகளை அஞ்சாதேயுங்களஞ்சாதேயுங்க ளென்று சொல்லி அவ்விளைய பெருமாளோடெதிர்த்து, அக்கினிமயமான அநேக அம்புகளைப் பிரயோகித்தான். அவைகளெல்லாம் அவன்முன்னாற் பெற்றிருந்த வரங்களைப்போல ஆகாசம்பூமி முழுவதும் எள்ளிடவும் இடமில்லாமல் மூடிக் கொண்டன. அவைகளை இளையபெருமாள் அதிதீக்ஷணமான சிலபாணங்களால் இருந்தவிடந் தெரியாமற் போகப்பண்ணினார். அந்தப் பாணங்களில் ஒன்று அவனுடைய தலையையு மறுத்துவிட்டது. அந்தப் பருத்த தலையானது வெகுவேகமாய் மலையினின்று மேகமெழும்பினதுபோல ஆகாசமார்க்கத்திற்போயும் கர்ச்சித்தது. அந்தச் சப்தத்தைக் கேட்டு அவனுயிரைப் பிடிக்கும்படிவந்த தூதர்களேயல்லாமல் யமனும்பயந்தான்.

## காலன் முதலியவர்கள் இலக்ஷ்மணரோடெதிர்த்து மடிதல்.

கலி.

காலனுங்குலிசனுங் காலசங்கனும்
மாலியுமருத்தனு மருவுமைவரும்
சூலமுங்கணிச்சியுங் கடிதுசுற்றினர்
பாலமும்பாசமு மலிறுயபற்றுவார்.

இப்படி யவனிறந்தபிறகு காலனென்பவனும் — குலிசனென்பவனும் - காலசங்கனென்பவனும் —மாலியென்பவனும் - மருத்தனென்பவனும் - கணிச்சியென்பவனும் - வெகுவேகமாய்வந்து, இலக்ஷ்மணனை யெதிர்த்துத் துர்ப்பாஷைகளைப்பேசி, சூலாயுதத்தையும் - வேலாயுதத்தையும் — பாசத்தையும் - அடுக்கடுக்காய்ப் பிரயோகித்தார்கள். அப்படி யவர்கள் எறிந்தவைகளும் வீசினவைகளுமான அநேக ஆயுதங்களை யெல்லாம் இலட்சுமணர் துண்டுதுண்டாக்கி, அந்தத் துஷ்டர்களுடைய பெரியதலைகளையு மறுத்து, அவர்களுக் குதவியாகவந்த ரதகஜதுரக பதாதிகளையும் சின்னபின்னமாய்ச் சிதறிப்போகும்படிச் செய்தார். அந்தச் சமயத்தில் அதிகாயனுடைய சேனைவீரர்கள் ஐம்பத்தாறாயிர மதயானைகளைச் செலுத்திக்கொண்டு இலட்சுமணரைச் சூழ்ந்து, அவரவர்கள் பலபல ஆயுதங்களை மேகவருஷம்போல வருஷித்தார்கள். அன்றியும் - வானரசேனைகளி லொருவராவது அப்பாலிப்பாற் போகவொட்டாமற் சூழ்ந்து, பெருங்கூட்டமான மலைகளைப் பெருங்கைகளிற்கொண்டு வீசியெறிந்தும் — ஆயுதங்களால் தாக்கியும்—கர்ச்சிப்பினாற் கலங்கிப்போகும்படிச் செய்தும் ஆரம்பித்தார்கள்.

இவ்வாறந்த ராக்ஷசவீரர்களாலே எறியப்பட்டவைகளும் எய்யப்பட்டவைகளுமான மலைகளும் — ஆயுதங்களும் - இடியோசை யுண்டாகும்படி ஒன்றையொன்று கிட்டித்தாக்கி, அதிவேகமாய்ச் சமுத்திரம்போங்கி வந்தது

போலவும், யுகாந்தகாலமேகம் மூடிக்கொண்டது போலவும், லோகமுழுது நெருங்கிய படியால்; பூமி ஆகாசம் திக்குகளெல்லா மறைந்துவிட்டன.

## இலக்ஷுமணர் அதிகாயனுடன் வந்த அறுபதினாயிர மதயானைகளை அதமாக்கல்.

கவி.

அப்படையனைத்தையு மறுத்துவீழ்த்தவர்
அப்புடைத்தடக்கைக ளெனித்துச்சுற்றிய
முப்புடைத்தலைக் குலத்தையுமூட்டினான்
எப்புடை மருங்கினு மெரியும்வாளியான்.

யுத்தகளத்தில் நின்ற இராட்சச வீரர்களின்மேல் இப்பக்கத்திலிருந்து தான் வருகின்றதென்பதன்றி எப்பக்கத்திலுமிருந்து அக்கினிச் சுவாலையை வீசிக்கொண்டு வரும்படியாகிய பாணங்களைப் பிரயோகித்த பிரசண்ட உத்தண்டவீரப் பிரதாபசாலியாகிய இலக்ஷுமணப் பெருமான் இராட்சசவீரர்களையெல்லாம் இயமபுரிக்குக் குடியேற்றி அவர்களுடன் வந்த யானைப் படைகளைச் சங்கரிக்கும்படி அவைகளின்மீது பாணப் பிரயோகஞ்செய்து ஆயுதங்களைப் பிடித்துக்கொண் டிருக்கின்ற கைகளைத் துண்டுதுண்டாக்கி, கன்னமதம் — கபோலமதம் — பீஜமதம் — என்கிற மும்மதங்களைப் பொழிகின்ற மலைபோலும் பருத்த யானைகளுடைய தந்தங்களும் துதிக்கைகளும் அற்று, வலியதலைகளும் அறுந்து மேகங்களைப்போலச் சுருண்டு விழும்படிச் செய்தனர். இவ்வண்ணம் இலக்ஷுமணர் ஒவ்வொருயானைக்கு ஒவ்வொருபாணம் பிரயோகிக்கவே இடி விழுந்ததைப்போல் அந்தப் பாணங்கள்பட்டு யானைக்கழுத்தின்கயிற்றில் மாட்டியிருக்கின்ற பாகர்களுடைய இரண்டுகால்களுமற்று, மேலிருந்து ஆயுதப் பிரயோகஞ்செய்கின்ற ராக்ஷதர்களு மடிந்து கீழ்விழுந்தார்கள். அந்த யானைகளு மதங்களைப் பொழிந்துகொண்டு மலைகளைப்போல விழுந்தன.

இடிபோல் முழங்குகின்ற வல்லமையுள்ளவைகளாகிய கூரியபாணங்கள் நுழைந்து முதுகி லுருவினபடியினாலே, சிலயானைகள் மேற்றவிசும் அத்தவிசை யிறுக்கிய கச்சுவார்படிந்த மார்பும் பிளப்புண்டு மதங்களைப் பொழிந்துகொண்டு, திக்குத்திக்குகள்தோறுங் கருமலைகளைப்போல்விழுந்துகிடந்தன. கொடிகளை முறித்து அங்கங்கேபற்றி யெரியும்படிச் செய்கின்ற அக்கினியாஸ்திரங்கள் யானைகளெங்கேயென்று தேடிக்கொண்டுபோகின்றபடியால், அந்த யானைகளறுபட்டு அவைகளைச்செலுத்தினவர்களுடைய தலைகளு மறுபட்டன. அதனால் கண்குழிந்தபேய்கள் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்று" சும்மாயிராமல், தங்களுக்கு வேண்டியமட்டும் பிணங்களைக்கொள்ளைகொள்ளையாய் வாரிக்கொண்டன. இலக்ஷுமணர் பலங்கொண்டு விடுகின்ற பாணங்கள் மழையினுமிகுதியாகவந்து படுகின்றபடியால், இடிவிழுந்த மலைகளைப்போலக் கூட்டங்கூட்டமாக உருளுகின்ற யானைகளினுடைய ரத்த



வெள்ளமானது கறுத்த யானைக்கூட்டத்தோடு சிவந்தநிறமுள்ள யானைக்கூட்டம் போரிட்டது போலக் கடலிற்போய் விழுந்தன.

சிலயானைகள் தங்களைச் செலுத்தும் பாகர்கள் மாண்டபடியால் ஒழுங்காய்ச் செல்லாமல், ஆலகாலவிஷத்தையு மிடியையுமொத்த கோபத்தையும் துசையையு முடையவைகளாய் மதமேறி வெறிகொண்டு, மதஜல மழைபோலச்சொரிய ஒன்றோடொன்று எதிர்த்துச் சண்டை செய்தன. இவ்வாறு சுமித்திரைபெற்ற இளஞ்சிங்கம் பாணங்களையெய்து துவம்சப்படுத்துவதினால் சில யானைகள் கால்களற்றன. சிலகஜங்கள் துதிக்கையிற்றன. சிலதந்திகள் வால்களறுந்தன. சிலகரிகள் குடல்சரிந்தன. சிலகுஞ்சரங்கள் தோல்வழுக்குண்டு போயின. சிலவேழங்கள் மழையைப் போல வீழ்ந்திட்டன. சில சிந்துரங்கள் விளாதடிகளைப் போன்ற தந்தங்களொடிந்தன. இராக்ஷசவீரர்கள் எட்டுத்திக்குகளிலு நிறைந்த பதினறுவகையான ஆயுதங்களையும் அவரவர்கள் விட்டது விட்டபடியே இலட்சுமணர் பாணங்களால் அறுத்தார்கள். அவர்களாயுதங்களு முறிந்தன. இப்படி தீயைச்சொரிகின்ற கண்களையுடையவர்களாயும், பெரிய தேககாத்திர முள்ளவர்களாயும், கோபமுற்ற வீரவார்த்தைகளைப் பேசுகின்றவர்களாயும், இலட்சுமணர்மீது கடல்புரண்டு வருவதுபோலவந்த ஐம்பத்தாயிரம் வீரர்களும் அவரவர்களுடைய மதயானைகளோடு மாண்டார்கள்.

அதுகண்ட அநேக துஷ்டராக்ஷதர்கள் அறுபத்தாயிரம் யானைகளை அக்கினியைப்போலச் செலுத்தி, அநேக சித்திரவிசித்திரமாக அஸ்திரப்பிரயோகம் பண்ணி, "கொல்லுகின்ற வீரத்தொழிலையுடைய லக்ஷுமணனைப்பார்த்து, இனியிந்த யானைகளை உன்னுடைய அஸ்திரங்களாற் கொல்லுக பார்க்கலாமென்று சொன்னார்கள். மேகங்களினாலே மூடப்பட்ட செவ்விய கிரணங்களையுடைய சூரியனைப்போல அந்த யானைக்கூட்டங்களுக்குள் மறைந்துவிளங்கிய வீரசிகாமணியாகிய இளையபெருமாள், இந்திரதனுசுக்குச் சமானமாகிய தமது வில்லைவளைத்தார். வளைத்தமாத்திரமே யானையாகிய மேகங்களெல்லாம் சிதறுண்டு, தலையுங்காலு நடுக்கங்கொண்டு பூமியில் விழுந்தன. போகமிகுதியால் செவியடியில் மதமழையைப் பொழிகின்றவைகளும், மலையையும் கடலையுமொத்த தேகங்களையுடையவைகளும், கண்களில் திரள்திரளாக நெருப்பைச் சொரிகின்றவைகளுமாகிய சிலயானைகள் முதுகுபிளந்தன. சில மஸ்தகம்திறந்தன. சிலபலம்பொருந்திய துதிக்கையற்றன. இப்படிப் பலவாறாகச் சின்னபின்னப்பட்டும் தமக்குண்டாகிய மதமொழியாது பொழிந்தன.

சிலயானைகள் தன்னளவுக்குள்ளாகவே அலைகளை வீசிக்கொண்டிருக்கின்ற சமுத்திரநீர் ஊழிக்காலச் சண்டமாருத மோதுதலினால் கரைபுரண்டுவருவதுபோல எல்லுக்கடங்காமல் பலங்கொண்டு விசையாகப் புறப்பட்ட பாணங்கள் முகபடாமணிந்த மஸ்தகத்திற்பட்டுருவ, பூமியிற்பெய்கின்ற மேகஜலத்தைப்போல மதஜலத்தைப் பொழிந்துகொண்டே மாண்டன. சிற

குகளுடனே மிகுந்தவேகமாய்ப் பறந்துகொண்டிருந்த பருத்தமலைகள் தேவேந்திரன் கூர்மழுங்காத வச்சிராயுதத்தினால் வீசப் பக்கங்களிற் பறந்துபோவதற்கிசைந்த சிறகுகளற்று விழுந்தாற்போல, மூன்றாம்பிறைச் சந்திரனுக்கொப்பாக நெற்றியில் அர்த்தசந்திரபாணம்பட்டுச் சிலயானைகள் மடிந்தன. சூரியனுக்குச் சமமாகிய பாணங்கள்பட்டுங் கோபமாறாமல் வெகுமாய்க் குமுறுகின்ற மேகத்திற்கொப்பாய் கர்ச்சிக்கின்ற அநேகயானைகள் ரணகளத்திற் பின்வாங்காமல்நிற்கின்றன, அளவிறந்தயானைகள் தங்கள்வலிய குன்றி மஸ்தகங்கள் பிளப்புண்டு அவற்றினின்று பொழுகி அலைமோதிஓடுகின்ற சிவந்த ரத்தப்பிரவாகத்தில் மலைகளைப்போல முழுகிக் கடலிற்போய் விழுந்தன.

சிலயானைகள் தங்கள்கண்களிற் கூர்மையான பாணங்கள்வந்து தைக்கிறதைக்கண்டு இவ்வளவ்வளவென்னுத கோபத்துடனே கும்பற்கும்பலாகப் பூமியும் பொடிப்பொடியாய் நெரிந்து போகும்படித் திக்குத்திசை தெரியாமலோடி, இராட்சசசேனா சமுத்திரத்தை மிதித்து உழக்கிவிட்டன. இளையபெருமாள் ஒருபிரயோகத்தில் ஆயிரங்கூர்மையான பாணங்களைமேகப்பொழிகின்ற ஆயிரந்தாரைகள்போல எய்வதினால், அப்பாணங்கள் பாய்ந்து இரண்டாயிர மதயானைகளிறந்து விழுமேயானால் அவருடைய கரவேகசரவேக வில்வித்தையை ஆராய்ந்து நிச்சயிப்பதற்குத் தேவர்களாலு முடியுமோ? தேர்கள்முறிந்து, யானைகளறுந்து, சண்டைசெய்கின்ற கோபமுள்ள வீரர்களிறந்து, விசயலட்சுமி நிர்த்தனஞ்செய்கின்ற ரணகளத்திற் குதிரைக்கூட்டங்கள் பொரிந்து, இவையெல்லாம் நான்குபக்கத்திலு மோதுகின்ற யானையிரத்தப் பிரவாகத்தில் அகப்பட்டு, அப்புறமிப்புறம் போகாமல் போர்க்களத்திலே தேங்கி நின்றுவிட்டன.

இப்படி அறுபதாயிர மதயானைகளும் ஒருநாழிகை செல்வதற்குள்ளே துண்டுதுண்டாய்ச் சிதைந்து குவியல் குவியலாகக் கிடந்தபடியினாலே, உலகத்தாரா லிவைகளெல்லா மலைகளோ? யானைப்பிணக் கூட்டமோ? என்றறியக் கூடாதவைகளா யிருந்தன. இப்படி கோடிக்குமதிகமாகவந்த யானைகளெல்லாம் இளையபெருமாள்விட்ட பாணங்களால் ஒருமிக்க வழிந்துபோனதைக்கேட்ட இராவணன் பின்னும் பிரத்தியேகமாயிருந்த ஒருகோடியானைகளை அந்த அதிகாயனுக்குத் துணையாகவனுப்பினான். முன்னமொருகோடி யானைகள்பட்டு வருகின்றவழியெல்லா மதநீர் ஆறாய்ப் பெருக்கெடுத்தோட, இப்போதுவந்த யானைகளை இடியையொத்த அம்புகளைப் பொழிகின்ற இரண்டுகுதைகளையுடைய இந்திரதனுவுக்குச் சமானமான வில்லைக் கையிலேவைத்திருக்கின்ற வெற்றிபெற்ற சிம்மத்திற்கொப்பாகிய இளையபெருமாளுக்கு முன் இராக்ஷசவீரர்கள் செலுத்திக்கொண்டுவந்தார்கள். இந்தலோகத்திலெத்தனை மலைகளுண்டோ அத்தனையையும் உருவத்தால் தோற்கடிக் கின்றவைகளும் ஒன்றுக்கொன்று ஒப்பானவைகளுமான அந்தயானைகளெல்லாம், இலட்சுமணரைவந்து கும்பற்கும்பலாய் நாலுபக்கமும் சூழ்ந்துகொண்டன.



இவ்விதமாய்வந்து சூழ்ந்துகொண்ட அளவில்லாத வடவாமுகாக்கினியைப்போலக் கோபிக்கின்ற யானைகளெல்லாம் அவருடைய வில்லிலிருந்து புறப்பட்டபாணங்களாற் சில தலைகளற்றனவும், சில கால்களற்றனவும், சில உடல் பிளந்தவைகளுமாய் மாண்டன. முப்பத்தாறுயோசனை தூரமட்டு நான்கு திசைகளிலு மதயானைகளினுடைய சஞ்சாரமே யாகிவிட்டதென்று யாவரும் பயந்தார்கள். வானரக்கூட்டமெல்லாம் கலங்கிக் குழம்பி அந்தப்பூமியே வேறுபட்டுப்போய் விட்டது. பேய்க்கூட்டங்கள் வால்பக்கமிது; தலைப்பக்கமிது: என்றுதெரியாமல் யானைப்பிணங்களை மலைகளைத் தூக்கிக்கொண்டு போகிறதுபோலத் தூக்கிக்கொண்டு போயின. பக்கங்களில் அலைவீசிக்கொண்டிருக்கின்ற ரத்தக்கடலுடனே சிதைந்துமாண்டுபோன சேனைகளை வாரிக்கொண்டு மதஜலவாறுகள் பலவாய்ப் பாய்ந்தன. இலட்சுமணர் ஒருபாணத்திற்கு ஒருயானை இறந்து விழும்படியாக, இடியைப்போன்று அக்கினியைக் கக்குகின்றவைகளும் - யமனைப்போன்றவைகளும் - முருகனது வேலுங் கண்டு நாணத்தக்கவைகளும் - கடலையும் வற்றடிப்பவைகளுமான பாணங்களால், மேகம்போல மதஜலத்தைப் பொழிகின்ற யானைகளைப் பதினாயிரம் பதினாயிரம் ஒவ்வொரு பத்தியாகக்கொன்றார்.

இந்தப்பிரகாரமாக இளையபெருமாளுடைய பாணங்கள் யானைகளைத் தேடித்தேடிக் கொல்லுகின்றதைக்கண்டு நாமும்யானைபோற் காணப்படுகிறோமே ஆகையால் நம்மையும் அப்பாணங்கள் துளைக்குமோ என்கின்ற பயத்தினால் மலைகளும் ஏங்கின. யானைபோலக்கறுத்துக் காணப்படுகின்ற மேகங்களுநடுங்கின. சோலைகளும் அஞ்சின, மற்றப் பெரியபொருள்களும் தங்கள் நிலைமாறின. திக்கஜங்களும் தங்கள் ஸ்தானம்விட்டு நழுவின. கடல்களும் துடிதுடித்தன. சிவபுத்திரராகிய ஐந்துகையுள்ள விநாயகரும் நாம் யானைமுகம்பெற் றிருக்கின்றமையால், இராமாநுஜருடையபாணம் தம்மையுங்கொல்லுமோவென்று நடுக்கிட்டாரென்றால், மற்றவைகளைப் பற்றிப் பலவாறு சொல்லவேண்டியதென்ன? விற்குதைகளிற் பூட்டியிருக்கின்ற நாணோசை யானது கடலைத்தத்தளிக்கும்படிச்செய்து, சுவர்க்கலோகமெல்லாம் நடுநடுங்கிக் கிடுகிடாய்த்துவிட்டது. அந்த வில்லிலிருந்து புறப்பட்டபாணங்கள், வேகமுள்ள ராட்சச வீரர்களுடைய தலைகளிலும் உடல்களிலும் உருவின. அந்தப்பாணங்கள்பட்டு மதகஜங்கள் இடிவிழுந்த மலைகளைப்போல் அடிசாய்ந்து விழுந்தன.

## இலட்சுமணருடைய பாணங்கட்குத் துணையாக அஞ்சநேயரும் யானைப்படைகளைக் கொல்லல்.

கவி.

இவ்வேலையி லநுமான்முத லெழுவேலையுமனையார்
வெவ்வேலவர்செலவேவிய கொலையானையின்மிசையைச்

செவ்வே யுறநினையா வொரு செயல்செய் குவனென்பான்
தவ்வேலையைக் காணிவன் றனிவேலெனத் தகையான்..

இப்படிப்பட்ட சமயத்தில் அஞ்சநேயர் வந்து, ஏழுசமுத்திரப்போல் உங்களாலேவிய யானைகளில் எஞ்சினியபெருமாள் கொன்றதுபோக மிகுந்துள்ளயானைகளெல்லா மடியத்தக்க ஒருசெய்கையை நானொருவனே செய்கிறேன். ஓ இராட்சசவீரர்களே! துள்ளிக்குதியாதேயுங்கள். என்று சொல்லி வேல்பாய்வதுபோலப் பாய்ந்து, வீரகர்ச்சனைசெய்து, கண்களில் தீப்பொறி பறக்க ஒரு பெரியமதயானையைப் போலக் காணப்பட்டு, பிரமேந்திராதி தேவர்முதலியோரை உபத்திரவம் செய்துகொண்டிருந்த இரணியன்முதலிய அசுரர்க்கங்களை நாசமாக்கும்படி அவதரித்த ஆதிநரசிம்மம்போல அதிக உக்கிரங்கொண்டு, ஸ்ரீராமநாமஸ்மரணைபண்ணி, யமதண்டம்போன்று வளர்ந்திருந்த ஒருமராமரத்தைப்பிடுங்கி, இருப்புத்தடிபோலும் நீண்ட துதிக்கைகளையுடைய மதயானைகளெல்லாம் நொறுங்கமாளும்படியாக ஊழிக்காலத்திற் பெரும்பூதங்களும் உகாந்தகால மேகமும் கலந்தழிக்கும்போது மலைகளின்மீது பேரிடிவிழுவதுபோலச் சாடினார்.

அப்படிச் சாடுகிறகாலத்தில் தம்முடைய கால்மிதியிற் பலயானைகளும், நடக்கும்விசையிற் பலயானைகளும், வல்லமையிற் பலயானைகளும், உதையிற் பலயானைகளும், கால்கட்டுதலிற் பலயானைகளும், வாலாற் பலயானைகளும், எல்துனியாற் பலயானைகளும், வாய்ச்சொல்லின் வேகத்தாற் பலயானைகளும், கைவீசுதலிற் பலயானைகளும், ஓரிடத்திலிருந் தோரிடத்திற் குதிக்கிறதினற் பலயானைகளும், குத்துகிறதினாற் பலயானைகளும் மாளும்படிக்கொன்றார். யானைகளைப்பற்றி யிழுத்தும், சிலவற்றைப் பிளவுபிளவாகப்பிளந்தும், வற்றை நகங்களாற்கிழியும், சிலவற்றைப் பனைமரத்தைப்பற்றி முறிக்கிறபோல் துதிக்கைகளைப்பற்றி முறித்தும், சிலவற்றைக் கையாற்குடைந்து, சிலவற்றைக்கிழித்தும், சிலவற்றைத் துண்டித்தும், சிலவற்றைப் பல்லுக் கெல்லியும், சிலவற்றை மத்திட்டுக்கடைவதுபோலக் காலாற்கடைந்து, சிலவற்றைத் துண்டுதுண்டாகக் கடித்தும், சிலவற்றைப்பற்றிக் குண்டுகட்டாகவளைத்தும், சிலவற்றை பொடித்தும், சிலவற்றினுடைய நீண்ட தந்தங்களைப் பிடுங்கியும் கொன்றார்.

சிலயானைகளைக் கைகளினால் வாரிவாரிச் சமுத்திரத்திலெறிந்தார். சில யானைகளை இழுத்துச்சுற்றி மலையச்செய்து உருட்டினார். சிலயானைகளை பிற்போட்டு அரைத்துவிட்டார். சிலயானைகளைப்பிடித்துப் பூமியிலறைந்தார். சிலயானைகளைக் குடலைப்பிடுங்கினார். சிலயானைகளைச் சுவர்க்கலோகத்தில் விழும்படி வீசினார். சிலயானைகளை மிதித்துத் துவைத்தார். சிலயானைகளைக் குத்தித் துவைத்தார். அநேகயானைகளை மலைப்பாம்பைப்போல் தம்முடைய வாலினாலே சுற்றிவளைத்துக்கட்டி, பாகர்களுடனே வேகமாய் மலைமேல் மோதியடித்துக்கொன்றார். முன்னே தம்மேல்வந்த யானையைத் தோலுரித்துக்கொன்ற



சாசுரர்து சிவபிரானை நாம் என்பதற்குத் திருஷ்டாந்தமாக, தம்முடைய பெரியவாயில் அநேகம் யானைகளைப்போட்டு குதப்பினார். இவ்வாறு ஒருநொடிப்பொழுதுக்குள் ஆயிரம்யானைகளைச் சிம்மத்தைப்போலக் கொன்றார்.

இப்படிக் கொல்லும்போதே சையமருவுகத்திலுமுயர்ந்த ஆறுயிரமத யானைகள் அதிகவேகத்துடனே அஞ்சநேயருக் கெதிராகவந்தன. அவைகளையெல்லாம் ஒருகணப்பொழுதுக்குள் உருமாய்த்து இன்னபொருளென்று தெரியவொட்டாமல், உழவுநிலத்துச் சேற்றைப்போலாகும்படித் துகைத்தார். இப்படி அஞ்சநேயர் க்ஷணப்பொழுதுக்குள்ளாக முன்னும்பின்னுமாகவந்த யானைகளில் இலக்ஷம்யானைகளுக்கு மேலாகவேகொன்றார். மற்றவைகளையெல்லாம் இளையபெருமாள் அர்த்தசந்திர பாணத்தினாற் கொன்றுவிட்டார். இதைக்கண்ட ராக்ஷசர்களெல்லாம் அதிகபயங்கொண்டு திக்குகள்தோறும் ஓட்டம்பிடித்தார்கள்.

## தேவாந்தகனும் திரிசிரனும் அஞ்சனேயரோடேதிர்த்து மடிதல்.

கலி.

இரிந்தார்திசை திசையெங்குனும் யானைப்பிணமெற்ற
நெரிந்தார்களுமெரியாதுயிர் நிலைத்தார்களுநெருக்கால்
எறிந்தார்தெரிந்தடந்தேரிற் செல்லாருமுன்செல்லத்
திரிந்தானொருதனியேநெடுந் தேவாந்தகன்சினந்தான்.

இந்தப்பிரகாரமாக அஞ்சனேயர் அநேக யானைகளையும் அவ்வானைமீதாரோகணித்த வீரர்களையும் திசைதிசைகளிலெறிந்து கொல்லக்கண்ட அதிரதவீரர்கள் சமரதவீரர்கள் மகாரதவீரர்களாகிய தேர்வீரர்கள் தங்கள் தங்கள் தேரினின்றுங் குதித்து மனமெரிந்தவர்களாய் யானைப்பிணங்களெல்லாம் காவிற்றடுக்கும்படியாக அவ்வானை வீரர்களில் சிலரிறக்கவும், சிலருயிர் துடிக்கவுமாகின்ற கூட்டங்களிற் புகுந்து புகுந்தோடினார்கள். அவ்வண்ணம் யானைகளும் யானைவீரர்களும் மாண்டதையும், ரதவீரர்களோடினதையும் திரிலோகங்களிலும் தனக்கு நிகரற்ற ஜெயப்பிரதாபசாலியான தேவாந்தகன் கண்டு இவ்வநுமானோ நீலயல்லவோ இவ்வண்ணமாயிற்றென்று கோபித்து அவநுடன் எதிர்த்தான். இரத்தவெள்ளத்திலங்கங்கே பிணங்கள் மலைமலையாகக் குவியப்பெற்று அதிபயங்கரமாய்த் தோற்றுகிற அந்தரணக்களத்திலே தனித்தேர்விட்டுக்கொண்டு வந்து, அக்கினிக்குச் சமானமாகிய சிலபாணங்களை அனுமான்மீது பிரயோகித்துத் தேகத்தைச் சல்லடைக்கண்களாய்த் தொளைத்து இடியைப்போலக் கர்ச்சித்தான். அப்போது அநுமானும் ஒருபெரியமரத்தைப் பிடுங்கி, அடா தேவாந்தகா! இதோ உன்னுயிர்போய்விட்டது. என்று அவன்மேல் விட்டெறிந்து அட்டகாசஞ்செய்து நின்றார். அதைக்கண்ட தேவாந்தகன் அக்கினியைப்போலப் பிரகாசிக்கின்ற கூர்மையான பாணத்தை எடுத்து, அந்த மரத்தின் வேகத்தையடக்கக்கடவாயென்று பிரயோகித்து, அதனைத் துண்டாக்கிவிட்டான்.

அதைக்கண்ட வானரகுலத்திலொரு சிங்கம்போலிருக்கின்ற அனுமான் வேறொருமலையைப் பிடுங்கியெறிய, அது தன்மேற்பட வரும்போது தேவாந்தகன் அந்தமலையைப் பாணத்தாலுடைத்துவிட்டுச் சந்தோஷித்தான். அப்போது ஆஞ்சநேயர் அதிககோபங்கொண்டு, வில்லிலம்பைப் பூட்டிக்கொண்டிருக்கின்ற அந்தத் தேவாந்தகன்மீது புறவின்மேல் இராஜாளிபாய்வதுபோற்பாய்ந்து, அவன்கையிற் பிடித்திருந்த பெரியவில்லைப்பறித்துத் தேவர்களெல்லாம் பல்லாண்டு கூறும்படி அநேகதுண்டுகளாக முறித்தார். அவருடைய வல்லமையைக்கண்டு வெகுகோபமாய்த்தேவாந்தகன் ஒரு தோமராயுதத்தையெடுத்து, தேவர்கள் பயப்படும்படி அவ்வனுமானுடைய இடதுதோளில் பிரயோகித்துக்கர்ச்சித்தான். ககனவாசிகளாகிய தேவர்களும்பார்த்து இவ்வாயுதத்தால் அனுமான் இறந்துவிடுவாரென்றே பயந்து மெய்ம்மறந்தார்கள்.

இவ்வண்ணம் தேவாந்தகன் தனது தோமராயுதத்தைப் பிரயோகித்த மாத்திரத்தில் பூவணிந்த கூந்தலையும், மயிலைப்போலுஞ் சாயலையுமுடைய மாதர்களினது மாயவலையிற் சிக்காத ஜிதேந்திரியரான நமது தெய்வமாகிய ஆஞ்சநேயர் - ஊழிகாலத்திலெழுங் காலாக்கினியைப்போற் கோபித்தெழுந்து தன்புயங்களின்மீது தாக்கிய அக்கைவேலைத் தமது கரத்தாற் பிடித்து அவ்வியுத்தகளமானது கலங்கிப் போகும்படியாக இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாகச் சாரிகை சுழன்று அத்தோமரத்தைக் கரகரவென்று சுழற்றி அத்தேவாந்தகனது தேரையும் அத்தேரை நடாத்தும் சாரதியையும் இடியேறு வீழ்ந்ததைப்போலடித்தார். அவ்வடிபடவே அவ்விரதம் பொடிப்பொடியாயுடைந்துதிர்ந்தன. சாரதியும் மண்டைதிறந்து கீழ்விழுந்திறந்தான். சிந்தைகலங்கித் தவித்து மூர்ச்சித்த தேவர்களுங் கவலைநீங்கி முகமலர்ந்தெழுந்து அனுமானுடைய வீரப்ரதாபத்தைப் புகழ்ந்து போற்றினார்கள்.

கவி.

சூலப்படைதொலைவொன்றனை யிமையாதமுன்றொடர்ந்தான்
ஆலத்தினும்வலியானுமக் கெதிரேபுகுந்தடர்த்தான்
காலற்கிருகண்ணுன்றன கையாலவன்கதுப்பின்
மூலத்திடைபுடைத்தானுயிர் முடித்தான்சிரமடித்தான்.

அப்போது அந்தத் தேவாந்தகன் ஒரு சூலாயுதத்தையெடுத்துப் பிரயோகிக்கும்படி தொடங்கினான். அவனை ஆஞ்சநேயர் ஒரிமை கொட்டுமுன்னமே அவன்மேலெதிர்த்துப் பாய்ந்தார். காலகோடி விஷத்தைப் பார்க்கினும் கொடியவனான அந்தத் தேவாந்தகனுமவனை யெதிர்த்துப் பாய்ந்தான். அனுமான் யமனுடைய தண்டாயுதத்துக்கொப்பான தம்முடைய கையால் அவன் பிடர்மூலத்தில் ஒரு குத்துக்குத்தி, அவனுடைய தலையை மடக்கி உயிரை யொடுக்கினார்.

அதை அதிகாயனெதிரேநின்று பார்த்துக்கொண்டிருந்து வடவாமுகாக்கினியைப்போற் சீறி, புண்ணிலிருந்து வழிவதுபோலிருகண்ணிலிருந்து



இரத்தவெள்ளம் பொழியும்படியாக இப்போதே உன்னுயிரை யுண்டுவிடுகிறேன். உன்னையினி விடமாட்டேனென்று சொல்லிக்கொண்டே தன் தேரை வேகமாய் நடத்திக்கொண்டு அம்புவருவதுபோல வந்தான். அனுமானும் அப்படியே சலியாமல் நின்றார். அந்த அதிகாயன் வரும்போது முன்னிட்டசேனை பின்னிடவும், பின்னிட்டசேனை முன்னிடவும், பிரிந்து நின்றவர்களெல்லாம் ஓடிவந்து ஒன்றாய்ச் சேர்ந்தார்கள். இப்படி அதிகாயன் மேருமலைபோலே யிருக்கின்ற அனுமானை யெதிர்த்து, பொன்மலையை முறிக்கும் வல்லமையோடு தோன்றி இதனைச்சொல்லுகின்றான்.

ஓ வாயுபுத்திரனென்னும் அனுமானே! நீ என்னுடைய தம்பியாகிய அக்ஷகுமாரன் தனித்துவர அவனை, வெட்டாத்தரையிற் போட்டுத்தேய்த்துநசுக்கிக்கொன்றுவிட்டு, கடலைத்தாண்டி யோடிப்போய்விட்டபடியினாலே தப்பிப்பிழைத்துப் போனாய். இப்போது வந்து நீ வேறுமைந்த தேவாந்தகனையும் கொன்றாய். அதைப்பார்த்து உன்னை யெதிர்த்து வந்தேன். உனக்காயுள் நாள் முடிந்துவிட்டபடியால் இன்றைக்கு அகப்பட்டாய். இன்றையதினம் நீ தப்பினால் இனி என்றைக்கும் உன்னோடு நானெதிர்க்கிறதேயில்லை. நீ யெங்களை அநேகவிதமாய் வருத்தப்படுத்தி யிருக்கின்றாய். இந்த லக்ஷ்மணனையும் உன்னையும் வியர்த்தமாய்ப்போகாத என்பாணவருஷத்தால் வெற்றிபெற்றுக் கொன்றாலல்லாமல் நான் திரும்பிப்போகின்றதில்லை. இதை நீ கெட்டியாய் நம்பு. இந்த வார்த்தை தப்பமாட்டாது; தப்பமாட்டாதென்று தன்னிரண்டு கைகளையும் பிசைந்து மேகம் கர்ச்சித்தது போலச் சப்தித்துச் சிரித்தான்.

அதற்கு ஆஞ்சநேயர் - ஓ குகையிலிருக்கின்ற சிம்மத்தையொத்து வலிகூடிவந்த அதிகாயனே! என்னை அப்படியே நீ கோபிக்கலாம். உன்பின்னேநிற்கின்ற திரிசிரனென்பவனையும் நான் உன்னோடுகூட வேபூமியிற்போட்டரைத்துவிடும்படியாகக் கூப்பிடலாமென்று சொன்னமாத்திரத்தில், அத்திரிசிரனென்பவனதுகேட்டு, ஆம்: ஆம்: நீ சொன்னது மெய்தானென்று கோஷித்துக்கொண்டு அவனெதிரேவந்து சேர்ந்தான். சாம்பசிவமூர்த்தியையொத்த ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சநேயர் அவ்விருவர்களுடனே எதிர்த்து; உங்களிற் சாகாதவர்களெல்லாம் பலமுள்ளவர்கள்தானென்று சொல்லிக்கொண்டு வாய்பென்றபடி பக்கத்தி லிருக்கின்றவர்களுக்குள்ளே நுழைந்துபோனார்.

கவி.

தேர்மேற்செலக்குதித்தான்றிரி சிரத்தானையோர்திறத்தால்
கார்மேற்றுயில்மலைபோலிலைக் காத்தாற்பிடித்தெடுத்தான்
பார்மேற்பசித்துரைத்தானவர் பதியேற்படப்புடைத்தான்
போர்மேற்றிசைகெடுவாய்விலி னுனைதானெனப்போனான்.

அவ்வண்ணம் பக்கத்தில் யமனுடைய பாசத்திற் கெதிர்பார்த்திருக்கின்ற சேனைகளில் நுழைந்தவராகிய அனுமார் திரிசிரனுடைய தேர்மேற்பாய்ந்

று குதித்து, கறுத்தமேகங்கள் மூடிக்கொண்டிருக்கின்ற மலையைப்போத்த அந்தத் திரிசிரனைத் தம்முடையபலத்தாற் பிடித்துத்தூக்கிப் பூமியின்மேற் போட்டுக் காலால் மிதித்தரைத்து, அவ்விராக்ஷசர்களுடைய பழியை வாங்கும்படியாகக்கொன்று, மேற்குவாசலிலும் போர் நடக்கின்றதென்றுகேட்டு ஒரு இமைப்பொழுதுக்குள்ளாக அவ்விடம்போய்ச் சேர்ந்தார்.

அப்போது அதிகாயன் நின்றபடியேயின்று இன்னது செய்யவேண்டுமென்பதும் தெரியாமற் கண்களிற் செந்நீருந்தியும் சொரியும்படியாகப் பரிதபித்துக் கோபித்து, இந்த அனுமான் எதிர்த்து நிற்பானேயானாற் பார்வதியை இடப்பாகத்திலுடைய ருத்திரமூர்த்தியு மெதிர்த்து நிற்கச் சக்தியுள்ளவனல்லனென்று சொல்லி அதிககோபத்துடனே கையையசைத்து, நானொரு காரியத்திற்குவந்து வேறொரு செய்கையில்நின்று முயல்கிறது வீரலக்ஷணமல்ல. மஹாவீரர்களுக்கெல்லாம் உயர்ந்தவீரனான இவனைப் பிறகுபார்த்துப் பேசலாமென்று தன்தேரை இளையபெருமான்மீது செலுத்தும்படிச் சாரதிக்கு நியமித்தான்.

## இலக்ஷ்மணர் தன்னுடன் வந்தெதிர்த்த அதிகாயனுடன் அங்கதன் முதுகி லாரோகணித்துப் போர்புரிதல்.

கவி.

தேரொலிகடலைச்சீறச் சிலையொலிமழையைச்சீறப்
போரொலிமுரசினோசை திசைகளிற்புறத்துப்போகத்
தாரொலிகழற்கான்மைந்தன் றானையுந்தானுஞ்சென்றான்
வீரனுமெதிரேநின்றான் விண்ணவர்விசயஞ்சொல்ல.

அந்தத் தேரோசை கடலொலியைக் கெடுக்கவும் - வில்லினோசை மேககர்ச்சிதத்தைக் கோபிக்கவும்—யுத்தசன்னதத் தொனியும் பேரிகை முழக்கமும் அஷ்டதிக்குகளையுங் கடந்துபோகவும் – கிண்கிணியாலே சப்திக்கும்படியாக வீரகண்டாமணியைத்தரித்து அவ்வதிகாயன் சேனைகளுந்தானுமாக வந்துநின்றான். தேவர்களெல்லாம் பல்லாண்டிசைக்கும்படியாக இளையபெருமாளும் அவனோடெதிர்த்து வந்து நின்றார்.

அதை வாலிபுத்திரனாகிய அங்கதன் கண்டு அதிவேகமாயோடிவந்து, ஓ வில்வீரர்களுக்குத் திலகம்போலிருக்கின்ற சுமித்திரை இளஞ்சிங்கமே! ஓ இராமாநுஜரே! அதிகாயன் தேரின்மேலேயிருக்கத் தேவர் பாதசாரியாய் அவனோடு நின்று யுத்தஞ்செய்வதழகல்ல. அடியேன் தேவரீருடைய திருமேனியைத்தாங்க வல்லமையற்ற அற்பனாயிருந்தபோதிலும், கிருபைசெய்து அடியேனுடைய தோளின்மேலேறி யருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

கவி.

ஆமெனவமலன்றம்பி யங்கதனலங்கற்றோண்மேல்
தாமரைச்சரணம்வைத்தான் கழுமுனிற்றுக்கின்ற



சோமனுற்றனென்னக் குளிர்கின்றமனத்தராகிப்
பூமழைபொழிந்துவாழ்த்திப் புகழ்ந்தனர்புலவரெல்லாம்.

அதற்கு ஸ்ரீராமமூர்த்தியின் திருத்தம்பியாகிய இளையபெருமாள் நல்லதென்று, அவ்வங்கதனது வெற்றிமாலையை யணிந்த தோள்மீது தமது திருவடிக் கமலங்களை வைத்தேறியருளினார். பெரிய திருவடியாகிய கருடனைப்போல அங்கதன் இளையபெருமானைத் தாங்கிநின்ற வல்லமையை நோக்கித் தேவர்களெல்லா மனங்குளிர்ந்து புஷ்பமாரி பொழிந்தார்கள். ஆயிரம் குதிரைகள்பூட்டி இடியைப்போலச் சப்திக்கின்ற அவ்வதிகாயனுடைய தேர்போன திசைகளெல்லாம் அங்கதனும் காற்றடியைப்போலச் சாரிபோகின்றான். அந்தத்தேர் மேலே எழும்பினால் தானு மேலே போவான். அதுகீழே இறங்கினால் தானுங் கீழேவருவான். ஆகாசத்திற்போனால் தானு மாகாசத்திற் போவான்.

இந்தப் பிரகாரமாக அங்கதன் கடல்நீரெல்லாம் அக்கினிமயமாகக் கொதிப்பெழும்படிக் கலக்கினான். அந்தச் செய்கையைப் பார்த்த வானரவீரர்களெல்லாம் ஆனந்தமுற்று ஆர்ப்பரித்தார்கள். தேவர்களெல்லாம் இந்த அங்கதனுடைய செய்கை அந்தக் கருடபகவானுக்கு முண்டாயிருக்க மாட்டாதென்று தங்கள் கைகளைவிரித்தார்கள். பிறகு இளையபெருமாளுடைய சரமாரி அதிகாயனுடைய யானைகள்மீதும் குதிரைகள்மீதும் தைத்தன. இராக்ஷசர்கள் பக்ஷத்தில் மேககர்ச்சிதத்திலு மூன்று மடங்காகப் பேரிகை முழங்கின. வேறுநாதங்கள் கோஷித்தன. பெரிய தேர்களொலித்தன. குதிரைகள் அனுமானித்தன. தவளச்சங்கங்கள் தொனித்தன. வில்லின் குணத்தொனி அதிர்ந்தது. வீரகண்டாமணிகளும், இரத்தினாபரணங்களும், கலகலவெனக் கலித்தன. வீரர்களுடைய அதட்டுதலும், அவர்களுடைய சிம்மநாதமும் இடியைப்போல முழங்கின.

அப்போது அதிகாயனுடைய யானைகளிறக்கவும், பதாதிவெள்ளமாளவும், காற்றுக்கொப்பான குதிரைகள் மடியவும், இவைகளைப்பார்த்து யமன் பயப்படவும், தங்கமிழைத்ததேர்கள் எரிந்துபோகவும், இரணங்களெல்லாம் வெளியிடமாகவும், அவ்விடத்தி லுள்ளவைகளெல்லாம் பொடிப்பொடியாகிவிடவுமாக; இளையபெருமாள் பிரயோகித்த பாணம் பெருமாரியாய்ப் பாய்ந்தன. அப்போது திரிலோக நாயகராகிய ஸ்ரீரகுநந்தனருடைய திருத்தம்பியார் எதிரே நிற்கின்ற ராவணனுடைய மகனை நோக்கி, உன்னுடைய அபிப்பிராயமென்ன? உன்சேனையெல்லாம் சின்னபின்னப் பட்டுப்போனதைப் பார்த்து போய்விடுகின்றாயா? அப்படிக்கில்லாமற் சண்டைசெய்யத் தெரிந்து சாத்திர நின்று என்னோடு போர்செய்கின்றாயா? இவ்விரண்டில் உன்சம்மதமெது சொல்லென்று கேட்கவும், யமனைக்காட்டிலும் கொடியவனான அதிகாயன் அவரைப்பார்த்துச் சொல்லுகின்றான்.

ஓ இலட்சுமணா! என்னோடுகூட வந்தவர்கள் உன்னோடு சண்டைசெய்கிறவர்களல்ல. எதிர்த்திருக்கின்றவர்களைப் பார்க்கும்படியாக வந்தவர்களேயன்றி வேறல்ல. இப்போது போர்செய்வதெல்லாம் உன்பிணத்தைக் காக்கைகள்வந்து காக்கும்படிச் செய்யத்தான். நானுன்னைக் கூப்பிட்டதும் இதற்காகத்தான். ஆனதால் - உன்னை அந்தப் பார்வதியே காக்கட்டும், அல்லதந்தப் பார்வதியை இடதுபாகத்திலுடைய உருத்திரபகவானே காக்கட்டும். தேவர்களெல்லாம் காக்கட்டும். ஏழுலோகத்தவர்களும் காக்கட்டும். யாவர் காத்தபோதிலும் உன்னுடைய ஆயுசு இன்றோடு முடிந்துவிடுமென்று சொல்லித் தன் சங்கத்தைத் தொனித்து, மூங்கிலுருவங்கொண்டிருக்கின்ற யமனுகிய தன் வில்லைவளைத்துக் குணடங்காரம் பண்ணி, இடியைப்போலச் சிம்ஹநாதமும் செய்தான்.

இப்படி அதிகாயன்சொல்லக்கேட்ட இளையபெருமாள் புன்சிரிப்புச்சிரித்து, நீ சொன்னபடியே எனக்கும் ஒருவர் துணைவரமாட்டார்கள். நானொருவனுமே உன்னோடு சண்டைசெய்து தோற்றாலும் தோற்கிறேன். என்னை நீ ஜெயித்துவிட்டாயேயானால், முன்பு நீ சொன்ன தேவர்களையெல்லாம் ஜெயித்தவனை யாவாயென்றுசொல்லி, மின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற ஒரு பாணத்தை வில்லில்தொடுத்துப் பிரயோகித்தார். அதை மலையையவமதிப்புச்செய்யும்படியான தோள்களையுடைய அதிகாயன் ஒரு அக்கினிபாணத்தைத் தொடுத்து ஆகாசத்திலேயே துண்டாக்கிவிட்டு, கண்ணில் விஷமுள்ளதான குக்குடசர்ப்பம் போன்ற பதிலுபாணத்தைப் பிரயோகித்து, ஓ லட்சுமணா! இந்தப்பாணங்களை விலக்குக பார்ப்போமென்று கர்ச்சித்தான். இளையபெருமாளானவர் அவனெய்த பாணங்களையெல்லாம் தமது பாணத்தாலே முறித்துவிட்டு, மேருவையும்பிளக்கவல்ல பாணங்களை அநேகமாகப் பிரயோகித்தார்.

குபேரனை எதிர்த்து யுத்தஞ்செய்தவனான அதிகாயன் அவைகளையெல்லாம் துண்டுதுண்டாக்கிவிட்டு, கூர்மையான சிலபாணங்களை இளையபெருமாள்மீது பிரயோகித்தான். அவனெய்த பாணங்களையெல்லாம் இவர் அக்கினிமுகாஸ்திரங்களால் பொடிப்பொடியாக்கி, விரகர்ச்சனைசெய்துகொண்டிருக்கின்ற அவ்வதிகாயனைப்பார்த்துக் கோபித்துத் தெய்வத்துக்கொப்பான சில பாணங்களைப் பிரயோகித்தார். அவைகள் தவறாமல் அவனணிந்திருந்த கவசத்தை இரண்டாய்ப் பிளந்துவிட்டன. அப்படியந்தப் பாணங்கள் அதிகாயனுடைய கவசத்தைப் பிளந்துகொண்டு அவன்மார்பில் தைத்தமாத்திரத்தில், அவன்மூர்ச்சையாய்த் தேரிற்சாய்ந்து சோகமாற்றிக்கொண்டிருந்தான். அவ்வளவு நேரத்திற்குள்ளே அவனுடைய சேனைகளையெல்லாம் இளையபெருமாள் கோடிகோடியாகப் பாணங்களைப் பிரயோகஞ்செய்து துண்டந்துண்டம் கண்டங்கண்டமாய்ச் சிதைத்துக்கொன்றார்.



இப்படிப் பக்கத்திலிருந்த சேனைகளெல்லா மாண்டவிதத்தையும், அவர்களை உருவிக்கொண்டு போகின்ற அம்புகளை இவ்வளவென்று தொகைசெய்யக்கூடாதவிதத்தையும் அதிகாயன் பார்த்து, சேனைக்கு நடுவேநின்று தானடைந்திருந்த சோகம் தீர்ந்துத் தீரனமையுமா யிருக்கும்போதே வில்லைக்கையிலேயெடுத்து, அதிககோபத்துடனே மேகவருஷத்திலு மூன்றுபங்கதிகமாகப் பாணவருஷங்களைச் சரசரவென்று பொழிந்துநிறைத்தான். அப்போது ஆகாசமெல்லாம் அம்புகள், ஆகாசவெல்லையெல்லாம் அம்புகள். பூமியெல்லாம் அம்புகள். மலைகளெல்லாம் அம்புகள். போர்க்களத்தில் நின்றவர்கள் தேகமெல்லாம் அம்புகள். அவர்களுயிரெல்லாம் அம்புகள். சமுத்திரநீரெல்லாம் அம்புகளாக அதிகாயன் நிருமித்துவிட்டான். அதனால் அஷ்டதிக்குகளும் மறைந்துவிட்டன. தேவர்கள்மனம் பயத்தாலிருண்டது. அதுபோலவே சூரியகிரணங்களும் மழுங்கிவிட்டன. சூரியனுமறைந்து போனான். பூமியும் ஆகாசமும் பாணங்களால் நிறைந்துவிட்டன.

அந்தப் பாணங்கள் கக்கிக்கொண்டுவருகிற தீயும் - அவைகளொன்றுடனேயொன்று தாக்குதலாலுண்டாகிற தீயும்-ஒருசேரப்பற்றி, உலகமெல்லாம் புகையாய் நிறைந்துவிட்டது. அக்கால் தேவர்கள் இன்றோடே வானரசேனையெல்லா முடிந்துபோய்விடுமென்றதல்லவா? இவ்வதிகாயனை ஸ்ரீராமருடைய திருத்தம்பியார் ஜெயிக்கமாட்டுவாரோ? இவர்கற்றவித்தை யெல்லாம் யமனுக்கு ஆகாரமாய்விட்டதோ? இவ்வதிகாயன் கொல்லுகிறதற்கென்று கற்றவித்தைதானெப்படிப்பட்டதா யிருக்கின்றதென்று சொல்லிப்பயந்து தத்தளித்தார்கள். அப்போதவன் அங்கத குமாரனுடைய நெற்றிமீதும் - அவன் தோளின்மேலும்-அவன்மார்பிலும்-இரணமயமாம்படி பாணத்தைப் பிரயோகித்து, பின்பு மூன்றுபாணங்களை இளையபெருமாள்மீது மேவவிட்டு, தன்னு விரசங்கத்தையெடுத்துப் பூரித்து, தேவர்களுடைய தலைகள் நடுக்கங்கொள்ளும்படி அட்டகாசஞ்செய்தான்.

அப்போதவ் வங்கதனுடைய தேகத்தில் அம்புபட்டு மலையிலிருந்து அருவியாறு ஒழுகுவதுபோல ரத்தவெள்ள மொழுகுவதை இளையபெருமாள் பார்த்து, ஆயிரம்பாணங்களினாலே அதிகாயனுடைய குதிரைகளின் தலைகளை அறுத்து, அந்தக்குதிரைச் சாரதியையும் சிதைத்து, அவன் பிடித்திருந்த வில்லையுமுறித்தெறிந்தார். உடனே வேறொரு வில்லைவளைத்துக்கொண்டு அமர்க்களத்தி லெதிர்த்துநின்ற அதிகாயன்மீது இளையபெருமாள் அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அதைக்கண்ட அதிகாயனும் அக்கினியாஸ்திரத்தைவிட்டான். இரண்டஸ்திரங்களும் ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்செய்துகொண்டிருந்தன. இன்னும்-இளையபெருமாள் இடிக்குச்சமமான வேறே சில அக்கினிமுகப்பாணங்களைத் தொடுத்துவிட்டார். அவைகளவ்வதிகாயன் மார்பிற்பட்டுருவின.

அதற்கவன் கொஞ்சமாவதுமனஞ்சோராமல், மிகுந்தவல்லமையுடனே மழையைப்பார்க்கிலு மூன்றுமடங்கதிகமாகப் பலபாணங்களை வீராஸ்டகாசஞ்செய்து பிரயோகஞ்செய்தான். அந்தப்பாணங்கள் பின்னே நின்றவர்கள் முன்னே நின்றவர்களைக் காணத்தக்கதாகத் துவாரங்களுண்டாகும்படி தேக முழுவதும் சல்லடைக்கண்களாகத் திறந்துவிட்டன. இந்தப்பிரகாரமாக அதிகாயன் மூர்ச்சியாமலும் உயிர்மாளாமலும் வில்லைவளைத்து, பொன்கட்டின இறகுகளுள்ள அம்புகளை இடியைப்போலப் பிரயோகஞ்செய்தான்.

வாயுபகவான் இலக்ஷ்மணரிடத்தில்வந்து பிரமாஸ்திரம் பிரயோகித்தாலிறப்பானென்று கூறிப்போக அவ்வாறேபிரமாஸ்திரம் பிரயோகித்து அதிகாயனை மடித்தல்.

கவி.

கோன்முகந்தன்னியன்னிக் கொடுஞ்சிலைநாணிற்கோத்துக்
கான்முகக்குழையவாங்கிச் சொரிகின்றகாளைவீரன்
பான்முகத்தோன்றநின்ற காற்றினுர்காசன்பண்டை
நான்முகன்படையாலன்றிச் சாகிலனம்பவென்றான்.

இவ்வண்ணம் அதிகாயன் பாணப்பிரயோகஞ் செய்துகொண்டிருப்பதை இளையபெருமாள் கண்டு, பயங்கரமான பாணங்களைப் பிடிப்பிடியாயெடுத்தெடுத்துநாணிற்பூட்டி, இருகுதையும்பொருந்த வில்லைவளைத்துச் சரவருஷமாய்ப் பொழிந்துகொண்டிருந்தார். இப்படிநின்ற லட்சுமணப்பெருமானருகில் வாயுதேவன் தரிசனையாகிநின்று, ஐயா இளையபெருமாளே! இவன் பிரமாஸ்திரத்தாலல்லாமல் ஒருநாளும் சாகமாட்டானென்று சொல்லிவிட்டு மறைந்துபோனான்.

கவி.

நன்றெனவுவந்துவீர னான்முகன்படையைவாங்கி
மின்றனிதிரண்டதென்னச் சரத்தொடுக்கூட்டிவிட்டான்
குன்றினுமுயர்ந்ததீயோன் றலையினைக்கொண்டு வானிற்
சென்றனவிசும்பினூடு தேவருந்தெரியக்கண்டார்.

இலட்சுமணனதைக்கேட்டு நல்லதென்றங்கீகரித்து, பயத்தைத் தருவதாய் மின்னல்களெல்லாம் ஒன்றாகத்திரண்டு வந்ததையொத்த ஒரு அக்கினி முகப்பகழியோடு பிரமாஸ்திரத்தைச்சேர்த்துப்பிரயோகித்துவிட்டார். அவ்வஸ்திரமானது மலையினுமுயர்ந்த தோள்களையுடைய அதிகாயனது தலையை அறுத்துக்கொண்டு போகின்றதை ஆகாசத்தில் நின்று தேவர்களெல்லாம் பார்த்துப் புஷ்பவருஷங்களை வருஷித்து, எங்கள் துக்கமெல்லாம் இன்றோடே போய்விட்டதென்றார்கள். இராக்ஷசர்களெல்லாம் ஒருவரையொருவர் கூவி அலறிக்கொண்டு, நான்குபக்கங்களிலும் ஓட்டம்பிடித்தார்கள். வானரர்களோ? அதிகாயனுடைய பாணவருஷத்தால் வருத்தப்பட்ட துக்கமும், நம்மால்தானிவர்களுக்கு ஜெயமுண்டாகப்போகின்றதென்றிருந்த கருவமுநீங்கிப் பிரமித்தார்கள்.



இப்பால் வெற்றிபெற்ற வில்வீரரான இளையபெருமாள் அங்கதன்தோளைவிட்டுக் கீழே குதித்தார். அவ்விளையபெருமாளுடைய அதிகவல்லமையுள்ள வெற்றியைக்கண்ட விபீஷணர் ஆச்சரியப்பட்டு, அந்தரமார்க்கத்தில்சித்தவித்தியாதரர் முதலான தேவசமூஹங்கள் கோஷிக்கின்ற ஆனந்தகோஷத்தைக் கேட்டு, மந்திரசித்தினைப்போல இவருடைய வில்வல்லமை இப்படிப்பட்டதானால் இந்திரசித்துக்கு முடிவுகால நெருங்கிவிட்டதென்பதற்குச் சந்தேகமில்லையென்று நிச்சயம்பண்ணினார். சாதுக்கள்யாவரும் சந்தோஷித்தவராயிருந்தார்கள்.

இப்படியிருக்கும்போது நராந்தகனென்பவன் இளையபெருமாளைப்பார்த்து, மகாவீரனான என் தமையனாகிய தேவாந்தகனோடு இவ்வதிகாயனும் இறந்துபோனான். இனிச் சண்டையு முடிந்துவிட்டதென்று பூசினசாந்தழியாமல் அநாயாசமா யுத்தஞ்செய்த உன் தோளைப்பார்த்தும், கட்டுத்தளராத உன் வில்லைப்பார்த்தும், நீ சந்தோஷமாய்ப் போய்விடுவது கூடாது. போகாதே: போகாதேயென்று கூவிக்கொண்டு தன்வாளாயுதம் பளபளவென்று மின்னும்படி வீசி, தேரிலிருந்து குதித்து, கண்களில் அக்கினிபறக்கவும் - கோபம் வரவர அதிகரிக்கவும் - பூமி கிழிந்துபோகவும் பாய்ந்து, பகற்காலத்திலே சூரியன் தன் பரிவேடத்தோடு பிரகாசிக்கிறதுபோல இடதுகையில் கேடயத்தைப் பற்றிக்கொண்டு, சூல்கொண்ட மேகத்தில் மின்னல் மின்னினதுபோல் வாளானது பிரகாசிக்கும்படி வந்துநின்றான்.

அப்போது வானரவீரர்கள் அவன்மீது விருக்ஷங்களையும், கல்லுகளையும், மலைகளையும், வாரிவாரி வீசினார்கள். அப்படி வீசினவைகளெல்லாம் துண்டுதுண்டாக எட்டுத்திக்குகளிலும் சிதறிப்போகும்படி நராந்தகன் தன்கையிலுள்ள வாளாயுதத்தினால் அறுத்துத்தள்ளி, வானரர்கள் தாங்கள்பிடித்திருந்த கொடியையும் - இரண்டுகைகளையும் - தலைகளையும் - உள்ளே சுருக்கிக்கொண்டு நீர்மேற் பாசிபோதுங்குவதுபோலத் தன்னைக்கண்டு ஒதுங்கிப் பதுங்கும்படிப் பாய்ந்து அவ்வானரசேனைக்குள்ளேயு நுழைந்தான். அதை அங்கதன் பார்த்தனன்.

நராந்தகன் அங்கதனுடன் போராடிமடிதல்.

கவி.

மரமொன்றுவிரைவின்வாங்கி வாய்மடித்துருத்துவள்ளல்
சரமொன்றுகடிதிற்சென்று தாக்கினான்றாக்கினான்றன்
கரமொன்றிற்றிரிவதாருங் காண்கிலீர்தவனைத்தன்மை
அரமொன்றுவயிரவாளா லாயிரங்கண்டங்கண்டான்.

ஒருபெரிய விருக்ஷத்தை வேகமாய்ப் பறித்து, உதட்டை மடித்துச் சீறிக்கொண்டு இளையபெருமாளுடைய பாணவேகத்திலும் கடுவேகமாகப் போய் அந்த நராந்தகன்மீது மோதினான். அப்படிமோதிய அங்கதன் தன் கையிற்பிடித்த அந்தவிருக்ஷம் சுழலுவதைப் பார்த்தும்பாராததற்கு முன்

அதையவன் தன் கைவாளாயுதத்தால் ஆயிரந்துண்டுகளாகக் கண்டித்து விட்டான். அப்போது வெறுங்கையுடனின்ற அங்கதன் சும்மாயிருப்பது வீரமல்லவென்று ஒருவிருஷபம் போவதுபோலப்போய் ஒரு க்ஷணத்துள் விஷம்பொங்கினதொப்பக் கொதித்து, அவன் வீசின வாள்வீச்சளவுக்குள் இடிபாய்ந்ததுபோலப் பாய்ந்து அவனை வாளாயுதத்துடன் சேர்த்துப் பிடித்துக் கொண்டான்.

கவி.

அத்தொழில்கண்டவானோ ராகவலக்கொட்டியார்த்தார்
இத்தொழிலிவனுக்கல்லா லீசற்குமியலாதென்பார்
குத்தொழிற்றவன்கைவாளுடன் கூருகிர்த்தடக்கைகொண்டான்
ஒத்திருகூறாய்வீழ வீசினனுலையவார்த்தான்.

அந்த வல்லமையைக்கண்ட தேவர்கள் ஓகோவென்று சப்தித்துக் கூத்தாடி, இப்படிப்பட்ட மல்லித்தை இவனுக்கேயல்லாமல் உருத்திரனுக்கும் வராதென்று ஆச்சரியப்பட்டார்கள். அப்படி யவனைக் கட்டிச்சேர்த்துப் பிடித்து ஒருகுத்துக்குத்தி, அவன்பிடித்திருந்த வாளாயுதத்தைத் தன் கூருள்ள நகக்கையாற் பற்றிப் பிடுங்கிக்கொண்டு, அதனாலேயே அந்த நராந்தகனைச் சரியிரண்டு கூறாய்த் துண்டுபட்டு விழும்படி ஒருவீச்சுவீசித் தேவர்களும் ஆச்சரியப்படும்படி வீரகர்ச்சனை கர்ச்சித்தான்.

## இப்படியே சிலவானரத்தலைவருடன் சிலஇராட்சசவீரர்கள் போராடிமேலிதல்.

தேவர்கள் அமிர்தங்கொள்ளும்படி ஆதிகூர்மத்தினுடைய முதுகின்மீது வைத்துக்கடைந்த மந்தரகிரியாகிய மத்தையொத்த தோள்களையுடையவனும், நிறைந்த மஸ்துள்ளகள்ளில் ஊமத்தையைக்கலந்து குடித்தவனைப்போல மிகுந்த மயக்கத்தையுடையவனுமான உன்மத்தனென்கிற பெயருள்ளவன் ஒருபெரிய மதயானையின்மீது ஏறிக்கொண்டுவந்து அங்கதனோடெதிர்த்தான். அவனேறிவந்த யானையின் வேகத்துக்கு வாயுவேகத்தையு மொப்பிடலாகாது. அதன் முழக்கத்திற்குக் கடல் முழக்கமும் ஒப்பாக மாட்டாது. அது கொல்வதுபோல யமனுங் கொல்லத் தக்கவனல்லன். அதன் கொடுமைக்கு இடியும் சமமல்லாவிட்டாற் பின்பெதை யொப்பிட்டுச் சொல்லத்தகும்? அதன் கோபத்திற்குமுன்னே கோபமென்கிற ஒருகுணமும் வேறில்லை. இந்தக் காரியங்களிலெல்லாம் இதற்கிதுவே ஒப்பாகுமல்லது. வேறொன்றைச் சொல்வதிலென்ன பிரயோசனப்படும்? அதனுருவத்துக்குச் சரியாகச் சொல்லத்தக்கமலையும் வேறொன்றில்லை.

அன்றியும் வானரவீரர்கள் அதிவேகமாக வெறிய, மேலுமேலுமாக வந்து விழுகின்ற கூட்டங்கூட்டமான மலைகளெல்லாம் அந்த யானைப்பாகர்கள் வில்லிற்பூட்டித் தெறிக்கின்ற வில்லுண்டைக்கும் சமமாகமாட்டா. அவர்கள்



வீசுகின்ற ஆகாசத்தையளாவிய விருக்ஷங்களெல்லாம் அந்தயானையின் மதஜலத்தில் மொய்த்துக்கொண்டிருக்கின்ற வண்டுகளைத் துரத்தும் குஞ்சம்போலிருந்தனவென்று சொல்லினும் ஒவ்வா. அந்தயானை முறித்துத்தின்னும் கரும்புக்கொப்பென்று சொன்னாற் சொல்லலாகும். முன்பிராமபெருமாள் வில்லிற்பூட்டியெய்த அம்புகளால் அந்த ராக்ஷசர்களுடைய ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளு மென்னபாடு பட்டதோ? அந்தப்பிரகாரமே இந்த வானரசேனைகளிற் சிலவானரங்கள் அந்தயானைகளினுடைய காலிற்பட்டு மாண்டன, சிலவானரங்கள் பருத்த துதிக்கையிற் பட்டிறந்தன. சில குரங்குகள் யமபாசத்துக்கொப்பாகிய வாலிலடிபட்டழிந்தன. சிலமந்திகள் பார்க்கப்பயங்கரமான நீண்டதந்தங்களாற் குத்துண்டு செத்தன.

இப்படித் தன்சேனையெல்லாம் சின்னபின்னப்பட்டுப்போகிறதை அதிக தைரியமுள்ள வன்மைநன்மையையுடைய அக்கினி புத்திரனாகிய நீலனென்னும் வானரவீரன் கண்டு, அங்கிருந்த ஒரு மராமரத்தைப் பிடுங்கிச் சக்கராயுதம்போலச் சுழற்றிக்கொண்டு வந்தான். அதைக்கண்டு அவ்வுன்மஸ்தனுக்குப் பின்துணையாகவந்த பெருஞ்சேனையெல்லாம் ஓட்டமெடுத்தன. அப்படித் தன்சேனைகள் பின்னிட்டோடுவதைக்கண்ட அவ்வுன்மஸ்தனென்பவன் நேராகப் பன்னிரண்டம்புகளையெய்து, அந்த மராமரத்தைத் துண்டாக்கிவீழ்த்தினன். மறுபடியு நீலன் வேறொரு மலையைப்பிடுங்கி மஸ்தன்மேல் விட்டெறிந்தான், அந்தமலையை மஸ்தன் தன் யானையின் மீதேறி, தூறுபாணத்தால் ஆகாசத்திலேயே பொடிப்பொடியாக்கிவிட்டான். பிறகுவேறே மலையைத் தேடிக்கொண்டுபோக யத்தனித்த நீலனை அவன்யானையானது அப்படிப் போகவிடாமல், மேருமலையைச் சுற்றிவளைந்த வாசுகியென்னும் சர்ப்பத்தைப்போல் தனது துதிக்கையை நீட்டி மிகுந்தகோபத்தோடு தேவர்களும் பயந்து நடுங்கும்படிப் பிடித்தது.

இப்படிப் பிடித்தமாத்திரத்தில் அந்த நீலனென்பவன் தனது பராக்கிரமும் சக்தியும் உயிரும் ஒடுங்கிப்போய் விட்டானென்று யாவருநினைத்து இரக்கப்பட மூர்ச்சித்திருக்கும்போது, வச்சிராயுதம்போலிருக்கின்ற வளைந்த தந்தங்களினாலே அவனைக் குத்தும்படி அந்தயானையானது யத்தனித்த சமயத்தில் மூர்ச்சித்திருந்த நீலனானவன் சிறிதுதெளிந்தெழுந்து, அதன் துதிக்கையும் தலையும் சிதறிப்போகத் தக்கதாகக் குபீரென் றெழும்பிப் பாய்ந்து போய்விட்டான். இராக்ஷசர்களெல்லாம் அதைக்கண்டு நடுங்கினார்கள். தேவர்கள் இவனுடைய வீரம்நன்றாயிருந்தது; நன்றாயிருந்ததென்று சொல்லிக்கலகலவென்று சிரித்தார்கள். அக்கால் நீலன் விழ்ந்தான்; விழ்ந்தானென்று யாவருஞ் சொல்லுகிறதற்குமுன்னேதானே அந்த யானையானது தலையறுந்து, அதிலிருந்து வடிகிற ரத்தவெள்ளத்திற் பெரியமலைபோல முண்டமாய் விழ்ந்தது. அந்தப்படி விழ்ந்தவுடனே மஸ்தன் ஆகாசமார்க்கத்திற் பாய்ந்துநின்று, அர்த்தசந்திர பாணங்களை மழைபோலச் சொரிந்தான்,

இவ்வாறவன் சொரிவதைக்கண்ட நீலன் அந்த யானைமுகத்திலிருந்த தந்தங்களைப் பிடுங்கி, அதிவேகத்துடனே மஸ்தன்மீது வீசியெறிந்தான். அவைகளையவன் ஓரம்பினாலறுத்துத்தள்ளிவிட்டு, வேறோரம்பை மலையையொத்த புஜத்தையுடைய நீலன்மார்பிற்பதிய எவினான். அந்தப்பாணமெய்த காலத்திற்குள்ளாக நீலனால் யானைசாகவில்லையென்று சொல்லும்படியாக, மஸ்தன் வேறொரு மலைபோன்ற பெரியயானையின்மே லேறிக்கொண்டு வாயுவேகமாகச் செலுத்திவந்தான். நீலனதைக்கண்டு, குபீரென்று அந்தமஸ்தன்மீது, பாய்ந்து, அவனைக்கைவில்லுடனே மதங்கொண்ட யானைக்கெதிரே ரணக்களத்தில் விழும்படியாகத் தள்ளினான். அப்படிவிழுந்தவன் கீழேயிருந்தெழுந்து நிற்கிறதற்கு முன்பாக அந்தயானையானது மஸ்தனைத் தன்னுடைய தலைவனென்று தெரியாமற் கீழேதள்ளிக் காலாலுதைத்து, துதிக்கையாற் சுற்றிப்பற்றித்தூக்கி, இந்தப்பக்கமும் அந்தப்பக்கமுமாக இழுத்திழுத் தலைக்கழித்தது. அதை யம்மஸ்தன் சகிக்கமாட்டாமல், தானே தன்யானையை அந்தரணக்களத்திற்கொன்று வீழ்த்தினான்.

இப்படி யானையைக்கொன்று தன்பெரியகையாலே பூமியிற்றள்ளிய மின்னலைப்பார்க்கிலும்பிரகாசிக்கின்ற கோரதந்தங்களையுடைய மஸ்தனது கோபத்தை நீலன்பார்த்து, பொன்னும் கறுப்பாயிருக்கிறதென் றெண்ணத்தக்கதாகக் கண்களில் நெருப்புப்பொறி பறக்கப்பாய்ந்து அம்மஸ்தனுடைய கைகளைப்பற்றி முறுக்கி, அவனுடைய மார்பிலொரு குத்துக்குத்தினான். அந்தக்குத்துப்பட்டவுடனே மஸ்தன்மாண்டுபோனான். இப்படி உன்மஸ்தனுடைய வச்சிரமலைபோன்றமார்பில் நீலனது கையானது இடிபோற்றாக்கின வல்லமையாலுன்மஸ்தனிறந்ததையும், அவனேறிவந்த யானை மாண்டுபோனதையுங் கண்டு, தன்ஜன்மஸ்வபாவத்தாலும், தருமத்தைக் கடந்துநடந்த பாவத்தின் ஏற்பாட்டாலும், வயமஸ்தனென்கிற மற்றொரு ராக்ஷசவீரன் அதிக உக்கிரங்கொண்டு ஒருபெரிய தேரின்மேலேறிவந்தான்.

கொடிய பொய்யைக்காட்டிலும் பெரியதேகத்தை யுடையவனும், மலையைக்காட்டிலும் பருத்ததோள்களையுடையவனும், மகாகொடுமையில் வல்லவனும், வில்வீரனுமான அந்த வயமஸ்தன்வந்து, காலில் வீரகண்டாமணி கணிர் கணிரென்று சப்திக்கவும்-சேனைகள் சிங்காநாதஞ்செய்யவும்-ஆயிரம்பேய்கள் இழுக்கும்படியான பெரியதேரிலிருந்து மிகுந்த ஆர்ப்பாடஞ்செய்கிறவனும், உலகம் கிடுகிடாய்க்க விதிரப்பண்ணுபவனும், இடியைப்போலக் கர்ச்சித்துச் சுற்றுமுற்றும்பார்ப்பவனும், இறந்தராட்சசர்களைப் பார்த்து இவர்களென்ன அற்பபலவந்தர்களென்று நிந்திப்பவனும், அஸ்திரவருஷம் சொரிபவனும், வானரசேனைகளைப் பின்றொடர்ந் தோடுபவனுமிருந்தான். இவனுடைய தைரியத்தைப்பார்த்து இவனோடு ஒருவருமெதிர்க்கவில்லை. அதுகண்ட விருஷபனென்கிற வானரவீரன் நாம் எதிர்க்கலாமென்று கருதி அவனுக்குமுன்வந்து நின்றான்.